

கலைமாமணி விக்கிரமன்
சுந்தரி

# விக்கிரம பராக்கிரமம்...!

**க**லைமாமணி விக்கிரமன் அவர்களின் வித்தக விரல்களில் விளைந்த இன்னொரு அமுத வயல் இந்த காஞ்சி சுந்தரி!

காஞ்சி மாநகரை விஜயனின் விழி வழியாகக் காட்டும் அற்புதக் காட்சிகளை விவரிக்கும் இடங்களில் எல்லாம் விக்கிரமனின் விரல்கள் தூரிகையாகி கண் சிமிட்டுகின்றன.

காஞ்சனாவைக் கண்டு விஜயன் வியக்கும்போது நாம் நம் கண்களைக் கசக்கி விட்டுக்கொள்ளத் தோன்றுகிறது - அந்த வர்ணிப்பில் தமிழ்க் குதிரை குளம்படி ஓசை எழுப்பிக் குதியாட்டம் போடுகிறது.

வாதாபி நகரத்தை சாளுக்கியர்கள் செய்த நாசத்தையும், மாமல்லபுரத்து கடல் ஓரங்களில் பாய்விரித்து கலங்கள் நகர்ந்த பின்னணியையும், விக்கிரமன் வரலாற்று ஆதாரங்களுடன் இந்த நாவல் முழுக்க விவரிக்கும்போது, வரலாறு நிமிர்ந்து நிற்கிறது!

ஆடற் கலையில் வல்லவளான காஞ்சனாவும் ஓவிய விரல்களுக்குச் சொந்தக்காரனான விஜயனும் சந்திக்கும் இடங்களில் எல்லாம் கனவுகளும் கற்பனைகளும் பூட்டிய பொன் ரதத்தில் தமிழ்த்தேர் அசைந்து அசைந்து நகர்கிறது... அழகு... அடடா, ஆனந்த அழகு!

ஓர் இளம் மங்கை எப்படி எல்லாம் ஆட முடியும்?

விக்கிரமன் விவரிக்கிறார்: ***'சேவடி நோக ஆடினாள். வளைக்கரம் துள்ள ஆடினாள். மெல்லிடை வருந்த ஆடினாள். கருவிழி சுழல ஆடினாள். இடையும், துடையும், விழியும், இதழும், கரமும், பரதமும் துவண்டு களைத்துச் சாயும் வரை ஆடினாள். அவளை அறியாமல் நிலத்தாயின் நீள்மடியில் மூர்ச்சித்துச் சாயும் வரை ஆடினாள்'.*** வரலாற்று நாவலின் அழகியலில் நம் மனசை தென்னங்கீற்றாய் அசைய வைக்கும் நன்னடை!

பல்லவ இளவரசன் ராஜசிம்மன், சுந்தரியை வாஞ்சையுடன் நெருங்கும் பொன் அந்தி நேரங்களில் எல்லாம் விக்கிரமன்

அவர்களின் எழுத்துகள் நாகரிக ஆடை உடுத்திக் கொள்கிறது. சாளுக்கியர்களுக்கும் பல்லவர்களுக்கும் இடையில் போர் மேகங்கள் சூழுகின்ற தருணங்களில்கூட சிற்பக்கலையையும் ஓவியங்களின் மீதான ராஜபாசமும் நம் கண்முன் விரிகின்றன. மக்கள் சேவை, ராஜபரிபாலனம், போர்த் தந்திரம் இவற்றுக்கிடையே கலைகளைப் போஷித்த பல்லவர்களின் வரலாற்று முக்கியத்துவமும் இந்த 'காஞ்சி சுந்தரி' நாவல் முழுக்கப் பரவிக் கிடக்கின்றன.

கீர்த்தி வர்மன் மாறுவேடம் பூண்டு காஞ்சி மாநகரையும், பல்லவ மன்னர்களின் ஆட்சியையும் சீரழிக்கத் திட்டம் தீட்டி முனையும்போது, அது சுந்தரி, காஞ்சனா என்கிற இரண்டு ஆரணங்குகளால் அடையாளம் காணப்பட்டு, அவனின் கபட வேடத்தைக் கலைத்து, பல்லவ மன்னர்களின் கௌரவத்தைக் காப்பாற்றியது. தனி ஒரு கதையாகவே நாவலுக்குள் ஓரங்கட்டிப் பாய்கிறது!

வரலாற்று நாவல்தான் இது. ஆனால், இதில் ஓர் அற்புதமான மன்னராட்சியின் பின்னணியில் மிகமிக அற்புத லாகவத்துடன் ஒரு முக்கோணக் காதல் கதையைப் பின்னிப் பின்னி நமக்கு காதல் விருந்து சமைத்துத் தந்திருக்கிறார் விக்கிரமன். காஞ்சனையைக் கௌரவமாகவும், நாகரிகமுமாக பார்த்துப் பழகிய ஓவிய விழிக்குச் சொந்தக்காரன் விஜயன். அவனுக்குக் காஞ்சனையின் மீது இருந்தது காதல் அன்று. அன்பின் பெருவிழிப் பயணம். நடன விழிகளும், நர்த்தன உடல் வெளிச்சமும் கொண்ட காஞ்சனாவுக்கு, சிற்ப வதனம் கொண்ட விஜயனின் மீது இருந்ததோ அப்பட்டமான காதல் நதிப்பயணம். ஆனால், விஜயனோ சுந்தரியின் விழிவழிப் பாதையில் நடை பயிலும் ஆசை நாயகன். இவ்வாறான காதல் யாத்திரையில்... 'யார் யாரைக் கரம் பிடிப்பர்...? எவரது நெற்றியில் எவரது மழைநீர் சொட்டு பட்டுத் தெறித்து சதிராடப் போகிறது?' என்கிற ஒரு கேள்வியைச் சுமந்தபடியே படிப்பவரின் நெஞ்சில் சுவாரஸ்யப் பந்தல் போடப்பட்டு, இறுதியில் சுந்தரியையும், விஜயனையும் மனதார வாழ்த்திவிட்டு, எளிமையின் சிகரமாய் காஞ்சனா உருமாறி, புத்த மதத்தைத் தழுவி, புத்த பிக்குவாய் மாறி, தியாக திருவிளக்காக காட்சி தருவது நம்மை நெகிழ வைக்கிறது.

காஞ்சி சுந்தரி... காதலின் சங்கீத ஓசை! சந்தன வாசக் குளிர்ச்சி!

**எஸ்.இராஜேஸ்வரி**

# என்னுரை

**50** ஆண்டுகளுக்கு முன்பு, முதல் வரலாற்றுப் புதினம் 'உதய சந்திரனை' நான் ஆசிரியராக இருந்த அமுதசுரபியில் தொடராக எழுதினேன். அதற்கு முன்பே 1945-48இல் 'மாமல்லபுரம்' என்ற பெயரில் மாமல்லபுரச் சிற்பங்களைக் கண்டு ரசிக்க நூலொன்று எழுதினேன்.

அந்த நூல்களை எழுதுவதற்காக பல்லவர்கள் ஆண்ட பகுதிகளுக்கு என் நண்பர் 'ஸுபா'வுடன் சென்று வந்தேன். பல்லவர் கலை நுணுக்கம் அறிந்ததுடன் நல்ல கதைக்கான கற்பனையையும் அறிந்தேன்; மனத்தில் தேக்கி வைத்தேன்.

உதயசந்திரனுக்குப் பிறகு 'நந்திபுரத்து நாயகி' என்ற வரலாற்றுப் புதினத்தை எழுதினேன். சோழர்கள் காலச் சூழலை அடிப்படையாகக் கொண்டது நந்திபுரத்து நாயகி. இது ஆயிரக்கணக்கான வாசகர்களால் பாராட்டப்பட்டது.

அந்தத் தொடர் முடிவடைந்தவுடன், வரலாற்றுப் புதினங்களைப் படிக்கும் வாசகர்களைத் தொடர்ந்து ஈர்க்க, மற்றொரு புதினம் எழுதத் திட்டமிட்டேன். உடனே எழுத வேண்டும் என்ற வற்புறுத்தல் வேறு. நல்லவேளையாக, பல்லவர் வரலாற்றைப் படித்ததன் விளைவாக உடனே நல்ல நவீனம் ஒன்று எழுத முடிந்தது.

'காஞ்சி சுந்தரி' என்று பெயரிட்டுவிட்டேன். அந்தப் பெயரில் நான் எழுத நினைத்த கரு வேறு; எழுதியது வேறு.

பல்லவ மன்னர்களுள் மகேந்திரவர்மன், நரசிம்ம வர்மன், பரமேச்வரவர்மன் இவர்களுக்கு அடுத்தபடி பெரும் புகழுடன் ஆட்சிபுரிந்தவன் இராஜசிம்மன்.

காஞ்சிக் கயிலாயநாதன் கோயிலையும், கடற்கரைக் கோயிலையும் உருவாக்கியவன். அவன் அரியணை ஏறுவதற்கு முன்பு காஞ்சிமாநகரம் பெரும் பஞ்சத்தால் துன்பப்பட்டது. சாளுக்கியர்களின் இடைவிடாத படையெடுப்பு, நாட்டில் பெரும் பஞ்சத்தை ஏற்படுத்தியது.

வாள் முனையில் வெல்வதற்கு முன்பு ஒற்றர்கள் மூலம், பல்லவர்கள் பலம் அறியத் திட்டமிட்டான் சாளுக்கியன். ஒற்றர்கள் பலரைப் பல்லவ நாட்டில் மறைமுகமாகக் குடியேறச் செய்தனர். அவர்களுள் பெண் ஒருத்தி.

இரண்டு பெண்கள் காஞ்சிக்குத் தொல்லை கொடுக்க வருகிறார்கள். தவிர சிவபிரானைத் தொழும் கபாலிகர்கள், மாவிரதன், காளமுகர்கள் என்ற உட்பிரிவினரும் பௌத்த மதத்தார்களும் அரசருக்குப் பல விதத்தில் தொல்லை கொடுத்தனர். அவர்களை வென்றதுடன், சாளுக்கியர்களின் தந்திரத்தையும் முறியடித்தான் பல்லவ அரசன் இராஜசிம்மன்.

ஒரே தோற்றமுடைய இரு பெண்கள். கபாலிகன், கபாலிகை என்று பல பாத்திரங்கள். சற்றுக் கவனத்துடன் படிக்க வேண்டும். எழுதும்போதும் குழப்பம் ஏற்படாமல் எழுதினேன்.

வரலாற்றுச் சான்றுகளுடன் கற்பனையைச் சற்று அதிகமாகக் கலந்து எழுதப்பட்ட வரலாற்றுப் புதினம் 'காஞ்சி சுந்தரி.'

வரலாற்று உண்மைகளுக்கு மாறுபடாமல், சுவை கெடாமல், அரசியல் தந்திரங்களைப் படிப்பவர் சோர்வடையாமல் 'காஞ்சி சுந்தரியை' எழுதினேன்.

வரலாறு படிக்கும் அன்பர்கள் நிமிர்ந்து உட்கார்ந்து ஒரு வரிகூட விடாமல் படிக்க வேண்டிய நூல்.

நல்ல முறையில் வெளியிட்டுள்ள நிவேதிதா புத்தகப்பூங்கா உரிமையாளர் திரு.நிவேதிதா சுவாமிநாதன் அவர்களுக்கு மிகுந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**விக்கிரமன்**

# காஞ்சி சுந்தரி

## 1. நுழைவாயில்

முருகபிரானின் தோகை மயிலின் வடிவங்கொண்டது என்று நூலறி புலவோர்கள் போற்றும் காஞ்சி மாநகரத்துப் பிரமாண்டமான கோட்டை மதில் சுவர் தொலைவில் தெரிந்தது. பெரும் மதிலையும் மீறி நகரத்தின் மாட மாளிகைகளின் கூட கோபுரங்கள் எட்டிப் பார்த்தன. அவை வெளி உலகத்தைக் காணக்கூடாது என்று தடுப்பது போல் உயர்ந்து வளர்ந்த மரங்களும், தென்னையின் கீற்றுகளும் காற்றில் இலேசாக அசைந்தாடின. மேற்குத் திக்கில் மறைய விரைந்து சென்று கொண்டிருக்கும் கதிரவனின் மஞ்சள் கதிர்கள் சோலையின் வழியே புகுந்து, மாட மாளிகைகளையும் கடந்து வந்தன. நீல நிற வானத்துப் பின்னணியில் சூரியனின் மஞ்சளும், சிவப்பும் கலந்த ஒளி ரேகைகள் அதில் தோய்த்தெடுத்த மென்பஞ்சு போன்ற மேகத் திட்டுகள் எல்லாம் தேவலோகத்து ஓவியன் தீட்டிய அழியா வண்ண ஓவியமாகவே அவன் கண்களுக்குத் தோன்றின.

அந்த இளைஞன் ஏரிக்கரையில் நின்று தொலைவில் தெரியும் காஞ்சியின் புற அழகைக் கண்டான். நகரத்தின் எழிலை இன்னும் அதிகரிக்கச் செய்யும் இயற்கை ஜாலங்களைக் கண்டான். மேல் திசைக் கதிரவனின் சாயும் கதிர்கள் ஏரி நீரில் தவழ்ந்து வந்து, அதன் கருநீல நிறத்தை மாற்ற முயலும் அற்புதம் கண்டான்!

'ஆகா...' என்று ஒரு கணம் வாய்விட்டே கூறிவிட்டான் அந்த வாலிபன். அந்த ஏரிக் கரையிலேயே நின்று இயற்கைத் தாயின் வடிவழகையும், அவளது செளந்தர்ய அரவணைப்பால் எழில் மிக விளங்கும் என்றும் இளங்கன்னியாகத் திகழும் காஞ்சி சுந்தரியின் புறத்தோற்றத்தையும் வெகு நேரமாக ரசித்து மகிழ்ந்து கொண்டிருந்தான். அப்படியே அந்த இடத்திலேயே நின்று அந்தி வானத்தில் ஏற்படும் அதிசயத்தையும் ரசித்துக் கொண்டிருந்தான். அதுபோன்றே இருள் சூழும் வரை பார்த்துக் கொண்டே இருக்க வேண்டும் எனும் துடிப்பு அவனிடத்தே இருந்தது.



மாலைக் கதிரவனின் சோபையை அவன் நாள்தோறும் பல இடங்களிலே நின்று கவனித்து ரசித்து வருகிறான். அந்த வேளைகளிலே வானத்தின் மேகக் கூட்டங்களிலே தெரியும் பற்பல உருவங்களையும் வர்ண விசித்திரங்களையும் உற்று நோக்கி வியந்து வருகிறான்.

கிருஷ்ணை ஆற்றில் கதிரவன் மூழ்கி மறையும் அற்புதத்தைக் கண்டிருக்கிறான்; வட பெண்ணை ஆற்றங்கரையில் திருமாலின் கரத்துச் சக்கரம்போல் சுழன்றவாறு சூரியன் மறைவதை அனுபவித்திருக்கிறான்; வழியில் மகேந்திர தடாகத்தைக் கண் குளிரக் கண்டிருக்கிறான். என்றாலும் இங்கே மாபெரும் நகரத்துப் பின்னணியுடன் செங்கதிர்ச் செல்வன் செய்யும் மாய ஜாலங்களைப் போல் அவன் எங்கும் கண்டதில்லை.

அதுபோன்ற அற்புதத் திருஉருவத்தை மனத் திரையிலும் ஓவியமாகத் தீட்ட அவன் முயன்றும், சஞ்சல மனத்தின் செயலால் முடியவில்லை. ஆனால் இனி அதைச் சாதகம் செய்துகொள்ள முடியும். காஞ்சிக்கு வந்துவிட்டால் நாள்தோறும் இதே இடத்திற்கு - பொன் ஏரிக்கரைக்கு - வந்து ரசிக்கலாம். இயற்கையை யார் தூக்கிக் கொண்டு போய் ஒளித்துவிடப் போகிறார்கள்? அவன் மட்டுமா வந்து ரசிப்பான்? அவனுடன் பல்லவ நாட்டு இளவரசனும் உடன் வந்து ரசிப்பான். நீங்கள் அவனை மிகவும் சாதாரணமான வாலிபன் என்றா எண்ணிவிட்டீர்கள்? புழுதி படிந்த அவன் ஆடையையும், தோளிலே தொங்கவிடப் பட்டிருந்த பையையும், கையிலே வழித்துணையாக இருக்கட்டும் என்று எடுத்து வந்த கோலையும், தோள்வரை ஊசலாடும் சிகையையும், காதுக் குண்டலங்களையும் கையிலணிந்திருந்த கெட்டியான வெள்ளி வளையத்தையும் பார்த்து யாரோ நீண்ட தொலைவு நடந்து காஞ்சி மாநகரத்தை வந்தடையும் வழிப் போக்கன் என்று எண்ணியிருப்பீர்கள். ஆனால், நீங்கள் ஒரு கணம் திகைப்பதும் தெரிகிறது. அவன் முகத்தாமரையில் ஒளிவிடும் அழகு கண்டு நீங்கள் வியப்படைகிறீர்களல்லவா? நீண்ட நாசி, அழகிய உதடுகள், உயர்ந்த நெற்றி, நெற்றியிலே வளைந்த புருவங்கள், புருவங்களுக்கு அடியில் கருவண்டு போல் எப்போதும் சுழலும் கண்கள், உணர்ச்சி வசப்பட்டவன் என்பதை எடுத்துக்காட்டும் சற்று அழுத்தமான தடித்த இதழ்கள், இதழ்களின் கீழே முகவாய்க் கட்டையில் சிறு பள்ளம்... அது முகத்தை அந்த இடத்தில் இரு பிரிவுகளாகப் பிரித்து முக வடிவத்திற்கே சிறப்பை அளித்தது.

இத்தகைய முக அழகைப் பெற்று அழகு வதனத்தைத் தாங்கியிருக்கிறோம் என்ற பெருமிதத்தாலோ என்னவோ,

தோள்கள் விசாலமாக விரிந்து நின்றன. அவன் நடைபோடும் அழகே அழகு! அந்த ஆணழகன் தோற்றத்தில் மட்டும் வனப்புக் கூத்தாடவில்லை; அவன் இதயத்திலும் உலகத்து எழிலார்ந்த காட்சிகள் எப்போதும் நடனமாடிக் கொண்டேயிருக்கும். தேவைப்படும்போது அந்தக் காட்சிகள் அவன் கரத்தின் வழியாக, நளினமான விரல்கள் வழியாக, விரல்கள் இடும் கட்டளைக்கு இணங்கச் செயலாற்றும் தூரிகையின் வழியாக வர்ண விசித்திரத் துணைகொண்டு வெளிப்படும். அவன் பிறவிக் கலைஞன். இயற்கையாக அமைந்த திறமையோடு சாளுக்கிய நாட்டு மேதை ஒருவரை குருவாகக் கொண்டு பல கலைகளையும் கற்கும் பாக்கியமும் பெற்றிருந்தவன் அவன். வாதாபி நகரத்தில் குரு குமாரதேவரின் ஆசியுடன் விடைபெற்றுக் காஞ்சி நகரம் நோக்கிப் பயணப்பட்டான். அவன் காஞ்சிக்கு வந்த நோக்கங்கள் பல. அவற்றை அவனே இப்போது நினைத்துப் பார்க்க நேரமில்லை. ஏனெனில், அதோ காஞ்சி நகரம் நொடிக்கு நொடி அவனை நெருங்குகிறது. காஞ்சியா நெருங்குகிறது என்று சொன்னோம்? அடடா! அப்படித்தான் அவனுக்குத் தோன்றுகிறது. ஏனெனில், தான் நடப்பதாகவே அவனுக்குத் தோன்றவில்லை. உற்சாகமும், ஆர்வமும் மட்டும் இல்லாதிருந்தால், வழி நடந்த களைப்பும் சோர்வும், பின்னலிடும் காலும், தள்ளாடும் நடையும் அவனை அங்கேயே கிடத்தியிருக்கும்.

"ஆமாம்! காஞ்சி நகரம் தென் பகுதியிலேயே மிகப் பிரம்மாண்டமான நகரம் என்று எல்லோரும் சொல்கிறார்களே, அந்த நகரத்திற்குப் போகும் சாலையில் சந்தடி வரவரக் குறைந்து வருகிறதே" என்று அவன் எண்ணினான். மெல்ல மெல்ல அவன் நடந்து செல்வதற்குள் பொழுது சாய்ந்து நன்றாக இருட்டிவிட்டது. கூட்டை அடையும் பறவைகளின் கூச்சல்கூட மெள்ள அடங்கத் தொடங்கிவிட்டது.

குமாரதேவர் கூறியதற்கும் அங்கே நடப்பதற்கும் எவ்வளவோ மாறுபாடு இருக்கிறது. 'காஞ்சி நகரத்துக்குச் செல்லும் சாலை எப்பொழுதும் ஜனக்கூட்டம் நிறைந்துக் கலகலப்புடன் காணப்படும்; நகருக்குள் வருவோர் போவோர் என்று இரவு பகல் எந்நேரமும் கலகலப்பாக இருக்கும்; நகரத்தின் இறைச்சல் வெகுதூரத்திற்குக் கேட்கும்' என்றெல்லாம் சொன்னதற்கு நேர் மாறாக அன்றோ இங்கு இருக்கிறது! குமாரதேவர் மட்டும் என்ன, இளம் போதில் அவனைச் சந்தித்த இளவரசன் நரசிம்மனும் அப்படித்தான் கூறியிருந்தான். ஒருவேளை காஞ்சிக்குப் பதில் வேறு நகரத்தை அணுகி விட்டோமோ என்றுகூட எண்ணினான் அந்த இளைஞன்.

நேரமாகிக் கொண்டே வந்தது. அவன் மெல்ல நடந்து சென்று கோட்டை வாயிலை அடைந்துவிட்டான். மிகப்பெரிய கோட்டைக் கதவு சாத்தப்பட்டிருந்தது. விஜயன் நிமிர்ந்து அந்த மூடப்பட்டிருந்த கோட்டைக் கதவுகளின் கம்பீரத்தை உற்று நோக்கினான். அது திறந்திருந்தது என்பதற்கு அடையாளத்தைக் காணோம். மக்கள் அங்கே நடமாடிப் பல நாட்கள் ஆகியிருந்தன என்பதை அவன் எப்படி அறிவான்?

விஜயன் ஏதும் புரியாமல் யோசித்தான். சிறிது தூரத்தில் ஒரு மரத்தடியில் சிலர் ஒன்றுகூடி அடுப்பை மூட்டிச் சமைத்துக் கொண்டிருந்தது அவன் நினைவுக்கு வந்தது. அவர்களை விட்டால் வேறு யாரிடம் சென்று கோட்டைக் கதவு மூடப் பட்டிருப்பதைப் பற்றிக் கேட்க முடியும்? அவர்களை அணுகி வழியைக் கேட்கலாம் என்று அங்கு சென்றான்.

''ஊருக்குப் புதியவரோ தம்பி?'' என்று கேட்டவாறு அடுப்பிலே ஏதோ கிளறிக் கொண்டிருந்தார். அதன் மணம் விசயன் நாசியைத் துளைத்தது. மறைந்திருந்த பசியையும் கிளறிவிட்டது. அஸ்தமனத்திற்கு முன்பே உணவருந்திவிடும் வழக்கம் கொண்ட அவன், இன்று அப்படிச் செய்ய முடியாமல் போய்விட்டது. /காஞ்சி நகரத்தின் எல்லைக்கருகே ஒரு கிராமத்திலாவது உணவு அளிப்பதற்கு ஆளில்லாதது அவனுக்கு விசித்திரமாகத் தானிருந்தது.

மீண்டும் அவர்கள் கேட்டனர்: ''தம்பி, ஊருக்குப் புதுசாக இப்போதுதான் வருகிறாயா?''

''ஏன் அப்படிக் கேட்கிறீர்கள்?'' என்று தோளிலுள்ள பையை மறுபக்கத்திற்கு மாற்றிக்கொண்டே கேட்டான் விஜயன்.

''கிழக்குக் கோட்டை வாசலைத் தவிர மற்றக் கோட்டைக் கதவுகளை மூடி மாதக்கணக்காக ஆகிவிட்டதே! விவரம் தெரிந்தவர்கள் இந்தப் பக்கம் வருவதில்லையே'' என்றனர் அவர்கள்.

''அப்படியா?''

''எல்லாம் யுத்தம், தம்பி! யுத்தம் செய்த விளைவு. பெருவள நல்லூரில் தோற்று ஓடிய சாளுக்கியன் போகிற வழியெல்லாம் நாசம் விளைவித்துச் சென்றுவிட்டான். சில வீரர்கள் இங்கேயும் அங்கேயும் தங்கியிருக்கக்கூடும். எல்லாப் பக்க வாசலையும் திறக்காமல் ஒரே வாசலை மட்டும் திறந்து வைத்திருப்பதால் உள்ளே நுழைபவர்களின் மீது ஒரு கண் வைக்கலாமென்று இருக்கலாம்.''

விஜயன் சிரித்தான்.

''ஏன் தம்பி சிரிக்கிறாய்?''

''எதற்குமில்லை. ஊருக்குள் செல்ல வேண்டுமானால் கிழக்கு கோட்டை வாசலுக்குச் செல்ல வேண்டுமே என்று நினைத்துச் சிரிக்கிறேன்'' என்றான் விஜயன்.

''இதில் சிரிப்பதற்கு என்ன இருக்கிறது? கிழக்குக் கோட்டை வாசலுக்குச் செல்ல இன்னும் குறைந்தது மூன்று நாழிகைப் பயணமாவது செய்ய வேண்டும். அதற்காக நீ வருத்தமல்லவா பட வேண்டும்?''

அவர்கள் அப்படிக் கூறியவுடனேயே விஜயனுக்குத் தூக்கிவாரிப் போட்டது. இன்று இரவே காஞ்சிக்குள் போய்விட முடியாது போக நேர்ந்துவிடுமோ எனும் திகில் ஏற்பட்டது. அத்துடன் மேலும் நடப்பது என்பது இனி அவனால் முடியாது. எங்காவது தங்கித்தான் செல்ல இயலும். நகருக்கு அருகே நெருங்கி ஒரு பொழுதை வேறு எங்கோ கழிப்பது என்றால்...

''என்ன தம்பி! உன் சிரிப்பு எல்லாம் எங்கோ ஓடி விட்டதே! முகம் மாறுகிறதே! சோர்வு முகத்தில் குடி கொண்டிருக்கிறதே. நீண்ட தொலைவு நடந்து வருகிறாய் போலிருக்கிறது. இந்தா, ஒரு கைச்சோறு வாயில் போட்டுக் கொள்'' என்றான் அவர்களில் ஒருவன். அவன் அடர்ந்த மீசை வைத்துக் கொண்டிருந்தான். அவன் பார்வையும் விழிகளும் பயங்கரமாயிருந்தனவேயொழிய அவன் பேச்சில் இரக்கம் இருந்தது.

''வேண்டாம், வேண்டாம்; அஸ்தமித்த பிறகு நான் ஏதும் உண்பதில்லை'' என்றான் விஜயன்.

''ஓகோ!''

அவன் திகைத்து நிற்பதையும் ஏதோ கேட்க முயல்வதையும் அறிந்த மீசைக்காரன், ''தம்பி, ஊருக்குள் அவசரமாகச் செல்ல வேண்டுமா?'' என்று கேட்டான்.

அவசரமாகச் செல்ல வேண்டுமா? அவசரம் ஏதுமில்லை. பல நாட்களாகப் பயணம் செய்து வரும் அவனுக்கு அந்த ஓர் இரவு தாமதம் ஒன்றும் மூழ்கிவிடாது. ஆனால், நகரத்தின் நுழைவாயிலுக்கு வந்துவிட்டு உள்ளே செல்ல முடியாமல் தவித்து நிற்பதுதான் வேதனையாக இருந்தது. அவசரத்தைவிட வேதனையை அவனால் தாங்க முடியவில்லை. அதனால் அவன் கேட்ட கேள்விக்கு 'ஆம்' என்று தலையசைத்தான்.

''அதற்கு இரண்டே வழி. ஒன்று சிரமம் பார்க்காமல் கிழக்கு வாசலை நோக்கி நடக்க வேண்டியது; இல்லாவிடில் நாங்கள் போகும் வழியைப் பின்பற்ற வேண்டியதுதான்'' என்றான் மீசைக்கரரன்.

'பின்பற்றினால் என்ன? இவர்களும் நகரத்திற்குள் செல்வதானால் அவர்கள் போகும் வழியைத் தொடர்வதில் என்ன சிரமம்? இரவே நகரத்திற்குள் சென்றுவிடலாம். முடிந்தால் மாளிகைக்குச் சென்று நாம் வந்திருக்கும் செய்தியை இளவரசருக்கு எட்ட வைத்துவிடலாம்' என்று எண்ணிய விஜயன், ''நீங்கள் போகும் வழியா?'' என்று கேட்டான்.

''ஆமாம்; நாங்கள் இரவு இரண்டாம் ஜாமத்திற்கு மேல் கோட்டைக்குள்ளே நுழைவோம். நாங்கள் செல்லும் வழியையே நீ பின்பற்று. கோட்டைக்குள்ளே நுழைந்துவிடலாம்'' என்றான் மீசைக்காரன். விஜயனுக்கு என்ன செய்வது என்றே புரிய வில்லை. 'இவர்கள் மட்டும் இரகசிய வழியை அறிந்து வைத்திருக்கிறார்கள். இவர்கள் என்ன, விரோதி நாட்டவர்களா?' என்று எண்ணினான். சரி என்பதற்கு அடையாளமாகத் தலையை அசைத்தான்.

''ஆமாம், நகரத்திற்குள் சென்று நீ யாரைப் பார்க்கப் போகிறாய்? நீ எங்கிருந்து வருகிறாய்? உன் பெயர் என்ன என்றெல்லாம் நாங்கள் கேட்கப் போவதில்லை. ஆனால் தம்பி கோட்டைக்குச் செல்ல நாங்கள் உபயோகிக்கும் வழியை மட்டும் வெளியே யாரிடமும் சொல்லிவிடாதே. பி[illegible] இந்தப் பக்கமாகக் கோட்டை வாசலுக்கு வருபவர்கள் ஒருவரும் உள்ளே நுழைய முடியாது. ஊரெல்லாம் சுற்ற நேரிடும்'' என்று அவர்களில் ஒருவன் கூறவும் இளைஞன், ''நான் இரகசிய வழியை யாரிடமும் சொல்லவும் மாட்டேன். அந்த வழியை நீங்கள் எனக்குக் காட்டவும் வேண்டாம்.'' என்று கூறிவிட்டு, அங்கே மேற்கொண்டு நிற்க மனமில்லாமல் சற்றுத் தொலைவிலுள்ள மரத்தடிக்குச் சென்றான். அவனது வீராப்பை எண்ணி அவர்கள் நகைத்தனர்.

அடுப்பு எரியும் மங்கிய வெளிச்சத்தில் மரவேரில் அவன் மெல்லச் சாய்ந்து கொண்டது தெரிந்தது. இளங்காற்று வீசியது. பசி வயிற்றைக் கிளறியது; நகரத்திற்குள் செல்ல முடியவில்லையே என்ற சோர்வும் சேர்ந்தது. கண்ணைச் சுழற்றியது. அவன் அப்படியே உறங்கிவிட்டான்.

அதிக நேரம் அவன் தூங்கியிருக்க மாட்டான். அவன் திடுக்கிட்டு விழித்தபோது அவனைத் தாண்டி யாரோ சிலர் செல்லும் காலடியோசை கேட்டது. அவன் கண்ணைத் திறந்தான்.

மதில் சுவரையும், அகழியையும் ஒட்டி வளர்ந்திருந்த அடர்ந்த மரங்களுக்கும், புதர்களுக்கும் ஊடே யாரோ நடந்து செல்வது தெரிந்தது. விஜயன் கண்களிலிருந்து உறக்கம் பறந்தோடி விட்டது. 'நகரச் சந்தடியும் அடங்கியிருக்காது. குரு குமாரதேவர் கொடுத்த விலாசத்தைத் தேடிப் பிடித்து அங்கேயே சென்று இரவைக் கழிக்கலாம்'' என்று எண்ணினான்.

அந்தப் பாதை வளைந்து வளைந்துச் சென்று, கடைசியாக மதிலை ஒட்டிச் சென்றது. ஓரிடத்தில் மரக்கிளை ஒன்று தாழ்ந்து வளைந்திருந்தது. அதைத் தாண்டித்தான் செல்ல வேண்டும். அவர்கள் அனைவரும் அதைத் தாண்டிச் சென்றனர். பிறகு அவர்களைக் காணவில்லை. விஜயன் வழி புரியாமல் சற்றுத் திகைத்து நின்றான். பிறகு மதில் சுவரைத் தொட்டுத் தடவியவாறு சென்றான். ஓரிடத்தில் கதவு திறந்து கொண்டது. விஜயன் கீழே விழாமல் தட்டுத்தடுமாறி நின்றான். கதவை ஒட்டிப் படிக்கட்டுகள் இறங்கிச் சென்றன. மீண்டும் வந்த வழியே திரும்பிச் சென்றுவிடலாமா என்றுகூட அவன் எண்ணினான். காஞ்சிமா நகரத்திற்குள் முதன்முதலாக நுழைவதே இப்படிப் பின் வழியாக இருக்கிறதே என்ற கவலை அவனுக்கு எழுந்தது. அவனிடமுள்ள முத்திரை மோதிர அடையாளச் சின்னத்திற்கு, அவனுக்கு ராஜ மரியாதை நடக்கும்.

அந்த முத்திரை மோதிரம் பல ஆண்டுகளுக்கு முன்பு இளவரசன் நரசிம்மனால்* அவனுக்குக் கொடுக்கப்பட்டது. இளவரசன் நரசிம்மனை அவன் வாதாபியில் சந்தித்ததே பெரிய கதை. இருவரும் சாளுக்கியர்கள் கட்டிய பல கோயில்களுக்கும் சென்றனர். அஜந்தா காட்டிற்குச் சென்று அங்கேயுள்ள குகைகளில் தீட்டப்பட்ட அமர ஓவியங்களைக் கண்டு களித்தனர். இளவரசர் நரசிம்மன் மனத்திலே அப்போது ஜீவ ஒளி தோன்றியது. ''விஜயா, இப்போதே என்னுடன் காஞ்சிக்குப் புறப்பட்டு வந்துவிடு. அங்கே இருவரும் தமிழும் ஸம்ஸ்கிருதமும் கற்கலாம். சிற்பமும், சித்திரமும் பயிலலாம். உன் விருப்பப்படியே அஜந்தாவைப் போன்ற மிகவும் அற்புதமான கலைக்கூடங்களை ஏற்படுத்தலாம்'' என்றான். காஞ்சி இளவரசன் அழைக்கின்றான் என்றால் அது சிறந்த வாய்ப்புதான். ஆனால் அவனுடைய குடும்பச் சூழ்நிலை நாடுவிட்டு நாடு செல்ல இடம் கொடுக்க வில்லை. தனது இயலாமையை வருத்தத்துடன் தெரிவித்துக்

* *ராஜ சிம்மனின் மற்றொரு பெயர் நரசிம்மன். அவனது முப்பாட்டனார் நரசிம்மவர்மன் (மாமல்லன்) பெயரையே அவனுக்கும் சூட்டியிருந்தார்கள்.*

கொண்ட விஜயனின் வருத்தத்தை நரசிம்மன் நீக்கி, தன்னிடமிருந்த முத்திரை மோதிரத்தைக் கொடுத்து, ''உனக்கு எப்போது காஞ்சிக்கு வர வசதிப்படுகிறதோ அப்போது இந்த அடையாளத்தைப் பயன்படுத்திக்கொள். மிகவும் அத்தியா வசியமான சமயத்தில் ஒரே ஒரு தடவை மட்டும் அடையாளச் சின்னத்தைப் பயன்படுத்து. எங்கும் தொலைந்து விடாமல் என்னிடம் சேர்ந்துவிடு'' என்று கூறியிருந்தான்.

ஏழெட்டு ஆண்டுகள் ஓடி மறைந்தன. விஜயனுக்கு இப்போதுதான் காஞ்சிக்கு வர வாய்ப்புக் கிடைத்தது. கோட்டை நுழைவாயிலிலேயே அடையாள மோதிரத்தைப் பயன்படுத்தி விட்டால், பிறகு நகரத்திற்குள் எவ்வளவு இடையூறு காத்திருக்குமோ?

விஜயன் படிக்கட்டுகளின் வழியாக அடிமேல் அடிவைத்து நடந்து சென்றான். காற்றோட்டமில்லாததால் மூச்சுத் திணறியது. எவ்வளவு படிக்கட்டுக்களோ -- ஓரிடத்தில் சம தரை காணப் பட்டது. பிறகு படிக்கட்டுகள் மேலே ஏறிச்செல்வதை உணர்ந்தான். முன் வைத்த காலைப் பின் வைக்க முடியுமா?

திடீரென்று ஓரிடத்தில் குளிர்ந்த காற்று வீசியது.

விஜயன் திகைத்து நின்றான். சந்திரனின் கிரணங்கள் எங்கிருந்தோ அங்கு படிந்தன. விசாலமான ஒரு கூடமாய் அந்த இடம் காணப்படுவதையும், அங்கு யாரோ வசிப்பதற்கான அடையாளம் தெரிவதையும் அவன் அந்த மங்கிய ஒளியில் அறிந்தான்.

மான் தோலும், மண்டை ஓடுகளும், எலும்பு மாலையும், குங்குமக் கிண்ணமும் அங்கே பரவலாக இருந்தன. ஒரு கயிற்றில் காய வைக்கப்பட்டிருந்த ஒரு புடவை மெல்ல அசைந்தாடியது. அது அசையும்போது ஏற்படும் இடைவெளி வழியாக சந்திரனின் ஒளி அங்கே தென்படுகிறது என்பதை உணர்ந்த விஜயன், தன் கையிலிருந்த கோலினால் அந்தத் துணியைச் சற்று நகர்த்தினான்.

இப்போது அறை முழுமையும் ஓரளவுக்குப் புலப்பட்டது. கூடத்தின் கோடியில் -

ஆ! பயங்கரமான காளியின் உருவம்! எட்டுக் கைகள்; தொங்கவிடப்பட்ட நாக்கு! ஒரு கையிலே மனிதத் தலை; கீழே மனித உடல்; கழுத்திலே அரளிப் பூ மாலை. ஒரு ஆள் உயரத்திற்கு இருந்த அந்தச் சிலையை மேலும் காண விரும்பாத

விஜயன் அந்த இடத்தை விட்டுச் செல்வதற்காக நடந்தான். ஓரிடத்தில் கதவு தெரிந்தது. ஆனால், திறக்க முடியவில்லை.

ஒன்று அங்கேயே தங்க வேண்டும் - இல்லாவிடில் வந்த வழியே திரும்ப வேண்டும். விஜயனுக்கு மீண்டும் திரும்பிச் செல்வதற்கான தெம்பு இல்லை. எங்கிருந்தோ தவழ்ந்து வரும் குளிர்ந்த காற்று அவன் மீது படவே அவன் விடியும்வரை அங்கேயே தங்கிவிடுவது என்ற முடிவுக்கு வந்தான். அங்கிருந்த நீண்ட மரப்பெட்டியின் மீது ஏறிப் படுத்தான். சிறிது நேரத்திலேயே நல்ல உறக்கத்தில் ஆழ்ந்தான்.

இப்போது சந்திரன் ஒளியும் அந்தக் கூடத்தில் விழவில்லை. பயங்கரமான இருட்டுச் சூழ்ந்திருந்தது.

'ஜல் ஜல்...' என்று மெல்லிய சதங்கை ஒலி கேட்டது. யாரோ நடந்து வரும் ஓசை. சுகந்த மணம். பல சந்திரன்களின் ஒளி அங்கே வீசுவது போன்ற தோற்றம். விஜயனுக்கு அந்த ஒளி நன்றாகத் தெரிகிறது. யாரோ நடந்து வரும் ஓசையும் தெளிவாகக் கேட்டது. அவன் உடல் திடீரென நடுங்குவதும் தெரிகிறது. ஆனால் கையையும், காலையும் அசைக்க முடியவில்லை.

''குழந்தாய்...'' என்று யாரோ கூப்பிடும் குரல் சதங்கை ஒலிக்கு உடையவள். சந்திரன் ஒளிக்கு உடையவள். வயதை மதிப்பிட முடியா வடிவழகுத் தோற்றம்.

''யார்... யார்?'' விஜயன் வாய் குழறினான்...

''குழந்தாய், என்னைத் தெரியவில்லையா?'' என்று இசையினும் இனிய குரலில் அந்த எழில் பெண் கேட்கிறாள்.

தெரியவில்லை என்பதற்கு அடையாளமாக விஜயன் தலையை அசைக்கிறான். ஒளிமயமாய்த் திகழும் அவள் கேட்கிறாள்:

''என்னைத் தெரியவில்லையா? பிறகு என்னை நாடி நீ வந்திருக்கிறாயே... என்னை யாரென்று தெரிந்து கொள்ளாமலா வந்துவிட்டாய்...?''

விஜயன் ஏதோ சொல்கிறான்.

''நான் காஞ்சி மாநகரத்திற்குள் செல்ல விரும்பி இப்படிக் குறுக்கு வழியாக இங்கே வந்துவிட்டேன். இல்லாவிடில் நான் இங்கே ஏன் வரப்போகிறேன்...''

"இங்கே வந்தாலும் எங்கு வந்தாலும் என் ராஜ்யம் தானே குழந்தாய்..."

"பல்லவ ராஜ்யம்..."

"ஆம், ஆம்... என் அரவணைப்பிலேதான் அவர்கள் இந்த மண்ணை ஆளுகிறார்கள். அவர்களுக்கு முன்பு யார் யாரோ ஆண்டார்கள். தொண்டைமான் இளந்திரையனுக்குப் பிறகு சிறந்த முறையில் பல்லவர்கள்தான் மக்கள் துன்பப்படாமல் ஆட்சி செலுத்தி வந்தார்கள்..."

"தாயே! வந்தார்கள் என்று கூறி நிறுத்திவிட்டீர்களே... இப்போது..."

"இப்போதும் தான் குழந்தாய்... என்னவோ எனக்குத் தோன்றியது....." நிறுத்தினாள். தொடர்ந்து, "மகேந்திரவர்மர் எனும் ஒப்பற்ற அரசரைப் பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறாயா?"

விஜயன் தலையசைத்தான்.

"அவர் காலத்தில்தான் என் குழந்தைகள் சீரும் சிறப்பும் பெற்றனர். சித்திரக்காரப் புலியென்றும், மத்தவிலாசன் என்றும், விசித்திரச் சித்தன் என்றும் மக்கள் வியந்துப் பாராட்டிய அந்த அரசரின் காலத்தில்தான் நான் நிறைந்த வடிவுடையவளாக இருந்தேன்... என்னைக் கண்டு ஹர்ஷ சக்கரவர்த்தியும், வாதாபிச் சக்கரவர்த்தியும் பொறாமைப்பட்டனர். வாதாபி மன்னர் பொறாமை மிகுதியால் வந்து மோதிச் சீரழிந்த கதை உனக்குத் தெரியாதா?"

விஜயன் தலையசைத்தான்.

"சாளுக்கிய மன்னனின் பேராசையை நரசிம்மன் ஒடுக்கிவிட்டானே, தெரியுமா?"

'நரசிம்மன் – நரசிம்மன்!' என்று விஜயன் உதடுகள் முணுமுணுத்தன.

"நரசிம்ம சக்கரவர்த்தி – மாமல்லன் என்று புகழ் பெற்றவரைப் பற்றிக் கேள்விப்பட்டதில்லையா?"

விஜயன் நன்றாகக் கேள்விப்பட்டிருக்கிறான்.

அஜந்தாக் குகையில் அவன் இளவரசன் நரசிம்மனோடு அலைந்தபோது அவன் தன் முப்பாட்டனாரான நரசிம்ம சக்கரவர்த்தியைப் பற்றிக் கூறியிருக்கிறானே! வாதாபி நகரைச் சுற்றிப் பார்த்தபோது கூடக் கேட்டேனே; 'இந்த நகரத்தைத்

தான் என் தாத்தா ஒரு நாட்டியக்காரியின் சபதத்தை நிறைவேற்றத் தீக்கு இரையாக்கினார். இந்த நகரம் அதற்குள் மீண்டும் உருப்பெற்றுவிட்டதா? சாளுக்கியர்களின் திறமையே திறமை..." என்ற அந்த இளவரசர் நரசிம்மரைப் பற்றித்தான் தேவி சொல்கிறாளோ! உடல் சிலிர்க்கிறதே!

"குழந்தாய், நரசிம்ம சக்கரவர்த்தி காலத்திலே என் பெருமை உலகமெலாம் எட்டியதடா! உலகின் பல திக்குகளிலிருந்தும் வணிகர்களும், அறிஞர்களும் வந்து கண்டு மகிழ்ந்து, வியந்து சென்றார்கள். விரோதிப் பயமே கிடையாது. கல்வி கற்பதற்குப் பிற நாட்டவர்கள் இங்குத் தான் வந்தார்கள். தர்க்கமும், சாஸ்திரமும் பயின்றார்கள். சம்ஸ்கிருத கோஷமும் தீந்தமிழின் ஓசையும் எப்போதும் ஒலிக்கும். கதம்ப நாட்டு இளவரசனே இங்குத் தான் கல்வி கற்க வந்தான் என்றால் பார்த்துக் கொள்ளேன்!"

விஜயன் படுத்திருப்பதை விட்டு எழுந்து ஒளிமயமாக விளங்கும் தேவியின் காலடியில் வீழ்ந்துத் துதிக்க முயன்றான். முடியவில்லை.

"நரசிம்மனுக்குப் பிறகு, என்னைச் சீரழிக்கச் சாளுக்கியர்கள் சமயம் பார்த்துக் கொண்டே இருந்தார்கள். பெரும் படையுடன் வந்து மோதினார்கள். பல்லவ அரசகுலத் தென்றல் தீரன் பரமேச்வர வர்மன் எதிர்ப்பைத் தாங்க முடியவில்லை. சாளுக்கியர்கள் இந்த நகரத்திற்குள்ளே நுழைந்தார்கள். அதெல்லாம் பழைய கதை குழந்தாய். அதிருக்கட்டும்; நீ எதற்கு வந்தாய்? என்னை ஏன் அழைத்தாய்?"

"நான் அழைத்தேனா? தாங்கள் யாரென்றே எனக்குத் தெரியாதே..." என்று விஜயன் கூற முயன்றான். வார்த்தை தொண்டையினின்று வரவில்லை.

"என்ன உனக்கு இன்னும் தெரியவில்லையா? இவ்வளவு நேரமாக நான் பேசிய பிறகும் என்னைப் புரிந்து கொள்ள வில்லையா?"

விஜயன் புரிந்து கொண்டான். தன் எதிரே காஞ்சிமா நகரத் தேவதை. 'ஆகா! காஞ்சித் தேவதையின் எழில் வடிவமே சித்திரம் தீட்ட முடியாத ஜோதியாக விளங்கும்போது, நகரத்தின் அழகு நிச்சயம் எல்லோரும் கூறுவதுபோல் மிக உயர்வாகத்தானிருக்க வேண்டும். காஞ்சி சுந்தரியின் வனப்பைக் கவிஞர்கள் வருணித்திருப்பதும், வாதாபி நகரில் அனைவரும் பேசிக் கொள்வதும், குரு குமாரதேவர் கூறியதும் முற்றிலும்

உண்மையாகவே இருக்க வேண்டும். நகரத்திற்குள் நுழையாமல் எங்கோ பாதாள அறையில் சிக்கியிருக்கிறோமே. காஞ்சித்தாயே... சுந்தர வடிவுடையவளே...! தேவி! தேவி! எனக்கு வெளியே செல்ல வழிகாட்டுங்கள்' என்று விஜயன் கூவினான்.

அந்த அறையில் திகழ்ந்த ஒளிவடிவமான காஞ்சித் தாயைக் காணவில்லை. யாரோ ''ஹஹ்ஹா' என்று சிரிப்பது கேட்டது. விஜயன் கண் விழித்தான். எதிரே காபாலிகன் ஒருவன் அவன் முகத்தருகே குனிந்துப் பார்த்தவாறு நகைத்துக் கொண்டிருந்தான்.

விஜயன் துள்ளி எழுந்தான்.

''விஜயா, பயப்படாதே! நீ இங்கே வருவாய் என்று தெரியும்'' என்றான்.

தன்னைப் பெயர் சொல்லி அழைத்ததையும், தான் அங்கே வரப்போவது தனக்குத் தெரியும் என்று கூறியதையும் கேட்டு விஜயன் திடுக்கிட்டான். அவசரம் அவசரமாகப் பையின் அடியே கிடந்த அடையாள மோதிரமும், ஓலையும் இருக்கின்றனவா என்று மெல்லத் தொட்டுப் பார்த்துக் கொண்டான்.

''விஜயா, மண்டையோடும், புலித்தோலும், இரத்த வெறி கேட்கும் காளியின் திரு உருவமும், காபாலமும் நிறைந்த இந்த இடத்தைக் கண்டு நடுங்கிவிடாதே. பௌர்ணமி நாளில் காளிக்கு இளம் ரத்தத்தை நிவேதனம் செய்ய வேண்டுமென்றாலும் உன்னை நான் ஒன்றும் செய்துவிட மாட்டேன். நீ என்னைத் தேடி வந்தவன்'' என்றான் அந்தக் காபாலிகன்.

விஜயன் உடல் ஒருமுறை சிலிர்த்தது. பொழுது விடிந்து கொண்டிருந்ததால் மங்கிய ஒளி அந்தக் கூடத்தில் பரவியது. 'நான் இந்தக் காபாலிகனைத் தேடி வந்தேனா! ஆச்சரியமாக இருக்கிறதே. இந்த இடமே மாயமந்திரம் நிறைந்த இடமோ... காபாலிகர்களைப் பற்றி குமாரதேவர் எச்சரித்திருக்கிறார். காபாலிகர்களும் காளாமுகர்களும் பாசுபதர்களும் காஞ்சியில் அடிக்கும் கொட்டத்தைப் பற்றியும் சொல்லியிருக்கிறார். வெறி மிகுந்த அவர்களில் ஒருவனை முதன் முதலில் சந்திக்க நேரிட்டுள்ளதே' என்று எண்ணிய அவனை நோக்கி, ''விஜயா, மாளிகைக்குச் சென்று இளவரசர் ராஜசிம்மனைச் சந்திக்கத்தானே, விஜயனுக்கு ஆச்சரியத்திற்குமேல் ஆச்சரியம் ஏற்பட்டது.

●

## 2. அழகியின் வீடு

வெளிச்சம் நன்றாக அந்த இடத்தில் ஏற்பட்டவுடன் விஜயன் காபாலிகனை ஒருமுறை ஏறிட்டுப் பார்த்தான். அப்படியொன்றும் பயங்கரத் தோற்றத்துடன் அவன் காணப்படவில்லை. பச்சை நிறமும், காய்ந்த இரத்தமும் அவன் மேனியில் ஒட்டியிருக்கும் எனறு வருணிக்கப்பட்டதற்கு ஏற்ப – அவன் தோற்றம் இல்லை. அவன் சிரிப்பிலுங்கூட ஒரு கவர்ச்சி இருப்பதுபோல் தோன்றியது. அந்தக் கூடத்திலும் பொருள்கள் தாறுமாறாக இராமல் சீராகத்தான் வைக்கப்பட்டிருந்தன. பொதுவாகக் காபாலிகர் வாழும் இடம் போன்றே அது தோன்றவில்லை.

''விஜயா, என்ன அப்படிப் பார்க்கிறாய்? இன்னும் தூக்கம் உனக்குக் கலையவில்லை என்று தெரிகிறது. அருகேயுள்ள குளத்திலே, குளித்துவிட்டு மாளிகைக்குப் புறப்படலாம்'' என்றான்.

விஜயனுக்கு அவன் கூறுவதும் சரியெனப்பட்டது. இன்னும் தூக்கம் சரியாகக் கலையவில்லைதான். தூக்கம் மட்டுமின்றி முதல் நாள் பின்னிரவு நிகழ்ச்சிகளும் கூட அவன் கண்முன் இன்னும் நடப்பது போலவே தோன்றின. அந்த ஒளி, ஒளியினாலே தெரிந்த தோற்றம், அந்த அழகிய வடிவத்தின் பேச்சு அந்தப் பேச்சினின்று புரிந்து கொண்ட செய்திகள் எல்லாம் பசுமையாக இன்னும் அவன் கண்ணெதிரே நடைபெற்றுக் கொண்டிருப்பன போலத் தோன்றின.

''விஜயா, நீ பேசவே மாட்டேன் என்கிறாய். நான் உனக்குப் புதியவன் என்ற எண்ணம் போலும்! போகப் போக நீ என்னை பற்றித் தெரிந்து கொள்வாய். என் வீட்டிலே நீ வந்துத் தங்கியதால் உனக்கு வேண்டிய வசதிகளைச் செய்து தர நான் கடமைப் பட்டவன். மாளிகைக்கு உன்னை அழைத்துக் கொண்டு விட்டுவிட்டுத் தான் மறுவேலை!'' என்றான் காபாலிகன். அங்கேயிருந்த கபாலத்தினின்று சாம்பலை எடுத்துத் தன் உடலில் பூசிக்கொண்டு, சிறு துளியை எடுத்து விஜயன் நெற்றியில்

இடுவதற்கு அவன் கையை நீட்டியபோது விஜயன் தடுத்து, அந்த இடத்தினின்று எழுந்து, ''நான் எந்தவிதச் சின்னமும் அணிவதில்லை'' என்றான்.

பெரும் அதிசயத்தைக் கேட்டவன் போல் சிரித்துவிட்டு, ''காஞ்சி நகரத்தில் அப்படி இருக்க முடியாது, விஜயா! இங்கே கொஞ்ச நஞ்சம் இருக்கும் புத்தசாமியார்களைத் தவிர மற்றவர்கள் நெற்றியை நீ பார்த்தாயானால் தெரியும். மாளிகைக்குப் போகப் போகிறாயே, அங்கே போனால் புரிந்து கொள்வாய்'' என்றான்.

விஜயன் ஆடையைச் சரிசெய்து கொண்டு பையைத் தோளில் எடுத்து மாட்டிக்கொண்டு கோலைத் தேடினான்.

''விஜயா, இனி இந்தக் கோல் எதற்கு?'' என்று அவன் தேடிய கோலை எடுத்துக் கொடுத்த காபாலிகன், ''ஆமாம் விஜயா, மாளிகையில் யாரைச் சந்திக்கப் போகிறாய்? அரசரையா? இளவரசரையா?'' என்று கேட்டான்.

யாரைச் சந்தித்தால் இந்தக் காபாலிகனுக்கு என்ன? என் பெயரைத் தெரிந்து கொண்டவன், எங்கே போகப் போகிறேன் என்பதைத் தெரிந்து கொண்டவன், யாரைப் பார்க்கப் போகிறேன் என்பதை ஏன் தெரிந்து கொள்ளக் கூடாது?

விஜயன் மௌனமாக இருப்பதைக் கண்ட காபாலிகன், ''சரி, சரி; நீ யாரைச் சந்திக்கப் போனால் எனக்கு என்ன? நேரமாகிறது; புறப்படு, குளத்தில் கூட்டம் சேருமுன்பே சென்று குளித்துவிட வேண்டும்'' என்று அவசரப்படுத்தினான்.

''ஏன்? நேரம் கழித்துச் சென்றால் குளத்து நீரை யாராவது கொண்டு போய்விடுவார்களோ?'' என்று விஜயன் கேட்டான்.

காபாலிகன் மெல்ல நகைத்து, ''சுவையாகப் பேசுகிறாய்... விஜயா... நேரமாகிவிட்டால் குளத்துத் தண்ணீர் கலங்கிவிடும். தண்ணீர் மட்டம் மிகவும் குறைந்துவிட்டது. அதனால்தான் சொல்கிறேன். உன்மேல் உள்ள புழுதியைப் போக்க நீ பத்துத் தடவை குளிக்க வேண்டும்'' என்றான்.

'இவன் மேனியிலுள்ள புழுதிக்கு என் மேனிப் புழுதி மோசமாகிவிட்டதா?' என்று மனத்துக்குள்ளே முணுமுணுத்தான் விஜயன்.

காபாலிகன் தங்கியிருந்த வீடு நந்தவனத்தின் நடுவே இருந்தது. அங்கிருந்து வீதியை வந்தடையச் சிறிது தொலைவு நடக்க வேண்டியிருந்தது. ஓர் ஆள் நடப்பதற்கு மட்டும் ஏற்பட்டிருந்த ஒற்றையடிப் பாதை வழியே காபாலிகன் முன் சென்றான்.

சடை மயிர் அவன் தோள்களையும் தாண்டித் தொங்கியது. எலும்பு மாலைகள் நடக்கும்போது ஒன்றோடு ஒன்று உராய்ந்து 'கடக் கடக்'என்ற ஓசையை உண்டாக்கின. கையிலே மெல்லிய இரும்புத் தடி ஒன்றை வைத்திருந்தான். அதன் முனையில் திரிசூல வடிவம்.

∴ ∴ ∴

இருவரும் மௌனமாகவே நடந்து வந்தனர். இடையே ஒரு தடவை காபாலிகன் அவனைத் திரும்பிப் பார்த்து, ''மாளிகையில் நீ யாரைச் சந்திக்க இருப்பதாகச் சொன்னாய்?'' என்று கேட்டான்.

''யாரையும் பார்க்க விரும்புவதாக நான் சொல்லவில்லையே'' என்றான் விஜயன்.

''அரசர் பரமேச்வர வர்மன் இப்போது யாரையும் காண்பதில்லை. இளவரசன் ராஜசிம்மனோ இந்த ஊரில் இல்லை'' என்று காபாலிகன் கூறினான்.

'இளவரசர் ஊரிலில்லையா? எங்கே போயிருப்பார்? அவரைச் சந்திக்கவன்றோ பல காத தூரம் கடந்து, பல நாள் நடந்து வந்து சேர்ந்திருக்கிறோம்; அவரில்லாவிடில் வேறு யாரை அரண்மனையில் நமக்குத் தெரியும்' என்று எண்ணியவன் ''இளவரசர் ஊரிலில்லையா? எங்கே போயிருக்கிறார்?'' என்று ஆவலுடன் கேட்டான்.

காபாலிகன் பெருமூச்சுவிட்டு, ''ராஜசிம்மன் இன்னும் பச்சைக் குழந்தையாகவே இருக்கிறான். கிழக்கே சமுத்திரத்தைத் தாண்டிப் பல தீவாந்தரங்களுக்குப் போய்விட்டு வந்த பிறகு அவன் போக்கைப் புரிந்து கொள்ளவே முடியவில்லை'' என்றான்.

''இளவரசர் கடல் கடந்துச் சென்றாரா?'' - விஜய்ன் ஆவலுடன் கேட்டான்.

''ஆமாம், ஆமாம்....''

''சாளுக்கியர்கள் படையெடுத்து வந்தபோது இளவரசர் இல்லையா... போர் என்றாலே இளவரசர் வெறுப்பாரே.... அதனால் கேட்டேன்...''

''இல்லை, இல்லை... உனக்கு இளவரசரைத் தெரியுமா? இளவரசரைச் சந்தித்து ஏதாவது செய்தி சொல்ல வந்தாயா?''

காபாலிகன் இவ்வாறு கேட்டவுடன் விஜயன் திடுக்கிட்டான். காபாலிகன் மகா கெட்டிக்காரனாக இருக்க வேண்டும்; இல்லாவிடில் மெல்ல மெல்லத் தான் யாரைச் சந்திக்கப்

போகிறோமென்பதைத் தெரிந்து கொண்டு விட்டானே! இளவரசரைச் சந்திக்கும் வரை அந்த விஷயத்தை ரகசியமாக வைத்துக்கொள்' என்று குரு குமாரதேவர் கூறியிருந்தாரே, அதைக் கடைப்பிடிக்காமல் விட்டுவிட்டோமே என்று விஜயன் தன்னை நொந்து கொண்டான்.

காபாலிகன் விருப்பப்படியே குளத்தில் நீராடிவிட்டுப் பிறகு வேண்டுமானால் ஏதாவது தந்திரம் செய்து அவனிடமிருந்துப் பிரிந்துவிடலாம் என்று முடிவு செய்தான் விஜயன்.

அதைப்போன்று விஜயனைக் குளத்தில் குளிக்குமாறு சொல்லிவிட்டு, அவனது ஆடைகள் காய்வதற்குள் புதிய உடைகள் வாங்கி வருவதாகக் கூறிச் சென்றான் காபாலிகன். அதுவரை அருகேயுள்ள மண்டபத்தில் தங்கியிருக்குமாறு சொன்னான். விஜயனும் அப்படியே செய்வதாகத் தலையை ஆட்டி, விரைவில் வந்துவிடுங்கள்'' என்றும் சொன்னான்.

∴ ∴ ∴

**கா**பாலிகன் நேரே காஞ்சனா தேவியின் வீடு நோக்கி விரைந்தான். எதிரே வந்த கங்காதரன் என்ற காபாலிகன் அவன் செல்லும் வேகத்தைப் பார்த்து ஒன்றும் புரியாமல் திகைத்து நின்றான்.

காஞ்சனாதேவி காஞ்சிமா நகரத்து அழகி; ஆடல் பாடலில் வல்ல கணிகை. விழாக் காலங்களில் நடைபெறும் பல நாடகங்களில் நடித்து மக்கள் உள்ளத்தைப் பித்தாக்கும் வனப்புமிக்கவள். அவளுடன் பேசுவதே தனிப் பெருமை யென்று சந்தர்ப்பத்தை எதிர்பார்ப்பவரும், அவள் சுழலும் ஒரு விழிக்கோணத்திலாவது நாம் அவள் கண்களில் பட்டுவிட மாட்டோமா என்று ஏக்கங் கொண்டு சுற்றுபவர்களும் உண்டு.

காபாலிகன் காஞ்சனா தேவியின் வீட்டிற்குள் நுழையும் போது முன் கூடத்தில் பலர் அமர்ந்திருந்தனர். அவன் எப்போதும் அந்த வழியாக வந்து காஞ்சனாவைச் சந்திப்பதில்லை. அந்த வீடு மூன்று கட்டுகளும், மேல் மாடமும் கொண்டது. வீட்டின் பின்புறம் செல்வதற்குச் சிறு சந்து உண்டு, அதன் வழியே சென்றால் வீட்டின் பின்கட்டை அடையலாம். அதற்குப் பிறகு மாட்டுக் கொட்டிலும் தோட்டமும், பெரும் துரவும் அடர்ந்த மரச் சோலைகளும் விளங்கின. மேல்மாடத்திற்குச் செல்லப் பின் கட்டின் வழியாகப் படிக்கட்டுகள் இருக்கின்றன. காபாலிகன் தனது சமயத்தின் கடுமையான கட்டுத் திட்டத்தினின்று சற்று மாறியவன். அதனால் உடுத்தியிருந்த ஆடை விஷயத்திலும் மாறுபட்டிருந்தான். புலித்தோலுடன் கூட மெல்லிய

வஸ்திரத்தையும் அணிந்திருந்தான். வாசனைத் திரவியங்களையும் பயன்படுத்தத் தயங்கவில்லை.

பின்பக்க படிக்கட்டுகளின் அருகே வந்து நின்று கையிலிருந்து சூலாயுதத்தைத் தட்டி ஓசைப்படுத்தினான். மேல்மாடத்திலிருந்து இளம் பெண் ஒருத்தி எட்டிப் பார்த்தாள். காஞ்சனா தேவியின் வீட்டில் தொண்டாற்றும் பல பணிப்பெண்டிருள் அவளும் ஒருத்தி. பணிப்பெண்ணின் அழகைக் கண்டவர்கள், 'இவளே இத்தனை அற்புத அழகுடன் இருந்தால் இவள் தலைவியின் அழகுக்கு ஈடு இணையிருக்காதோ' என்று எண்ணுவர்.

''யாரது?'' என்று குரல் கொடுத்தாள் பணிப்பெண்.

''வேறு யார் இங்கே இவ்வளவு சுதந்திரமாக வர முடியும்'' என்றான் காபாலிகன்.

''ஓகோ! உக்ர பைரவமூர்த்தியா!'' என்று கூறிச் சிரித்துவிட்டுப் படிக்கட்டுகளில் இறங்கி வந்தாள் அவள்.

''என்னைப் பார்த்து எப்போதும் நீ சிரிக்கிறாய். ஒரு நாள் உனக்கும் வேடம் அணிவித்துக் காபாலிகை ஆக்கிவிடுகிறேன், பார்! அந்த மகேந்திர வர்மன் நாடகம் எழுதினது தான் எழுதினானே, நாலைந்து காபாலிகை வருவது போல் கற்பனை செய்தானா!'' என்றான் காபாலிகன்.

''மன்னர் சரியாகத்தான் எழுதியிருக்கிறார். ஒரு காபாலிகை போதுமே உமது அட்டகாசத்தைத் தெரிவிக்க. நான் காபாலிகையாக வேடம் அணிந்தால் அரசர் எழுதாதவற்றை யெல்லாம் வசனமாகச் சேர்த்துச் சொல்லி உம் மானத்தை வாங்கிவிடுவேன்!'' என்று அவள் கூறினாள்.

''நன்றாக மானத்தை வாங்கு! என்னையே ஆயிரம் பொன் கொடுத்து வாங்கிவிடுவேன். வாயாடிப் பெண்! ஹூம்! காஞ்சனாதேவி என்ன செய்கிறார்கள்?'' என்று கேட்டான் காபாலிகன்.

''தேவியா? கடும் தலைவலி என்று படுத்திருக்கிறாள். யாரையும் பார்க்க முடியாது'' என்று கண்களைச் சுழலவிட்டுக் கூறியவள், ''உமக்கு அந்தத் தடையெல்லாம் ஏது...? ஏதாவது அவசரமான காரியமோ?'' என்று மெல்லக் கேட்டாள்.

''ஏன் இன்று இரவு எங்காவது நாடகத்துக்கு ஒப்புக் கொண்டிருக்கிறீரா?''

''அதெல்லாம் இல்லை. வேறு சங்கதி. உனக்கெதற்கு இந்தக் கேள்வி?'' என்று காபாலிகன் கூறிக் கொண்டே படிக்கட்டுகளில் ஏறினான்.

**கா**ஞ்சி மாநகரத்துப் பேரழகி காஞ்சனா தேவி பூப்பஞ்சு மெத்தையில் ஒயிலாகப் படுத்திருந்தாள். அவள் மெல்லிய பாதத்தை ஒரு பணிப்பெண் மெல்லப் பிடிக்கும்போது அவளது தந்த நிறத்துக் கால்கள் சற்றுச் சிவந்தன. சற்றே சரிந்திருந்த வெண் பட்டாடைக்கும் அவளது பளிங்கு நிற அங்கங்களுக்கும் வித்தியாசமே தெரியவில்லை.

காபாலிகனின் கரத்திலிருந்த சூலத்தின் சப்தம் கேட்ட வுடனேயே பணிப்பெண்கள் திரும்பிப் பார்த்தனர்.

''யாரது?'' காஞ்சனா கேட்டாள். பணிப்பெண்கள் சற்று விலகி நின்று கொண்டனர். அருகிலிருந்த மெல்லிய துகிலை எடுத்து மேலே அணிந்து கொண்டு, ''வாரும், வாரும் அகோர பைரவரே! இன்று மூன்றாம் பிறை போலிருக்கிறது'' என்று கூறி வரவேற்றாள் காஞ்சனா. பணிப்பெண்கள் அங்கிருந்து அகன்றனர்.

அருகிருந்த தட்டில் வைக்கப்பட்டிருக்கும் பழங்களையும் மதுக் கிண்ணத்தையும் அவன் முன் நீட்டியவாறு ''காலை வேளையிலேயே வந்திருக்கிறீர்கள். தங்களுக்கு என்னால் வேறு என்ன தர முடியும்'' என்று புன்முறுவலுடன் சொன்னாள்.

''இவற்றை எடுத்துக் கொள்ள எனக்கு நேரமில்லை, காஞ்சனா. மிகவும் அவசரமாகத் திரும்பிப் போக வேண்டி யிருக்கிறது. உடுத்திக் கொள்ளப் பட்டுத் துணியொன்றும் அங்கவஸ்திரமொன்றும் கொடு. ருசியான உணவுப் பதார்த்தங்கள் தயாரித்து வை...'' என்றான்.

''பைரவரே! திடீரெனப் பட்டாடை மீது உமக்கு ஏன் ஆசை வந்துவிட்டது. கோவண தாரியாகச் சுற்றியவர் இப்போது புலித் தோலாலேயே ஆன ஆடைகளை அணிகிறீர். மாலையும் உண்மையான எலும்பு மாலையா, அல்லது செயற்கையா? இப்போது பட்டாடை கேட்கிறீர்'' என்று முத்துப் பல் முழுவதும் தெரிய நகைத்தவாறு கேட்டாள்.

''காபாலீச்வரா! எனக்கெதற்கு அவையெல்லாம்? வாதாபி யினின்று இளம் பிராயத்து வாலிபன் ஒருவன் வந்திருக்கிறான். அவனுக்குத்தான் அவை'' என்று காபாலிகன் கூறியவாறு மதுக் கிண்ணத்தை ஒரே மூச்சில் தீர்த்தான்.

''வாலிபனா? வாதாபியினின்றா?''

''ஆம்; காஞ்சனா, அவனை இங்கே அழைத்து வருவதற்காகத் தான் பட்டாடை...''

''ஏன், திகம்பரனாய் வந்திருக்கிறானா?''

''இல்லை, இல்லை! அரச மாளிகைக்குப் போகத் துடிக்கிறான். இந்த மாளிகைக்கு அழைத்துவரத் திட்டமிட்டேன்.''

''வாதாபியினின்று வருகிறான், அரச மாளிகைக்குப் போகிறானா? வியப்பாய் இருக்கிறதே. வாதாபி என்றாலே அரசர் உடனே காராக்கிருஹ வாசத்திற்கு அனுப்பி விடுவாரே.''

''இளைஞனுக்கு இன்னும் கபடு சூது தெரியவில்லை. அதனால் இப்போதே மாளிகைக்குப் போகத் துடிக்கிறான். இளவரசனைச் சந்திக்க வேண்டுமாம்.''

இதைக்கேட்ட காஞ்சனா நிமிர்ந்து உட்கார்ந்தாள். அவள் புருவம் உயர்ந்தது.

''இளவரசரையா? வாதாபியினின்று வந்த வாலிபனா? ஏதாவது முக்கியத்துவம் இருக்கிறதா பைரவா?''

''இல்லாமலா அழைத்து வருவேன்? இளைஞனிடம் ரிஷப வாஞ்சனை இருக்கிறது...''

''அரச முத்திரை மோதிரமா?''

''அது கிடக்கட்டும்; அதைவிட அவனிடம் துள்ளி நிற்கும் அழகு இருக்கிறதே...''

காபாலிகன் இப்படிக் கூறிக் கொண்டிருக்கும்போதே காஞ்சனா கையைத் தட்டிப் பணிப்பெண்ணை அழைத்தாள். உடனே பட்டாடை கொண்டு வருமாறு கட்டளையிட்டாள். பிறகு மெல்லிய குரலில், ''பைரவரே! இந்தச் சந்தர்ப்பத்தை நழுவவிட்டு விடாதீர்கள். அந்த வாலிபன் வேறெங்கும் செல்வதற்கு முன்பு இங்கு அழைத்து வந்துவிடுங்கள். இளவரசரை அறிந்தவன் என்கிறீர். அவனைக் கொண்டு நாம் பல காரியங்களைச் சாதிக்க வேண்டும்... உமக்குத் தெரியாததா!'' என்று கூறினாள்.

''நான் மற்றவற்றைக் கவனித்துக் கொள்கிறேன். ஆனால், அவன் இங்கே நுழையும்போது இந்த மாளிகை அவனைக் கவர வேண்டும்...''

''ஏன்! அதற்குள் புதுச் சுண்ணாம்பு அடித்துத் தோரணம் கட்டி, சிங்காரித்து வைக்கச் சொல்கிறீர்களா?''

''காஞ்சனா உன் கேலிப் பேச்சு, அலட்சியப் பேச்சை யெல்லாம் சற்று மூட்டைக் கட்டி வை. இப்போதே நீ கீழே இறங்கிச் சென்று அங்குள்ளவர்களுடன் பேசிக்கொண்டே இரு.

மனத்திலுள்ள சோம்பேறித்தனத்தையும் சற்று இறக்கிவிடு காஞ்சனா..''

காபாலிகனின் இந்தப் பேச்சைக் கேட்டுப் புன்முறுவல் பூத்து அருகேயிருந்த மயில் தோகை விசிறியிலிருந்து தோகை ஒன்றைப் பிய்த்து அதைக் காபாலிகன் மூக்குக்கு நேரே நீட் டிக் குறுகுறுக்கச் செய்து, ''பேசிப் பேசிக் காலத்தைக் கழித்துவிடுகிறீர் பைரவா! இதுவும் கூத்து மேடையா... போ, சீக்கிரம் போய் அவனை அழைத்து வந்துவிடு...'' என்றாள்.

அங்கிருந்து புறப்பட்ட காபாலிகன் இரண்டடி எடுத்து வைத்த பிறகு மீண்டும் திரும்பி வந்து, ''எல்லாம் உன் கையிலிருக்கிறது காஞ்சனா, எவ்வளவு நாட்கள் நம் நிலைமை இப்படியே இருப்பது...'' என்று கூறிய அவனை நோக்கி, ''என் கையில் இப்போது மாதுளைப் பழம் தான் இருக்கிறது. அதை வைத்துக் கொண்டு என்ன செய்வது'' என்று கூறிக் கண்களைச் சிமிட்டினாள் காஞ்சனா.

காபாலிகன் கடகடவென நகைத்தான். ''மாதுளைப் பழத்தைக் கொண்டு எவ்வளவோ காரியங்களைச் சாதித்துவிடலாம். மாதுளைப் பழத்தினைப் போன்று உன் பற்களைக் காட்டிச் சிரித்தாயானால் அதற்கு மயங்காதவர்கள் உண்டா? அதன் சுவை போன்ற உனது பேச்சைக் கேட்டுச் சொக்காதவர்கள் உண்டா?''

''நான் இவ்வளவு நாட்கள் சிரிக்காமலா இருக்கிறேன். என் வலையில் சிக்க யார் யாரோ வருகிறார்கள். பல்லவ மன்னர் இந்தப் பக்கமே திரும்புவதில்லை. இளவரசர் எட்டிப் பார்ப்பதே இல்லை...''

''அந்தக் கிழ அரசரைத் தள்ளு, காஞ்சனா, அதிர்ஷ்ட காலம் நெருங்கிவிட்டது! பைரவ மூர்த்தியின் அருள் நெருங்கிவிட்டது. காளி தேவிக்கு நான் செய்யும் பூசை பலனளிக்காது போய்விட வில்லை. தேவிதான் விஜயனை நம்மிடம் கொண்டு சேர்த்திருக்கிறாள். அவன் இளவரசனின் பால்ய நண்பனாம். அவன் வாதாபியினின்று ஏதோ இரகசியம் கொண்டு வந்திருக்கிறான். அவனை மட்டும் நீ கவர்ந்துவிட்டால் பிறகு இளவரசர் உன் காலடியில்!'' என்றான் காபாலிகன்.

'விஜயன் விஜயன்' என்று காஞ்சனா முணுமுணுத்தாள். மஞ்சத்திலிருந்துத் துள்ளி எழுந்துச் சோம்பலை முறித்து, ''பைரவா, சீக்கிரமாகப் போ, போ... விஜயனை அழைத்து வா'' என்று யாழின் நரம்பினைத் தட்டிவிட்டது போன்ற குரலில் கூறினாள்.

தன் இரு கரங்களையும் தலைக்கு மேல் தூக்கி, உடலை வளைத்து அவள் சோம்பல் முறித்த நிலையில் அவள் உடலின் நெளிவும், பொய்யோ என்று கூறப்படும் அவள் இடையின் அழகும், இடை வருந்துவதற்குக் காரணமான மார்பகமும் கண்ட காபாலிகன், "காஞ்சனா, அடுத்த முறை மத்த விலாச நாடகம் நாம் நடிக்கக் கூடாது. நீ வெறிபிடித்த காபாலிகையாக, நடிப்பதை விட அழகு ராணியாக, சர்வாலங்கார பூஷிதையாக நடிக்க வேண்டும். நான் அரச குமாரனாக நடிக்க வேண்டும்" என்றான். சொல்லிவிட்டு அங்கே நிற்காமல் அவன் பட்டாடைகளைக் கையில் எடுத்துக் கொண்டு செல்லும் போது, காஞ்சனா சற்றுமுன் நின்று ஒரு கணநேர நிலையில் அவள் அழகை முழுவதும் ரசித்ததை மீண்டும் கற்பனை செய்து கொண்டான். தன் கைகளில் இருந்த பட்டாடைகளை ஒருமுறை அணைத்துக் கொண்டான்.

⁂ ⁂ ⁂

**மா**லை நெருங்கிக் கொண்டிருந்தது. காஞ்சனா மேன் மாடத்தினின்று இறங்கி, இசைக் கூடத்திற்கு வந்தாள். கூடத்தில் யாருமில்லை. பெருந்தூண்களும், மஞ்சங்களும் வருபவர்கள் உட்கார மெத்தையிடப்பட்ட ஆசனங்களும் தரையில் ரத்தினக் கம்பளமும், பலகணியில் அசைந்தாடும் திரைச் சீலையும்; தொங்கும் வெண்கல விளக்குகளும் நிறைந்த அந்தக் கூடம் வெறிச்சோடி இருந்தது. அந்த நேரத்தில் அந்தக் கூடத்தில் இசை முழக்கம் கேட்கும். நாட்டிய ஒலி கேட்கும். காஞ்சனா இருந்தாலும் இல்லாவிட்டாலும் அங்கே சலசலப்புக்குக் குறைவில்லை.

விஜயன் வரப்போகிறானென்று மற்ற எவரையும் அவள் வர அனுமதிக்கவில்லை. காபாலிகனையும் காணவில்லை. காஞ்சனா பொறுமை இழந்தாள். விளக்கு ஏற்றுவதற்குப் பணிப்பெண் வந்துவிட்டாள்.

அப்போது வாயிலிருந்த காவலன் உள்ளே வந்து, "தங்களைக் காண இந்த நகரத்துப் பெரும் வணிகர் வந்திருக்கிறார். இவ்வளவு நாட்களாகப் பல அயல்நாடுகளுக்குச் சென்றவர் இப்போதுதான் திரும்பியிருக்கிறார். அவர் இங்கு வருவதே பெருமைதான்..." என்றான்.

"யாருக்கடா பெருமை?" - காஞ்சனா குரலில் கடுமை யிருந்தது. காவல்காரன் நடுங்கிவிட்டான். காஞ்சனா புன்சிரிப்பை வரவழைத்துக் கொண்டு, "சரி, சரி அவரை வரச் சொல்லு" என்றாள். கணத்திலே மாறிய அவள் குணத்தைக் கண்டு காவலனும் வியப்படைந்தான்.

தூக்க முடியாமல் மூட்டை ஒன்றைத் தூக்கிக் கொண்டு காஞ்சி மாநகரத்து வியாபாரி காளிங்கராயன் வந்து கொண்டிருந்தான். சிறு கைத்தடியைத் தூக்குவதற்குக் கூட வேலையாட்களை எதிர்பார்க்கும் காளிங்கன், தானே அந்த மூட்டையைத் தூக்கி வந்தது வியப்புத்தான்.

காஞ்சனா ஒரு சிறு மஞ்சத்தில் அமர்ந்திருந்தாள். அவள் உட்கார்ந்திருந்த அழகைக் கண்டே காளிங்கன் மதுவுண்டவனானான்.

தரையிலே மூட்டையைப் பிரித்து வைத்து அதிலிருந்து ஒரு பட்டுத் துணியைக் கையிலெடுத்துக் கொண்டே, ''என்னைப் பற்றிக் கேள்விப்பட்டிருக்கலாமே!'' என்றான் காளிங்கன்.

தெரியாது என்பதற்கு அடையாளமாகக் காஞ்சனா தலையசைத்தாள். அவள் விழிகள் தரையில் கிடந்த முத்துமாலை மீதிருந்தன.

''என்னைப் பற்றி நான் என்ன சொல்லிக் கொள்ள முடியும்? இதோ பார் காஞ்சனா. நான் கொண்டு வந்திருக்கும் பட்டும், முத்தும்...! இவை என்னைப் பற்றி உனக்குச் சொல்லும்...''

''ஓகோ! அப்படி என்ன சொல்லும் இந்த முத்தாரம்?'' என்று அவற்றில் ஒன்றைக் கையில் எடுத்து இப்படியும் அப்படியும் அசைத்தாள். உயர்ந்த ரக முத்துக்கள்தாம் அவை.

''உன் கழுத்தில் இது மாலையாக அலங்கரிக்கும்போது இந்த முத்துக்கள் என்னைப் பற்றிச் சொல்லும். நான் பெரிய வியாபாரி. எனக்கிருக்கும் செல்வத்துக்குக் கணக்கில்லை. எனக்குச் சொந்தமாக ஏழெட்டுக் கப்பல்கள் இருக்கின்றன என்று சொல்லும்.''

அந்த இலட்சாதிபதி தன் முன் புழுபோல் நெளிவதைக் கண்டு காஞ்சனா தனக்குள் சிரித்துக் கொண்டாள்.

''ஐயா, செல்வந்தரே! இந்த முத்து மாலையை என்ன செய்யப் போகிறீர்!''

''உன் புறாக் கழுத்தில் அணிவிக்கப் போகிறேன் வெளிச்சத்தில். அவை மின்னும் அழகைப் பார்த்து நான் மயங்குவேன். முத்துக்கு ஒளி அதிகமா, உன் மோகனப் பல் வரிசைக்கு ஒளி அதிகமா என்று உன் பல் வரிசையுடன் அதைத் தரா தரம் பார்ப்பேன்...''

காஞ்சனா ஒரு முத்து மாலையை எடுத்தாள். பட்டென்று அறுத்தாள். முத்துக்கள் சிதறி ஓடின. அவற்றில் நாலைந்தைப்

பொறுக்கி எடுத்து, ''இந்தாரும்... என் பல் வரிசையைப் பிறகு வருணிக்கலாம்... உமது பற்களை உடனே மாற்றி முத்துக்களை அந்த இடத்தில் வைத்துக் கொள்ளுங்கள். பல்லின் கரிய நிறமாவது மாறும்'' என்றாள்.

அந்தக் கூடம் முழுவதும் உதிர்ந்துச் சிதறிய முத்துக்களையும், காஞ்சனாவின் பாதங்களில் மிதிப்பட்ட பட்டாடையையும் பார்த்தவாறு பிரமித்து நின்ற செல்வச் சீமானைப் பார்த்து, ''இங்கிருந்து இப்போதே போய்விடுங்கள்... மறுமுறை உம்மை இங்கே வருவதற்கு நானே சந்தர்ப்பத்தை ஏற்படுத்துகிறேன்...''

காஞ்சனா கோபமுடன் கூறும் வார்த்தைகள்கூட அழகாய்த் தானிருக்கின்றன.

''நீ எனக்குச் சொல்லி அனுப்புகிறாயா? என்னைத் தேடி நீயே வருமாறு எனக்குச் செய்யக் கூடிய சக்தியில்லையா?'' என்று ஆத்திரத்துடன் முணுமுணுத்துக் கொண்டே வெளியேறினான் காளிங்கன்.

அவன் செல்வதற்காக மறைந்துக் காத்திருந்த காபாலிகன் அவசர அவசரமாக உள்ளே நுழைந்தான்.

காபாலிகன் வருவதைக் கண்டு சோர்வினைப் போக்கி புது உற்சாகமடைந்த காஞ்சனா, ''ஏன் இவ்வளவு நேரம் பைரவா! எங்கே நீ கூறிய வாலிபன்...?'' என்று பரபரப்புடனும் ஆவல் மிகுதியுடனும் கேட்டாள்.

காபாலிகன் தலைகுனிந்து வாட்டமுடன், ''அவனைத்தான் இவ்வளவு நேரமாகத் தேடி அலைந்தேன், காஞ்சனா, யாரோ என் காரியத்தில் குறுக்கிடுகிறார்கள் என்று தெரிகிறது'' என்றான்!

●


# 3. சிலையும் ஜீவனும்

மாமல்லபுரத்துக் கடற்கரையின் ஓரமாக இளவரசர் இராஜசிம்மனும், சற்று வயதானவர் ஒருவரும் நடந்து வந்து கொண்டிருந்தனர். அலைகள் விரைந்து வந்து அவர்கள் பாதங்களை நனைத்துவிட்டுத் திரும்பி ஓடின. அலை வழிந்த பிறகு வழவழப்பாக்கப்பட்ட மணல் தரையில் நண்டுகள் ஏதோ அவசரக் காரியம் இருப்பது போல் விரைந்து ஓடின. கிளிஞ்சலும், சங்கும் கரையிலே ஒதுக்கப்பட்டுக் கிடந்தன. விதவிதமான கடற் பாசிகளும், கொடிகளும் நிலமடந்தைக்கு மாலை அணிவிப்பதுபோல அலைகளால் தரையிலே வீசப்பட்டன. அலைகள் இளவரசரின் பாதங்களை நனைத்தன. வயது முதிர்ந்த அந்த அறிஞர் முகுந்தநாதரின் மற்றொரு கரத்தை இராஜசிம்மன் பிடித்துக் கொண்டு அவருக்கு உறுதுணையாக நடந்தாலும், வயதை மீறிய பலமும் துணிவும் அம் முதியவருக்கு இருந்ததால், அவர் இளைஞரைவிடக் கம்பீரமாக நடந்தார். தொலைவிலே வீடு திரும்பும் பரதவர்களின் கட்டுமரங்கள் வந்து கொண்டிருந்தன.

"பாய் விரித்துக் கலங்கள் வந்து கொண்டிருக்கும் காட்சியை நான் சிறு வயதில் கண்டிருக்கிறேன் – இப்போதெல்லாம் அயல்நாட்டுக் கலங்கள் அதிகம் வருவதில்லையா?" என்று இளவரசர் இராஜசிம்மன் பெரியவரை நோக்கிக் கேட்டான். அவர் மெல்ல நகைத்தார்.

"இராஜசிம்மா, கடந்த சில திங்களாக வெளிநாட்டு வாணிபக் கலங்கள் கடல் மல்லைத் துறைக்கு வருவது குறைந்துவிட்டது. இங்கே உள்நாட்டில் எப்போதும் யுத்தம் யுத்தம் என்று அமைதி குலைந்திருந்ததால் வெளிநாட்டவர் நம் பண்டங்களை இங்கே இறக்குவதற்கே அஞ்சுகின்றனர். நாகைப்பட்டினத்திற்கோ, கொற்கைக்கோ போய்விடுகின்றனர்" என்றார்.

இராஜசிம்மன் மீண்டும் மௌனமாய் நடந்தான். அன்று முழுவதும் அவன் மாமல்லபுரம் முழுவதும் சுற்றிவிட்டான். அவன் கேட்கும் ஒவ்வொரு கேள்விக்கும் சளைக்காமல்



மறுமொழி கூறிவந்தார் முகுந்தநாதர். அவர் மீது பல்லவ அரச குலத்தவரிடையே மதிப்பும் மரியாதையும் மிகவும் இருந்தன. மகாபாரதக் கதையை மாளிகையிலுள்ளவர்களுக்கு நாள்தோறும் எடுத்துச் சொல்ல வேண்டிய பணி அவருடையது. அவரது தந்தையும் அதே பணியில் ஈடுபட்டவர். அவர் காலத்திற்குப் பிறகு முகுந்தநாதர் தந்தையின் செயலைத் தொடர்ந்தார். மன்னர் பரமேசுவர வர்மருக்கு முகுந்தநாதர் மீது மரியாதை மிக அதிகம். தந்தை மிகவும் பாராட்டும் அவரிடம் இராஜசிம்மன் பயபக்தி கொண்டிருந்ததில் அதிசயம் இல்லை. அவன் ஐந்தாண்டுகளாகக் காஞ்சியில் இல்லை. அலை கடல்களுக்கு அப்பாலுள்ள நாடுகளைச் சுற்றிப் பார்த்துவிட்டுக் காஞ்சிக்குத் திரும்பிச் சில நாட்களே ஆகியிருந்தன. காஞ்சிக்கு வந்தவுடனேயே மாமல்லபுரத்தைக் காண வேண்டும் எனும் பரபரப்பு அவன் உள்ளத்தே இருந்தது. பல ஆண்டுகளாக அவன் உள்ளத்தில் அடக்கி வைத்திருந்த இலட்சியங்களையும், கனவுகளையும் மாமல்லபுரத்துச் சூழலில் மீண்டும் நினைத்துப் பார்க்க வேண்டும் எனும் துடிப்பு இருந்ததால் காஞ்சியினின்று மாமல்லபுரத்திற்குப் புறப்பட்டுச் சென்றான்.

மாமல்லபுரத்தில் மகா மன்னர்களான மகேந்திர பல்லவனும், நரசிம்ம பல்லவனும் பாறைகளிலே ஜாலம் செய்த இடத்திற்குச் சற்றுத் தள்ளிக் கடல்மல்லைத் துறைமுகம் இருந்தது. கடல்மல்லையினின்று புறப்படும் கப்பல்களும், வந்து கரை சேர்ந்திருக்கும் அயல்நாட்டுக் கலங்களும், அதில் ஏறுபவரும் இறங்குபவரும், கரையிலே குவிக்கப்பட்டிருக்கும் பண்டங்களும், அவற்றை விலை பேசி வண்டிகளில் ஏற்றிச் செல்ல இங்குமங்கும் அலையும் வணிகர்களும், பெரும் பாரத்தைச் சுமந்து எடுத்துச் செல்லும் பணியாட்களுமாக அத்துறை எப்போதும் கலகலப்பாக இருக்கும். வெளிநாடுகளுக்குப் பயணம் செய்யப் புறப்பட்டவர் களும் அவர்களை வழியனுப்ப வந்த நங்கையரும், நாரீமணிகளும், உற்றாரும் உறவினரும் கண்ணீர் ததும்பக் கையசைத்து விடையளிக்கும் காட்சியும், கலங்களினின்று கரை இறங்கிப் புதிய மண்ணைப் பார்த்துப் பிரமித்து உலவும் வெவ்வேறு தோற்றமுள்ள வேற்று நாட்டினரின் விசித்திர மொழிகளுமாக அந்தத் துறை பெரும் விழாக்கோலம் பூண்டு விளங்கும்.

இராஜசிம்மன் துறைமுகத்தருகே சற்று நேரம் இருந்துவிட்டு, முகுந்தநாதரை அழைத்துக் கொண்டு சிற்பச் செல்வங்கள் இருக்கும் இடத்தை நோக்கிக் கடற்கரையோரமாகவே நடந்துச் சென்றான்.

''இந்தப் புதை மணலில் தங்களுக்கு நடப்பது சற்றுச் சிரமமாகவே இருக்கும்'' என்றான் இளவரசன்.

''நானும் மாமல்லபுரத்தைப் பார்த்து எவ்வளவோ காலமாகி விட்டது. உன்னருகே இருந்து அந்த விட்ட குறையான இடங்களைப் பார்ப்பதில் எனக்குச் சிரமமேது?'' என்றார் முகுந்தநாதர்.

''விட்ட குறையா?'' இராஜசிம்மன் வியப்புடன் கேட்டான்.

''ஆமாம், இராஜசிம்மா... உனது முப்பாட்டனாரின் கனவு இன்றும் கனவாகத்தானே இருக்கிறது. வெறும் பாறைகளிலே அற்புதக் காட்சிகளைக் கண்டார் மகேந்திரவர்மர். அவற்றிற்கு உயிர் கொடுத்து அவரது இதயத் துடிப்பைச் சிற்றுளியின் மூலம் சிறப்பிக்க முயன்றார் நரசிம்மர்...''

''அவ்வளவுதானா? அப்படியேதான் – அன்று இருந்த நிலையில்தான் இன்றும் கடல் மல்லை இருக்கிறதா? அவர்கள் விட்ட குறையைத் தொடர்ந்து என் தந்தை கலைப் பணியை முடிக்கவில்லையா?'' என்று இராஜசிம்மன் பரபரப்புடன் கேட்டான்.

முகுந்தநாதர் மெல்ல நகைத்தார். பிறகு பெருமூச்சுவிட்டு, ''இராஜசிம்மா...! உன் தந்தைக்கு இருந்த அளவு கடந்த ஆர்வம் மட்டும் செயலளவில் முடிந்திருந்தால் இங்குள்ள பாறைகள் வெறும் கற்களாக இருந்திருக்குமா? யுத்தம் யுத்தம் என்று காலமெல்லாம் படையெடுப்பிலேயே கழித்துவிட்டார்...'' என்றார்.

''ஐயா, வலியச் சென்று தந்தையே படையெடுத்தார் என்று சொல்கிறீர்களா? சாளுக்கியர்கள் அணி அணியாக வந்து கொண்டே இருந்தார்களே, அவர்களை முறியடித்திராவிடில் நமது செல்வம் யாவுமே கொள்ளை போயிருக்குமே...'' என்று இராஜசிம்மன் கேட்கவும், முகுந்தர், ''இராஜசிம்மா... உன் தந்தை மன்னர் பரமேச்வரவர்மருக்கு நாட்டைப் பிடிக்கும் ஆசை இருப்பதாக நான் சொல்லமாட்டேன். பல்லவ குலத்துக்கே அந்த எண்ணம் கிடையாது. ஆனால் சாளுக்கியர்கள் வெஞ்சினம் கொண்டு தலைமுறை தலைமுறையாகப் போர்க் குரல் எழுப்பிப் பாய்ந்து வந்தவாறே இருந்த காரணத்தை அவராவது அறிந்து அதைத் தடுத்திருக்கலாமே...'' என்று சொல்ல வந்தேன்.

இராஜசிம்மன் ஏதும் பேசவில்லை. மெல்ல நடந்து கொண்டிருந்தான்.

முகுந்தநாதரே இப்போது பேசினார். ''இராஜசிம்மா, சாளுக்கியர்களுக்கும் நாட்டைப் பிடித்து விரிவுபடுத்தும் மண்ணாசை இருக்காது என்றுதான் நினைக்கிறேன். பல்லவர்கள் சிற்ப, சித்திரக் கலைகளில் மிஞ்சிவிட்டனர் என்ற பொறாமை தான் அவர்களுடைய போர் வெறிக்குக் காரணமாயிருக்கும்'' என்றார்.

''அப்படியும் நாம் மிஞ்சி வென்று விட்டதாகத் தெரிய வில்லையே. அவர்கள் நாட்டிலிருக்கும் அஜந்தாவுக்கு இணையாக நாம் ஒரு சிறு குடைவரைக்கூட அமைக்க வில்லையே...'' என்று பெருமூச்சுவிட்டான் இராஜசிம்மன்.

''ஆமாம், ஆமாம்! நான் மறந்தே போய்விட்டேன்... நீ வாதாபிக்குச் சென்று அங்கிருந்து அஜந்தாக் குகைக்குச் சென்றாய் அல்லவா? அதைப் பற்றிய விவரத்தை எனக்குக் கூற வில்லையே... அங்குள்ள அற்புதச் சித்திரங்களைப் பார்த்தாயா! நீ மிகவும் பாக்கியசாலி. இராஜசிம்மா! மணி மங்கலத்துச் சோதிடர் கூறியது நிச்சயம் பலித்துவிடும் என்று தான் நினைக்கிறேன்...'' என்று முகுந்தநாதர் கூறவும், இராஜசிம்மன் அவர் பக்கம் திரும்பி, ஆவலுடன், ''மணி மங்கல சோதிடர் நலமாய் இருக்கிறாரா? அவர் என்ன கூறினார்?'' என்று கேட்டான்.

''அவர் சொன்னவை எல்லாவற்றையும் சொல்வதென்றால் நேரம் போதாது; பொழுது சாயத் தொடங்கிவிட்டது. ஆனால் ஒன்று மட்டும் அவர் சொன்னதை நான் அடிக்கடி நினைத்துப் பார்க்கிறேன் - மகேந்திர பல்லவரைப் போன்ற கலை உணர்ச்சியும், நரசிம்மவர்மரைப் போன்ற வீரமும் கொண்டு இளவரசர் திகழ்வார் என்று சோதிடர் கூறினார். அது அப்படியே நடந்துவிடும் என்றுதான் நினைக்கிறேன்.''

இராஜசிம்மன் பெருமூச்சுவிட்டு, ''ஐயா, என் பாட்டனார் களைப் போன்ற பெருமை எனக்கு வருமா! ஹூம்! வெறும் கனவு கண்டுவிட்டால் மட்டும் போதுமா? மகேந்திரவர்மர் கலையுள்ளத்துடன் திகழ்ந்தார். தெற்கே சித்தர் வாசலிலே பாண்டியர்கள் விட்ட குறையைத் தொடர்ந்து ஓர் அஜந்தாவையே கொண்டு வந்துவிட்டாரே! அவரெங்கே, நானெங்கே?''

''இராஜசிம்மா, ஏதோ வாழ்நாளே முடிந்துவிட்டவன் போல் பேசுகிறாயே. இப்போதுதானே உனது கலைப்பயணமே ஆரம்பம் ஆகிறது. கலைக் கண்களை யுத்தக் கண்களாகப் பார்க்காமல் பயணத்தை நடத்திச் சென்றாயானால் உனக்கு வெற்றி நிச்சயம்'' என்றார் முகுந்தநாதர்.

இராஜசிம்மன் மெய் சிலிர்த்தது. மாமல்லபுரத்தில் பூர்த்தியாகாதிருக்கும் குகை மண்டபங்கள் சிலவற்றைச் சென்று பார்த்தான். முகுந்தநாதரால் பாறைகளின் மீது ஏறி இறங்க முடியவில்லை. மற்றொரு நாள் பார்த்துக் கொள்ளலாம் என்று கடற்கரையோரமாகவே நடந்தான் அவருடன். வாதாபிக்குச் சென்றதையும் அங்கே விஜயன் எனும் துடிப்புள்ள இளைஞனைச் சந்தித்ததையும் அவனுடன் அஜந்தாக் காடுகளில் சுற்றியலைந்ததையும் பற்றிப் பேசிக் கொண்டே நடந்தான். முகுந்தநாதர் கால்கள் தள்ளாடின. அதை இராஜசிம்மன் கண்டு விட்டான். கடற்கரைக்குச் சற்றுத் தூரத்தில் யானையைப் போல் படுத்துக் கிடந்த பாறைகளை நோக்கிச் சென்று அமர்ந்தான். முகுந்தநாதரைப் பாறையில் உட்கார வைத்து அவர் காலடியில் அவன் அமர்ந்தான்.

''வாதாபியில் சாளுக்கிய மன்னன் உன்னை அடையாளம் கண்டு கொள்ளவில்லையா?'' என்று கேட்டார் முகுந்தநாதர்.

''நான் பல்லவ நாட்டு இளவரசனாக அங்கே நடமாட வில்லையே. விஜயன் மிகவும் நல்லவன். அவனுடைய குரு மகா மேதை. சித்திரக்கலை வல்லுநர். அவரிடமே தங்கி குருகுல வாசம் செய்து பெரும் கலைஞனாக வேண்டும் எனும் துடிப்பு எனக்கு மிகவும் இருந்தது. அப்போது தான் நாம் ஏன் இராஜ குமாரனாகப் பிறந்தோம் என்று வருந்தினேன். விஜயனைப் போன்று நானுமிருந்தால் என் கையில் தூரிகை மிளிரும்...''

''இராஜசிம்மா... மன்னனாயிருந்துச் சித்திரக்கலைப் பித்தனாக இருக்கலாம். ஆனால் சித்திரக் கலைப்பித்தன் மன்னனாக முடியுமா? பல்லவ நாடு உன்னை மன்னராகப் பெறும் பேறு பெற்றிருக்கிறதே இராஜசிம்மா...''

''அதைவிட நான் அஜந்தா வர்ண ரகசியம் அறிவதில் தான் பெருமகிழ்ச்சி அடைவேன். விஜயன் அதை அறிந்து என்றாவது ஒரு நாள் வந்து சேருவான்... அந்த மகிழ்ச்சிகரமான நாளை நான் எதிர்பார்த்துக் கொண்டேயிருக்கிறேன்.''

''இராஜசிம்மா, உன் முப்பெரும் பாட்டனார் மகேந்திர போத்தரையரும் அப்படித்தான் இளம் வயதில் வர்ண இரகசியம் தேடிச் சென்ற இடத்தில் அற்புத வீணையைக் கண்டுபிடித்தார்...''

''ஆமாம், ஆமாம். நானும் கேள்விப்பட்டிருக்கிறேன். பரிவாதினி... பரிவாதினி! ஆகா... அந்த வீணை இப்போது எங்கே இருக்கிறது ஐயா...அதை நான் கண்டுபிடித்தாக

வேண்டுமே. இவ்வளவு வேலைகளை வைத்துக் கொண்டு நான் எப்படிப் பொழுதை வீணே கழிக்க முடியும்...'' என்று கூறி எழுந்தான்.

இருளின் ஆட்சி தொடங்கிவிட்டது. முகுந்தநாதரும் மெல்ல எழுந்தார். இராஜசிம்மன் எதிரே இருந்த பாறை ஒன்றை உற்று நோக்கியவாறிருந்தான். ''ஐயா! ஐயா! அதோ பார்த்தீர்களா? அந்தப் பாறை இயற்கையாகவே குகை போன்ற அமைப்புடன் இருக்கிறதல்லவா? சிங்கத்தின் முகமும் தோன்றுகிறது பார்த்தீர்களா?'' என்று கூறவும் முகுந்தநாதரும் அதைப் பார்த்தார்.

இராஜசிம்மனின் மனத்தில் தோன்றும் கற்பனை அற்புதத்தைக் கண்டு வியந்த அவர், ''கலையும் அதன் காவலனும் நீடுழி வாழ்க'' என மானசீகமாக ஆசி கூறினார்.

∴ ∴ ∴

இராஜசிம்மன் ஏறி வந்த குதிரை அங்குள்ள மாளிகை அருகே கட்டப்பட்டிருந்தது. அருகே பணியாள் பயபக்தியுடன் நின்று கொண்டிருந்தான். முகுந்தநாதர் காஞ்சிக்குச் செல்லாமல் திருவிட வெந்தை எனும் ஊருக்குச் செல்ல விரும்பினார்.

''இராஜசிம்மா! என்னுடன் என் கிராமத்திற்கு வந்துவிட்டுச் செல்லுமாறு உன்னை உரிமையுடன் அழைக்கிறேன். நாட்டின் இளவரசனானாலும் என் மகன் போன்று உன்னை இச்சமயம் மதிக்கிறேன். நாளையே நீ அரசராகிவிட்டால் திருவிடவெந்தை வந்து வராஹப் பெருமாளைத் தரிசிக்க முடியுமோ முடியாதோ...'' என்று முகுந்தநாதர் கூறினார்.

''பொறுத்தருள வேண்டும் ஐயா... இன்று மாலையே நான் தந்தையைச் சந்திப்பதாகக் கூறி வந்திருக்கிறேன். காலையிலேயே மன்னர் சொல்லி அனுப்பியிருந்தார். என்னிடம் முக்கியச் செய்திகள் பேச வேண்டும் என்று. மற்றொரு நாள் கட்டாயம் வருகிறேன், என்னைத் தவறாக நினைக்காதீர்கள்...''

''உன் மனம் எனக்குத் தெரியாதா இராஜசிம்மா... ஏன் தவறாக நினைப்பேன்? நீ உடனே புறப்படு. மன்னர் உடல்நிலை இப்போது எப்படி இருக்கிறது? யாரும் அவரைச் சந்திக்க இவ்வளவு நாட்கள் அனுமதிக்கவில்லையே. மீண்டும் அவர் உடல் நலம் சரியாகிப் பாரதக் கதைகளைத் தொடர்ந்து அவர் கேட்க வேண்டும் என்று வைகுண்டவாசனான ஸ்ரீமந் நாராயணனை அல்லும் பகலும் துதித்து வருகிறேன்'' என்றார். அவர் கூறும்போது அவர் குரலில் பாசமும் கடமையும் கலந்த உணர்ச்சி நிறைந்திருந்தது.

திருவிடவெந்தைக்குச் செல்லும் சாலைக்கு வந்து சேர்ந்த இராஜசிம்மன், ''தாங்கள் எப்படிச் செல்வீர்கள்? ரதத்தையாவது காஞ்சியினின்று வரவழைத்திருப்பேனே'' என்றான். முகுந்தநாதர் நகைத்து, ''அதோ பார், மாமல்லபுரத்திலிருந்து பண்டங்கள் ஏற்றிச் செல்லும் வண்டிகள் வருவதை. அவற்றில் ஏதாவது ஒன்றில் ஏறி அமர்ந்தால் மூன்றாம் ஜாமத்திற்குள் நான் போய்ச் சேர்ந்துவிடுவேன். நீ போகும்போதும் அதே நேரம் ஆகிவிடுமே. மன்னரைச் சந்திக்க முடியுமோ முடியாதோ; முன்னிலவு நேரம்தான்... ஆனால் எச்சரிக்கையாகச் செல்ல வேண்டும் இராஜசிம்மா... நீ உனக்கு மட்டும் சொந்தமில்லை; எங்கள் எல்லோருக்கும் சொந்தம்'' என்றார். இராஜசிம்மன் கண்களில் நீர் தளும்பியது. தலை வணங்கி மரியாதை தெரிவித்தான். அப்போது வரிசையாக வந்த வண்டிகளிலிருந்து வண்டிக்காரர்கள் கீழே இறங்கி இளவரசரைச் சூழ்ந்து கொண்டு தங்கள் பணிவன்பைத் தெரிவித்தார்கள்.

''இளவரசர் இராஜசிம்மர் வாழ்க!'' என்ற வாழ்த்தொலி வானைப் பிளந்தது.

⁂ ⁂ ⁂

இராஜசிம்மன் குதிரையை விரைந்து செலுத்தினான். ஓரிடத்தில் கொடி வழி ஒன்று பிரிந்தது. அதன் வழியே சென்றால் வெகு விரைவில் திருக்கழுக்குன்றத்திற்குச் சென்றுவிடலாம் எனும் எண்ணத்தில் அந்த வழியே குதிரையைச் செலுத்தினான்.

மரங்கள் இருபுறமும் அடர்ந்து வளர்ந்திருந்தன. இலந்தை மரங்களும், வில்வ மரங்களும், எலுமிச்சை மரங்களுமாக எங்கும் காணப்பட்டன. சிறுசிறு புதர்களும் உயர்ந்த மரங்களைச் சுற்றி வளர்ந்திருந்த கொடிகளும் அந்தப் பாறைக்கு மதில் கட்டினாற்போல் தோன்றின. பறவைகள் தத்தம் கூடுகளுக்கு வந்து சேரத் தொடங்கிவிட்டன. அவை இடும் கூச்சலும், சிறகுகளை ஓசைபடுத்தும் ஒலியும், தாய்ப் பறவை வந்து சேர்ந்ததால் ஆவலுடன் இடும் ஒலியும் அந்தப் பகுதியின் அமைதியை மாற்றிக் கொண்டிருந்தன.

மஞ்சள் வெயில் மெல்ல மெல்ல மறைந்து வந்தது. செக்கர் வானத்தையும் இருள் போர்வை மெல்ல மூடிக் கொண்டிருந்தது. மாமல்லபுரத்தில் தன் மூதாதையர்கள் விட்டுச் சென்ற கலைப் பணியைத் தொடர்ந்து என்னவெல்லாம் செய்யலாம் எனும் சிந்தனையில் மூழ்கியவனாய் பரியைச் செலுத்தி வந்தான் இராஜசிம்மன். அந்தப் பணிகளைச் சீராக செய்து முடிக்கும் சிற்பிகள் எங்கு உளர் எனும் கவலையும் அவனைச் சூழ்ந்தது.

மாமல்லபுரத்தில் வாழ்ந்து வந்த சிற்பக் குடும்பத்தினர் எங்குச் சென்றனர் என்றே தெரியவில்லை. மகேந்திரவர்மரின் கனவுகளையும் நரசிம்ம வர்மரின் கனவுகளையும் நனவாக்கப் பாடுபட்ட அந்த மகா மேதைச் சிற்பியும் காலமாகிப் பல ஆண்டுகள் ஆகிவிட்டன. அவரிடத்தைப் பூர்த்தி செய்ய மற்றொரு சிற்பியை எங்குத் தேடி அழைத்துவருவது எனும் கவலை இராஜசிம்மனைப் பெரிதும் வாட்டியது. குதிரைக் குளம்படி ஓசை, பட்சி ஜாலங்களின் கலகலவெனும் ஒலியுடன் சேர்ந்துப் போட்டியிட்டது. திடீரென இராஜசிம்மன் குதிரையின் வேகத்தைக் குறைத்தான். அவன் எதையோ உற்றுக் கேட்பதுபோல் தோன்றியது.

'ஜல் ஜல்' எனும் சதங்கையின் ஒலியா? கிணிங் கிணிங் எனும் சிற்றுளியின் ஒலியா! அந்த மனித நடமாட்டமற்ற பிரதேசத்தில் சதங்கை ஓசையும், உளியின் சப்தமும் எழுகின்றனவா? அவன் செவிகளில் விழுவது உண்மைதானா? இவ்வளவு நேரம் சிற்பியையும் சிற்பத்தையும் பற்றி நினைத்துக் கொண்டு வந்ததால் ஏற்பட்ட மனப்பிரமையா? கலை மீது ஏற்பட்ட பிரேமையா? இராஜசிம்மன் சற்றுக் குதிரையை நிறுத்தினான்.

அந்த ஒலி மிக அருகே கேட்டது. அந்த ஒற்றையடிப் பாதையினின்று பிரிந்து மற்றொரு சிறு பாதை காட்டின் நடுவே சென்றது. சந்தியா காலத்து மங்கிய இருளில் அந்தப் பாதை ஒரு பாழடைந்த வீட்டிற்குச் செல்வது தெரிந்தது. இராஜசிம்மன் உடல் ஒரு முறை ஏனோ சிலிர்த்தது. குதிரையை அந்தப் பாதையில் திருப்பினான். காய்ந்த சருகுகளின் மேல் குதிரை நடந்து செல்லும்போது சரசரவெனும் ஒலி எழுந்தது. பதுங்கியிருந்த முயல்கள் 'குடு குடு'வென எங்கோ ஓடின. பாதையின் குறுக்கே இரு மான்கள் புதிய அரவம் கேட்டதால் பயந்துத் துள்ளி ஓடின. அப்போதுதான் மலரும் மல்லிகையின் மணம் 'குப்'பென்று எங்கும் சூழ்ந்தது.

இராஜசிம்மன் ஒரு முறை கண்களைக் கசக்கிக் கொண்டு பார்த்தான். சொப்பனமன்று; கண்களை ஏமாற்றும் மாயத் தோற்றமுமன்று.

அந்தப் பகுதி பல ஆண்டுகளுக்கு முன்பு அழகிய சோலையாய் இருந்தது; அங்கே அழகிய தடாகம் இருந்தது. தடாகத்திலே தாமரை மலர்கள் பூத்துச் சிரித்தவாறிருந்தன. கொன்றையும், புன்னையும் பொன்னரளியும் பூத்துக் குலுங்கிக் கொண்டிருந்தன. மாதவியும் சம்பங்கியும் துவண்டுப் படர்ந்து

மலர் பாறைகளின் வடிவத்தையே அதிசௌந்தர்ய உருவமாக மாற்றிக் கொண்டிருப்பார்கள். பர்ணசாலை போன்று தோற்றமளிக்கும் அழகிய குடிலுக்கு உள்ளேயிருந்து சதங்கை ஒலி கேட்கும். அந்த ஒலி கேட்காத வேளையில் முத்துச் சிரிப்பொலி பொங்கி வரும். அதுவும் கேட்காத போதில் மோகனப் பேச்சொலி மிதந்து வரும். மகேந்திர வர்மரும், மாமல்லரும் அந்த அழகிய சோலைக்குப் பலமுறை வந்திருக்கிறார்கள். இராஜசிம்மனுக்கு அவையெல்லாம் தெரிந்திருக்க நியாயமில்லை. அதை எடுத்துச் சொல்வதற்கும் ஆளில்லை.

மாமல்லபுரத்துச் சிற்பப் பணி தடைப்பட்டு நின்ற பிறகு அந்தச் சோபை மிகுந்த சோலைக்கு வந்து செல்பவர்கள் குறைந்தனர். வசித்து வாழ்ந்தவர்கள் இல்லாது போயினர். செடியின் வனப்புக் குறைந்தது. மலர் சிரிக்கவில்லை. பசுமையிலே பழுப்புச் சூழ்ந்தது. இலையுதிர்ந்த மரங்கள் [illegible]பும் கிளையுமாயின. வேண்டாத கொடிகள் மரங்களைச் [illegible]ற்றிப் பின்னிப் படர்ந்தன. அழகிய பாதை ஒற்றையடிப் பாதையாகியது. சிற்பியின் பர்ணசாலை போன்ற குடிலின் சாளரத்திலே சிலந்திக்கூடு கட்டியிருந்தது. அழகிய பாதங்களின் நர்த்தனம் கண்ட குடிலின் தரையிலே தூசு படிந்திருந்தது.

யானை புகுந்த பசுஞ்சோலை எழிலிழந்தது போல் அந்தச் சிற்ப பூமி சிதைந்துக் கிடந்தது. மாமல்லர் என்று புகழ்பெற்ற நரசிம்மவர்மருக்குப் பிறகு இளம் வயதில் மாண்ட அவரது மகன் இரண்டாம் மகேந்திரனும் அவருக்குப் பின் அரியணை ஏறிய பரமேச்வரவர்மனும்கூட அந்தச் சோலையைப் பற்றி நினைக்கவில்லை.

ஆனால் அந்தக் கலைப்பூமியை ஒரே ஒரு ஜீவன் மட்டும் மறக்காமல் தேடி வந்து சேர்ந்தது. முன்பு சிற்பப் பணி நடந்தபோது அந்தச் சோலையில் இளைய சிற்பிகளுக்கு உதவியாகப் பணியாற்றிய அவர் புலிகேசியின் பெரும் படையெடுப்பின் போது இடம் பெயர்ந்துச் சாளுக்கிய நாட்டிலும், கங்க நாட்டிலும், பாண்டிய நாட்டிலுமாக அலைந்து மீண்டும் மாமல்லபுரமே வந்து சேர்ந்தார். ஒளியிழந்திருந்த அந்தக் குடிலில் விளக்கேற்றி வைத்தார். தூசையும் ஒட்டடையையும் தட்டி ஒழுங்குபடுத்தினார். குடிலைச் சுற்றி வளர்ந்திருந்த முட்செடிகளை அகற்றினார்.

தனியே அங்கிருப்பதில் அவருக்கு அச்சமிருந்தாலும் மகாமேதைகளான சிற்பிகளின் பாத தூளி பட்ட அந்தப் பகுதியிலே தான் மீண்டும் வசிப்பதில் மகிழ்ச்சியே ஏற்பட்டது.

இளங்காலை வேளையில் புள்ளினங்களின் இனிய ஒலியும், அடர்ந்த மரங்களினூடே கதிரவனின் கதிர்கள் பாய்ந்து வரும் அழகொளியும் அவர் மனத்தைக் கவரும். அவர் வந்த பிறகு மான்களும், கிளிகளும், முயல்களும் அவருக்கு நண்பர்களாயின. தோகை ஒன்றும் அவ்வப்போது அங்கு வந்து தலைகாட்டும். களிப்புடன் மணி ஒலிக்க எப்போதாவது வழி தவறி வரும் பசுக்கள் அவரைக் கனிவுடன் நோக்கும். இங்குமங்குமாகத் தாவிச் செல்லும் கடுவனும் மந்தியும் அவரைப் பார்த்துப் பல்லைக் காட்டும். அவரெதிரே அமர்ந்து ஒன்றுக்கொன்று பேனெடுத்துச் சிரிப்பு மூட்டும். அந்த இயற்கைக் காட்சிகளிலே மனத்தைப் பறிகொடுத்துப் பல நாட்களைப் போக்கினார். அரைகுறையாக விட்டுச் சென்றிருந்த சிற்பங்கள் அந்தச் சோலையில் மண்ணில் புதையுண்டு கிடப்பதை எடுத்துச் சீர்திருத்தம் செய்வதில் பொழுதைக் கழித்தார். மாமல்லபுரத்து மலைப்பாறைகளில் குடையப்பட்ட குடைவரை மண்டபங்களைச் சுற்றிப் பார்த்துப் பெருமூச்சு விட்டார். அவர் அதற்காக அந்தச் சோலைக்கும், சோலைக் குடிலுக்கும் வரவில்லை. அமர சிற்பியின் அந்த இல்லத்திலே குடியிருந்துத் தானும் சிற்பத் தொண்டாற்றவன்றோ வந்திருந்தார்!

தன்னுடன் ·கொண்டு வந்திருந்த சிற்பம் செதுக்கும் கருவிகளைக் கூர்மையாக்கக் கொல்லர் உலைக்களத்திற்கு ஒரு நாள் சென்றார். கருமான் காளித்தேவர் அவரை வியப்புடன் பார்த்தார்.

''சிற்றுளியைப் பண்படுத்தவும் இப்போது ஆளிருக்கிறார்களா? வேலையும் ஈட்டியையும் வாளையும் கூர் படுத்துபவர் நிறைந்த இந்தக் காலத்தே மூன்றாம் பிறை போல் ஒரு சிற்பி இருக்கிறாரே?'' என்று வியந்தார்.

காளித்தேவருக்கு எழுபது வயதிருக்கலாம். காலம் எப்படியெல்லாமோ மாறினும் அவர் தன் தொழிலை மட்டும் மாற்றிக் கொள்ளவில்லை. சாளுக்கியர்களை எதிர்த்துப் படையெடுத்துச் சென்று கடல் போன்ற படைகளுக்குத் தேவையான கூரிய வேலும், ஈட்டியும் உருவான பல உலைக்களங்களுள் அவருடையது முதன்மையானது. உருண்டு திரண்ட அவரது தோள்களின் பலங்கொண்டு அவர் சம்மட்டியை எடுத்து விண்விண் என அடித்துச் செப்பனிட்டுத் தந்தைக்கு உதவி செய்த காலம் ஒன்று உண்டு. அப்போது சிற்றுளியையும், சுத்தியையும் அவர் செய்து கொடுத்திருக்கிறார். சிற்பிகள் பலரின் நட்பும் அவருக்குண்டு. பல ஆண்டுகளுக்குப் பிறகு இப்போது சிற்பக் கலைஞரைச் சந்திப்பதில் அவருக்குப் பெரும் மகிழ்ச்சி.

நேரம் போவது தெரியாமல் அவர் பேசிக் கொண்டிருந்த போதுதான் சிற்பி எழுதி வைத்த பல ஓலைச் சுவடிகள் அந்தக் குடிலிலே இருக்க வேண்டும் என்று தனது சந்தேகத்தைத் தெரிவித்தார்.

அவருக்கு ஏற்பட்ட பேரானந்தத்திற்கு எல்லையே இல்லை. புதையல் கிடைத்தது போல் விரைந்துபோய் குடில் முழுவதும் தேடினார். வேறு பழைய சுவடிகள் பல கிடைத்தன. பரத முனிவர் எழுதிய நாட்டிய சாத்திரம் கிடைத்தது. அபிநய முறைகள் அடங்கிய நூல் கிடைத்தது. சிற்ப நூல் கிடைக்காதது அவருக்கு ஏமாற்றமாகவே இருந்தது. எனினும் அவர் மனம் குன்றி விடவில்லை. பாறையைத் தேர்ந்தெடுத்து இவ்வளவு நாள் மறைந்திருந்த சிற்பத் திறமையை மெல்ல மெல்ல வெளிப் படுத்தலானார். மனித சஞ்சாரமற்ற அந்தப் பிரதேசத்தில் கிணிங் கிணிங் எனும் ஓசை எழுந்தது. மரங்கொத்திப் பறவை தன் செயலை நிறுத்திவிட்டுத் திரும்பிப் பார்த்தது. கீச் கீச்சென்று குரல் கொடுக்கும் ஆனைச் சாத்தம் வியப்புடன் திரும்பிப் பார்த்தது.

அழகிய பறவைகள் மட்டுமா ஆச்சரியத்துடன் பார்த்தன? அந்த அழகு நங்கை மெல்ல அருகே நடந்து வந்தாள். அந்த நொடி வரையில் அவள் கால்கள் சோர்வால் தள்ளாடின. சரியாக உணவருந்திப் பல நாட்கள் ஆனதால் களைப்பு அவளைச் சூழ்ந்திருந்தது. வழி தெரியாததால் அவள் அந்தக் குறுக்கு வழியே வந்தவள் ஜன சந்தடியற்ற அந்த இடத்தில் தனிமையைக் கண்டு அஞ்சித் திகைத்து இருக்கையில் கிணிங் கிணிங் ஒலி நம்பிக்கையை ஊட்டியது.

சிற்பி...!

அவள் முகம் மலர்ந்தது. அந்த இடத்தை ஒரு முறை சுற்றுமுற்றும் பார்த்தாள். மனத்துக்குப் பிடித்திருந்தது அந்தச் சோலை. பாறையிலே சிற்பம் உருவாகி வந்தது. அவள் உடலில் புதுத்தெம்பு பிறந்தது.

சிற்பி திரும்பிப் பார்த்தார். ஒரு கணம் திகைத்தவர் பிறகு உற்றுத் திரும்பிப் பார்த்து, ‘‘யாரது?’’ என்றார்.

அப்போதுதான் அவளை நாணமும் அச்சமும் சூழ்ந்தன.

‘‘யாரம்மா... இந்த நடுக்காட்டில்... வழி தவறிவிட்டாயா?’’

‘‘நான்... நான்... ஆம்... ஆம்... வழி தவறிவிட்டேன். ஆனால் சரியான இடத்திற்கு வந்துவிட்டேன்’’ இதைச் சொல்வதற்குள் அவள் பட்டபாடு...

''இப்படி உட்கார் குழந்தை... உன் பெயர் என்ன?'' என்று பரிவுடன் கேட்டார் சிற்பி.

''என் பெயர்... என் பெயர்...'' - அவள் பெயரைச் சொல்வதற்கே சற்றுத் திகைத்தாள். அவள் தாய் அவளுக்கிட்ட பெயரைக் கூறுவதா, சொந்தப் பெயரைத் தெரிவிக்கக் கூடாத நிலையில் தான் அவள் பல்லவ நாட்டிற்கு வந்தாள். உள்ளத்தில் கடுமையான சபதத்துடன் வந்தாள். துடிக்கும் வெஞ்சினத்துடன் வந்தாள். தனக்குத் தெரிந்திருந்த நாட்டியக் கலையைக்கூட, பழிக்குப் பழி வாங்குவதற்குப் பயன்படுத்தவே வந்தாள். நேரே பல்லவ நாட்டுத் தலைநகரான காஞ்சிக்குச் செல்லாமல், மாமல்லபுரத்திற்கு வந்தாள். அவள் கதையே பெரிய கதை!

''ஏனம்மா இப்படி நடுங்குகிறாய்... இங்கே என்னைத் தவிர வேறு அந்நிய ஆடவர் வேறு யாருமில்லை. நானும் இந்த உலகத்து ஆசாபாசங்களையெல்லாம் துறந்து எவ்வளவோ காலமாகிறது. எனக்கிருக்கும் இலட்சியமெல்லாம் விட்டகுறை போன்ற மாமல்லபுரத்துச் சிற்பப் பணியைத் தொடர்ந்து நடத்தி, கலைக்கூடமாக ஆக்க வேண்டிய ஒன்றுதான். நீ உன் பெயரைச் சொல்லம்மா...'' என்று அவர் கூறவும், அவள் செவ்விதழ் திறந்து, ''என் பெயர் சுந்தரவல்லி...'' என்றாள். அதைக் கூறுவதற்குள் அவள் இதயம் படபடத்தது!

'சுந்தரவல்லி... சுந்தரவல்லி... அழகான பெயர் குழந்தாய்... சுந்தரி... சுந்தரி...! ஏனம்மா இப்படித் திக்குத் தெரியாத இடத்துக்கு வந்து சேர்ந்தாய்...?''

''நான் வடக்கே மங்களபுரத்தினின்று வருகிறேன். நான் புறப்பட்டு எவ்வளவோ நாட்களாகின்றன...''

''தன்னந்தனியாகவா வருகிறாய்? உனக்கு எந்தவித இடரும் நேரவில்லையா?''

''தனியே வரும் பெண்ணுக்கு எந்தவித இடையூறும் செய்யும் அளவுக்கு மனிதத் தன்மை குறைந்துவிடவில்லை. ஐயா... எங்கே அபாயம் நேரும் என்று எண்ணுகிறோமோ அங்கு நேருவதில்லை. எங்கே துணிவுடனிருக்கலாம் என எண்ணு கிறோமோ அங்கு மனிதத்தன்மை மிருகத்தனமாகி விடுகிறது...''

''நீ சொல்வது ஒன்றுமே புரியவில்லை. உன் மனத்தில் புதைந்து கிடக்கும் வேதனைதான் இப்படிப்பட்ட வார்த்தை களாகப் பொங்கி வருகின்றன என்று எண்ணுகிறேன்... துணிவுள்ள பெண்ணாகக் காணப்படுகிறாய். உன் வாழ்வில் அப்படி என்னம்மா நேர்ந்துவிட்டது...''

''ஐயா, என் முகத்திலிருந்து அகத்தைப் புரிந்து கொண்டு விட்டீர்கள். தாங்கள் சிற்பி! என் வேதனை நிறைந்த கதையைத் தங்களிடம் கூறுவதன் மூலம் தங்கள் அமைதியான மனத்திலே சஞ்சலம் ஏற்படுத்த விரும்பவில்லை. ஆனால் என்னைப் பற்றிச் சிறிது சிறிதாகக் கூறிவிடுகிறேன். ஒவ்வொரு நாளும் பேச்சின் இடையே என் வாழ்க்கையையும், வாழ்க்கை இலட்சியத்தையும் புரிந்து கொள்வீர்கள். கடவுளருளால் என் தாய் எனக்கு நாட்டியக் கலையை ஓரளவுக்குக் கற்பித்தளித்திருக்கிறார்கள். கலை ரசிகர்கள் நிறைந்த காஞ்சியில் என் திறமையைப் புலப்படுத்தி ஆதரவு தேட வந்தேன். எனக்கு இந்தச் சிற்ப பூமி இப்போது அடைக்கலம் அளித்துவிட்டது. தொடர்ந்து கிடைத்தால்...''

''கிடைத்தால் என்று சந்தேகமாகக் கேட்கிறாயே சுந்தரி. நீ இங்கேயே தங்கியிருக்கலாம். என் மகள்போல் வாழலாம். உன் நாட்டியக் கலைக்கு முதல் ஆதரவு நான் தருகிறேன். நாட்டிய சாத்திரத்தைப் பற்றி இங்கே ஏராளமான சுவடிகள் இருக்கின்றன. அவற்றைக் கொண்டு உன் கலையை வளர்த்துக் கொள். இந்த மண்ணில் பல ஆண்டுகளுக்கு முன்பு ஓர் அழகிய மங்கையின் சதங்கை ஒலி ஒலித்துக்கொண்டே இருந்தது. சுந்தரி, அந்த விட்ட குறையை நிறைவேற்ற நீ வந்துவிட்டாய்! சிற்றுளியின் இனிய நாதத்தை நான் எழுப்புவேன். சதங்கை ஒலியை நீ ஒலிக்கச் செய். யார் ஆதரவு இல்லாவிட்டாலும் நாம் இடையறாது கலைப்பணி செய்து மாமல்லபுரத்தின் கலைப் பெயரை வளர்ப்போம். இங்கே அமைதியைக் குலைக்க யாருமே வரமாட்டார்கள் சுந்தரி. நீ அஞ்சாமல் இருக்கலாம்.''

சிற்பியின் உணர்ச்சிபூர்வமான பேச்சு சுந்தரவல்லியின் இதயத்தை நெகிழச் செய்துவிட்டது. தன்னைப் பற்றி எடுத்த எடுப்பிலேயே முதல் பொய்யைச் சொல்லிவிட்டாள். அவள் வாதாபி நகரினின்று வந்தவள்; மங்களபுரத்தினின்று வந்ததாகக் கூறினாள். காஞ்சியில் தன் கலைக்கு ஆதரவு தேடுவதற்காக வந்ததாகக் கூறினாள். ஆனால், அவள் இதயத்தின் அடித்தளத்தில் கலை வளர்க்கும் நோக்கமா இருந்தது? பழிக்குப் பழி வாங்கும் மனப்பான்மையன்றோ இருந்தது. அவள் தாய் இறக்கும் முன்பு கூறிய தனது சுயசரித்திரத்தில் இருந்து எழுந்த ஆவேசம் பல்லவ நாட்டையே அழித்துவிடும் வீர சபதமாக அன்றோ உரு வெடுத்தது! ஒரு பெண்ணால் ஒரு மாபெரும் நாட்டை அழித்துவிட முடியுமா? 'முடியும் செய்வேன்' என்ற துணிவுடன் தான் அவள் வாதாபியினின்று புறப்பட்டாள். அவளுக்குத் தக்க சமயத்தில் உதவுவதாகச் சாளுக்கிய நாட்டு இளவரசன் கீர்த்திவர்மனும் உறுதி கூறியிருந்தான்.

பழிவாங்கும் தன் எண்ணத்தை இதயத்தின் அடித்தளத்தில் மறைத்து வைத்துக் கொண்டுதான் சுந்தரவல்லி சிற்பியின் குடிலில் கள்ளங் கபடமற்றவள் போல் வாழத் தொடங்கினாள். பழைய ஏட்டுச் சுவடிகளிலுள்ள பரத முனிவரது நாட்டிய சாத்திரத்தை மெல்லப் படித்து சிற்பி அவளுக்கு எடுத்துச் சொல்வார். அதைக் கருத்துடன் கேட்டு அதைப் போல் அங்கங்களை வளைத்து முகத்தில் பாவ உணர்ச்சிகளை மாற்றி நளினமான விரல்களில் அபிநய முத்திரையைக் காட்டி அவள் பயிலுவாள்; சிற்பியின் முகம் மலரும். 'ஆஹா, அவற்றையெல்லாம் கல்லிலே வடிக்க வேண்டும் சுந்தரி. நாட்டியத் தோற்றங்களை அழியாமல் இருக்க அப்படியே சிலையாக்க வேண்டும். செய்வேன், எப்படியும் செய்வேன்! நிச்சயம் செய்வேன். அதற்காக மன்னர் பரமேச்வர வர்மரைப் போய்ப் பார்த்து வரப் போகிறேன்...'' என்று உற்சாகத்துடன் கூறினார் சிற்பி.

சிற்பியின் திறமை பரமேச்வர வர்மருக்கு எட்டியிருந்தது. ஒரு முறை சந்திக்க வருமாறு அவர் அழைப்பு அனுப்பினார். தான் கூரத்தில் கட்டப்போகும் கோயிலின் மண்டபத்தை அலங்கரிக்கச் சிற்பங்களைச் செதுக்குமாறு கூறினார். பெரும் வெற்றி தனக்குக் கிடைத்துவிட்டதாகவே சிற்பி எண்ணினார். மறுநாளிலிருந்தே அந்தப் பணியைத் தொடங்கிவிட்டார். சிற்பியிடம் பரமேச்வரவர்மர் கட்டளையிட்டாரேயொழிய, அவர் சிந்தையெல்லாம் சிற்பக் கலையில் ஈடுபடவில்லை. பெருவள நல்லூரில் சாளுக்கிய மன்னனைத் தோற்றோடச் செய்தாலும் அவன் திரும்பிப்போகும் போது பல்லவ நாடு முழுமையும் பாழ்படுத்திவிட்டுச் சென்ற காட்சி அவர் மனத்தில் பெரும் அதிர்ச்சியை ஊட்டியது. வெற்றி கிடைத்தாலும் வேதனை மாறவில்லை.

தொடர்ந்து பலமுறை சாளுக்கியப் படையெடுப்பு காஞ்சியின் மீது ஏற்பட்டு வரும் காரணத்தை அவர் ஆராயலானார். வேதனையும், எல்லையற்ற சிந்தனையும் உடல் நோயாக மாறிப் படுத்த படுக்கையாகிவிட்டன. அதுவரை சாவகம், புட்பகம், சீனம் போன்ற நாடுகளுக்குச் சுற்றுப்பயணம் சென்றிருந்த இளவரசன் இராஜசிம்மன் வந்து சேரவே அவர் ஓரளவுக்கு நிம்மதி பெற்றார். தன் மகனின் வீரத் தோற்றமும், ஒளி நிறைந்த முகமும் அவர் உள்ளத்தில் நம்பிக்கைச் சுடரை ஏற்றின. தன் காலத்தில் ஈடேறாத செயலைத் தன் மகன் காலத்திலாவது நிறைவேற்றி, வருங்காலப் பல்லவ குலத்திற்குப் புகழ்தேடி வைக்க வேண்டும் என்று விரும்பினார். அந்தப் புகழை – போரால் ஏற்படும் வெற்றியை – நிறைவேற்றத்

தன் மகனால் இயலும் என உறுதி கொண்டார். வாதாபியை நோக்கிப் படை திரட்டிச் சென்று சாளுக்கியர்கள் மீண்டும் தலைதூக்க முடியாதவாறு நிர்மூலமாக்கி வர வேண்டும் என்று உறுதி கொண்டார். அதை இராஜசிம்மன் நிறைவேற்றுவான் என்ற எண்ணம் அவருக்கிருந்தது. அதைத் தன் மகனிடம் தெரிவித்து அது பற்றி ஆலோசிக்கவே அன்று வருமாறு கூறியிருந்தார்.

தந்தை போரைப் பற்றிச் சிந்தித்துக் கொண்டிருக்கையில் இராஜசிம்மன் கலையைப் பற்றிச் சிந்தித்துக் கொண்டிருந்தான். தன் மகன் வந்தவுடன் சாளுக்கியர்கள் மீது அவனுக்கு எப்படி வெஞ்சினம் ஏற்படுமாறு செய்யலாம் என்று அவர் சிந்தித்தவாறிருந்தபோது, இராஜசிம்மன் செவிகளில் சதங்கை ஒலி கேட்டது; கிணிங் கிணிங் என்ற சிற்றுளியோசை கேட்டது.

அந்தக் குடிலிலிருந்துதான் அந்த ஒலி வந்திருக்க வேண்டும். இராஜசிம்மன் ஆர்வமும், பரபரப்பும் மேலிட்டவனாய்க் குடிலை நோக்கி விரைந்தான். குதிரை மீதிருந்து பலகணியின் வழியே பார்த்தபோது குடிலுக்குள் நடப்பவை தெரிந்தன. கனவன்று; சிற்பி ஒருவர் கல்லைக் கலையாக்கிக் கொண்டிருந்தார். அவர் பின்புறம் ஒரு மங்கை; கொடி போன்ற தோற்றம்; பொய்யோ எனும்படியான இடை; தளிர்மேனி; சிலைக்கு ஏற்ற எழில் நிறைந்த அங்கங்கள் – சிலைதானோ? இராஜசிம்மன் கண்களை மலரவிட்டு நோக்கினான். சிலை பேசுமா? பவழ இதழ் விரித்துச் சிரிக்குமா? புருவத்தை உயர்த்தி வியக்குமா? கண்களைச் சுழலவிட்டு மயக்குமா? கரங்களை நெளிய விட்டு உடலைக் குலுக்குமா? அசைந்து வந்து அழகை...

''வெளிச்சம் குன்றிவிட்டது... நாளைக்கு மீதி முடிக்கலாமே'' என்று அந்த மகரயாழ் மங்கை யாழ் ஒலி போன்று பேசினாள்.

''சுந்தரி... உனக்குக் களைப்பாக இருக்கிறதா?'' - சிற்பி திரும்பிக் கேட்டார்.

''களைப்பா...? எனக்கா...? தங்களுக்கு வேண்டிய எந்தவிதத் தோற்றத்திலும் எவ்வளவு நாழிகை வேண்டுமானாலும் நான் நிற்பேன்... அப்பா... தங்களுக்கு ஏற்படும் சிரமத்திற்காகக் கூறினேன். மிகுந்த கவனத்துடன் செய்த முக லாவண்யத்தில் ஏதாவது கீறல் விழுந்து விடப் போகிறதே எனும் அச்சத்தால் கூறினேன்...''

சிற்பி சிரித்தார். ''ஆமாம்... ஆமாம்... உன் பயம் எனக்குப் புரிகிறது. உன்னையே நான் கல்லிலே வடிக்கிறேன்... அதிலே

ஊனம் ஏற்பட்டுவிட்டால் உனக்கே ஏற்பட்டுவிட்டது போலல்லவா... ஆனால், மன்னனிடம் வாக்குக் கொடுத்து வந்து நாட்கள் பல ஆகின்றனவே! கோவூரினின்று வண்டியைக் கொண்டுவந்து விட்டான் குட்டிச்சித்தன். சிற்பத்தை மிக்க கவனத்துடன் ஏற்றிச் சென்று மாளிகையின் முன் இறக்கி அரசரிடம் காட்டிவிட வேண்டும் எனும் பரபரப்பில் எனக்கு நேரம் போவதுகூடத் தெரியவில்லை...''

''அப்பா... தவணைக்குள் சிற்பம் முடியாவிட்டால் என்னையே வண்டியில் ஏற்றிச்சென்று விடுங்கள்.. நான் சிற்பம்போல் நிற்கிறேன்...'' என்று கூறி கலகலவெனச் சிரித்தாள் சுந்தரவல்லி.

''உன்னையா?''

''ஆமாம் அப்பா... நான் பல்லவ மன்னரைப் பார்க்க வேண்டும் அப்பா... பார்த்து அவரை ஒன்று கேட்க வேண்டும் அப்பா...''

''மன்னரை நீ என்ன கேட்கப் போகிறாய்?''

''பல்லவ நாட்டு நர்த்தகியாக என்னை ஏற்றுக் கொள்ளுமாறு கேட்கப் போகிறேன்.''

சுந்தரி இவ்வாறு கூறியவுடன் சிற்பியும் திடுக்கிட்டார். பலகணிக்கு வெளியே நின்று கொண்டிருந்த இராஜசிம்மனும் திடுக்கிட்டான்.

''குழந்தாய், இங்கே இருக்க உனக்குப் பிடிக்கவில்லையா? இந்த அமைதியான இடத்தைவிட அரண்மனைச் சந்தடிதான் உனக்குப் பிடிக்குமா?'' என்று சிற்பி கவலையோடு கேட்டவுடன் தான் சுந்தரி திடுக்கிட்டு அவசரப்பட்டுக் கேட்டுவிட்ட கேள்வியை நினைத்து வருந்தினாள். அவள் இதயத்தின் எங்கோ ஒரு மூலையில் இருந்த பழிவாங்கும் மனப்பான்மை 'வாய்ப்பை ஏற்படுத்திக் கொடு, ஏற்படுத்திக் கொடு' என்று வற்புறுத்தியதால் அவள் அப்படிக் கேட்டுவிட்டாள். தந்தையின் பரிவு நிறைந்த வார்த்தைகளும், கணத்தில் சோர்ந்துவிட்ட முகமும் அவள் மனத்தை உடனே மாற்றின.

''இல்லை அப்பா... இல்லை... இந்த இடத்தைவிட்டு நான் எங்கே போகப் போகிறேன்... காஞ்சியைக் காண வேண்டும் எனும் ஆவலில் அவ்வாறு கேட்டேன்'' என்றாள்.

∴ ∴ ∴

இராஜசிம்மனின் இதயம் படபடத்தது. இரு கலைஞர்களை அவன் கண்டவாறு நிற்கிறான். குறுக்கே ஒரு சுவர். பலகணி அவர்களது கலைத் திறமையைப் புலப்படுத்துகிறது. அவன் கனவை நிறைவேற்ற வல்ல கலைஞர்களைக் காட்டுகிறது. குடிலுக்குள் இருந்த அழகுக் கொடியைக் காண வேண்டும்; சிற்பக் கலைஞருடன் பேச வேண்டும் எனும் அவா ஏற்பட்டது. உடனே அவர்களைச் சந்திக்க வேண்டும் எனும் பரபரப்பில் குதிரையை விட்டு இறங்க முயன்றான்.

ஆனால் அங்கே தங்கினால் கலைப்பேச்சு நேரம் போதாமல் செய்துவிடும். தந்தையைச் சந்திக்க வேண்டுமே, இங்கே பொழுதைப் போக்கிவிட்டால்? எனும் எண்ணம் எழுந்தது. குடிலுக்குள் செல்வதா? அல்லது காஞ்சியை நோக்கி விரைவதா எனும் குழப்பத்தில் மனம் ஊசலாடுகையில் அருகே யாரோ வரும் காலடி ஓசை கேட்டது. இராஜசிம்மன் திரும்பினான். படைப்பின் பெரும் விசித்திரத்தைக் காட்டும் உருவமுடைய ஒருவன் கையில் வைக்கோல் சுமையுடன் வந்து கொண்டிருந்தான். அவன் முகம் பார்க்கக் கொடூரமாயிருந்தது. இராஜசிம்மனை அடையாளங் கண்டு கொண்டானோ என்னவோ, அவன் 'ஹிஹிஹி' என்று நகைத்தது பயங்கரமாயிருந்தது.

●



# 4. மோகமும் மோதிரமும்

பைரவன் விஜயனைக் குளக்கரையில் இருக்கச் சொல்லிச் சென்றவுடன் விஜயன் குளத்துப் படிக்கட்டுகளில் அமர்ந்தான். குளிக்கலாமா வேண்டாமா எனும் தீவிர எண்ணம் அவனுள்ளத்தில் எழுந்தது. வயிற்றுக்குச் சிறிது ஈந்து விட்டுப் பிறகு குளிக்கலாம் என்று முடிவு செய்த விஜயன் உணவு எங்கே கிடைக்கும் என்ற சிந்தனையில் சுற்று முற்றும் பார்த்தான். பிறகு குளத்துப் படிக்கட்டுகளில் மெல்ல இறங்கிக் கைகால்களைக் கழுவிக் கொண்டு முகத்திலும் தூக்க மயக்கம் தீரும் வகையில் நீரை அள்ளித் தெளித்துக் கொண்டு நிமிர்ந்தான்.

படிக்கட்டுகளில் அவன் முகத்துக்கெதிரே இருக்கும்படியாக மகாவிரதி ஒருவர் நின்று கொண்டிருந்தார். காபாலிகர், பாசுபதர் போன்று மகாவிரதரும் சிவபெருமானை முழுமுதற் கடவுளாகத் துதித்துப் போற்றும் சமயத்தவர். நெடிய உருவம்; மழுங்க வழித்த தலையின் பின்புறத்தே தலைமயிரைக் குடுமியாக முடிந்து அதன் உச்சியில் எலும்பாலான மணிகளைக் கோத்து அணிந்திருந்தார். சிவந்த மேனி. நெற்றியிலே திருநீற்றை (திரி புண்டரமாக) மூன்று கோடுகளாக அணிந்திருந்தார். கழுத்திலே எலும்பு மணிகள் கோக்கப்பட்ட மாலை. காதிலே வெள் ளெலும்புக் குண்டலம், கறுப்பு மயிர்க் கற்றையாலான பூணூல். மெல்லிய ஆடை, முழங்கால் மட்டும் வஸ்திரம், உடலெல்லாம் சாம்பல், வலது கை மணிக்கட்டருகே ஓரெலும்பு மணிக்கோத்த கயிற்றுடனும் ஒரு கையில் விபூதிப்பையுடனும் மற்றொரு கையில் நெடிய கோலுடனும் விளங்கிய அத்தோற்றம் கண்டு விஜயன் ஒருகணம் அயர்ந்தேவிட்டான். முகத்தில் வடிந்த தண்ணீரைத் துடைத்துக் கொள்ளவும் மறந்தவனாக அவரை நோக்கினான்.

''நமசிவாய' என்று கூறிவிட்டு அந்த மகாவிரதர், ''விஜயா! என்ன அப்படி வியப்புடன் பார்க்கிறாய்?'' என்றார், காஞ்சி யிலுள்ள ஒவ்வொருவரும் என் பெயரை அறிந்திருப்பவர்களா? இதென்ன விசித்திர பூமி'' என்று ஆச்சரியமடைந்த விஜயனை நோக்கி, ''விஜயா, மாயமந்திரம் ஏதுமே இல்லை. அந்தக்

காபாலிகனோடு நீ வந்து கொண்டிருந்தபோதே உன்னைப் பின்தொடர்ந்தேன். உன்னை விஜயா என்று அவன் அழைத்தது என் செவிகளில் விழுந்தது. அதனால் தான் உன் பெயரையும் அவ்வாறு நான் அழைத்தேன்'' என்றார் மகாவிரதி.

விஜயன் அடக்கிய மூச்சை இழுத்துவிட்டு உண்மையைச் சொல்லிய அவர் மீது மதிப்புக் கொண்டவனாக கரையில் ஏறி, ''வணக்கம் அடிகளே! என் பெயரை நினைவில் கொண்டு அழைத்ததற்கு நன்றி. இந்தச் சிறியவனால் ஆக வேண்டியது ஏதாவது இருக்கிறதா?'' என்று கேட்டான். மகாவிரதியின் தோற்றத்தையே பார்த்துக் கொண்டிருக்க வேண்டும் போல் அவனுக்குத் தோன்றியது. மகாவிரதி மெல்ல நகைத்து,

''எனக்கா... எனக்கு ஆக வேண்டியதா? விஜயா இந்த உலகத்தில் எனக்கு ஆக வேண்டியது ஒன்றே ஒன்றுதான். திரிபுரம் எரித்த மகாதேவனது திருவடிகளை எப்போதுமே நினைத்துக் கொண்டிருக்கும் எனக்குப் பசுபதி விரைவில் காட்சியளிக்க வேண்டும் என்பதொன்றே! ஆனால், உனக்கு ஆக வேண்டியவைதாம் பல இருக்கின்றனவே விஜயா! முதலில் உனது வயிறு 'கொண்டு வா ஆகாரம்' என்கிறதல்லவா? இதோ உனக்காக நல்ல தயிர் விட்டுக் கலந்த சோறு... இங்கெல்லாம் உட்கார்ந்து உண்ணக் கூடாது. நான் வேறு இடம் காட்டுகிறேன். சீக்கிரமாக வா.அந்தக் காபாலிகன் வருவதற்குள் போய்விடுவோம்...'' என்றார்.

விஜயன் சிரித்தான். ''ஏன் சுவாமி... காபாலிகரைப் பார்த்தாலும் சிவ பக்தராகத் தானிருக்கிறார். உமக்கும் அவருக்கும் ஏதாவது மன வேறுபாடா? அவரிடமிருந்து என்னை ஏன் பிரிக்க விரும்புகிறீர்?''

''ஜெய் பாசுபதே! எனக்கேது தம்பி மன வேறுபாடு? உன் நன்மைக்காகத்தான் சொன்னேன். காபாலிகரும், பாசுபதரும், வாமரும், பைரவரும், வீர பைரவரும், காஞ்சி நகரத்தில் ஏராளமாக நடமாடுகின்றனர். ஆனால் ஒவ்வொரு நடவடிக்கைக்கும் வேறுபாடு உண்டு. இந்த காபாலிகன் உண்மைக் காபாலிகன் அல்லன். அவன் வேடம் பூண்டிருக்கிறான்....''

''வேடமா?''

''ஆமாம்... பேசிக் கொண்டே செல்லலாம்...'' என்று அழைத்தார். விஜயன் அவரைத் தொடர்ந்தான். மகாவிரதி சொன்னார்:

''தம்பி, பைரவன் என்ற அந்த காபாலிகன் எப்போதோ ஒரு காலத்தில் காபாலிக மதத்தில் ஈடுபாடுடையவனாக இருந்தான்.



உடம்பில் திருநீறு பூசியிருந்தான். ஜடைமுடி தரித்து காபாலம் எப்போதும் கையில் ஏந்தியிருந்தான். மகேந்திர வர்மரது மத்த விலாச நாடகத்தை ஆங்காங்கே மக்கள் கூடி ரசித்தனர். அதில் வேடம் பூண்டு நடிப்பது நல்ல வருவாயாகத் தோன்றவே அவன் தன்னுடன் நடிப்பதற்கென ஒரு குழுவைத் தேர்ந் தெடுத்துக் கொண்டான். அளவுக்கு மிஞ்சி மது அருந்துவது, காமலீலைகளில் ஈடுபடுவது எல்லாம் அவனுக்குச் சர்வ சாதாரண மாயின. நரபலி கொடுப்பதையும் நரபலி கிடைக்காதபோது, பிராணிகளை வெட்டி அதன் குருதியை உறிஞ்சுவதுமாக மகாபாதகச் செயலிலும் ஈடுபட்டு வருகிறான். இவை எல்லாவற்றிற்கும் மேலாக பெரும் சந்தேகம் ஒன்று அவன் மீது எனக்கிருக்கிறது. அதை உன்னிடம் சொல்வதில் பயனில்லை. அவன் உன்னைத் தேடுவது நரபலிக்கு ஏற்றவன் நீ என்பதற்காக இருக்கலாம்...''

''என்னை அரசருடைய மாளிகைக்கு அழைத்துச் செல்வதாகக் கூறினாரே.''

''தம்பிக்கு உலக அனுபவம் போதாது போலிருக்கிறது. சரி, சரி. இதோ இப்படி உட்கார்ந்துச் சோற்றுக் கடனை முடி. நான் உன்னை அரண்மனைக்கு அழைத்துச் செல்கிறேன்.''

''உங்களுக்கு மட்டும் ஏன் என் மீது இவ்வளவு அக்கறை? என்னை நீங்கள் ஏன் அழைத்துச் செல்ல முன் வருகிறீர்கள்? எனக்கு ஆகாரம் ஏன் அளிக்கிறீர்கள்?''

''தம்பி! உன் சந்தேகம் எனக்குப் புரிகிறது. காஞ்சிபுர நிலை இப்படி ஆகிவிட்டது. யார் உண்மை தவசி! யார் வேடதாரி என்று புரிந்து கொள்ள முடியவில்லை. காளா முகரும், சாக்தரும், காபாலிகரும் பைரவரும், சைவருமாகத் தத்தம் ஆடை அணிகலன்களுடன் அலைகின்றனர். பௌத்தரும், சமணரும் இல்லாமலில்லை. ஒருவரோடொருவர் சண்டையிட்டுக் கொள்வதோடு ராஜீய விஷயங்களிலும் தலையிடுகின்றனர். ஆனால் எனக்கு அவற்றில் ஈடுபாடில்லை. பல்லவர்க்கோன் மனத்திலே மற்ற வாடை வீசக்கூடாது எனும் ஒரே நோக்கம்தான். அதிலும் கடல் கடந்து நாடுகள் சென்று வந்திருக்கும் இளவரசரைச் சந்தித்து அவருக்குச் சிவபெருமானின் மீது பக்தியும் அன்பும் ஏற்படச் செய்ய வேண்டும் எனும் நோக்கமே. நீயும் அரண்மனைக்குச் செல்கிறாய் என்றவுடன் உன்னையும் அழைத்துச் செல்லலாம் என்று எண்ணினேன். உன் மனதில் எள்ளளவாவது சந்தேகப் பேய் இருந்தால் என்னுடன் வர வேண்டாம். வழியை மட்டும் காட்டி விடுகிறேன். காபாலிக

னிடமிருந்து நீ தப்பிவிட்டாய்! இனி எனக்குக் கவலையில்லை'' என்றார்.

விஜயன் ஏதும் பேசவில்லை. தயிர் சோற்றின் புளிப்பு மணம் அவனை ஈர்த்தது. இனி விவாதிக்க வயிறு சம்மதிக்காது என்று எண்ணி ஒரு வழியாக பாண்டத்திலிருந்ததைத் தீர்த்துவிட்டு மகாவிரதி வழிகாட்ட அவருடன் மாளிகையை நோக்கிப் புறப்பட்டான். மாளிகை அங்கிருந்து நேர் எதிரே தென்கோடியில் இருந்தது. மகாவிரதி விஜயனை ராஜ வீதி வழியே அழைத்துச் சென்றார். மகாவிரதி விஜயனை ஏமாற்றவில்லை. பல்லவ அரசரின் அரண்மனைக்கே அழைத்துச் சென்றார். ஆனால் இளவரசர் இராஜசிம்மன் மாமல்லபுரம் புறப்பட்டுச் சென்று விட்டார் என்பதை அங்கிருப்பவர்களிடமிருந்து அறிந்தார். விஜயனுக்கு ஏமாற்றம் ஏற்பட்டது.

''இதில் என்ன ஏமாற்றமிருக்கிறது விஜயா! மாமல்லபுரம் என்ன கடல் கடந்தா இருக்கிறது? அங்கேயே சென்று இளவரசரைச் சந்திக்கலாம். அது ஏற்ற இடம்'' என்றார் மகாவிரதி.

மாமல்லபுரம் என்றவுடன் விஜயனுக்குப் புது உற்சாகம் பிறந்தது. அந்தக் கலைப் பூமியைக் காண வேண்டும் எனும் ஆவல் உதித்தது. இளவரசர் அங்கேயே இருக்கிறார் என்றால் இன்னும் சிறப்புத்தானே! தன்னைக் கண்டவுடன் அவர் எவ்வாறு மகிழ்ச்சியடைவார் என்று முடிவு செய்தவனாக, மகாவிரதியை நோக்கி, ''நீங்கள் மாமல்லபுரம் போகப் போகிறீர்களா?'' என்று ஆவலுடன் கேட்டான். மகாவிரதிக்கு மாமல்லபுரத்தில் ஏதும் வேலையில்லை. திருக்கழுக்குன்றத்தில் அவருக்கு மகேசுவர பூஜை ஒன்று இருந்தது. அதற்கு ஏராளமான பாசுபதர்கள் வருவார்கள். கங்க நாட்டிலிருந்து வரும் ஒரு பழைய நண்பரான பாசுபதரைச் சந்திக்கலாம் என அவர் எண்ணினார். திருக்கழுக் குன்றம் வரைப் போய்விட்டால் அங்கிருந்து விஜயன் மாமல்லபுரம் போவது எளிதுதானே எனும் எண்ணத்தில் தன் திட்டத்தைத் தெரிவித்தார். இருவரும் இப்போதே புறப்பட்டனர். இளவரசரைச் சந்திக்க வேண்டும் எனும் உற்சாகம் விஜயனைத் துரிதமாக இயங்கச் செய்தது.

∴ ∴ ∴

**கா**ஞ்சனாவின் எதிரே பைரவன் சோர்ந்த முகத்துடன் நின்று கொண்டிருந்தான். விஜயன் தான் குறிப்பிட்ட இடத்தில் இல்லை என்பதைக் காஞ்சனா எதிரே சொல்லவே வெட்கமாக இருந்தது. விஜயனை வரவேற்க காஞ்சனா அணிந்திருந்த ஆடை அலங்காரம் பைரவனையே தட்டுத் தடுமாற வைத்தது. இவ்வளவு

மெல்லிய ஆடையை இவ்வளவு நாள் காஞ்சனா எந்தப் பேழையுள் வைத்திருந்தாள்? தங்க நட்சத்திரங்களை மெல்லிய துகிலில் பொருத்தமாக தைத்த தையற்காரரின் திறமையே திறமை! அவளுடைய சந்தன மேனியில் தங்க நட்சத்திரங்கள் ஜ்வலிப்பது உடலே ஒளி வீசுவதுபோல் தோன்றியது. பைரவன் கண்களைக் கசக்கிக் கொண்டு பார்த்தான். ஒளி வீசும் நட்சத்திரங்களின் நடுவே அவன் சிந்தையைப் பறித்தன மலர்த் தேனை உண்ண வட்டமிடும் வண்டுகள் இரண்டு.

''பைரவா! என்ன அப்படிப் பிரமை பிடித்தவர் போல் பார்க்கிறாய். உன் காரியத்தில் குறுக்கிடக் கூடியவரும் இருக்கிறாரா?'' என்று காஞ்சனா குத்தலாகக் கேட்டாள்.

காஞ்சனாவின் உடலில் அப்போது பரபரப்பு மிகுந்திருந்தது. விஜயனைப் பைரவன் உடன் அழைத்து வராத ஏமாற்றம் அவள் உடலில் மெல்ல தீச்சுடரை ஏற்றி வைப்பது போன்ற உணர்ச்சியை ஏற்படுத்தியது. ஆனால் சற்று அமைதியாக, ''பைரவா, நீ அந்த வாலிபரை அழைத்து வரப் போகிறாய் என்ற எண்ணத்தில் இன்றைய மாலை நடனத்தையே ரத்து செய்தேன். பிரபல வியாபாரியை முகம் முறித்து அனுப்பினேன். அவன் கொண்டு வந்த முத்துக்கள் இதோ இந்தக் கூடம் முழுமையும் சிதறியிருப்பதைப் பார். அவன் கொண்டு வந்த சீனத்துப் பட்டை வீசி எறிந்தேன், பைரவா நீ வர்ணித்த அந்த இளைஞன் வரப் போகிறான் என்ற எண்ணத்தில்; இளவரசரின் நண்பனான அந்த இளைஞன் வரப் போகிறான் என்ற எண்ணத்தில்... ஹூம்... ஏமாற்றம் ஏமாற்றம்...'' என்று காஞ்சனா கோபம் சிறிதும் இல்லாதவள் போன்றே பேசினாள். சிறிது நேரம் அந்தக் கூடத்தில் தூண்களைக் கையால் தட்டியவாறு உலவினாள். ஒருமுறை பம்பரம் போல் சுழன்றாள். பைரவன் எதிர்பாராதவிதமாக மேல் மாடத்திற்குச் செல்லும் படிக்கட்டுகளில் அவள் துள்ளி ஏறி விரைந்தாள். பைரவன் உடலில் சோர்வு மறைந்தது. புதுவித உணர்ச்சி தலை தூக்கியது. அவனும் அவளைப் பின்தொடர்ந்தான். காஞ்சனா மேல் மாடத்திற்குச் சென்றாள். பைரவன் தொடர்கிறான் என்பதை அவள் அறிவாள். மேல் மாடக் கூடத்தின் நடுவே விசித்திர வேலைப்பாடுடன் கூடிய மஞ்சத்தில் வைக்கப்பட்டிருந்த மதுக் கிண்ணத்திலிருந்த மதுவை எடுத்துப் பருகி பைரவனிடமும் நீட்டி, ''பைரவா, இனிய மதுவைக் குடி. வேண்டியமட்டும் குடி. ஏமாற்றத்தை மறைக்க மது தானே உதவுகிறது...'' என்றாள், விழியைச் சுழல விட்டு, அவள் விழியின் வேகத்தையும், பளபளத்த மேனியின் ஜ்வலிப்பையும் தாங்க முடியாத பைரவன், ''அப்படிச் சொல்லாதே காஞ்சனா! நமக்கென்ன ஏமாற்றம்?'' என்றான்.

''பைரவா! அந்த வாலிபன் மிக முக்கியமானவன் என்றாயே...''

''ஆமாம்...''

''அவனிடம் மன்னரின் முத்திரை மோதிரம் இருப்பதாகச் சொன்னாயே. அதனால் பல காரியங்களைச் சாதித்துக் கொள்ளலாம்; நம் நெடு நாளைய திட்டத்தை நிறைவேற்றிக் கொள்ளலாம் என்றாயே...''

''ஆமாம்...''

''இப்பொழுது அவனை நழுவவிட்டு விட்டாய். அவனிடம் என்னைப் பற்றிச் சொல்லியிருந்தாயா?''

''உன்னிடம் அழைத்து வரப் போவதாகக் கூறவில்லை.''

''நீ சரியான பைத்தியக்காரன். இளம் வயது வாலிபனிடம் இள மங்கையர் அழகை வர்ணிக்க வேண்டாமா? என் அழகை நீ அறியாத குருடனா! ஒரு வேளை உன் கண்களுக்கு நான் குரூபியாக இருக்கலாம்.''

''என்ன சொல்கிறாய் காஞ்சனா? உன் அழகை அணு அணுவாகப் பருகுபவனாயிற்றே நான்...''

''பின் ஏன் அந்த இளைஞனிடம் வர்ணிக்கவில்லை? வார்த்தை வரவில்லையா?''

''...''

''பைரவா! இன்று எனக்குப் பெரும் ஏமாற்றம், என் கரங்களைப் பார்.''

''இளந்தண்டு போல் அழகாயிருக்கிறது. இதன் ஸ்பரிசம் நுகரக் கொடுத்து வைக்காதவன் அந்த விஜயன்...''

''பேசாதே பைரவா! என் உடலில் கொஞ்சங் கொஞ்சமாக அனல் ஏறுகிறது.''

''ஏறட்டும்...''

''என் கரங்களைப் பார். அதிலுள்ள வளையல்களை ஏன் கழற்றி விட்டேன் தெரியுமா? புதுபலம் மிகுந்த அந்த இளைஞன் அணைக்கும்போது வளையல்கள் நசுங்கி விடலாம்...''

''ஆ...!''

''ஆமாம் பைரவா, நான் உன்னை நம்பினேன். நீ அந்த இளைஞனைப் பற்றி வர்ணித்ததையும் பட்டுத் துணிகளை

அவனுக்கு அணிவிக்க எடுத்துச் சென்றதையும், தக்க வரவேற்புக் கொடுக்க வேண்டும் என்று கூறியதையும் கேட்டு நான் மனத்தில் கற்பனையைச் சிறந்த முறையில் செய்து கொண்டேன். ஒரே கல்லில் இரண்டு மாங்காயைப் பெற விரும்பினேன். முத்திரை மோதிரத்துடன் மோகன வடிவழகனும் கிடைத்திருப்பானே!'' என்று கண்களைச் சிமிட்டிய காஞ்சனா அருகிருந்த மஞ்சத்தில் ஒயிலாகச் சாய்ந்தாள். பைரவன் மெல்ல அவள் பாதத்தடியில் அமர்ந்து அவள் பாதத்தை வருடியவாறு, ''காஞ்சனா, இதற்கெல்லாம் நீ ஆயாசப்படலாமா? விஜயனை உன்னிடம் அழைத்து வருவதாகக் கூறியது, வேறு காரியத்திற்கு'' என்று கூறவும், காஞ்சனா துள்ளி எழுந்து முகத்தருகே வந்து, ''வேறு எந்தக் காரியத்திற்குப் பைரவா? உனக்குப் புத்திப் பேதலித்து விட்டது. இன்னொரு கிண்ணம் இந்த யவன நாட்டு மதுவைக் குடி -'' என்று கூறினாள்.

அவள் உள்ளத்தே ஏதோ புரிய முடியா படபடப்பு ஏற்பட்டது. ''பைரவா! தங்கத் தொட்டியில் பன்னீரைக் கொட்டி அதில் அமர்ந்துக் குளித்தேன். பைரவா என்னழகு அவனைக் கவராவிட்டாலும் என் உடலின் நறுமணம் அவனை மயக்க வேண்டாமா?''

அவள் கழுத்தருகே மெல்லிய சந்தன மாலை இருந்தது. ''என் கழுத்தருகே பார்!'' பைரவன் அதை முகர்ந்துப் பார்ப்பது போல் மயில் போன்ற அவள் கழுத்தின் வனப்பையும், வாளிப்பையும் ரசித்தான். அவனது கொடும் மூச்சு அவள் கழுத்தில் குறுகுறுப்பு ஊட்டியது. காஞ்சனா மெல்ல புன்முறுவலித்து ''பைரவா மத்த விலாச நாடகத்தில்... நீ முதலில் என்ன வசனம் பேசுவாய்? அதைப் பேசு!'' என்று கூறினாள்.

பைரவன் அந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்த விரும்பி நாடக தோரணையிலேயே காபாலிகை வேடம் பூண்டு மது குடித்து மயங்கி நிற்கும் பெண்ணைப் பார்த்துப் பேசுவது போல்; ''....கண்ணே தேவசோமா! காபாலிகை வடிவிலே நீ கட்டழகியாகக் காணப்படுகிறாய்! முகத்தில் சிறு வியர்வைத் துளிகள் அரும்ப, புருவங்கள் வில்லைப்போல் வளைந்து நெகிழக் காரணமின்றிச் சிரிப்பதும், வார்த்தைகள் குழறுவதும், கண்கள் சிவந்திருப்பதும், கருவிழிகள் சுழல்வதும் கூந்தல் அவிழ்ந் திருப்பதும், கழுத்திலுள்ள மாலைகள் நெகிழ்வதும் கண் கொள்ளாக் காட்சியாக இருக்கின்றன.'' காஞ்சனா, (நாடகத்து வசனம் பேசுவது போலவே) ''ஐயா, தரை சுற்றுகிறது; பூமி

சுழல்கிறது. நான வ'ழுந்து விடுவேன் போல் இருக்கிறது. என்னைப் பிடித்துக் கொள்ளுங்கள்...'' என்று கூறியவாறு ஆடுகிறாள்.

அந்த இடமே அதிரக் குதித்தாள். கையையும் காலையும் ஆட்டித் துணங்கைக் கூத்தாடினாள். பைரவன் திடுக்கிட்டான். அவள் இப்படி ஆடுவதால் அவள் அலங்காரங்கள் குலைய லாயின. இடை மேகலை அறுந்தது. தலையைப் புதுவிதமாக வாரிச் சொருகியிருந்தது அவிழ்ந்தது. மேலே அணிந்திருந்த மெல்லிய துகில் அலைந்துச் சரிந்தது.

விஜயனைத் தவற விட்டுவிட்டதால் ஏற்பட்ட சோர்வு பைரவனுக்கு ஒரு கணத்தில் மறைந்தது. காஞ்சனா தன் நிலை தடுமாறியபோது அவள் அங்கங்கள் ஒவ்வொன்றையும் அவன் கண்டு பெருமூச்சுவிட்டான். அவனது வைரம் பாய்ந்த கரங்கள் மீது அவளது மெல்லிய உடல் துவண்டிருந்தது. சங்கு போன்ற கழுத்தும் கழுத்தினின்று மெல்ல இறங்கி இளந்தெங்கு போன்ற பொற் கலச இதய பீடத்தின் மீது முத்து மாலை உயர்ந்துத் தாழ்ந்திருக்கும் அழகும் கண்டு அவன் பிரமித்தே விட்டான். ஆலிலை மேல் கடலலை தவழ்ந்தாற் போன்ற வயிற்றின் வடிவழகையும் பைரவனால் காணக் கூட கண்களில் சக்தியில்லை. விஜயனைப் போன்ற களங்கமற்றவர் இந்த இடம் வந்து இந்த நிலை காணாததே நல்லது தான் என்று கூட ஒரு கணம் எண்ணினான் பைரவன்.

பைரவனுக்கு உள்ளூற ஆனந்தம் தான். ''காஞ்சனாவை இந்த நிலையில் காண ஒருபோதும் விஜயன் சம்மதிக்கமாட்டான். அவன் வராததே நல்லதாகிவிட்டது'' என்று எண்ணிய அவன் உள்ளத்தில் இதுவரை மறைந்திருந்த ஆசையொன்று எழுந்தது.

''காஞ்சனா, வேண்டாம் வேண்டாம்... அதிகமாக உடலை வருத்திக் கொள்ளாதே! நாளைக்குத் திருக்கச்சூரில் நாடகம் இருக்கிறது. உடலில் சோர்வு ஏற்படுத்திக் கொள்ளாதே'' என்று கூறியபடி காஞ்சனாவின் ஆட்டத்தை நிறுத்துவதுபோல் அவளைத் தாவிப் பிடித்தான். அவள் இரு தோளையும் பிடித்துத் தன் மேல் சாய்த்துக் கொண்டான். ஆட்டத்தின் அதிர்ச்சியில் காஞ்சனாவின் இருதயம் படபடத்தது. மார்பு விம்மியது. காஞ்சனா பைரவன் மேல் சாய்ந்தாள்.

''வந்து விட்டாயா...'' என்று குழறினாள் காஞ்சனா, தன் கரங்களை பைரவன் முதுகில் வருடியவாறு, பைரவன் ஏதும் பேசாமல் தன் பிடியை இறுக்கியவாறு கலைந்த அவள் கேசத்தை ஒரு கையால் சரிப்படுத்தினான்.

''காஞ்சனா – பொல்லாத காஞ்சனா! புரிந்து கொள்ள முடியாத புதிரான காஞ்சனா! எவ்வளவு காலமாக நீயும் நானும் சேர்ந்து நாடகம் நடிக்கிறோம். ஒரு தடவை கூட நான் உன்னைத் தொட அனுமதிக்கமாட்டாயே! உடலில் விபூதியைப் பூசியிருப்பதாலா? அதில்தான் அத்தரும் ஜவ்வாதும் கலந்திருக்கிறேனே, புலித்தோல் அணிந்திருப்பதாலா? உனக்கே தெரியும் அதை நான் மேலுக்குத்தான் உபயோகிக்கிறேன். உள்ளே பட்டாடை இருக்கிறது என்று! கடுமையான விரதத்தால் என் சக்தியை யெல்லாம் எதற்காக அடக்கி வைத்திருக்கிறேன் – காஞ்சனா என் இதயம் உனக்குப் புரியாதா? புரிந்தும் நீ புரியாததுபோல் நடித்தாய். பல்லவ நாட்டில் பழிக்குப் பழி வாங்கவேண்டும் எனும் உன் எண்ணத்தை என்னிடம் தெரிவித்து அதற்கு என் உதவியைப் பெறுவதற்காக மட்டுமே என்னைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்று நினைத்திருக்கிறாயா? அதையும் செய்வேன். விஜயனைப் போன்ற இளைஞனை உன்னிடம் அழைத்து வருவதென்றால் நான் எவ்வளவு தூரம் உன்னை என் இதயத்தில் பதிய வைத்திருக்கிறேன் என்பது தெரியுமா? உன்னை ஒருதரமாவது அணைத்துக் கொள்ளும் துடிப்பு இருக்கிறது என்பதை உனக்குப் புலப்படுத்தத்தான் – அதற்கு இன்று பலன் ஏற்பட்டுவிட்டது. நான் வணங்கும் பைரவமூர்த்தி இன்று அருளிவிட்டாள் சக்தியின் அருள் பொங்கி வந்துவிட்டது. காஞ்சனா, உன் கனி இதழின் ரகசியத்தை என் அருகே நெருங்கிக் கூறு. உன் இதயத்தின் சொற்கள் என் செவிக்கு விழவேண்டாம் – நேரே என் இதயத்திடம் மட்டும் கூறட்டுமே – அதற்கு அவை ஒன்றோடு ஒன்று நெருங்கிப் பேச வேண்டும் – உம்... காஞ்சனா! நீ பார்த்துக் கொண்டே இரு. உன்னை இந்த நாட்டின் பேரரசியாக ஆக்கிவிடுகிறேன். பல்லவர்கள் கொட்டம் ஒடுக்கி, சாளுக்கிய வராகக் கொடி பறக்கும்போது உன் மாளிகைதான் இந்த நகரத்துப் பெரும் மாளிகையாக விளங்கப் போகிறது!''

பைரவன் இவ்வாறு கூறினானா, மனதில் நினைத்துக் கொண்டானா என்பது தெரியவில்லை. அவன் உதடுகள் முணுமுணுத்தவை, காஞ்சனாவின் காதில் விழுந்திருக்குமோ என்னவோ தெரியவில்லை. ''காஞ்சனா துவண்டு கிடந்தாள். விழிகளை மூடிக்கிடந்தாள். பைரவனின் வேகம் அதிகரித்தது.

திடீரெனக் காஞ்சனா கண் திறந்தாள். ஏறிட்டுப் பார்த்தாள். ''யார்... யார்... விஜயனா...'' என்று கேட்டாள்.

''இல்லை காஞ்சனா... நான்தான் பைரவன்! காஞ்சனா எனும் காபாலிகைக்கு ஏற்ற காபாலிகன்... பாசுபத மூர்த்தியின் உலகம் நோக்கிப் பயணப்பட இருந்தோம்...'' என்று கூறியவுடன்

காஞ்சனா அவனிடமிருந்துத் துள்ளி எழுந்து, அவனைத் தன் பலங்கொண்ட மட்டும் பிடித்துத் தள்ளி, ''சே! பைரவனா? என்ன துணிவு...'' என்று சீறினாள். கீழே கிடந்த துகிலைப் பரபரப்புடன் எடுத்து அணிந்து கொண்டாள். பைரவன் மூலையில் போய்ச் சுவரில் தாக்குண்டு வீழ்ந்தவன் மெல்ல எழுந்து வந்து, ''நீ அழைத்தாய் காஞ்சனா. மத்தவிலாசத்து ஒத்திகையை நடிக்கச் சொன்னாய்... துணங்கைக் கூத்தாடினாய்... உன்னையும் மறந்து விரைந்துச் சுழன்றாய்; நான் தாங்கினேன்... உனது சந்தன மாலையில் மணத்தை நுகர்ந்தேன். திடீரென மாறிவிட்டாயே... ஏன் இவ்வாறு குணத்தை மாற்றிக் கொள்கிறாய்? விஜயனை நான் எப்படியும் தேடிக் கண்டுபிடித்து அழைத்து வந்து விடுவேன்... உன்னைவிட எனக்குத்தான் அவனைத் தேடிப் பிடிப்பதில் ஆர்வம் அதிகம். அவன் இளவரசரின் நண்பன் என்பதனால் அன்று; அவனிடம் பல்லவ முத்திரை மோதிரம் இருக்கிறது'' என்று கூறவும் காஞ்சனா சட்டெனக் கோபந் தணிந்தவளாய் ஆடையைச் சரிசெய்து கொண்டாள்.

காஞ்சனா மௌனமாயிருந்தாள். பைரவன் இடுப்பைப் பிடித்துக் கொண்டே எழுந்து, ''வாழ்க்கை என்பது இன்பமும் துன்பமும் நிறைந்ததுதான். ஆனால் அது சிறிது நேரத்திலேயே ஏற்பட்டுவிடக் கூடியது என்பது எனக்குத் தெரியாது. விஜயனைத் தேடி அழைத்து வருகிறேன் காஞ்சனா... அப்போதாவது என் மீதுள்ள கோபத்தைப் போக்குவாயா?'' என்று கேட்டான்.

''பைரவா! அது கிடக்கட்டும். சித்திரா பௌர்ணமி என்று வருகிறது?'' என்று கேட்டாள்.

''அடுத்த புதன்கிழமை...''

''நாம் அன்று கடற்கரையில் பௌர்ணமி விழாவைக் கொண்டாட மாமல்லபுரம் போகிறோம்.''

''மாமல்லபுரமா?''

''ஆம்; அதற்கு வேண்டிய ஆயத்தங்களைச் செய்'' என்றாள் காஞ்சனா.



# 5. முழு நிலவும் இரு விழிகளும்

**தி**ருக்கழுக்குன்றத்திலிருந்து மாமல்லபுரம் செல்லும் சாலையின் வழியே வரிசை வரிசையாகக் கூண்டு வண்டிகளும், ஒற்றை மாட்டு வண்டிகளும், அத்திரி எனப்படும் கோவேறு கழுதை இழுக்கும் பார வண்டிகளுமாகச் சென்று கொண்டிருந்தன. மாலை இன்னும் மங்கிவிடவில்லை. கிழக்கு நோக்கிச் செல்லும் சாலையாகையால் கதிரவனின் சாயும் கதிர்கள் 'சுள்'ளென்று அடித்தன. வண்டியின் பின்புறம் நோக்கி அமர்ந்திருந்தவர்கள் வெளிக்காட்சியைக் காண முடியாமல் முகத்தைத் திருப்பிக் கொண்டனர். முன்புறம் வண்டியோட்டுபவரின் அருகே அமர்ந்திருந்தவர்களுக்குக் குதூகலம் தாங்க முடியவில்லை. இன்னும் இரண்டு நாழிகை நேரத்திற்குள் மாமல்லபுரம் சென்றுவிடலாம். மறுநாள் சித்திரை மாதத்து முழு நிலாத் திருநாள். அன்று கடலாடிக் களிக்கக் காஞ்சியின் சுற்றுப்புறக் கிராமத்திலிருந்து மக்கள் சாரி சாரியாக வந்தவாறிருந்தனர்.

குடும்பத்துடன் வண்டியிலேறி அவர்கள் குதூகலமாக வரும் காட்சியே மிகச் சிறந்திருந்தது. திருக்கழுக்குன்றத்தில் பகலில் தங்கி, மலையேறி ஆண்டவனைத் துதித்து, பொழுது சாய்வதற்கு முன்பு அவர்கள் வண்டியைப் பூட்டிக் கொண்டு புறப்பட்டனர். வண்டிச் சக்கரத்துக் கடகடா ஓசையும், மாட்டின் கழுத்து மணியும் சதங்கையும் எழுப்பும் ஒலியும் நாட்டிய அரங்கமோ என்று எண்ணுமாறு செய்தன. வண்டிக்குள் பெண்கள் இழைய இழையத் தலைவாரியிருந்தனர். மருக்கொழுந்தும், முல்லை மொக்கும் தலையிலே சூடியிருந்தனர். கருநிற மேனிப் பெண்கள் நெற்றியில் இட்டிருந்த சிவந்த திலகமும், அவர்கள் களிப்புடன் பேசும்போது பளிச்சிடும் வெண்பற்களும் ஏதோ இதுவரை காணாதவர் போன்று அவர்கள் எதிரே வண்டியில் அமர்ந்திருந்த ஆடவர்கள் வியப்புடன் அவர்களையே உற்றுக் கவனித்து வந்தனர். தன் ஆசை மனைவியின் கன்னத்தை மெல்லக் கிள்ளி வேடிக்கைப் பார்க்கக் கணவனுக்கு ஆசைதான். வீட்டிலே



நாலு பேர் முன்னிலையில் செய்ய முடியாத குறும்புத்தனத்தைக் கூண்டு வண்டிக்குள் செய்யலாம் என இளம் வயதினர் துடித்தனர். ஆனால் அருகே வண்டிக்குள் வயது முதிர்ந்தவர்கள், கலியாணமாகாத சகோதரிகள் ஏதேதோ பேசியவாறிருக்கும்போது அழகு மனைவியின் முகவெழிலைப் பருகிப் பெருமூச்சு விடுவதுடன் தான் நிற்க வேண்டியிருந்தது. என்றாலும் அவர்கள் கைவிரல்கள் இரகசியமாகப் பேசிக் கொண்டன. ஆடவரின் பெரு விரலும், ஆள் காட்டி விரலும் மனைவியரின் உள்ளங் கையில் இலேசாக வருடின. மெல்லியலார் என்ற பெயர்தான்; காந்தள் விரல்களால் அவர்கள் அதற்கு விடை கூறுவது போல் அவ்விரல்களைப் படுத்திய பாடு! உணர்ச்சி வயப்பட்ட ஆடவன் சும்மாயிருப்பானா? சதைப் பிடிப்பு நிறைந்து மடிந்திருந்த அவளது இடையினைக் கிள்ளவும், பாதங்களை வருடவும், 'ஹா' என்று மெல்ல அவள் சிணுங்கலுடன் கூவவும் வண்டி மேடு பள்ளத்தில் ஆடி அசையும் போது மோதிக் கொண்டு எல்லாரும் சிரிக்கவுமாகப் பயணம் குதூகலமாக இருந்தது.

வரிசையாகச் சென்ற அவர்கள் வண்டியை ஒரு வண்டி வேகமாக முந்திச் சென்றது. வண்டிக் கூண்டுகளுக்குப் புது வண்ணம் தீட்டப்பட்டிருந்தது. வண்டி மாடுகளின் கொம்பு களுக்குப் பளபளப்பான பூண்கள் மாட்டப்பட்டிருந்தன. நுகத்தடியும், கயிறும் சாட்டையும் வண்டியோட்டுபவன் ஆடையும் – எல்லாமே வண்ண விசித்திரமான புதியவை தான்!

வண்டியின் பின்புறத்தில் மெல்லிய திரை தொங்கி, வண்டிக்குள்ளே இருப்பவர்கள் இன்னார் எனத் தெரியாமல் செய்து கொண்டிருந்தது. சக்கரக் கடையாணியில் கோக்கப் பட்டிருந்த சிறு சலங்கைகள் 'ஜல் ஜல்' என ஒலித்தன. மாடுகளின் கழுத்தில் கட்டப்பட்டிருந்த மணிகள் ஒரே சீராக, 'கண கண' என ஒலித்தன. தாளத்துக்கு ஏற்ப அவை நடைபோடுவது போல் ஒரே கதியில் சென்று கொண்டிருந்தன. வண்டிச் சக்கரம் வேகமாகச் சுழன்றது. வண்டியை ஒட்டிக் கோவேறு கழுதை மீது பைரவன் சென்று கொண்டிருந்ததால் வண்டியில் செல்பவள் காஞ்சனா என்று தெரிந்தது.

மாமல்லபுரத்தில் காஞ்சனா கடலாட, அன்றையப் பொழுதைக் களிப்புடன் கழிக்கப் பைரவன் தனது சீடர்களை அனுப்பி ஏற்பாடு செய்திருந்தான். திருக்கச்சூரில் நடைபெற இருந்த நாடகத்தையும் காஞ்சனா வேண்டாம் என்று மறுத்து விட்டாள். மாமல்லபுரம் செல்வதில் அவளுக்குத் தனிப் பரபரப்பும், மகிழ்ச்சியும் இருப்பதைப் பைரவன் கண்டுவிட்டான். விஜயன் ஏன் இன்னும் தேடி வரவில்லை என்பதையும் அவள் சற்று மறந்திருந்தாள். பைரவனும் காஞ்சி மாநகரில் தேடாத

இடம் பாக்கியில்லை. விஜயன் அங்கு இருக்கும் சுவடே தெரியவில்லை.

அப்படித் தேடி வந்தபோதுதான் மகாவிரதியுடன் அயலூரானைப் போல் காணப்பட்ட இளைஞன் ஒருவன் கிழக்குக் கோட்டை வாயில் வழியே சென்றுவிட்ட செய்தி பைரவனுக்குக் கிடைத்தது. பைரவனுக்கு மகாவிரதியின் பேரில் கோபம் கோபமாக வந்தது. விஜயனைக் கண்டுபிடிப்பதை விட மகாவிரதியைத் தேடிக் கண்டுபிடிக்க வேண்டும் எனும் பரபரப்பு எழுந்தது. காஞ்சனாவிடம் மெல்ல இதைப் பற்றிப் பிரஸ்தாபித்தபோது அவள் அலட்சியமாக நகைத்தாள். கடலாட மாமல்லபுரம் செல்வதற்கான ஏற்பாடுகளைச் செய்யச் சொன்னாளே யொழிய, பைரவனிடம் வேறு ஏதும் பேசவில்லை. அதுவே பைரவனுக்கு வருத்தமாக இருந்தது. காஞ்சனாவின் மனத்தில் இருப்பதை அவனால் புரிந்து கொள்ள இயலவில்லை.

காஞ்சனாவும், அவள் நம்பிக்கைக்கு ஏற்ற சேடிகள் இருவரும் ஒரு வண்டியிலும், மற்றும் ஒரு வண்டியில் பணியாட்களும், உணவுப் பண்டங்களுமாக மாமல்லபுரம் நோக்கிக் காஞ்சனா குழுவினர் புறப்பட்டனர். பைரவனும் அத்திரி மீது அவர்களைப் பின் தொடர்ந்தான். கோட்டை வாயிலைத் தாண்டும் போது, காஞ்சனா மெல்லத் திரையை விலக்கிப் பார்த்தாள். திரைக் கிடையே அவள் முகத்தை மட்டும் கண்டுவிட்ட கோட்டைக் காவலர்கள் அர்த்த புஷ்டியுடன் ஒருவரோடொருவர் பார்த்துக் கொண்டிருக்க வேண்டும் போல் அவர்களுக்குத் தோன்றியது. காவல் பொறுப்பு இல்லாதிருந்தால் அவளைப் பின் தொடர்ந்திருப்பர்!

காஞ்சனாவின் வண்டி சாலையில் செல்லும் மற்ற வண்டிகளையெல்லாம் முந்திக் கொண்டு வேகமாகச் சென்றது. கதிரவன் மேல் திசையில் முற்றிலும் மறைந்துவிட்டான். இப்போது கீழ்க்கோடியிலிருந்து வட்ட முழுமதி மங்கிய ஒளியை வீசிக்கொண்டு எழுந்துவிட்டது. மூடிய திரைக்குள்ளே வீற்றிருக்க காஞ்சனா விரும்பவில்லை. திரையை விலக்கிவிட்டாள். சந்தனக் குழம்பு வட்டவடிவமாக ஊற்றியது போன்ற முழு மதிக் காட்சியைக் காஞ்சனா ரசித்தாள். வண்டியையும் மெல்லச் செல்லவே கட்டளையிட்டாள். சாலையின் இரு புறமும் கண்ணுக்கெட்டிய தொலைவு வரையில் தெரியும் வயல்வெளியும் அதன் எல்லையிலே சிறு குன்றுகளும் காஞ்சனாவின் உள்ளத்தைப் பரவசப்படுத்தின. வண்டியுடன் வந்து கொண்டிருந்த பைரவனைக் காணவில்லை. அவன் சற்றுப் பின் தங்கியிருக்கலாம்.

நன்றாக இருட்டிவிட்டது. வண்டி ஆடி அசைந்துச் சென்று கொண்டிருந்தது. எங்கும் அமைதி. காஞ்சனாவுக்கு அந்த இயற்கை அமைதி மிகவும் பிடித்திருந்தது. சாலையில் எப்போதாவது குதிரை மீது யாராவது விரைந்துப் போவார்கள். அடுத்த கிராமங்களுக்குச் செல்பவர்கள் கூட்டமாகப் பேசிக் கொண்டு செல்வார்கள். நகரத்துச் சந்தடியினின்று சற்று மாறுபட்ட நிலை காஞ்சனாவுக்குப் பிடித்திருந்தது. அவளுக்கு அப்போதிருந்த மனநிலையில் அதேபோல் அமைதியாகப் பயணம் சென்று கொண்டிருக்க விரும்பினாள். தென்றல் தன் உடல் முழுமையும் தடவிச் செல்ல வேண்டும் என்று ஆசைப்பட்டாள். அந்த வண்டிக்குள்ளே அவளைக் கேட்பவர் யார்? இதே போன்று பல ஆண்டுகளுக்கு முன்பு அவளுடைய செவிலித் தாயுடன் கடலாடப் பயணம் செய்திருக்கிறாள். செவிலியின் மடியில் தலையை வைத்துக்கொண்டு இருட்டி இரண்டு நாழிகைக் குள்ளேயே உறங்கியிருக்கிறாள். இப்போது உறக்கம் வரவில்லை. பணிப்பெண்ணின் மடியில் தலையை வைத்துக்கொண்டு படுத்திருந்தாள். மதியொளி அவள் மேனியில் பட்டும் படாததுமாக நிழலையும், வெளிச்சத்தையும் மாற்றி வீசியிருந்தது. பணிப்பெண்கூட காஞ்சனாவின் அழகை இவ்வளவு நெருக் கத்தில் கண்டதில்லை. மெல்ல அவள் கால்களைப் பிடித்தாள். ஏதோ வெகு தொலைவு நடந்தவர்களுக்கு ஏற்படும் பாதங்களில் வலி காஞ்சனாவுக்கு ஏற்பட்டது. 'அம்மாடி...' என்று மெல்ல முணுமுணுத்தாள். பணிப்பெண் பிடித்தது அவளுக்கு மென்மையாக இருந்தது.

காஞ்சனா மெல்லச் சிரித்துக்கொண்டாள். இதுபோன்று தன் பாதங்களைப் பிடிக்க எவ்வளவு பேர் காத்திருக்கிறார்கள். அவர்களைத் தான் அலட்சியப்படுத்தி விடுவதும் அவளறிவாள்; அந்த வாலிபன் விஜயன் வந்திருந்தால்... அவனும் இதுபோல் தான் விரும்புவான். 'ஹூம்...!' காஞ்சனா பெருமூச்சு விட்டாள். பணிப்பெண் ''என்ன அம்மா?'' என்று கேட்டாள்.

''நாம் இப்போது எங்கே வந்து கொண்டிருக்கிறோம்...?'' என்று காஞ்சனா கேட்டாள்.

''தெரியவில்லையே, இருபுறமும் மரங்கள் இருக்கின்றன. வயல்வெளிகள் இருக்கின்றன. சந்திரனை நோக்கி நாம் செல்கிறோம். வழியிலே ஊர் ஏதும் இருப்பதாகத் தெரிய வில்லையே...'' என்று பணிப்பெண் கூறினாள்.

''ஆமாமடி... சந்திரனை நோக்கிச் செல்கிறோம். அவனது குளிர்ந்த கிரணங்கள் உன் மென் விரல்களைவிட இன்பமாக இருக்குமோ...?''

காஞ்சனாவின் அந்தக் கேள்விக்குப் பணிப்பெண்ணால் விடைகூற முடியவில்லை. மேலும் இவ்வளவு சுமூகமாயும், நெருக்கமாயும் காஞ்சனா பேசியது கிடையாது. அதனால் காஞ்சனாவின் கேள்வி ஒரு கணம் வியப்பாகவும், மறுகணம் பயமாகவும் இருந்தது. நாணமும் ஏற்பட்டது.

அவள் மௌனமாயிருப்பதைக் கண்ட காஞ்சனா மெல்ல நகைத்து, ''எனக்கு ஒன்று தோன்றுகிறதடி.... என் காலையும், உடலையும் மெல்லப் பிடித்து விடுகிறாயே... உனக்கு அது போல் யாராவது பிடித்து விட மாட்டார்களா எனும் ஆசை எப்போதாவது தோன்றியிருக்கிறதா?'' என்று கேட்கவும் பணிப்பெண் மேலும் திடுக்கிட்டாள்.

''உனக்குக் கல்யாணம் செய்து கொள்ளும் ஆசையே எழுந்தது கிடையாதா? அழகிய வாலிபன் உன் கரங்களை மெல்ல வருடுவது போல் நீ கனவு கண்டதும் கிடையாதா?''

காஞ்சனாவின் அந்தக் கேள்விகள் பணிப்பெண்ணின் முகத்தில் செம்மையைப் படரச் செய்தன. பணிப்பெண்ணாக இருந்தாலும் அவளும் ஒரு பெண்தானே! அவளுக்கும் பருவகாலத்து மலருக்குள்ள மகரந்தம் முளைத்தெழுந்திருக்காதா? திடீரென காஞ்சனா எழுந்து உட்கார்ந்து, ''உன் மௌனம் எனக்குப் புரிந்துவிட்டது... உனக்கு அந்தக் குதிரைப்படைத் தளபதி மேல்தானே ஆசை...?'' என்றாள்.

குதிரைப்படைத் தளபதி ரணதீரன் காஞ்சனாவைக் காண வேண்டும் என்று வந்து கொண்டே இருப்பவன். நரை கண்ட தலை முடி; சுருக்கம் கொண்ட முகம்; ஐம்பதையும் தாண்டிய பருவம்; அவனால் ஒரு நாள்கூடக் காஞ்சனாவைக் காண முடியவில்லை. பணிப்பெண்தான் ஏதாவது கூறி அவனை அனுப்பி விடுவாள். அந்தக் கிழவரைத்தான் காஞ்சனா கூறுகிறாள். நாணம் பணிப்பெண்ணைப் பிடுங்கித் தின்றது. 'ஹீஹீஹீ' என்று ஒலி எழுப்பினாள். காஞ்சனா வேடிக்கை செய்கிறாள் என்பது புரிந்துவிட்டது. இன்று என்ன வந்துவிட்டது காஞ்சனாவுக்கு? தன்னை மறந்த நிலையில் பேசுகிறாளே!

காஞ்சனாவுக்கே புரியவில்லை. தனக்கு என்ன வந்துவிட்டது? உள்ளத்தில் புரியமுடியா துள்ளல் ஏற்படுகிறது. இதழ்கள் துடிக்கின்றன. உடல் முழுமையும் ஒரு படபடப்பு. ஒரு சமயம் பனி நீரில் குளிப்பது போன்ற உணர்ச்சி; ஒருபோது உடலுக்குத் தாங்கும் அளவுக்கு வெப்பமான நீரிலே நீராடுவது போன்ற பிரமை. வண்டி ஜல் ஜல் என்ற ஒலி எழுப்பிச் சென்று கொண்டிருந்தது. வண்டியின் ஆட்டத்தில் காஞ்சனாவின் உடல்



குலுங்கியது. அதுவும் அவளுக்கு மிகமிக வேண்டியிருந்தது. ''பைரவன் எங்கே?'' என்று காஞ்சனா குரல் கொடுத்தாள்.

வழியிலேயே குறுக்குப் பாதை வழியாக நெடிய உருவம் ஒன்று செல்வதை பைரவன் கண்டுவிட்டான். அந்த உருவம் மகாவிரதி என்றும் அடையாளங் கண்டுகொண்டான். உடனே அத்திரியை அருகே இருந்த மரத்தில் கட்டி விட்டுத் தன் பாதக்குரடு தடக்தடக் என ஒலிக்க, அவர் போன வழியில் தானும் பின்தொடர்ந்தான். மகாவிரதியைப் பிடித்துவிட்டால் விஜயனைக் கண்டுபிடித்தது போல்தான் என்று எண்ணி வேகமாகப் பின் தொடரலானான். 'காஞ்சனாவைப் பிறகு மாமல்லபுரத்தில் சந்தித்துக் கொள்ளலாம்; அதுவும் விஜயனைக் கண்டேன் எனும் சந்தோஷமான செய்தியுடன்...'

''எங்காவது மதுக்கடை அவன் கண்ணில் தென் பட்டிருக்கும்'' என்று முணுமுணுத்துக் கொண்டாள் காஞ்சனா. இலேசாகக் காற்று அடித்தது. அது எங்கோ மலரும் தேவதாரு மலரின் மணத்தைச் சுமந்து வந்தது. சாலைச் சருகுகள் காற்றில் அலைந்துப் பறந்தன. காஞ்சனாவுக்கு இறங்கி நடக்க வேண்டும் போல் தோன்றியது. வெகு தொலைவில் மற்ற வண்டிகள் அசைந்தாடி வந்து கொண்டிருந்தன. வண்டிக்காரர்கள் முணு முணுக்கும் பாடல்கள் ஒலித்தன. அந்தப் பாடல்களைத் தவிர வேறு ஒருவித ஒலியும் எழுந்தது. எங்கோ 'கிணிங் கிணிங்' என்ற தாள ஓசையும், மத்தள ஓசையும், அதைத் தொடர்ந்து

யாரோ மேல் ஸ்தாயியிலும், கீழ் ஸ்தாயியிலும் பாடும் சப்தமும் தொலைவில் கேட்டன.

காஞ்சனாவின் கட்செவி கூர்ந்து கேட்டது. எங்கோ கூத்து நடக்கிறது. சூத்திரதாரி இடையிடையே பேசும்போது தாளமும் மத்தளமும் அடங்கியிருக்கும். பிறகு மளமளவெனத் தட்டப் படும்; இராகம் இழுக்கப்பட்டு ஆணும் பெண்ணும் பாடும் ஒலி இருளின் அமைதியைக் கிழித்துக் கொண்டு கேட்டது. காஞ்சனா வண்டியிலிருந்து இறங்கினாள். பணிப்பெண்ணும் பரபரப்புடன் இறங்கினாள்; இப்போது அன்னத்தின் தூவியைப் போன்ற வெண்மையுடன் சந்திரன் நீல வானின் பின்னணியில் பளீரென ஒளி வீசித் திகழ்ந்தான். அவன் துயில்வதற்கான பஞ்சு மெத்தையைச் சேகரிப்பது போன்ற வெண் பஞ்சுக் கூட்டம் மெல்ல மெல்ல நகர்ந்து வந்து கொண்டிருந்தது. சந்திரனுக்கு அருகில் மிக நெருக்கமாக ஒரு நட்சத்திரம் மினுக் மினுக்கென்று கண் சிமிட்டிக் கொண்டிருந்தது. காஞ்சனாவுக்குச் சிரிப்பை மூட்டியது. எங்கோ கேட்கும் கூத்தின் ஒலியும் வானத்து நிலவும் காஞ்சனாவுக்குக் கிளுகிளுப்பை அளித்தன.

''எங்கேயோ கூத்து நடக்கிறது'' என்றாள் காஞ்சனா.

''ஆமாம் அம்மா'' என்றாள் பணிப்பெண்.

''பாரதக் கூத்தாயிருந்தால் போய்ப் பார்க்கலாம்'' என்றாள் காஞ்சனா. காஞ்சனா நினைத்தால் அதன்படி நடத்திவிடுவாள். அந்த வேளையில் கூத்து நடக்கும் இடத்திற்கு அவள் செல்வதென்று முடிவு செய்துவிட்டாள். வயலிலும் வரப்பிலும் எப்படிக் கடந்து செல்வது என்ற பயத்தில் பணிப்பெண், ''எங்கோ தொலைவிலிருந்தன்றோ கேட்கிறதம்மா...'' என்றாள்.

''இருக்கட்டுமே... அங்கேதான் போய்ப் பார்ப்போம். எப்படியும் அருகேயுள்ள கிராமத்தில்தான் கூத்து நடக்கும். கிராமத்திற்குச் செல்ல வண்டிப்பாட்டை இருக்கும்'' என்று கூறி வண்டியைக் கூத்து நடக்கும் இடம் நோக்கி ஓட்டச் சொல்லிக் கட்டளையிட்டாள். பெரும்பாட்டையினின்று கிளையாகப் பிரிந்த புழுதிச் சாலையில் வண்டி சென்றது. எங்கோ நாய் குலைக்கும் சப்தம். கூத்தின் சப்தம் காற்று அடிப்பதற்குத் தக்கபடி திடீரென வேகமாகவும், குறைந்தும் கேட்கும். கூத்து நடக்கும் இடம் நெருங்கிக் கொண்டிருந்தது. தாமரைக் குளம் ஒன்று இருந்தது. அதன் அருகே அரச மரம். காற்றிலே அதன் இலைகள் சலசலவெனச் சிரிப்பது போல் சலசலத்தன. குளக்கரையில் வண்டியை நிறுத்தச் சொல்லிவிட்டுக் குளத்து நீரில் ஒரு கை எடுத்து முகர்ந்துக் குடிப்பதற்காக இறங்கினாள். ஆடை நனைந்து விடப் போகிறதே என்பதற்காக ஒரு கையால் கணுக்கால் வரை

சேலையைத் தூக்கிக் கொண்டாள். கால் தண்ணீரில் சில்லென்று அமிழ்ந்தது. மத்தளத்தின் கணகணவெனும் சப்தம்; சூத்ரதாரி நாடக பாத்திரத்தை அறிமுகப்படுத்திப் பேசும் சப்தம்:

திரிபுரம் எரித்த அந்த பரமசிவனைப் பார்த்துப் பார்வதி தேவி, "வில்லுக்கு ஒரு விஜயனாம்; புஜபல பராக்கிரம வல்லவனாம்; அவனது பரந்த முதுகைக் காண வேண்டும் என்று எனக்கு ஆசை. அதை நிறைவேற்றுவீராக' என்று கூறவும், பரமசிவன் தேவியை அழைத்துக் கொண்டு கானகத்திற்கு வருகிறார்" என்று அப்பொழுது நடைபெறும் நிகழ்ச்சியை அறிவித்து முடிக்கவும் மீண்டும் தாள சப்தம்; மத்தள ஒலி.

"ஓ! பாசுபதம் பெறும் கதையா?" என்று காஞ்சனா தனக்குள் சொல்லிக்கொண்டு கரை ஏறினாள், மளமளவென நடந்தாள். அவள் அசைந்து அசைந்து நடக்கும் அழகே அழகு!

ஃ ஃ ஃ

கிராமத்து எல்லை அது. கொற்றவைக் கோயில் அருகே கிராம மக்கள் குழுமியிருந்தனர். தீவர்த்திகள் இரண்டு எரிந்து ஒளியைக் கொடுத்துக் கொண்டிருந்தன. காற்றிலே தீவர்த்தியின் ஒளி அலைபாயும்போது உட்கார்ந்திருப்பவர்கள் நிழலும் அசைந்தாடின. ஆண்களும் பெண்களும் கலந்து அமர்ந்திருந்தனர். கவலை ஏதும் கொள்ளாதவர்களாக நாடகத்து உணர்ச்சியோடு உணர்ச்சியாக மனத்தைப் பறிகொடுத்து அவர்கள் கூத்தை ரசித்துக் கொண்டிருந்தனர்.

கூத்து நடக்கும் இடத்துக்கு அருகேயிருந்த குத்துக் கல்லின் மீது சாய்ந்துகொண்டு இளம் வாலிபன் ஒருவன் நின்று கொண்டிருந்தான். கைகளைக் கட்டிக்கொண்டு கூர்மையான பார்வையை அவன் நாற்புறமும் சுற்றித் திரும்பிப் பார்ப்பதும், கூத்தை, இடையிடையே ரசிப்பதுமாக இருந்தான். நீண்ட முகமும், மெல்லிய அரும்பு மீசையும் நீண்ட நாசியும் அவன் கம்பீரத்தைப் பறைசாற்றிக் கொண்டிருந்தன. காஞ்சனா அங்கே வரும்போது திடீரென்று வீசிய மணம் மற்றவரைக் கவர்ந்ததோ இல்லையோ அந்த இளைஞனின் கவனத்தைச் சட்டெனக் கவர்ந்தது. நூபுரத்தின் ஓசையும், புத்துடையின் சரசரப்பும், வளையல் குலுங்கும் ஒலியும் வரும் திக்கை நோக்கினான் அந்த இளைஞன். அவனும் சாளுக்கிய நாட்டினின்று வந்தவன் தான். சாளுக்கிய நாட்டினின்று பலர் பல்லவ நாட்டிற்குள் வெவ்வேறு தோற்றத்தில் வந்து சேர்ந்திருந்தனர். அவர்கள் அவ்வாறு வருவதற்குக் காரணமும் இருந்தது.

அது நடந்து இரண்டு மூன்று ஆண்டுகள் ஆகிவிட்டன.

பல்லவ நாட்டின் மீது பெரும் படைகளுடன் வந்து தாக்கினார் சாளுக்கிய மன்னர் விக்கிரமாதித்தன். முதலில் அவருக்கு வெற்றி மேல் வெற்றி கிடைத்தது போல் தோன்றினாலும், கடைசியில் பெருவள நல்லூரில் சாளுக்கியப் படைகள் முறியடிக்கப்பட்டுத் துரத்தப்பட்டன. விக்ரமாதித்தன் புற முதுகிட்டு வாதாபியை வந்தடைய நேர்ந்தது. தோல்வி விக்ரமாதித்தனைப் பெரிதும் வாட்டியது. ஆட்சேதமும், பொருட் சேதமும்தான் மிஞ்சின. விக்ரமாதித்தனுடைய தந்தையும், சரித்திரத்தில் அழியாப் புகழ்பெற்றவருமான புலிகேசியின் கடைசி கால ஆசையைக்கூட விக்ரமாதித்தனால் நிறைவேற்ற முடியவில்லை. வாதாபியை நரசிம்மவர்மன் தீயிட்டுக் கொளுத்தி அழித்தது போல், காஞ்சியையும் அழித்துவிட வேண்டும் என்ற சபதத்தை விக்ரமாதித்தனால் நிறைவேற்ற முடியவில்லை. தோல்வி உள்ளத்தை வாட்ட, போர்க்களப் புண்கள் உடலை வருத்தப்படுத்த படுக்கையாய் நாட்களை விரல் விட்டு எண்ணிக் கழித்தவாறிருந்த அவனுக்கு, அவன் மகன் விநயாதித்தன் புத்துணர்ச்சியை ஊட்டினான். காஞ்சியை அடிமைப்படுத்தத் தான் செல்லப் போவதைப் பற்றி ஒருநாள் அவன் தந்தையிடம் விவரித்தான்.

விக்ரமாதித்தன் மனதிற்குள்ளே சிரித்துக் கொண்டார். மகனை அருகழைத்து அவன் முதுகை மெல்லத் தடவிக் கொடுத்து, ''மகனே, லட்சோப லட்சம் படைகளுடன் காஞ்சி மீது படையெடுத்த என்னாலும் முடியாத செயலை நீ தன்னந் தனியனாய் சென்றா நிறைவேற்றப் போகிறாய்?'' என்று கேட்டார்.

விநயாதித்தன் துடிப்பு மிகுந்தவன். சாளுக்கிய நாட்டிற்கு ஏற்பட்ட அவமானத்தை எப்படியாவது தீர்க்க வேண்டும் எனும் பரபரப்பு அவனிடம் ஏற்பட்டிருந்தது. மீண்டும் படைகள் திரட்டப் பல காலமாகலாம். சாளுக்கிய நாட்டிலும் மக்கள் படை யெடுப்பைக் கண்டு முணுமுணுக்கும் நிலை நிலவி வந்தது. போர்க்களத்தில் ஏற்பட்ட தோல்வியை மறைப்பதற்காகப் பல பட்டயங்களில் விக்ரமாதித்தன் தான் பெற்ற வெற்றியை மிகவும் சிறப்பாகப் பொறித்து வைத்தான். வாதாபியிலுள்ளவர்கள் தன் தோல்வி கண்டு சோர்வு கொள்ளாமல் இருக்க வேண்டும் என்பதற்காக அவ்வாறு செய்தான். ஆனால் உள்ளத்தைக் கொஞ்சம் கொஞ்சமாக அரித்துக் கொண்டிருக்கும் தோல்வியை விக்ரமாதித்தனால் எப்படி மறந்தோ, மறைத்தோ விட முடியும்?

விநயாதித்தன் தன்னந்தனியனாய்க் காஞ்சிக்குச் செல்லப் போகிறேனென்று சொன்னவுடன் விக்ரமாதித்தன் வியப் படைந்தார். அதில் ஆபத்து இருக்கும் என்று கூறினார்.

''முள்ளை முள்ளால்தான் அப்பா எடுக்க வேண்டும். தந்திரம மிகுந்த பல்லவர்களைத் தந்திரத்தால்தான் வெல்ல வேண்டும். நமக்குப் போர்க்களத்திலே கிடைத்துள்ள தோல்வி கிடக்கட்டும்; எனக்குக் கடைசியாகக் கிடைத்த செய்தியின்படி இங்கிருந்து அஜந்தா வர்ண இரகசியத்துடன் ஒருவனைப் பல்லவ மன்னன் காஞ்சிக்கு வரவழைத்துவிட்டான். அந்தச் செய்தியைக் கேள்விப் பட்டது முதல் என் இதயம் வெடித்துவிடும் போலிருக்கிறது... படை பலத்தாலல்லாமல் கலைச் சிறப்பாலும் நம்மை அடக்க விரும்புகிறார்கள். ஹூம்; அவர்கள் எண்ணத்தை ஒரு நாளும் நான் நிறைவேற விடமாட்டேன்...'' விநயாதித்தன் ஆத்திரத்துடன் பேசினான்.

விக்கிரமாதித்தனுக்கு இப்போது அஜந்தா வர்ண ரகசியம், ஓவிய முறை, சிற்பிகள், நடனம், இவை எவற்றின் மீதும் ஆசையோ ஆர்வமோ இல்லை. காஞ்சியை வெல்வது ஒன்றுதான்.

''அஜந்தாவையே பெயர்த்துக்கொண்டுதான் போகட்டுமே! மகனே... எனக்கு அதில் கவலையில்லை. காஞ்சியிலே வராகக் கொடி பறக்க வேண்டும்...'' என்று விக்ரமாதித்தன் அழுத்தந் திருத்தமாகக் கூறினான்.

''காஞ்சியிலே வராகக் கொடி பறக்க வேண்டும் என்பதுதான் என் இலட்சியமும். முள்ளை முள்ளால்தானப்பா எடுக்க வேண்டும். பல்லவ அரசகுமாரன் வாதாபிக்குச் சாதாரண மக்கள் போல் வேடம் தாங்கி வந்திருக்கிறான் என்பது உண்மை. இங்குள்ள கலைஞர்களைச் சந்தித்திருக்கிறான். அஜந்தாவுக்குச் சென்றிருக்கிறான். அவன் செய்த உபாயத்தை நானும் கையாளுவேன். நானும் காஞ்சியில் கடிகையில் கல்வி பயிலச் செல்லும் மாணவன்போல் செல்வேன். என்னுடன் இன்னும் சிலரை அழைத்துச் செல்வேன். தம்பி கீர்த்திவர்மனும் மிக உற்சாகத்துடன் இதில் ஈடுபட்டிருக்கிறான். தந்தையே! பழிக்குப் பழி வாங்குவதில் அவனுக்குப் பலர் உதவ முன் வந்திருக்கிறார்கள். பல நாட்களுக்கு முன்பே ஒரு பெண் வெஞ்சினத்தை மனத்தில் கொண்டு காஞ்சிக்குச் சென்று விட்டாள்...'' விநயாதித்தன் சொல்லி வரும்போது கண்களை மூடிக் கொண்டு கேட்டு வந்த மன்னர் விக்ரமாதித்தன் கண்களைத் திறந்து, ''என்ன... பெண் ஒருத்தியா சென்றிருக்கிறாள்?'' என்றான்.

''ஆம், தந்தையே! இளம் பெண்ணுக்கு இருக்கும் பழி வாங்கும் மனப்பான்மை எனக்கு இல்லாமல் போய்விடுமா? காஞ்சியில் காபாலிகர்களும், பாசுபதர்களும், காளாமுகரும், வீர சைவருமாகப் பல வேறு பிரிவாகப் பிரிந்து ஒருவருக்கொருவர்

சச்சரவிட்டுக் கொண்டிருக்கின்றனர். நான் உதவிபுரிய தேர்ந்தெடுத்திருப்பவர்கள் மேற்படி சமயத்தவர்களின் வேடந்தாங்கிக் காஞ்சியில் புகுவர். தம்பி கீர்த்திவர்மனுக்குப் பாசுபதன் வேடம் மிகவும் ஏற்றதாயிருக்கிறது. இதற்காக அவன் உடம்பு முழுவதும் சாம்பலைப் பூசிப் பழகினான். தோளிலும், கொப்புழிலும் லிங்க முத்திரையிட்டுக் கொண்டிருக்கிறான். கறுப்பு நிற ஆடையை இதற்காகவே தைத்து அவன் அணிந்து நடமாடுவதைப் பார்க்க எனக்கே பயம் பிறந்துவிட்டது. இந்த வடிவத்தில் அவன் காஞ்சிக்குச் சென்றுவிட்டான். நான்... நான் என்ன செய்யப் போகிறேன் என்பதை இப்போது வார்த்தை களால் சொல்வதைவிடச் செய்கையில் காட்டுவதுதான் நல்லது. விடைகொடு தந்தையே... தக்க சூழ்நிலையை உருவாக்கி நான் செய்தி அனுப்புவேன். சொற்பப் படைகளுடன் காஞ்சியை வெல்வோம்'' என்றான். விநயாதித்தன் தந்தையிடம் சொன்னது போல் ராஜ உடையைக் களைந்து, ஆபரணங்களைத் துறந்து, தங்கக் குண்டலங்களையும் கழற்றிவிட்டு, பட்டாடையை விட்டு சாதாரண நூலாடை அணிந்துப் புறப்பட்டான்.

காஞ்சனா கூத்து நடக்குமிடம் வந்ததும், அந்த இளைஞனால் அவளைத் திரும்பிப் பார்க்காமல் இருக்க முடியவில்லை. அவளை ஒருமுறை காண்பதும், கூத்தை ஒரு தரம் பார்ப்பது போல் பாசாங்கு செய்வதுமாக இருந்தான். அவனுக்குக் கூத்தில் நாட்டம் செல்லவில்லை. அவனுக்குப் பசி வேறு எழுந்தது. தான் நின்ற இடம் விட்டு மெல்ல நகர்ந்தான்.

காஞ்சனாவும் அந்த இளைஞனைக் கண்டுவிட்டாள். முதல் நோக்கிலேயே இந்நாட்டைச் சேராதவன் அவன் என்பதைப் புரிந்துகொண்டாள். ஒருவேளை இவன்தானோ பைரவன் கூறிய விஜயன்! ஆம்! அப்படித்தான் இருக்க வேண்டும். கம்பீரமான தோற்றம்; அழகிய முகம் – பைரவன் வர்ணித்த வடிவம் – காஞ்சனாவின் உடல் ஒருமுறை சிலிர்த்தது.

இளைஞன் கூட்டத்தை விட்டு ஒதுங்கி குளக்கரையை நோக்கிச் செல்வதைக் கண்டாள். அழகிய தாமரை மலர்கள் அவனையும் கவர்ந்திருக்க வேண்டும். காஞ்சனாவுக்குப் பசி எழுந்தது! வண்டியில் இருக்கும் உணவுப் பொருள்கள் அனைத்தும் வந்தன. தோழியை அழைத்துச் சமையலைச் செய்து குளக்கரைக்கு வண்டியுடன் உணவுப் பெட்டியை எடுத்து வரச் சொன்னாள்!

அவன் குளத்திலிறங்கி முகங்கழுவிக் கொண்டிருந்தபோது, காஞ்சனா அவனை அடி முதல் முடி வரை ஒருமுறை நோக்கினாள்.

ஆகா; என்ன களையான முகம்; அவனுடைய விழிகளிலே தனிக்கவர்ச்சி இருப்பது போல் தோன்றியது. விஜயனைப் பற்றி பைரவன் கூறியவை உண்மைதான். ஆனால் இவ்வளவு அழகாக விஜயன் இருப்பான் என்று காஞ்சனா நினைக்கவில்லை. பைரவனுக்கு வர்ணிக்கும் திறமையே இல்லை போலிருக்கிறது என்று முடிவு செய்தாள். காஞ்சியை விட்டுப் புறப்பட்ட விஜயன் மெள்ள நடந்தவாறே இந்தக் கிராமத்தை அடைந்திருக்கிறான் என்று எண்ணினாள். எப்படியோ அழகனைக் கண்ட கண்கள் பாக்கியம் செய்துவிட்டன. கண்ணுக்குக் கிடைத்த அதிர்ஷ்டம் கரங்களுக்கும் கிடைக்க வேண்டும்; தோள்களுக்குக் கிடைக்க வேண்டும்; இதழ்களுக்குக் கிடைக்க வேண்டும்... ஹூம்... காஞ்சனா பெருமூச்சு விட்டாள்.

அவன் முகம் கழுவி குளத்தின் படிக்கட்டுகளில் ஏறியபோது ஒயிலாக வண்டிச் சக்கரத்தின் மீது சாய்ந்து கொண்டு காஞ்சனா நிற்பதைக் கண்டான். வீசும் காற்றிலே அவளது மேலாடை அசைந்தாடியது. வெண்மதியின் இன்பக் கதிர்கள் அவள் மேனிக்குப் புதுப் பூச்சிட்டிருந்தன. மாவடு பிளந்தது போன்ற கண் விழிகளில் காந்த சக்தி ததும்பி நின்றது. அவள் பார்த்தும் பார்க்காததுபோல் மெல்ல நடந்தாள். காஞ்சனா அந்தச் சந்தர்ப்பத்தை இழக்க விரும்பவில்லை. அந்த வாலிபனுக்கும் அந்த எழில் நங்கையுடன் ஒரு வார்த்தையாவது பேசாமல் போகக்கூடாது என்ற எண்ணம் துளிர்விட்டது. அவன் நடையை மெல்லத் தளரவிட்டான். அவன் ஒருமுறை திரும்பிப் பார்த்தான். வண்டியின் அருகே தரையில் விரிக்கப்பட்டிருந்த பட்டுக் கம்பளத்தில் பரிமாறப்பட்டிருந்த உணவுப் பொருள்களின் மணம் 'கம்'மென்று வீசியது.

''தாங்கள் வெளியூரிலிருந்து வந்திருக்கிறீர்கள் போலிருக்கிறது'' என்று காஞ்சனாவின் தோழி விநயாதித்தனைப் பார்த்துக் கேட்டாள். அவன் திகைத்தான். இப்பொழுது, காஞ்சனாவே ஒயிலாக நடந்து வந்தாள். அந்தப் பெண்ணிடம் பேசுவதுபோல், ''இக்கிராமத்தில் இனி உண்ண ஏதும் கிடைக்கும் என்று தோன்றவில்லை'' என்றாள் காஞ்சனா.

அவன் பெரும் வியப்பில் ஆழ்ந்தான். இங்கு கனவுதான் காண்கிறோமா என்று இருமுறை கண்களைக் கசக்கிக் கொண்டான். கந்தர்வப் பெண் மண்ணில் வந்து நிற்கிறாளோ என்று ஐயுற்றான். கூச்சமோ, அழகி எனும் கர்வமோ இல்லாது அவள் பேசுவது கண்டு அந்த இளைஞன் வியந்தான். பல்லவ

நாட்டு அழகி ஒருத்தியின் நட்பு தனக்குக் கிடைப்பது பல காரியங்களுக்கு நல்லதென்று அவனுக்குத் தோன்றியதால், அவன் பேச்சை வரவழைத்துக் கொள்ள முயன்றான்.

''தங்களுக்கு ஆட்சேபணையில்லையென்றால் இந்த வெண் பொங்கலைச் சிறிது ருசி பார்க்கலாம்'' என்றாள் காஞ்சனா. அந்த இளைஞன் வாதத்தில் நிபுணன்; வாய்ப் பேச்சில் வல்லவன்; வாள் வீச்சில் சிறந்தவன். எனினும் காஞ்சனாவின் உத்தரவுக்குப் பணிந்தான். அவளுடைய கூர்மையான வேல் விழிப் பார்வை தாங்காது அவன் தோற்றான். வேறு பேச்சுப் பேசாமல் அந்தப் பொங்கலை ருசிக்கத் தொடங்கினான்.

காஞ்சனா அவனையே உற்று நோக்கிக் கொண்டிருந்தாள். பைரவன் கூறிய சாளுக்கிய நாட்டினின்று வந்த விஜயன் இவனேதான். 'ஆகா; எவ்வளவு நல்லதாகிவிட்டது? பாரதக் கூத்தைப் பார்க்க இங்கே வந்திராவிடில் விஜயனைச் சந்திக்காது போயிருப்போமே! ஹூம்...' என்று எண்ணி அவள் பெருமூச்சு விட்டாள். பெருமூச்சின் வேகத்தில் மார்பு விம்மித் தணிந்தது. காற்றிலே ஒதுங்கிய மென் துகிலை அதன் இருப்பிடத்தில் வைக்கவும் தோன்றாமல் அவள் நிற்பதை ஓரக் கண்ணால் கவனிக்கத் தவறவில்லை அந்த வாலிபன்.

''சாளுக்கிய நாட்டினின்று தாங்கள் புறப்பட்டுப் பல நாட்கள் ஆகியிருக்கும் போலிருக்கிறதே...'' என்று காஞ்சனாதான் பேச்சைத் தொடங்கினாள். வாலிபன் திடுக்கிட்டான். ஒரு கணத்தில் முகத்தில் ஏற்பட்ட மாறுதலை மறைத்துக்கொண்டு மெல்லிய புன்னகையையும் வரவழைத்துக் கொண்டு, ''சாளுக்கிய நாடா... ஹி ஹி நான் அங்கிருந்து வரவில்லை... நான்... நான்...'' என்று தடுமாறினான் அவன்.

காஞ்சனாவின் கூரிய விழிகள் ஒரு கணத்தில் அவன் முகத்தில் தோன்றிய உணர்ச்சியைக் கண்டுகொண்டன. சாளுக்கிய நாட்டைச் சேர்ந்தவன்தான் அவன். விஜயன்தான் அவன். ஏனோ மறைக்கிறான். ஆம்! ஆம்! எப்படி உடனே ஒப்புக் கொள்வான்? பல்லவ இளவரசரின் நண்பன், முக்கியமான வேலையாக வந்திருக்கிறான்; அவ்வளவு எளிதில் ஒப்புக் கொள்வானா? காஞ்சனா மேலும் அவனை வற்புறுத்த விரும்பவில்லை.

இளம் வாலிபனுக்கு மனத்தில் ஏற்பட்ட திகைப்பு எளிதில் நீங்கவில்லை. தன் திகைப்பை மாற்ற விரும்பி, ''நான் சாளுக்கிய நாட்டைச் சேர்ந்தவனல்லன்... நான் பாண்டிய நாட்டினின்று வருகிறேன்...'' என்றான்.

காஞ்சனா விழியைத் தாழ்த்திக் கொண்டு முகத்தில் குறும்புத்தனம் கூத்தாட, "ஹூம். எந்த நாடாயிருந்தால் என்ன? பசியுடனிருப்பவர்க்கு உதவும் பெரும் பாக்கியம் கிடைத்ததே!" என்றாள். இளைஞன் ஏதோ கூற வாயெடுத்தான். காஞ்சனா தன்னைப் பற்றி சரியான முறையில் அறிமுகப்படுத்திக் கொள்ள விரும்பித் தானே ஓர் அகப்பைக் குழம்பை எடுத்துப் பொங்கல் மீது வார்த்தாள்.

"என் வீட்டில் உங்களை இப்படியா உபசரிப்பேன்... ஹூம்... அப்போது நீங்கள் இதுபோன்று மௌனமாயிருக்க மாட்டீர்கள். இந்தக் குளக்கரையில் ஆறிப்போன பொங்கலைக் கொடுத்து வரவேற்பதால் தாங்கள் மௌனமாகிவிட்டீர்களா?" என்றாள்.

"ஆகா, ஆகா! ஆறிப்போன பொங்கலா இது? அற்புதம், அற்புதம்! இதன் சுவை நாக்கிலே தோய்ந்துவிட்டதே" என்று அவன் சொன்னான். உன் அழகு என் இதயத்தில் தோய்ந்து விட்டது என்று அவன் சொல்லவில்லை. ஆனால் நினைத்தான்!

ஆகா; இந்த அழகனின் பேச்சும் மிக அழகாகத்தானிருக்கிறது. காஞ்சனா பணிப்பெண்ணை நோக்கி, "அடி, அந்தக் கூடையினின்று மாம்பழத்தை எடு..." என்றாள். பணிப்பெண் இரண்டு கனிந்த பழமாக எடுத்து வந்தாள். காஞ்சனா அவற்றை இரு கரங்களிலும் வாங்கிச் சுமந்து கொண்டாள்.

"வேண்டாம், வேண்டாம். எனக்கு இனி வயிற்றில் இடமில்லை" என்றான் இளைஞன். காஞ்சனா அவனைப் பார்த்துக் கேலிச் சிரிப்புடன், "இந்தக் கனிக்கு இடமில்லை என்றால் நாளைய தினம் கடற்கரையில் அமர்ந்து விதவிதமான சித்ரான்னங்களும், அறுசுவை உண்டியும் அருந்தும்போது ஓடிப் போய்விடுவீர்களா?" என்றாள். கனிக்கா – கன்னிக்கா! இளைஞன் எண்ணினான். ஆனால் அவன் கேட்டதோ?

"நாளைக்கா – கடற்கரையிலா?"

"ஆமாம்! மாமல்லபுரக் கடற்கரையில் சித்திரை மாதத்தில் பௌர்ணமி நாளன்று கடற்கரை கோலாகலமாகக் காட்சியளிக்கும். நீங்கள் என் விருந்தாளி..."

"இன்றே விருந்தாளியாகிவிட்டேனே" என்று அவன் முணுமுணுத்தான். மாமல்லபுரம் – என்ற பெயரைக் கேட்கும் போதே அவன் உள்ளத்தில் பொறாமைக் கனல் மூண்டது. அங்கேயுள்ள சிற்பங்கள் அந்த நாட்டிற்குப் பெருமையை அளிக்கின்றன என்பதை எண்ணும்போது பொறாமையும்,


அவற்றைக் காண வேண்டும் எனும் வேட்கையும் அவனுள் எழுந்தன.

மகாவிரதியைத் தேடி விரைந்து சென்ற பைரவன் திரும்பி வந்தான்.

காஞ்சனாவும், இளைஞனும் கம்பளத்திலமர்ந்து பேசிக் கொண்டிருக்கும்போது பைரவன் தொலைவில் வந்து கொண்டிருந்தான். அவன் மிகவும் சோர்ந்து போயிருந்தான். மகாவிரதி என்று எண்ணி அவன் பின் தொடர்ந்துச் சென்றவர், பைரவன் கண்களுக்குப் புலப்படாமல் வேறு எங்கோ நுழைந்து மறைந்துவிட்டார். பைரவன் ஏமாற்றத்துடன் திரும்பினான். காஞ்சனா அங்கேயிருக்கிறாள் என்பதைக் கண்டுபிடிக்க அவன் பட்டபாடு.

காஞ்சனா அருகே ஓர் இளைஞன் அமர்ந்து பேசிக் கொண்டிருப்பதைத் தொலைவிலிருந்தே பைரவன் கண்டு விட்டான். ஒருவேளை அவன் விஜயனாயிருக்குமோ? என்று எண்ணிய பைரவன் விரைந்து வந்தான். அவர்களை நெருங்கும்போது அந்த இளைஞன் விஜயனல்லன் என்பதைப் புரிந்துகொண்ட பைரவன், ''காஞ்சனா... காஞ்சனா...'' என்று கூவிக்கொண்டே அவர்களை நெருங்கி ஓடிவந்தான்.

●



# 6. கலையும் போரும்

**கா**ஞ்சிமா நகரில் மிகப் பழமையான அரச மாளிகையின் மேன் மாடத்தில் மன்னன் வதியும் பகுதியில் இன்னும் விளக்கொளி வீசிக் கொண்டிருந்தது. சாளரத்து திரைச் சீலைகள் காற்றிலே அசைந்தாடிக் கொண்டிருந்தன. ஏகாம்பர ஈசுவரர் ஆலயத்து அர்த்த ஜாம பூஜை மணியும் அடித்தாகிவிட்டது. மாளிகை வாயிலின் இரவுக் காவல்காரர்கள் வந்துத் தங்கள் கடமையை ஏற்றுக் கொண்டனர். அதுவரை காவல் புரிந்த காவலாளிகள் தங்கள் உடைகளை மாற்றிக்கொண்டு தத்தம் வீடு நோக்கிப் புறப்பட ஆயத்தமாயினர். காஞ்சியின் கடைத் தெருவில் கலகலப்பும் சிறிது சிறிதாகக் குறைந்து வந்தது. பட்டுத் துணிகள் விற்கும் அங்காடியும், முத்து ரத்தினம் விற்கும் கடைகளும் மூடப்பட்டன. வேத பாடசாலையில் மாணவர் சந்தை சொல்லும் கோஷம் நின்றுவிட்டது. தமிழ்க் கல்லூரி மாணவர்கள் சிலர் உறங்கப் போகும் முன் ஆண்டவனைத் துதித்துப் பாடும் பாடல் ஒலியும் நின்றுவிட்டது. வேகமாக குதிரை மீது ஏறி ஓரிருவர் விரைந்து சென்றனர். வெளியூர் சென்று தாமதமாக வந்த பிக்ஷுக்கள் சிலர் இராஜகிருகத்திற்கு விரைந்து நடந்து சென்றனர். அவர்கள் பாலி பாஷையில் ஏதோ முணுமுணுத்தவாறு சென்று கொண்டிருந்தனர். கணிக் கண்ணன் கோயிலின் கதவு 'தடதட' என்று இழுத்துச் சாத்தப்படும் ஓசையும் எழுந்தது.

மஞ்சத்துத் தலையணையில் சாய்ந்துகொண்டு பரமேச்வர வர்மன் ஆவலுடன் தன் மகன் இராஜசிம்மன் வருகையை எதிர்பார்த்துக் கொண்டிருந்தார். அவர் பாதங்களை மெல்ல வருடியவாறு அரசி அமர்ந்திருந்தாள். மாமன்னர் பரமேச்வர வர்மருக்கும் பல நாட்களாக உடல் நலம் சரியில்லை. அதனால் அவர் அதிகமாக எந்த அரச அலுவல்களையும் கவனிப்பதில்லை. நீண்ட நேரம் அவர் கண் விழிப்பதையோ, தொடர்ந்து திருமுகம் காண வருபவரிடம் பேசிக்கொண்டிருப்பதையோ அரசியும் அனுமதிப்பதில்லை. எப்போதும் அவரருகே இருந்து அவர் உடல்நிலையைக் கண்ணும் கருத்துமாகப் பாதுகாத்து வந்தாள்.

''நேரம் மிகுந்துவிட்டதே... இப்படிக் கண் விழித்தால் உடல்நிலை என்ன ஆவது?'' என்று அரசி கவலையுடன் கேட்டாள். பரமேச்வர வர்மர் மெல்லச் சிரித்தார். ''தேவிக்கு ரொம்பவும் பயமாயிருக்கிறது. நீ அச்சப்படுவது போல எனக்கு ஒன்றும் நேர்ந்துவிடாது. இந்த நாட்டிற்கு எப்போதும் நேரும் போர்க்கவலையை நிரந்தரமாக ஒழிக்கும் வரையில் என் உயிர் கெட்டியாக இருக்கும்'' என்று கூறினார். அந்தக் கூடத்தில் நிலவிய ஒளியில் அரசியின் விழிக் கோடியில் முத்தினைப் போல் கண்ணீர் துளிர்த்திருப்பதை மன்னர் காணத் தவறவில்லை. பேச்சை அவர் மாற்ற விரும்பி, ''இராஜசிம்மன் வந்துவிட்டானா தேவி? அவன் வருவதற்காகத்தான் நான் விழித்துக் கொண்டிருக்கிறேன்'' என்றார்.

வெளிப்புறத்தில் யாரோ நடமாடும் ஓசை கேட்டது. தன் மகன்தான் வருகிறானோ என்று அரசி திரும்பிப் பார்த்தாள். பணிப்பெண் தட்டிலே காய்ச்சிய பால் பாத்திரத்தை வைத்து மூடி எடுத்து வந்து கொண்டிருந்தாள்.

''அவன் எங்கே சென்றான் என்று உனக்குத் தெரியாதா? ஏன் இன்னும் வரக்காணோம்?'' என்று மன்னர் கேட்டார்.

இராஜசிம்மன் இன்னும் என்ன சிறுவனா? தாயிடம் சொல்லிவிட்டு வெளியே செல்ல. அரசி மென்முறுவல் பூத்து, ''இராஜசிம்மன் இப்போது என் மகன் மட்டுமா? இந்த நாட்டின் இளவரசனாகிவிட்டானே. தீவு தீவாந்திரங்களுக்குப் போய்விட்டு வந்த பிறகு அவனுக்கு அரண்மனையில் தங்குவதற்கு நேரமேது?'' என்றாள். பரமேச்வரவர்மர் சிறிது நேரம் ஏதும் பேசவில்லை. அவர் மனம் இப்போது எங்கெங்கோ சஞ்சரிக்க ஆரம்பித்து விட்டது. பருவ மழை தவறிவிட்டதைப் பற்றியும், தானியக் கையிருப்பு குறைந்து வருவதைப் பற்றியும் உத்திரமேரூர் பஞ்சாயத்துத் தலைவர் கூறியதைப் பற்றியும் அவர் சிந்தித்தார்! சாளுக்கியப் படைகள் தோற்றுப் பின்வாங்கி ஓடியபோது பயிர் நிலங்களைத் தீயிட்டுப் பொசுக்கிச் சென்றதைக் கண்ட முதல் அமைச்சர் கூறியவை அவர் மனத்தில் நிழலாடின. துறைமுகத்தில் பண்டங்கள் ஏற்றுமதியாகாமல் சேர்ந்து கிடப்பதைப் பற்றி வணிகக் குழுவினர் கூறியவையும் அவர் மனத்தை வாட்டாமலில்லை. இவைகளுக்குக் காரணம் என்ன? அமைதியாக இருந்த காஞ்சிக்கு அவக்கேடு விளைவிக்கச் சாளுக்கியன் முடிவு செய்ததுதானே காரணம். வெள்ளம் போன்ற படைகளுடன் திடீரெனத் தாக்கி அமைதியைக் குலைத்தானே. எவ்வளவு சங்கடங்கள்! பயிர்த்தொழில் செய்பவர்கள் எல்லாம் வாளேந்தினர். வீறு கொண்டெழுந்து ஆக்ரமிக்க முயன்ற

விக்ரமாதித்தனை மக்கள் ஒன்று சேர்ந்து விரட்டியதாலன்றோ பல்லவ நாடு அடிமையாகாமல் தப்பியது. பலன்? சாளுக்கியன் தோற்று ஓடினாலும் அவன் நாசப்படுத்திச் சென்றதால் ஏற்பட்ட விளைவுகளிலிருந்து நாடு மீளப் பல ஆண்டுகள் பிடிக்கும் போலிருக்கிறதே!

இடையே மீண்டும் அடிபட்ட வேங்கை பழிக்குப் பழி வாங்க வராது என என்ன உறுதி? அதனால் சாளுக்கியர்கள் துடித்து எழும் முன்பே அவர்களை நசுக்கிவிட வேண்டும்... இதுதான் பரமேச்வரவர்மனை உறுத்திக் கொண்டிருந்தது. எப்போதும் இதே சிந்தனை. நடு உறக்கத்திலே இந்த எண்ணம் எழுந்துத் திடுக்கிட்டு விழித்தெழுந்து விடுவார். பிறகு உறக்கமே இல்லை; இராஜசிம்மனிடம் தன் உறுதியான எண்ணத்தைக் கூறி, படையெடுப்புக்கான ஆயத்தங்களைச் செய்யுமாறு சொல்ல வேண்டும் என எண்ணினார். அன்று அதைப் பற்றிப் பேசத்தான் இராஜசிம்மனை எதிர்பார்த்துக் கொண்டிருந்தார். நேரமாகிக் கொண்டே வந்தது.

இராஜசிம்மன் வந்துவிட்டான். தந்தையைக் காண அவன் குதிரையைத் தட்டி விரட்டிக்கொண்டு ஓடோடி வந்துவிட்டான். சிற்பியின் குடிலும், உளியின் ஓசையும், காட்டு மலர் பூத்ததோ என்று நினைக்கும்படியான வேல் விழியாளின் தோற்றத்தையும் மனத்திலே பதித்துக்கொண்டு ஓடோடி வந்துவிட்டான். பல்லவ நாட்டிலே மீண்டும் சிற்றுளி ஓசை எழப் போகிறது. மகேந்திரரும் மாமல்லரும் விட்டுப்போன கலைப்பணி மீண்டும் தொடர்வதற்கு அறிகுறியாக மலர் பூத்துவிட்டது. அம்மலரைப் பற்றித் தந்தையிடம் கூற வேண்டும் எனும் ஆவலுடன் இராஜசிம்மன் விரைந்து வந்தான்.

இராஜசிம்மன் வந்து சேர்ந்ததில் மன்னருக்கு மிக மகிழ்ச்சி. அப்போதே படைகள் புறப்பட்டுவிட்டது போன்ற எண்ணம். மன்னரை அப்போதே சந்தித்துவிட்டதில் இராஜசிம்மனுக்கு மகிழ்ச்சி. மாமல்லபுரத்தில் சிற்பிகள் நூற்றுக்கணக்காகக் கூடி அப்போதே ‘கிளிங் கிளிங்’ என்று ஓசைப்படுத்தி கல்லைக் கலையாக்கிவிட்டது போன்ற துடிப்பு.

ஆனால், நடுநிசி நெருங்கிக் கொண்டிருக்கும்போது மேலும் மன்னர் கண் விழித்துப் பேசுவது அரசிக்குப் பிடிக்கவில்லை. பொழுது விடிந்து ஆலோசனைகள் நடக்கட்டும் என்று உத்தரவிட்டுவிட்டாள். அரசியின் கட்டளையைத் தந்தையும், மகனும் ஏற்றுக்கொள்ள வேண்டியதாயிற்று. படையெடுப்பைப் பற்றி மகனிடம் கூற வேண்டும் என்று எண்ணியிருந்தார் பரமேச்வரசர்மர். தந்தையிடம் தான் நடுக்காட்டில் கண்ட

சிற்பியின் குடிலைப் பற்றியும் அங்கேயுள்ள சிற்பிகளைப் பற்றியும் கூற வேண்டும் என்று எண்ணியவாறிருந்தான் இராஜசிம்மன்.

அந்தக் குடிலுக்கருகே இராஜசிம்மன் வந்து சென்றதை சிற்பியோ, சுந்தரியோ அறியமாட்டார்கள். ஆனால் குட்டிச் சித்தன் மட்டும் யாரோ குதிரையில் வந்து பலகணியின் அருகே நின்றதையும், உடனே சென்றுவிட்டதையும் கண்டான். காளைகளுக்கு வைக்கோலும், புண்ணாக்கும் போடும் ஒரே கவனத்தில் அவனுக்கு அங்கு வந்து சென்றவரைப் பற்றிக் கருத்து ஏற்படவில்லை. அவரது ஒளி நிறைந்த முகத்தை மட்டும் மற்றொரு முறை திரும்பிப் பார்க்க வேண்டும் எனும் துடிப்பு ஏற்பட்டது.

பொழுது புலர்வதற்கு முன்பே வண்டியைக் கட்டிக்கொண்டு புறப்பட்டால்தான் பொழுது சாய்வதற்குள்ளாகவாவது காஞ்சியை அடைந்துவிடலாம் என்று எண்ணினான் குட்டிச் சித்தன். காண்பவர்கள் வெறுக்கும் தோற்றமுடையவன்தான் அவன்; அதற்கு அவன் என்ன செய்வான்? படைக்கும் கடவுளின் தவறுக்கு அவனா பொறுப்பாளி? உருவந்தான் அப்படியே யொழிய அவன் உள்ளமோ இளகியது. பிறர்க்கு தன் உடலால் உதவுவதே தன் பிறப்பின் இலட்சியம் என்று எண்ணி யிருப்பவன். கனமான பொருளைச் சுமந்து சென்று உதவுவதில் அவன் தனி இன்பங் கொண்டான். முதுகிலே எப்போதும் முட்டு போன்ற இயற்கையான சதைப் பாகத்தை ஒரு பயனுமில்லாமல் சுமந்து செல்லும்போது மற்றவர்களுக்கு உதவும் வகையில் பெரும் பாரம் சுமக்கக்கூடாதா என்பது அவன் கேள்வி. அவனைப் பற்றிய கதை யாருக்கும் தெரியாது. ஆனால், சிற்பி மல்லிநாதர் மட்டும் குட்டிச் சித்தனைப் பற்றி நன்றாக அறிவார். அவர் பூர்த்தி செய்திருந்த சிற்பத்தைப் பரமேச்வரவர்மர் சந்நிதானத்தில் மிகவும் கவனமாகவும் பத்திரமாகவும் கொண்டு சேர்க்க வல்லவன் குட்டிச் சித்தன்தான் என்று அவர் உணர்ந்ததால் அவனுக்குச் சொல்லி அனுப்பினார். கோவூரிலிருந்து குட்டிச் சித்தன் இரட்டை மாட்டு வண்டியைப் பூட்டிக்கொண்டு வந்துவிட்டான். வண்டி புறப்படுவதற்கு ஆயத்தமாக இருந்தது. அவர்கள் எப்போது புறப்படுவர் என்பதை எதிர் நோக்குவது போல அடர்ந்த மரங்களின் மறைவில் லகுலீச பாசுபதன் வடிவிலிருந்த கீர்த்திவர்மன் நின்றிருந்தான்.

●

# 7. பொய்யும் மெய்யும்

மறுநாள் அதிகாலையிலேயே மல்லிநாதர் எழுந்து அருகிலிருந்த குளத்தில் நீராடி வந்துவிட்டார். அந்தச் சிறு குளத்திலே அந்த அதிகாலையில் செங்கழுநீர் வாய் நெகிழ்ந்து விட்டது. ஆம்பல் வாய் கூம்பி இருள் போர்வை மெல்ல மெல்ல அகன்று ஞாயிற்றின் ஒளி படரத் தொடங்கிவிட்டது.

நீராடிவிட்டு வரும்போதே மலர்ந்திருந்த தாமரை மலரொன்றைப் பறித்து வந்திருந்தார் அவர். சுந்தரி இன்னும் உறங்கிக் கொண்டிருந்தாள். தாமரை மலரை நடனமாடும் ஈசன் சிலையின் பாதத்தில் வைத்து மெய்மறந்து சிறிது நேரம் துதித்துக் கொண்டிருந்தார். முதன்முதலாக அவர் அன்று காஞ்சிக்கு எடுத்துச் செல்லும் சிலையை மன்னர் பாராட்டி ஏற்க வேண்டுமே எனும் கவலை அவர் உள்ளத்தில் இல்லாமலில்லை. அவர் மனம் ஆண்டவனின் தோற்றத்தில் ஈடுபட்டது, ஈடுபாடு துதிப்பாடலை நினைவுபடுத்திக் கொண்டது. திருநாவுக்கரசர்ப் பெருமான் பாடிய பாடல் அவர் நினைவுக்கு வந்தது.

ஆயிரந் தாமரை போலும் ஆயிரஞ் சேவடியானும்
ஆயிரம் பொன்வரை போலும் ஆயிரம் தோளுடையானும்
ஆயிர ஞாயிறு போலும் ஆயிர நீண்முடியானும்
ஆயிரம் பேருகந் தானும் ஆரூர் அமர்ந்த அம்மானே!*

அந்தப் பிராயத்திலும் மல்லிநாதரது கணீரென்ற குரல் சுந்தரியை எழுப்பிவிட்டது. பரபரப்புடன் எழுந்த அவள் நீராடிவிட்டு அதிக நேரம் தூங்கிவிட்டதற்காக நாணமுற்றாள்.

''நீங்கள் இன்று காஞ்சிக்குப் புறப்படப் போகிறீர்கள் என்பதை மறந்தே விட்டேன். இதோ நானும் நொடியில் குளித்து வந்துவிடுகிறேன்'' என்றாள் சுந்தரவல்லி. மல்லிநாதர் மெல்ல நகைத்தார். காஞ்சிக்கு அவளை இந்தச் சமயம் அழைத்துப் போவது அவ்வளவு உசிதமன்று என்று எண்ணிய அவர் அதை எவ்வாறு தெரிவிப்பது என்று எண்ணினார். குட்டிச் சித்தனும் குளித்துவிட்டுத் திருநீறு பூசி ஆயத்தமாக நின்றான். சுந்தரவல்லி தானும் வருகிறேன் என்று கூறவும் சிற்பி மெல்ல சிரிக்கவும் திகைக்கவும் அதைப் பார்த்துக் குட்டிச்சித்தன் நொடியில், ''குழந்தை வண்டி ஓட்டுங்களா?'' என்று கேட்டான்.

---

* (சிவபெருமானின் விராட சொரூபத்தைக் குறிக்கும் பாடல். திருவாரூர் அமர்ந்த ஈசன்மேல் பாடப்பட்டது.)

சுந்தரவல்லிக்குச் சிரிப்புப் பொங்கியது. ''எனக்கு எதற்கு வண்டியோட்டத் தெரியவேண்டும்?'' என்று கேட்டாள்.

''இல்லை... நான் இந்தக் குடிலிலேயே தங்கிவிடுவேன். முதல் முதல் போகும்போது மூன்று பேராகப் போக வேண்டாம் என்பதற்காகத்தான் சொன்னேன்.''

''நிற்கும் சிற்பியைக் கண்டவுடன்தான் இவ்வாறு கூறுவதாகச் சொன்னேன்'' என்றான் குட்டிச்சித்தன்.

சுந்தரி வாய் திறக்கவில்லை. அவளுடைய ஏமாற்றத்தைத் தவிர்க்க விரும்பிய சிற்பி, ''குழந்தாய்! நான் இப்போதுதான் அரண்மனைக்குள் முதன் முதலாகச் செல்கிறேன். காஞ்சியில் எங்கே தங்குவது எங்கே உண்பது என்பதெல்லாம் தெரியவில்லை. இந்த நிலையில் உன்னையும் அழைத்துச் சென்றால்... எப்படியும் இனி அடிக்கடி செல்லக்கூடிய சந்தர்ப்பம் நேரிடும்; அப்போது நான் உன்னை அழைத்துச் செல்கிறேன்.... உனக்குத் தனியே இங்கிருக்கப் பயமாயிருக்கிறதா? உன்னுடைய தோழியர்களான சுகரும், வள்ளியும், ரதியும் எங்கே போய் விட்டனர்?'' என்றார்.

சுந்தரி கண்களில் ததும்பிய நீரைத் துடைத்துக் கொண்டு அவருக்குத் தடை ஏதும் சொல்ல விரும்பாதவளாய், ''சுகமே போய் வாருங்கள் அப்பா! வரும்போது காஞ்சிக் கடை வீதியிலிருந்து நல்ல சதங்கைகளும் ஜோடித்தாளமும் வாங்கி வாருங்கள்...'' என்றாள்.

ஃ ஃ ஃ

மல்லிநாதர் சென்ற பிறகு சுந்தரவல்லி சற்று நேரம் ஏதோ சிந்தனையிலாழ்ந்தவாறு அமர்ந்திருந்தாள். தான் பல்லவ நாட்டிற்கு வந்த நோக்கம் என்ன, அங்கே கழியும் பொழுது எப்படிக் கழிகிறது என்பதைப் பற்றி நினைத்தவாறு அவள் குளத்து நீரைக் காலால் கலக்குவாள். 'பழிவாங்கும் மனப்பான்மை நிறைவேற வேண்டுமானால் பல்லவர்க்கோன் தலைநகருக்குச் செல்ல வேண்டும். அரண்மனையில் ஒரு பணிப்பெண்ணாகச் சேர வேண்டும். அப்படியில்லாமல் கானகத்தின் நடுவே, மக்கள் நடமாட்டமற்ற இடத்தில் இருப்பதால் எண்ணம் என்றுமே நிறைவேறாது' என்று அவள் சிந்தித்தவாறு மனக்குழப்பத்துடன் இருக்கும்போது ரதியும், சுகரும் அவள் மனத்தை மாற்றுவார்கள்.

அன்றையப் பொழுது அவளுக்கு வள்ளி எனப்படும் மயிலுடனும், சுகர் எனப்படும் கிளியுடனும், ரதி எனப்படும் மானுடனும் விளையாடுவதிலேயே கழிந்தது. அதற்கு மறுநாள்

காலையில் அவள் குளக்கரையில் மலர்ந்திருக்கும் தாமரையைப் போல தன் கரங்களை விரித்து அபிநயம் பிடிக்க முயன்று கொண்டிருந்தபோது சுகர் தன் சிறகுகளை அடித்துக் கொண்டு பறந்து வந்து அவள் அருகே அமர்ந்தது. வள்ளி நடைபயின்று வந்தது. அதைத் தொடர்ந்து தோகையை விரித்துக் கொண்டு குமரன் எனப்படும் மயிலும் விரைந்து வந்தது. ரதி துள்ளி ஓடி வந்தது.

''காலையிலேயே விளையாட வந்துவிட்டீர்களா? எனக்கு வேறு வேலையே இல்லை என்பது உங்கள் எண்ணம் போலிருக்கிறது'' என்று செல்லமாகக் கடிந்து கொண்டாள் சுந்தரி. மானைப் போலவும், மயிலைப் போலவும் அந்தக் காலை வேளையில் களிப்புடன் ஆட வேண்டும் போல் அவளுக்குத் தோன்றியது. அந்தச் சமயத்தில் விஜயன் கையில் கோலுடனும், தோளில் சிறு பையுடனும் அங்கே நின்று கொண்டிருந்தான். கானகத்தின் நடுவே இருந்த சிறு குடில் அவனைப் பெரிதும் கவர்ந்தது. காஞ்சியிலிருந்து மகாவிரதியுடன் புறப்பட்ட விஜயன் திருக்கழுக்குன்றம் வரை பேசிக்கொண்டே நடந்து வந்தான். திருக்கழுகுன்றத்து மலை மீது ஏறி மகாவிரதி அவனுக்கு இயற்கைச் சூழ்நிலைகளைக் காட்டினார். விஜயனுக்கு ஏற்பட்ட மகிழ்ச்சிக்கு எல்லையே இல்லை.

''இதைப்போன்ற மலைச் சரிவில்தான் அஜந்தாவிலும் பாறைகள் குடையப்பட்டு அற்புதச் சிற்பங்கள் தீட்டப்பட்டன'' என்று விஜயன் கூறினான். மகாவிரதி அதைக் கவனித்ததாகத் தெரியவில்லை. அவர் பார்வை வெகுதூரத்தில் பாசுபதர்கள் கூட்டம் நடக்கும் இடத்தைக் கண்டுவிட்டன. அவர் பரபரப்புடன், ''தம்பி, மாமல்லபுரம் செல்லும் பாதையை உனகுக் காட்டுகிறேன். நான் அவசரமாகச் செல்ல வேண்டும். நீ மாமல்லபுரத்தில் தானே தங்கியிருப்பாய்? அங்கே இளவரசரைச் சந்தித்த பிறகு அங்கிருந்து வரவே உனக்கு மனம் வராது. அங்கே எனது நண்பர் ஒருவர் இருக்கிறார்; அவர் உன்னைப் போன்று எப்போதும் கலை, கலை என்று கூறி உயிரை விடுவார். அவரைப்போய்ச் சந்தித்தால் உனக்கு வேண்டிய உதவி செய்வார்'' என்று கூறி, காட்டின் நடுவே இருந்த சிற்பி இருக்குமிடத்தைத் தெரிவித்தார். எதிர்பாராத சம்பவங்கள் நடப்பதைக் காண விஜயன் வியப்படைந்தான்.

மகாவிரதியின் மீது அவனுக்கு அளவிட முடியாத மதிப்பு ஏற்பட்டது. கண்ணில் நீர் மல்க அவன் நின்று கொண்டிருந்தான். ''போய் வெற்றியுடன் வா தம்பி!'' என்று அவர் ஆசி கூறினார்.

“மீண்டும் தங்களை...” என்று விஜயன் ஏதோ கூற முற்பட்டவுடன், மகாவிரதி மெல்லச் சிரித்துக் கொண்டு, “என்னைச் சந்திக்கக் குறிப்பிட்ட இடம் என்று சொல்ல முடியாது; ஆனால் உன்னை நான் எங்கிருந்தாலும் சந்தித்துவிடுவேன். அந்தக் காபாலிகனிடம் மட்டும் மிக்க எச்சரிக்கையாய் இரு” என்று கூறிவிட்டு அவர் புறப்பட்டார்.

⁂ ⁂ ⁂

**வி**ஜயன் மாமல்லபுரம் நோக்கிப் புறப்பட்டான். சாலை வழியே நடந்து சென்றான். மாலை ஆகியதும் வழியே ஒரு மண்டபத்தில் தங்கிவிட்டுப் பொழுது விடிந்தவுடன் மகாவிரதி கூறிய அடையாளத்தை வைத்துக் கொண்டு சிற்பியின் குடிலை வந்தடைந்தான். அவன் வருவதற்குச் சற்று முன்புதான் மல்லிநாதர் காஞ்சிக்குப் புறப்பட்டுச் சென்றுவிட்டார். அந்த அமைதி நிறைந்த இடத்தில் ஆள் அரவமே இல்லாதிருக்க அது ஏதோ மந்திரத்தால் எழுந்த இடமோ என்று திகைத்தவாறிருந்த விஜயன் தாமரைக் குளத்துக்கருகே பூங்கொடி படர்வதுபோல் கைகளில் தாமரை மலர்வது போலும், மான் துள்ளுவது போலும், மயில் ஆடுவது போலும் சுந்தரி அபிநய முத்திரைகளை எழுப்பிப் பாவ உணர்ச்சிகளை வெளிப்படுத்திக் கொண்டிருப்பதைக் கண்டான். அவன் நினைத்தது உண்மைதான். இது ஏதோ சொப்பன பூமிதான் என்று விஜயன் முடிவு செய்துவிட்டான். தேவலோகத்திலிருந்து நடன மாது ஒருத்தி பூமியில் இறங்கி வந்து இயற்கைச் சூழ்நிலையில் குடிலமைத்துத் தன் பூர்வ வாசனை மறையாமல் இருக்க ஆடிக் கொண்டிருக்கிறாள் என்று முடிவு செய்தான். ஒருவேளை தனக்கு இந்த இடத்தை அடையாளங் கூறி வழிகாட்டிய மகாவிரதியும் இந்த லோகத்து மனிதரல்லரோ?

விஜயன் நிற்பதைச் சுந்தரி கண்டுவிட்டாள். சட்டெனா அவள் தன் நாட்டியத்தை நிறுத்திவிட்டு மெல்ல விஜயனை நோக்கி வந்தாள்.

விஜயனும், சுந்தரியும் திகைப்புற்று பேச்சு வராமல் ஒருவரை யொருவர் பார்த்தவாறு நின்று கொண்டிருந்தனர். அவர்கள் ஒருவரை ஒருவர் பார்த்துத் திகைத்தவாறிருக்கும் போது கறுப்பு ஆடையும், உடலெல்லாம் சாம்பலும், கையிலே கமண்டலமும், விரிந்த தலை முடியும் கொண்ட லகு லீச பாசுபதன் ஒருவன் மரங்களின் மறைவில் இருந்து அவர்கள் பேசுவதைக் கேட்டவாறு நின்றிருந்தான்.

**சு**ந்தரவல்லியால் விஜயனைப் பார்க்கவும் முடியவில்லை; பார்க்காமல் இருக்கவும் முடியவில்லை. அவள் இதயம் ஏனோ

படபடத்தது. பரபரப்பான செயலொன்று நேர்வது போன்ற துடிப்பு ஏற்பட்டது. விஜயன் மற்றும் ஒரு தடவை அந்த அமைதியான சூழ்நிலையைச் சுற்றுமுற்றும் பார்த்துப் பெருமூச்சுவிட்டான். அவன் தேடி வந்த சிற்பி இங்குதான் இருக்க வேண்டும். சிற்பிக்கு மாறாக சிற்பி செதுக்காத பேசும் சிலை போன்ற பெரும் பதுமையல்லவோ உருவெடுத்து நிற்கிறது...!

சுந்தரி பேச முனைந்தாள். விஜயனும் ஏதோ கேட்க முற்பட்டான். சுந்தரியின் நெஞ்சிலிருந்து வார்த்தைகள் வெளிவர வில்லை. உதடுகள் ஏதோ முணுமுணுத்தன.

''இதுதானே மல்லிநாதர் வசிக்கும் இடம்...'' என்று விஜயன் கேட்டான்.

சுந்தரி உலர்ந்த உதட்டில் மெல்ல ஈரப்பசை வருமாறு செய்து கொண்டு ஒரு மடக்கு உமிழ் நீரை விழுங்கி, ''ஆமாம்... நீங்கள்...'' என்று கேட்டாள்.

விஜயன் மல்லிநாதரைப் பார்த்ததில்லை. கேள்விப்பட்டதும் கிடையாது. மாமல்லபுரத்தில் இளவரசரைக் காண வந்த இடத்தில் மல்லிநாதர் எனும் சிற்பியைச் சந்திக்குமாறு மகாவிரதி கூறியிருந்ததால் விஜயன் அந்த இடத்தைக் கேட்டறிந்து கொண்டு அங்கே வந்தான். இளவரசரைச் சந்திக்க மல்லிநாதர் வழி சொல்லுவார் அல்லது இளவரசரே ஒரு வேளை அங்கே வரலாம் என எண்ணினான் விஜயன். 'மாமல்லபுரம் அருகே சிற்பி ஒருவர் வசிக்கிறார் என்றால் அவரை இளவரசர் அறியாமலா இருப்பார்?' எனும் எண்ணத்தில் விஜயன் அந்தக் கானகக் குடிலுக்கு வந்து சேர்ந்தான். வந்த இடத்தில் சிற்பியைக் காணவில்லை. சித்திர மங்கையைக் கண்டான். அவனுடைய ஓவிய உள்ளம் சுந்தரியைக் கண்டது. அஜந்தாவினின்று உயிர் பெற்று இறங்கி வந்து விட்ட மங்கையோ என்று அவன் ஒரு கணம் எண்ணினான். காஞ்சியில் ஏற்பட்ட வரவேற்பை விட மாமல்லபுரத்து வரவேற்பு நல்ல முறையில் தான் இருக்கிறது.

சுந்தரவல்லி அங்கே நிற்க முடியாமல் துடித்தாள். ரதியின் கழுத்தை மெல்லத் தடவினாள். சுகரின் சிவந்த மூக்கைத் தட்டினாள். விஜயன் மானின் விழியை ஒரு முறை பார்த்துவிட்டுச் சுந்தரியை நோக்கி, ''மல்லிநாதரை நான் பார்க்க முடியுமா?'' என்று கேட்டான்.

சுந்தரிக்குத் துணிவு வந்துவிட்டது. ''பார்க்கலாமே... ஆனால் நீங்கள் யார் என்று சொல்லவில்லையே...'' என்று கேட்டாள்.

''என்னை யாரென்று கூறி அவரிடம் அறிமுகப்படுத்திக் கொள்வது? நான் ஒரு கலைப்பித்தன்...''

''பித்தனா...?'' என்று வியப்புடன் கண்கள் விரியக் கேட்டாள் சுந்தரி.

''ஆமாம், அதனால் காடு மலையெல்லாம் நடந்து இங்கே வந்து சேர்ந்திருக்கிறேன்...''

''ஓகோ! மல்லிநாதரைத் தங்களுக்கு முன்பே தெரியுமா? அவரை அறிந்தவர்கள் காடு மலை கடந்து வருவதைப் பற்றிக் கவலைப்படவே மாட்டார்கள்...'' என்றாள் அவள். மல்லி நாதரைப் புகழ்ந்து ஒரு வார்த்தையாவது பேச வேண்டும் என்ற துடிப்பு ஏற்பட்டது. ஆமாம்; திசை தெரியாது அங்கு வந்து சேர்ந்த அவளைச் சொந்த மகளைப் போல் பாதுகாப்பவர் அவர்தானே! நாட்டியக் கலையில் அவள் மேலும் சிறந்து விளங்க உதவுபவர் அவர்தானே! அவர் முகமெதிரே அவரது உதவிக்கு அவளால் நன்றி தெரிவிக்க முடியவில்லை. இப்போது சரியான சந்தர்ப்பம்!

விஜயன் மெல்ல நகைத்தான். அது சுந்தரியின் உள்ளத்தில் கிளுகிளுப்பை விதைத்தது.

''மல்லிநாதரை எனக்குத் தெரியாது. ஆனால் அவரைப் பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறேன். அவர் எனக்கு வழிகாட்டுவார் எனும் துணிவில் இங்கே வந்தேன்'' என்றான் விஜயன்.

இப்போது சுந்தரி கலகலவென்று நகைத்தாள்.

''அவர் வழி காட்டுவாரா? எந்த இடத்திற்கு? வழி தெரியாது திகைத்து நிற்க வேண்டிய இடத்துக்கு வந்துவிட்டுப் பிறகு வழியைக் கேட்டால்...'' என்று கண்களைச் சுழலவிட்டுக் கேட்டாள் சுந்தரவல்லி.

''இல்லை... இல்லை... இந்த இடத்தின் வழியை நான் சரிவரத் தெரிந்து கொண்டு தான் வந்தேன். சிற்பியைக் கேட்டால் இளவரசர் மாமல்லபுரத்தில் எங்கே தங்கியிருப்பார் என்பதைத் தெரிவிப்பார் என்று கேள்விப்பட்டேன்...''

''இளவரசரா?'' - சுந்தரி வியப்புடன் கேட்டாள்.

''ஏன், இளவரசர் இராஜசிம்மன் இங்கு வருவதில்லையா? இந்தச் சோலை; சோலையின் அழகுத் தோற்றம், சிற்பங்கள் – அதைப் படைக்கும் சிற்பி – சிற்பத்துக்கு ஜீவன் தரும் நீங்கள் – இவ்வளவு பேரையும் காண இளவரசர் வருவதில்லையா?'' விஜயன் ஆவலுடன் கேட்டான்.

சுந்தரி சற்று மௌனமாயிருந்தாள். பிறகு, ''இளவரசரா... இந்தத் தனிக்காட்டில் யாருமே இதுவரை வுந்து நான் கண்டதில்லை. மனித முகத்தையே பார்த்துப் பல நாட்களாகின்றன...'' என்றாள் சுந்தரி.

அவள் வனப்பும் வடிவழகும் விஜயனை முதலில் திணறச் செய்தன. இப்போது அவள் பேச்சு திகைப்பை அளித்தது. மனித முகத்தையே இதுவரை இவள் காணவில்லை என்றால் இவள் இந்தப் பூமியில் வாழும் பெண்தானே? கந்தர்வ பூமியினின்று வந்து இறங்கி மண்ணிலே நடமாடும் காரிகையோ? செம்பாதங்கள் பூமியின் புழுதியிலே பட்டு உலவும் சிங்காரியோ?''

''என்ன அப்படித் திகைப்புடன் நோக்குகிறீர்கள்?''

''இல்லை... இந்த இடத்தைப் பற்றி ஆராய்ந்தேன்.''

''ஏன் – இது ஓர் அற்புத பூமி. ஒரு சமயம் இங்கே சிற்பக் கலைஞர் ஒருவர் வாழ்ந்தாராம். இந்த மாமல்லபுரத்துச் சிற்பங்களை உருவாக்க அவர் பெரிதும் காரணமாயிருந்தாராம்... அவருக்கு ஒரு பெண் இருந்தாளாம்...'' சுந்தரி சொல்லிக் கொண்டே போகும்போது விஜயன் பரபரப்புடன் ''ஓகோ... அந்தக் கலைப் பூமிதான் இதுவா? நான் அவர்களைப் பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறேன்... திக்கு திசையெங்கும் அந்தக் கலை மேதைகளின் பெயர் எட்டியிருக்கிறது... சாளுக்கிய நாட்டிலே அவர்கள் பெயர் பிரபலம்...'' என்றான்.

சுந்தரி ஒருமுறை விஜயனை ஏறிட்டுப் பார்த்தாள்.

''சாளுக்கிய நாட்டிலா, உங்களுக்கு எப்படித் தெரியும்?''

''நான் வளர்ந்ததே அந்த நாட்டில் தானே...''

''ஓகோ! சாளுக்கிய நாட்டினின்று வருகிறீர்களா? பல்லவர்களது விரோதியா...?''

''தவறான எண்ணம் உங்கள் மனத்திலும் விழுந்திருக்கிறதா? கலைஞர்களுக்கு விரோதி என்பவர்களே கிடையாது. பல்லவ இளவரசர் இராஜசிம்மன் எனது இளவயது நண்பர். அவரைக் காணத்தான் நான் இங்கு வந்தேன்....

சுந்தரிக்குத் திகைப்பு ஏற்படாமலில்லை. ஆனால், அதை வெளிப்படுத்திக் கொள்ளாமல், ''அப்படியா... இளவரசருக்கு நீங்கள் நண்பரா! ஹூம்! பதவியில் வராதபோது பலர் நண்பர்களாயிருப்பர். உயர்ந்த பதவியை அடைந்ததும் நட்பு மறைந்துவிடும்...'' என்றாள்.

''அப்படிச் சொல்லாதீர்கள்... இராஜசிம்மனும் நானும் கொண்ட நட்புப் பிணைப்பைப் பறிக்க முடியாது. நானும் அவரும் சாளுக்கிய நாட்டில் சுற்றாத இடமில்லை. அஜந்தாக் காடுகளில் பல நாட்கள் தங்கியிருக்கிறோம்... அவரும் நானும் அப்போது கட்டிய மனக்கோட்டையின் விளைவு தான் இப்போது நான் பல்லவ நாட்டிற்கு வந்தது...''

''மனக்கோட்டை காஞ்சிக் கோட்டைக்கு அழைத்ததோ...?'' - இப்படிக் கூறிவிட்டுச் சுந்தரி சிரித்தாள். சற்று முன்பு அவள் உள்ளத்தில் இருந்த கூச்சம் பறந்தோடிவிட்டது. விஜயனுடன் பேசிக்கொண்டே இருக்க வேண்டும் என ஆசை எழுந்தது. விஜயன் சுமுகமாகப் பேசுகிறான் என்பது மட்டுமன்று; விஜயனின் பின்னணியில் மகத்தான விஷயங்கள் இருக்கின்றன என்பதை அவள் உணர்ந்தாள். முதலில் விஜயன் இளவரசரின் நெருங்கிய நண்பன், சாளுக்கிய நாட்டைச் சேர்ந்தவன். அவள் பிறந்த நாடும் அதுதானே. விஜயன் இளவரசரின் நண்பன்; அவளோ பல்லவ குலத்தைப் பழிவாங்க வந்திருப்பவள். ஆனால் அந்தச் சுவடே தெரியாமல் அவள் வாழ்ந்து வருகிறாள். அந்த எண்ணம் ஏற்படும் போதெல்லாம் மல்லிநாதரின் கலை உபதேசம், சிற்பம் பாடல், ஆடல் ஆகியவை அவள் மனத்தை மாற்றிவிடும்.

மல்லிநாதர் வருவதற்கு எப்படியும் இரண்டு நாட்களாவது ஆகும். அதுவரையில் விசயனுடன் பேசிப் பொழுதைக் கழிக்கலாம் என்று எண்ணிய சுந்தரி திடீரென ஏதோ சொல்ல மறந்தவள் போன்று, ''ஐயா, தங்களை இப்படியே நிறுத்திவைத்து விசாரணைக் கூடத்தில் கேள்வி கேட்பது போல அன்றோ கேள்வி மேல் கேள்வி கேட்கிறேன். நீண்ட தூரம் நடந்த களைப்பு உங்களுக்கு இருக்குமே. அதோ உள்ள தடாகத்தில் அமிழ்ந்துக் குளித்துவிட்டு வாருங்கள். அதற்குள் நொடியில் உணவு ஆக்கிவிடுகிறேன்'' என்று கூறிவிட்டுத் துள்ளி குதித்துக் கொண்டு குடிலுக்குள் நுழைந்தாள்.

விஜயன் குளத்திலே குளிக்கும்போது குடிலில் உணவு ஆயத்தமாகிறது என்பதற்கு அறிகுறியாக மெல்லப் புகை எழுந்துப் படர்ந்தது. அதுவரை மறைந்திருந்த வகுலீச பாசுபதன் மர மறைவிலிருந்துக் குடிலின் வாயிலுக்கு வந்து, ''ஜெய் பாசுபதே! ஜெய் பாசுபதே!'' என்று கூவி, கையிலிருந்த இரும்புக் கம்பியின் முனையில் கோக்கப்பட்ட சலங்கையை 'ஜல் ஜல்' என்று ஓசைப்படுத்தினான்.

அடுப்பிலே கொதித்துக் கொண்டிருந்த சோற்றுப் பருக்கையை அகப்பையில் எடுத்துப் பதம் பார்த்தவாறிருந்த

சுந்தரியின் செவிகளில் பாசுபதனின் குரல் கேட்டது. எங்கோ கேட்ட குரல்தான் – ஆனால் அந்தக் காட்டிற்குள் இதுவரை சிவன் அடியார் எவரும் வந்ததில்லையே...

சுந்தரி வெளியே வந்தாள். லகுலீச பாசுபதன் நின்று கொண்டிருந்தான். கறுப்பு உடை அவன் கழுத்து முதல் கணுக்கால் வரை தவழ்ந்தது. கழுத்திலே லிங்கம் கோக்கப்பட்ட மாலை; நெற்றியிலே விபூதி! நடுவே லிங்க முத்திரை முடித்துச் சொருகப்பட்ட தலைமயிர், கையிலே கமண்டலம், தண்டம்.

சுந்தரி பாசுபதனைப் பார்த்துத் திடுக்கிட்டாள். ''ஜெய் பாசுபதே!'' என்று கூறிவிட்டுப் பாசுபதன் சுந்தரியை நோக்கி மெல்லச் சிரித்தான். சுந்தரியின் உடல் சிலிர்த்தது.

சுந்தரி அந்தக் குடிலுக்கு வரும்வரை இருந்த மனோபாவம் வேறு, வந்த பிறகு அவள் மனம் சிறிது சிறிது மாறுபட்டது. கலையின் அரவணைப்பு கடின சித்தத்தை மாற்றிவிடும்! கலையின் மணத்தால் கொடுங் குணமும் மெல்ல மாறிவரும். சுந்தரிக்கும் அந்த நிலைதான். அவள் வாதாபியையும், கீர்த்தி வர்மனையும், தனது சபதத்தையும் சற்று மறந்திருந்தாள் என்றே சொல்ல வேண்டும். கீர்த்திவர்மன் இப்போது பாசுபதன் வடிவில் வந்தவுடனேயே சுந்தரியின் உடல் நடுக்கமுற்றது. மறந்திருந்த பழைய எண்ணங்கள் மெல்ல உதயமாயின. காஞ்சியில் வந்து அவளைச் சந்திப்பதாகக் கூறியிருந்தான் கீர்த்திவர்மன்; அதுபோல் சந்தித்துவிட்டான். ஆனால் அவள் வாக்குக் கொடுத்து வந்ததை இன்னும் நிறைவேற்ற முடியவில்லை.

வாதாபியின் அகண்ட ராஜ வீதியின் முடிவில் சிறு குறுகிய தெரு ஒன்று சென்றது. அதிலே ஒரு சிறு வீடு தான் சுந்தரியினுடையது. சுந்தரியினுடையது என்றால் அவளா அதைக் கட்டினாள்? அவள் தாய் ரூபமதி அந்த வீட்டில் வசித்தாள். இதயம் நொந்து மனம் உடைந்து மாண்டாள். அவள் மகள் தான் சுந்தரவல்லி. ரூபமதி தினம் தினம் காஞ்சிமா நகரத்தைப் பற்றிச் சொல்வாள். தமிழ் நாட்டைப் பற்றிச் சொல்வாள். தான் வாதாபி நகருக்கு வந்ததைப் பற்றிச் சொல்வாள். வாதாபி தீப்பற்றி எரிந்ததையும் நகர மக்கள் சொல்லொணாத் துயரமடைந்ததையும் சொல்வாள். ரூபமதி கூறியவை ஒரு சமயம் சுந்தரியைத் திகைக்க வைக்கும்; சிரிக்க வைக்கும். சீற்றங் கொள்ள வைக்கும். கண்ணீர் விட வைக்கும். கொடுஞ் சபதத்தை இதயத்தில் எழ வைக்கும். தன் தாய் உள்ளம் நோகச் செய்தவரை அழவைக்க வேண்டும் எனும் ஆத்திரங் கொள்ள வைக்கும்.

அவள் சாளுக்கிய மாளிகையில் உள்ள நூற்றுக்கணக்கான ஆடலணங்குகளில் ஒருத்தியாக வாழ்ந்தாள். ஆனால் தூய்மை

கெடாமல், நெறி தவறாமல் வாழ்ந்தாள். அவளுக்கு அந்த வாழ்க்கை பிடிக்கவில்லை. இரவிலே அவள் உறங்கும் போது ரூபமதி வந்து ''எங்கே மகளே இன்னும் சபதத்தை நிறைவேற்றாமல் இருக்கிறாய்?'' என்று கேட்டுத் தட்டி எழுப்புவது போல் தோன்றும். அன்று முழுமையும் சுந்தரி எந்த வேலையும் செய்யாது உன்மத்தம் பிடித்தவள் போல் இருப்பாள். அவளுடைய சோர்ந்த உள்ளத்திற்கு விடிவு நேர்ந்தது. பல்லவ நாட்டிற்குப் பழிவாங்கச் செல்லும் செயலை மேற்கொண்ட கீர்த்திவர்மனைத் தற்செயலாகச் சந்தித்தாள். தன் சபதம் நிறைவேறக் காஞ்சி செல்ல சரியான சந்தர்ப்பம் என்று முடிவு செய்து காஞ்சிக்குப் புறப்பட்டாள். முன்பாகவே காஞ்சி சென்று பல்லவ அரண்மனையில் நாட்டியப் பெண்ணாக எப்படியாவது அவள் சேர்ந்துவிட வேண்டும். அவர்கள் நம்பிக்கைக்குப் பாத்திரப்படுமாறு நடந்து கொள்ள வேண்டும். கீர்த்திவர்மனும் மற்றவர்களும் மாறுவேடத்தில் காஞ்சி வரும்போது சுந்தரி தக்க உதவி செய்து, அரச குடும்பத்தவரையே பூண்டோடு நசுக்க வழி செய்ய வேண்டும்... இந்தத் திட்டத்துடன் வந்த சுந்தரி காஞ்சி செல்லவில்லை. மல்லிநாதரைச் சந்தித்த பிறகு அவளது சபத வேகம் தடைப்பட்டுவிட்டது.

ஆனால் கீர்த்திவர்மன் வந்துவிட்டான்.

''சுந்தரி'' - என்று கூப்பிட்டான், பாசுபத வடிவில் இருந்த கீர்த்திவர்மன்.

அவன் முன் மௌனமாய் நின்றிருந்தாள் சுந்தரி.

''சுந்தரவல்லிதானே உன் பெயர்? உன் பெயரை நான் இன்னும் மறக்கவில்லை. நான்தான் கீர்த்திவர்மன். சுந்தரி என்னை நீ மறந்துவிட்டாய் அல்லவா?''

இல்லை என்பதற்கு அடையாளமாகச் சுந்தரி தலையாட்டினாள்.

''மறக்கவில்லையா? ஆனால், திகைத்து நிற்கிறாயே, எதிர்பார்க்கவில்லையா?''

சுந்தரிக்கு என்ன சொல்வதென்று புரியவில்லை. எனினும் ''மறக்கவில்லை; ஆனால் அடையாளம் தெரிந்து கொள்ள முடியாததால் திகைத்தேன்...'' என்றாள்.

''சுலபமாக அடையாளந் தெரிந்து கொள்ள முடியுமானால் வேடம் எதற்குப் போட்டுக் கொள்வது? ஆனால் வேடம் போட்டுக் கொள்ளாமலேயே நடிக்கக் கூடியவர்கள் பெண்கள். நீ நடிக்க மறந்துவிட்டாயா? கடமையை மறந்துவிட்டாயா? ராஜசபையில் நர்த்தனமாட வேண்டிய உன் பாதங்கள் இந்தக்

கானகத்துக் குளக்கரையில் கூத்தாடுகின்றன... இல்லையா?'' என்றான் கீர்த்தி வர்மன்.

தான் சற்றுமுன்னர் குளக்கரையில் அபிநயம் பிடித்ததை அவன் பார்த்துவிட்டானா? அப்படியென்றால் விஜயனுடன் பேசிக்கொண்டிருந்ததையும் கவனித்திருப்பான் என்று நினைத்தாள் சுந்தரி.

''ஆமாம் சுந்தரி... தாமரை எதிரே ஆடினாய், மயில் எதிரே ஆடினாய். மானைப்போலத் துள்ளினாய்! காண நன்றாகத் தானிருந்தது. உன் திறமை முன்னைவிட நிறைய வளர்ந் திருக்கிறது. இந்த இரு கண்கள் ரசித்தன; உன் அழகும் வளர்ந்திருக்கிறது. இந்த இரு கண்களால் பருகினேன். என்ன பயன் சுந்தரி? உன் நாட்டியத் திறமையில் பல்லவ மன்னன் மயங்க வேண்டும். உன் அழகை அங்குள்ளோர் ரசித்து மயங்க வேண்டும். அப்போதுதானே எடுத்த காரியத்திலே வெற்றி காண்பாய் சுந்தரி.''

சுந்தரி தலையை அசைத்தாள், இன்னும் அவளுக்குப் பேச நா எழவில்லை.

''சுந்தரி! ஏன் கல்லாகிவிட்டாய்? கல்லைக் கலையாக்கும் இந்த இடத்தில் கலையரசி நீ கல்லாகிவிட்டாயா? உனது பேச்சை நம்பி நான் இளவரசர் விநயாதித்தனிடம் வாக்குக் கொடுத்து விட்டேன்... அதை நீ தோற்றுவிடச் செய்வாய் போலிருக் கிறதே...''

இப்போதுதான் சுந்தரி இதழ் திறந்தாள். ''என்ன வாக்குக் கொடுத்தீர்கள்?''

''ஓகோ! அதையும் மறந்து விட்டாயா? சாளுக்கிய நாட்டிற்கு ஏற்பட்ட அவமானத்தைத் துடைக்க அழகிய பெண்ணொருத்தி சபதம் செய்து காஞ்சிக்குப் போயிருக்கிறாள். நமது பணியில் பாதியை அவள் முடித்துவிடுவாள் என்றேன். இளவரசர் என்னைச் சந்தித்துக் கேட்டால் என்ன சொல்வேன் சுந்தரி? ஒரு பெண் பேச்சைக் கேட்டுக் கூத்தாடினாயே என்று அவர் கேலி செய்வார் – அவர் கேலி இருக்கட்டும்; சாளுக்கிய மன்னர் படுத்த படுக்கையாக இருக்கிறார். அவர் கடைசி மூச்சு நிற்பதற்குள் காஞ்சியை அக்னிபகவானின் பசிக்கு இரையாக்கிய செய்தி அவர் காதில் விழவேண்டும். அது உன் கடமை இல்லையா?''

கீர்த்திவர்மன் குரலில் கெஞ்சுதலும், வேண்டுகோளும், கடமையை நினைவுபடுத்தும் கோரிக்கையும் இருந்தன. சுந்தரியின் விழிகளில் நீர் தளும்பியது.

''என்னைப் பொறுத்தருளுங்கள், கீர்த்திவர்மரே! நான் தவறான இடத்திற்கு வந்து சேர்ந்துவிட்டேன். இங்குள்ள சூழ்நிலையினின்று என்னால் மீள முடியவில்லை. சிற்பி மல்லிநாதரின் உண்மையான அன்பு என்னை மறக்கச் செய்துவிட்டது. அவர் காஞ்சிக்குப் புறப்படும்போதுகூட நான் மிகவும் வேண்டினேன். என்னையும் அழைத்து போகுமாறு. அவர் கூறிய காரணங்களும் நியாயமாகத்தானிருக்கின்றன; என்ன செய்வது? இங்கிருந்து – இந்தக் கலை மாயையினின்று எப்படி விடுபடுவது என்று நீங்கள் வழி சொல்லுங்களேன்...''

பாசுபதன் 'ஹோ ஹோ' என்று நகைத்தான். திடீரென சுந்தரி அவன் அருகே வந்து, ''கருணை கூர்ந்து மெல்லப் பேசுங்கள். அங்கே மற்றொருவரும் இருக்கிறார். அவர் காதில் விழப் போகிறது நாம் பேசுவது'' என்றாள்.

''இங்கே அந்த விசயன் வந்திருக்கிறான் என்பது எனக்குத் தெரியும். வாதாபியில் குரு குமாரதேவரின் மாணவன் அவன். அவன் இங்கே வந்திருப்பது நல்லதுதான் சுந்தரி. அவனைக் கொண்டே உன் திட்டத்தை நிறைவேற்றிக் கொள்ளலாம், சுந்தரி. அவன் பல்லவ இளவரசரின் நண்பன்...''

''ஹா... தங்களுக்கு எல்லாம் தெரிந்திருக்கிறதே...'' என்று வியந்தாள் சுந்தரி.

''உயிரையும் பணயம் வைத்து விரோதி நாட்டிற்குள் மாறுவேடத்தில் புகுந்துப் பலன்? இந்தப் பாசுபதன் வேடத்தில் என்னால் எவ்வளவு நாட்கள் இருக்க முடியும்? பட்டாடை துறந்து கறுப்பு ஆடை அணிந்து என்னால் அதிக நாள் உலவ முடியாது. பார்க்க வெறுப்பாக இல்லை? உன் கண்களுக்கு என் தோற்றத்தையே குறைத்துவிடுமே சுந்தரி...''

மேலும் அவன் சொன்னான்: ''சுந்தரி, விஜயன் இங்கு வந்ததும் நம் அதிருஷ்டம்தான். நீ காஞ்சிக்குப் போய்ச் சாதிக்கக் கூடியவற்றை இங்கிருந்தே சாதிக்கலாம். நான் அவ்வப்போது வருவேன்'' என்று கூறிவிட்டு நகர்ந்த பாசுபதன் மீண்டும் அவளை அணுகி, ''சுந்தரி, நீ வந்த காரியம் மறந்து இப்படியே இருந்துப் பல்லவர்கள் கலை ஓங்க வழி செய்ய நினைத்தா யானால்... பிறகு கீர்த்திவர்மன் பெண்ணென்றும் பேதை யென்றும் பார்க்கமாட்டான்...'' என்று கூறிவிட்டு விரைந்துச் சென்று அருகேயிருந்த புதரருகே நுழைந்து மறைந்தான்.

●

# 8. வெற்றி அவளுக்கே

**"பை**ரவா, உன்னால் நடந்துவர முடியுமல்லவா?" என்று கேட்டாள் காஞ்சனா.

"என்னாலா? ஏன் முடியாது! பல காத தூரம் சலிக்காமல் நடப்பேன்..." என்றான் பைரவன் காஞ்சனாவையும், விஜயன் என்று காஞ்சனா தவறாக எண்ணிக் கொண்டிருந்த இளைஞனையும் மாறி மாறிப் பார்த்தவாறு. இப்போது இளைஞன் மாம்பழத்தைச் சுவைத்துக் கொண்டிருந்தான். அதன் சாறு அவன் முகவாய்க்கட்டையில் வழிந்துப் புறங்கை வழியாக முட்டியிலே சொட்டிக் கொண்டிருந்தது. அந்தத் துளியைக்கூட விட்டுவிட மனமில்லை.

"அது தெரியுமே எனக்கு. அதனால்தான் உன் அத்திரியை இவரிடம் கொடுத்துவிடு. மாமல்லபுரம் வரையில் இவரை நடக்க வைக்க வேண்டாம் என்று எண்ணினேன்" என்றாள் காஞ்சனா.

"இவனையுமா அழைத்துப் போகப் போகிறாய்?" என்று பைரவன் கேட்டான்.

அவன் கேட்டது காஞ்சனா செவிகளில் விழவில்லை. "பைரவா, என்ன முணுமுணுக்கிறாய்?" என்று அவள் கேட்டவுடன் பைரவன் ஏதும் பேசவில்லை. காஞ்சனா பிடித்த பிடியினின்று மாறமாட்டாள் என்பது அவனுக்குத் தெரியும்.

மாமல்லபுரம் நோக்கிக் காஞ்சனா அமர்ந்திருந்த வண்டி புறப்பட்டது. சாளுக்கிய நாட்டிளைஞனுக்கு உற்சாகம் தாங்கவில்லை. அந்த நிலவொளியில் கூண்டு வண்டிக் குள்ளிருந்துத் திரையை விலக்கிக் கொண்டு காஞ்சனா நோக்குவதும், வண்டியை ஓட்டிவந்த அந்த இளைஞன் அவள் முகப்பொலிவில் அமிழ்ந்து மகிழ்வதும், காஞ்சனா அவனை நோக்கிப் புன்முறுவல் பூப்பதுமாக அவர்கள் சென்று கொண்டிருந்தனர். பைரவன் ஆத்திரம் உள்ளத்தில் பொங்க நடந்து வந்து கொண்டிருந்தான்.

மாமல்லபுரத்தை அவர்கள் அடையும்போது நிலவு மேல் திசையில் மெல்ல இறங்கிக் கொண்டிருந்தது. பெரும் பாறைகளும்

பாறைகளைச் சுற்றி வளர்ந்துள்ள செடிகளும், ஒரு பாறையின் இடுக்கில் வளைந்து நுழைந்து முளைத்திருந்த இலந்தை மரம் ஒன்றும், அதனருகே பூர்த்தியாகாத கோயில் ஒன்றும் அவர்களை வரவேற்றன.

அமைதி எங்கும் குடிகொண்டிருந்தது. காற்று 'வீர் வீர்' என்று அடித்துக் கொண்டிருந்தது. திடீரென்று விழித்துக் கொண்ட பறவை ஒன்றிரண்டு விடிந்துவிட்டதென்ற எண்ணத்தில் கூவின. எங்கோ மலரும் மலர்களின் மணம் குப்பென்று வீசியது.

தோப்பு ஒன்றின் நடுவே இரண்டு மூன்று கூடாரங்கள் அமைக்கப்பட்டிருந்தன. இவர்கள் வருகையை எதிர்பார்த்து எதிர்பார்த்து கண் விழித்திருந்த வேலைக்காரர்கள் கூட இருந்த இடத்திலேயே கண்ணயர்ந்து விட்டனர். தொலைவில் ஓங்கார மிட்டுக் கொண்டிருந்த கடலலைகளின் இனிய தாலாட்டும், கடற் காற்றின் மென் தழுவலும் அவர்களை அயரச் செய்து விட்டன. தீவர்த்தி எரிந்து எரிந்துக் கருகி ஒளியிழக்க ஆரம்பித்து விட்டது.

சாளுக்கிய இளைஞன் அத்திரியை மரத்தில் கட்டிவிட்டுக் காஞ்சனா அருகில் வந்து, "நான் போய் வருகிறேன் தங்களுடைய உதவிக்கு நன்றி" என்று கூறினான்.

தூக்கம் கண்களைச் சுழற்ற, காஞ்சனா சோம்பலை முறித்து உடலை நெளிய விட்டுக் கொண்டாள். அந்த நிலை இளைஞனைக் கிறுகிறுக்க வைத்தது. மேலே பார்த்தான். சுற்றுமுற்றும் பார்த்தான். கந்தர்வபுரி இல்லை; அப்ஸரஸும் இல்லை. மானிடப் பெண்தான். பிரம்மதேவர் அபரிமிதமான அழகையும் செழுமையான அங்கங்களையும் கொடுத்துவிட்டார் என்று எண்ணிப் பெருமூச்சு விட்டவனை நோக்கிக் காஞ்சனா அருகே வந்து, "இந்த அகால வேளையில் எங்கே போகப் போகிறீர்கள்?" என்று கேட்டாள். அவனை அப்படிப் போக விட்டுவிடுவதற்காகவா அவனைச் சந்தித்தாள்? உணவளித்தாள் ஒய்யாரமாக இருந்தாள். ஒயிலாகக் கண் வலை வீசினாள். மனம் திறந்து வார்த்தை பேசினாள்.

'காஞ்சனா கேட்டது சரிதான். ஆம்... நாம் எங்கே போகப் போகிறோம்? ஆனால் அதை அவளிடம் சொல்ல முடியுமா? எனினும் அவளை விட்டுப் பிரியவும் மனம் இல்லை...' என்றெண்ணினான் இளைஞன்.

"எனக்கு ஏராளமாக வேலை இருக்கிறது."

"ஓ! இந்தப் பின்னிரவிலா?"

''முன் ஜாமத்திலேயே செய்திருக்க வேண்டியவை.''

''என்னிடம் கூறுங்கள். நொடியில் நான் என் பணியாட்களை விட்டு நிறைவேற்றி வைக்கிறேன்... ஆனால், நீங்கள் செய்ய வேண்டிய வேலைக்காக இந்த நேரத்திலும் காத்திருப்பவர்கள் இருக்கிறார்களா?''

''இருப்பார்கள்... இருப்பார்கள்...''

''ஆணா, பெண்ணா...''

காஞ்சனா இந்தக் கேள்வியைக் கேட்டுவிட்டு அவன் கரத்தைப் பிடித்துக் கொண்டு ஒருமுறை சுழல வேண்டுமென்ற வேகம் அவளுள் ஏற்பட்டது. அவன் தோளைப் பிடித்துத் திடீரெனக் குலுக்கி, ''பொய் சொல்லாதீர்கள். இந்த நேரத்தில் யார் விழித்திருப்பார்கள்'' என்று ஆத்திரத்துடன் கேட்க வேண்டும் போலவும் தோன்றியது. அந்த வேகம் அவள் உடலில் எழுந்தது. இதமான மென்காற்று வீசும் வேளையிலும் அவள் உடல் கொதிப்பதுபோல் தோன்றியது. அவள் உடலின் ஒவ்வொரு பாகமும் கடலிலே மிதக்கும் படகினைப் போன்று ஆடி அசைவது போன்ற பிரமை...

அவன் ஏதும் மறுமொழி கூறாமல் நிற்பதைக் கண்ட காஞ்சனா, ''உங்களிஷ்டம்... எனக்கு உறக்கம் கண்ணைத் தழுவுகிறது. நான் போகிறேன். உங்களுக்கும் விருப்பம் இருந்தால் இதோ அருகாமையிலே பைரவனுக்காக ஏற்பாடு செய்யப்பட்ட கூடாரத்தில் தங்கலாம். காலையில் எழுந்தவுடன் பேசுவோம் – நிறையப் பேசுவோம். தங்களுக்கு ஆகவேண்டியதைச் சொன்னால் எனது ஆட்கள் நொடியில் செய்வர் – ஆனால், என் தயவு உங்களுக்கு எதற்கு? இளவரசரின் நண்பராயிற்றே நீங்கள்! அரசாங்க ஆட்கள் இட்ட வேலையைச் செய்யக் காத்திருக்கும்போது என் தயவு எதற்கு...?'' என்று கூறிவிட்டுக் கூடாரத் திரையை விலக்கிக் கொண்டு உள்ளே சென்றுவிட்டாள். சாளுக்கிய இளைஞன் திகைத்து நின்று கொண்டிருந்தான். காஞ்சனாவின் அழகு கண்டு அவன் திகைத்து விடவில்லை. அவள் கூறினாளே... இளவரசரின் நண்பனாமே நாம் –

அவன் சந்தேகம் ஊர்ஜிதமாகிவிட்டது. 'என்னை அவள் தவறாக எண்ணிவிட்டாள். அதனால்தான் இவ்வளவு உபசாரங்கள் செய்கிறாள். நெருங்கிப் பழகுகிறாள். பெரிய செல்வச் சீமாட்டியாகக் காஞ்சியில் திகழும் இவள் திடீரென முன்பின் தெரியாத ஓர் இளைஞனுடன் பழகுகிறாள் என்றால் அதற்கு ஏதோ காரணம் இருக்க வேண்டும் என்று நாம் எண்ணியது சரிதான் – ஆள் மாறாட்டங்கொண்டு நமக்கு

ராஜோபசாரம் செய்கிறாள் – அரச மகனின் நண்பனென்றும் சொல்கிறாள். நாம் சொல்லிவிடுவோம் – சொல்லிவிடுவோம். பிறகு உண்மை தெரிந்தால் இப்போது எவ்வளவுக்கெவ்வளவு உபசாரம் செய்கிறாளோ அவ்வளவுக்கு நேர்மாறான அவமரியாதையும் கிடைக்கும்' என்றெண்ணிய அவன் மறுகணம், "காஞ்சனா... காஞ்சனா..." என்று கூப்பிட்டவாறு அவளது கூடாரத்தை அணுகினான். இதுவரை உள்ளே எரிந்து கொண்டிருந்த விளக்கும் அணைந்துவிட்டது. வளையல் குலுங்கிய ஒலி நின்றது. சரசரவென்று புதுத் துணி எழுப்பிய ஒலியும் காணோம்.

அவன் சற்று நேரம் நின்றான். பிறகு தனக்கென்று குறிப்பிடப் பட்ட கூடாரத்திற்குள் நுழைந்தான். கீழே வைக்கோல்தான் பரப்பப்பட்டிருந்தது. திடீரென அவன் உடல் முழுவதும் வியர்த்துக் கொட்டியது. தான் அணிந்திருந்த மேலுடையைக் கழற்றிவிடலாமா எனும் எண்ணம் ஒரு கணம் தோன்றியது. காஞ்சனாவை நினைத்தவுடனேயே அந்த எண்ணத்தை மாற்றிக் கொண்டான். ஆள்மாறாட்டமாக அவள் தன்னைத் தவறாக வேறு ஒருவர் என எண்ணியிருக்கும்போது அதைக் கெடுப்பானேன்...

அவனுக்குத் தூக்கம் வரவில்லை. அவன் செய்ய வேண்டியவை ஏராளமாக இருந்தன. காஞ்சியைச் சுற்றியுள்ள முக்கிய ஊர்களையெல்லாம் அவன் பார்த்து விட்டான். கடிகாசலத்துக் கடிகையையும், மகேந்திரவாடியிலுள்ள பல்லவப் படைகள் தங்கியிருக்கும் இடத்தையும், கோவூரிலுள்ள ஆயுதச் சாலையையும், உத்திரமேரூர் தானியக் களஞ்சியத்தையும், அவன் தேசாந்திரியைப்போல் விஜயம் செய்து பார்த்துவிட்டான். காஞ்சிமா நகரத்துக்கு அருகிலுள்ள கூரத்திற்குப் போயிருந்தபோது அவன் கேள்விப்பட்ட செய்தி அவன் உள்ளத்து வெஞ்சினத்தை அதிகரிக்கச் செய்தது. பட்டயம் எழுதுவோர் பரமேச்வரவர்மன் பெற்ற வெற்றியை மிக விரிவாக எழுதிக் கொண்டிருந்தார்கள். நடந்த யுத்தம் வடமொழி சுலோகங்களில் வருணிக்கப் பட்டிருந்தது. சாளுக்கிய மன்னன் செய்த அட்டூழியங்கள் படிப்பவர் மனத்தில் ஆத்திரம் ஏற்படுத்தும் வகையில் வருணிக்கப்பட்டிருந்தன. சாளுக்கிய இளைஞனுக்கு ஏற்பட்ட ஆத்திரத்திற்கு எல்லையில்லை. நாட்டு மக்களுக்குச் சாளுக்கியர்கள் மீது தீராத பகையை ஏற்படுத்தத்தான் பரமேச்வர வர்மன் இவ்வாறு எழுதியிருக்கிறான் என்று தோன்றியது. திடீரென அவனுக்குச் சிரிப்புப் பொங்கியது. சாளுக்கியப் படைகள் கடல் போன்று பொங்கி வந்தபோது பயங்கொள்ளிப் பரமேச்வரவர்மன் கோட்டைக்குள் ஓடிக் கதவைத் தாளிட்டுக்

கொண்டதை வாதாபியில் சிலர் வருணித்ததையும் இங்கே பரமேச்வரன் தான் மிகப் பிரமாதமாக வெற்றியுற்றதாக வருணித்திருப்பதையும் மாறி மாறி நினைக்கும் போது அவனுக்குச் சிரிப்புத்தான் வந்தது. காஞ்சிச் சூழ்நிலை அவனுக்கு நன்றாகப் புரிந்துவிட்டது. போர்ப் பயம் மக்களை விட்டு இன்னும் போகவில்லை. குழப்ப நிலை இன்னும் ஆங்காங்கே நிலவி வருகிறது. தானியக் களஞ்சியங்களில் இருப்பு வேகமாகக் குறைந்து வருகிறது. ஊராட்சி மன்றத்தார் தத்தம் கடமைகளைக் கவனிக்காததால், மக்களிடையே பூசல்கள் நிலவத் தொடங்கின. எல்லாவற்றையும் விடப் பயிர் நிலங்கள் உழுது பயிரிடப்படாது கிடப்பது அவனுடைய உள்ளத்தில் பெரும் கிளர்ச்சியை அளித்தன. பலவாறாகச் சிந்தித்துத் தான் அடுத்துச் செய்ய வேண்டிய வற்றைப் பற்றித் திட்டம் தீட்ட முயன்ற அவன் கண்ணெதிரே அந்த அழகு மகள் காஞ்சனாவின் முகம் வந்து நின்றது.

மீண்டும் அவன் சிரித்தான். 'என்ன உபசாரம், எனன பரிவு; ஒரு வேளை என்னை இளவரசரின் நண்பர் என்று எண்ணி இவ்வாறு சிறப்பாக நடத்துகிறாளா? ஏன் – அவள் நினைப்பது போல இளவரசரின் நண்பராகவே மாறிவிட்டால் என்ன? காஞ்சியின் ஒவ்வொரு மூலையையும் அறிந்து கொள்ளலாம் – பிறகு, பிறகு...'

அவன் கண்களைத் துயில் மெல்ல இழுத்தது. உறக்கத்தின் மடியில் அமிழப் போகும் சமயத்தில் திடீரென அந்த இடத்தில் நறுமணம் பரவியது. மல்லிகை மணமா... மடலவிழ்ந்த தாழம்பூவின் வாசனையா? அரை விழியில் அவன் நோக்கினான். கூடாரத்தின் வாயில் சீலை அசைந்தது. யாரோ வருகிறார்கள்... நிழல் போன்ற அந்த வடிவம் வந்தது – நெருங்கி வந்தது. வந்த உருவத்திடமிருந்துதான் வாசனை வருகிறது.

அவன் எழ முயன்றான். அந்த உருவம் காஞ்சனா என்பது அவனுக்குத் தெரிந்துவிட்டது. வளை ஒலிக்கவில்லை. கால் சலங்கை சப்திக்கவில்லை. நிலவிலே மோகினி போல் அவள் அங்கே வந்தாள். அவன் அருகே திடீரென உட்கார்ந்தாள்.

''யார்... யார்...'' என்று அவன் வாய் குழறுகிறது.

'உஸ்' என்று ஒலி எழுப்புகிறாள் காஞ்சனா. கூடாரத்திற்குள் மெல்லிய ரேகை போல் பாய்ந்து வந்த சாயும் சந்திரனின் ஒளி ரேகையிலே காஞ்சனா தன் அருகே மண்டியிட்டு அமர்ந் திருப்பதையும், தன் முகத்தின் மீது அவளுடைய மெல்லிய மூச்சுப் பரவுவதையும் உணர்ந்த அவன் உடல் வியர்த்தது.

அவனது சில்லிட்ட மேனியில் –

காஞ்சனாதான். அவன் அடையாளம் புரிந்து கொண்டான். அவனுக்கு அந்த இளமங்கை பெரும் புதிராகத் தோன்றினாள். கூடாரத்திற்குள் அலட்சியமாகச் சென்றுவிட்ட காஞ்சனா இப்போது ஏன் இங்கே வருகிறாள்! அவள் தோற்றம் போதையைத் தருகிறது. அவளது பார்வை மயக்கத்தை அளிக்கிறது.

அவன் உடல் சிலிர்த்தது.

''விஜயா...'' என்ற மெல்லிய குரல் அவள் உதடுகளிலிருந்து வெளிப்பட்டது.

அவனால் ஏதும் பேச முடியவில்லை. நிலைக்குத்திட்ட விழிகளைத் தாழ்த்தவும் முடியாமல் நெருங்கி வரும் அவள் முகத்தில் – அந்த விழிகளில் – நாசியில் – துடிக்கும் உதடுகளில் – நெற்றியில் தவழ்ந்த கேசத்தில் – தளதளவென்றிருந்த கன்னத்தில் அவன் முகத்தை இடித்துவிடும் அளவுக்கு வனப்புடன் திகழ்ந்த முகவாயில் - சிந்தையைப் பறிகொடுத்தவாறு மௌன மாயிருந்தான். இதயப் படபடப்பு அவன் செவிகளில் நன்றாக விழுந்தது. காஞ்சனாவின் இதயத்திலும் அத்தகைய வேகம் இருக்கிறது போலும்; அவள் இதய கலசம் தாழ்ந்து எழுகிறது. அவன் இதயப் படபடப்பைத் தணிக்க மெல்ல ஒத்தடம் கொடுக்க முயல்கிறது. குளிர்ந்த அவன் உடலில் திடீரென தணலான வெப்ப உணர்ச்சி.

''விஜயா, பேசமாட்டீரா... தங்களை இங்கே வைக்கோலில் படுக்கவிட்டுப் பஞ்சணையில் நான் உறங்க விரும்பவில்லை. பிடிக்கவும் இல்லை. நீங்கள் இங்கே - நான் அங்கே - என்பதற்காகவா இங்கு வந்தேன்? தங்களைச் சந்தித்தேன். என் இதயத்தைத் தொட்டுப் பாருங்கள். அதன் போராட்ட ஒலியையும் அது இடும் கூக்குரலையும் உணருங்கள்'' என்று அவன் கரத்தைச் சட்டென எடுத்துத் தன் இதயத்தில் அமர்த்தினாள். அந்த அழுத்தத்தை அவனால் தாங்க முடியவில்லை.

அவன் ஒரு கணம் திடுக்கிட்டான். முன்பின் தெரியாத ஓர் அழகிய நங்கை தவறாக எண்ணி உள்ளந் திறந்து வரம்பு மீறி நடந்து கொள்ளும்போது தானும் அதற்கு ஈடு கொடுப்பதா, இசைவதா? சொல்லிவிடுவோம் சொல்லிவிடுவோம், நாம் விஜயனல்லன் என்பதைச் சொல்லி விடுவோம்..

அவன் உதடுகள் அந்த வார்த்தைகளை வெளிப்படுத்த அவள் விடவில்லை. அவனது பரந்த நெற்றியைத் தடவினாள்.

அவனது நீண்ட நாசியின் அழகை உணர்ந்தாள். அவனது இதழ்களையும் அரும்பு மீசையையும் ரசித்தாள். அகண்ட புஜத்தைத் தழுவினாள்.

''ஏன் இப்படி உடலெல்லாம் வியர்த்துக் கொட்டியிருக்கிறது விஜயா'' என்று கூறி அவனது மேலங்கியைக் கழற்றினாள்.

படுத்திருந்த இடத்திலிருந்து எழ அவன் முயன்றான்.

''விஜயா...'' என்று அவள் குழறினாள்.

''ஹூம்...'' என்று அவன் நடுங்கியவாறு தான் சொன்னான். அவன் நடுங்க வேண்டியதில்லை. அவன் பெரும் வீரன். உயிரைப் பணயம் வைத்துப் பல்லவ நாட்டிற்குள் நடமாடுபவன். அவன் அவளுக்கு அஞ்ச வேண்டியதில்லை. ஒரே நொடியில் அவள் பிடியிலிருந்து விடுபட்டு எழுந்து போய்விடலாம். ஆயிரமாயிரம் தாமரை மலர்களின் குவியல் அவன் மீது படிந்திருப்பது போன்ற பளுவை கணத்தில் உதறித் தள்ளிவிடலாம்.

ஆனால், ஆனால், அவனால் முடியவில்லையே. ''விஜயா, என்னைக் கண்டால் உமக்குப் பிடிக்கவில்லையா... அப்படியானால் நான் போய் விடுகிறேன்... ஏமாற்றமும் சோகமும் கொந்தளிக்கும் உள்ளத்துடன் காஞ்சியில் என் மாளிகை மாடத்தில் காலமெல்லாம் அமர்ந்திருப்பேன்...'' என்று கூறி அவள் மெல்ல எழுந்தாள்.

அவனுக்குக் கிடைத்த நல்ல வாய்ப்புத்தானே. ஆனால் அவனையும் மீறிய ஒரு சக்தி சட்டென அவள் கரங்களைத் தாவிப் பிடிக்க முயன்றது. உள்ளே ஓர் உணர்வு சொல்லிக் கொண்டே இருக்கிறது. ''நீ வந்தது எதற்கு? அழகியின் பருவத்தை ரசிக்கவா, ருசிக்கவா? அல்லது சாளுக்கிய நாட்டின் வெற்றிக்குப் பாடுபடவா!'' ஆனால் அவன் அங்கங்களோ உள்ளுணர்வை மதித்ததாகத் தெரியவில்லை. தான்தோன்றியாக இயங்கிக் கொண்டிருக்கிறது. பாசாங்குக் கோபத்துடன் நடந்து செல்லும் காஞ்சனாவின் கரங்களைத் தாவிப் பற்றி இழுத்தான். அவள் சரிந்தாள். வைக்கோல் சுமை அவர்களிருவரையும் தாங்கியது.

காஞ்சனா கலகலவென நகைத்தாள். அவனும் சிரித்தான். ''எங்கோ ஓரிடத்தில் கட்டாந்தரையில் வைக்கோல் மீது நான் தங்களைச் சந்திக்க வேண்டியிருக்கிறது. காஞ்சிக்கு வந்து என் மாளிகையின் பஞ்சணையில் இருந்தால் அங்கிருந்து எழுந்திருக்கவே மாட்டீர்கள்...'' என்றாள். 'நானும் அப்படித்தான் - அவள் நினைப்பதுபோல் விஜயனும் அல்லன் தேசாந்திரியும் அல்லன்' என்று சொல்லிவிட வேண்டும் போல் தோன்றியது.

ஆனால் அவள் அவனைப் பேசவிடவில்லை. அவன் மூச்சுத் திணறியது. அவன் கடமை காற்றிலே பறந்தது. காஞ்சனாதான் வென்றாள். வானத்துச் சந்திரனும் வெட்கமுற்று மேகத்திற்குள் மறைந்து மறைந்து போனான். மெல்லிய பூங்காற்று அவர்களைத் தாலாட்டியது. துயில் தாய் அவர்கள் கண்களுக்குப் போர்வை யானாள்.

∴ ∴ ∴

கலகலவெனப் பறவைகள் ஒலி வைகறை வந்து விட்டதற்குக் கட்டியங் கூறியது. அந்த உதய ஒலி காஞ்சனாவின் செவிகளில் புகுந்து அவளைத் தட்டி எழுப்பியது. அந்த இளைஞனின் பரந்த மார்பிலே தலையைப் புதைத்துக் கொண்டுறங்கிய அவள் விழித்துக் கொண்டாள். பரபரப்புடன் எழுந்தாள். நன்றாக அயர்ந்து உறங்கிக் கொண்டிருந்த அந்த இளைஞனின் முகத்தை ஒருமுறை பார்த்துவிட்டுத் தன் கூடாரத்தை நோக்கி நடந்தாள். நடந்து, இரவின் பின் ஜாமத்தில் அங்கு வந்து சேர்ந்த பைரவன், காஞ்சனா அந்த வாலிபனின் கூடாரத்திற்குள் செல்வதையும், கூடாரத்திற்குள் கேட்ட பேச்சின் ஒலியையும், கலகலச் சிரிப்பையும் பின் அவை அடங்கி நிசப்தமாகி விட்டதையும் கவனித்தவாறு எதிரே இருந்த மரத்தடியில் அமர்ந்திருந்தான். காஞ்சனாவின் போக்கு அவன் உள்ளத்தே ஆத்திரத்தை மூட்டியது. பொறாமையை மூட்டியது.

காஞ்சனாவைத் தொடர்ந்து வேகமாகச் சென்றான். ஆத்திரத்துடன் அவளுடன் தர்க்கம் செய்ய எண்ணினான்.

∴ ∴ ∴

திரைக்கடலின் ஆரவாரத்திற்கு எதிரொலிப்பது போல ஜனக் கடல் குதூகலத்துடன் ஒலி எழுப்பியது. தொலை தூரத்தினின்று வந்திருந்தவர்கள் 'ஹோ' வென்று இரைச்சலிடும் அலைகடலின் கரையில் நின்று மனமகிழ்ச்சியுடன் சிரித்துப் பேசிக் கொண்டிருந்தனர். மன அலைக்கு உருவமிருந்தால் அதுவும் கடலலைக்குப் போட்டியிட்டிருக்கும்.

காஞ்சனா கரை ஓரத்தே நின்று கொண்டிருந்தாள். ஒரு குழந்தையின் மனநிலை அவளிடம் இப்போதிருந்தது. அலைகள் அவள் கணுக்காலை நனைத்தன... அவள் குலுங்கக் குலுங்கச் சிரித்தாள். அவளது ஆடையின் கரை நனைந்தது. மற்றொரு அலை வந்தது. அது முழங்கால் வரை நனைத்துவிட்டபோது அவள் கூவெனக் கத்தினாள். பிறகு 'ஹோ ஹோ' என்று சிரித்தாள்.

வெள்ளலை தன் கரத்தை நீட்டி மணல் பரப்பை வந்து அணைத்து மகிழும் காட்சியைக் கண்டு காஞ்சனா தன்

கரங்கொட்டி ஆர்ப்பரித்தாள். பரந்து விரிந்திருந்த நீலக்கடல் அவளுக்கு மிகவும் பிடித்திருந்தது. தொலை தூரத்திலிருந்து எழும்பி எழும்பித் தாழ்ந்து வெண்நிறக் குதிரைகள் விரைந்து வருவது போல் வரும் அலைகள் அவளுக்குப் பெருமகிழ்ச்சியை அளித்தன. அலையோடு அலையாகத் தானும் மாறிக் குதித்து வர வேண்டும் போல் அவளுக்குத் தோன்றியது.

பூரண வட்டமதி உதயமாகும் அதிசயத்தைக் காண மக்கள் குழுமியிருந்தனர். பகல் முழுவதும் காய்ந்த வெய்யிலின் கொடுமையினின்று விடுதலை பெறுவதற்காகச் சிலர் கடலாடவும் செய்தனர். காஞ்சனாவிற்கும் கடலில் குளிக்க ஆசை. அவள் அங்குக் கூடி நின்று தன்னையே வைத்த கண் மாறாது பார்ப்பவர்களைப் பற்றிக் கவலைப்படவில்லை. ஆனால், 'விஜயன்' உடன் வந்தால் நன்றாயிருக்குமே என்று எண்ணினாள்.

விஜயனாகத் தோற்றமளித்துக் கொண்டிருந்த அந்த இளைஞன் கடற்கரையை ஒட்டியிருந்த சிறுபாறை மீது சாய்ந்து கொண்டு காஞ்சனாவையே கவனித்துக் கொண்டிருந்தான். அவனுக்கு அவளது அழகைப் பருகுவதில் சலிப்பே ஏற்பட வில்லை... மதுவுண்ட வண்டினைப் போல் அன்று பகல் முழுமையும் மயங்கிக் கிடந்தான்.

''எங்கோ அவசரமாக யாரையோ பார்க்கப் போவதாகக் கூறினீர்களே!'' என்று காஞ்சனா கண்களில் குறும்புத்தனம் மிளிரக் கேட்டாள். காஞ்சனாவின் மழைக்கால மேகம் போன்ற விழிகளில் ததும்பும் அழகைப் பருகிக் கொண்டே அந்த இளைஞன் மறுமொழி கூற முடியாமல் ''ஆமாம்... மிக மிக அவசரமான வேலை... ஆனால்... ஆனால்...'' என்று கூறினான்.

''ஆனால்... ஆனால்...'' என்று காஞ்சனா அவன் தோள்களைத் தன் கரங்களால் சுற்றி வளைத்தாள்.

''அவசரமான வேலை... உன்னுடன் பேசிக் கொண்டே இருப்பதுதான்...''

அவன் பேச்சு அவளுக்கு இனித்தது. உடல் சிலிர்த்தது. அவள் இறுக்கம் அதிகமாகியது. வெளியே காயும் கடும் வெய்யில் அவர்களுக்குப் பொருட்டாக இல்லை. பகல் முழுவதும் கடலில் நீராடுவோரின் இரைச்சலும் மக்கள் குழுமியுள்ள இடத்தில் பண்டம் விற்க வந்திருக்கும் அங்காடிக்காரர்களின் இரைச்சலும் அவர்கள் காதில் விழவில்லை. மேல் திசையில் மெல்ல மெல்லக் கதிரவன் இறங்க, அவன் கொடுங்கதிர்களை மாமல்லபுரத்துப் பாறைகள் தடுத்து நிறுத்தியவுடன் காஞ்சனாவும் இளவரசனும்

நாகபாசனத்திலிருந்து விடுபட்டது போல் துள்ளி எழுந்தனர். கடற்கரைக்குச் செல்ல வேண்டும் எனும் துடிப்பு அவர்களுக்கு உதித்தது. கடலாடிக் களிக்கத்தானே காஞ்சனா வந்தாள். ஆனால் அதை மறந்துவிட்டாளே...

இல்லை; மறக்கவில்லை. காஞ்சனாவும் இளவரசனும் கடற்கரையை நோக்கிப் புறப்பட்டனர். மணலில் கால் புதையப் புதைய நடந்து செல்வது காஞ்சனாவுக்கு மிகவும் பிடித்திருந்தது.

''உங்களுக்கு நீந்தத் தெரியுமா?'' என்று காஞ்சனா கேட்டாள். இளவரசன் சிரித்தான்.

''நானும் நீந்துவேன். கடலில் நான் இதுவரை நீந்தியதில்லை. நீங்கள் உதவி செய்கிறீர்களா?''

'ஆம்' என்பதற்கு அடையாளமாக இளைஞன் மெல்லச் சிரித்துத் தலையை அசைத்தான்.

தன் பாதங்களைக் கடலலைகள் தழுவவிட்டுக் காஞ்சனா கரையிலே நின்று கொண்டிருந்தாள். அவள் பாதத்தையும் தாண்டி விறுவிறுவென்று மண் நங்கையிடம் பேச ஏதோ வேலை இருப்பது போல் அலைகள் ஓடும். பிறகு சோர்ந்த முகத்துடன் திரும்புவது போல் வடிந்து திரும்பும். அப்படி அலைகள் திரும்பும் போது அவள் காலடியிலுள்ள மண்ணைப் பறிப்பது போன்ற ஒரு குறுகுறுப்பு எழும். நண்டுகள் மளமளவென இங்கும் அங்கும் ஓடும். அலைகள் கொண்டு வந்து ஒதுக்கிய கிளிஞ்சல்களும் கடற்பாசிகளும் ஆபரணங்களைச் சூட்டியது போல் தோன்றும்.

திடீரென அலையொன்று பெரிதாக வந்தது. காஞ்சனாவை முழுக அடித்து விடுவது போல் விரைந்து வந்தது. கரையில் நின்றவர்கள் குதூகலம் நிறைந்த பயத்தால் கூவினார்கள். காஞ்சனாவின் இடுப்பு வரையில் கடல் நீர் சூழ்ந்தது. காஞ்சனா தடுமாறினாள். 'ஹோஹோ' என்று கூவி பாறையின் மீது சாய்ந்து ஏதோ சிந்தித்த வண்ணம் நின்று கொண்டிருந்த இளவரசனை நோக்கிக் கூவினாள்.

''விஜயன்! விஜயன்! ஓடி வாருங்கள்...'' என்ற அவள் குரல் கேட்டு இளைஞன் ஓடி வந்தான்.

அதற்குள் மேற்கு வாயிலில் மறைந்துவிட்டான் கதிரவன். வட்ட முழுமதி மெல்ல எட்டிப் பார்க்கத் தொடங்கியது.

அலைகள் காஞ்சனாவைச் சுமந்தன. உருட்டின. அவள் எழுந்தாள், சாய்ந்தாள், உருண்டாள்.

இளைஞன் விரைந்து ஓடிவந்து கடலில் பாய்ந்தான். காஞ்சனாவை அந்த மங்கிய ஒளியில் பிடித்துவிட்டான். அவளுடைய கரங்களைப் பற்றினான். குழந்தையைப் போல அவளை அணைத்துக்கொண்டு நீந்தினான். அவளும் நீந்தினாள். அலையின் சதியால் ஆடை குலைந்தது. மெல்லிய துகில் உடலோடு உடலாக ஒட்டிக்கொண்டது. ஓவியனின் வரிவடிவச் சித்திரம் போல் அவளது மேனியின் எழில் வடிவம் புலனாகியது.

காஞ்சனாவையும் நாணம் சூழ்ந்து கொண்டது. கரையை அடைந்ததும் இளைஞன் கரங்களைப் பிடித்துக்கொண்டு அருகே பாறை மறைவை நோக்கி ஓடினாள். நழுவிய ஆடையை ஒரு கரத்திலே பிடித்துக்கொண்டு அப்பப்பா... அவளுக்குத்தான் என்ன பலம்...! என்ன வேகம்!

சொட்டச்சொட்ட நின்ற காஞ்சனா தன் இரு கரங்களால், மார்பைத் தழுவி மூடிக்கொண்டு, ''எனக்காக ஓர் உதவி செய்வீர்களா விஜயன்?'' என்று கேட்டாள். கடல் நீர் உப்பு அவள் உதடுகளில் படிந்ததால் முகம் சுளித்தது.

''ஓர் உதவி என்ன, ஓராயிரம் உதவி செய்வேன்!'' என்று முணுமுணுத்துக் கொண்ட இளவரசன் அவள் மேல் படிந்திருந்த ஈர மணலைத் தட்டியவாறு நின்றான்.

''அதோ மணலில் அமர்ந்து பேசிக் கொண்டிருக்கும் எனது பணிப்பெண்களிடம் சென்று எனக்கு வேறு ஆடை கொண்டு கொடுக்குமாறு சொல்லுங்கள். அதை நீங்களே எடுத்து வாருங்கள். அவர்களை வரச் சொல்லாதீர்கள். நமது ஏகாந்த அமைதி கெட்டுவிடும்'' என்றாள்.

அவன் தனக்கு நேர்ந்த விதியை எண்ணி மெல்ல நடக்கத் தொடங்கினான். அவர்கள் இருந்த பாறைக்கருகே ஜன நடமாட்டமில்லை.

''விஜயன்'' என்று மீண்டும் குரல் கொடுத்தாள் காஞ்சனா. அவன் திரும்பி வந்தான். ''நீங்களும் வேறு ஆடை அணிந்து வாருங்கள். இப்படியே ஈரத்துடன் இருக்கலாமா?'' என்று குழைந்தாள்.

இந்த இளைஞன் பல்லவ நாட்டிற்கு வந்த நோக்கம் என்ன? இங்கு அவன் செய்யும் காரியம் என்ன? அழகிய மங்கைக்கு ஆடை சுமந்துவர வந்தானா? அவள் அங்கங்களை வர்ணித்து அதே மயக்கத்தில் அமிழ்ந்திருக்க வந்தானா? இலட்சியமெங்கே? காஞ்சனாவிடம் அப்படி அவன் மயங்கியிருக்க என்ன மாயம் செய்துவிட்டாள்? விஜயன் என்று அவனை நொடியும் பிரியாமல்.

அவனிடம் இன்பந் துய்த்துக்கொண்டு, தன் குணத்தையே மாற்றிக்கொண்டு சல்லாபிக்கும் அவளும் ஓர் இலட்சியத்தை நிறைவேற்றவே அவ்வாறு செய்தாள். விஜயன் பல்லவ இளவரசரின் நண்பன். அவனை மயக்கித் தன்னுடையவனாக ஆக்கிக் கொண்டால் அவள் எண்ணம் நிறைவேறிவிடும். அவள் உள்ளத்தில் நெடுங்காலமாக இருந்துவரும் எண்ணம் நிறைவேறி விடும். அவனைக் கொண்டு தன் செயலை முடித்துக்கொள்ள வேண்டும் என்று முதலில் எண்ணினாள்; ஆனால் அவனை நேரிலே கண்ட பிறகு தன்னையே அவனிடம் ஒப்படைத்துக் கொண்டு எல்லாச் செயல்களையுமே நிறைவேற்றிக் கொள்ள முடிவு செய்துவிட்டாள்.

முழுமதியின் ஒளி அந்த இளைஞனின் முதுகின் மீது படிந்து கொண்டிருந்தது. ஆகா! திரண்ட தோள்கள் அதற்கேற்ற சுந்தர வடிவத்துடன் அழகிய முதுகு, சதைப் பிடிப்பும் திரட்சியும் வீரரின் இலட்சணத்தை வகுத்தன. காஞ்சனா அவன் செல்வதைப் பார்த்துக்கொண்டே பெருமூச்சு விட்டாள்.

ஃ ஃ ஃ

அவன் அங்கிருந்து சென்ற மறுகணமே பைரவன் அப்பாறை மறைவிற்கு வந்து 'காஞ்சனா' என்று மெல்ல அழைத்தான். அன்று முழுவதும் அவன் காஞ்சனாவைச் சந்திக்கத் துடித்துக் கொண்டிருந்தான். சித்ரா பௌர்ணமி அன்று மாமல்லபுரத்தில் கடலாடிக் குளிக்க, தங்க ஏற்பாடுகளை அவன்தான் செய்தான். சோலையொன்றின் நடுவே தக்க வசதிகளுடன் கூடிய கூடாரத்தை அமைத்துக் கொடுத்தான். உணவுக்கும், உல்லாசப் பொழுது போக்குக்கும் வழி செய்தான். காஞ்சனாவுடன் கூடாரத்தில் நேரம் போவது தெரியாமல் பேசிக் கொண்டிருக்க வேண்டும் என்று எண்ணினான். தன் தாபத்தையும் தீர்த்துக் கொள்ளலாம் என்றும் அவன் மனக்கோட்டை கட்டியிருந்தான்.

காஞ்சனாதான் அவன் எதிர்பாராததைச் செய்துவிட்டாளே! அவனை நடந்து வருமாறு கூறினாள். அவன் மாமல்லபுரம் வந்து சேரும் முன்பே, 'விஜயா, விஜயா' என்று அவள் அழைத்து இளைஞனுடைய கூடாரத்திற்குள் நுழைந்து -

அதை நினைக்கும்போது பைரவன் உள்ளம் துடித்தது. அவளுடைய மனத்துக்குப் பிடித்தவனை அவள் விரும்ப உரிமையுண்டு. ஆனால் யாரையோ 'விஜயன்' என்று எண்ணி ராஜ உபசாரம் செய்கிறாளே! காஞ்சனாவைச் சந்தித்துக் கூறிவிட வேண்டும், அவள் நினைப்பது போல் அந்த வாலிபன் விஜயன் அல்லன் என்று.

அதற்குத் தகுந்த தருணம் அப்போதுதான் வாய்த்தது. மிகவும் நல்ல தருணம். காஞ்சனாவை இதைவிட மனதைக் கிள்ளும் நிலையிலெல்லாம் பைரவன் கண்டிருக்கிறான். ஆனால் இன்றைய நிலையே வேறு -

'காஞ்சனா, காஞ்சனா' என்று பைரவன் அழைத்தான்.

''யாரது?'' - காஞ்சனா சீறினாள். ஆனால் மறு குரலிலேயே பைரவன் என்பதைப் புரிந்துகொண்டு விட்டாள். பைரவன் பாறை மறைவிற்கு மெல்ல வந்தான்.

நிலவொளி, பாறையின் நடுவே சந்தன மேனியாள் காஞ்சனா கையது கொண்டு மேலது தழுவி நிற்கும் அந்தக் காட்சி பைரவனைத் தடுமாற வைத்தது. 'காஞ்சனா' என்று மீண்டும் குரல் கொடுத்தான்.

பைரவன் அங்கு வந்தது காஞ்சனாவுக்குப் பிடிக்கவில்லை.

''பைரவா, என்ன துணிச்சல் உனக்கு! இந்த மறைவிடத்திற்கு ஏன் வந்தாய்! போ... போய்விடு'' என்று சீறினாள்.

அவள் குணம் பைரவனுக்குத் தெரிந்துதானிருந்தது. கோபம் வரும். தணிந்துவிடும்; அந்த எண்ணத்தில் அவன், ''காஞ்சனா இன்று உன்னைப் பார்ப்பதற்கு நான் எவ்வளவு ஆவலாக இருந்தேன் தெரியுமா? அவசரமும் பரபரப்பும் எவ்வளவு வேதனையை, எனக்குக் கொடுத்தன தெரியுமா?'' என்று அவன் கூறுவதற்குள், ''பைரவா, சொன்னால் கேட்க மாட்டாய்? ஈர உடையுடன் நான் இப்படி நிற்கும்போது இங்கே வர உனக்கு வெட்கமாயில்லை! போ, போய்விடு'' என்று கர்ஜித்தாள்.

'வெட்கமாமே வெட்கம்! எனக்கு வெட்கமாயில்லையா என்று கேட்கிறாள். நான் இங்கிருந்து போய் விட வேண்டுமாம். என்ன நியாயமோ? ஒவ்வொரு நொடியும் இவளுடைய நலனுக்காகப் பாடுபட்டு வரும் என்னை அவமரியாதை செய்யும் வார்த்தைகளைக் கூறுகிறாள். தவறாக இவள் விஜயன் என வேறு யாரையோ எண்ணிக் குலாவுகிறாளே! அதனால் ஏற்படப் போகும் ஆபத்திலிருந்து தப்ப வைக்க வேண்டாமா! அது என் கடமை... என்ன வேண்டுமானாலும் அவள் சொல்லட்டும் என்று உறுதியுடன் பைரவன், ''காஞ்சனா என்னை என்ன வேண்டுமானாலும் நீ கோபித்துக்கொள். அவமரியாதை செய்... உன் நன்மையை எண்ணியே எதுவும் செய்துவரும் நான்...'' என்று அவன் சொல்லும்போது காஞ்சனா இடைமறித்து, ''இப்போது இங்கே இந்த நிலையில் என்னைக் காணவந்ததும் என் நன்மைக்குத் தானா?'' என்று சீறவும், ''ஆமாம், காஞ்சனா!

உன் நன்மைக்குத்தான்! உன்னை எச்சரிப்பதற்காகத்தான்...'' என்றான்.

''என்னை எதற்காக எச்சரிக்க வந்தாய்?''

''நீ ஒரு தவறு செய்துவிட்டாய், காஞ்சனா!''

''ஆமாம், உன்னுடன் நான் நாடகத்தில் நடிக்கிறேனே அதைத்தானே கூறுகிறாய்...''

''குத்தலாக என்ன வேண்டுமானாலும் சொல்லு. ஆனால் நீ அவசரப்பட்டு விட்டாய்... விஜயன் என்று எண்ணித் தவறாக வேறு இளைஞனுடன் பழகுகிறாய்...''

இதைக் கேட்டவுடன் காஞ்சனா திடுக்கிடுவாள் என்று எண்ணினான் பைரவன். ஆனால், காஞ்சனாவோ கடகடவென நகைத்து ''இன்று வாரிணியை அதிகம் குடித்துவிட்டாயோ அல்லது ஏதாவது பேசிக் கொண்டே என் எதிரே நின்று உன் நஞ்சு மனத்துக்கு விருந்து அளிக்க நினைத்துவிட்டாயோ! போ, பைரவா, போ. என் முன் நிற்காதே. நான் தக்கவருடன் பழகுகிறேன். அவர் சுந்தர புருடர். பராக்கிரமர். திண் தோளர். கொதித்த என் உள்ளத்தைக் குளிரச் செய்தவர். அவரை விஜயன் என்றே அழைக்கிறேன். அவர் இனிமையாகப் பேசுகிறார். தனது முக்கிய பணியை விட்டு என்னுடனே தங்கிவிட்டார். உனக்குப் பொறாமை குணம் பைரவா, உன் சாம்பல் உடலையும் மண்டையோட்டையும் சடை முடியையும் காவிப் பற்களையும் வைத்துக் கொண்டு இவ்வளவு நாளாக என்னிடம் ஏகபோகமாகப் பழகி வந்த உனக்குப் போட்டியாக அழகன் ஒருவன் வந்துவிட்டான் என்பதால் உனக்குப் பொறாமை. ஏதேதோ பேசி என் மனத்தை மாற்றப் பார்க்கிறாய். இன்னமுமா நிற்கிறாய்? இங்கிருந்து போய் விடு. அவர் வந்தால் தவறாக நினைக்கப் போகிறார்... போ... போ...''

பைரவன் திடுக்கிட்டுவிட்டான். காஞ்சனா கணத்தில் இப்படி மாறிவிடுவாள் என்று அவன் நினைக்கவில்லை. அவள் சொல்வது போல் 'அவள் அழகிய வாலிபனுடன் பழகுவது கண்டு எனக்குப் பொறாமையா?' அவன் மெல்லச் சிரித்துக் கொண்டான். பிறகு தலைகுனிந்தவாறு அங்கிருந்து மெல்ல அலைமோதும் இடம் நோக்கி நடந்தான் கால்கள் துவள.

கையில் புதுச் சேலையுடன் பாறை அருகே அந்த இளைஞன் காத்திருந்தான். பைரவன் கூறியவை அவன் செவிகளிலும் வீழ்ந்தன. பைரவன் போனவுடன் அவன் காஞ்சனாவிடம் சேலையைக் கொடுக்க பாறை மறைவிற்குச் சென்றான். ஈர உடைகளைக் களைந்து அவனும் வேற்றுடை அணிந்திருந்தான்.

காஞ்சனாவிடம் சேலையைக் கொடுத்துவிட்டு அவள் அணிவதற்காகத் தான் வெளியே செல்ல எத்தனித்தான்.

''எங்கே போகிறீர்கள்...'' காஞ்சனா கிசுகிசுத்தாள்.

''நானும் அந்தக் காபாலிகன் மாதிரியில்லை'' என்று நகைத்தவாறு வெளியே வந்தான் இளைஞன்.

பைரவனும் தானும் பேசிக் கொண்டதை விஜயன் கேட்டு விட்டானோ? தவறாக நினைத்துக் கொள்வானோ? பரபரவென்று ஆடை உடுத்திக் கொண்டு, ''விஜயா, விஜயா! அந்தக் கோமாளி கூறியதைக் கேட்டுக் கொண்டிருந்தாயா? அவன் பொறாமை பிடித்தவன். அவன் வார்த்தையை நான் மதிப்பது கிடையாது... கோபமா? விஜயா... விஜயா... விஜயா...'' என்று அவன் கரங்களைப் பற்றி அவனைச் சுற்றினாள்.

அப்போது சற்றுத் தொலைவில் மக்கள் ஆரவாரம் எழுந்தது. இருவரும் திரும்பிப் பார்த்தனர். யானை ஒன்று கடற்கரை ஓரமாக வந்து கொண்டிருந்தது. நிலவொளியில் யானை வருவது சிறு குன்று அசைந்து வருவது போன்றே இருந்தது. அதன் முகப்படாகம் நிலவொளியில் பிரகாசித்தது. வளைந்த அதன் தந்தங்கள் காஞ்சனாவின் கரங்கள் போல் பளபளத்தன. மாலைகள் இட்டு அதை அலங்கரித்திருந்தனர்.

வியப்புடன் காஞ்சனா யானை வருவதைப் பார்த்துக் கொண்டிருப்பதைக் கண்ட இளைஞன், ''யானை அருகே போய்ப் பார்க்கலாமா?'' என்றான்.

''நானே நினைத்தேன். நீங்கள் கேட்டு விட்டீர்கள். என்ன ஒற்றுமை... நம் இருவர் உள்ளமும் ஒன்றுதான். அதை மாற்ற விரும்புகிறான் பைரவன். அது போகட்டும். நாம் யானை அருகே செல்வோம். எனக்கு யானை மீது ஏற ஆசை; உங்களுக்கு எப்படியோ?'' என்றாள்.

காஞ்சனா கேட்டதற்கு இளைஞன் நகைத்தான். அவன் ஏறாத யானையா? அவன் அடக்காத மத யானையா இங்கு. ஏனோ அடங்கி நிற்கிறான்.

''யானை மீது தானே... யானை மீது என்றுமே அமர்ந்து செல்லும் அதிர்ஷ்டம் உனக்கு வர வேண்டும். அதற்கு முதல் படியாக இன்று உன்னை ஏற்றுகிறேன்...''

''யானை மீது உட்கார்ந்தால் பயமாயிருக்குமா? ஹூம்... பயப்பட்டால் முடியுமா? காஞ்சி வீதிகளில் அரசகுமாரிகள் பட்டத்து யானை மீது அமர்ந்து வருகிறார்களே... நானும்

அதைப்போல அமர்வேன்... ஆமாம்... என்ன சொன்னீர்கள். என்றுமே நான் யானை மீது அமர்ந்து செல்ல வேண்டுமோ?''

''ஆமாம்... உனக்கிருக்கும் அழகுக்கு நீ அரசகுமாரியாகி யானை மீது ஊர்வலம் வரலாமே.. ''

''என் ஆசையும் அதுதான். இதயக் கனலும் அது தான். இந்தப் பல்லவ நாட்டு ராணியாக வேண்டும் என்று நான் எவ்வளவோ காலமாகக் கனவு காண்கிறேன்...''

''பல்லவ நாட்டு ராணியாகவா? அடேயப்பா, எப்பேர்ப் பட்ட கனவு! அதற்குப் பல்லவ இளவரசரையல்லவா மணக்க வேண்டும்...''

''வேண்டாம் வேண்டாம் பல்லவ இளவரசரை மணக்காமலே ராணியாக முடியும். அதை நிறைவேற்றத் தங்களால் முடியும்...''

''என்னாலா... எனக்கு ஏது கண்ணே அவ்வளவு திறமை. நான் ஒரு போலி - என்னை நம்புகிறாயா?''

''ஓகோ! அந்தப் பைரவன் சொன்னதைக் கொண்டு சொல்கிறீர்களா? தங்களால் முடியும். எப்படி முடியும் ஏன் முடியும் என்பதை யெல்லாம் நான் நாளைக்குச் சொல்கிறேன். அன்று மாளிகையின் மேல் மாடத்தில் நிலா முற்றத்தில் அமர்ந்திருப்போம். என் மடியில் நீங்கள் குழந்தையைப் போல் படுத்திருப்பீர்கள். நான் கதை சொல்வது போல் என் கதையைச் சொல்வேன். நான் பிறந்த கதை சொல்வேன்; வளர்ந்த கதை சொல்வேன். என் இலட்சியத்தைச் சொல்வேன். என் மனத்தின் அடித்தளத்தில் நெடுநாளாகப் புதைந்து இருந்து இன்று மெல்லத் துளிர்விட்டு வெளியே வரத் துடிக்கும் இலட்சியத்தைச் சொல்வேன். அதை நிறைவேற்றத் தங்களிடம் உள்ள திறமையைச் சொல்வேன். இப்போது என்னை யானையின் மீது ஏற்றப் போகிறீர்களா? குழந்தையைப் போல் என்னைத் தாங்கி அதன் மீது ஏற்றப் போகிறீர்களா? வாருங்கள் வாருங்கள் யானை போய் விடப் போகிறது'' என்று அவன் கரத்தைப் பற்றி மணலில் நடந்தாள்.

பல்லவ நாட்டுப் பட்டத்து யானை பெற்றெடுத்த களிறு அங்கே அசைந்தாடி வந்து கொண்டிருந்தது. துதிக்கையை இப்படியும் அப்படியும் அசைத்தவாறு வந்து கொண்டிருந்தது. யானைப் பாகன் அருகே வந்து கொண்டிருந்தான். அலை தவழ்ந்து தவழ்ந்து பளிங்குத் தரை போலிருந்த கரையோரமாகக் களிறு களிப்புடன் வந்து கொண்டிருந்தது.

வட்டமதியைப் பார்த்து அது பிளிறியது. குதூகலிக்கும் மக்களைப் பார்த்து அது பிளிறியது. ஆங்காங்கே மக்கள்

கொடுக்கும் பழத்தை உண்டு துதிக்கையை அசைத்து ஆர்ப்பரித்தது.

காஞ்சனா ஒயிலாக நின்று கொண்டிருந்தாள். யானைப் பாகன் காஞ்சனாவைப் பார்த்திருக்கிறான். இங்கே கடற்கரைக்கு அவள் வருவாளென்று அவன் எதிர் பார்க்கவில்லை. காஞ்சி மாநகரத்து எழில் ராணியைக் கடற்கரையிலே சுல்பமாக அவனால் பார்க்க முடிந்தது என்றால் பெரிய விஷயந்தானே. ஒருமுறை கண்களைக் கசக்கிக் கொண்டு பார்த்தான். அதனால் காஞ்சனா மாறி வேறொரு பெண்ணாகிவிடுவாளா என்ன?

காஞ்சனாவின் அருகே இருந்த வாலிபன் பிராகிருத மொழியில் ஏதோ கூறினான். யானையை நோக்கி, யானை அவர்களை நோக்கித் திரும்பியது. துதிக்கையை ஒருமுறை தூக்கி வணங்குவது போல் பாவம் காட்டி நின்றது. பிறகு மெல்லக் குனிந்து படுத்தது. யானைப் பாகன் வியப்படைந்தான். மிகவும் பழக்கப்பட்டவன் போல் ஒருவன் யானைக்குத் தெரிந்த மொழியில் பேசவும் அது கட்டுப்பட்டு இயங்கவும் கண்டு ஆச்சர்யமடைந்தான்.

யானை மீது காஞ்சனா ஏறி அமர ஆசைப்படுகிறாள் என்றறிந்த யானைப் பாகன் பரபரப்படைந்தான்.

காஞ்சனா யானை மீது ஏறி அமர்ந்தாள். மேலே நீலவானம். அதில் வட்டமதி. எதிரே மதியொளியால் வெள்ளி தகடெனத் தெரியும் கடல், வெண் மணல் பரப்பு. வீடு திரும்பும் மக்கள், விளக்குகளை வைத்துக் கொண்டு தின்பண்டங்களை விலை கூறும் அங்காடிக்காரர்கள். யானை கரையோரமாக நடை போட்டது. யானையின் இருபுறமும் வாலிபனும் யானைப் பாகனுமாகச் சென்றனர். யானையின் நடை சற்று வேகமாகியது. இன்னும் வேகமாகியது. ஏன்ன? யானைக்கு என்ன திடீரென? ஏன் அது ஓடுகிறது. துதிக்கையைத் தூக்கிக் கொண்டு ஓடுகிறதே!

யானை மீதிருந்த காஞ்சனா கீச்கீச் சென்று கத்தினாள், நடுங்கினாள். அலறினாள்.

''காஞ்சனா பயப்படாதே. ஆடாமல் அசையாமல் இரு'' என்று யானையின் பின்னே ஓடி வந்த வாலிபன் கத்தினான்.

''விஜயா... விஜயா... என்னைக் காப்பாற்றுங்களேன்'' என்று காஞ்சனா கூவினாள்.

''ஒன்றும் ஆகிவிடாது காஞ்சனா. இதோ நான் உன் அருகிலேயே ஓடி வருகிறேன்...'' என்று வாலிபன் அபயக்குரல் கொடுத்தான்.

''பயமாயிருக்கிறது விஜயா - விழுந்து விடுவேன் போலிருக்கிறதே! குதித்து விடட்டுமா?'' என்று காஞ்சனா சோகக்குரல் எழுப்பினாள். யானை இப்போது முன்னைவிட வேகமாக ஓடியது.

அந்த இளைஞன் யானையின் வாலைப் பிடித்துக் கொண்டு ஒரே கணத்தில் தாவி யானையின் மீது ஏறினான். காஞ்சனாவின் பின்புறத்தில் அமர்ந்து அவளைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டு பிராகிருத மொழியில் யானையிடம் உரத்த குரலில் ஏதோ கூறினான்.

யானை மெல்ல மெல்ல தன் ஓட்டத்தைக் குறைத்தது. பிறகு நின்றது. கடைசியில் பணிந்து படுத்தது. வாலிபன் காஞ்சனாவைப் பத்திரமாகக் கீழே இறக்கினான். காஞ்சனாவின் இதய படபடப்பு நீங்கியபாடில்லை. வெகுநேரம் அவள் அந்த வீர வாலிபனின் மார்பில் முகத்தைப் புதைத்துக் கொண்டிருந்தாள்.

வட்ட முழுமதி காயும் அந்த பூர்ணிமை நிலா நாள் காஞ்சனாவுக்குக் குதூகலத்தை அளிக்கவில்லை. தொடர்ந்தாற் போல் அன்று ஏற்பட்ட இரு விபத்துகளும் அவள் உள்ளத்தில் சஞ்சலத்தை ஏற்படுத்தின. அன்றே அங்கிருந்து புறப்பட முடிவு செய்தாள்.

''விஜயா, நாம் இப்பொழுதே காஞ்சிக்குப் புறப்படுகிறோம்.''

''காஞ்சிக்கா?''

''ஆம்; எனக்கு இங்கு இருக்கவே பிடிக்கவில்லை. எனக்கேற்பட்ட இரு பெரும் விபத்துகளிலிருந்து என்னை நீங்கள் காப்பாற்றினீர்கள். உங்களுக்கு எந்த விதத்தில் நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுவது என்று தெரியவில்லை...''

''நன்றியா? நான் என் கடமையைச் செய்தேன். கடமைக்கு நன்றி தெரிவிப்பாருண்டோ?''

''நான் தெரிவிக்கத்தான் தெரிவிப்பேன். அந்த நன்றியை மகத்தானதாகத் தெரிவிப்பேன். மறக்க முடியாததாகத் தெரிவிப்பேன். அழியாத ஒன்றாக நின்று நிலவுமாறு செய்வேன் விஜயா! இப்போதே நாம் காஞ்சிக்குப் புறப்படுகிறோம். நாளைப் பொழுது புலருவதற்குள் காஞ்சியை அடைந்துவிடுவோம். நாளை முழுவதும் நான் நன்றாகத் தூங்கப் போகிறேன், தூக்கத்திலே இன்பக் கனவுகள் காணப்போகிறேன். நீங்கள் வேறு ஏதோ அவசர வேலையைக் கவனிக்க வேண்டும் என்று கூறினீர்களே. அதைக் கவனித்துவிட்டு நாளைய தினம் வந்து சேர்ந்துவிடுங்கள். வருவீர்களா - வராமல் எங்காவது போய்

விடுவீர்களா?'' என்று காஞ்சனா கண்களில் காதலும் ஏக்கமும் பொங்கக் கேட்டாள்.

''எனக்கு உன்னுடன் இருப்பதைத் தவிர வேறு வேலையே இல்லை. நானும் காஞ்சிக்கு வருகிறேன். காஞ்சி நகரைச் சுற்றிப் பார்ப்பதற்கே நாளைப் பொழுது சரியாகிவிடும் அல்லவா?'' என்றான் அந்த வீர வாலிபன்.

சந்திரன் சிறிது சிறிதாக வானில் ஏறி வந்தான். அவனுடைய சௌந்தர்யக் கதிர்கள் அற்புத பூமியாகிய மாமல்லபுரத்தில் ரசவாதத் தன்மை புரிந்து கொண்டிருப்பதைக் காஞ்சனாவாலும் வீர வாலிபனாலும் கண்டு களிக்கக் கொடுத்து வைத்திருக்க வில்லை. காஞ்சனா கூண்டு வண்டிக்குள் ஏறிக் கொண்டாள். வாலிபனையும் உடன் அமர்ந்து வருமாறு வற்புறுத்தினாள். ஆனால் அவன் ஏனோ சம்மதிக்கவில்லை. வரும்போது ஏறி வந்த அத்திரி அவனுக்காகக் காத்திருந்தது.

அத்திரியின் மீது ஏறி வண்டியைப் பின் தொடர்ந்தான் வாலிபன். சாலை ஓரிடத்தில் சிறு பாறை யொன்றின் அருகே வளைந்து சென்றது. அவனது கண்களினின்று வண்டி மறைந்தது. அந்தச் சமயத்தில் பாறையின் மறைவில் அவனுக்காகக் காத்திருந்தவன் போல் பாசுபதன் வடிவில் இருந்த கீர்த்திவர்மன் அத்திரியின் முன் திடீரென்று தன் இரு கைகளையும் விரித்துத் தடுத்து நிறுத்தினான்.

பாசுபதனைக் கண்ட அந்த வீரவாலிபன் ஒரு கணம் திடுக்கிட்டான். மறுகணம் அத்திரியினின்று கீழே குதித்து ''தம்பீ'' என்று கூவியவாறு அணைத்துக் கொண்டான்.

''அண்ணா, தாங்கள் வந்த நோக்கம் என்ன? இங்கே மாமல்லபுரத்தில் ஒரு பெண்ணுடன் கூடிக் கூலாவியவாறு இருப்ப தென்ன? நம் செயலை விரைவில் முடிக்க வேண்டுமானால் தாங்கள் அந்த நாடகக் கணிகையுடன் பழகுவதை நிறுத்த வேண்டும்'' என்றான்.

கீர்த்திவர்மன் சொல்வதும் சரியாகப்பட்டது; ஆனால் காஞ்சனாவின் காந்த சக்தி அவனை நிலைகுலையச் செய்தது. சாளுக்கிய நாட்டு இளவரசனான அவன் ஒரு கணம் ஏது செய்வதென்று அறியாது திண்டாடினான். காஞ்சனா அமர்ந்திருந்த வண்டி சாலையில் அசைவற்றுச் சென்று கொண்டிருந்தது.

●

# 10. குடை சாய்ந்தது

சிற்பியையும் அவர் கைவண்ணம் பட்ட அந்தச் சிற்பத்தையும் ஏற்றிக்கொண்டு வண்டியைக் குதூகலத்துடன் ஓட்டினான் கூனன் குட்டிச்சித்தன். காலை இளங்காற்று அவனுக்குப் புது உற்சாகத்தை அளித்தது. சிற்பியார் பல துதிப்பாடல்களை முணுமுணுத்தவாறு கண்களை மூடிக் கொண்டு மனத்தை ஒருமுகப்படுத்த முயன்று கொண்டிருந்தார். வண்டி காட்டுப் பாதையினின்று திரும்பி காஞ்சி செல்லும் ராஜ பாட்டையை அடைந்துவிட்டது.

குட்டிச் சித்தனுக்கு ஏற்பட்ட உள்ளக்களிப்பில் மாட்டை விரட்டினான். காளைகளின் வாலை முறுக்கி 'டிரிக் டிரிக்' என்று ஒலி எழுப்பினான்.

''காளைகளா – காளைகளா
காஞ்சி போகும் காளைகளா!
நாளை(க்கு) நமக்கெல்லாம்
நல்ல சோறு கிடைக்குமடா!''

என்று உற்சாக மிகுதியால் தனக்குத் தோன்றியபடி பாடிக் கொண்டு கையிலுள்ள சாட்டையை இடது வலதாக வீசலானான்.

''குட்டிச் சித்தா மெதுவாகவே ஓட்டு; என்ன அவசரம்? மாட்டைத் தொந்தரவு செய்யாதே'' என்றார் சிற்பி. வண்டி கடகட சப்தத்துடன், ஓடி ஓடித் தேய்ந்த தடத்தில் சென்று கொண்டிருந்தது.

உருவத்தில்தான் குட்டிச் சித்தன் கூனன். ஆனால் உள்ளமோ நிமிர்ந்த தன்மையுடையது. குட்டிச் சித்தன் முகம் அழகற்றது; ஆனால் அவன் மனமோ தெளிவானது. கபடமற்றது. மற்றவருக்கு உதவும் தன்மை கொண்டது. சுளீர் என்று வெயில் அடிக்கும் முன் திருக்கழுக்குன்றம் சென்று விட வேண்டும் என்ற துடிப்பு அவனிடமிருந்தது.

''வெயில் உச்சிக்கு ஏறு முன்பு நாவுக்கரசர் மடத்திற்குப் போய்விட வேண்டும் சாமி. இல்லாவிடில் வெப்பக் கொடுமையை தாங்க மாட்டீர்கள்'' என்று குட்டிச் சித்தன் கூறினான்.

''எனக்கு மட்டும் தான் வெயிலா? உனக்கில்லையா, குட்டிச் சித்தா?'' என்றார் சிற்பி.

''இந்தக் கட்டை வெயிலிலும் மழையிலும் ஊடாடி மரத்துவிட்டது'' என்றான் குட்டிச் சித்தன்.

''குட்டிச் சித்தா... குன்றத்தில் நீ என்ன செய்து கொண்டிருக்கிறாய்? இங்கேயே வந்து விடுவதுதானே'' என்று சிற்பி அவன் சுக துக்கங்களை விசாரிக்கத் தொடங்கினார். அப்படிப் பரிவுடன் அவன் நலனைக் கேட்பவர் யார் இருக்கிறார்கள்? குட்டிச் சித்தன் உள்ளம் இளகிவிட்டது. அவன் கண்களில் நீர் தளும்பியது. வார்த்தைகள் தெளிவாக வரவில்லை. ''ஐயா... ஐயா... இந்த குரூபியை இங்குள்ளவர்கள் வெறுக்கிறார்கள். அதனால்தான் நான் நாட்டுக்கு ஒதுக்குப்புறமாக வாழ்கிறேன்'' என்று தட்டுத்தடுமாறிக் கூறினான்.

சிற்பி மேலும் அவன் சொந்த விஷயங்களைக் கேட்க விரும்பவில்லை. ஆனால் குட்டிச் சித்தன் மௌனமாக இல்லை.

''நீங்கள் ஏன் இப்படி நடுக்காட்டில் இருக்கிறீர்கள்? காஞ்சி நகரத்திலேயே சௌகரியமாக இருக்கலாமே'' என்றான். சிற்பி திகைத்தார். குட்டிச் சித்தன் பெரிய ஆள்; தன்னை ஒரு கேள்வியில் மடக்கிவிட்டானே, என்ற வியப்புடன் ''காஞ்சியிலே நான் விரும்பும் அமைதி ஏதடா?'' என்றார்.

''அது உண்மைதான். எப்போதும் 'ஜேஜே' என்ற கூட்டம்; மனம் போனபடி பேசும் ஜனங்கள். கூச்சல் கும்மாளம்...''

''அது மட்டுமில்லை சித்தா... என் குருநாதர் வாழ்ந்த இடத்தைவிட்டு வர எனக்கு மனமில்லை...''

''தங்கள் குருநாதரா?''

''ஆம்; மாமல்லபுரத்தைச் சொப்பன லோகமாக்கக் கனவு கண்ட தேவ சிற்பி ஆயனரைப் பற்றிக் கேள்விப்பட்ட தில்லையா?''

''ஆகா... கேள்விப்பட்டிருக்கிறேன் சுவாமி... வெறும் பாறைகளை யெல்லாம் எப்படி எப்படி எல்லாம் மாற்றிவிட்டார். எனக்கு மட்டும் அவற்றைப் பார்த்து ரசிக்கத் தெரிந்திருந்தால் நான் அந்த இடத்தை விட்டே வரமாட்டேன். ஆனால்... பாவம்... பாவம் அவற்றை அவர் முடிக்காமல் போய்விட்டாரே!''

''அதற்காகத்தானே சித்தா நான் இப்போது உயிருடன் வாழ்கிறேன். அவர் கனவில் நூற்றில் ஒரு பங்கையாவது நிறைவேற்ற வேண்டும் என்பதுதான் என் இலட்சியம், கனவு எல்லாம். நான் மனத்திலே அப்படி கனவு கண்டு என்ன பலன் குட்டிச் சித்தா? மன்னர் ஆதரவு வேண்டுமே. ஆயனருக்கு மகேந்திரர் ஆதரவாயிருந்தார். நரசிம்மவர்மர் விருப்பப்படி எல்லாம் நடந்தார்....''

''நம் மகாராஜா பரமேச்வர வர்மருக்குக் கலையில் கருத்தில்லையா?''

''ஏனில்லை... அவர் உள்ளம் மகத்தானது. ஆனால் சூழ்நிலை அவரைச் சோதனைச் செய்கிறது. போரும் பூசலும் அவர் கலை உணர்ச்சியை மழுங்கச் செய்கின்றன. சாளுக்கியர்கள் போரிலே புறமுதுகிட்டோடினார்களே யொழிய பல்லவர்களின் கலை முன்னேற்றத்தைத் தடுப்பதில் வெற்றி கண்டுவிட்டார்கள்.''

''சுவாமி... சாளுக்கியர்கள் பேச்சையே எடுக்காதீர்கள். என் வாழ்நாளில் ஒரு சாளுக்கிய வீரனையாவது கொன்று விட்டுத்தான் உயிரை விடுவேன்'' குட்டிச்சித்தன் முகம் சீற்றத்தால் மேலும் குரூரமாகியது.

''குட்டிச் சித்தா, உனக்கு என்னப்பா சாளுக்கியர்கள் மேல் அவ்வளவு ஆத்திரம்! இந்த உலகத்தில் உன்னை நம்பிய துணை ஏதும் இல்லாத நீ அவர்கள் மேல் ஆத்திரப்பட நியாயமில்லையே'' என்று கூறி அவன் சீற்றத்தை மாற்ற முயன்றார்.

''சுவாமி, அதெல்லாம் பெரிய கதை. சாளுக்கியர்கள் பல்லவ நாட்டிற்கு மட்டும் தானா தீங்கு இழைத்திருக்கிறார்கள்? நாட்டு மக்களுக்குத் தனித்தனியே பற்பல கொடுமைகள் செய்திருக் கிறார்கள். அதனால்தான் என் உள்ளத்தில் ஆத்திரம் பொங்கி எழுந்தது.''

''அப்படியா... விரோதிகளைத் தண்டிக்கும் வேலையை மன்னரிடம் கொடுத்துவிட வேண்டும்...''

''சாளுக்கியர்களைப் பூண்டோடு நசுக்கும் வேலையில் பரமேச்வர வர்மர் ஈடுபட்டு வருகிறார் என்று எனக்குத் தெரியும்... இன்னும் சிறிது நாட்களில் பெரும்படை புறப்படப் போகிறது... நானும் படைகளுடன் செல்வேன்...''

குட்டிச் சித்தன் கூறியது கேட்டு மல்லிநாதர் சிரித்துக் கொண்டார். ''மன்னர் மனத்தில் படையெடுப்பைப் பற்றிய எண்ணம் இருக்கும் வரை அவர் மாமல்லபுரத்துச் சிற்பப் பணியைப் பற்றி எங்கே கவலைப்படப் போகிறார். கூரத்தில் அவர் பாறைகளை அடுக்கி அமைத்த கோயிலில் ஒரு சிற்பம் அமைப்பதற்கே இவ்வளவு சிரமப்பட வேண்டியிருக்கிறது. ஹூம்...'' என்று அலுப்புடன் கூறினார்.

''நீங்கள் செதுக்கியுள்ள இந்தச் சிலையைப் பார்த்தவுடனே பரமேச்வர வர்மர் மனம் மாறிவிடும். இந்தச் சிலையின் அழகு அவர் மனத்தைக் கவர்ந்துவிடும். மன்னரைவிட இளவரசருக்குச் சிற்பம், சித்திரம் என்றால் உயிர்...''

''இளவரசர் இராஜசிம்மன் தீவு தீவாந்திரங்களுக்குச் சென்றவர் திரும்பி வந்துவிட்டாரா?''

''திரும்பி வந்துவிட்டார். தங்கள் குடிலுக்குக் கூட வந்தார்....''

''குடிலுக்கு வந்தாரா? எப்போது வந்தார். எனக்குத் தெரியாதே குட்டிச் சித்தா... அவரை வரவேற்காமல் நான் மௌனமாயிருந்து விட்டேனா! விழியிருந்தும் குருடனாகி விட்டேனா...'' – மல்லிநாதர் வருத்தப்பட்டுக் கொண்டார். குட்டிச் சித்தன் அவரைச் சமாதானப்படுத்த விரும்பி, ''இளவரசர் குதிரை மீதிருந்து கூட இறங்கவில்லை. சதங்கை ஒலி கேட்டார். தங்கள் உளிச்சத்தம் கேட்டார். உடனே போய்விட்டார். அவர் வந்த சுவடே யாருக்கும் தெரியாது. அதனால் தாங்கள் வருத்தப்பட நியாயமில்லை...'' என்றான்.

மல்லிநாதர் பெருமூச்சுவிட்டார். அவர் நினைவு முழுமையும் காஞ்சியிலேயே இருந்தது. காஞ்சியை அடையும்போது இருட்டிவிடும்; மறுநாள் காலையில் தான் மாளிகையை அடைய முடியும்; அன்றைய இராப்பொழுதைக் கழிப்பதே பெரும்பாடாக இருக்கும் என்று எண்ணினார்.

''குட்டிச் சித்தா, காஞ்சியை அடையும்போது பொழுது சாய்ந்து விடுமல்லவா? அதற்கு முன்பே போய் விட முடியாதா?'' என்று கேட்டார் மல்லிநாதர்.

''ஏன் முடியாதுங்க – காளைகள் பஞ்ச கல்யாணிக் குதிரை மாதிரிப் பறக்கும். இதோ பாருங்க – '' என்ற குட்டிச் சித்தன் மாட்டின் வாலை முறுக்கினான்.

தடதடவென்று சப்தமிட்டு வண்டி ஓட ஆரம்பித்தது. மல்லிநாதர் உடல் குலுங்கியது. குட்டிச்சித்தனுக்குக் களி பொங்கியது. அப்போதே காஞ்சி மாநகரை அடைந்துவிடத் துடித்தவன்போல் குட்டிச் சித்தன் உள்ளம் துள்ளியது.

ஃ ஃ ஃ

அங்கே ஒரு குளம். குளத்தருகே சாலை திரும்பியது. சாலையின் திருப்பத்தில் வண்டி மிக விரைவாக ஓடியது. சக்கரங்கள் வேகமாகச் சுழன்றன. வண்டிச் சக்கரங்களுக்கு அடிக்கப்பட்டிருந்த வர்ணங்கள் கண்களுக்குப் புலப்படா அளவுக்குச் சக்கரம் சுழன்றது.

திடீரென கடகடவென ஓசை. சக்கரம் ஒன்று கழன்றுவிட்டது. வண்டி ஒரு பக்கமாகக் குடை சாய்ந்தது. மல்லிநாதரும், குட்டிச் சித்தனும் வண்டியினின்று தூக்கி எறியப்பட்டனர். அழகுச் சிலை மண்ணிலே வீழ்ந்தது. காளைகள் அம்மா என்று ஓலமிட்டன.

காட்டுக்குடிலில் வண்டி புறப்படும்போதே சக்கரம் கடையாணி கழற்றப்பட்டிருப்பதைக் குட்டிச் சித்தன் கவனிக்க வில்லை. பாசுபதன் வடிவில் இருந்த கீர்த்தி வர்மன் அந்தக் குடிலின் பக்கம் சில நாட்களாகவே வட்டமிட்டுக் கொண்டிருந்தவன், சிற்பி காஞ்சிக்குச் செல்லப்போவதையும் அழகிய சிற்பத்தைப் படைத்து மன்னனிடம் அளிக்கப் போவதையும் அறிந்த கீர்த்தி வர்மன் அதைத் தடுத்துச் சிற்பிக்கு ஊனம் விளைவிக்க விரும்பினான். வண்டிக் கடையாணியை மெல்லக் கழற்றி எறிந்துவிட்டான். மெதுவாகச் சென்றிருந்தால் அந்த விபத்து நேர்ந்திருக்காது. வேகமாக வண்டியை ஓட்டியதன் விளைவு கீர்த்தி வர்மன் எதிர்பார்த்தது நடந்தது.

குட்டிச் சித்தனுக்கு அடி ஏதும்படவில்லை. அவன் மெல்ல எழுந்துவிட்டான். ஆனால் மல்லிநாதர் மயங்கிக் கிடந்தார். குட்டிச் சித்தன் பரபரப்புடன் குளத்து நீரைக் கொண்டு வந்துத் தெளித்து அவரை மூர்ச்சை தெளிவித்தான். அவரால் எழுந்திருக்க முடியவில்லை. ஆனால் அவரது முதல் கேள்வி: ''சிற்பத்துக்கு ஊனம் ஏதும் நேரவில்லையே?'' என்பதுதான்.

நடனத் தோற்றத்திலுள்ள நளினமான அந்தச் சிலைக்கு எந்தவித ஊறும் நேரவில்லை. மல்லிநாதர் மெல்ல எழ முயன்றார். ஆனால் அவரது வலது காலைத் தூக்க முடியவில்லை. உயிர் போவது போன்ற வலி ஏற்பட்டது. குட்டிச் சித்தனுக்கு என்ன செய்வது என்றே தெரியவில்லை. 'சாலையில் யாராவது வருகிறார்களா?' என்று சற்றுநேரம் காத்திருந்தான். மல்லிநாதர் குட்டிச் சித்தனை அழைத்து உடனே திரும்பிப் போய் சுந்தரியை அழைத்து வருமாறு கேட்டுக் கொண்டார். சுந்தரி உடன் வந்தால் அவள் துணையுடன் காஞ்சிக்குச் சென்றுவிடலாம்; தொடங்கிய பயணத்தை நிறுத்த வேண்டாம் என்று விரும்பினார்.

அவரை நடுச்சாலையிலே தனியே விட்டுவிட்டுச் செல்லக் குட்டிச் சித்தன் தயங்கினான். குடை சாய்ந்த வண்டியை அவன் ஒருவனே தூக்கி நிறுத்தும்போது அவனது வலிமை கண்டு மல்லிநாதர் வியந்தார்.

குட்டிச் சித்தன், சிற்பியின் குடிலை நோக்கி ஓடினான் ஓடினான் அப்படி ஓடினான்.

இறைக்க இறைக்க குட்டிச் சித்தன் வருவதைக் கண்ட சுந்தரி திகைத்தாள்.

●

## 11. சிற்பி எங்கே?

குட்டிச் சித்தன் எப்படித்தான் ஓடிவந்தானோ அவனுக்கே தெரியாது. கூன் முதுகையும் சுமந்துகொண்டு எதிர் வெயிலில் அவன் ஓடி வந்து நடந்த சம்பவத்தை சுந்தரியிடம் சொல்வதற்குள் அவனுக்கு மூச்சு வாங்கியது. வார்த்தைகள் குழறின. வாய் கோணலாகியது.

சுந்தரி, குட்டிச் சித்தனை அதிகம் அறிந்தவளல்லள். வண்டியோட்டுவதற்காக இரு நாட்களுக்கு முன்பு குடிலுக்கு வந்ததும், சிற்பி மல்லிநாதர் அவனை மிக அன்புடன் நடத்தியதும் மட்டுமே கண்ட அவள் குட்டிச் சித்தனைப் பற்றி அதிகம் ஏதும் அறிந்துகொள்ள இயலவில்லை.

குட்டிச் சித்தன் தன்னைப் பார்க்கும் விதம் ஓரிரு சமயங்களில் அவளுக்கு வெறுப்பை அளித்தது. ஆனால் குழந்தை மனமுடையவன் என்று மறுகணமே அவள் உணர்ந்தவுடன் தன்னை அமைதிப்படுத்திக் கொள்வாள்.

குட்டிச் சித்தன் பரபரப்புடன் ஓடிவந்ததும் வார்த்தை வராது திகைப்பதும் கண்ட சுந்தரி திடுக்கிட்டு, ''என்ன குட்டிச் சித்தா? என்ன நேர்ந்தது?'' எனறு பதறினாள்.

அவள் அருகே இருந்த விஜயனும் நிலை கொள்ளாமல் திகைத்தான். நடந்த சம்பவத்தைக் குட்டிச் சித்தன் கூறியவுடன் சுந்தரிக்கு ஏற்பட்ட மனநிலையைச் சொல்ல முடியாது. அவள் கண்கள் கலங்கின. மார்பு படபடத்தது.

''அவருக்கு ஆபத்து ஒன்றுமில்லையே குட்டிச் சித்தா? சீக்கிரம் சொல். அவர் வேதனையால் துடிக்கிறாரா? சிற்பங்களைப் படைக்கும் சிறந்த கரத்திற்கு ஏதும் நேர்ந்துவிடவில்லையே... குட்டிச் சித்தா, சொல்... சொல்...'' எனறு சுந்தரி கூறி விம்மினாள்.

''சுந்தரி, சுந்தரி என்று தான் மயக்கம் தெளிந்தவுடன் கூப்பிட்டார். அதனால்தான் உன்னை அழைத்துப்போக ஓடிவந்தேன்'' என்றான் குட்டிச் சித்தன்.

''நடுச் சாலையில் விட்டுவிட்டா வந்துவிட்டாய்? வெயிலில் வாடுவாரே... வேதனையால் துடிப்பாரே...'' என்று சுந்தரி பதறிப் போனாள்.

''இல்லை, இல்லை... சாலை ஓரமாகத்தான் அவரைக் கிடத்தி வந்திருக்கிறேன். மீண்டும் குடிலுக்கே திரும்பிவிடலாம் என்று கூறினேன். அவர் சம்மதிக்கவில்லை. பரமேச்வர வர்மரைக் காணாமல் திரும்புவதில்லை எனும் பிரதிக்ஞையுடன் புறப் பட்டிருக்கும் அவர், முன் வைத்த காலைப் பின் வைக்க விரும்பவில்லை...'' என்று குட்டிச் சித்தன் ஆர்வத்துடனும் ஆவேசத்துடனும் பேசினான்.

சுந்தரி முணுமுணுத்தாள். 'நல்ல பல்லவ மன்னர். சிற்பத்தைக் காண மன்னர் வர வேண்டுமா? சிற்பத்தை எடுத்துச் சென்று அவர் முன் நிறுத்த அது என்ன பூசணியா, பலாப்பழமா? முன்வைத்த காலைப் பின் வைக்கவும் முடியாது, முன்னாலும் வைக்க முடியாது' எனறு முணுமுணுத்த சுந்தரி, மேலே என்ன பேசுவது என்றே புரியாமல் பரபரப்புடன், ''என்ன செய்வது என்றே தெரியவில்லையே குட்டிச் சித்தா! நான் என்ன செய்ய வேண்டும்?'' என்றாள்.

விஜயன் குறுக்கிட்டு, ''விபத்து நடந்த இடத்திற்கு நாம் உடனே விரைந்து செல்வோம்'' என்றான். குட்டிச் சித்தன் அவனை ஒருமுறை ஏற இறங்கப் பார்த்தான்.

''ஆமாம், ஆமாம். அப்படித்தான் செய்ய வேண்டும்!'' எனறாள் சுந்தரி.

''உடனே உன்னை அழைத்து வருமாறுதான் ஐயா கூறினார். ஓட்டமும் நடையுமாகப் போவோம். உன்னால் நடக்க முடியாது போல் தோன்றினால் என் தோள் மேல் ஏறிக்கொள்; தூக்கிக்கொண்டு ஓடுகிறேன்'' என்று உணர்ச்சி மிகுதியால் கூறினான் அவன்.

தன்னையுமறியாமல் சுந்தரி நகைத்தாள். ''ஏன் சிரிக்கிறாய்? என்னால் தூக்கிச் செல்ல முடியாது என்றுதானே! அதுதான் இல்லை. குட்டிச் சித்தனைப் பற்றி உனக்குத் தெரியாது. மலையையே தோள்மேல் சுமப்பான் இவன் - ஹூம், தெரியுமா? அது தெரியாமலா சிற்பி ஐயா என்னைக் கோவூரிலிருந்து வரவழைத்தார். நடனச் சிற்பத்தை வண்டியிலே ஒரே மூச்சில் ஏற்றினேன். அங்கே இப்போது வண்டி கவிழ்ந்தவுடன் என் இடது பக்கத் தோள் ஒன்றாலேயே வண்டியைத் தூக்கி நிறுத்திவிட்டேன். என் பலம் தெரியாமல் சிரிக்கிறாய்,



இல்லையா?'' - குட்டிச் சித்தன் குரலில் கோபம், பெருமை, கண்டிப்பு, கனிவு எல்லாம் கலந்திருந்தன.

''அதற்காகச் சிரிக்கவில்லை, குட்டிச் சித்தா! இராமாயணக் கதை நினைவுக்கு வந்தது. இப்படித்தான் அனுமன் சீதையைப் பார்த்துக் கேட்கிறார்; இலங்கையினின்று ஒரே நொடியில் தோளிலே சுமந்து சென்றுவிடுவதாக...''

''ஓகோ! என்னை குரங்கு என்கிறாயா? சொல்லு சொல்லு; அதனால் நான் குறைந்துவிட மாட்டேன். என் தோற்றத்தைப் பலர் பலவிதமாக எள்ளி நகையாடியிருக்கிறார்கள். கூனன், குள்ளன், குறுங்கழுத்தன் என்று கூச்சலிடுகிறார்கள். சிறு கற்களை வீசுவார்கள்; நான் இலட்சியம் செய்ய மாட்டேன்... நேரமாகிறது பேசிக்கொண்டே இருந்தால்...'' என்று குட்டிச் சித்தன் குரல் தழுதழுக்கக் கூறினான்.

ஃ ஃ ஃ

சுந்தரி புறப்பட ஆயத்தமானாள். விஜயனையும் உடன் அழைத்துச் செல்ல முடியுமா? குடிலைத் தனியே விட்டுவர அவளுக்கு இஷ்டமில்லை. குடிலில் அரும்பெரும் கலைப் பொக்கிஷங்கள் இருக்கின்றன. அந்தப் பகுதியில் கீர்த்திவர்மன் மாறுவேடத்தில் சஞ்சரித்துக் கொண்டிருக்கும் வரையில் பாதுகாவல் ஏதுமின்றி குடிலை விட்டு வர சம்மதமில்லை.

அவளுக்குக் கீர்த்தி வர்மனிடம் ஏன் அவ்வளவு அச்சம்? அவன் எந்தக் காரணத்திற்காகப் பல்லவ நாட்டிற்குள் வந்திருக்கிறானோ அதே நோக்கத்துடன் தானே அவளும் வந்திருக்கிறாள். கீர்த்தி வர்மன் குடிலுக்குள் நுழையட்டுமே, பரத நாட்டிய ஓலைச் சுவடிகளைப் பாழ்படுத்தட்டுமே. சிற்ப, ஆகம சுவடிகளை அபகரித்துத்தான் செல்லட்டுமே. அவள் மனம் ஏனோ அதற்கு இடங்கொடுக்கவில்லை. சிற்பியின் பொக்கிஷங்களைப் பிறர் அபகரித்துச் செல்வதில் அவளுக்குச் சம்மதமில்லை. பல்லவ மன்னரிடம்தான் அவள் தன் பழிக்குப் பழியைத் தீர்க்க எண்ணியுள்ளாளே அன்றி, சிற்பிக்கு ஒரு தீங்கும் நேர அவள் ஒப்பமாட்டாள். அதனால்தான் மல்லிநாதர் விபத்தில் சிக்கிவிட்டார் என்றவுடன் பல ஆண்டு பழகிய பந்தபாசம் உள்ளவள் போல் பதறினாள். ஆம்! ஒருவேளை பூர்வ ஜென்மத்தில் ஏற்பட்ட பழக்கமாயிருக்கலாம்.

சுந்தரி யோசித்தவாறு நிற்பதைக் கண்ட விஜயன், ''நான் உடனே செய்யக்கூடியது ஏதாவது இருந்தால் செய்கிறேன். உடனே குட்டிச் சித்தனோடு ஓடி மல்லிநாதருக்கு வேண்டிய உதவியைச் செய்கிறேன். அவரைக் காண வேண்டும்

என்றுதானே வந்தேன்'' என்றவுடன் குட்டிச் சித்தன் பரபரப்புடன், ''வேண்டாம், வேண்டாம். அவர் சுந்தரியைத்தான் அழைத்தார். வாம்மா, போகலாம்...'' என்றான்.

கடைசியில் சுந்தரி, விஜயனை வேண்டிக்கொள்ள, விஜயன் மட்டும் அந்தக் குடிலில் அவர்கள் வரும் வரையில் தங்கியிருப்பது என்று ஏற்பாடாகவே குட்டிச் சித்தனும் சுந்தரியும் வாயு வேக மனோவேகமாக நடந்தார்கள். சுந்தரி வெயிலின் கடுமையைப் பொருட்படுத்தவில்லை. குட்டிச் சித்தனின் நடைக்கு ஈடுகொடுத்து நடக்க முடியவில்லை. பறவையாக இருந்திருந்தால் அவள் பறந்திருப்பாள். மலரின் மகரந்தமாக இருந்திருந்தால் காற்றிலே மிதந்து சென்றிருப்பாள்.

வண்டி கவிழ்ந்த இடத்திலேயே இருந்தது. வண்டி இழுத்த காளைகள் இரண்டும் மரத்தடியில் சுகமாக அசைபோட்டுக் கொண்டிருந்தன. ஒரு காகம் எருதின் மீது உட்கார்ந்துவிட்டுப் பறந்து சென்றது. தொலைவில் வரும்போதே சுந்தரி வண்டியைக் கண்டுவிட்டாள். அவள் சரமாரியாகக் கேள்விமேல் கேள்வி கேட்கலானாள்.

''புறப்படும்போதே கடை ஆணி சரியாய் இருக்கிறதா என்று பார்த்தாயா குட்டிச் சித்தா?''

''இல்லையே... பார்த்திருந்தால் இப்படி நேர்ந்திருக்காதே...''

''வண்டிச் சக்கரம் கழன்றதில் உனக்கு வித்தியாசம் ஏதும் தெரியவில்லையா?''

''இல்லையே... தெரிந்திருந்தால் இப்படி நேர்ந்திருக்காதே.''

''வண்டிச் சக்கரம் கழன்றவுடனே நீயும் தலைகுப்புற வீழ்ந்துவிட்டாயா?''

''இல்லை. நான் குதித்துவிட்டேன். ஐயாதான் வீழ்ந்து விட்டார். அவர் மேல் வண்டி சாய்ந்தது.''

''ஐயோ... ஹூம்...'' உடனே அவரைத் திரும்பவும் மாமல்லபுரத்திற்குத்தான் அழைத்துச் சென்றுவிட வேண்டும். அங்கே ஊரில் வைத்தியர் யாரையாவது தெரியுமா?''

''ஐயா திரும்பவும் வீட்டிற்கு வர விரும்பவில்லை. உன்னையும் துணைக்கு அழைத்துக்கொண்டு காஞ்சிக்கே சென்றுவிட வேண்டும் என்பது அவர் எண்ணம். நீ அருகேயிருந்தால் யாருக்கும் எந்தவித நோவும் தெரியாது...'' குட்டிச் சித்தன் இப்படிக் கூறிவிட்டு அசட்டுச் சிரிப்பு சிரித்தான்.

சுந்தரிக்குக் கோபமாக வந்தது. அவனது பார்வையும் சிரிப்பும் அவளுக்குப் பிடிக்கவில்லை. அதைத் தெரிவிக்க இதுவன்று சமயம்; சுந்தரி பேச்சை மாற்ற விரும்பி, ''சிலைக்கு ஏதும் நேரவில்லையே... அதோ முழு உருவம் தெரிகிறதே...!'' என்றாள்.

ஆம்; மல்லிநாதர் செதுக்கிய அற்புதச் சிலை மாசுபடாமல் இருந்தது. ஊனமடையாமல் இருந்தது. அந்தச் சிலை புது மெருகுடன் திகழ்ந்தது. ஆனால் அதைச் செதுக்கிய சிற்பி மல்லிநாதர் -

''குட்டிச் சித்தா, அவர் எங்கே?'' என்று சுந்தரி பதறிப்போய் கேட்டாள்.

சிற்பி மல்லிநாதரை அங்கே காணவில்லை. மர நிழலில் அவரைக் கிடத்திவிட்டு வந்த இடத்தில் மல்லிநாதர் இல்லை. அவரது மேல் உத்தரீயம் மட்டும் சுருண்டு காற்றிலே அலைபட்டு மர வேர் ஒன்றில் சிக்கிக் கிடந்தது.

''ஐயோ ஐயா! எங்கே போய்விட்டீர்கள்?'' என்று குட்டிச் சித்தன் கூவியது அந்த வெயில் வேளையில் யார் காதில் விழுந்திருக்கப் போகிறது? மல்லிநாதரைச் சுமந்து தூக்கிச் சென்றவர்களைப் பார்த்துக் கொண்டிருந்த அந்த ஆடு மேய்க்கும் சிறுவன் அங்கு இருந்திருந்தாலாவது அவன் உடனே ஓடிவந்து, ''ஐயா! அந்த கால் உடைஞ்ச ஐயாவை யாரோ இரண்டு பேர் குதிரை மீது தூக்கிச் சென்றார்கள்'' என்று கூறியிருப்பான்.

சுந்தரியின் கண்களிலிருந்து அவளையறியாமல் கண்ணீர் பொலபொலவென்று உதிர்ந்தது. நெற்றியில் வியர்வைத் துளிகள் முத்தெனக் கோத்து நின்றன. குட்டிச் சித்தன் சொற்படி பார்த்தால் மல்லிநாதரால் நகரவும் முடிந்திருக்காதே, எங்கே போயிருப்பார் என்று திகைத்தாள் சுந்தரி. குட்டிச் சித்தன் இங்கும் அங்கும் ஓடினான். சாலையில் வரும் வண்டிகளை மறித்துக் கேட்டான். ஒருவருக்கும் தெரியவில்லை.

அப்போது கையிலே புல்லாங்குழலும், சடைப்பிடித்த தலையும், ஒரு கையில் அலகுமாக ஓர் சிறுவன் அருகேயிருந்த மேட்டைத் தாண்டி ஓடி வந்தான். ''கூனா... நீ யாரைத் தேடுகிறாய்?'' என்று அவன் கேட்டான்.

கூனனும் சுந்தரியும் ஒரே சமயத்தில் கூறவும், அந்த ஆடு மேய்க்கும் சிறுவன், ''இங்கே மரத்தடியில் பெரியவர் ஒருவர் படுத்திருந்தார். அவரை யாரோ இரண்டு பேர் குதிரை மீது வந்து பலவந்தமாகத் தூக்கிப் போய்விட்டனர். இப்படி வயல்

வரப்பு வழியாகச் சென்றனர். நானும் அவர்களுடன் கொஞ்ச நேரம் ஓடினேன். ஆனால் குதிரை பறந்துவிட்டது. அதனால்தான் நான் களைத்துத் திரும்பி வருகிறேன்'' என்றான்.

குட்டிச் சித்தனும் சுந்தரியும் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டனர்.

ஃ ஃ ஃ

**ம**ல்லிநாதர் அந்த மரத்தடியில் காலிலே ஏற்பட்ட வேதனையுடனும், வழியிலே இப்படி விபத்து நேர்ந்துவிட்டதே என்ற கவலையுடனும் படுத்திருக்கும்போது மெல்லிய குழலோசை கேட்டது. அது அவர் களைப்பைப் போக்கியது. வலியை மறக்கச் செய்தது. இரண்டு மூன்று ஆடுகள் அருகே கழுத்து மணியொலிக்க அங்கே மேய்ந்து கொண்டிருந்தன. மணியோசை தாளமாக ஒலிக்க, ஆடு மேய்க்கும் சிறுவன் குழலில் மெல்லிய துவாரங்கள் வழியே இன்னிசையை எழுப்பிக் கொண்டிருந்தான்.

சிறிதுநேரம் கழித்து அவன் மல்லிநாதர் அருகே வந்தான். அவரையும் வண்டியிலிருந்த சிலையையும் மாறி மாறிப் பார்த்தான். அந்தச் சிலை அவனுக்கு அற்புதமாகத் தெரிந்தது.

''இதைச் செய்தது யாருங்க?'' என்று குழந்தை உள்ளத்துச் சிறுவன் கேட்டான். அவன் குரல் யாழினும் இனிமையாக மல்லிநாதர் செவிகளில் வீழ்ந்தது. அவர் மெல்ல நகைத்தார்.

''நீங்கள் செய்தீர்களா? சந்தைக்கு விற்கப் போகிறீர்களா?'' என்று மீண்டும் அவன் கேட்டான். அவர் என்ன கூறுவார்? மீண்டும் நகைத்தார். சிறுவன் அவர் காலில் ஏற்பட்ட காயத்தைப் பற்றி வினவி வண்டி குடை சாய்ந்ததைப் பற்றிக் கவலையுடன் விசாரித்தான். வண்டி கவிழ்ந்தபோது சோறு வைத்திருந்த பானை சுக்கு நூறாக உடைந்துவிட்டது, வெறும் காலிப் பானை மட்டும் வண்டியின் அடியில் கட்டப்பட்டிருந்தது. அதை அவிழ்த்து எடுத்துப் போய் சற்றுத் தொலைவிலிருந்த கிணற்றிலிருந்து தண்ணீர் கொண்டு வந்து கொடுத்து அவர் தாகத்தைத் தணித்தான். மல்லிநாதரின் கவலை எங்கோ பறந்துவிட்டது. அப்போதுதான் குதிரை மீது இருவர் வந்தனர்.

சாளுக்கிய இளவரசருடன் வந்தவர்கள் அவர்கள். அவர்கள் போட்ட திட்டம் இதுவரை சரிவர வேலை செய்துதான் வந்தது. பல்லவர்களை வெற்றி கொள்ளச் சாளுக்கிய இளவரசன் வகுத்திருந்த திட்டம் அற்புதமானது. பரமேச்வரனை எளிதில் பணிய வைக்க மிகத் தந்திரத் திட்டங்களை வகுத்தான். பல்லவ நாட்டில் பொருளாதார நிர்ப்பந்தம் ஏற்படுத்துவது;

செயற்கையான பஞ்சத்தைச் சிருஷ்டிப்பது; பஞ்சம் ஏற்படுவதற்கு உதவியாக இருக்கும் பொருட்டு நீர் நிலைகளைப் பாழ் படுத்துவது; சேமித்து வைக்கப்பட்டிருக்கும் தானியக் களஞ்சியங்களைத் தீக்கு இரையாக்குவது; நாட்டில் கலை இரசிகத் தன்மையைக் குறைத்து, கலைஞர்களே இல்லாது செய்துவிடுவது என்பன போன்ற அவர்களது செயல் திட்டங்களுக்கான வழிவகைகள் சாளுக்கிய இளவரசனால் வகுக்கப்பட்டன. அவற்றுள் மல்லிநாதர் பலவந்தமாகத் தூக்கிச் செல்லப்பட்டதும் ஒன்று.

சிறுவனிடமிருந்து நடந்தவற்றை அறிந்தவுடன் சுந்தரிக்கு ஏது செய்வது என்று புரியவில்லை. குட்டிச் சித்தன் இங்கும் அங்கும் துள்ளிக் குதித்தான். குதிரைகள் சென்ற திக்கை நோக்கி உடனே செல்ல வேண்டும் என்று துடித்தான்.

''கண்டுபிடிக்க முடியாதுங்க. நான் ரொம்ப தூரம் ஓடிப் போய் பார்த்து வந்துவிட்டேன்'' என்றான் சிறுவன்.

சிறுவனது துருதுருப்பான முகமும் பேச்சும் சுந்தரியைக் கவர்ந்தன. குட்டிச் சித்தன் அடுத்து இன்னது செய்வது என்று தெரியாமல் உட்கார்ந்துவிட்டான். பிறகு அவன் எழுந்து, ''வா சுந்தரி, வீட்டுக்குத் திரும்பிப் போகலாம்'' என்றான்.

சுந்தரியின் பார்வை அவன் மீது கடுமையாக வீழ்ந்தது. ''என்ன சொன்னாய் குட்டிச் சித்தா... திரும்பிப் போவதா? முடியாது... கூடவே கூடாது... சிற்பி என்ன சொல்லிச் சென்றார்?''

''முன் வைத்த காலைப் பின் வைக்காது எப்படியாவது காஞ்சிக்குப் போய்ச் சேர்ந்துவிட வேண்டும் என்று சொன்னார்.''

''அவருடைய எண்ணப்படி செய்வோம். காஞ்சிக்குச் செல்வோம். மாளிகையை அடைவோம். மன்னரைக் காண்போம். சிற்பத்தைக் காட்டுவோம். சிற்பத்தின் அழகில் மயங்கிய மன்னர் சிற்பி எங்கே என்று கேட்பார். அப்போது நன்றாகச் சொல்வோம். அவர் மனத்தில் படும்படியாகச் சொல்வோம். பல்லவ சாம்ராஜ்யத்தின் இலட்சணத்தை எடுத்துச் சொல்வோம். பட்டப் பகலில் ஆளைத் தூக்கிக் கொண்டு செல்லும் அளவுக்கு நாட்டில் மக்களுக்குப் பாதுகாப்பு இருக்கிறது என்று பெருமையாக சொல்வோம்!''

குட்டிச் சித்தன் அவள் முகத்தையே உற்று நோக்கிக் கொண்டிருந்தான். அவள் முக மாற்றத்தைக் கவனித்து உதட்டசைவைப் பார்த்துக் கொண்டிருந்தான். அவள் கண்கள் சுழல்வதைப் பார்த்துக் கொண்டிருந்தான். அவள் கரங்கள்

மேலும் கீழும் அசைவதையும், கோபத்தால் புருவங்கள் வில்லென வளைவதையும் கண்டவாறிருந்தான். அவள் சொல்லி முடித்தவுடன் 'ஹிஹிஹி' என்று சிரித்தான்.

சுந்தரி பேச்சை நிறுத்தி, ''ஏன் சிரிக்கிறாய் குட்டிச் சித்தா...? நான் சொல்வது சிரிப்பைத்தான் தருகிறதா?'' என்று சீறினாள்.

''இல்லை... இல்லை... உன் முகத்திலே ஏற்படும் மாறுதலைக் கவனிக்கிறேன். அந்தச் சிலைக்கும் உனக்கும் என்ன வித்தியாசம் இருக்கிறது என்று பார்த்தேன். பல்லவ மன்னர் சிலையைப் பாராமல் உன்னையே பார்த்தவாறிருந்தால் என்ன செய்வது என்று நினைத்தேன்'' என்று அவன் கூறியவுடன், சுந்தரியின் வதனம் கோபத்தால் சிவந்தது. அவனைத் துடிக்கத் துடிக்க கேட்க வேண்டும் என்ற வேகம் அவளுள் எழுந்தது. குட்டிச் சித்தனின் மனது களங்கம் நிறைந்தது என்ற முடிவுக்கு வந்தாள். ஆண்டவன் இவ்வளவு குரூரமான உருவத்தைப் படைத்திருக்கும் போதே பெண் சபலம் விடவில்லையே – மன்மதனாக மட்டும் இருந்து விட்டானென்றால்... சுந்தரி உதட்டை மடித்துக் கொண்டாள்... குட்டிச் சித்தனுடன் இந்தப் போதில் ஏதும் கருத்து வேற்றுமையை கொள்ளக்கூடாது என்ற முடிவுடன் தன் உணர்ச்சியை மாற்றிக்கொண்டு, ''குட்டிச் சித்தா, உனக்கு அவசரம் என்பதே தெரியாது போலிருக்கிறது. காஞ்சிக்கு இப்போதே செல்ல வேண்டும், என்ன சொல்கிறாய்? உன்னால் முடியாவிட்டால் சாட்டையை இப்படிக் கொடு. வண்டியை நான் ஓட்டிச் செல்கிறேன்'' என்றாள்.

''ஆகா... ஆகா... ஏன் ஓட்டக்கூடாது...! பாமாவும் கைகேயியும் ரதம் ஓட்டினார்கள்... சுந்தரி தேவி வண்டி ஓட்டக்கூடாதா? உம்... ஏறி உட்காரு வண்டியில்...'' என்று கூறி வண்டியை ஓட்ட ஆயத்தம் செய்தான்.

⁂ ⁂ ⁂

**கா**ஞ்சி மாநகரை அவர்கள் அடையும்போது பொழுது சாயத் தொடங்கிவிட்டது. குட்டிச் சித்தன் வண்டியை நேராக மேட்டுத் தெருவுக்கு ஓட்டினான். தெருவின் கோடியில் சுற்றிலும் தோட்டத்துடன் கூடிய ஒரு வீட்டிற்குள் நிறுத்தினான். அதிகச் சந்தடியற்ற வீதி அது. காளைகளை அவிழ்த்துவிட்டு சர்வ சுதந்திரமாக அவற்றை தண்ணீர் தொட்டியிருக்கும் இடம் சென்று விட்டுவிட்டுத் திரும்பி வந்து, ''வாம்மா... உள்ளே போவோம். இது நம்ம வீடு போல்தான். உள்ளே மாணிக்கம்மாள் இருக்கிறார்கள். நமக்கு வேண்டிய உதவி செய்வார்கள். கம்பு அடை செய்து முருங்கைக் காய்க் குழம்பு 'கமகம' என்று

மணக்க மணக்க வைத்து விருந்தளிப்பாள். முகம் கழுவி விட்டுச் சற்று இளைப்பாறு'' என்றான்.

சுந்தரி வியப்புடன் சுற்றுமுற்றும் பார்த்தாள். குட்டிச் சித்தன் சொல்லியபடி மூதாட்டி ஒருத்தி வெளியே ஏதோ குரல் கேட்கிறதே என வந்தாள். குட்டிச் சித்தனைக் கண்டவுடன் மிகவும் வாஞ்சையுடன் வரவேற்றாள்.

சுந்தரி முகங்கழுவி வந்தாள். அந்த வீட்டிலேயே தங்கியிருந்து மறுநாள் காலை வரை கழிப்பது அவளுக்குப் பிடிக்கவில்லை. நகரத்துக் கடை வீதியைக் காண வேண்டும் என்ற ஆவல் எழுந்தது.

காஞ்சி மாநகரத்துக் கடைவீதி தென்னகத்தில் மிகப் பிரசித்தி பெற்றது. அயல் நாட்டவர்கள் பண்டங்களை விற்கவும், வாங்கவும் வந்து மொய்த்திருந்தனர். யவனர்களும், சீனர்களும் அங்குமிங்கும் உலவினர். நீண்ட ஆடை அணிந்த சோனகர்கள் குதிரையை விற்க விலை பேசிக் கொண்டிருந்தனர். சமணத் துறவிகள் சந்தியா காலத்திற்குள் பள்ளியை அடைய விரைந்து கொண்டிருந்தனர். மாலையின் வரவை எதிர்பார்த்தது போல் காபாலிகர்கள் மதுக்கடை என்னும் பெயர்ப் பலகை தாங்கிய இடம் நோக்கி ஆனந்தக் கூத்தாடியவாறு சென்று கொண் டிருந்தனர்.

முத்தும் பவழமும் தங்க ஆபரணங்களும் விற்கப்படும் கடையைக் கண்டு சுந்தரி வியந்து நின்றாள்.

கடைவீதியில் மக்கள் கூட்டம் அதிகமாயிருந்தது. நெரிசல் தாங்கவில்லை. முத்து மாலைகளை விலை பேசும் அழகிகளைக் காணவே இளைஞர் கூட்டம் கடை எதிரே சற்று நின்றது. ஏதோ அவசரக் காரியம் இருப்பது போல நெருக்கிக் கொண்டு சிலர் நின்றனர். ஓர் இளம்பெண் முத்து மாலையொன்றைத் தனது கழுத்துக்கு ஈடு செய்து அழகு பார்த்தாள். ஓர் அழகிய மங்கை ஆபரணங்கள் விலையைப் பேசியவாறு முத்துப் பல் வரிசை தெரிய நகைத்தாள்.

சுந்தரிக்கு வியப்பு மேலிட்டது. தனது கழுத்தை மெல்லத் தடவிப் பார்த்துக் கொண்டாள். சிலம்பும், வளையலும், மேகலையும், மாலையும் அணிந்து கொள்ள வேண்டும் எனும் ஆர்வம் எழுந்தது அவளுக்கு. சுந்தரி தெருவில் நின்று கடையை நோக்கியவாறிருக்கும் போது இரு காளையர் மெல்ல அவளருகே வந்தனர். குட்டிச் சித்தனுடன் சுந்தரி கடைவீதியில் வந்து கொண்டிருந்தபோது அவர்கள் பின்னால் தொடர்ந்து வந்தனர்.

அந்தக் காளையர் தங்கள் அரும்பு மீசையைத் தடவியவாறு முறுவல் பூத்தனர். சுந்தரி அவர்களது பார்வையினின்று தன் முகத்தைத் திருப்பிக் கொண்டாள். அவர்கள் எளிதில் விடவில்லை.

"பாண்டி நாட்டு ஆணி முத்து ஆரத்தைப் பார்க்கிறாயோ?" என்று மெல்ல அவள் செவியில் மட்டும் கேட்க ஒருவன் பேசினான்.

சுந்தரி சீறினாள். அவர்களுள் ஒருவன் மெல்ல சுந்தரியின் அருகே வந்து அவள் தோளின் மீது சொந்தம் பாவித்து தன் கரத்தை வைக்க முற்படவே எங்கிருந்தோ அவன் முகத்தின் மீது ஒரு பலமான குத்து விழுந்தது. முறை தவறி நடக்க முற்பட்ட இளைஞன் கீழே துள்ளி வீழ்ந்தான். குட்டிச் சித்தனின் பலமான தாக்குதலை அந்த இளைஞனால் தாங்க முடியவில்லை. மீண்டும் அவன் எழுந்திருக்க முயல்வதற்குள் குட்டிச் சித்தன் அவன் மீது பாய ஆயத்தமானான். அவனைத் தடுத்து நிறுத்த மற்றொரு இளைஞன் முயன்றான். தன்னை மற்றொரு கரம் தடுப்பதைப் பார்த்துச் சீறியவாறு திரும்பிய குட்டிச் சித்தன், அந்த இளைஞன் மீது மோதிக் கீழே வீழ்த்தினான்.

கணத்தில் அந்தக் கடை எதிரில் பெருங்கூட்டம் கூடிவிட்டது. தன்னைத் தாக்க வருபவர்களைக் குட்டிச் சித்தன் ஒருவனே பாய்ந்து பாய்ந்து தாக்கியவாறிருந்தான். வாமன உருவம், ஒட்டகத் திமில் போன்ற கூனல் முதுகு, குட்டையான கைகள்; இவ்வளவு பலம் அவனுக்கு இருக்குமென்று தாக்குதலுக்கு உள்ளானவர்கள் எதிர்பார்க்கவில்லை.

நகைக்கடையில் இதுவரை நகை முகத்துடன் இருந்த நங்கையர் அச்சத்தால் 'கிறீச்'சென்று கூவினர். எந்த நொடியும் கடைக் கதவுகளைத் தாளிட ஆயத்தமாயிருந்தனர் கடைக் காரர்கள். குட்டிச் சித்தனின் ஆக்ரோஷமான தாக்குதலைத் தடுக்க ஒருவரும் முன்வரவில்லை. அந்தக் குறும்புக்கார இளைஞர் இருவரும் தப்பினோம் பிழைத்தோம் என்று ஓட முற்பட்டனர். குட்டிச் சித்தன் விடவில்லை. அவர்களைப் பாய்ந்துத் தாக்க முயன்றான். வெறி பிடித்துவிட்டதோ கூனனுக்கு என்று எல்லாரும் அஞ்சினர்.

அப்போது குதிரை மீது காவல் வீரர்கள் வந்தனர். குளம்படியோசை கேட்டவுடனேயே கூட்டத்தினர் விலகத் தொடங்கினர். சுந்தரி செய்வதறியாது நின்ற இடத்திலேயே அஞ்சி நடுங்கி நின்றவாறிருந்தாள்.

குதிரை வீரர்கள் நடுவே கம்பீரமாகத் திகழ்ந்த வீரன் கண்களில் சுந்தரி தெரிந்தாள். அவள் அஞ்சி நிற்கும் தோற்றமும், கூனன்

இளைஞர்களைத் தாகக்யதன காரணமும் நொடியில் வீரனுக்குப் புரிந்துவிட்டது.

விலகிய கூட்டத்தினர் அந்த வீரனைப் பார்த்து ஏதோ கூறியவாறு பேசிக் கொண்டனர்.

''நடு வீதியிலே என்ன குழப்பம்?'' என்று கம்பீரமான குரலில் அவன் கேட்டான்.

உதடுகளிலிருந்தும் மூக்கிலிருந்தும் இரத்தம் வழிய இளைஞர் இருவரும் குட்டிச் சித்தனைச் சுட்டிக்காட்டி ஏதோ கூற முற்பட்டபோது குட்டிச் சித்தன் தன்னைப் பிடித்திருக்கும் காவலர்களிடமிருந்து திமிறி, ''இன்னுமா பேசுவதற்கு உங்களுக்குச் சக்தி இருக்கிறது? ஒரு பெண்ணைத் தொட உங்களுக்கு என்ன துணிவு!'' என்று சீறினான். காவல் வீரர்களின் தலைவன் மெல்லப் புன்னகை பூத்தான். பிறகு அதட்டும் குரலில், ''சரி, சரி! இவர்களை எல்லாம் அழைத்துச் சென்று இன்று நம் விருந்தினராக வைத்திருங்கள். நாளைக் காலையில் ஆளுங்கணத்தார் முன் நிறுத்தி விசாரித்து நீதி வழங்கலாம்'' என்றான்.

குட்டிச் சித்தன் திகைத்தான். ''ஐயா... ஐயா... நாங்கள் ஏதும் செய்யவில்லை. மன்னரைக் காண மாமல்லபுரத்தினின்று வருகிறோம்...'' என்று அவன் கூறியதை யாரும் காதில் கேட்டுக் கொண்டதாகத் தெரியவில்லை.

குட்டிச் சித்தனும், சுந்தரியும் முகத்தில் காயங்களுடன் அடிபட்ட இளைஞர்களும் வீரர்கள் புடைசூழ காவல் கூடம் நோக்கிச் சென்று கொண்டிருந்தனர்.



# 12. பரிவாதினி

தந்தையும், மகனும் மௌனமாகவே அமர்ந்திருந்தனர். தந்தை பல்லவ சாம்ராஜ்யத்தின் மன்னர். மகனோ அடுத்துப் பட்டமேறப் போகும் இளவரசன். நாட்டு மக்களின் நன்மதிப்பைப் பெற்றவன். தோள்வலி மிக்கவன். போர் முறைகளை அறிந்தவன். கடல் கடந்த நாடுகளில் சுற்றுப்பயணம் செய்து தனது அறிவை மேலும் பெருக்கிக் கொண்டவன். அழகும் ஆற்றலும் நிறைந்த தன் மகன் முகத்தையே தந்தை இமைக்காமல் பார்த்துக் கொண்டிருந்தார்.

இளவரசன் இராஜசிம்மன் தந்தையின் சக்தி நிறைந்த பார்வையை எதிர்கொள்ள முடியாமல் சற்றுத் தலைகுனிந்தான். சிறிது நேரத்திற்கு முன்புதான் மந்திராலோசனை சபையில் தந்தைக்கும் மகனுக்கும் கடும் வாக்குவாதம் ஏற்பட்டிருந்தது.

மந்திராலோசனை சபையை மன்னர் அவசரமாகக் கூட்டியிருந்தது மந்திரி மண்டலத்தாருக்கே வியப்பை அளித்தது. நெருக்கடி நிலை ஏதாவதிருந்தால்தான் அதுபோன்ற சபையை மன்னர் கூட்டுவார். பெருவளநல்லூர்ப் போரில் பரமேச்வர வர்மர் வெற்றி பெற்றுச் சாளுக்கியர்களை ஓட ஓட விரட்டிய பிறகு அவசர நிலைமை என்பதே ஏற்படவில்லை.

கொந்தளித்துக் கொண்டிருந்த நாட்டு நிலைமை ஒருவாறாக அடங்கியது. நகரமும், கிராமமும் தமது சுய நிலைக்குத் திரும்புவதில் முனைந்து கொண்டிருந்தன. மன்னரும் நோய்வாய்ப் பட்டுப் படுத்த படுக்கையானார். அதனால் மந்திராலோசனை சபையைக் கூட்டுவதற்கே சந்தர்ப்பம் ஏற்படவில்லை. அழிக்கப் பட்ட வயல்வெளிகளைச் செப்பனிடுவதிலும், தீக்கிரையாக்கப் பட்ட கிராமங்களைப் புதுப்பிப்பதிலும் முனைந்திருந்த மக்கள் மீண்டும் யுத்தம் என்பதையே நினைக்கவில்லை.

உடல் நோயைவிடப் பரமேச்வர வர்மருக்கு உள்ள நோய்தான் தாங்க முடியாததாய் இருந்தது. சாளுக்கியனை வென்று வாகை சூடிய பெருமை பரமேச்வரன் மனத்தில் இல்லை. காஞ்சிக் கோட்டையைச் சாளுக்கியர்கள் சூழ்ந்து கொண்டதும்

அந்தப் போதில் அவர்களை எதிர்க்க முடியாது பரமேச்வரன் திகைத்திருந்ததும், சாளுக்கியப் படைகள் பெருவள நல்லூர் வரையில் சென்று வெற்றிப் பெருமிதத்தில் கூத்தாடியதும், அவர் மனத்தை விட்டு அழிய முடியாத சம்பவங்களாகிவிட்டன. சாளுக்கிய வேந்தன் அடிபட்ட வேங்கை போல் ஓடி ஒளிந்து விட்டாலும், மீண்டும் சீறி வரத் தயங்க மாட்டான். அவர்களும் தங்கள் தோல்வியைப் போக்கி வெற்றியை மீண்டும் பெறப் பெரும் படைகளுடன் வருவர். அவர்கள் அப்படிப் பொங்கி வருவதற்குள் அவர்கள் இருப்பிடம் சென்றே தாக்கி அழிக்க வேண்டும் என்பது பரமேச்வரன் எண்ணம்.

இராஜசிம்மன் கடல் கடந்த நாடுகளிலிருந்து திரும்பிய வுடனேயே தன் கருத்தைப் பரமேச்வர வர்மர் மெல்ல மகனிடம் தெரிவித்தார். அப்போது இராஜசிம்மனின் உள்ளம் கலை நினைவாக இருந்தது. போரைப் பற்றிச் சிந்திக்கவேயில்லை. அதனால் இராஜசிம்மனிடமிருந்து சாதகமான மறுமொழி கிடைக்கவில்லை. அதனால் பரமேச்வர வர்மர் மந்திராலோசனை சபை கூட்டி மந்திரி மண்டலத்தாரின் கருத்தை அறிய விரும்பினார்.

பரமேச்வர வர்மர் போரைப் பற்றிய பேச்சை எடுத்தபோதே மந்திரி மண்டலத்தார் வியந்தனர். தங்கள் கருத்தைத் தெரிவிக்க ஆலோசித்து முடிவு கூற அவகாசம் வேண்டும் என்று தெரிவித்தனர். ஆனால் இளவரசன் இராஜசிம்மனோ 'பளிச்' சென்று தன் கருத்தைத் தெரிவித்தான்.

அண்டை நாடுகளின் மீது வலுக்கட்டாயமாகப் போர் தொடுப்பது நம் பரம்பரை வழக்கமில்லை என்பதை இராஜசிம்மன் எடுத்துக் காட்டினான்.

யுத்தத்திற்கு வீரர்களைத் திரட்டுவதைவிட மகேந்திரனும் நரசிம்மனும் விட்டுச் சென்ற சிற்பப் பணியைத் தொடர்ந்து நடத்த வேண்டும் என்று கருத்துத் தெரிவித்தான்.

மந்திரி மண்டலத்தார் வியந்தனர். பரமேச்வர வர்மரின் கருத்துக்கு மறுப்புத் தெரிவித்த இளவரசரின் துணிவு அவர்களையும் சிந்திக்க வைத்தது. மேலும் இராஜசிம்மன் சொன்னான்: "மக்கள் அமைதியை விரும்புகின்றனர். கடந்த பல ஆண்டுகளாகத் தொடர்ந்து நடைபெற்ற யுத்தத்தினால் அவர்கள் பொருளாதாரம் சீர்குலைந்திருக்கிறது. பல நூறு தலை மக்களை போர்க்களத்தில் பறிகொடுத்த தாயும், மனைவியும் விட்ட கண்ணீர்க் கோடுகள் இன்னும் மறையவில்லை. இப்போது நாம் யுத்த முரசு கொட்டினால் அவர்களது ஆதரவுக்கு மாறாக ஆத்திரப் பேச்சுதான் கிடைக்கும். நீர் தளும்பி நிற்க வேண்டிய

மகேந்திர தடாகமும், தென்னவன் ஏரியும், குன்றத்தூர் ஏரியும், மணிமங்கலத்து ஏரியும் இன்று இருக்கும் நிலையைப் பார்த்தீர்களா?''

இராஜசிம்மன் இதைக் கூறும்போது அமைச்சருள் ஒருவர், ''ஆம், ஆம்! தோற்று ஓடிய சாளுக்கிய வீரர்கள் கரைகளைப் பாழ்படுத்திச் சென்றதால் ஏரியில் தண்ணீரே தேங்கவில்லை...'' என்று கூறவும் பரமேச்வர வர்மர் மகனை நோக்கி, ''உனக்கு எப்படித் தெரியும் மகனே! பிறர் சொல்லித்தானே அறிந்தாய்?'' என்றார்.

இராஜசிம்மன் மெல்ல நகைத்து, ''நான் ஒவ்வொரு இடத்திற்கும் சென்றேன். பொலிவற்ற கிராமங்களுக்குச் சென்றேன். பாழ்பட்ட விளை நிலங்கண்டேன். கரையற்ற ஏரிகளைக் கண்டேன். வறுமையும் வேதனையும் சூழ்ந்த மக்கள் முகத்தையும் கண்டேன்...'' என்றான்.

பரமேச்வர வர்மர் கம்பீரமான குரலில், ''நீ கண்டவையே போதுமே யுத்தம் வேண்டும் என்பதற்கு. மகனே! எனக்கு மட்டும் தெரியாதா, சாளுக்கியர்கள் படுத்திச் சென்ற பாடு? அதனால்தான் சொல்கிறேன் – சாளுக்கியர்களுடைய மண்ணாசையையே மாய்க்க வேண்டும்; அடுத்த போருக்கு ஆயத்தம் செய்யும் முன்பே அவர்கள் மூல பலத்தையே அழித்துவிட வேண்டும் என்று சொல்கிறேன்'' என்றார்.

இராஜசிம்மன் கூறிய காரணத்தாலேயே பரமேச்வர வர்மர் அவனை மடக்கிவிட்டது அங்குள்ளவர்களுக்கு வியப்பை அளிக்கவில்லை. அந்தத் திறமையைப் பெரிதும் கைவரப் பெற்றவர் என்பதை அவர்கள் அறிவர். அதனால்தான் அவர்கள் மௌனமாயிருந்தனர். இராஜசிம்மன் அத்துடன் நிறுத்திக் கொள்ளவில்லை.

''வாதாபி மீது நாம் படையெடுத்துச் செல்ல, காஞ்சி மீது அவர்கள் படையெடுத்து வர - இப்படியே போர் எண்ணத்துடன் இருந்து ஒன்றுமறியா மக்களை சர்வ நாசத்திற்குள்ளாக்குவதால் யாருக்கு என்ன பலன் அரசே'' என்றான் இராஜசிம்மன்.

''நம்மை நாம் சக்தியற்றவர்களாக ஆக்கிக் கொள்ள வேண்டுமா? நமக்கு ஏற்பட்ட அவமானத்தைப் போக்கிக் கொள்ள வேண்டாமா?'' - பரமேச்வர வர்மர் கேட்டார்.

''நம்மைவிடச் சாளுக்கியர்தாம் தோல்வியினால் அதிக அவமானமடைந்தவர்கள். அவர்களும் நம்மைப் போல் நினைக்க மாட்டார்களா?''

''ஆம்; நினைப்பார்கள். தங்கள் பழியைத் துடைத்துக் கொள்ளத் திட்டம் தீட்டுவார்கள். சீற்றத்துடன் எழுவார்கள். மக்களிடம் போர் முரசம் கொட்டுவார்கள். நாட்டிற்கு ஏற்பட்டிருக்கும் அவமானம் துடைக்க அவர்களும் முற்படுவார்கள்... போர் வீரர்களாக ஏராளமான பேர் சேர்வார்கள். கடல் போன்ற படையுடன் மீண்டும் காஞ்சி மாநகரம் தாக்கப்படலாம். முன் எப்போதையும் விட அதிக ஆக்ரோஷத்துடன் தாக்கப்படலாம். அந்த விஷ விருஷம் முளைக்கு முன்பே நாம் விதையையே கிள்ளி எறிந்துவிட வேண்டும்...'' மன்னர் இவ்வாறு தான் கூறிய வார்த்தையிலிருந்தே தனக்குச் சாதகமாகப் பேசுவதைக் கண்ட இராஜசிம்மன் சற்றுப் பொறுமை இழந்தவனாய், ''அரசே! படையெடுக்கலாம் - காஞ்சியை அழித்துவிடலாம் என்று யூகித்து நாம் நமது சகஜ வாழ்வை மாய்த்துக் கொள்ளப் பார்ப்பதை நான் ஒப்பவில்லை. சாவகம், புட்பகம் முதலிய நாடுகளுக்குச் சென்றேனே - ஆகா! அங்கெல்லாம் என்ன அற்புதமாக ஆலயங்கள் கட்டி யிருக்கிறார்கள்! சிற்ப சௌந்தர்யங்கள் அவர்கள் பெருமையை உயர்த்துகின்றன. பூசலிலும், போரிலும் காலத்தைக் கழித்தால் பௌத்த கோயில்களையும், சிவாலயங்களையும் அவர்களால் சிருஷ்டித்திருக்க முடியாது. நம் எதிரே மகத்தான பணிகள் விரிந்து கிடக்கின்றன. மாமல்லபுரம் களையிழந்து கிடக்கிறது. மகேந்திர போத்தரையர் கண்ட கனவு நனவாகாமல் கிடக்கிறது. நரசிம்ம சக்கரவர்த்தி தொடங்கிய பணிகள் முற்றுப் பெறாமல் கிடக்கின்றன. இங்கே - காஞ்சியிலே ஏகாம்பரர் ஆலயத்தைத் தவிர வழிபட வேறு பெரும் ஆலயம் இருக்கிறதா?

''புது முறையிலே சிற்ப அற்புதங்களுடன் ஆலயம் ஒன்று கட்ட வேண்டும். மாமல்லபுரத்திலே சிவபிரானுக்கும் விஷ்ணு வுக்கும் ஓர் ஆலயம் பிரம்மாண்டமாக அமைக்க வேண்டும். ஏன் – தாங்கள் தொடங்கிய சிற்பப் பணியும் தொட்ட இடத்தில்தானே தந்தையே இருக்கிறது! ஐந்துவிதமான சிற்ப அமைப்புடன் கூடிய கோயில் அமைக்கத் தங்கள் முன்னோர்கள் எண்ணியதைத் தங்கள் காலத்தில் ஈடேற்ற வேண்டாமா? வருங்காலத்தவர்கள் தங்களைச் சிறந்த வீரர் என்று புகழ்வதுடன் சிற்பக் கலைக்குப் புத்துயிர் அளித்த மேதை என்று போற்றுவர் – யுத்த முயற்சியில் ஈடுபட்டால் மற்றும் ஒரு தலைமுறைக்கு ஏதுமே செய்ய முடியாது போய்விடலாம். அது மட்டுமன்று, ஒரு வேளை போர் முடிவு வேறுவிதமாக இருந்தால் நாம் ஏதுமே செய்யாது பல்லவ நாடே மறைந்துவிடலாம் அரசே! தங்களுக்குத் தெரியாததன்று – அனுபவம் போதாத நான் ஏதோ என் உள்ளத்தில் பொங்கி வந்ததைக் கூறிவிட்டேன்; பொருத் தருளுங்கள்'' என்றான். அவன் கண்கள் கலங்கின.

பரமேச்வர வர்மர் நெடுமூச்செறிந்தார். தன் மகனது கலையார்வம் அவருக்குப் பெருமையாகத்தான் இருந்தது.

அமைச்சர்கள் தங்கள் கருத்தை யோசித்துத் தெரிவிப்பதாகக் கூறிச் சென்றார்கள். பரமேச்வர வர்மரும், இராஜசிம்மனும் மட்டும் தனியே வீற்றிருந்தனர். தான் படபடப்பாகப் பேசியதற்காக இராஜசிம்மன் வருத்தமுற்றான். தந்தையை ஏறிட்டுப் பார்க்கவும் அவனுக்குத் தோன்றவில்லை.

பரமேச்வர வர்மரே மௌனத்தைக் கலைத்துப் பேசத் தொடங்கினார்.

''மகனே, உன் உள்ளத்தில் ததும்பி நிற்கும் கலை ஆர்வம் எனக்குப் புரிந்தது. உன் வாழ்நாளில் மகத்தான செயல்களைச் செய்வாய் எனும் நம்பிக்கை எனக்கிருக்கிறது... உன் முப்பாட்டனாரின் தந்தையைப் போன்ற கலை அறிவும், உன் முப்பாட்டனார் நரசிம்மரின் வீரமும் உனக்கு ஏற்பட வேண்டும் என்றுதான் நாள்தோறும் வேண்டுகிறேன்... ஆனால்...'' என்று கூறி பரமேச்வரர் சற்று நிறுத்தவும், இராஜசிம்மன் தழுதழுத்த குரலில், ''தங்கள் அனுபவபூர்வமான கருத்தை நான் மறுத்துவிட்டதற்கு என்னைப் பொருத்தருளுங்கள் தந்தையே... தாங்கள் கூறுவதிலும் நியாயம் இருக்கிறது. விரோதிகள் பயம் இல்லாத நாட்டில்தானே கலை வளரும்...'' என்றான்.

பரமேச்வர வர்மர் மெல்ல நகைத்து, ''எனக்கு மட்டும் சிற்பக் கலையை வளர்க்க வேண்டும் என்று ஆர்வமில்லையா? கூரத்தில் கோயில் கட்டத் திட்டமிட்டேன். நாட்டிலிருந்து வெளியேறிவிட்ட சிற்பிகளைத் தேடி அழைத்துவர ஆணை பிறப்பித்தேன். கண்ணிழந்தவன் கண் பெற்றது போல் சிற்பி ஒருவரைக் கண்டெடுத்தேன். மாமல்லபுரத்தருகே தங்கியிருக் கிறாராம். அவரது பணியை ஊக்குவிக்க நேரிடையே செல்லத் தான் எனக்குப் போதில்லை. ஹூம்... போதில்லாமலென்ன... சிந்தையெல்லாம் போர்க் களத்திலே... போர் நினைவிருந்தால் கலை நினைவேது? நீ சொல்வது சரியாகத்தான் இருக்கிறது... ஆனால் என் மனம் குழம்புகிறது... கலையா, போரா என்று மனம் அலை பாய்கிறது...'' என்றார்.

''தாங்கள் கண்டெடுத்த சிற்பி அமைதியாகத் தன் பணியைச் செய்து கொண்டிருப்பதைக் கண்டேன்... மாமல்லபுரத்தருகே சிறு தோட்டத்தின் நடுவே... அமைதி நிறைந்த குடிலில் சிற்றுளியின் ஓசை கேட்டேன். சதங்கை ஒலி கேட்டேன். அவை என் உள்ளத்துக் கலை உணர்வை மேலும் தட்டி எழுப்பி

விட்டன. மீண்டும் போய்ச் சிற்பியைச் சந்திக்க ஆவல் துள்ளுகிறது...'' என்று இராஜசிம்மன் மலர்ந்த முகத்துடன் கூறினான்.

⁂ ⁂ ⁂

பரமேச்வர வர்மர் மீண்டும் பெருமூச்சு விட்டார். மல்லிநாதர் எனும் அந்தக் கலைஞர் வாழும் இடத்தில் ஒரு காலத்தில் சிற்பக்கூடமே இருந்தது. மகேந்திர வர்மரும், நரசிம்ம வர்மரும் நாள் தவறாமல் சென்றனர் அங்கே. அந்த இடத்திலே நரசிம்ம வர்மர் பரிவாதினியை* மீட்டி இன்னிசை எழுப்பி யிருக்கிறார்...'' என்று அவர் கூறியவுடன் இராஜசிம்மன் பரபரப்புடன், ''ஆமாம்... ஆமாம்! திக்கெட்டும் புகழும் அந்த அற்புத வீணை எங்கே? தந்தையே, பரிவாதினி எங்கே? மாளிகை முழுமையும் தேடிப் பார்த்து விட்டேன். பரிவாதினியைக் காணவில்லை. பரிவாதினியை நான் காண வேண்டும். அதை மீட்ட வேண்டும்... அதன் இன்னிசையோடு இன்னிசையாய் நான் மாற வேண்டும்...'' என்று பரபரப்புடன் கூறினான்.

இராஜசிம்மன் முகத்தில் ஒளி வீசும் ஆர்வச் சுடரை இமைக்காமல் நோக்கிக் கொண்டிருந்த மன்னர், ''பரிவாதினி விலை மதிப்பற்ற பொக்கிஷம். அதை மட்டும் கவர்ந்துவிடச் சாளுக்கியர்கள் எவ்வளவோ சூழ்ச்சி செய்திருக்கின்றனர். யுத்த காலத்தில் அதை மிகவும் ஜாக்கிரதையாகப் பாதுகாக்க வேண்டும் என்பதற்காகப் பொக்கிஷங்கள் இருக்கும் நிலவறையில் சேர்த்துவிட்டேன். அந்த அற்புத வீணையை நான் கண்டு பல ஆண்டுகள் ஆகிவிட்டன. தூசு படிந்து போயிருக்கும். ஹூம்... தக்கவர் கரம் பட்டுத்தான் அதன் நாதம் ஒலிக்க வேண்டும் என்று விரும்பினேன். பரிவாதினியை மீட்டுவது அவ்வளவு எளிதன்று மகனே. மகேந்திர வர்மர் ஏழிசையை அந்த அற்புத வீணையின் மூலம் ஸ்வரப்படுத்தி ஒலிக்கச் செய்தார். இசை அறிவும் எனக்கில்லை... பொழுதும் இல்லை. அடடா... பொழுதில்லை பொழுதில்லை என்று சொல்கிறேனே! பொழுது எப்போதும் போல்தான் இருக்கிறது. ஆனால் என் மனம்தான் வேறு எங்கெங்கோ தாவுகிறது'' என்றார்.

அப்போதே நிலவறைக்குச் சென்று 'பரிவாதினி'யைக் காண வேண்டும் என்ற துடிப்பு இராஜசிம்மனுக்கு ஏற்பட்டது. அவனது உள்ளத் துடிப்பு உடலில் தெரிந்தது.

---

* ('பரிவாதினி' என்ற வீணையை மகேந்திர வர்மர் முதன்முதலில் கண்டுபிடித்தார். அந்தச் சம்பவத்தை அடிப்படையாகக் கொண்ட நாவலொன்றை ஆசிரியர் எழுதியுள்ளார்.)

பரமேச்வர வர்மரும், இராஜசிம்மனும் மாளிகையின் நடுவே இருந்த நிலவறையை நோக்கிச் சென்றனர். பரிவாதினியைக் காணப் போகிறோம் என்ற ஆவல் இராஜசிம்மன் உள்ளத்தில் கிளுகிளுப்பை ஏற்படுத்தியது. நெடு நாட்களாகக் காணாத காதலியைக் காணும் ஆர்வமும், துடிப்பும் அவனிடம் நிறைந்திருந்தன.

பல்லவ மாளிகையின் தென்கோடியில் இருந்த கூடத்திற்குப் பரமேச்வர வர்மரும் இராஜசிம்மனும் வந்தனர். பரமேச்வர வர்மர் நடந்து வந்து பல நாட்களாகிவிட்டன. ஆதலால் அனைவரும் வியப்புடன் நோக்கலாயினர். பணிபுரிவோர் மேலும் பயபக்தியுடன் தத்தம் பணிகளைச் செய்யலாயினர்.

அந்த கூடத்திற்குள் மன்னரின் மெய்க்காவலர் மட்டும் நுழைந்தார். அங்கே சுவரில் வண்ண ஓவியங்கள் பல தீட்டப்பட்டிருந்தன. பதப்படுத்தப்பட்ட கலைமான்களின் முகமும், யானைத் தந்தங்களும் ஆங்காங்கே மாட்டப்பட்டு அலங்காரமாகத் திகழ்ந்தன. சர விளக்குகள் மேல் விதானத்தினின்று தொங்கின. கீழே உயர்தரக் கம்பளங்கள் விரிக்கப்பட்டிருந்தன. பல ஆசனங்கள் அங்கே திகழ்ந்தன. ஆனால் சாளரக் கதவுகள் அடைக்கப்பட்டிருந்தன.

அரச தம்பதியர் தனித்திருந்து பேசும் இடமாக ஒரு சமயம் பயன்பட்டு வந்த அந்தக் கூடம் வெகு காலம் பயன்படுத்தப் படாமலேயே இருந்தது. பரமேச்வர வர்மரும், இராஜசிம்மனும் மெய்க்காவலர் இருவரும் மட்டும் அந்தக் கூடத்தில் இருந்தனர். பரமேச்வர வர்மர் மெல்ல நடந்து மான் கொம்பு ஒன்றைப் பிடித்துத் திருகினார். சுவரில் பேழை போல் தோன்றிய இடத்தில் வழி ஒன்று தோன்றியது. அங்கிருந்து கீழே இறங்கிச் செல்லப் படிக்கட்டுகள் தெரிந்தன. தீவர்த்தி ஏற்றப்பட்டது. அதன் ஒளியில் மெல்ல அனைவரும் படிக்கட்டுகளில் இறங்கிச் சென்றனர். சிறிது தொலைவு சென்ற பிறகு மீண்டும் விசாலமான கூடமொன்று தென்பட்டது. பூமி மட்டத்திற்கு அடியில் இருந்தபோதிலும் மிதமான தட்பவெப்பத்துடன் சூளுமை நிறைந்திருந்தது.

பரமேச்வர வர்மர் தன் மகனை நோக்கி, ''நமது மூதாதையர்கள் மிகவும் பாடுபட்டுச் சேமித்து வைத்த செல்வங்கள் இவை. எங்கிருந்தும் கொள்ளையடிக்கப்பட்டோ கவர்ந்து வரப் பட்டவையோ அன்று. சிற்றரசர்களும், கோட்டத் தலைவர்களும்

உவந்தளித்தனர். மக்களின் திரைப்பணத்தில் சிக்கனச் செலவு போக மிகுதியானவை, அயல்நாட்டு வாணிகத்தால் கிடைத்தவை; இவற்றைப் பாதுகாப்பதுதான் நம் பெரும் பொறுப்பு'' என்றார்.

அவர் சுட்டிக் காட்டிய இடத்தில் வைர வைடூரியங்களும், தங்க ஆபரணங்களும், இரத்தினக் கோமேதகங்களும் குவிந்து கிடந்தன. மற்றொரு இடத்தில் ஏராளமான ஆயுதங்கள் இருந்தன. ஓரிடத்தில் பட்டுப் பட்டாடைகள் கிடந்தன. யானைத் தந்தங்களும் சந்தனக் கட்டைகளும் ஓரிடத்தில் இருந்தன.

பரமேச்வர வர்மர் மற்றொரு இடத்தைக் காட்டினார். பரம்பரையாக இருந்து வந்த பலவித வாத்தியக் கருவிகள் இருந்தன. சமுத்திரக்கோஷம் எனும் போர்ப்பறை அறிவிக்கும் வாத்தியம் ஒன்று பிரம்மாண்டமாக இருந்தது. அது இரண்ய வர்மருக்குச் சொந்தமானது.

இராஜசிம்மனுக்கு அவற்றின் மீது நாட்டம் செல்லவில்லை. பரிவாதினியைக் காண வேண்டும் எனும் பரபரப்பு நெஞ்சை வந்து முட்டியது.

பரமேச்வர வர்மர் மெல்லக் காவலருள் ஒருவரை அழைத்து, நீண்ட பேழை ஒன்றைச் சுட்டிக்காட்டி அதனுள் இருக்கும் 'பரிவாதினி'யை எடுத்து வருமாறு கூறினார். மிகவும் பயபக்தியுடன் அக்காவலன் அவர் சுட்டிக்காட்டிய இடம் சென்று பேழையைத் திறந்தான். அவனிடமிருந்து அச்சத்தால் கூவும் குரல் எழுந்தது.

அந்தப் பேழையுள் 'பரிவாதினி' காணப்படவில்லை. இராஜசிம்மன் விரைந்து அந்தப் பேழையை நோக்கினான். அது மௌனமாகத் தன்னுள் அடக்கியிருந்த அந்த அற்புத வீணையைப் பறிகொடுத்து விட்டுக் காட்சியளித்தது.

அந்த நிலவறைக்குள் வேற்று மனிதர் ஒருவரும் நுழைய முடியாது. அந்த இரகசிய வழியும் ஒருவருக்கும் தெரியாது. பின் பரிவாதினி காணாது போய்விட்டது அதிசயமாகத் தானிருக்கிறது!

நிலவறைக்குள் தான் பரிவாதினியை வைத்திருந்தனர் என்று எப்படி உறுதியாகக் கூற முடியும்? - இராஜசிம்மனால் தந்தையை அவ்வாறு கேட்க முடியவில்லை. ஆனால் மன்னரே மெல்லக் கூறினார்.

''பல ஆண்டுகளுக்கு முன்பு - சாளுக்கியர்கள் படையெடுப்பு அபாயத்தை அறிந்தபோது, ஒருநாள் நானே பரிவாதினியைக்

குழந்தை போல் அணைத்து வந்து இந்த இடத்தில் வைத்தேன். அதனால் வேறு எங்கும் 'பரிவாதினி' சென்றிருக்க நியாய மில்லை...''

இராஜசிம்மன் நிலவறையைச் சுற்றிப் பார்த்தான். தரையிலே புழுதி பட்டிருந்த ஓர் இடத்தில் சில காலடிச் சுவடுகள் தெரிந்தன. அதைக் கூர்ந்து கவனித்து அது செல்லும் வழியே சென்றான். வடகோடியில் ஓரிடத்தில் அந்த அடிச்சுவடு முடிவடைந்தது. அத்துடன் நிலவறை முடிவடைந்துவிட்டது.

நிலவறைக்குள் வேறு யாரோ வந்திருக்க வேண்டும். அதுவும் சில நாட்களுக்குள்தான் பரிவாதினியைக் களவு புரிந்து சென்றிருக்க வேண்டும் என்பது தெரிந்தது. அங்கிருந்து வெளியே செல்ல எங்கு வழியிருக்கிறது என்று இராஜசிம்மன் சிந்தித்தான். கூர்ந்து கவனித்தபோது மேல்தளம் செல்லச் சுவரில் பள்ளங்கள் செதுக்கியிருப்பது தெரிந்தது.

காவலரிடம் கூறாமல் இராஜசிம்மனே அந்தப் பள்ளங்களில் கால் வைத்து ஏறினான். மேல் தளத்தில் இருவர் எளிதில் வெளியே செல்ல வழி இருந்தது. அந்த வழியும் பிறகு ஏற்படுத்தப்பட்டது போன்றே தோன்றியது. ஏனெனில் நிலவறை எங்கிருக்கிறது, எங்கே முடைவடைகிறது என்றே யாராலும் கண்டுபிடிக்க முடியாத அளவுக்கு இருந்தது.

கீழே நின்றவர்களுக்குச் சைகை காட்டிவிட்டு இராஜசிம்மன் அந்த வழியாக வெளியே வந்தான்.

மாளிகையின் நந்தவனத்துக் கோடியில் அடர்ந்த மரங்கள் நிறைந்த இடமாக அது இருந்தது.

இராஜசிம்மன் உள்ளத்தில் திகைப்பும், வியப்பும், சீற்றமும், ஏமாற்றமுமாக நிறைந்திருந்தன. ஏராளமான செல்வங்கள் நிலவறையில் இருக்கும்போது பரிவாதினியை மட்டுமே கவர்ந்து சென்றவன் யாரென்று முடிவு செய்ய இராஜசிம்மனுக்கு அதிக நேரமாகவில்லை.

●

# 13. உடனே அழைத்து வா!

**கா**ஞ்சனாவின் வீடு கலகலப்பற்றிருந்தது. வழக்கமாக முன் கூடத்தில் நடைபெறும் பாட்டும் ஆட்டமும் அன்று காணோம். காஞ்சனாவும் மேல் மாடத்துத் தெற்குப் பலகணி அருகே அமர்ந்து கண்ணுக்கு எட்டிய தொலைவு வரை பார்த்துக் கொண்டிருந்தாள். பலகணியின் மீன் வடிவமுள்ள கண்களின் வழியாகக் காற்று பாய்ந்து வந்து கொண்டிருந்தது. தென்றல் மாடம் என்றுதான் அந்த இடத்திற்குப் பெயர். உல்லாசமாக அமர்ந்து ரசிக்கும் மனப்பான்மையோடு அன்று காஞ்சனா இல்லை. தோட்டத்தில் தெரியும் செயற்கை வாவியிலே அல்லியும் ஆம்பலும் நிறைந்திருந்தன. அதன் இலைகளின் மீது முத்துமுத்தாக நீர்த்துளிகள் அசைந்து கொண்டிருந்தன. அதே மனநிலைதான் இப்போது அவளுக்கும். அவள் அங்கே வந்து உட்கார்ந்தபோது கீழ்க்கூடத்தில் அவளுடைய சகத் தோழிகளும், பணிப் பெண்களும் இடும் கூச்சல் நாராசமாக அவள் செவியில் வீழ்ந்தது.

பொதுவாக அவ்வேளையில் யாராவது மெல்லிய குரலில் பாடுவார்கள். பாட்டில் கேலி நிறைந்திருக்கும்; சிருங்காரக் குறிப்புகள் நிறைந்திருக்கும். விரக தாபத்தால் வாடும் மங்கையின் உணர்ச்சிகள் நிறைந்திருக்கும். அதற்கு ஏற்றாற்போல் வாத்தியக் கருவிகள் ஒலிக்கும். பாதச் சலங்கை ஒலிக்க ஒரு மங்கை நாட்டியமாடுவாள். அவளது விரல் புலப்படுத்தும் பாவங்கள் அங்கே அமர்ந்திருக்கும் ஆடவரின் உள்ளத்தை அப்படியே கிள்ளி எடுத்து விடுவது போல் தோன்றும். இதயம் கிள்ளப் பட்டாலும் போகிறது என்று அழகு மங்கையரின் முகத் தழகையும், அவர்கள் இசைக்கும் பாடல் நேர்த்தியையும், அங்கலாவண்யங்களையும் கண்டு அங்கேயே ஏங்கிய கண்களுடன் அமர்ந்திருப்பர் பலதரப்பட்ட ஆடவர்கள். காஞ்சனாவுக்கு இன்று ஏனோ அவை ஏதும் பிடிக்கவில்லை.

“மஞ்சுளா” என்று உரக்கத் தன் தோழியைக் கூப்பிட்டாள். உடனே கூடத்தில் இருந்தவர்களைப் போகுமாறு சொல்லக்

கட்டளையிட்டாள். பாட்டையும் கூத்தையும் நிறுத்திவிடுமாறு சீறினாள். மஞ்சுளா ஏதோ கூற வாயெடுத்தாள். காஞ்சனாவின் உள்ளத்தில் நிறைந்திருந்த வெறுப்புணர்ச்சி சீறி வந்தது. மஞ்சுளா புரிந்து கொண்டாள்.

கீழ்க் கூடத்தில் திடீரென இசையொலி நின்றது. பாடிக் கொண்டும், இசை மீட்டிக் கொண்டும் இருந்த பெண்கள் எழுந்து உள்ளே போய்விட்டனர். நகரத்துப் பல துறைகளைச் சேர்ந்த ஆடவர்களும் ஏக்கப் பெருமூச்சுடன் செல்ல ஆரம்பித்தனர். ஆனால் பிடிவாதமாகக் குதிரைப் படைத்தலைவன் மட்டும் அந்தக்கூடத்து மிகப் பெரிய தூண்களின் மறைவில் நின்று கொண்டதை எவரும் கவனிக்கவில்லை போலும்.

எல்லோரும் சென்றுவிட்ட விபரத்தை மஞ்சுளா காஞ்சனாவிடம் சென்று தெரிவித்தாள். அதைக் காதில் போட்டுக் கொள்ளாமலே, ''கடைத் தெருவிற்குப் போன சித்திராங்கி வந்துவிட்டாளா?'' என்று கேட்டாள். மாவடு பிளந்தது போன்ற கண்களில் ததும்பும் வேதனையுடன்.

காஞ்சனாவுக்குச் சில நாட்களாக வேதனைதான். விரக வேதனையுடன் கலந்த இனம்புரியா வேதனை. மாமல்ல புரத்தினின்று வண்டியைத் தொடர்ந்து வந்து கொண்டிருப்பார் என்று நினைத்துக் கொண்டிருந்த சாளுக்கிய இளவரசன் காஞ்சிக்கு வந்து சேரவில்லை.

விஜயன் என்று எண்ணிக் கொண்டிருந்த சாளுக்கிய இளவரசனுடன் மாமல்லையில் களிப்புற்ற அந்த இனிய நினைவுகள் அவள் மனக்கண் முன் தோன்றியவாறிருந்தன. அவனது வைரம் பாய்ந்த உடற்கட்டு; ராஜ களை ததும்பும் முகம்; ஆகா! வாழ்நாளெல்லாம் அவனுடனேயே கழித்துவிடலாம் என்ற எண்ணங்கூட அவளுக்குத் தோன்றியது. ஆனால் அவனைக் காணோம். காஞ்சிக்கு வந்து சேர்ந்து விடுவதாக உறுதியுடன் கூறிய அவன் இன்னும் வராதது காஞ்சனாவை வேதனைக்குள்ளாக்கியது. எந்தக் காரியத்திலும் அவளுக்கு நாட்டம் செல்லவில்லை.

இரவு வெகுநேரம் படுக்கையில் புரண்டு கொண்டிருப்பாள். யாராவது வரும் காலடியோசை கேட்டால் விஜயன் வரும் செய்தியை அறிவிக்கத்தான் பணிப்பெண் வருகிறாள் என்று எண்ணுவாள். ஆனால் பால் செம்புடன் வருவாள் பணிப்பெண். பசி வயிற்றைக் கிள்ளும்; ஆனால் உதடுகளோ பால் எதற்கு என்று முணுமுணுக்கும். தென்றல் சுகமாக வீசும்; ஆனால்

உடல் எங்கும் வியர்த்து விட்டிருக்கும். திடீரென்று இலவம் பஞ்சு போன்ற அந்தத் தலையணை மீது அவளுக்கு வெறுப்புத் தோன்றும். அதைச் சுற்றித் தரையில் வீசுவாள். பிறகு மெல்ல எழுந்து அந்தத் தலையணை மீது மார்பழுந்தத் தரையிலேயே படுத்துக் கொள்வாள். பளிங்கு போன்ற அந்தத் தரையில் அவள் முகம் தெளிவாகத் தெரியும்! தந்த நிற முகத்தில் கருவிழிக் கண்களுக்கு அடியில் கருவட்டமிட்டிருப்பதும் புலப்படும்.

உடனே விரைந்தெழுந்து மாளிகைச் சுவரில் பதிக்கப் பட்டிருக்கும் வட்டக் கண்ணாடியின் முன் நின்று கொள்வாள்.

∴ ∴ ∴

இரண்டு நாட்களில் அவள் முகம் வாடிவிட்டது. அவளுள்ளங் கவர்ந்த இனிய விஜயனைத் தேடிக் கண்டுபிடித்தாக வேண்டும் என்ற பரபரப்பு அவள் உள்ளத்தில் எழுந்தது. சித்திராங்கியைத் தவிர வேறு யாரால் அதை நிறைவேற்ற முடியும் என்று அவளை அனுப்பினாள். ஒவ்வொரு கணமும் அவள் வருகையை எதிர்பார்த்து இருந்தாள். தெற்கு மாடத்துப் பலகணி வழியே வரும் காற்றும் சுட்டது; காதிலே விழும் இசை வதனையைத் தந்தது. சிரிப்பொலி, கூரிய அம்பு உடலில் ...தப்பது போலத் தோன்றியது.

பைரவனை அலட்சியப்படுத்தி அனுப்பினோமே என்று ...ண்ணி நொந்து கொண்டாள். "மஞ்சுளா, பைரவன் வந்தானா?" என்று கவலையுடன் கேட்டாள்.

"இல்லையே அம்மா" என்று அவள் ஈனஸ்வரத்துடன் கூறினாள். சித்திராங்கியையும் காணோம். 'ஹூம்' என்ற பெருமூச்சு காஞ்சனாவிடமிருந்து எழுந்தது. அப்போது மற்றொரு பணிப்பெண் அங்கு வந்து குதிரைப்படைத் தலைவர் கீழ்க்கூடத்தில் இருப்பதாகவும், எவ்வளவு கூறியும் அவர் செல்ல மறுப்பதாகவும் கூறினாள்.

குதிரைப்படைத் தலைவர் குமாரதேவன் காஞ்சனாவின் இல்லத்திற்குப் பலமுறை விஜயம் செய்திருக்கிறார். ஒரு தடவையாவது காஞ்சனாவை நேரே சந்தித்துப் பேச அவரால் முடியவில்லை.

"நான் யாரையும் பார்க்க விரும்பவில்லை என்று சொல்லிவிடுவதுதானே..." என்று மஞ்சுளாவின் மீது சீறி விழுந்தாள். "சொன்னேனம்மா... ஆனால் அவர் தங்களிடம் மிகவும் அவசரமாக ஏதோ பேச வேண்டுமாம்" என்றாள்.

"அதை நீயே கேட்டுக் கொள்வதுதானே?"

''நான் கேட்டுக்கொள்ளத் தயார்தான். பிடிவாதமாக அவர் தங்களிடம் தெரிவிக்க விரும்புகிறார்!''

காஞ்சனா சீறினாள்: ''என்னிடம் நேரிடையாக சந்தித்துச் சொல்லியாக வேண்டும் என்றால் இந்த ஜன்மத்தில் இல்லை என்று அவரிடம் சொல்லிவிடு.''

மஞ்சுளா கீழே சென்றுவிட்டு மீண்டும் திரும்பி வந்தாள்.

''சித்திராங்கி வந்துவிட்டாளா?'' என்று காஞ்சனா கேட்டாள்.

மஞ்சுளா திருதிருவென விழித்தாள். சிறிது நேரத்திற்கு முன்தானே சித்திராங்கி வரவில்லை என்பதைப் பற்றிச் சொன்னாள்... சித்திராங்கி – சித்திராங்கி – சித்திராங்கி... காஞ்சனாவுக்கு எப்போதும் அவள் நினைவுதானா? அவள் ஒசத்தியாகிவிட்டாளோ!

''என்ன... நான் கேட்பது காதில் விழவில்லையா? சித்திராங்கி வந்துவிட்டாளா...?'' மஞ்சுளா அதைக் காதில் போட்டுக் கொள்ளாதவளைப் போல, ''எவ்வளவோ சொல்லிவிட்டேன், அவர் கேட்கவில்லை. காலமெல்லாம் காத்திருக்கச் சித்தமா யிருக்கிறாராம்'' என்றாள்.

காஞ்சனாவுக்குச் சீற்றம் பொங்கியது. தன்னிடத்தை விட்டுத் துள்ளி எழுந்து, ''காலமெல்லாம் காத்திருப்பாராமா? ஏண்டி, காவல்காரரைக் கூப்பிட்டுக் கழுத்தைப் பிடித்துத் தள்ளும் தைரியம் உனக்கு இல்லாமல் போய்விட்டதா?'' என்று கூறினாள்.

மஞ்சுளா மெல்ல நகைத்தாள்.

''ஏனடி சிரிக்கிறாய்?''

''அவர் குதிரைப்படைத் தலைவர். நினைத்தால் நம்மை ஊரைவிட்டே ஓட்டி விடுவாரம்மா...''

இதைக்கேட்ட காஞ்சனாவின் கோபம் இன்னும் அதிகமாகியது.

''என்ன சொன்னாய்? என்னை ஓட்டிவிடும் அளவுக்குத் தைரியமுடையவர் இந்த ஊரில் இருக்கிறாரா? அதுவும் ஒரு படைவீரன் ஓட்டுவது என்றால் காஞ்சியில் ஏதாவது ராஜ்ய பரிபாலனம் நடைபெறுகிறதோ இல்லையோ? உன்னைப் போன்று பயந்து நடுங்கும் கோழைகளை முதலில் ஓட்ட வேண்டும்... போடி... ஏன் நிற்கிறாய்? நான் அவனுடைய கிழ முஞ்சியைப் பார்க்கப் போவதில்லை என்று கண்டிப்பாகக் கூறிவிடு...''

மஞ்சுளா தயக்கத்துடன் திரும்பினாள். ஆனால் நல்ல வேளையாக அப்போது சித்திராங்கி படியேறி வந்து கொண்டிருந்தாள். மஞ்சுளா அவள் காதில் மட்டும் கேட்கும் வண்ணம், ''எங்கேயடி போய்த் தொலைந்தாய்... இதுதான் சமயம் என்று ஊரைச் சுற்றி வந்தாயா... உனக்கு வேண்டிய அந்த நெட்டையன் வீட்டிற்குப் போயிருப்பாய்...'' என்று கூறவும் சித்திராங்கி அவளை விழுங்கி விடுபவளைப்போல் பார்த்து, ''ஏன், நீயும் அம்மாவிடம் சொல்லிவிட்டு ஊர் சுற்றிவிட்டு வருவதுதானே?'' என்று கூறவும், சித்திராங்கி வருவதைக் கண்டு ஆவல் மிகுதியால் துள்ளி ஓடிவந்த காஞ்சனா, ''சித்திராங்கி, என்ன செய்தி கொண்டு வந்தாய்? விஜயனைக் கண்டாயா? இல்லாவிடில் பைரவனையாவது பார்த்தாயா?'' என்று கேட்டாள்.

மிகவும் களைப்படைந்திருந்தவளைப் போல் நடித்த சித்திராங்கி, ''பைரவனைப் பார்த்தேன்... கூனன் ஒருவனைப் பார்த்தேன்... இன்னும் இன்னும் தங்களைக்கூடப் பார்த்தேன்...'' என்றாள்.

விஜயனைப் பற்றி ஏதும் கூறாததைக் கண்ட காஞ்சனா, ''ஏண்டி... குள்ளனைப் பார்த்தாய், கூனனைப் பார்த்தாய், இன்னும் கடைவீதியிலுள்ளவர்களையெல்லாம்தான் பார்த்திருப்பாய்... என்னையும் பார்த்தேன் என்கிறாயே... சித்தம் உனக்குக் கலங்கிவிட்டதோ?'' என்று கேட்டாள்.

மஞ்சுளா நகைத்தாள். ஆனால் சித்திராங்கி பரபரப்பு மிகுந்த குரலில், ''உண்மைதானம்மா... நான் தங்களையேதான் கடைவீதியில் கண்டுவிட்டதாக எண்ணி அம்மா என்று கூடக் கூப்பிட்டு விட்டேன்'' என்றாள்.

∴ ∴ ∴

சித்திராங்கி கூறியதிலும் உண்மை இல்லாமல் இல்லை. சித்திராங்கி கடைவீதியின் வழியே மெல்ல நடந்து சென்றாள். பூக்கடைக்காரரும், சந்தனம், புனுகு, ஜவ்வாது போன்ற வாசனைத் திரவியம் விற்கும் கடைக்காரரும் அவளுக்கு அறிமுகமானவரே. சித்திராங்கியைக் கண்டவுடன் சந்தனக் கடைக்காரர் உபசரித்து வரவேற்றார். பன்னீர் செம்பிலிருந்து உயர்தரப் பன்னீரைத் தெளித்தார்.

''மேற்குக் கரையிலிருந்து உயர்தர சந்தனம் வந்திருக்கம்மா... உங்கள் தலைவியிடம் சொல்லுங்க...'' என்றார்.

அந்தக் கடையில் பேசிக் கொண்டிருந்த போதுதான் சுந்தரியும் கூனனும் அந்த வழியே சென்றனர். சித்திராங்கி ஒருகணம் திடுக்கிட்டாள். காஞ்சனா சாதாரண ஆடை ஆபரணங்களுடன் அந்தப் பக்கம் வருவதாக அவள் எண்ணினாள். காஞ்சனா செய்தாலும் செய்வாள். 'சில நாட்களாக அவளிருக்கும் மனநிலையில் சந்நியாசினி போன்ற வேடம் அணிந்தாலும் வியப்படைவதற்கில்லை' என்று எண்ணியவளாக அவளருகே செல்ல விரைந்தாள்.

அதற்குள் கூனன் சில குறும்புக்கார இளைஞர்களைத் தாக்கி வீழ்த்தியவாறிருந்தான். பாய்ந்து பாய்ந்து குட்டிச் சித்தன் தாக்குவதையும், காஞ்சனா என்று எண்ணிய சுந்தரி பயத்துடன் சந்தனக் கடையருகே ஓடிவந்து நிற்பதையும் கண்ட சித்திராங்கிக்குச் சிறிது நேரம் ஏதும் புரியவில்லை. பிறகுதான் மனத்தைத் திடப்படுத்திக் கொண்டு சுந்தரியின் அருகே நெருங்கினாள். அவள் காஞ்சனா அல்லள். ஆனால் காஞ்சனாவைப் போன்று அச்சில் வார்த்தது போன்ற முகத் தோற்றம். நகர வாழ்க்கையாலும், போஷாக்கு மிகுந்த உணவினாலும் காஞ்சனா தளதளவென்றிருந்தாள். சுந்தரி அலைச்சலால் சற்று வாட்டமுற்றிருந்தாள். காஞ்சனா பட்டாடை உடுத்தியிருப்பாள். சுந்தரி ஆடம்பரமற்ற பஞ்சாடை உடுத்தியிருந்தாள். ஆனால் இருவரது முக ஒற்றுமை, அங்க எழில் எல்லாம் ஒன்றுபோல் இருந்தமையால் காண்போரைத் திகைத்து மயங்கத்தான் செய்தது.

இந்த அதிசய ஒற்றுமையைக் கண்ட சித்திராங்கி அபூர்வமாக ஏதோ ஒன்றைக் கண்டுபிடித்துவிட்ட வியப்பில் ஆழ்ந்தாள். நகரக் காவலர்கள் கூனனையும், வம்பு செய்த இளைஞர்களையும், சுந்தரியையும் அழைத்துக்கொண்டு சென்றபோது மேலும் என்ன நடக்கிறது என்று அறிய அவர்களைத் தொடர்ந்தாள்.

குட்டிச் சித்தனையும், சுந்தரியையும் குறும்பு செய்த வாலிபர்களையும் அழைத்துக்கொண்டு நகரக் காவலர்கள் செல்லும்போது குட்டிச் சித்தன் கேட்டான்:

''எங்களை எங்கே அழைத்துச் செல்கிறீர்கள்?''

"ஏன், மிகவும் பாதுகாப்பான இடத்திற்குத்தான்..." என்றான் காவலருள் ஒருவன்.

''நாங்கள் தங்கியிருக்கும் இடமும் பயமற்ற இடம்தான்; அங்கேயே போய்விடுகிறோம்'' என்றான் குட்டிச் சித்தன்.

''எங்கே தங்கியிருக்கிறீர்கள்?''

குட்டிச் சித்தன் தான் வண்டியோட்டி வந்ததையும், சிற்பம் ஒன்றைக் கொண்டு வந்திருப்பதையும், பிறகு மாளிகையை அடைந்து மன்னரைக் காணவிருப்பதையும் தெரிவித்துத் தங்களைப் போக அனுமதிக்கக் கேட்டுக் கொண்டான்.

காவலர் ஏதும் பேசவில்லை. கடைசியாக ஓரிடத்தை அவர்கள் அடைந்தனர். அங்கே திண்ணையில் மீசையை முறுக்கிவிட்டு, பெரும் தலைப்பாகைக் கட்டி அமர்ந்திருந்தார் காவல் அதிகாரி. அவர் இவர்களை ஒருமுறை ஏறெடுத்து நோக்கிவிட்டு ஏதோ கட்டளையிட்டார். இளைஞர் இருவரைக் காராக்கிருகத்தில் அடைக்கும்படியும், குட்டிச் சித்தனையும் சுந்தரியையும் விருந்தினர் தங்குவதற்காக ஏற்பட்ட மாளிகையில் காலை வரை இருக்கச் செய்யுமாறும் கட்டளையிட்டார்.

சித்திராங்கி நடந்த இவ்வளவு செய்தியையும் காஞ்சனாவிடம் கூறினாள். காஞ்சனாவுக்குக் கேட்கப் புதுமையாக இருந்தது. வியப்பாகவும் இருந்தது.

''யார் அந்த சுந்தரி?'' என்று கேட்டாள் காஞ்சனா.

''இந்த ஊரைச் சேர்ந்தவர்கள் இல்லை போல் தோன்றுகிறது. சிற்பம், மாமல்லபுரம், அரண்மனை என்று அவர்கள் பேசிக் கொண்டார்கள். மன்னரைக் காண வந்ததாகக் கூறிக் கொண்டார்கள்' என்றாள் சித்திராங்கி.

''மன்னரையா? எதற்காக?''

''எனக்கு எப்படியம்மா தெரியுமா?''

''ஏன் அவர்களை விருந்தினர் மாளிகையில் அடைத்து வைத்திருக்கிறார்கள்?''

''அடைத்து வைக்கவில்லையம்மா... தங்கியிருக்குமாறு தான் காவலர் தலைவர் சொன்னார்...''

''ஓகோ! அவர்களை இப்போதே இங்கே அழைத்து வர முடியாதா? என்னைப் போலவே மற்றொருத்தி இருக்கிறாள் என்றால் அவளை நான் காண வேண்டாமா? நான் நிச்சயம் அவளைக் காணவேண்டும். நான் என்று நீ தடுமாறி ஒரு கணம் ஏமாந்ததுபோல் வேறு யாராவது ஏமாந்துவிட்டால்... ஏன் விஜயனே ஏமாந்துவிட்டால்? என் மீது கசப்புக் கொண்டுவிட்ட பைரவனே காண்கிறான் என்றே வைத்துக்கொள்... அவன் தனக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்வான். என்னைப் போல் அவளைத் தோன்றுமாறு செய்துவிடுவான். அதனால்

அந்தச் சுந்தரியை வெளியே நடமாட விடக்கூடாது. உடனே அவளைப் போய் அழைத்து வந்துவிடு... என்ன தெரிந்ததா?'' என்றாள்.

சித்திராங்கியின் உடல் ஒருமுறை சிலிர்த்தது. நினைத்தது உடனே நடக்க வேண்டும் என்று துடிக்கிறாளே... விருந்தினர் மண்டபத்திலிருந்து அவளை அழைத்து வருவது அவ்வளவு எளிதான காரியமா? என்று சித்திராங்கி எண்ணினாள்.

''என்ன தயங்குகிறாய்...?'' என்று காஞ்சனா கேட்டாள்.

சித்திராங்கி மெல்ல வார்த்தையை மென்று விழுங்கி, ''அவ்வளவு சுலபமாக முடியாதே... கட்டுக் காவல் அதிகம்... மேலும் காவல்கூடத் தலைவரின் உத்தரவை யாரும் மீறி நடக்க முடியாதே...'' என்றாள்.

மஞ்சுளாவுக்கு ஒரு யோசனை தோன்றியது. ''ஏனம்மா... குதிரைப் படைத்தலைவர் உதவியுடன் அவர்களை அழைத்து வரமுடியாதா?'' என்று மெல்லக் கேட்டாள்.

''ஆகா; மிக நல்ல யோசனை. அடாடா; அந்தக் கிழ மூஞ்சியை ஓட்டிவிட்டோமே... ஓடு ஓடு அந்த வீர சிகாமணியை அழைத்து வா... உம்...'' என்று காஞ்சனா குதித்தாள்!

∴ ∴ ∴

கீழ்க் கூடத்தின் பெருந் தூணுக்கருகே குதிரைப் படைத் தலைவன் குமாரதேவன் அமர்ந்திருந்தார். அவருக்கு வயது எழுபத்தைந்தைத் தாண்டியிருக்க வேண்டும். ஆனால் அவரைக் காண்பவர்கள் அவ்வளவு பிராயம் என்று மதிப்பிடமாட்டார்கள். முடி அதிகம் நரைக்கவில்லை. காஞ்சனாவின் வீட்டிற்கு அவர் அடிக்கடி வருவதை அறிந்த மற்ற வீரர்கள் ஒருவரோடொருவர் இரகசியமாகப் பேசிக் கொண்டனர். வயது ஆகியும் ஆசை விடவில்லை என்று கூறினர். அவரைப் பின்தொடர்ந்து மறைந்து சிலர் வந்து அவர் காஞ்சனாவின் வீட்டிற்குத்தான் செல்கிறார் என்பதை உறுதிப்படுத்திக் கொண்டனர்.

குமாரதேவன் எதையும் இலட்சியம் செய்வதில்லை. காஞ்சனாவைச் சந்தித்துவிட வேண்டும் என்னும் ஒரே பிடிவாதம் அவரிடமிருந்தது. சந்தித்த பிறகு அவளிடம் சிலவற்றைப் பேச வேண்டும் என்ற பல நாள் ஆவல் அவரிடமிருந்தது. காஞ்சனாவைக் காணவே முடியவில்லை. அன்று எப்படியும் சந்தித்துவிடுவது என்று பிடிவாதத்துடன் அமர்ந்திருந்த அவரெதிரே மஞ்சுளா வந்து நின்றாள்.

''காஞ்சனா அம்மா உங்களைப் பார்க்க விரும்புகிறார்'' என்றாள். அந்தச் சொல் அவர் காதில் ஒலித்ததோ இல்லையோ அவர் பரபரப்புடன் தன் ஆடையைச் சரி செய்து கொண்டு இடது கையால் முகத்தை ஒருமுறை தடவிவிட்டுக் கொண்டு, ''அதற்காகத் தானே காத்திருக்கிறேன்'' என்றார்.

''அவரைச் சந்திக்கு முன்பு நீங்கள் ஒரு காரியம் செய்ய வேண்டும்.''

''ஒன்றென்ன, ஓராயிரம் செய்கிறேன். அவள் கட்டளையிட வேண்டாம்; நீயே சொன்னால்கூடப் போதுமம்மா, காஞ்சனாவுக்கு என்னால் ஆக வேண்டியது ஏதாவது இருக்கிறதா?''

''ஆகா; இருக்கிறது. இப்போதே விருந்தினர் மண்டபத்திற்குப் போக வேண்டும்.''

''விருந்தினர் மண்டபத்தில் என்ன? வெளி நாட்டவர் எவரேனும் வந்திருக்கிறார்களா? ஆமாம்... ஆமாம்... சீனத்திலிருந்து பட்டு வணிகர்கள் வந்திருக்கின்றனர். அவர்களைக் காஞ்சனா பார்க்க விரும்புகிறாளா?''

''அதெல்லாம் ஒன்றும் இல்லை; அழகிய பெண் ஒருத்தியும் குரூபியான கூனன் ஒருவனும் அந்த மண்டபத்தில் அடைபட்டிருக்கிறார்கள். அந்த அழகியை மட்டும் நீங்கள் விடுவித்து அழைத்து வர வேண்டும்.''

மஞ்சுளாவின் இந்த வார்த்தை கேட்டு குமாரதேவர் மெல்ல நகைத்தார். ''விருந்தினர் மண்டபம் என்கிறீர்கள். அடைபட்டிருக்கிறார்கள் என்கிறீர்கள்... ஒன்றுமே புரியவில்லையே. விருந்தினர் மண்டபமா, சிறைச்சாலையா? எங்கே சென்று வரச் சொல்கிறாய்?'' என்று கேட்டார்.

''சிறைச்சாலை யில்லை ஐயா! விருந்தினர் மண்டபம்தான். சித்திராங்கிதான் கூடவே சென்று பார்த்து வந்தாளே. அவளும் காஞ்சனா அம்மாவைப் போலவே தத்ரூபமான பெண். ரொம்ப அழகியாம். அவளை உடனே அழைத்து வந்துவிட வேண்டும் என்று அம்மா துடியாய்த் துடிக்கிறார்கள். உங்களால் முடியுமாம். குதிரைப்படைத் தலைவர் சொன்னால் ஊர்க்காவல் தலைவர் கேட்க மாட்டாரா?'' என்று மஞ்சுளா குழைந்தாள்.

''கேட்காமல் என்ன, நன்றாகக் கேட்பார். உடனே அழைத்து வருகிறேன். கையோடு அழைத்து வருகிறேன். என்ன அடையாளம் சொன்னாள் - காஞ்சனாவைப் பார்த்தால் அவளைப் பார்க்க வேண்டாமா? ஆச்சரியமாயிருக்கிறதே. ஈஸ்வர

சிருஷ்டியில் இருப்பது உண்டுதான்!'' எனக் கூறிய குமாரதேவர், ''அவளை அழைத்து வந்தால்தான் காஞ்சனாவுடன் தாராளமாய்ப் பேசலாமா?'' என்று கேட்டு ஊர்ஜிதம் செய்து கொண்டார்.

''ஓ! தாராளமாக! நானே முன் நின்று அந்தப் பணியைச் செய்கிறேன். வரும்போது இந்தப் போர்வீர உடை எதற்கு? இந்த நகரத்துச் செல்வந்தர் போல் உடையணிந்து வரலாம்... உம்... என்ன...?'' என்று மஞ்சுளா விழியைச் சுழற்றினாள்.

ஃ ஃ ஃ

குமார தேவர் உடனே அங்கிருந்து விரைந்துச் சென்றார். ஆனால் அவர் விருந்தினர் மண்டபத்தை அடையும் முன்பே குட்டிச் சித்தனும் சுந்தரியும் அங்கிருந்து ஒருவரும் அறியாத வண்ணம் வெளியேறிவிட்டனர். அந்த இடத்தில் தங்களை அடைத்த காவல் வீரர்கள் மீது குட்டிச் சித்தனுக்கு ஆத்திரம் பொங்கியது. அந்த விசாலமான மாளிகையின் வசதி அவன் மனத்தைக் கவரவில்லை. பளபளப்பான தரையும், உயரமான தூண்களும், பெரும் இருக்கைகளும், மஞ்சங்களும் அவனுக்கு வெறுப்பைத்தான் அளித்தன. சுந்தரி வியப்பு நிறைந்த விழிகளுடன் மாளிகையின் ஒவ்வொரு பகுதியாகப் பார்த்தபோது குட்டிச் சித்தன் அங்கிருந்து வெளியேற வழியைத் தேடிக் கொண்டிருந்தான்.

''இந்த மாளிகையே இவ்வளவு பெரிதாக இருக்கிறதே. மன்னர் வாழும் மாளிகை இன்னும் பிரமாண்டமானதாக இருக்கும் அல்லவா? நாம் எப்போது அரசரைக் காணப் போகிறோம்?'' என்று சுந்தரி கேட்டாள்.

குட்டிச் சித்தன் உறுமினான்: ''நாம் அரசரைக் காண்பதேது? நம்மைக் கௌரவமான சிறையில் அடைத்திருக்கிறார்கள். நாம் என்ன தவறு செய்தோம்? உடனே மன்னரைக் கண்டு முறையிட்டுக் காவலர்களுக்குத் தண்டனை வாங்கிக் கொடுத்தாக வேண்டும்'' என்றான். சுந்தரிக்கு ஏதும் புரியவில்லை.

ஃ ஃ ஃ


இருள் சூழ்ந்துவிட்டது. மாளிகையில் விளக்கேற்றக்கூட ஒருவரையும் காணோம். சிறு வண்டுகளின் 'ஙொய்' ஒலி எங்கும் ஒலிக்க ஆரம்பித்துவிட்டது.

குட்டிச் சித்தன் திடீரென்று விரைந்து ஓடிவந்தான்: ''சுந்தரி, வா. நாம் இங்கிருந்து வெளியே போக வழி கண்டுபிடித்து விட்டேன்'' என்றான். சுந்தரி மெல்ல சிரித்தது அவன் காதில்

விழுந்தது. ''வெளியே செல்வதற்கு வாசல் கதவு இருக்கிறதே'' என்றாள் சுந்தரி.

''வாசல் வழியாக நாம போக முடியாதே! நாம் இங்கே இருக்கக் கூடாது... வா, போய்விடலாம்... உம்... உம்...'' என்று பரபரப்புடன் கூறி அவளை அழைத்துக் கொண்டு அந்த மண்டபத்துப் புழக்கடைப் பக்கம் சென்றான். அங்கே ஓரிடத்தில் மூடப்பட்டிருந்த கதவு தட்டியவுடன் திறந்து கொண்டது. சுந்தரியின் கரத்தைப் பலமாகப் பிடித்துக் கொண்டு திறந்த வழியாக நுழைந்தான். ஒருவர் மட்டுமே செல்வதற்கு வசதியாய் இருந்த அந்த வழியே குட்டிச் சித்தன் விரைந்தான். அவன் பிடி அவள் மென்மையான கரத்தை அழுத்தியது. அவள் அதை விரும்பவில்லை என்றாலும் அந்த நிலையில் அவளால் ஏதும் சொல்ல முடியவில்லை.

அந்தப் பாதையினின்று அவர்கள் இருவரும் வெளியே வந்தனர். யாராவது கண்டுவிடப் போகிறார்களே என்று சுற்றுமுற்றும் பார்த்துவிட்டுக் குட்டிச் சித்தன் சுந்தரியையும் அழைத்துக் கொண்டு இருண்டிருந்த அந்தப் பாதை வழியே ஓடினான்!



# 14. அவளா இவள்?

சிறு குன்றுக்கருகே மரங்கள் நிறைந்த தோப்பு. அதனருகே அழகிய சிறு வீடு. அதன் மீது ஓடு வேயப்பட்ட கூரை. வீட்டிற்குள்ளே கூடத்தில் இருந்த கயிற்றுக் கட்டிலில் சிற்பி மல்லிநாதர் கிடத்தப்பட்டிருந்தார். அவரது முழங்காலுக்குக் கீழே எலும்பு முறிவு ஏற்பட்டிருக்க வேண்டும். வலி இதயத்தைத் தொட்டது. அதனால் அடிக்கடி மயக்க நிலை ஏற்பட்டது.

மயக்கம் சற்றுத் தெளிந்து மல்லிநாதர் தான் கட்டிலொன்றில் கிடத்தப்பட்டிருப்பதையும் முதிய பிட்சு ஒருவர் குனிந்து காலைப் பரிசோதிப்பதையும் கண்டார். பச்சிலை அரைத்துக் கொண்டு வந்து ஒருவன் கொடுத்தான். பிட்சு அதை அவர் காலில் அப்பி, மூங்கில் சிம்புகளை வைத்து அழுத்திக் கட்டியதையும் உணர்ந்தார்.

தலைப்பக்கத்தில் இளைஞனொருவனும், கால்மாட்டில் உருண்டு திரண்ட தோள்களையும் முறுக்கிவிட்ட மீசையையும் உடையவர்கள் சிலரும் நின்று கொண்டிருப்பதையும் கண்டார். சாலையின் ஓரத்தில் தான் கிடந்ததையும் யாரோ இருவர் தன்னைக் குதிரையில் தூக்கி வைத்துக் கொண்டு வயலிலும் வரப்பிலும் சென்றதையும் மெல்ல நினைவுபடுத்திக் கொண்டார். பிட்சு சிகிச்சை செய்த பிறகு கால்வலி குறைந்தது போல் தோன்றியது. தாகம் என்று அவர் கேட்கும் முன்பே சுடச்சுட குடிக்க ஒருவகைப் பானம் கொடுக்கப்பட்டது. அது அவருக்கு மேலும் தெம்பை அளித்தது. சுற்றுமுற்றும் நோக்கினார் மல்லிநாதர். பிட்சு சென்றுவிட்டார்.

''சிற்பியாரே, இப்போது கால்வலி எப்படி இருக்கிறது?'' என்று இளைஞன் கேட்டான். அந்த இளைஞனை நாம் முன்பே பார்த்திருக்கிறோம். விஜயன் என்று காஞ்சனாவால் தவறாக எண்ணப்பட்ட சாளுக்கிய இளவரசன் விநயாதித்தனே அவன்.

விநயாதித்தனும் அவனுடன் பல்லவ நாட்டிற்குள் மாறுவேடத்தில் புகுந்தவர்களும் இருப்பிடமாக அந்தக் குன்றுக்கருகிலுள்ள தோப்பைத்தான் தேர்ந்தெடுத்தனர். அந்த

இடத்தைச் சாதாரணமாக மற்றவர்கள் அடைவது கடினம். அடர்ந்து வளர்ந்திருந்த குட்டை மரங்களும், புதர்களும் வழியெங்கும் நிறைந்திருந்தன. சிறுத்தையின் வாசஸ்தலமாக அந்தக் காடு திகழ்ந்தது. எவரும் அணுக முடியாத அந்த இடத்தில் அடிக்கடி விநயாதித்தனும் அவனது தோழர்களும் சந்தித்து வந்தனர். மாமல்லபுரத்தினின்று காஞ்சனாவுடன் திரும்பிய விநயாதித்தனை வழியில் சந்தித்து இங்கே அழைத்து வந்து விட்டான் கீர்த்திவர்மன். அவன் வந்த மறுநாளே மல்லிநாதரையும் அங்கே கொண்டு சேர்த்துவிட்டனர். சிற்பி மல்லிநாதரை எதற்காகக் கவர்ந்து வந்தனர் என்று அவனுக்கே புரியவில்லை. பிறகுதான் மல்லிநாதரின் மகத்தான துணையுடன் பல்லவ நாடு தான் இழந்த கலைப் பெருமையை அடையப் போகிறது என்று புரிந்து கொண்டவுடன் அதைத் தடுத்து நிறுத்தச் சிற்பியைக் கவர்ந்து வந்தது சரியென்று முடிவு செய்தான். ஆனால் அவர் உயிருக்கு ஏதும் ஊறு சேராது பார்த்துக் கொள்ள வேண்டும் என்றும் முடிவு செய்தான். அவருக்குக் காலில் ஏற்பட்ட காயம் வண்டி குடை சாய்ந்ததால் ஏற்பட்டது என்பதை அறிந்த பிறகு தான் நிம்மதி ஏற்பட்டது. சிற்பியை மிகக் கவனமாகப் பாதுகாத்து வாதாபிக்கு அழைத்துச் சென்றுவிட வேண்டும் என்று முடிவு செய்தான்.

ஃ ஃ ஃ

மல்லிநாதர் மெல்லப் படுக்கையை விட்டு எழ முயன்றார். 'பளிச்சென்று' வலி ஏற்பட்டது. சாளுக்கிய இளவரசன் விநயாதித்தன் அவரைத் தடுத்து, ''இன்னும் இரு நாட்களுக்கு நீங்கள் நகரக் கூடாது... சிறிது அசைந்தாலும் பழையபடி கால் நேராகாது'' என்றான்.

''நான் எங்கே இருக்கிறேன்...'' என்று மெல்லக் கேட்டார் மல்லிநாதர்.

''மிகவும் பாதுகாப்பான இடத்தில் தான். ஒரு குறையும் தங்களுக்கு வரவே வராது...'' என்றான் விநயாதித்தன்.

மல்லிநாதருக்குத் தன் நிலையை விட முதன் முதலில் தான் சிருஷ்டித்த சிலையைப் பற்றித்தான் கவலை எழுந்தது. நடுச் சாலையிலே இருந்த வண்டியைக் குட்டிச் சித்தன் மீண்டும் எங்கே இழுத்துச் சென்றானோ?

''நான் மிகவும் பாதுகாப்பான இடத்தில்தான் இருக்கிறேன். வண்டியும், சிலையும் சாலை நடுவே இருந்தனவே, அவற்றிற்கு ஏதும் நேராதிருக்க வேண்டுமே'' என்று கவலையுடன் கேட்டார் மல்லிநாதர்.

''சிலையை எங்கே எடுத்துச் செல்கிறீர்கள்?'' என்று கேட்டான் சாளுக்கிய இளவரசன்.

மல்லிநாதர் சற்று மௌனமாக இருந்து, பிறகு, ''மன்னர் பரமேச்வர வர்மனிடம் எடுத்துச் செல்லப் புறப்பட்டேன். முதன் முதலில் நான் அவரிடம் சமர்ப்பிக்கும் சிலை அது. என் திறமை எல்லாம் அமைய அதைச் செய்தேன்... குட்டிச் சித்தன் என்ன செய்தானோ?'' என்று கவலைப்பட்டார்.

விநயாதித்தன் மிகவும் சாமர்த்தியமாக மெல்ல அவரிடமிருந்து நடந்தவற்றை விசாரித்து அறிந்தான். பிறகு, ''அழகிய அச்சிலையை ஏன் காஞ்சிக்கு எடுத்துச் செல்கிறீர்கள்? மன்னர் நேரே தங்கள் குடிசைக்கு வந்துப் பார்க்க மாட்டாரா?'' என்று கேட்டான்.

''வருவார், வருவார். வராமல் இருக்க மாட்டார். அந்த மண்ணை பெரும் பெரும் மாமன்னர்கள் மிதித்திருக்கிறார்கள். மாமல்லபுரம் சிற்ப பூமியாக மாற வேண்டும் என்று கனவு கண்ட மகேந்திர சக்கரவர்த்தியும், நரசிம்ம சக்கரவர்த்தியும் எவ்வளவோ தடவை சிற்ப பூமிக்கு வந்திருக்கிறார்கள். என் குருநாதர் ஆயனரின் குடிலுக்கு வந்திருக்கிறார்கள். பரமேச்வர வர்மர் உடல்நிலை சரியில்லாமல் படுத்திருப்பதால் நானே சிற்பத்தை எடுத்துச் செல்கிறேன். கூரம் கோயில் மண்டபத்தில் அந்தச் சிற்பம் விளங்கப் போகிறது....'' என்றார்.

''கூரமா...?'' - ஆவலுடன் கேட்டான் இளவரசன்.

''ஆமாம்... பரமேச்வர வர்மர் புது மாதிரியான கோயில் ஒன்றைக் கட்டியிருக்கிறாரே உமக்குத் தெரியாதா? மரத்தாலும் செங்கல்லாலும் கட்டாமல் பாறைகளை அடுக்கியே அந்தக் கோயிலை அமைத்தார். நீங்கள் பார்த்ததில்லையா....? ஆமாம்... நீங்கள் இந்த ஊர்க்காரரில்லையோ... என்னைப் பற்றி மட்டும் சொல்லி வந்தேனே... தங்களைப் பற்றித் தெரிந்துகொள்ள வில்லையே...'' என்று மல்லிநாதர் கேட்டார்.

விநயாதித்தன் மெல்ல நகைத்து, ''நான் ஒரு சாதாரண மனிதன். என்னைப் பற்றி என்ன சொல்ல இருக்கிறது. சிற்ப சக்கரவர்த்தியாகிய தங்கள் முன்பு நான் ஒரு துரும்பு. நீங்கள் படைத்த சிற்பத்தைக் காணவில்லையே எனும் வருத்தந்தான். எனக்குக் கலை மீது கட்டுக் கடங்கா ஆவல். சொல்லப் போனால் நான் அதற்காகவே வெளியூரிலிருந்து வந்தேன். பல்லவ நாட்டில் சிற்பமும் சித்திரமும் ஒளிவீசித் திகழும் என்றார்களே எனும் ஆவலுடன் வந்தேன். ஆனால் இங்கே அந்தப் பேச்சையே

காணோம்... ஊரெல்லாம் பாழடைந்துக் கிடக்கிறது. மக்கள் அவரவர்கள் வேலையைப் பார்த்து ஒன்றிலும் பற்றில்லாதவர் போல் செல்கிறார்கள்... பல்லவ அரசர்கள் கலை வளர்த்தனர் என்பதை நம்பவே முடியவில்லை'' என்று அவன் கூறி வரும்போது மல்லிநாதர் குறுக்கிட்டு, ''அப்படிச் சொல்லாதீர்கள்; பாழும் யுத்தம் வந்திராவிடில் மாமல்லபுரம் இந்திரபுரியாகி இருக்கும். காஞ்சியில் பல கோயில்கள் எழுந்திருக்கும். அவற்றை எல்லாம் செய்வதற்காகத்தானே நானே மாமல்லபுரம் வந்தேன். என் குருநாதர் வாழ்ந்த அதே குடிலில் நானும் வாழத் தொடங்கினேன்... பரமேச்வர வர்மரின் இலட்சியங்கள் மகத்தானவை. இப்போது அவரது குமாரர் கடல் கடந்த நாடுகளிலிருந்துத் திரும்பி வந்திருக்கிறார். அவர் கலையார்வம் மிக்கவராம். அங்குள்ள சிற்ப அற்புதம் நிறைந்த கோயில்களைப் போன்று காஞ்சியில் அமைக்க ஆவலுள்ளவராய் இருக்கிறாராம். நான் அவரை இன்னும் காணவில்லை. காஞ்சியில் சந்திக்கலாம் என்று எண்ணியிருந்தேன். இறையருள் இப்படிச் செய்து விட்டதே...'' என்று வேதனை கலந்த குரலில் பேசினார்.

விநயாதித்தன் உதட்டைக் கடித்துக் கொண்டான். 'ஓகோ! மகத்தான திட்டங்கள் இருக்கின்றனவா. ஹூம்! மாமல்லபுரத்தை மகேந்திரபுரியாக ஆக்கப் போகிறார்களா! அதைப் பார்த்து விடுகிறேன்' என்று மனத்தில் எண்ணினான். விநயாதித்தன் நோக்கம் – சிற்பியாரைப் பல்லவ நாட்டைவிட்டே அழைத்துச் சென்றுவிட்டால்....? பரமேச்வரன் கனவின் கதியைப் பிறகு பார்த்துக் கொள்வோம்... இளவரசன் இராஜசிம்மனின் திட்டம் நிறைவேறுவதையும் பார்த்து விடுவோம்!' – விநயாதித்தன் திட்டம் விரிந்தது. சிற்பி மல்லிநாதர் இவ்வளவு எளிதில் தன்னிடம் சிக்கி விடுவார் என்று அவன் எதிர்பார்க்கவில்லை.

''ஐயா, என் சிலையின் கதி என்னவாயிற்று என்பதை விசாரித்து வந்தீர்களா?'' என்று மல்லிநாதர் கேட்டார்.

''ஆமாம், ஐயா... தங்களைவிட நான் மிக ஆவலுள்ளவனாய் இருக்கிறேன். அதைப் பற்றி விசாரித்து வரத் தக்கவரை அனுப்பியுள்ளேன்'' என்றான்.

கீர்த்திவர்மன் - அப்போது பாசுபதர் வடிவில் இருந்த அவன் - 'ஜெய்சோமதேவ்' என்று பயங்கரமாக ஒலித்துக் கொண்டு அங்கே வந்தான்.

''ஏதாவது செய்தி கிடைத்ததா?'' என்று விநயாதித்தன் கீர்த்திவர்மனைக் கேட்டான்.

''எமது சிஷ்யர்களை அனுப்பியுள்ளோம் அறிந்துவர, நடுச்சாலையிலிருந்த வண்டியைக் காணவில்லை. ஒருவேளை காஞ்சிக்குச் சென்றிருக்கலாம். அதை எப்படியும் என் சிஷ்யர்கள் அறிந்து விடுவர்'' என்றான்.

விநயாதித்தனைக் கவலை சூழ்ந்தது. சிற்பம் காஞ்சிக்குச் சென்றுவிட்டால் பிறகு அதைக் கண்டுபிடிப்பது கடினமாயிற்றே என்று எண்ணினான். அப்போது வெளியே யாரோ வரும் காலடியோசை கேட்டது.

''மகாதேவ்; ஜெய் மகாதேவ்'' என்று கணீரென்று குரல் கேட்டது. நெடிய உருவத்துடன் மகாவிரதி அந்த வீட்டின் வாயிலில் நின்று கொண்டிருந்தார். கீர்த்திவர்மனும் விநயாதித்தனும் ஒரு கணம் திடுக்கிட்டனர். அந்த இடத்திற்குப் புதியவர் எவரும் வரமாட்டார்கள். மகாவிரதியை ஒரு கணம் அவர்கள் கண் இமைக்காமல் நோக்கினர்.

பாசுபதர் – மகாவிரதியைக் கண்டால் உடனே வரவேற்று உபசரிக்க வேண்டும். பாசுபதர் வடிவிலிருந்த கீர்த்திவர்மன் அதைக் கற்றுணர்ந்து இருந்தான். பல்லவ நாட்டு ஒற்றனாக மகாவிரதி இருக்க முடியாது. ஏனெனில் தவசிகளுக்கு உரிய நியம நிஷ்டையாலும் கடுந்தவத்தாலும் மகாவிரதி ஒளியுடன் திகழ்ந்தார். வேடம் பூண்டவர் என்பதற்கான சின்னமே அவரிடம் காணப்படவில்லை. கடுந்தவத்தால் அவர் மேனி உறுதிப் பட்டிருந்தது. கண்களிலே தனிவிதப் பிரகாசம் இருந்தது. கம்பீரத் தோற்றமுடையவராய்த் திகழ்ந்தார். மகாவிரதிகளுக்குரிய சின்னங்களுடன் விளங்கினார். எலும்பு மாலையும் கையில் நீண்ட கோலும் கோலின் நுனியில் நந்தி வடிவமும் மகாவிரதியின் உண்மைத் தோற்றத்தை விளக்கின. அதனால் கீர்த்திவர்மன் மகாவிரதியை வேறுவிதமாகச் சந்தேகிக்கவில்லை.

கீர்த்திவர்மன் மகாவிரதியை வரவேற்று ஆசனம் இட்டு அமரச் செய்து உபசரித்தான். பாசுபதர் வேடமணிந்திருந்த அவன் அதற்குத் தக்கபடி நடிக்க வேண்டி நேர்ந்தது.

'ஜெய் பாசுபதே!' என்று கீர்த்திவர்மன் ஒருமுறை கோஷித்து, ''மகாதேவருக்கு எந்த ஊரோ?'' என்று வினவினான்.

மகாவிரதி தலையை அசைத்துக் கொண்டு ''திருச்சிராபள்ளி அருகே திருவானைக்காவலில் உள்ள மடத்தில் வாழ்கிறேன். ஆனால், என் சஞ்சாரம் முழுமையும் இந்தத் தொண்டை மண்டலத்தில்தான். சமண, பௌத்தவாதிகள் அநேகமாக காஞ்சியினின்று சென்றுவிட்டதால் என்னால் நிம்மதியாக வாழ முடிகிறது. மகாதேவ பூஜை குறைவில்லாமல் நடைபெறுகிறது.

திருக்கழுக்குன்றத்தில் பாசுபதர்கள் சங்கம் கூடினார்களே – உமக்குத் தெரியாதா? நானாதேசத்துப் பாசுபதர்கள் அங்குக் கூடினர். நானும் சென்று புராணப் பிரசங்கங்களைச் செவி மடுத்தேன். அங்கிருந்து கடல்மல்லை செல்லும் வழியில் இந்தப் பக்கமாக ஒற்றையடிப் பாதை வழியாகப் பாசுபதர் ஒருவர் சென்று கொண்டிருப்பதைக் கண்டேன். எனக்கு மிகவும் வேண்டிய கங்காதரர் எனும் பாசுபதர் சோம்நாத் பூரிலிருந்து வந்திருந்ததாகக் கேள்விப்பட்டேன். அவரைக் கண்டு பல ஆண்டுகளாகிவிட்டன. ஒரு வேளை அவரை இங்கே காண இயலும் என எண்ணி வந்தேன். ஆகா; இதுபோன்ற ரமணீயமான இடம் அடர்ந்த காட்டின் நடுவே இருப்பது எனக்குத் தெரியாதே! இப்படிப்பட்ட அமைதியும் தனிமையும் நிறைந்த இடம் இருப்பது காபாலிகர்கள் அறிந்தால் தங்கள் பூசையை நிறைவேற்றும் இடமாக ஏற்படுத்திக் கொண்டுவிடுவார்கள். நல்லவேளை தெரியாது போய்விட்டது. இன்னும் அவர்கள் மது, மாமிசம், மங்கை இம்மூன்றையும் விடாமல் பூசைப் பொருள்களாகக் கொண்டிருக்கிறார்கள். நீங்களே சொல்லுங்கள் சுவாமி; கயிலையங்கிரியில் வாழும் சிவபெருமான் மதுவா வேண்டும் என்று கேட்கிறார். எங்கிருந்தோ இந்த வழக்கம் வந்து சேர்ந்துவிட்டதே சுவாமி – ஹூம்'' – என்று மகாவிரதி பேசிக் கொண்டே போனார்.

கட்டிலில் படுத்திருந்த சிற்பி மல்லிநாதருக்கு மகாவிரதியின் பேச்சின் தன்மை பிடித்திருந்தது. அவரும் அதில் கலந்து கொள்ள விரும்பி, ''மற்றொன்றைக் கூற மறந்துவிட்டீர்களே, நரபலி கொடுக்கும் பயங்கரப் பழக்கம் வேறு; தலைபலி கொடுப்பதைப் பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறீர்களா? அதை விளக்கும் சிற்பம் மாமல்லபுரத்தில் இருக்கிறதே பார்த்திருக்கிறீர்களா? தலைபலி கொடுக்கும் வழக்கம் இன்னும் நாட்டிலே இருக்கிறது. கொற்றவை சிலையும், தலைபலி சிலையும் நரசிம்ம வர்மர் ஏன் தான் சிற்பமாக வடிக்க விரும்பினாரோ தெரியவில்லை'' என்று கூறவும் மகாவிரதி குரல் வந்த திசையை நோக்கித் திரும்பிப் பார்த்து அவர் யார் என்று வினவுவதுபோல் கீர்த்திவர்மனை நோக்கினார்.

பாசுபதர் – மகாவிரதியிடம் பொய் சொல்வாரா? ''தொண்டை மண்டலத்து மகாசிற்பி இங்கே இருக்கிறார். துரதிர்ஷ்டவசமாக அவருக்கு ஏற்பட்ட விபத்தொன்றால் இங்கே அழைத்து வருமாறு ஆகிவிட்டது'' என்றார்.

உடனே சிற்பி, ''எனக்கு நேர்ந்தது இருக்கட்டும். என் சிலை என்ன ஆனதோ? அதுவே எனக்குப் பெரும் கவலையாயிருக்கிறது'' என்றார்.

மகாவிரதி சிலையைப் பற்றி விசாரித்து அறிந்தார். உடனே, "சிலையா – மன்னரிடம் காட்டுவதற்காக எடுத்துச் சென்றீரா? நான் காஞ்சியில் கூனன் ஒருவன் வண்டியோட்டிக் கொண்டு போவதைப் பார்த்தேன். அந்த வண்டியில் இளம் பெண் இருந்தாள். அதைத்தானே சொல்கிறீர்கள்?" என்றார்.

சிற்பி ஆவலுடன் எழ முயன்றார். விநயாதித்தனும் சிற்பத்தைப் பற்றி அறியத் துடித்தான். மகாவிரதி தன் முகத்தில் மாறுதல் ஏதும் புலப்படுத்தாமல், "அந்தச் சிற்பத்தை அந்தக் கூனன் காஞ்சி நகரில் தனக்கு மிக வேண்டியவர்கள் வீட்டில் கொண்டு சேர்த்திருக்கிறான்" என்றார்.

சிற்பி ஆவல் மிக "ஐயா, ஐயா... எப்படியாவது அந்தச் சிற்பத்தை மன்னர் காண்பதற்கு வழி செய்யுங்கள் ஐயா! அத்துடன் எனக்கு நேர்ந்த இந்த விபத்தைப் பற்றியும் தெரிவித்தால் நான் கடமையுடையவனாயிருப்பேன். நீங்கள் என்னைக் காப்பாற்றியது பெரிதன்று – சிற்பத்தை மன்னரிடம் சேர்ப்பதுதான் பேருதவியாகும். சுந்தரியும் சென்றிருக்கிறாளாம். அவள் விபரம் புரியாத மங்கை. காஞ்சி நகரில் திக்குத் திசை தெரியாது தடுமாறுவாள்... நீங்கள் யாராவது சென்று உதவுங்கள் ஐயா" என்று பணிவுடன் கேட்டுக் கொண்டார்.

கீர்த்திவர்மனும், சாளுக்கிய இளவரசனும் பொருள் பொதிந்த பார்வையுடன் ஒருவரை யொருவர் நோக்கினர்.

"எனக்கு அவசரமான வேலை கடல் மல்லையில் இருக்கிறது. காஞ்சி செல்வதாயிருந்தால் நான் கட்டாயம் வேண்டிய உதவி செய்வேன்" என்றார் மகாவிரதி. அவர் அங்கிருந்துப் புறப்பட ஆயத்தமானார்.

"நீங்கள் கவலைப்பட வேண்டாம், சிற்பியாரே! நானே காஞ்சிக்குச் செல்கிறேன். சுந்தரியையும் அழைத்துக் கொண்டு தங்களை வந்தடைகிறேன். தாங்கள் எனக்கு ஓர் உதவி செய்ய வேண்டும்" என்று மிகவும் பணிவுடன் கேட்பது போன்று அவர் எதிரே நின்றான் விநயாதித்தன்.

"உதவியா... என்னால் இயன்றதைக் கட்டாயம் செய்வேன்... சொல்லுங்கள்."

"தங்களிடம் நான் சிற்பக்கலை பயில வேண்டும் என்று துடிப்புள்ளவனாயிருக்கிறேன். என்னையும் தங்கள் மாணாக்கனாக ஏற்றுக் கொள்ள வேண்டும்."

மல்லிநாதர் மெல்ல நகைத்தார். "இது ஓர் உதவியா... என் கடமை, ஆர்வமுடையவரை ஆதரிப்பது கலைஞனின்

கடமை. காஞ்சியிலிருந்து விரைவில் திரும்பி வாருங்கள். நாம் மாமல்லபுரம் செல்வோம்... ஹூம்; நீங்கள் மன்னரைச் சந்தித்தால் நான் தெரிவித்ததாக ஓர் முக்கியமான செய்தியைத் தெரிவிக்க முடியுமா?'' என்றார்.

''தாங்களே கைப்பட ஓலையொன்று எழுதித் தாருங்களேன்'' என்றான் விநயாதித்தன்.

சிற்பியும் பரமேச்வர வர்மருக்கு மிகப் பணிவுடன் ஓலையெழுதி உறையிலிட்டு அளித்தார். விநயாதித்தன் காஞ்சிக்கு விரைந்துச் சென்றான்.

விநயாதித்தன் காஞ்சியை அடையும்போது பொழுது நன்றாகச் சாய்ந்துவிட்டது. காஞ்சனாவின் மாளிகையை அடைந்து இரவு தங்கிவிட்டுக் காலையில் சிலையிருக்குமிடம் தேடிச் செல்லலாம் என எண்ணிய விநயாதித்தன் காஞ்சனா வீட்டிற்கு வழிகேட்டு விசாரித்துக் கொண்டிருந்தான். காஞ்சனா வீட்டிற்கு வழி கேட்கும் போது அவனை வியப்புடன் பலர் நோக்கினர். சிலர், ''இளம் பிள்ளை; நல்ல வயது; பலசாலி, வீணே பாழாகப் போகிறான்'' என்று மனதுக்குள்ளேயே எண்ணினர்.

விநயாதித்தன் காஞ்சனாவின் மாளிகையை நோக்கிச் சிறு சந்துக்களின் வழியே புகுந்து சென்றபோது திடீரென யாரோ ஓடிவரும் அரவம் கேட்டது. மங்கிய ஒளியில் ஓடிவருபவர் யார் என்று தெரியவில்லை. விநயாதித்தன் நின்றான். மூச்சு வாங்க ஓடி வந்த உருவம் விநயாதித்தன் மீது மோதிக் கொண்டது.

கீழே விழப்போன அந்த உருவத்தை மெல்லத் தாங்கி நிறுத்தி முகத்தை உற்று நோக்கிய விநயாதித்தனே திடுக்கிட்டு விட்டான். 'காஞ்சனா!' என்று அவன் வாய் முணுமுணுத்தது.

இந்த நேரத்தில் இத்தகைய மாற்று உடையில் காஞ்சனா ஏன் பரபரப்புடன் எங்கிருந்தோ தப்பி வருபவள்போல் ஓடி வருகிறாள் என்பது அவனுக்குப் புரியவில்லை. சற்றுத் தொலைவில் இன்னும் சிலரும் ஓடிவரும் ஓசை கேட்டது.

''ஐயா என்னை விட்டு விடுங்கள்... போய்விடுகிறேன்... அவர்கள் தொடர்ந்து வருகிறார்கள்...'' என்று மூச்சுத் திணறும் குரலில் அவள் கூறியது இளவரசனுக்கு மேலும் வியப்பை அளித்தது.

●

# 15. இசை மங்கை

தன் மகன் இராஜசிம்மன் கவலை தோய்ந்த முகத்துடனிருப்பதை இரு நாட்களாகக் கவனித்த அவன் தாயும் பரமேச்வர வர்மன் பட்டத்து அரசியுமான புவனமாதேவியார் அவன் கவலையின் காரணம் அறியத் துடித்தார். திருமணப் பருவத்தில் இளைஞர் மனம் அப்படித்தான் சஞ்சலமடையும் என்பது முதிர்ந்த அறிவுடைய தேவியாருக்குத் தெரியாதா? பாண்டிய மன்னர் தன் மகள் அருள்தேவியை மணம் செய்விக்கச் சித்தமாக இருப்பதாகச் செய்தி அனுப்பியிருந்தார். சேர மன்னரும் பல்லவர்களுடன் மணவினைத் தொடர்பு கொள்வதுடன் தம் விருப்பத்தைத் தெரிவித்தார். அவர்களும் பழைய விரோதம் மறந்து மணத் தொடர்பு கொள்ள விரும்பினர்.

அரசியாரின் இஷ்டத்திற்கு மணப் பிரச்சனையை மன்னர் பரமேச்வர வர்மர் விட்டுவிட்டார். அவருக்குள்ள கவலைகள் பல. தன் ஒரே மகனுக்கு உற்ற அரசகுமாரியைத் தேர்ந்தெடுக்க வேண்டும் என்பதில் தேவி சிந்தையைச் செலுத்தலானார். அரசியல் அறிவும், ராஜதந்திரமும் தேவியாருக்குக் கைவரப் பெற்றிருந்தன. பல்லவ நாட்டிற்கும் பாண்டிய நாட்டிற்கும் முன்பே மணவினைத் தொடர்பு இருந்திருக்கிறது. சேர நாட்டின் மீதுதான் தேவியாரின் கவனம் சென்றது. தக்க அறிஞர்களைத் திருவஞ்சைக் களத்துக்கு அனுப்பிச் செய்தி அறிந்து வரச் செய்தார். பாண்டிய குமாரியைப் பற்றித் தக்கவர் வந்து வர்ணித்துவிட்டனர். அழகு நிறைந்த அம்மகளும் தன் மகனுக்கு ஏற்றவளே. அறிவோரும் அதையே வற்புறுத்தினர். வடக்கிலிருந்து வரும் படையெடுப்புகளைத் தடுத்து நிறுத்த பாண்டிய உதவி எப்போதும் தேவைதான். தன் ஒரே மகனும், பல்லவக் குலம் தழைத்தோங்கச் செய்வதற்கு ஒரே குலக்கொழுந்துமான இராஜசிம்மனுக்குத் தக்க இளவரசியைத் தேர்ந்தெடுப்பது மகத்தான பொறுப்பு என்பதைத் தெரிந்து கொண்டார் அரசமாதேவி.

இராஜசிம்மனின் கவலைக்குக் காரணமும் அதுவாகத் தானிருக்கலாம் என்ற எண்ணத்தில் அவனருகே சென்றமர்ந்து அவனுடைய தலையை மெல்ல வருடினார். நாட்டின் இளவரசரானாலும் அரசிக்கு அவன் மகன் தானே, தாய்மைப் பாசத்தை அந்தஸ்து மறைத்துவிடுமா? தாயைக் கண்டவுடன் இராஜசிம்மன் இருப்பிடம் விட்டு எழுந்திருக்க முயன்றான்.

''உட்காரு மகனே...! சிறிது நேரமாவது உன்னுடன் அமைதியாக அமர்ந்து உரையாடலாம் என வந்தேன்'' என்று கூறிப் புன்முறுவல் பூத்தாள் மாதேவி.

இராஜசிம்மன் மெல்லத் தன் கவலைக் கோடுகளை மறைத்துக் கொண்டு, ''தாயே...! சொல்லி அனுப்பியிருந்தால் நானே வந்திருப்பேனே... தந்தைக்குப் பணிவிடை செய்து களைப்புற்று இருக்கும் தங்களுக்கு மேலும் நான் தொல்லை கொடுக் கலாமா...?'' என்றான்.

''தொல்லை என்ன மகனே...! உன்னைக் காண்பதில் எனக்கு ஏற்படும் மகிழ்ச்சியை எப்படிக் கூறுவேன்? நாட்டை விட்டு நீ தேசாந்தர நாடுகளுக்குச் சென்றபோது எனக்கு ஏற்பட்ட பிரிவாற்றாமையை நான் எப்படி எடுத்துச் சொல்வேன்... மல்லைத் துறைமுகத்தில் வந்து நிற்கும் ஒவ்வொரு கலத்திலும் நீ வந்து சேரும் செய்தி வருகிறதா என்று ஆவலுடன் எதிர்பார்ப்பேன். நீ வந்துவிட்டாய் என்ற செய்தி எனக்குப் புதுத்தெம்பை அளித்தது. உன் பட்டாபிஷேகத்தைக் குறித்து உன் தந்தை சிந்திக்கும்போது, நான் மற்றொரு கடமையைப் பற்றிச் சிந்தித்தேன்...''

''என்ன கடமை தாயே...?''

''ஆமாம்; நான் வரும்போது நீ என்ன நினைத்துக் கொண்டிருந்தாய்... எங்கோ உனக்காகப் பிறந்திருக்கும் மங்கையைப் பற்றித்தானே'' என்று கேட்டுவிட்டு உதட்டில் குறும்பு மிளிர மெல்ல நகைத்தாள். தாயின் விளையாட்டுப் பேச்சைக் கேட்டுச் சற்று வெட்கமடைந்த இராஜசிம்மன் அமைதியாக, ''ஆம்; எனக்காகப் பிறந்து வளர்ந்து பல்லவ மாளிகையில் வாழ்ந்து இப்போது என்னிடம் சொல்லாமல் வேறு எங்கோ சென்றுவிட்ட மங்கையைப் பற்றித்தான் எண்ணிக் கொண்டிருந்தேன்'' என்றான்.

அரசி திடுக்கிட்டாள். 'மகன் என்ன சொல்கிறான்? மாளிகையில் வாழ்ந்து இப்போது எங்கோ சென்றுவிட்ட மங்கை' என்கிறானே – யாரைச் சொல்கிறான் – எதைப் பற்றிச் சொல்கிறான்' என்று திகைத்தாள்.

''மகனே...''

''தாயே...?''

''நீ என்ன சொல்கிறாய்?''

''சிம்ம விஷ்ணு கட்டிய மாபெரும் மாளிகையிலே இசை மங்கை ஒருத்தி சிறை கிடந்தாள். அவளைப் பெற்றெடுத்துக் கண்ணுங் கருத்துமாக வளர்த்த மகேந்திர சக்கரவர்த்தி இசைமங்கையின் பெருமை மகத்தானதாக இருக்கும் என்று கனவு கண்டார். அவருடைய திருக்குமாரர் மாமல்ல சக்கரவர்த்திக்கும் அதே எண்ணம்தான். அவர் என்ன செய்வார்! யுத்த பூமியில் பெரும் வீரத்தைப் புலப்படுத்த வேண்டிய சந்தர்ப்பம் நேர்ந்துவிட்டது. அவரது புதல்வர் மதிப்புக்குரிய பரமேச்வர வர்மரோ – அந்த மங்கையை அடியோடு மறந்து விட்டார். மறந்ததோடன்றி அவளை மிகவும் ஜாக்கிரதையாகப் பாதுகாக்கப் பாதாள அறையில் வைத்துப் பூட்டிவிட்டார். நான் அவளைப் பற்றிக் கேள்விப்பட்டேன். எனக்காகத்தான் அவள் இருக்கிறாள் என்று எண்ணினேன். அறிஞர்களும் எனக்கு ஊக்கமளித்தனர். அவளைத் தேடி நான் சென்றேன். வியப்படைவதா வேதனையடைவதா? அவளைக் காணவில்லை அங்கே. என்னிடம் சொல்லிக் கொள்ளாமல் சென்றுவிட்ட அந்த மங்கையைக் குறித்து தான் நான் வேதனைப்பட்டுக் கொண்டிருக்கிறேன்...''

இராஜசிம்மனின் இந்தப் பேச்சு பல்லவ அரசிக்குப் புரியவில்லை.

''என்ன சொல்கிறாய் இராஜசிம்மா... மகேந்திரர் பெற்றெடுத்த மங்கை என்கிறாய்... பாதாள அறை என்கிறாய். இவ்வளவு ஆண்டுகளாக மங்கை ஒருத்தி பாதாள அறையில் இருப்பதே எனக்குத் தெரியாதே. நரை, மூப்பு எய்தி மூதாட்டியாக அந்த 'மங்கை' மாறியிருப்பாளே... இராஜசிம்மா, புதிர் போடாமல் சொல்லு... சுற்றி வளைத்துப் புரிந்து கொள்ளக்கூடிய சக்தி எனக்கில்லை'' என்று தேவி கூறினார்.


இராஜசிம்மன் பரிவாதினியைப் பற்றிக் கூறினான். பரிவாதினியை மங்கையாகப் பாவித்துப் பேசியதைக் கேட்ட தேவி கலகலவென நகைத்துவிட்டு, என்னவோ ஏதோ என்று நான் பயந்துவிட்டேன்'' என்று கூறி பிறகு முகத்தில் கவலை தோன்ற, ''பரிவாதினியைப் பற்றி நானும் கேள்விப் பட்டிருக்கிறேன். அந்த வீணை எப்படிக் காணாமல் போய் விடும்?'' என்று கேட்டாள்.

''பாதாள அறையில் எவ்வளவோ நிதிக் குவியல்கள் இருக்கும்போது பரிவாதினியை மட்டும் கவர்ந்து செல்லக் கூடியவர் எவர்'' என்று மீண்டும் கேட்டாள்.

''தாயே! அதுதான் என் கவலையும். நான் இவ்வளவு நாட்கள் சந்தேகப்பட்டது சரியாகிவிட்டது. நமது வளர்ச்சியைத் தடுக்க உறுதியுடன் யாரோ முயன்று வருகிறார்கள். அபூர்வ வீணையை அபகரித்தவர்களும் அவர்களாகவே இருக்க வேண்டும். எதிரி நாட்டு சதிகாரர்கள் ஏராளமாக நம் நாட்டிற்குள் ஊடுருவியிருப்பார்கள் என்றே தோன்றுகிறது. நான் அனுப்பியுள்ள ஒற்றர் தலைவர் செய்தி வந்து கூறிய பிறகுதான் விரோதிகளின் சதியை முறியடிக்கும் வழிவகைகளைச் செய்ய வேண்டும்'' என்றான்.

மகனிடம் திருமண விஷயமாகப் பேச வந்த அரசியாரின் மனத்தில் சஞ்சலம் புகுந்தது. எப்படிப் பேசுவது என்று அவளுக்குப் புரியவில்லை. அச்சமயம் பணியாள் ஒருவன் வந்து வணங்கி ஒற்றர் படைத்தலைவர் ரணதீரர் காண வந்திருப்பதாகக் கூறினான்.

ரணதீரர் இராஜசிம்மனிடம் வந்து கூறிய செய்தி கேட்டு அரசியும் திடுக்கிட்டாள். சாளுக்கியர்களுக்கு உதவியாக அழகிய மங்கை ஒருத்தி மிகவும் தீவிரமாய்த் திட்டமிடுவதாகத் தெரியவந்த செய்தி அவர்களைத் திகைக்க வைத்தது.



# 16. காஞ்சனாவின் வேண்டுகோள்

காஞ்சனா என்று சுந்தரியைத் தவறாக எண்ணிய விநயாதித்தன், குரலில் இருந்த மாறுதலைக் கவனித்தான். அவள் தோளினைத் தொட்டபோது ஏற்பட்ட ஸ்பரிச உணர்வில் இருந்த வித்தியாசத்தைக் கவனித்தான். காஞ்சனாவின் உடலும் மென்மையானதுதான்; ஆனால் அதில் கடின உணர்வும் சிறிது விரவியிருந்தது. சுந்தரியின் தோள்கள் மென்மையாக இருந்தன. வளப்பம் அதிகமின்மையால் தோள் எலும்புகள் தட்டுப்பட்டன. 'ஆகா; நாம் யாரையோ காஞ்சனா என எண்ணிவிட்டோமே' என்று சற்றுப் பின் வாங்கினான் விநயாதித்தன். என்னதான் அவன் மாறுவேடத்தில் பல்லவ நாட்டிற்கு வந்திருந்தாலும் சாளுக்கிய நாட்டு அரச குமாரன் அவன். அடுத்துப் பட்டமேறும் உரிமை பெற்றவன். ராஜ்ய நிர்வாகத்தோடு, தகுந்த குருகுல வாசத்தில் ஓரளவுக்குப் பண்பாடும் கற்றிருந்தான். காஞ்சிமா நகரில் பெண் வேட்டையாட அவன் வரவில்லை. கடல் மல்லை நகரில் காஞ்சனாவுடன் இன்பம் துய்த்ததையே சூழ்நிலையின் விதி வசத்தால் நேர்ந்தது என்று சமாதானம் செய்து கொண்டு, அந்த நிகழ்ச்சியால் காஞ்சியில் தன் திட்டங்களை நிறைவேற்றிக் கொள்ள வாய்ப்பு ஏற்படும் என்றும் திருப்தியடைந்தான். இப்போது காஞ்சனாவைத் தேடி வந்ததில் ஆசை கால் பங்கும், தான் பல்லவ நாட்டிற்கு வந்த காரியத்தை நிறைவேற்றிக் கொள்வது முக்கால் பங்குமிருந்தது.

விநயாதித்தன் சற்று விலகி நின்றவுடனேயே சுந்தரி கூண்டினின்று விடுபட்ட பறவைபோல் துள்ளி ஓட முயன்றாள். என்ன தோன்றியதோ என்னவோ விநயாதித்தன் பாய்ந்து அவள் கரத்தைப் பற்றி, ''எங்கே இந்த இருளில் ஓடுகிறாய்? உனக்கு வரும் ஆபத்தைத் தடுத்துக் காக்க நான் இருக்கிறேன்'' என்றான்.

அந்தக் குரல் எங்கோ கேட்ட குரல்போல்தான் இருந்தது சுந்தரிக்கு. இருந்தாலும் அவள் உடல் இலேசாக நடுங்க அவன் பிடியினின்று விடுவித்துக் கொள்ள முயன்றாள்.

''உங்களால் காப்பாற்ற முடியாது. விட்டுவிடுங்கள்...'' என்று திமிறினாள்.

''இடையிலே வாள் இருக்கிறது பெண்ணே; தோளிலே வலு இருக்கிறது... எதிர்ப்பவரை மாய்த்துவிடுவேன்.''

''எதற்காக என்னை நீங்கள் காப்பாற்ற வேண்டும்?''

''அபயம் கோரும் ஓர் அபலையைக் காப்பது வீரர்க்கழகு.''

''உங்களிடம் நான் அபயம் கோரவில்லையே...''

''இல்லாதிருக்கலாம்; ஆனால் அஞ்சி நடுங்கினாய்...''

''அஞ்சி நடுங்குபவர்களுக்கெல்லாம் நீங்கள் காவலரா...?''

''ஆமாம், காஞ்சிக் காவலர் ஆட்சி பொய்த்துவிட்டபோது யாராவது அதை மேற்கொள்ள வேண்டாமா?''

சுந்தரி இப்போது கிரீச் என்று கூவினாள். விநயாதித்தன் பிடியினால் அன்று; விநயாதித்தனை நோக்கிக் கம்பீரத் தோற்றமுடைய இளைஞன் ஒருவன் அடுத்த மதிலிலிருந்து குதித்து விரைந்து வருவதைக் கண்டுதான்.

''யாரடா அது... காவலர் வேலையைப் புதிதாக ஏற்றுக் காரிருளில் பதுங்கி நிற்பவன்?'' என்று அக்குரல் கர்ஜித்தது.

விநயாதித்தன் திரும்புவதற்குள் பளபளக்கும் வாள் அவன் மார்பை நோக்கி நெளிந்தது. சுந்தரியை பிடித்திருந்த பிடியை மெல்ல விட்டுவிட்டு விநயாதித்தன் தன் வாளையும் உருவினான்! ஆளரவமற்ற இடத்தில் கிணிங்கிணிங் எனும் வாளொலி எழுந்தது.

சுந்தரிக்கு அழுவதா சிரிப்பதா என்றே தெரியவில்லை. அவள் இரண்டாவது துவந்த யுத்தத்தை இப்போது காண்கிறாள். தனக்காக வாதிட்டுச் சண்டையில் இறங்கிய குட்டிச் சித்தனுக்கு ஏற்பட்ட நிலைதான் இந்தப் புதியவருக்கும் நேருமோ?

இருவரும் இளைஞர்கள், இருவர் கரத்து வாளும் சுழன்றன. ஒருவர் வீச்சை மற்றவர் எளிதில் தடுத்து நிறுத்தினர். அதோ! அந்த வாள் அந்த இளைஞன் மார்பிலே பாய்ந்து விடத்தான் போகிறது.

சுந்தரி மீண்டும் கிரீச்சிட்டுக் கண்களை மூடிக் கொண்டாள். அப்படி நேரவில்லையே! வாள் வித்தையில் வல்லவரான இருவரும் தாக்குவதைப் போல தடுத்து நிறுத்துவதையும் உணர்ந்திருந்தனர்.

விநயாதித்தனே வியப்படைந்தான். அதுபோன்ற வல்ல போர் முறையையும் வாள்வீச்சு லாவகத்தையும் உணர்ந்தவர் வெகு சிலரே இருக்க முடியும் – இந்த இளைஞன் வல்லவனாய்

இருக்கிறானே. காஞ்சி நகரத்துப் போர் வீரனுக்கு இவ்வளவு திறமையா? இதுபோன்றே மற்ற வீரர்களும் இருப்பாரோ? அதனால்தான் கடல் போன்ற படையுடன் சாளுக்கிய வீரர் வந்தாலும் வெகு எளிதில் முறியடித்துவிடுகின்றனர். கொன்று குவித்துவிடுகின்றனர்.

விநயாதித்தன் ஒரு கணத்தில் முடிவுக்கு வந்தான். அந்தச் சந்தில், மங்கிய வெளிச்சத்தில் பலப் பரிட்சையில் வீணே இறங்கக் கூடாது என்ற எண்ணம் நொடியில் தோன்றியது. சக்தியை வீணே இங்கு செலவிடுவானேன்? போர்க்களமா இது? பரிசு பெறும் பந்தய பூமியா இது? அல்லது தான் அடைய விரும்பிய பொருளை அபகரிக்க வந்தவனா இந்த இளைஞன் - இவனுடன் ஏன் வீணே போர்?

விநயாதித்தன் சற்றுப் பின்வாங்கி, தன் வாளைத் தாழ்த்தி கலகலவென நகைத்து, ''இவ்வளவு திறமையுடன் போர் புரிகிறாயே, யாரப்பா நீ?'' என்று கேட்டான்.

''என்னைப் பற்றி நான் பிறகு சொல்கிறேன். நீ யார்... இந்த மங்கையை ஏன் வேதனைக்கு உள்ளாக்குகிறாய்...?'' என்று சீறினான் வாள் வலிமை மிக்க அந்த இளைஞன்.

''காஞ்சி நகரத்து வீதி வழியே கதிகலங்க ஓடிவந்த இந்தக் காரிகைக்கு அபயம் அளித்தேன்...''

''அபயம் அளித்தாயோ பயம் அளித்தாயோ... சுத்த வீரனாகக் காணப்படுகிறாய்... நீயும் சண்டையிட விரும்பாததால் நான் சும்மா விட்டுவிடுகிறேன். இனி இப்படியெல்லாம் நடந்து கொள்ளாதே'' என்றான்.

விநயாதித்தன் உதட்டைக் கடித்துக் கொண்டான். 'இது போன்ற சுடு சொல்லையும் அவமானம் தரக்கூடிய மதிப்புக் குறைவான வார்த்தையையும் வேறு எவராவது சொல்லி விட்டிருந்தால் ஏற்பட்டிருக்கும் நிலையே வேறு. இப்போது சூழ்நிலையும், சந்தர்ப்பமும் சரியாக இல்லை. இந்தத் துடுக்குத் தனமான இளைஞன் மீண்டும் சந்திக்காமலா போய்விடப் போகிறான். அப்போது வட்டியும் முதலுமாகத் திருப்பித் தந்துவிடுகிறேன்' என்று எண்ணிய விநயாதித்தன், ''சரி, சரி; இது உனக்கு விடைகூறும் நேரமில்லை. மற்றொரு முறை விளக்கிக் கூறுகிறேன். நான் தான் இந்த அபலையைப் பயமுறுத்தி விட்டேன் – நீயாவது கௌரவமாக நடத்தி, தக்க இடத்தில் சேர்த்துவிடு – '' என்று ஏளனக் குரலில் கூறிவிட்டுத் திரும்பிக் கூடப் பாராமல் நடந்தான். அவன் உடல் பதட்டம் அடங்க வெகுநேரம் பிடித்தது.

அந்தப் படபடப்பை அடக்கித் திகைக்க வைத்தது ஒரு வளையல் கரம். விநயாதித்தன் திரும்பிப் பார்த்தான். நடுத்தர வயதுடைய பெண் ஒருத்தி முகத்தில் புன்னகை தவழ நின்று கொண்டிருந்தாள்.

''என்ன அப்படிப் பார்க்கிறீர்கள்? நான்தான் சித்திராங்கி, என்னைத் தெரியவில்லையோ?''

நிஜமாகவே அவளை அவனுக்கு அடையாளம் தெரியவில்லை.

''நான்தான் காஞ்சனா அம்மாவின் அந்தரங்கத் தோழி. சமுத்திரக் கரையில் கூடாரத்தில் தங்கியிருந்தீர்களே. அப்போது என்னைப் பார்க்கவில்லையா?''

அவன் கண்கள் காஞ்சனாவைத் தவிர வேறு யாரைக் கண்டன?

''ஆமாம் ஆமாம், அதெப்படி நீங்கள் என்னைப் பார்த்திருக்க முடியும்? காஞ்சனா அம்மாவைப் பார்த்துக் கொண்டிருக்கவே கண்களிரண்டு போதாதே!'' என்று அவள் குறும்புச் சிரிப்புடன் கூறியதை விநயாதித்தனால் அப்போது ரசிக்க முடியவில்லை; என்றாலும் காஞ்சனாவின் மாளிகையை அடைந்துவிட வேண்டும் என்ற பரபரப்பு அவனுக்கு ஏற்பட்டது.

''ஓகோ! நீ காஞ்சனாவின் அந்தரங்கத் தோழியா? நல்லவேளை! இப்போதுதான் நான் காஞ்சனா என்று வேறு ஒருத்தியைத் தவறாக நினைத்து உதவப் போக ஒருவனை இந்த வாளுக்கு இரையாக்கும் நிலையிலிருந்துத் தப்பினேன்'' என்றான்.

''வாளுக்கு இரையாக்கும் நிலையிலிருந்தா? அச்சச்சோ!'' என்று சித்திராங்கி பயந்தவள் போல் உதட்டைக் குவித்துச் சிரிப்பை அடக்கிக் கூவினாள். பிறகு, ''காஞ்சனா தேவியைப் போல் இருக்கும் அந்தப் பெண்ணை நீங்களும் கண்டு விட்டீர்களா? எங்கே ஐயா அந்தப் பெண்? அவளை எப்படியாவது அழைத்து வரவேண்டும்'' என்றாள்.

''அவள் எங்கே போனாளோ எனக்குத் தெரியாது. காஞ்சனாவின் மாளிகைக்குப் போக வழிகாட்டு'' என்றான்.

''தங்களை அழைத்துப் போகத்தானே வந்திருக்கிறேன். வாருங்கள், வாருங்கள்! காஞ்சனா தேவியார் தங்களுக்காகவே காத்திருக்கிறாள். வேதனை தாளாமல் துடிக்கிறாள். மை எழுத மறந்தாள் – விழிகள் சோர்கின்றன; கூந்தலுக்குத் தைலமிட்டு

முடியவில்லை; மலர்கள் துவண்டுத் தரையில் கிடக்கின்றன. செம்பஞ்சுக் குழம்பு காய்ந்துவிட்டது. உம்மை அழைத்துப் போகாது வந்தால் என் கதி அதோகதிதான்'' என்றாள்.

⁂ ⁂ ⁂

அவள் கூறியது மிகையன்று. விநயாதித்தன் அந்த மாளிகையில் நுழைந்ததுமே அவன் வருகை காஞ்சனாவுக்கு அறிவிக்கப்பட்டது. ஆடை நெகிழ்வது தெரியாமல் தண்டை கழல்வது அறியாமல், மேகலை சரிவது உணராமல் காஞ்சனா மேல் மாடத்தினின்று படிக்கட்டுகளில் தாவி வந்தாள்.

''வந்துவிட்டாயா விஜயன்?'' என்று கூறி அவன் மார்பில் தன் முகத்தைப் பதித்துக் கொண்டாள். அங்கிருந்தவர்கள் அனைவரும் காஞ்சனாவின் செய்கையைக் கண்டு வியந்தனர்.

''இந்த இளைஞனுக்கு ஏற்பட்ட அதிருஷ்டத்தைப் பாருங்கள்'' என்று ஆச்சரியப்பட்டனர்.

விநயாதித்தனுக்குக் களைப்பு மேலிட்டிருந்தது. அமைதியாக ஓரிடத்தில் அமர்ந்திருக்க ஆசைப்பட்டான். தனிமையை அவன் பெரிதும் விரும்பினான்.

''விஜயா... இதுதான் என் சிறு குடில்!'' என்று காஞ்சனா கண்களைச் சுழற்றினாள்.

''ஆகா! குடிலே இவ்வளவு பிரமாண்டமாக இருந்தால், மாளிகை இன்னும் எவ்வளவு பெரிதாக இருக்கும்!'' - விநயாதித்தன் மெல்ல நகைத்தான்.

''என்ன சிரிக்கிறாய் விஜயா?''

''ஒன்றுமில்லை; இந்தக் கூடத்தில் உள்ள தூண்களின் உயரத்தைப் பார்த்துச் சிரித்தேன்.''

''ஏன் மிகவும் சிறியதாய் இருக்கிறது என்றா?-''

''இல்லை, இல்லை... குடிலின் கம்பத்தின் உயரம் எனக்குச் சிரிப்பை ஊட்டியது...''

''மேல்மாடத்து நிலா முற்றத்தைப் பார்த்ததில்லையே... மேலே போவாம் வா, விஜயா'' என்று அவன் கரத்தைப் பற்றி பரபரவென்று இழுத்துச் சென்றாள்.

அந்த மேல்மாடத்து நிலா முற்றத்தில் நிலவரசன் தவழ்ந்துத் தவழ்ந்து மகிழ்ந்தான். தென்றல் அசைந்து வந்தது. படர்ந்திருந்த முல்லைக்கொடி அசைந்தாடியது. உயர்ந்து வளர்ந்த மகிழ மரத்துக் கிளைகள் நிலா முற்றத்திலும் எட்டிப் பார்த்தன. மகிழ

மலரின் மணம் முல்லையுடன் கலந்து வீசியது. தென்றல் காற்று உடலுக்குப் புதுத்தெம்பை ஊட்டியது. நிலா முற்றத்தில் நடைபெறும் எந்த நிகழ்ச்சியும் வெளி உலகத்துக்குத் தெரியாது.

வண்ண விசித்திரமான பட்டுத் துணியால் தைக்கப்பட்ட பெரும் தலையணைகள் அங்கே கிடந்தன. கீழே மெல்லிய துகில் விரிக்கப்பட்டிருந்தது. காஞ்சனா துள்ளிக் குதித்தோடித் தலையணையில் சாய்ந்து கொண்டாள்.

விநயாதித்தனுக்கும் உட்கார்ந்தால் போதுமென்றாகி விட்டது.

காஞ்சனாவின் மேனி மீது மங்கிய நிலாவொளி பரவி மேலும் அழகாகப் பிரதிபலித்தது. அவளருகே பழங்கள் நிறைந்த தட்டு கொண்டு வைக்கப்பட்டது. செம்பிலே பாலும், கிண்ணத்திலே மதுவும் அங்கே காட்சியளித்தன.

விநயாதித்தன் கவனம் மதுவிடமோ, கனியிடமோ செல்லவில்லை. விழிகளிலே போதையைத் தேக்கி இதழ்களிலே சுவையைப் புதைத்து ஒயிலாகச் சாய்ந்திருந்த காஞ்சனா விடமிருந்து அவனால் பார்வையைத் திருப்ப முடியவில்லை.

'காஞ்சனா' என்று விநயாதித்தன் மெல்ல அழைத்தான். அவள் விழிகள் தாம் அதற்கு விடையளித்தன.

''காஞ்சனா... சிறிது நேரத்திற்கு முன்பு நீதான் இருளில் ஓடி வருகிறாய் என்று எண்ணி ஒரு மங்கையைக் காப்பாற்றினேன்... இந்த உலகத்தில் ஒரே உருவமுடைய இருவர் இருக்கிறார்கள் என்பது வியப்பாக இல்லை...?'' என்று விநயாதித்தன் கேட்டான்.

''அதில் என்ன வியப்பு விஜயா? நீ இருளிலே அங்கே சென்றாயே அதுதான் வியப்பிலும் வியப்பு. உனக்காக எவ்வளவு நாள் காத்திருப்பது? என்னைப் பைத்தியமாக்கிவிட்டாயே விஜயா...'' என்றாள் காஞ்சனா.

விநயாதித்தனை மெல்ல உறக்கம் சுழற்றத் தொடங்கியது. அதைப் புரிந்துகொண்ட காஞ்சனா, ''எங்கெங்கெல்லாமோ சுற்றி அலைந்துக் களைத்துவிட்டாய் போலிருக்கிறது விஜயா... உன் களைப்புப் போக்க ஒரு மருந்து தருகிறேன் பார்...'' என்று கூறி கையைத் தட்டினாள். நிலவொளியில் அப்ஸரஸ் போன்ற இள நங்கை மோகன வடிவுடன் வந்து வணங்கி நின்றாள். காஞ்சனாவின் இல்லத்திலுள்ள பல மங்கையருள் ஒருத்தி அவள். காஞ்சனாவின் கண் சாடை அறிந்த அவள் நடனமாடத் தொடங்கினாள். பாட்டு இல்லை; உடன் ஒலிக்க இசைக்கருவி இல்லை. கை, முக பாவங்கள் மூலம் உடல் துடிப்பின் மூலம்

அவள் மான்போல் துள்ளி ஆடினாள். மயிலென ஒயிலாக நடந்து அபிநயம் பிடித்தாள். ஒரு சமயம் காற்றில் அசைந்தாடும் பூங்கொடியானாள். நடனமாடவே பிறந்து காஞ்சனாவின் வீட்டில் வளருகிறாளோ? காஞ்சனாவின் வீடே விசித்திர மாளிகையா! ஹூம்...!' விநயாதித்தன் வியந்தான். மாய உலகத்து விசித்திர மங்கையோ இவள். திடீரென அந்த நாட்டிய மங்கை அங்கிருந்து ஓடி மறைந்தாள்.

"காஞ்சனா! எதற்காக அந்த மங்கையை ஆடச் சொன்னாய்? இப்போது உள்ளே ஓடச் சொன்னாய்... என் உயிரை ஏன் வதைக்கிறாய்..." என்று மெல்ல அவள் கன்னத்தைத் தட்டினான்.

"உன் களைப்பைப் போக்குவதற்காகத்தான்... நீ புதுத் தெம்புடன் இருந்தால்தானே காஞ்சி மாநகரில் உன்னைக் கொண்டு என் எண்ணத்தை நான் நிறைவேற்றிக் கொள்ளலாம். என் எண்ணம் நிறைவேறினால் இந்த நகரமே என் காலடியில்... அப்புறம் அப்புறம் நான் உன் காலடியில். அப்படித்தானே...?" காஞ்சனா போதைச் சிரிப்புடன் அவன் முகவாயை மெல்லப் பிடித்து வருடினாள்.

விநயாதித்தன் நிமிர்ந்து உட்கார்ந்து கொண்டான். 'காஞ்சி நகரத்துக் கட்டழகி காஞ்சனாவின் உள்ளத்தில் புதைந்திருப்பது தான் என்ன? பெரிய பெரிய சொற்களைப் பேசுகிறாளே? அவற்றுள் மகத்தான திட்டங்கள் புதைந்திருக்கும் போலிருக் கிறதே. அதனால்தான் இவள் தன்னிடம் இவ்வளவு சாகசங்களும், சல்லாபங்களும் செய்கிறாளா? ஹூம்... பார்ப்போம்!' என்று எண்ணினான் அவன்.

"விஜயா... நீ காஞ்சி வந்தது எதற்காக...?" என்று கேட்டுக் குறும்புத்தனமாக அவனைப் பார்த்தாள்.

"உன்னைக் கண்டு உன் மையலில் சொக்கி விடுவதற்குத் தான்" என்று கூறி நகைத்தான் விநயாதித்தன்.

"அது சரி... விஜயா... எந்த இலட்சியத்துடன் வந்தாய் என்பதை மறந்துவிட்டாயா?"

விநயாதித்தன் மெல்ல மனத்துள் சிரித்துக் கொண்டான். அவன் இலட்சியம் வேறுதான். காஞ்சனாவிடம் காதல் கொண்டு அவள் மாளிகையில் கண்ணுறங்கவா வந்தோம் – நமது எண்ணமும் காஞ்சனாவைக் கொண்டு காஞ்சி நகரத்தில் பலவற்றைச் சாதித்துக் கொள்ள வேண்டும் என்பதுதானே...' என்று எண்ணியவனை மீண்டும் காஞ்சனா நோக்கி, "என்ன யோசனை விஜயா... வந்த காரியம் எதையும் செய்யவிடாமல் நான் தடுத்துவிட்டேன் என்கிறாயா...?" என்றாள்.

''இல்லை... இல்லை... அப்படியில்லை... எனக்கு வேண்டிய உதவியை நீ செய்வாய் என்று தெரியும்...''

''என்ன வேண்டுமானாலும் கேள் விஜயா... இந்த மாளிகை வேண்டுமா? அது பெரும் பொருட்டல்ல, என்னையே உனக்கு அர்ப்பணித்திருக்கும்போது! உன்னை நேரே காணாதபோதே, பைரவன் வர்ணித்தபோது, நான் மயங்கிவிட்டேன் என்று சொல்வதில் வெட்கம் என்ன? உன் வருகைக்காகக் காத்திருந்தேன். கடைசியில் கண்டே விட்டேன். பைரவனுக்கு வரவர ருசி குறைந்துவிட்டது. உன்னை வர்ணிப்பதில் அவன் பூரண திறமை காட்டவில்லை. உன்னைக் கண்டதும், உன்னுடன் மாமல்ல புரத்துக் கூடாரத்தில் இரவில் தங்கியிருந்ததும் என் மனத்தில் உன்னை மறக்க முடியாத நிலையை உண்டாக்கிவிட்டது. இந்த நிலையில் உனக்கு வேண்டிய உதவியை நான் செய்யக் காத்திருக்கிறேன். அதேபோல் நீயும் என் கோரிக்கை ஒன்றை நிறைவேற்ற வேண்டுமே...'' குழைந்தாள்.

''கோரிக்கையா... அது என்ன காஞ்சனா?''

''இளவரசர் இராஜசிம்மனை சந்திக்கத்தானே நீ வடக்கே இருந்து வந்தாய்? உன்னிடம் இளவரசருடைய முத்திரை மோதிரம் இருக்கிறதாமே...'' என்று காஞ்சனா கேட்டவுடன் விநயாதித்தன் திடுக்கிட்டான். அவன் நொடியில் புரிந்துகொண்டுவிட்டான். விஜயன், இராஜசிம்மனைக் காணக் காஞ்சிக்கு வந்திருக்கிறான். அவனிடம் அடையாள மோதிரம் இருக்கிறது... அதை அறிந்த காஞ்சனா தன்னை விஜயன் என்று தவறாக எண்ணிவிட்டாள். விஜயனிடம் அடையாள மோதிரம் இருக்கிறது. அது இருந்தால் பல்லவ நாட்டில் எங்கு வேண்டுமானாலும் செல்லலாம். என்ன வேண்டுமானாலும் சாதித்துக் கொள்ளலாம். அது விஜயனிட மிருக்கிறது! ஹூம்!

'சொல்லிவிடுவோமா - நாம் விஜயனல்லன் என்று? கடைசியில் அவள் அறிந்து வேதனைப்படுவதை இப்போதே கூறிவிடுவோமே' விநயாதித்தன் வாயெடுக்கு முன்பு காஞ்சனா, ''மிகவும் ஜாக்கிரதையாக வைத்துக் கொள்ள வேண்டிய அடையாள மோதிரம் அது என்று எனக்குத் தெரியும். விஜயா, நான் அதைப் பரிசாக கேட்டுவிட மாட்டேன். நான் கேட்க வந்த கோரிக்கையும் அதுவன்று. அந்த அடையாளச் சின்னத்தை வைத்துக்கொண்டு அற்புதமான காரியங்களைச் சாதித்துக் கொள்ளலாம் – என் கோரிக்கை ஒன்றிற்கு அதைப் பயன்படுத்த முடியும்; பயன்படுத்தலாமா என்றுதான் கேட்க நினைத்தேன்'' என்றாள்.

காஞ்சனாவின் கோரிக்கை என்ன? ''என்ன, காஞ்சனா? என்ன செய்ய வேண்டும்?'' என்று விநயாதித்தன் கேட்டான்.

''அந்த முத்திரை மோதிரத்தைக் கொண்டு நீ அரச மாளிகைக்குள் செல்ல வேண்டும்...''

''சரி...''

''இளவரசரைச் சந்திக்க வேண்டும்...''

''சரி...!''

''நாட்களை வீணே கழிக்காமல் இளவரசரது நட்பை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும்.''

''ஆமாம்... நாட்களை வீணேதான் கழித்துவிட்டேன். நான் வந்த காரியம் இன்னும் எள்ளளவும் நடக்கவில்லை. என் செயல் நிறைவேற வேண்டுமானால் திடச்சித்தம் வேண்டும். அதை நழுவவிட்டுவிட்டேன்.''

''அப்படிச் சொல்லாதே விஜயா... என்னைச் சந்தித்ததையும் என்னுடன் பழகுவதையும் குறித்துத்தானே மறைமுகமாகக் கூறுகிறாய்? ஊர் உலகத்தில் சொல்வது போல் நான் வேசியல்லள். நாட்டியக்காரி, கூத்தாடுபவள் என்றால் ஒழுக்கத்துக்கு மாசு கற்பிக்கிறார்கள். நான் இந்த நிலைக்கு வந்ததே வேறு கதை. ஆனால் என் உள்ளத்தில் உள்ள வெஞ்சினத்தை நிறைவேற்ற நான் இந்த வேடம் போட வேண்டியதாயிற்று. அதைப்பிறகு சொல்கிறேன். இளவரசரது நட்பை ஏற்படுத்திக் கொண்டு என்னை அவருக்கு அறிமுகப்படுத்தி வைக்க வேண்டும். என்னைப் பல்லவ நாட்டு ராஜநர்த்தகி ஆக்க வேண்டும்... என்ன... நான் கேட்பதற்கு ஏதும் மறுமொழி கூறாது மௌனமாயிருக்கிறாயே..'' என்றாள்.

விநயாதித்தன் மெல்லச் சிரித்தான். ''ஓகோ! உனக்கு இளவரசர் மீது காதலா? அவரை அடைவதற்கு நான் ஒரு கருவியாக இயங்க வேண்டுமா? அதற்காகத்தான் எனக்கு இவ்வளவு உபசாரமா? நிலா முற்றத்தில் உன் பட்டுடல் தெரிய, பஞ்சுத் தலையணையில் அதனால் தான் என்னெதிரே கிடந்தாயா? நாட்டிய மங்கையை ஆடச் சொன்னாயா? காஞ்சனா, நீ மிகவும் கெட்டிக்காரி, சரியான ஆளைப் பார்த்து சிக்க வைத்துவிட்டாய்'' என்று கூறி குலுங்கக் குலுங்க நகைத்தான்.

காஞ்சனா திடுக்கிட்டாள். ''தவறாக எண்ணிவிட்டாயா விஜயா... எனக்கு இளவரசர் மேல் இனிமேல்தானா ஆசை உண்டாக வேண்டும்? உன்னைக் கண்ட கண்கள் வேறு

ஒருவரையும் காணாது. விஜயா, நான் இளவரசரைக் காதலிப்பதற்காக உன் உதவியை நாடவில்லை. ராஜநர்த்தகி ஆகிப் பொருளும் புகழும் ஈட்ட விரும்பவில்லை. ஆனால் என் உள்ளத்துக்குள்ளே வெகு நாட்களாகப் புகைந்து கொண்டிருக்கும் தீக்குச் சரியான இரையைப் போடுவதற்காகத்தான். என் உள்ளத்துள்ளே துடித்துக் கொண்டிருக்கும் பழிக்குப் பழி வாங்க வேண்டும் எனும் எண்ணத்தை நிறைவேற்றத்தான்...''

''பழிக்குப் பழியா? பல்லவ குலத்தின் மீதா?'' விநயாதித்தன் வியப்புடன் கேட்டான்.

''ஆமாம், விஜயா. ஆமாம். நீ ஆச்சரியப்படுவாய். பல்லவ இளவரசனின் பால்ய நண்பனான நீ கோபங்கொள்வாய். பல்லவ நாட்டில் உன் கலை மேதையைப் புலப்படுத்த வந்த நீ என்னை எரித்துவிட எண்ணுவாய்... ஆனால், விஜயா... என் இதய தாபத்தை உன்னால் தீர்க்க முடியும் என்று நிச்சயமாக எண்ணியிருக்கும் என் நம்பிக்கையைச் சிதற அடிக்காதே. பைரவனைத்தான் இதுவரை நம்பியிருந்தேன். காபாலிக வடிவத்துடன் நாட்டிலே நடமாடி வந்த அவனால் முடியும் என நம்பினேன். அதற்காக அவனது கூத்துக் கோஷ்டியில் காபாலிகையாக வேடமணிந்து ஊர் ஊராகச் சுற்றி நடித்தேன். மதுவுண்டு கூத்தாடும் நடிப்பை இயற்கையான நடிப்பு என மக்கள் பாராட்டி மகிழ்ந்தனர். என் அழகும், பருவமும் மகுடி கேட்ட நாகம் போல் மயங்கச் செய்தன. ஆனால், என் நடிப்பு நடிப்பாகவே போய்க் கொண்டிருந்தது. இப்போது நீ கிடைத்துவிட்டாய். பல்லவ குலத்தைப் பழிக்குப் பழி வாங்க வேண்டும் எனும் என் கோரிக்கைக்கு நீ உதவமாட்டாயா விஜயா?'' காஞ்சனா எழுந்து உட்கார்ந்து அவன் கன்னத்துடன் தன் மலர்க் கன்னத்தை ஒட்டினாள்.

விநயாதித்தன் மெய் சிலிர்த்தது. பல்லவ குலத்தைப் பழிக்குப் பழி வாங்கப் போகிறாளாமே! ஆகா! நமக்கு உதவியாக இவளை நிச்சயம் பயன்படுத்திக் கொள்ளலாம். அதுவரை விஜயனாகவே நாம் நடிப்போமே என்று எண்ணிய விநயாதித்தன், அவள் கரங்களைப் பற்றி, ''மலர்விழியே, காஞ்சனா. மதுவின் போதையை மனத்திலே ஏற்றிவிட்ட மங்கையே காஞ்சனா! பம்பரம் போல் என்னைச் சுழலச் செய்துவிட்ட எழில் ராணியே காஞ்சனா! நீ கட்டளை இடு, அதை நான் செய்கிறேன். பல்லவ குலத்தைப் பழிக்குப் பழி வாங்க நீ ராஜநர்த்தகி ஆக வேண்டுமா? நான் இளவரசனுடன் நெருங்கிப் பழக வேண்டுமா? வேண்டாம்... வேண்டாம்! நான் எளிதான வேறு திட்டம் தீட்டுகிறேன்...''

என்று கூறிக்கொண்டே போனவன் சட்டெனத் தன் பேச்சை நிறுத்தினான்.

நிலா முற்றத்து வாயிற்படியருகே ஒரு நெடிய உருவம் நின்று கொண்டிருந்தது. பைரவன் உருவம்தான் அது. காஞ்சனாவும் திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தாள்.

''காஞ்சனா... உண்மையான விஜயனை நான் கண்டுபிடித்து விட்டேன். மாமல்லபுரத்துச் சிற்பியின் குடிலில் இருக்கிறான்... இவன் போலி விஜயன்... இவனை நம்பாதே! இவனால் நமக்குத் துன்பங்கள்தாம் விளையும்...'' என்று பைரவன் கூவியதைக் காஞ்சனா காதில் போட்டுக் கொள்ளாமல், ''பைரவா, உனக்கு என்ன துணிவு? இங்கே நீ எப்படி வந்தாய்? போய்விடு... போய்விடு... ஒரு கணம் நீ போகாமல் நின்று கொண்டிருந்தாலும் விபரீதம் உனக்கு விளையும்... உன்னை இங்கே வர அனுமதித்தது யார்? யாரங்கே! சித்திராங்கி, மஞ்சுளா, மதாலசா, மாதங்கி'' என்று பரபரப்புடன் கூவினாள்.

விநயாதித்தன் இருந்த இடத்தினின்று ஏறிட்டு நோக்கினான். 'விஜயன் விஜயன்' என்று காஞ்சனா சொன்னாளே அந்த விஜயன் இருக்குமிடம் விநயாதித்தனுக்குத் தெரிந்துவிட்டது. 'அவனிடம் முத்திரை மோதிரம் இருக்கிறது. சரி; இதைவிட நமக்குச் சௌகரியமான சூழ்நிலை வேறு என்ன வேண்டும்?' என்று எண்ணினான்.

பைரவன் அங்கே ஏன் இருக்கிறான்? ஆனால் போகும்போது, ''காஞ்சனா, நாளை மறுநாள் ஏகாம்பரேச்வரர் கோயிலில் நாடகம் நடத்த வேண்டும் என்பதை மறந்துவிடாதே'' என்றான்.

காஞ்சனா அலட்சியமாக நகைத்துவிட்டு, ''நாடகமாம் நாடகம்! யார் போகப் போகிறார்கள்?'' என்றாள்.

''மக்கள் எதிரே நடித்தும் ஆடியும் எனக்கு அலுத்துவிட்டது. கலையை எங்கே ரசிக்கிறார்கள்? என் வனப்பைப் பற்றிப் புகழ்கிறார்கள். அங்கலாவண்யத்தை வர்ணிக்கிறார்கள். நாடகத்தின் கருத்தோ, நீதியோ அவர்கள் உள்ளத்தில் எங்கே ஏறப் போகின்றன? விஜயா, நான் சொன்னவற்றை நீ விரைவில் நிறைவேற்ற வேண்டும். அதுதான் எனக்கு நீ கொடுக்கக்கூடிய பரிசு'' என்றாள்.

விநயாதித்தன் செவிகளில் அவை ஏதும் விழவில்லை. அவன் மனம் பிரமாண்டமான திட்டமொன்றைச் சிந்திப்பதில் ஆழ்ந்திருந்தது.

●

# 17. இரவில் நடந்த நாடகம்

சுந்தரிக்கு இப்போது அச்சம் சிறிது தெளிந்தது. தனக்கு அபயம் அளிப்பது போல் கம்பீரமாக நிற்கும் அந்த இளைஞனை ஒருமுறை மெல்ல நோக்கினாள். மற்றொருமுறை பார்ப்பதற்கு அவள் விழிகளுக்குச் சக்தி இல்லை. விழிகள் ஏதோ நிலத்தில் தேடுவன போல் கீழே நோக்கின.

''இந்த இருளில் தன்னந்தனியாக ஏனம்மா இந்தப் பக்கம் வந்தாய்? நீ இந்த ஊரைச் சேர்ந்தவளில்லையோ?'' என்ற அந்த யுவனின் குரல் அவள் இதயத்தில் தைர்யத்தை வளர்த்தாலும், ஏனோ பேச்சு வரவில்லை.

அந்த யுவன் தலையில் முண்டாசு கட்டியிருந்தான். முகத்தில் அடர்ந்து வளர்ந்த மீசை முறுக்கி விடப்பட்டிருந்தது. காதில் இரு குண்டலங்கள் அசைந்தாடின. கையில் வீர கங்கணம் அணிந்திருந்தான்.

''நீங்கள் எங்கே போக வேண்டும்? அதுவரையில் கொண்டு சேர்த்துவிட்டு வருகிறேன்'' என்றான் அந்த இளைஞன்.

சுந்தரி பேசத் துணிந்துவிட்டாள்.

''காஞ்சி நகரத்தில் பயம் என்பதே இராது என்று கூறினார்கள். அதுவும் பெண்கள் தைரியமாக நடக்கலாம் என்றும் கூறினார்கள்'' என்றாள் சுந்தரி.

''காஞ்சிமா நகரைப் பற்றி நானா தேசங்களில் பெரும் புகழ் பரவித்தான் இருக்கிறது. நல்ல பெயரை மாற்றி அவப்பெயர் ஊட்ட வேண்டும் என்பதற்காகச் சிலர் முனைந்து வருகிறார்கள். ஆமாம், சற்று நேரம் முன்பு வழிமறித்தானே ஒருவன் – அவன் தங்களுக்கு அபயம் அளித்ததாகவன்றோ சொன்னான்... நீங்கள் வேறுவிதமாகச் சொல்கிறீர்களே...'' என்றான் இளைஞன்.

''சிங்கத்து வாயினின்றுத் தப்பிப் பாம்பு வாயில் விழுந்த கதைதான். எங்களைத் துரத்திக்கொண்டு சிலர் வந்தனர்...''

''உங்களையா? அப்படியென்றால் உங்களுடன் இன்னொருவரும் ஓடி வந்தாரா?''

சுந்தரி அந்த இடத்திலேயே நின்று பேச விரும்பவில்லை. மெல்ல நடக்க முயன்றாள். அதை அந்த இளைஞனும் புரிந்து கொண்டான். அவனைப் பார்த்தால் நல்லவனைப் போல் தோன்றுகிறது. ஹூம்.

''என்னுடன் குட்டிச் சித்தனும் ஓடி வந்தான்'' என்றாள் சுந்தரி.

''குட்டிச் சித்தனா?''

''ஆமாம், கூனன் அவன். ஆனால், மிகவும் நல்லவன். என்னையும் அவனையும் நகரக் காவலர்கள் காவலில் வைத்துவிட்டார்கள்...''

''ஓ! அப்படியா? நீங்கள் என்ன குற்றம் செய்தீர்கள்?''

''குற்றமா? குற்றம் செய்த சில குறும்புக்காரர்களை கூனன் தடுத்தான்...''

''ஓகோ...! அப்படியா? தங்களைக் காவலில் வைத்திருக்க மாட்டார்களே...''

''ஆமாம். விருந்தினர் மாளிகையில் தங்குமாறு சொன்னார்கள். ஆனால், நாங்கள் தப்பி விட்டோம்...''

''தைரியசாலிதான்... விருந்தினர் மாளிகையைவிட இந்த இருளடைந்த வீதிதான் தங்களுக்குப் பிடித்திருக்கிறதோ...''

''நீர் கேள்வி கேட்பதில் மிகவும் கெட்டிக்காரர் போலிருக்கிறது. இந்த ஊர்க்காரரோ நீங்கள்! இந்த ஊரின் புகழ் மாலையைக் கூறட்டுமா? இந்த நகரத்து மன்னரைக் காண்பதற்காக நானும் கூனனும் மாமல்லபுரத்தினின்று வந்தோம்...''

''எதற்காக?''

''சொல்கிறேன் ஐயா... மாமல்லபுரத்தில் சிற்பி மல்லிநாதர் அழகிய சிற்பத்தைச் செய்து அதை வண்டியில் ஏற்றி வந்தார். வழியில் வண்டி குடை சாய்ந்து அவருக்குக் கால் முறிந்தது. அவருக்குத் துணையாக என்னை அழைத்துவரக் குட்டிச் சித்தன் ஓடோடி வருவதற்குள் அவர் மாயமாய் மறைந்துவிட்டார். மல்லிநாதரின் பணியை நான் நிறைவேற்ற அந்தச் சிலையுடன் காஞ்சிக்கு வந்தேன். வண்டியையும் சிலையையும் மூதாட்டியின் வீட்டில் நிறுத்தி வைத்துவிட்டு நானும் குட்டிச் சித்தனும் கடைவீதியைக் காணச் சென்றோம். அங்கே சிறு கலகம் மூண்டது; இதுதான் நடந்த கதை. மன்னரை நான் எப்போது காண்பேன்! குட்டிச் சித்தன் எங்கே போய்விட்டானோ...?''

சுந்தரியின் சொல் கேட்ட அந்த இளைஞன் முகம் மாறியது. ''என்ன... என்ன... மல்லிநாதருக்கு ஆபத்தா... அவர் சிற்பத்தை

அனுப்பினாரா... ஆச்சரியத்துக்கு மேல் ஆச்சரியமாயிருக்கிறதே... எங்கே அந்தச் சிற்பம், நான் அதைப் பார்க்கலாமா?'' என்று பரபரப்புடன் கேட்டான்.

சுந்தரி கூறிய இட அடையாளத்தை மனத்தில் கொண்டு அந்த இளைஞன் அவளை அழைத்துக்கொண்டு விரைந்தான். சீக்கிரமாக அடையக்கூடிய வழி எது உண்டோ அவ்வழியின் மூலமாக இருவரும் நடந்தனர். காட்டிலும் மேட்டிலும் நடந்து பழக்கப்பட்ட சுந்தரியால் வீதி வழியே இளைஞனின் கம்பீரமான நடைக்குச் சரியாக நடக்க முடியவில்லை.

ஒரு சமயம் இளைஞன் சற்று முன்பாகச் சென்றுவிடுவான்; அவனுடைய நடையை ரசிப்பாள் சுந்தரி.

ஒருபோது இளைஞன் சற்றுப் பின்தங்குவான்; சுந்தரி திரும்பிப் பார்ப்பாள். அப்போது அவன் தோற்றம் அவள் விழிவழியே இதயத்துள் புகுந்து அவளைச் சிந்திக்கச் செய்யும்.

ஃ ஃ ஃ

சிற்ப வண்டி நிறுத்தப்பட்டிருந்த மூதாட்டியின் வீட்டைச் சுந்தரி அடையாளம் காட்டினாள். மூதாட்டி உறங்கிவிட்டாள் போலும். சந்தடி ஏதும் இல்லை. மாடுகள் படுத்து அசைபோட்ட வண்ணமிருந்தன. மங்கிய நிலவொளியில் சிற்பம் அமைதியாகத் திகழ்ந்தது.

இளைஞன் அந்தச் சிற்பத்தின் அழகை அணுஅணுவாகப் பருகினான். கண்டறியாதன கண்டது போன்ற பெரும் வியப்பு அவன் முகத்தில் தாண்டவமாடியது. 'ஆகா, ஆகா' எனும் பாராட்டுச் சொற்கள் அவ்வப்போது வெளிவந்தன.

''உங்களை இங்கே ஜாக்கிரதையாகச் சேர்த்துவிட்டேன். நான் விடைபெற்றுக் கொள்ளட்டுமா?'' என்றான் அந்த இளைஞன்.

''ஐயா, தங்கள் உதவிக்கு நன்றி எப்படித் தெரிவிப்பது என்றே எனக்குத் தெரியவில்லை. தங்களைப் பற்றி ஏதும் தெரிவிக்கவில்லையே... நான் அறிந்து கொள்ளலாமா?'' என்று சுந்தரி கேட்டாள்.

இளைஞன் புன்முறுவல் பூத்தவாறு, ''நான் ஒரு சாதாரண கலை ரசிகன். அவ்வளவே. நான் போய் வருகிறேன்'' என்று கூறி அங்கிருந்து சென்றுவிட்டான்.

நடந்தவை யாவும் ஏதோ கனவுபோல் சுந்தரிக்குத் தோன்றின. குட்டிச் சித்தனைக் காணோமே என்ற கவலையில் அவளுக்கு

வெகுநேரம் உறக்கமே வரவில்லை. பிறகு கண்ணயர்ந்தவள் காலையில் வீட்டு வாயிலில் ஏற்பட்ட சலசலப்பால் விழித்துக் கொண்டாள்.

குதிரை மீது இரு வீரர்கள் வந்திருந்தனர். சிவிகையொன்று நின்றிருந்தது. மூதாட்டி சிவப்பழம் போல் நெற்றியில் திருநீறு பளிச்சென்று துலங்க சுந்தரியின் அருகே வந்து, ''அம்மா குழந்தே! அரண்மனையிலிருந்து அரச பல்லக்கு வந்திருக்கிறது. உன்னை அழைத்து வருமாறு மன்னரின் கட்டளையாம்; எழுந்திரு, எழுந்திரு'' என்று கூறி எழுப்பினாள்.

சுந்தரிக்கு ஆச்சர்யம் தாங்கவில்லை. சிற்பம் இருந்த வண்டியை வீரர்கள் ஓட்டிவர, சுந்தரி சிவிகையில் அரண்மனை நோக்கிச் சென்றாள்.

அவள் அப்போதுதான் முதல் முறையாக பரமேச்வர வர்மரையும், அவரது திருக்குமாரர் இராஜசிம்மனையும் காண்கிறாள். பெரும் ஒளியைக் கண்டு கூசி நிற்பது போல் அவர்கள் எதிரே சுந்தரி குனிந்த தலை நிமிராமல் நின்றாள். பரமேச்வர வர்மருக்குச் சிற்பத்தைக் கண்டதும் ஏற்பட்ட மகிழ்ச்சிக்கு எல்லையில்லை. அவர் பல நாட்களுக்குப் பிறகு அப்போதுதான் வெளியே வருகிறார். முதன் முதலில் வெளி யுலகில் அவர் காண்பது ஒரு சிற்பம். சிற்பக்கலைக்கு மீண்டும் மறுமலர்ச்சியளிக்க மல்லிநாதர் சிருஷ்டித்த சிற்பம்.

''மல்லிநாதரின் திறமையை இந்தச் சிற்பம் ஒன்றிலேயே கண்டுவிடலாம். கோயிலை அழகுபடுத்த பலபல யோசனைகளை அவர் தெரிவித்தார். மல்லிநாதர் எங்கே... அவர் வரவில்லை...? நீ யாரம்மா அவர் மகளா...?'' என்று பரமேச்வர வர்மர் கேட்டார்.

மன்னரின் வார்த்தைகளில் அன்பும், ஆர்வமும் துள்ளி நின்றன. சிற்பியின் மகளா என்று அவர் கேட்டுவிட்டாரே. சுந்தரி என்ன மறுமொழி கூறுவாள்? காஞ்சியையடைந்து அரசமாளிகையில் சேர்ந்து மன்னரையும், மன்னர் குலத்தையும் பழிவாங்க வேண்டும் என்ற எண்ணத்தில் வந்தவளாயிற்றே! இப்போது அவள் என்ன சொல்லப் போகிறாள்? சுந்தரியின் விழிகளில் நீர் தேங்கி நின்றது.

ஆனால், இராஜசிம்மன் சிற்பத்துடன் மல்லிநாதர் புறப்பட்டதையும், வழியே அவருக்கு ஏற்பட்ட விபத்தையும் ஒன்றுவிடாமல் தந்தையிடம் கூறி வந்தான்.

''ஆ! இவருக்கு எப்படித் தெரிந்தது? இளவரசரது திறமையை எல்லாரும் புகழ்கிறார்களே – அது உண்மைதான் போலிருக்கிறது. நாலா திக்கிலும் அவருக்கு செவி உண்டோ?'' சுந்தரி வியந்தாள்.

அவள் இப்போதுதான் இளவரசரை ஏறிட்டுப் பார்க்கிறாள். அந்தக் கண்களிரண்டையும் வேறு எங்கோ பார்த்திருப்பது போல அவளுக்குத் தோன்றியது!

பரமேச்வர வர்மர் ஏதும் பேசவில்லை. அவர் அதிக நேரம் அங்கு இருக்கவில்லை. மாளிகைக்குள்ளே போய்விட்டார். இராஜசிம்மனும் பின்தொடர்ந்தான்.

''இராஜசிம்மா... நான் கேள்விப்படுவதெல்லாம் எதைத் தெரிவிக்கின்றன என்பதைத் தெரிந்து கொண்டாயா? நகரத்திற்குள் விரோதி நாட்டு ஒற்றர்கள் பலர் நுழைந்து மிகவும் வேகமாகச் செயலாற்றுகின்றனர் என்பதற்கு இன்னும் என்ன அத்தாட்சி வேண்டும்?'' என்றார்.

''ஆம், அரசே! ஒற்றர்களிடமிருந்து எனக்கும் தகவல் கிடைத்திருக்கிறது'' என்றான் இராஜசிம்மன்.

''கிழக்குக் கோட்டை வாயிலைத் தவிர மற்றவற்றை மூடிவிட நான் உத்தரவிடப் போகிறேன். கிராமங்கள் தோறும் படை வீரர்களைச் சேர்க்கப் பறை அறிவிக்கச் சொல்லப் போகிறேன்.''

''தந்தையே...''

''ஆமாம், இனியும் பொறுக்க முடியாது, படைக்கு நீதான் தலைமை தாங்க வேண்டும். வாதாபியைச் சூழ்ந்து அவர்கள் போர் வெறி மீண்டும் தலைதூக்காது அழித்துவிட வேண்டும். தளவாடச் சாலைகளில் ஆயுதங்களைச் சேமிக்கத் தொடங்கிவிடு. உலைக் கூடங்களில் வேலும் வாளும் செய்து குவியட்டும்.''

இராஜசிம்மன் மௌனமாக நின்றான்.

''இராஜசிம்மா, உன் உள்ளம் எனக்குப் புரிகிறது. எல்லையிலே விரோதியின் தொல்லை இருக்கும்போது கலை வளர்ச்சியில் கவனம் செல்லுமா? நம்மால்தான் வளர்க்க முடியுமா? இருப்பதை அழியாது வேண்டுமானால் பார்த்துக் கொள்ளலாம். மாமல்லபுரத்தில் இருக்கும் நம் சிற்பச் செல்வங்களை அழியாது பார்த்துக்கொள்ள வேண்டும். உம்! மல்லிநாதரை உடனே தேடிக் கண்டுபிடி'' என்றார்.

சுந்தரிக்கு புத்தாடையும் முத்துமாலையும் சன்மானமாக வழங்கப்பட்டன. அவள் பணி முடிந்துவிட்டது. இனி அவள் திரும்பி மாமல்லபுரம் செல்ல வேண்டும். அவளை மாமல்ல புரத்திற்கு அழைத்துச் செல்லத் துணையாக இரு வீரர்களிடம் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டது. அதனால் காஞ்சியிலேயே அவளால் தங்கவும் முடியாது. குட்டிச் சித்தன் வந்துவிட்டால் அவள் புறப்பட வேண்டியதுதான். இளவரசரை மீண்டும்

ஒருமுறை சந்தித்து விடை பெற்றுக்கொள்ள முயன்றாள் சுந்தரி. இராஜசிம்மனைக் காணவில்லை.

மூதாட்டியாரின் வீட்டிற்கும் குட்டிச் சித்தன் வரவில்லை. எங்கே போயிருப்பான் அவன்? சுந்தரிக்கு ஏதும் புரியவில்லை. காஞ்சி நகரிலே இன்னும் ஓரிரு நாட்கள் தங்கியிருந்துவிட்டு மாமல்லபுரம் புறப்படலாமென எண்ணினாள்.

⁂ ⁂ ⁂

கோட்டைக் கதவுகள் அடைக்கப்படும் செய்தி நகரமெங்கும் பரவியது. ஏகாம்பர ஈசர் கோயிலருகே காஞ்சனா வேடம் பூண்டு நடிக்கும் நாடகம் அன்று நடைபெற இருந்தது. அந்த நாடகம் காண மன்னரும் வரப் போகிறார் என்பதையறிந்து வழக்கத்தைவிட மக்கள் திரண்டிருந்தனர்.

கதிரவன் மறைந்துவிட்டான்; ஆங்காங்கே கற்கம்பங்களில் எண்ணெய் இடப்பட்ட தீவர்த்திகள் ஒளிவீசத் தொடங்கின. பின் நிலாக் காலமாகையால் மதியின் முகம் தெரியவில்லை. புதுப்புது ஆடை அணிந்து தலைச்சீவி மலர்சூடி பெண்கள் குழந்தைகளுடன் அடுத்திருந்த கிராமங்களினின்றும் வந்து குழுமியிருந்தனர்.

காஞ்சனாவின் குழுவினர் வண்டியில் வந்து இறங்கிவிட்டனர். நாடகம் நடக்குமிடத்தில் வண்ணத்திரைச் சீலை ஒன்று அசைந்தாடியது. பலவித இசைக்கருவிகளுடன் இசைக் குழுவினர் கூடிவிட்டனர். பைரவன் இன்னும் வேடம் பூணவில்லை. அவன் உடலில் பரபரப்பு இருந்தது என்பது இங்கும் அங்கும் அவன் நடந்ததிலிருந்துத் தெரிந்தது. அவன் விழிகள் காஞ்சனாவை எதிர்பார்த்துக் கொண்டிருந்தன. அவள் வரமாட்டாள் என்று அவன் உள்ளுணர்வு கூறியது. அவளைக் காணவும் அவள் நாடகத்தில் நடிக்கிறாள் என்பதற்காகவுமே ஏராளமான மக்கள் கூடியிருந்தனர். காஞ்சனா வராவிடில் பெரும் குழப்பம் ஏற்பட்டுவிடுமே. மேலும் அரசரும், இளவரசரும் நாடகம் காண வரப்போகிறார்கள் என்று அவன் கேள்விப்பட்டான். அந்த நிலையில் குழப்பம் ஏற்பட்டால் தன்னைத் தண்டித்து விடுவார்களே என்று அஞ்சினான்.

சுந்தரியும் நாடகம் காண வந்திருந்தாள். அதற்காகத்தானே அவள் காஞ்சியில் தங்கினாள் என்றும் கூறலாம். சுந்தரி வருவதைப் பைரவன் கண்டுவிட்டான். காஞ்சனாதான் அதுபோல் அடக்கமான நிலையில் வருகிறாள் என்று முதலில் எண்ணிய அவனது கூரிய மதி நொடியில் அவள் காஞ்சனா அல்லள் என்பதைக் கண்டுகொண்டது.

பைரவன் பரபரவென்று சுந்தரியின் அருகில் சென்றான். 'ஜெய் மகாகாளி! பெண்ணே வருக, வருக'' என்று கம்பீரமாக முகத் தோற்றத்தை அமையச் செய்து வரவேற்றான்.

சுந்தரிக்கு ஏதும் புரியவில்லை. அவள் ஒரு கணம் திகைத்தாள். ''பயப்படாதே! இந்த நாடகத்தை நடத்தும் குழுத் தலைவன் நான். நீ வரப்போகிறாய் என்று காளிமாதா முன்பே சொல்லிவிட்டாள். வா, வந்து சௌகரியமான இடத்தில் உட்கார்ந்து நாடகத்தைக் காணலாம். மகாராஜா வரப்போகிறார்; அவர் திருக்குமாரர் வரப்போகிறார். நீயும் வந்திருப்பது விசேஷம்தான்!'' என்றான்.

அவன் பேச்சும் தோற்றமும் சுந்தரியை மேலும் திகைக்க வைத்தன. கையைக் காலை அசைத்தவாறு, ஒவ்வொரு வார்த்தைக்கும் ஏற்ப முகபாவத்தை மாற்றியும் செய்யும் அவனது அங்க சேஷ்டை சுந்தரிக்கு சிரிப்பை ஊட்டியது. மகாராஜா வரப்போகிறாராம்; இளவரசர் வரப்போகிறாராம்! அவர்கள் வந்தால் சௌரியமான இடத்தில் மேடையின் முன் பாகத்தில் அமர்வார்கள். இளவரசர் கண்களில் படும் விதத்தில் அமர்ந்து விடுவது நல்லதல்லவா?

சுந்தரி தயங்குவதைக் கண்டு பைரவன் தன் பேச்சுத் திறமையால் அவளை நாடக மேடைக்கருகே அழைத்துச் செல்ல முயன்றான். நாடக மேடைக்கருகே வரும்போது, ''பெண்ணே, உன்னைப் போன்று நடிப்பதற்கு வந்திருக்கும் சில பெண் களையும் நீ காண வேண்டாமா?'' என்று கூறி நடிக்க வந்திருப்பவர் அமர்ந்திருந்த இடத்துக்கு அவளை அழைத்துச் சென்றான்.

சுந்தரியைக் கண்டவுடன் ஒருவரோடொருவர் சிரித்துப் பேசிக் கொண்டிருந்தவர் அனைவரும் திடுக்கிட்டு எழுந்தனர். தன் குழுவினர் அனைவரையும் அனுப்பிவிட்டு கடைசி வரையில் வராமல் ஏமாற்றிப் பைரவனுக்கு அவமானத்தைத் தேடித் தர வேண்டும் என்று திட்டமிட்டிருந்த காஞ்சனா திடீரென்று அங்கு வந்துவிட்டாள் என்று எண்ணி நொடியில் அமைதியாக இருந்தனர். பைரவன் இதைக் கவனித்தான். காஞ்சனாதான் என்று எல்லோரும் நம்பிவிட்டனர் என்பதைத் தெரிந்து கொண்டான்.

சுந்தரி மீண்டும் போய் மேடைக்கருகே விரித்திருந்த கம்பளத்தில் அமர்ந்து கொண்டாள்.

⁂ ⁂ ⁂

நேரமாகிவிட்டது. கூடியிருந்த மக்களின் பேச்சொலி வரவர அதிகரித்தது. நன்றாக இருட்டிவிட்டது. தீவர்த்திகளின்

ஒளி இருளைக் கிழித்தது. திரை விலகுவதை அனைவரும் ஆவலுடன் எதிர்பார்த்தனர். சுந்தரியின் கண்களும் அதையே எதிர்பார்த்தன. கூட்டத்திடையே காஞ்சனா இன்னும் வரவில்லை எனும் செய்தி மெல்லப் பரவியது. 'ஆ', 'ஊ' எனும் கூச்சல் எழ ஆரம்பித்தது. மாளிகையினின்று அரசர் புறப்பட்டுவிட்டார் எனும் செய்தியும் கிடைத்தது. பைரவன் என்ன செய்யப் போகிறான் என்று எல்லோரும் எதிர்பார்த்தனர்.

கூச்சல் வரவர அதிகமாகியது. பைரவன் மேலே சிவந்த போர்வையைப் போர்த்திக்கொண்டு சுந்தரி அருகே விரைந்து வந்து, ''பெண்ணே! ஓர் உதவி செய்ய முடியுமா இந்தப் பக்கம் சற்று வருகிறாயா?'' என்று கேட்டான்.

பைரவன் கண்கள் நெருப்புத் துண்டம் போல் சிவந்திருந்தன. மதுவின் வாசம் குப்பென்று வீசியது. சடை முடிகள் தோளில் ஊசலாடின. சுந்தரி திகைத்தாள். ''எழுந்திரம்மா; மன்னர் வருவதற்குள் அந்த உதவியை நீ செய்தாக வேண்டும். இல்லாவிடில் இங்குள்ளவர்கள் பெருங்குழப்பம் விளைவித்து விடுவார்கள்'' என்று கெஞ்சினான். சுந்தரி பைரவனுடன் மேடைக்குள்ளே சென்றாள்.

சுந்தரிக்கு மெல்ல, மெல்ல எல்லாம் தெரிய வந்தன. காஞ்சனா எனும் நடனக்காரியைப் போன்ற தோற்றமுடையவளாகத் தான் இருப்பதை அறிந்து கொண்டாள். அவள் வரவில்லை. அவளுடைய இடத்தைத் தான் பூர்த்தி செய்ய வேண்டும் – அவ்வளவுதான். இதைத்தான் பைரவன் விரும்புகிறான்.

''நான் என்ன செய்ய வேண்டும்?'' சுந்தரி கேட்டாள்.

இந்தப் பட்டாடையை அணிந்து கொள்ள வேண்டும். முதல் முரசம் அடிக்கப்பட்டவுடன், எக்காளம் ஊதியவுடன் பெருந்தாளம் மளமளவென்று கொட்டியவுடன் திரை தூக்கப்பட்டவுடன் சூத்திரதாரி கட்டியங் கூறியவுடன் நீ மேடைக்குச் செல்ல வேண்டும்.''

''எனக்கு இந்த நாடகத்தைப் பற்றி ஏதுமே தெரியாதே.''

''தெரியாவிட்டால் போகிறது. நடனம் ஆடத் தெரியுமா?''

''ஏதோ சிறிதளவு தெரியும். இந்த நாட்டு மக்கள் விரும்பும் விதத்தில் ஆடத் தெரியாதே.''

''ஓ! நீ இந்த நாட்டைச் சேர்ந்தவளில்லையா? போகட்டும்! உனக்குத் தெரிந்ததை நீ ஆடு. பிறகு நான் பார்த்துக் கொள்கிறேன்'' என்றான் பைரவன். அவனுக்கு இப்போது

பெருந்துணிவு, காஞ்சனாவின் திட்டத்தைத் தவிடுபொடியாக்கி விட்டதாகப் பெரும் மகிழ்ச்சி.

எப்படியோ பைரவன் அன்றைய கண்டத்தினின்று தப்பிவிட்டான். சுந்தரியின் நடனத்தில் மகிழ்ந்த மக்கள் கவனம் அன்றைய நாடக நிகழ்ச்சியைப் பற்றி நினைக்கவில்லை. பரமேச்வர வர்மரும் இராஜசிம்மனும் நாடகத்துக்குக் கடைசிவரை வரவில்லை. மாளிகையை விட்டுப் புறப்பட்ட அவர்கள் எங்கு சென்றனர் என்று ஒருவருக்கும் தெரியவில்லை.

ஜனக்கூட்டம் கலையத் தொடங்கியதும் சுந்தரி அவசர அவசரமாக பட்டாடைகளை அவிழ்த்து வைத்துவிட்டுத் தனது ஆடையை உடுத்திக்கொண்டு புறப்பட ஆயத்தமானாள். இனி அவளுக்கு அங்கென்ன வேலை?

''எங்கே புறப்பட்டுவிட்டாய்? சற்று இரு...'' என்று பைரவன் கூறி, ''உன் பெயரைக் கேட்டுக் கொள்ளாமலே நானும் உன் உதவியைப் பெற்றுவிட்டேன். நீ செய்த உதவிக்கு நான் என்ன கூறி நன்றியைத் தெரிவிக்கப் போகிறேன்?'' என்றான் பைரவன்.

''எனக்காக மூதாட்டி காத்திருப்பாள். நான் போய் வருகிறேன்'' என்று புறப்பட்டாள் சுந்தரி.

''இரு, இரு. உனக்குத் துணையாக நான் வருகிறேன். இதற்குள் காஞ்சனாவுக்குச் செய்தி எட்டியிருக்கும். தனக்குப் போட்டியாக வந்துவிட்ட உனக்கு ஏதாவது தொல்லை தர முயற்சி செய்யலாம்'' என்றான் பைரவன்.

''வேண்டாம், வேண்டாம். எனக்கு ஓர் ஆபத்தும் வராது...'' என்று சுந்தரி புறப்பட ஆயத்தமானாள்.

அவளை அவ்வளவு எளிதில் பிரிந்துவிட பைரவன் விரும்ப வில்லை. சட்டென்று முத்துமாலை ஒன்றை எடுத்து அவளுக்குப் பரிசாக அளிப்பது போல் அவள் இடது கரத்தைத் தாவிப் பிடித்தான். அவனைச் சுட்டெரித்து விடுவது போல பார்த்துவிட்டுச் சற்று ஒதுங்கிக் கொண்டாள் சுந்தரி.

''நில் பைரவா!'' என்ற குரல் கேட்டது. சுந்தரி திரும்பிப் பார்த்தாள். மகாவிரதி அவர்களை நோக்கி வந்து கொண்டிருந்தார்.

''பைரவா! முத்துமாலையைப் பெண்ணின் கரத்தில்தான் அணிவிக்க வேண்டும் என்று நீ வணங்கும் கடவுள் சொல்கிறாரோ?'' என்று கூறி அவர் பெரிதாக நகைத்தார்.

மகாவிரதியைத் தேடிக் கொண்டிருந்த பைரவன் மிகக் கோபத்துடன் அவர் பக்கம் திரும்பிச் சீறினான்.

●

# 18. விழியும் வெட்கமும்

**கா**ஞ்சியினின்று, திருக்கழுக்குன்றம் செல்லும் பாட்டையில் குதிரைப்படைத் தலைவர் குமாரதேவன் சென்று கொண்டிருந்தார். வேகமாகக் குதிரையைச் செலுத்தி வந்ததால் ஏற்பட்ட களைப்பு அவர் முகத்தில் தெளிவாகத் தெரிந்தது. இடையிடையே காணப்படும் சிறு கிராமத்தில் அவர் இறங்கி அங்குள்ளவர்களை நோக்கி, ''இந்தப் பக்கம் இளம் பெண்ணொருத்தி சென்றாளா?'' என்று கேட்பார்.

அவர்களால் சிரிக்கவும் முடியாது; சிரிக்காமல் இருக்கவும் முடியாது. இளம் பெண்கள் வீதி வழியே எவ்வளவோ பேர் செல்கிறார்கள்; யாரென்று கூற முடியும்? குமாரதேவர் அவர்கள் விடை கூறும் வரையில் நிற்க மாட்டார். குதிரையைத் தட்டிவிட்டுச் சென்றுகொண்டே இருப்பார். அவர் சுந்தரியைத் தேடித்தான் அவ்வாறு விரைந்து கொண்டிருந்தார். காஞ்சனாவின் கட்டளை அது.

காஞ்சனா வராமலேயே அன்றைய நாடகத்தைப் பைரவன் வெற்றிகரமாக நடத்திவிட்ட செய்தியைக் கேள்விப்பட்டது முதல் காஞ்சனாவுக்கு மாளிகையில் இருப்புக் கொள்ளவில்லை. தன்னைப்போல் தோற்றமுள்ள மற்றொரு நங்கையால் தன் திட்டங்கள் சிதைகின்றன என்பதை எண்ணும்போது உடனே அந்த மங்கையைச் சந்திக்க வேண்டும் என்று காஞ்சனா துடித்தாள். சுந்தரியைத் தேடிச் சென்ற குமாரதேவர் அவளை அழைத்து வராமல் எப்படியும் காஞ்சனாவின் மாளிகைக்கு வருவதில்லை எனும் உறுதியுடனே சென்றார். சுந்தரியைத் தேடிப் பிடித்து, காஞ்சனாவிடம் அழைத்து வந்து சேர்த்து விட்டால் அவருடைய உள்ளத்தில் நெடுநாளாகப் புதைந்து கிடக்கும் ஒரு செயல் நிறைவேறிவிடும். இவ்வளவு காலமாக அவரால் அடக்கி வைத்துக் கொண்டிருந்த அந்த ரகசியத்தை இனியும் தாங்க முடியாது. அதைத் தாங்கும் அளவுக்கு அவர் உடலிலும் உள்ளத்திலும் சக்தியில்லை. மீண்டும் சாளுக்கியர்களுடன் போர் தொடங்க வேண்டும் என்று மன்னர் திட்டமிட்டுக் கொண்டிருக்கிறார்; குமாரதேவர் வாதாபிக்கு மீண்டும் செல்லுட்

நிலை ஏற்படலாம். உள்ளத்து வேதனையையும், இரகசியத்தையும், சுமந்துகொண்டு வாதாபிக்குச் செல்ல அவர் மனம் ஒப்பவில்லை.

காஞ்சனாவைக் காணும் போதெல்லாம் குமாரதேவனுக்கு தனிவிதப் பாசம் தோன்றும். தந்தைக்கு மகளிடம் தோன்றும் பாசம் அது. காஞ்சனாவைச் சந்தித்து அவளது வரலாற்றைக் கேட்டுவிட்டால் தன் ஐயம் தீர்ந்துவிடும் எனும் எண்ணத்தில்தான் அவர் இவ்வளவு நாள் அவளைச் சந்திக்க முயன்று கொண்டிருந்தார். சந்தித்தபோது அவள் பெரும் பணியொன்றைச் செய்யுமாறு கட்டளை இட்டுவிட்டாளே! அதுவும் பயனுள்ளது தான். காஞ்சனாவைப் போன்ற தோற்றமுடைய மற்றொரு பெண்! அவளையும் கண்டுபிடித்து அழைத்து வந்து இருவரையும் ஒன்று சேர்த்து இருவரிடமும் தன் உள்ளத்திலிருப்பதைத் தெரிவித்துவிட்டால்? அப்பா – அவர் இதய பளு குறையும்; நிம்மதி மலரும். அதனால்தான் அவர் சுந்தரியைத் தேடி விரைந்தார். சுந்தரி செல்லுமிடத்தை அவர் தெரிந்து கொண்டார். அங்கே சென்று அவளைச் சந்திக்க முடியும் எனும் நம்பிக்கை – உறுதி அவருள்ளத்தில் இருந்தது.

⁂ ⁂ ⁂

சுந்தரியோ நாடக அரங்கின் வெளியே பைரவனுக்கும், மகாவிரதிக்கும் துவந்த யுத்தம் தொடங்கும் முன்னமே மெல்ல நழுவி விட்டாள். அவளுக்காகக் காத்திருந்தது சிவிகை. அவளை மாமல்லபுரம் கொண்டு சேர்க்க வேண்டிய பொறுப்பு இரு காவல் வீரர்களிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது. சுற்றும் முற்றும் பார்த்துக் கொண்டு அவள் சிவிகையை நெருங்கியபோது வீரர்கள் இருவரும் வணங்கி நின்றனர். சிவிகையின் மேல் சிங்கச் சின்னம் பொறிக்கப்பட்டிருந்தது. அமர்ந்த நிலையில் கர்ஜிக்கும் அந்த சிம்மம் அவளுக்கு உறுதுணையாக இருக்காதா?

பல்லக்கில் ஏறி உட்கார்ந்த பிறகுதான் பைரவனிடமிருந்து தப்பிவிட்டோம் எனும் தைரியம் அவளுக்கு ஏற்பட்டது. அந்த இரவிலேயே மாமல்லபுரம் சென்றுவிட வேண்டும் என்ற முடிவுக்கு வந்தாள். அவள் கட்டளையை நிறைவேற்றக் காத்திருந்தனர் சிவிகை சுமப்போர்.

⁂ ⁂ ⁂

கிருஷ்ணபட்சத்து இரவு. வானும் இருளுக்குப் போர்வையாக அமைந்திருந்தது. சிவிகையைச் சுமப்போரின் 'ஹாஹூ' ஒலியும், உடன் வரும் குதிரைகளின் குளம்படி ஓசையும், திருக்கழுக் குன்றம் செல்லும் பாட்டையின் இருபுறமும் ஏற்படும் இரவுக்கே

பிரத்தியேகமாக அமைந்த ஒலியும், துணையாகக் கொண்டு சிவிகை சென்று கொண்டிருந்தது.

மாமல்லபுரத்துச் சிற்பியின் குடிலில் விஜயன் பொழுதை வீணே கழிக்கவில்லை. மல்லிநாதரைப் பற்றியும் சுந்தரியைப் பற்றியும் தகவல் ஏதும் வராததால் ஒரு நாள் முழுவதும் துடித்தான். பிறகு மனக்கவலையை மாற்றிக் கொள்ள எண்ணிக் குடிலை விட்டு வெளியே வந்து மாமல்லபுரத்துச் சிற்பப் பணி நடைபெற்ற இடங்களைக் காணச் சென்றான்.

முந்திரியும், கோரையும், நாணலும், தென்னையும் அடர்ந்து வளர்ந்த இடங்களைத் தாண்டி அவன் சிற்ப செளந்தர்யங்கள் நிறைந்த இடங்களை அடைந்தான். பூர்த்தியாகாது நிறுத்தப் பட்டவற்றையும், அழகிய மண்டபங்கள் அமைக்க ஒரே பாறையில் திட்டமிட்டு நிறைவேற்ற முடியாது விடப்பட்ட சிற்பப் பாறைகளையுமாக அவன் பெருமூச்சுடன் பார்த்துக் கொண்டே நெடுந்தூரம் வந்துவிட்டான்.

அடர்ந்த தோப்பின் நடுவே அமைதியாகத் திகழ்ந்த பாறைகளைக் கண்டபோது அவன் திகைத்து விட்டான். தாம் காண்பது கனவா நனவா என்று கூட அவன் ஒரு கணம் திகைத்தான். உயிருள்ள யானை இங்கே ஆடாது அசையாது இருக்கிறதா? தேவேந்திரனது யானை பூமிக்கு வந்து கற்சிலையாகிவிட்டதா? விஜயன் அங்கே ஒரே கல்லில் செதுக்கப்பட்டு தத்ரூபமாக நிற்கும் யானையின் வடிவில் மனத்தைப் பறிகொடுத்துவிட்டான். எவ்வளவு நேரம் அதுபோல நின்றானோ! சாயும் கதிரவனின் பொற்கிரணங்கள் அவனைத் தட்டி எழுப்பின. யானையின் அருகே ஐந்துப் பாறைகள், ஒவ்வொன்றும் ஒவ்வொருவித அமைப்புடன் திகழச் சிற்பி திட்டமிட்டிருக்கிறான். ஆனால், பூர்த்தியாகவில்லை. ஆகா! அவை மட்டும் பூர்த்தியாகி பூரணத்துவத்துடன் திகழ்ந்தால் – விஜயன் ஒவ்வொன்றின் அருகிலும் சென்றான். அவன் கற்பனை விரிந்தது.

∴ ∴ ∴

பொழுது சாய்வதற்குள் குடிலை வந்தடைந்துவிட வேண்டும் எனும் எண்ணத்துடன் அப்போது மட்டும் அங்கிருந்து பிரியா விடைப் பெற்றுக் கொண்டு விஜயன் புறப்பட்டான். நடந்து செல்லும் போது அவனுக்கு ஐந்து மண்டபங்களின் நினைவேதான். அவற்றை முழு உருவகப்படுத்திக் கற்பனை செய்து கொண்டான். இரவு அவனுக்கு உறக்கம் ஏது? சிற்பி மல்லிநாதர் வந்தவுடன் அவரிடம் தன் எண்ணத்தைத் தெரிவித்த

அவர் யோசனையையும் கேட்க வேண்டும் எனும் பரபரப்பு அப்போதே அவனிடம் ஏற்பட்டுவிட்டது.

பொழுது புலர்வதற்கு முன்பே எழுந்துவிட்டான். அந்தக் குடிலில் இருந்த பழைய மரப்பெட்டியை அவன் துழாவிப் பார்த்து ஓலைச் சுவடிகளை ஒன்றுவிடாமல் படித்திருக்கிறான். சிற்ப சாத்திரங்கள் அவை. மீண்டும் அவற்றுள் குறிப்பிட்ட சிலவற்றை எடுத்துப் படித்தான். பிறகு வாவியில் நீராடிவிட்டு வந்தமர்ந்தான். அவன் நினைவெல்லாம் மனத்திரையில் தீட்டப்பட்டிருந்த உருவ அமைப்பிலேயே லயித்திருந்தது. திரைச் சீலையை அமைத்தான். காவி வர்ணம் குழைத்தான.

குடிசை வாயிலில் சதங்கை ஒலி கேட்டது. சுந்தரி வந்துவிட்டாள். விஜயன் அவளை வரவேற்றுவிட்டுத் தொடர்ந்து திரைச் சீலையில் வரி வடிவம் வரையத் தொடங்கினான்.

கற்பாறையில் செதுக்கப்பட்ட விமானத்தின் வடிவத்தை அந்த ஓவியம் புலப்படுத்தியது. சிகரம் மற்றும் மாடங்களையும் தூரிகை வெகு லாவகமாக வரைந்தது. சுந்தரி வியப்புடன் அவன் வரைவதைப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

அந்தக் குடிலின் பலகணி வழியாக மஞ்சள் கதிர் பாய்ந்து வந்து தரையில் தோய்ந்தது. கானகத்து கானப் பறவைகளின் ஒலி மிதந்து வந்து நிறைந்தது.

இரவெல்லாம் சுந்தரி கண்விழித்து பயணம் செய்து வந்த களைப்பு எங்கோ காணோம். இரவெல்லாம் உறங்காது சிந்தித்ததால் ஏற்பட்ட களைப்பு விஜயனிடம், வியப்பு எழுந்தது சுந்தரியிடம்.

''என்ன வரைகிறீர்கள் என்பதை விளக்கலாமா?'' என்று செவ்விதழ் திறந்து கேட்டாள் சுந்தரி.

''மனக்கோயில் கட்டுகிறேன்'' என்று கூறிப் புன்முறுவல் பூத்தான் விஜயன்.

''கோயிலிலே யாரைக் குடிவைக்கப் போகிறீர்கள்?''

''அது மன்னரின் விருப்பம். ஐந்துக் கோயில்களிலும் ஐந்து தெய்வங்களைப் பிரதிஷ்டை செய்யலாம். ஐந்து வகைச் சிற்ப அமைப்பால் அந்த இடத்தையே அற்புதமாக்கலாம்.''

''சிற்பி இருந்தால் பாராட்டுவார்.''

''அவர் மகிழ வேண்டும் என்பதற்காகவே இக்காணிக்கை'' என்று கூறிய விஜயன் சுந்தரியின் பக்கம் திரும்பி ''சுந்தரி,

ஐயா எங்கே?'' என்று மல்லிநாதர் அவளுடன் வராததை வியப்புடன் வினவினான்.

''அது ஒரு பெருங்கதை...'' என்று சுந்தரி கூறினாள்.

''கதைதானே காவியமாகி காவியம் கவின்பெறு சிற்பமாகிறது'' என்றான் விஜயன்.

ஃ ஃ ஃ

இந்தச் சமயத்தே இராஜசிம்மன் அந்த வனாந்தரக் குடிலை நாடி வந்துவிட்டான். சிற்பி வாழும் இடத்தை பார்க்க வேண்டும் எனும் துடிப்பு அவனுக்கு எழுந்தது. சுந்தரியையும் அங்கே சந்திக்கலாம் எனும் உள் எண்ணம் இல்லாமல் இல்லை. குதிரையை மரத்தின் மறைவில் கட்டி இராஜசிம்மன் குடிலின் அருகே வந்தான். அங்கே இருந்த அதே பழைய பலகணி முன்பு சுந்தரி அபிநயம் பிடித்ததை அந்தப் பலகணி வழியாகத் தானே ஒருநாள் மாலையில் கண்டான். இப்போது அதே பலகணி வழியாக சுந்தரி விஜயன் அருகே அமர்ந்திருப்பதையும், கலகலவென்று பேசிக் கொண்டிருப்பதையும் மகிழ்ச்சியுடன் ஏதோ கூறுவதையும் கண்டான்.

சுந்தரியின் அருகே உள்ள இளைஞன் யார்? எங்கோ பார்த்த நினைவாக இருக்கிறதே என்று இராஜசிம்மன் ஒரு கணம் எண்ணினான். அவன் என்ன செய்கிறாய்? அவன் கரங்கள் துரிதமாக இயங்குகின்றனவே – அதோ ஒரு கோயில் அமைத்துவிட்டான். புத்த விகாரம் போன்ற விமானம். அதோ தூங்கானை மாடம் போன்ற விமானம். அதோ மணி மாடம்! இராஜசிம்மனின் ஆவல் அதிகமாகியது.

ஆனால், இப்போது ஏன் விஜயன் சித்திரம் வரைவதை விட்டுவிட்டு சுந்தரியுடன் பேசுகிறான்? அப்படி என்னதான் பேசுகிறார்கள்?

''உங்கள் கரங்களில் ஏதாவது மாயாஜாலம் இருக்கிறதா?'' என்று சுந்தரி கேட்டாள்.

''உன் பாதங்களுக்கு இருக்கும் அற்புத சக்தி என் கரங்களுக்கு இல்லை. உன்னால் பம்பரம்போல் சுழல முடியும். மான்போல் துள்ள முடியும். என் கரத்துக்கு அவ்வளவு வேகமில்லையே சுந்தரி...''

''அந்த கரங்களால், துள்ளும் மானை வரைய முடியுமல்லவா?''

''ஏதோ – முடியும்.''

''நான் ஒன்று கேட்பேன். அதை நிறைவேற்றுவீர்களா?''

''ஒன்றென்ன ஓராயிரம் கேளேன் சுந்தரி.''

''மானைப் போல் துள்ளுகிறேன். அதை இந்த திரைச் சீலையில் வரைவீர்களா? மயிலைப் போல் ஆடுவேன். அதை இந்த வண்ணக்கோடுகளில் வடிப்பீர்களா?''

விஜயன் சுந்தரியை உற்று நோக்கினான்.

''என்ன அப்படிப் பார்க்கிறீர்கள்?''

''ஒன்றுமில்லை; வண்ணக்கோடுகளை நான் வரைவானேன்? வண்ண விசித்திரம் உன் முகத்தில்தான் இருக்கின்றனவே. கருமையான புருவங்கள் மேலும் கரிய நிறத்துடன் விளங்கு கின்றன. வேல் விழி மேலும் கூர்மையாகக் காட்சியளிக்கிறது. மேலும் நீ களைத்துப் போய்க் காணப்படுகிறாய் சுந்தரி. ஏன் அப்படி?''

அப்போதுதான் சுந்தரி உணர்ந்தாள். தான் முதல் நாள் இரவு நாடகத்தில் பூசிக் கொண்ட வண்ணக் குழம்புகள் இன்னும் கலையவில்லை என்பதை. அவளை வெட்கம் சூழ்ந்து கொண்டது. முகத்தைக் கரங்களால் மூடிக் கொண்டு அங்கிருந்து வெளியே ஓடி வந்தாள்.

வெளியே வந்தவுடன் தன் எதிரே இளவரசன் நிற்பதைக் கண்டு அவள் திகைத்தாள். அவளால் முன்னும் செல்ல முடியவில்லை. பின்னும் நகர முடியவில்லை. இளவரசரை வரவேற்கக்கூட நா எழவில்லை.

அவள் திகைப்பை இராஜசிம்மனே போக்கினான்.

''மல்லிநாதர் வந்து விட்டாரா சுந்தரி?'

இந்தச் சொற்கள் அவள் செவியில் மதுரசம் போல் வீழ்ந்தன. சு...ந்...த...ரி... ஆகா; இளவரசர் உச்சரித்த இந்த வார்த்தைகள் தாம் என்ன பெருமை பெற்றுவிட்டன! எவ்வளவோ பேர் அந்த நான்கு வார்த்தைகளைச் சொல்லி அழைத்திருக்கின்றனர். ஆனால், இப்போது திடீரென அந்த வார்த்தைகள் சிறகு முளைத்துப் பறக்கத் தொடங்கிவிட்டனவே!

''பெண்ணே! உன் பெயர்தானே சுந்தரி? ஏன் திகைத்து நிற்கிறாய்? நான் பயங்கர ரூபத்தில் வந்திருக்கிறேனா? நீ பயந்துவிட்டாயா?'' என்று இளவரசர் மீண்டும் கேட்டார்.

சுந்தரி தலையை அசைத்தாள். பயங்கர ரூபமா? ஆகா; சுந்தர வடிவம் இதைவிட வேறு எங்கே காண முடியும்? நான்

பயந்துவிட்டேனா? அதெப்படி முடியும், பைரவனையும் காபாலிகனையும் கண்டு அஞ்சாத நானா வடிவழகில் அஞ்சிவிடுவேன்!

சுந்தரி உடனே குடிலுக்குள் குதித்தோடினாள். விஜயன் செவிக்கருகே, ''இளவரசர் வந்திருக்கிறார்; இளவரசர் வந்திருக்கிறார்...'' என்றாள்.

விஜயன் திடுக்கிட்டுத் திரும்பினான்.

''யார்... யார் வந்திருக்கிறார்?''

''இளவரசர்... இளவரசர்!''

விஜயன் பரபரப்புடன் வெளியே விரைந்து வந்தான். விஜயனும் இராஜசிம்மனும் ஒருவரையொருவர் ஒரு கணம் இமைக்காமல் நோக்கினர். மறுகணம் இராஜசிம்மன் ''விஜயா...'' என ஆர்வத்துடன் கூவி விஜயனை அணைத்துத் தழுவிக் கொண்டான்.

''இளவரசே! இளவரசே'' என்று விஜயன் உதடுகள் முணுமுணுத்தன. பிரிந்தவர் கூடிய இடத்தில் பேச்சுக்கு இடமேது?

சுந்தரியின் விழிகள் முன்பு வெட்கத்தால் குவிந்தன. இப்போது வியப்பால் விரிந்தன.



# 19. குமாரதேவனின் காதல் கதை

குதிரைப் படைத் தலைவர் குமாரதேவன் இரவு திருக்கழுக்குன்றத்தில் தங்கினார். வயதாகிவிட்டதல்லவா? முதுமையின் களைப்பு அவரைக் கண்ணயரச் செய்துவிட்டது. எவ்வளவு நேரம் அவர் உறங்கிவிட்டார் என்று அவருக்கே தெரியாது. விழித்தெழும்போது சூரியன் உச்சியைத் தாண்டி விட்டான். அப்போதும் அவருக்குச் சோர்வு தீரவில்லை; எனினும் பரபரப்புடன் எழுந்து குளத்து நீரை ஒரு கை முகத்தில் தெளித்துக் கொண்டு மீண்டும் பயணத்தைத் தொடங்கினார். குதிரையாலும் விரைவாகச் செல்ல முடியவில்லை. அதன் பின்புறக் காலில் ஏதோ சிறு காயம் ஏற்பட்டிருந்ததால் அது நொண்டத் தொடங்கியது. குமாரதேவரின் மனோ வேகத்துக்கு ஏற்ப அவர் உடலும் குதிரையும் இடம் கொடுக்கவில்லை. குதிரையை அருகிலிருந்த சிற்றூரில் விட்டுவிட முடிவு செய்தார். வேறு அசுவம் கிடைக்குமாவெனப் பார்த்தார். கிடைக்கவில்லை. வேறு வழியின்றி நடக்கத் தொடங்கினார்.

அந்தப் பிராயத்தில் அவர் ஏன் இவ்வாறு சிரமப்பட வேண்டும்? அது அவரொருவருக்குத்தான் தெரியும். சுந்தரியை எப்படியாவது சந்தித்து அவளை உடனே காஞ்சிக்கு அழைத்துச் செல்ல வேண்டும் என்ற வேகத்தில் அவர் வந்து கொண்டிருக்கிறார். சுந்தரி தன்னுடன் வரச் சம்மதிப்பாளா?

சுந்தரி மறுத்தால் அவளிடம் தனக்குத் தெரிந்த தன் பூர்வ வரலாற்றைக் கூறுவது என்பது அவருடைய திட்டம்.

குமாரதேவர் மனதில் புதைந்திருந்த அந்த ரகசியத்தைத் தெரிவித்தாலாவது சுந்தரி தெரிந்து கொள்ள விட மாட்டாளா என்று எண்ணினார்.

ஃ ஃ ஃ

நரசிம்ம மாமன்னர் வாதாபியை நோக்கிப் படையெடுத்துச் சென்று அதைத் தீயிட்டுக் கொளுத்தி வெற்றி வாகையுடன் திரும்பியபோது அந்நகரத்திலே பல்லவ வீரர்கள் சிலரைத்

தங்குமாறு செய்தார். அவர்களுள் குமாரதேவரின் தந்தையும் ஒருவர்.


வாதாபியில் தான் குமாரதேவரும் பிறந்தார். சிறு வயதிலேயே அஞ்சா நெஞ்சமுடன் கூடிய உறுதி அவரை வந்தடைந்துவிட்டது. தன் தந்தைக்குள்ள அதிகாரமும் உடன் சேரவே குமாரதேவரின் அட்டகாசத்துக்குக் குறைவேயில்லாது போய்விட்டது. காஞ்சியினின்று அவருக்கு அழைப்பு வந்தது. அங்குச் சென்று சில ஆண்டுகள் இருந்துத் திரும்பியபோது குமாரதேவர் மேலும் புதுத்தெம்புடன் வந்தார். அவருக்குப் புது அதிகாரங்கள் கிடைத்திருந்தன. அதைக் கொண்டு வாதாபியில் அவர் செய்யாத அக்கிரமங்கள் இல்லை. இளம் பெண்கள் அவருக்கு விளையாட்டுப் பொருள்களாயினர். அவர்களுள் ஒருத்திதான் சுவர்ணகுமாரி எனும் ஆடலழகி.

குமாரதேவனின் ஆசை வார்த்தைகளுக்கு மட்டும் சுவர்ண குமாரி மயங்கிவிடவிலலை. குமாரதேவனின் செல்வாக்கை அவள் அறிந்திருந்தாள். அதனால் தனக்குக் கிடைக்கக் கூடிய சலுகையை உணர்ந்தாள், குமாரதேவனும் மற்றவர்களிடம் நடந்து கொள்வதுபோல் தன்னிடம் நடந்து கொள்ள மாட்டார் என்று சுவர்ணகுமாரி எண்ணினாள். ஆனால், குமாரதேவனின் அன்பின் அடையாளம் சுவர்ணகுமாரியிடம் பிரதிபலித்து அதற்கான சின்னங்கள் தோன்றத் தொடங்கியபோது குமாரதேவன் மனம் மாறத் தொடங்கியது.

திடீரெனக் காஞ்சியினின்று குமாரதேவருக்கு அழைப்பு வந்தது. இதுதான் சந்தர்ப்பமென்று குமாரதேவன் சுவர்ண குமாரியை விட்டுவிட்டுக் காஞ்சிக்குப் பயணமானார். கண்ணீருடன் கலங்கி அழுத அவளுக்குப் பரிசாக தனது உதவியாளர்களைக் கொண்டு முரட்டுத்தனமான சாட்டை யடியைக் கொடுக்குமாறு சொல்லிச் சென்றதுதான் சுவர்ண குமாரியின் நெஞ்சிலே அழியாத வடுவாக மாறியது.

குமாரதேவன் காஞ்சியினின்று மீண்டும் வாதாபிக்குத் திரும்பவில்லை. நரசிம்ம வர்மருக்குப் பிறகு அரசாண்ட இரண்டாம் மகேந்திரன் சிறிது காலத்திற்குள்ளேயே உயிர் நீத்துவிட்டார். சாளுக்கியர்களை அடக்கியாளும் சக்தியும் பல்லவர்களுக்குக் குறைந்தது. வாதாபியில் இருந்த பல்லவர்கள் ஒரே நாளில் ஒழிக்கப்பட்டனர். வாதாபி நகரில் 'பழிக்குப் பழி' எனும் கோஷம் உதயமாகியது.

சுவர்ணகுமாரி, வீட்டில் அடைப்பட்டவள் வெளியே எங்கும் செல்வதில்லை. கருவுற்றிருந்த அவள் மிகவும் பலவீன



நிலையிலிருந்தாள். மன வேதனைதான் அவளை உள்ளூர அரித்தது. குறிப்பிட்ட காலத்தில் அவளுக்குக் குழந்தை பிறந்தது. குழந்தை பிறந்தது என்றா சொன்னோம்? குழந்தைகள் பிறந்தன. இரட்டைக் குழந்தைகள்! அழகிய பெண் குழந்தைகள். அந்த இரட்டைச் செல்வங்கள் ஒரு விதத்தில் சுவர்ணகுமாரியின் வேதனையை மாற்றின. என்றாலும் மற்றொரு விதத்தில் துயரத்தை அளிப்பனவாக அமைந்தன. பல்லவ நாட்டைச் சேர்ந்தவனுக்கு உரிமையாக இருந்தவள் என்ற முறையில் அவளுக்குச் சாளுக்கிய அரண்மனையில் ஆதரவு இல்லை. பிழைக்கவும் வேறு வழியில்லை. பாலுக்கு அழும் சேய்களின் கண்ணீர் தாய்க்கு மகிழ்வையா அளிக்கும்?

ஃ ஃ ஃ

**கா**ஞ்சிக்குச் சென்ற குமாரதேவர் வாதாபிச் சம்பவங்களை மனத்திலிருந்து மாற்ற முயன்றார். ஆனால் இயலவில்லை. வாதாபியில் அவருக்கிருந்த செல்வாக்கு காஞ்சியில் இல்லை. முரட்டுத்தனமும் குறைந்துவிட்டது. சுவர்ணகுமாரிக்கு அவர் இழைத்த தீங்கு அவ்வப்போது அவர் மனக்கண்களின் முன்னால் தோன்றி வேதனையை அளித்தது. நடுஇரவில் அயர்ந்த உறக்கத்தின் போது சுவர்ணகுமாரி தோன்றி தன்னைச் சபிப்பதுபோல் கனவு கண்டு அவர் திடுக்கிட்டு எழுவார். 'பழிக்குப் பழி' என்று அவள் கர்ஜிப்பது அவர் செவிகளில் நன்றாகக் கேட்கும். உறக்கமற்ற எத்தனையோ இரவுகளை அவர் கழித்துவிட்டார். குதிரைப் படைகளுக்குத் தலைமை வகிக்கும் பதவி உயர்வு கிடைத்தது. அவருக்குப் பெண் கொடுக்க 'நான் நீ' என்று பலர் முந்தினர். குமாரதேவர் திருமண சிந்தனையை இதயத்தினின்று அகற்றிவிட்டார். வாதாபிக்குச் சென்று சுவர்ணகுமாரியை அழைத்து வந்துவிட வேண்டும் எனும் வேகம் அவர் இதயத்தில் இருந்தது. ஆனால், அதற்கான சந்தர்ப்பங்கள் ஏற்படவில்லை. சாளுக்கிய மன்னன் திடீரெனக் காஞ்சியின்மீது படையெடுத்து வந்துத் தாக்கிய சமயத்துக்குப் பிறகு மீண்டும் அவர்களைத் தொடர்ந்து வாதாபி வரைச் சென்று பூண்டோடு அவர்களை நசுக்க வேண்டும் என்று துடியாய் துடித்தார் குமாரதேவர். அதில் அவருக்குச் சொந்தக் காரியமும் இருந்தது. இருபது ஆண்டுகளுக்கு முன்பு தான் செய்த பிழைக்குப் பிராயச்சித்தம் தேடிக் கொள்ள வேண்டும் என்ற துடிப்பு அந்தப் படையெடுப்பு வேகத்தில் இருந்தது. அவருக்குத் தெரியும், சுவர்ணகுமாரியைத் தான் அனாதரவாகக் கைவிட்டு வந்தபோது அவள் கருவுற்றிருந்தாள் என்பது. அந்தச் சிசு இப்போது வளர்ந்து இருக்கும்... ஹூம்...

இச்சமயத்தில்தான் அவர் காஞ்சனாவை மத்த விலாச நாடகங்களில் நடிக்கும்போதும் பல நடன நிகழ்ச்சிகளின் போதும் காண நேர்ந்தது. சுவர்ணகுமாரியே உருப்பெற்று வந்து விட்டாளோ என்று ஒரு கணம் அயர்ந்துத் துடிதுடித்துப் போனார் அவர். காஞ்சனாவை அணுகி அவளிடம் பேசி அவளுடைய பூர்வ கதையைக் கேட்டுணர வேண்டும் என்ற பரபரப்பு ஏற்பட்டது. காஞ்சனாவைக் காண்பது அவ்வளவு எளிதன்று என்பது அவருக்குத் தெரியும். நாள்தோறும் அவள் மாளிகைக்குச் சென்று வருவதை ஒரு காரியமாக மேற்கொண்டார். ஒவ்வொரு நாளும் ஒரு முறையாவது காஞ்சனாவைத் தரிசிக்காது போக மாட்டார். அந்தச் சமயம் அவளது அங்க அடையாளங்களைக் கூர்ந்து நோக்குவார். உண்மை - உண்மை இவள் சுவர்ண குமாரியின் தோற்றத்தை அணுவளவும் பிசகாமல் கொண்டிருக் கிறாள் என்ற உறுதிக்கு வந்துவிட்டார். எப்படியும் அவளிடம் ஒரு நாள் பேசி அறிந்து கொண்ட பிறகு தன் இதயத்தில் இதுவரை ஒருவருக்கும் வெளியிடாது வைத்திருந்த ரகசியத்தை வெளியிடுவது என்ற முடிவுக்கு வந்தார். ஆனால், அவளுடைய சந்நிதானத்தை அவர் அடைவதற்கு அவர் நிறைவேற்ற வேண்டிய பணி - சுந்தரியைத் தேடிக் கண்டுபிடித்து அழைத்து வர வேண்டுமாமே!

சுந்தரியை எப்படியும் கண்டுபிடித்துவிட முடியும் எனும் உறுதியான நம்பிக்கையுடன் அவர் நடந்தார்; நடந்தார்; நடந்து கொண்டே இருந்தார்.

கொடும் வெயில் குறைந்து, மாலைக் கதிரவன் இருளை மாலையிட்டு வரவேற்க ஆயத்தம் செய்து கொண்டிருக்கும் வேளையில் நா வறள, கால் துவள அவர் மாமல்லபுரம் நோக்கி நடந்தார்; நடந்து கொண்டே இருந்தார்.

⁂ ⁂ ⁂

இருள் கப்பிக் கொண்டது. இன்னும் இன்னும் சிறிது தொலைவுதான் நடந்துச் சென்று விடலாம் எனும் துணிவு அவருக்கு இருந்தது. சாலையின் நடுவே குறுக்கே செல்லும் வழியாகப் போனால் சிற்பியின் குடிலை அடைந்துவிடலாம். குமாரதேவன் சுந்தரி தங்கியிருக்கும் இடத்தை அறிந்திருந்தார். அங்குச் செல்லும் வழியா அவருக்குத் தெரியாது?

அடர்ந்த மரங்களின் இடையே குமாரதேவர் செல்லும் போது பழைய நினைவுகள் அவருக்குத் தோன்றின. இருபது ஆண்டுகளுக்கு முன்பு வாதாபியில் தான் செய்த அக்கிரமங்கள் அவர் நினைவுக்கு வந்தன. சுவர்ணகுமாரி கண்முன்

தோன்றினாள். அவள் கடைசியாக இட்ட சாபம் அவர் காதுகளில் ஒலித்தது. 'என்னை அனாதையாகத் துன்பப்பட விட்டுவிட்டுச் செல்வது போல் உங்கள் வாழ்வும் துயரத்திலேயே முடியும்' என்று சாட்டை அடி தாளாது ஓலமிட்டாளே, அதை நினைக்கும் போது குமாரதேவனுக்குப் பகீரென்றது.

ஊ...ஊ...ஊ....

ஆ! அது என்ன? சுவர்ணகுமாரியின் அழுகைக் குரலா? எங்கிருந்தோ இந்த நடுக்கானகத்தில் ஒலி எழுகிறதே.

மீண்டும் ஓ...ஊ...ஓ...ஊ.....

குமாரதேவன் சற்று நின்றார். அவர் கால்கள் தள்ளாடின. பெருமூச்சு அவர் இதயத்தைத் தாக்கியது. உடலெங்கும் வியர்வை வெள்ளம், கண்களைச் சுற்றி ஏதோ சிறுசிறு பூச்சிகள் பறப்பன போன்ற தோற்றம்.

ஓ ஓ ஊ ஊ ஓ ஓ ஊ ஊ....

சே... இதென்ன யாரோ இப்படி அழுகிறார்கள்? என்னைக் கண்டுதான் அழுகைக் குரல் எழுப்புகிறார்களா? என்னைக் கண்டு ஏன் அழ வேண்டும்! சிரிப்பதுதானே முறை. நான் செய்த தீய செயலுக்கு எள்ளி நகையாடுவதுதானே முறை! அபலையான சுவர்ணகுமாரிக்கு நான் இழைத்த அநீதிக்கு ஊர் கூடிச் சிரிப்பதுதானே நியாயம்!

வேண்டாம்; சிரிக்க வேண்டாம். பிழையை நான் உணர்ந்துவிட்டேன். சுவர்ணகுமாரியை மீண்டும் சந்திப்பேன். அவளைச் சந்திக்கும் முன்பு அவளைப் போன்ற வடிவமாய்த் திகழும் சுந்தரியையும், காஞ்சனாவையும் சந்திப்பேன். ஒரு வேளை... ஒரு வேளை அவர்கள் இருவரும் சுவர்ணகுமாரியின் மறுபதிப்புகளாக இருந்தால், என் அருமைச் செல்வங்களாக இருந்துவிட்டால்...?

இருந்துவிட்டால், மிகவும் நல்லதாய்ப் போய்விட்டது. அவர்களிடம் என் கதையைச் சொல்லிக் கண்ணீர் உகுப்பேன். பிழையைக் கூறிப் பொருத்தருள வேண்டுவேன். அவர்கள் உதவியுடன் சுவர்ணகுமாரியை – என் ஆருயிர்க் காதலியை அழைத்து வருவேன். காஞ்சியில் சீரும் சிறப்புடன் அவள் வாழ வழி வகுப்பேன்.

சரி; இவற்றையெல்லாம் செய்துவிடுவாய் குமாரதேவா – சுந்தரியும், காஞ்சனாவும் உன் மகள்களாக இல்லாவிட்டாலோ? உன் பழைய கதையை அவர்கள் அறிந்து உன்னை ஏசுவார்களே.

ஒரு பெண்ணுக்கு இழைத்த அநீதியை மற்றொரு பெண் அறிந்தால் சீறுவாளே. உனக்கு மேலும் அவப்பெயர் தானே. உன் வாழ்வில் மறைக்கப்பட்டிருக்கும் பகுதி வெளி உலகுக்குத் தெரிந்துவிடுமே – உயர்ந்த நிலையில் பல்லவ சாம்ராஜ்யக் குதிரைப் படைத் தலைவராய்த் திகழும் உன் கதை அறிந்து எல்லாரும் ஏளனம் செய்வார்களே!

செய்யட்டுமே, நன்றாகச் செய்யட்டும். நடுச் சந்தியில் நிற்க வைத்து என்னைப் பரிகசிக்கட்டும். எந்தவிதத் தண்டனையும் எனக்குத் தெய்வம் அளித்தால் நான் ஏற்றுத்தானே ஆகவேண்டும்!

குமாரதேவன் மனப்போராட்டத்துடன் மேலும் தொடர்ந்து நடக்க முயன்றார். அவரால் ஓர் அடிகூட எடுத்து வைக்க முடியவில்லை. குறுக்கே மர வேரொன்று பூமியோடு பூமியாக நீண்டிருந்தது. அவருக்குப் புலப்படவில்லை. கால் தடுக்கி அங்கேயே விழுந்தார். கையை ஊன்றி மீண்டும் எழுந்திருக்க முயன்றார். இயலவில்லை. உடல் பெரும் பாறையைப்போல் கனத்தது. 'இரவெல்லாம் இங்கேயே கிடக்க வேண்டுமா? ஐயோ... இந்த இடத்தில் உதவிக்கு யாருமே வரமாட்டார்களா?'

'ஓ!' என்று குமாரதேவன் கூவினார். மரங்கள் சலசலத்தன. எங்கோ பயங்கரமாக அலறிய ஆந்தை ஒன்று எதிரொலித்தது. குமாரதேவர் கண்களை மலர விழித்துப் பார்த்தார். ஒன்றுமே புலப்படவில்லை. ஆனால் சிறிது நேரத்திற்கெல்லாம் பத்துப் பதினெட்டு நெருப்புத் துண்டங்கள் அந்த இருளில் அவரை நோக்கி மெல்ல வந்து கொண்டிருந்தன. கொடும் இருளில் அவை அவரை நெருங்குவது அவருக்கு நன்றாகத் தெரிந்தது.

குமாரதேவனைச் சுற்றி ஓநாய்கள் வந்தமர்ந்து கொண்டன. அவற்றின் விழிகள் தாம் குமாரதேவர்க்கு நெருப்புத் துண்டம் போல் காட்சியளித்தன. அந்த இரவில் அவற்றிற்கு நல்ல விருந்து கிடைத்துவிட்டது. அந்தக் களிப்பில் அவை மீண்டும் ஊ... ஓ...ஊ...ஓ... என்று ஊளையிட்டன. குமாரதேவர் கண்களை மூடிக்கொண்டு தரையில் சாய்ந்தார்.

●

# 20. சலனம்

குமாரதேவனைச் சுற்றி வந்தமர்ந்து கொண்ட ஓநாய்கள் மெல்ல மெல்ல அவரை நெருங்கின. மாற்றான் படைகளைப் போர்க்களத்தில் நெருங்கும் படை வீரர்களைப் போன்று அவை நாக்கைச் சுவைத்துக் கொண்டு மெல்ல மெல்ல நெருங்கின. குமாரதேவனுக்குத் தெரிந்துவிட்டது தன் நிலை; ஓநாயின் விருந்துக்குத் தான் ஆளாகப் போவது உறுதி என்பதை அவர் அறிந்துவிட்டார்.


யுத்த பூமியிலே ஆயிரம் வேல்கள் உடலைத் துளைக்க, குருதிச் சேற்றிலே மிதந்து உயிர் விட வேண்டிய தான் இப்படி அனாதரவாக ஓநாயின் கூரிய நகங்களினால் கிழிக்கப்பட்டா மாள வேண்டும்? உயிர் போவதைப் பற்றி அவர் கவலைப்பட வில்லை. ஆனால், தன் மனத்தினுள் புதைந்து கிடக்கும் இரகசியத்தைச் சுந்தரிக்கும், காஞ்சனாவுக்கும் தெரிவிக்காமல் போய்விடுகிறோமே என்ற கவலை தான். சகோதரிகள் இருவரையும் ஒன்றுசேர்த்து அவர்களிடம் தன் முன் செயலுக்கு வருத்தம் தெரிவிக்காமல் போய்விடுகிறோமே என்ற கவலை தான்...

குமாரதேவனால் துள்ளி எழுந்து உடைவாளால் ஓநாய்களை வெட்டி வீழ்த்திட முடியாதா? குமாரதேவன் தன் உடலை அசைத்துப் பார்த்தார். முடியவில்லை. திரேகத்தின் மீது பெரும் பாறை சுமத்தப்பட்டிருப்பது போன்று கனத்தது. கைகளை மெல்ல அசைத்தார். ஓநாய் ஒன்று அவர் கரத்தின் மீது அமர்ந்தது. அவருக்கு 'ஓ' என்று அலற வேண்டும் போல் தோன்றியது.

'ஓ...' 'ஓ....ஊ'

அவருக்குப் பதிலாக அந்த இரத்த வெறி மிருகங்கள் ஓலமிடத் தொடங்கின. அந்தக் கூவலுக்கு என்ன பொருள்? 'நல்ல விருந்து கிடைத்துவிட்டது. ஓடி வாருங்கள் நண்பர்களே' என்பதுதானோ?

ஓநாய்களின் தாக்குதல்களைக் குமாரதேவனால் தாங்க முடியவில்லை. உயிர் ஓலம் எங்கும் எதிரொலித்தது. அந்தத் தீனக் குரலும் பல ஓநாய்களின் ஓலமும் தொலைவிலிருந்த



குடியிருப்புகளில் கேட்டிருக்க வேண்டும். தீவர்த்திகளுடன் பல கிராமவாசிகள் ஓடோடி வருவது குமாரதேவனின் மங்கிய பார்வையில் தெரிந்ததோ இல்லையோ, அவர் மரண ஓலத்துடன் தலையை மண்ணிலே சாய்த்துவிட்டார். இன்னும் உயிர் மட்டும் ஏதோ ஒரு முக்கியமான காரியத்திற்காகப் பறந்து போகாமல் காத்திருந்தது.

கையில் தீவர்த்திகளுடனும், வேல் கம்பு, ஈட்டிகளுடனும் கிராமத்தவர்கள் ஓடி வருவதைக் கண்ட ஓநாய்கள் விருந்துக்குப் பங்கம் ஏற்பட்டதால் தாங்கள் உயிர் பிழைத்தால் போதும் என்று தப்பி ஓடின. உடலில் இரத்தம் கசியக்கிடந்த குமார தேவனை அவர்கள் மெல்லத் தூக்கிக் கொண்டனர். குமாரதேவனுக்கு இப்போது சற்று நினைவு வந்தது. அருகேயுள்ள சிற்பியின் குடிலுக்குத் தன்னை எடுத்துச் செல்லுமாறு அவர் மெல்லிய குரலில் கேட்டுக் கொண்டார்.

சிற்பி மல்லிநாதரின் குடில் அமைதி நிறைந்துத் தவழும் இடத்தில் இருந்தது. அந்த இடத்தின் அமைதியைச் சுந்தரியும், விஜயனும் மேலும் வளர்த்தனர். இளவரசர் இராஜசிம்மன் வந்து சென்ற பிறகு இருவருள்ளத்திலும் சலனம் ஏற்பட்டது. சலனம் வெளியே புலப்படவில்லை. அமைதி அதை மூடி மறைத்தது.

இளவரசரைத் தேடித்தான் காஞ்சி வந்ததும், அவரைச் சந்திக்க முடியாமல் மாமல்லபுரம் வந்தடைந்ததும் அவனுக்குக் கனவு போல்தான் தோன்றின. இளவரசரை அவ்வளவு சீக்கிரம் சந்திக்க முடியும் என்று அவன் நினைக்கவில்லை.

இளவரசரே அங்கு வந்துவிட்டார். விஜயனுக்கு ஒரு கணம் ஏதும் பேச இயலவில்லை.

''விஜயா...'' – இராஜசிம்மன் மெல்ல அழைத்தான்.

''இளவரசரே...'' – விஜயனால் வார்த்தைகளை எளிதில் கூற இயலவில்லை. அவன் விழிகளில் நீர் தளும்பியது.

இருவரும் பேசாமல் மௌனமாய் நிற்பதைக் கண்டு சுந்தரி திகைத்தாள். இளவரசருக்கு விஜயன் முன்பே அறிமுகமானவரா – இதை நினைக்கும்போது சுந்தரிக்கு விஜயனிடம் மேலும் மதிப்பு அதிகமாகியது.

'இளவரசரை வெளியே நிற்கவைத்தே பேசுகிறீர்களே'' என்று சுந்தரி நினைவுபடுத்த வேண்டியதாயிற்று.

விஜயனும், இராஜசிம்மனும் குடிலில் அமர்ந்துப் பேசிக் கொண்டிருந்தனர். மாபெரும் பல்லவ நாட்டு இளவரசர் எளிய

முறையில் குடிலில் அமர்ந்துப் பேசுவது சுந்தரிக்கு ஆச்சர்ய மாயிருந்தது. இத்தகைய குணமுடையவரிடமா வெஞ்சினம் கொண்டு பழிக்குப் பழி வாங்க நினைத்தோம் என்று சுந்தரி எண்ணினாள். பேச்சின் சிற்சில போது இளவரசரின் பார்வை சுந்தரியைத் தேடும். சுந்தரியின் விழிகளும் அதை எதிர்பார்த்ததுபோல் அவர் விழிகளைச் சந்தித்துவிடும். பேச்சின் போது மல்லிநாதரின் சிற்பத்தையும் புகழும் நிலை இராஜ சிம்மனுக்கு ஏற்படும். அதைக் கொணர்ந்த சுந்தரியைப் பாராட்ட வேண்டி நேரிடும். அப்போது இராஜசிம்மன் விழிகள் ஒருமுறை சுந்தரியைத் தேடி அலையும்.

சிவந்த வதனத்துடன் அவள் மறைவிடம் துள்ளிச் செல்லும் அழகை ரசிக்கும்.

தான் காஞ்சிக் கோட்டைக்குள் நுழைந்ததையும் அங்கிருந்து மாமல்லபுரம் அடைந்ததையும் ஒன்றுவிடாமல் விஜயன் தெரிவித்தான்.

''இந்த இடத்திற்கு வந்த பிறகு எனக்குக் காஞ்சி நினைவே மறந்துவிட்டது இளவரசே'' என்றான் விஜயன்.

இராஜசிம்மன் மெல்ல நகைத்தான். பிறகு ஏதோ நினைத்தது போன்று, ''விஜயா, வாதாபியில் நாம் கைகோத்துச் சுற்றி வந்தோமே நினைவிருக்கிறதா?'' என்று கேட்டான்.

''நான் எப்படி மறப்பேன் இளவரசே! அஜந்தாக் காடுகளுக்குச் சென்றோம்...''

''அங்கே உள்ள குகை மண்டபங்களில் கை கோத்து அலைந்தோம்...''

விஜயன் இப்போது கண்களை மூடிக் கொண்டான்.

''விஜயா... அந்தக் குகை மண்டபங்கள் பாறையிலே குடையப்பட்ட அற்புதத்தைக் கண்டு வியந்தோம். அங்கே பாறைச் சுவரில் தீட்டப்பட்டிருந்த ஓவியங்களைக் கண்டு பிரமித்தோம். அப்போது நான் உன்னை ஒன்று கேட்டேனே நினைவிருக்கிறதா..?'' என்று இராஜசிம்மன் கேட்டான்.

விஜயன் விழிகளைத் திறக்காமல் பெருமூச்சு விட்டவாறு, ''நன்றாக நினைவிருக்கிறது இளவரசே...'' என்று கூற முற்பட்டபோது, இராஜசிம்மன் குறுக்கிட்டு, ''விஜயா, அதென்ன 'இளவரசே, இளவரசே' என்று என்னை அழைக்கிறாய்... அஜந்தாவில் நானும் நீயும் அலைந்தபோது, என்னை என்ன

சொல்லி அழைத்தாய்...'' என்று கூறவும், விஜயன் சட்டென விழிகளைத் திறந்து, ''ஐயோ... அப்படியெல்லாம் கூறி என்னை இக்கட்டில் விட்டுவிடாதீர்கள். அப்போது ஏதோ என் அறியாத்தனத்தால் அப்படி எல்லாம் தங்களை அழைத்து விட்டேன். அதை நினைக்கும்போதே எனக்கு இப்போது வெட்கமாக இருக்கிறது...'' என்றான்.

''வெட்கம் என்ன?''

''இளவரசருடன் சமமாகப் பழகினேன்... ஒருமையில் அழைத்தேன். குளிரால் தாங்கள் நடுங்கியபோது கேலி செய்தேன்...''

''தவறன்று விஜயா. இப்போதும் அப்படியே அழைக்கலாம். அயல்நாட்டினின்று வந்திருக்கிறான் தன் நண்பன் என்பதைக் கூடத் தெரிந்து கொள்ளாமல், ராஜ்யபரிபாலனம் நடத்துவதைக் கூறி கெக்கலி கொட்டலாம். கோட்டைக்குள்ளே நுழைய இரகசிய வழி இருப்பதை அறிந்து கொள்ளாத இளவரசன் என்று இடித்துக் கூறலாம்...''

''இளவரசே...''

''விஜயா... நான் என்றும் உன் தோழன். தோழமைக்கு இடையே அந்தஸ்து எனும் குறுக்குச் சுவரைக் கட்டாதே. விஜயா! அஜந்தாவிலே நான் உனக்கு ஒன்று சொல்லிவந்தேன் நினைவிருக்கிறதா...?''

''நன்றாக நினைவிருக்கிறது. அழியாத வர்ண இரகசியங்களை அறிந்துவரச் சொன்னீர்கள்'' என்று விஜயன் கூறியவுடனேயே இராஜசிம்மன் பரபரப்புடன் விஜயன் கரங்களைப் பிடித்துக் கொண்டு, ''விஜயா! அழியாத வண்ண முறைகளை அறிந்து வந்திருக்கிறாய்! சாளுக்கியர்களைக் கலைத் திறமையில் வென்றுவிட எனக்கு உதவுவாயா?'' என்று கேட்டான்.

சுந்தரி அவர்கள் பேசுவதைக் காதுகொடுத்துக் கேட்டாள்.

''அறிந்து வந்திருக்கிறேன் இளவரசே! நான் இங்கு வந்த பிறகு முதலில் தங்களைக் காண இயலவில்லையே எனும் சோர்வு ஏற்பட்டாலும், இந்தக் குடிலுக்கு வந்த பிறகு என் ஏமாற்றம் மறைந்தது. சோர்வு பறந்தது. உள்ளத்திலும் உடலிலும் புத்துணர்ச்சி பிறந்தது. இப்போது தங்களைக் கண்டு விட்டவுடன் என் இதயத்தில் சோர்வு இல்லாது போய்விட்டது...'' என்று கூறிவரும்போது இராஜசிம்மன், விஜயன் கடைசியில்

சொன்னவற்றைக் காதில் போட்டுக்கொள்ளாமல், 'குடிலுக்கு வந்த பிறகு உள்ளத்திலும் உடலிலும் புத்துணர்ச்சி பிறந்தது' என்ற வார்த்தைகளைக் கேட்டு வேறுவிதமான பொருள் கொண்டான். விஜயனையும், சுந்தரியையும் மாறி மாறி ஒருகணம் பார்த்தான். பிறகு ஏதோ நினைவுக்கு வந்தவனைப் போன்று எழுந்து, ''அரச குடும்பத்தில் ஏன் பிறந்தோம் என்று தோன்றுகிறதே விஜயா...'' என்று அலுப்பு ஏற்பட்டவனைப் போல் கூறினான்.

திகைத்த விஜயன், ''இளவரசே...'' என்றான்.

''ஆமாம் விஜயா. உன்னைப்போல், இருந்துவிட்டால் அந்தக் குடிலிலேயே இருக்கலாம். இயற்கையின் எழிலை இரசித்தவாறு காலத்தைக் கழிக்கலாம். அரசியல் சூழ்ச்சி இராது. படையெடுப்புக் கவலை இல்லை. போர் முழக்கம் இல்லை. கலைக் கனவு கண்டு அதை நனவாக்கும் நிலையிலிருக்கலாம். மேலும், மேலும் விஜயா... சித்திரக் கலைக்கு உயிர் கொடுக்கும் உயிர் ஓவியம் எதிரே இருக்கும்போது... நானும் சித்திரக்காரனாகி விடலாம் என்று நினைக்கிறேன்...'' என்று கூறினான்.

குடிலுக்கு வெளியே வந்த இராஜசிம்மன், ''முக்கியமான காரியம் ஒன்றிருக்கிறது விஜயா. சிற்பி மல்லிநாதரைக் கண்டுபிடிக்க வேண்டும். நீ காஞ்சிக்கு எப்போது வருகிறாய்...?'' என்று கேட்டான். இளவரசருடைய பேச்சில் கணத்தில் மாறுதல் ஏற்பட்டது, விஜயனுக்குப் புரியாமலில்லை. என்ன காரண மாயிருக்கும்?

மீண்டும் இராஜசிம்மன் விஜயனை நோக்கி, ''உன்னுடன் நீண்ட நேரம் பேச வேண்டும் விஜயா! காஞ்சிக்கு வந்துவிடு. அங்கே திட்டம் வகுப்போம். மாமல்லபுரத்தில் விட்ட குறையை நிறைவேற்ற வழி காண்போம். சில வீரர்களுடன் உடனே குதிரையொன்றையும் அனுப்புகிறேன்... நீ வந்துவிடு...'' என்றான்.

அந்தக் குடிலை விட்டு எப்படி அவன் புறப்பட்டு வர முடியும்? சிற்பச் சுவடிகளை எப்படி விட்டுவருவது? சூழ்நிலையைத் துறந்து எப்படி வருவது? கருவிழியாள் சுந்தரியைத் தனியே விட்டு எப்படி வருவது?

இளவரசன் இராஜசிம்மன் மனத்தில் புதிய சலனத்துடன் அங்கிருந்துப் புறப்பட்டுச் சென்றான். குதிரையின் குளம்படி யோசை வெகுதூரம் வரை கேட்டது.


விஜயன் அந்தத் திசையையே பார்த்துக் கொண்டிருந்தான், சுந்தரி அவனையே இமைக்காமல் பார்த்துக் கொண்டிருந்தாள்.

விஜயன் திரும்பினான். அவன் முகத்தில் பழைய களிப்பு இல்லை. சுந்தரி அவனருகே வந்தாள்.

''இளவரசர் அழைத்தாரே, காஞ்சிக்குச் செல்லப் போகிறீர்களா?'' என்று கேட்டாள். விஜயன் ஏதும் பேசவில்லை.

''இந்த நடுக்காட்டில் என்னைத் தனியே விட்டுவிட்டுப் போகப் போகிறீர்களா?'' என்று சுந்தரி கேட்டது பல காலம் பழகியவர் கேட்கும் கேள்விபோல் இருந்தது.

விஜயனால் ஏதும் மறுமொழி சொல்ல முடியவில்லை. அமைதியான அவனுள்ளத்தில் சலனம் எழுந்தது. அவன் மெல்ல நடந்து அங்கேயிருந்த வாவிக் கரையை அடைந்தான். வாவியில் நீர் ஆடாது அசையாது இருந்தது. அவன் முகம் அதில் தெரிந்தது. முகத்திலே படர்ந்துவிட்ட கவலைச் சாயல் நீரில் பிரதிபலிப்பது தெரிந்தது. சுந்தரி அவனை நோக்கி வந்து அவன் அருகே அமர்வது தெரிந்தது. அவனையே நோக்கியவாறு அவள் அமர்ந்திருப்பது தெரிந்தது. அவன் ஏதும் பேசாததால் அவள் மறுபுறம் திரும்பி அமர்ந்துவிட்டதும் தெள்ளெனத் தெரிவித்தது வாவி!



# 21. 'ஏறு குதிரையில்'

மாமல்லபுரத்துச் சிற்பியின் குடிலினின்று இராஜசிம்மன் ஏதோ ஓர் எண்ணத்தில் புறப்பட்டுவிட்டானே ஒழிய அவன் நினைவெல்லாம் அந்தக் குடிலிலேயே இருந்தது. விஜயன் தீட்டிய சித்திரமும் அவனருகே அமர்ந்துப் பேசிக் கொண்டிருந்த சுந்தரியும் அவன் நினைவில் வட்டமிட்டனர். காஞ்சிக்கு விஜயன் வந்தது இதுவரையில் தனக்குத் தெரியாது இருந்ததை நினைக்கும்போது அவனுக்கு வெட்கமாகவே இருந்தது. காஞ்சியின் ஒற்றர் படைகள் திறமையாகச் செயலாற்றவில்லை என்ற முடிவுக்கே அவன் வந்தான். பரிவாதினி காணாமல் போனதும், சிற்பி மல்லிநாதர் மாயமாய் மறைந்ததும், கோட்டை வாயிலில் இரகசிய வழியொன்றிருப்பதும், இராஜசிம்மனுக்கு மிகுந்த கவலையை அளித்தன. இவற்றையெல்லாம்விட விஜயன் மாமல்லபுரத்திலேயே தங்கியிருக்க அந்த இளமங்கையின் நேசம்தான் காரணமாயிருக்க வேண்டும் என்பதை நினைக்கும்போது, உடலில் புரியமுடியாத பரபரப்பும் கோபமும் பொங்கி வந்தன.

. விஜயன் தன்னைக் காணப் பல்லவ நாட்டிற்கு வந்தானா அல்லது காதல் புரிய வந்தானா என்பதை நினைக்கும்போது அவன் உள்ளத்தில் பொறாமையும் எழுந்தது.

குதிரை மெல்லச் சென்று கொண்டிருந்தது. இராஜசிம்மனின் மனக்குதிரையும் மந்த கதியிலேயே சென்று கொண்டிருந்தது. போருக்கு வேண்டிய ஆயத்தங்களைச் செய்யுமாறு பரமேச்வர வர்மர் கட்டளையிட்டுவிட்டார். அதற்கு முன்பாகவே சாளுக்கிய ஒற்றர்களின் நடவடிக்கை அதிகமாகிவிட்டது. அவர்களை அடக்குவதா, போருக்கு வேண்டிய ஆயத்தங்களைச் செய்வதா, அல்லது சிற்பி மல்லிநாதரைத் தேடிக் கண்டுபிடித்து மீண்டும் கலைப் பணியைத் தொடங்குமாறு செய்வதா எனும் சிந்தனையில் சென்று கொண்டிருந்தான்.

அந்தச் சாலையில் அதிக ஜன நடமாட்டமில்லை. துறைமுகத்திற்குப் பண்டங்களை ஏற்றிச் செல்லும் வண்டிகள் 'கடக் கடக்' என்ற ஒலியை எழுப்பியவாறு சென்று கொண்டிருந்தன. வண்டிக்காரர்களில் ஓரிருவர் இளவரசரை

அடையாளங் கண்டு கொண்டனர். சாலையில் நடந்து செல்வோரில் சிலர் மரியாதைக்காக கைகட்டி ஒதுங்கி நின்றனர். ஆனால் ஒருவன் மட்டும் எதையும் பொருட்படுத்தாமல் வேகமாக நடந்து வந்து கொண்டிருந்தான். அவன்தான் குட்டிச் சித்தன்.

குட்டிச் சித்தன் வருவதைத் தொலைவிலேயே பார்த்து விட்டான் இராஜசிம்மன். அவன் தோற்றமும், உருவமும் அவனை முதன் முதலில் சிற்பியின் குடிலில் பார்த்த நினைவை அளித்தன. அவனை விசாரித்தால் மல்லிநாதரின் இருப்பிடம் தெரியும் என்று எண்ணிக் குதிரையின் வேகத்தை மட்டுப்படுத்தினான். குட்டிச் சித்தனின் அருகே சென்று குதிரையை நிறுத்தியபோது தான் குட்டிச் சித்தன் தன் அருகே இளவரசர் நிற்பதைக் கண்டு திடுக்கிட்டு முகத்தில் அசட்டுச் சிரிப்புடன் இளவரசரை வணங்கி நின்றான்.

"உன்னை எங்கேயோ பார்த்திருக்கிறேன் போலிருக்கிறதே... உன் பெயர் என்ன?" என்று இராஜசிம்மன் கேட்டான். குட்டிச் சித்தன் மீண்டும் அசடு வழிய நகைத்து, "நான்தான் குட்டிச் சித்தன் இளவரசே!" என்றான். தன்னை அவர் எங்கே பார்த்திருக்கப் போகிறார் என்ற சந்தேகம் அவனுக்கு.

"எ...ன்...னை... என்னை... எங்கே... எங்கே..." என்று தட்டுத் தடுமாறிக் கேட்டான் குட்டிச் சித்தன்.

இராஜசிம்மன் எடுத்த எடுப்பிலேயே, "மல்லிநாதர் நலமாயிருக்கிறாரா? அவரது குடிலில்தான் உன்னைப் பார்த்திருக்கிறேன்..." என்று கூறியவுடன் குட்டிச் சித்தனுக்கு மேலும் வியப்பு அதிகமாகியது. அதனுடன் இதுவரை அடங்கியிருந்த வருத்தம் பொங்கிப் பாய்ந்தது. சிறு குழந்தை போல் தேம்பித் தேம்பி அழலானான். அழுகையும், நெஞ்சடைத்தலும் கலந்த குரலில் அவன் கூறியவற்றினின்று இராஜசிம்மன் நடந்தவற்றைப் புரிந்து கொள்வதே கஷ்ட மாயிருந்தது. என்றாலும் குட்டிச் சித்தன் கூறியவை அவனுக்கு உபயோகமாயிருந்தன.

காஞ்சியில் சுந்தரியைக் காண முடியாத குட்டிச் சித்தன் மல்லிநாதர் இருப்பிடத்தைக் கண்டுபிடிக்க பெருமுயற்சி எடுத்துக்கொண்டான். வண்டி முன்பு கவிழ்ந்த இடத்திற்கு மீண்டும் வந்து அதே மாடு மேய்க்கும் சிறுவனைச் சந்தித்தான். அவன் குறிப்பிட்ட வழியை மனத்தில் கொண்டு அங்கே விரைந்தான்.

மரங்களும் புதர்களும் சிறுசிறு பாறைகளும் நிறைந்த இடங்களைத் தாண்டி மல்லிநாதரை அபகரித்துச்சென்ற

கீர்த்திவர்மன் அவரை மறைத்திருந்த இடத்தை அவன் அடைந்தான். ஆனால், அங்கே அவன் செல்லும் முன்பே மல்லிநாதரும் மற்றவர்களும் இருந்த சுவடு தெரியாது புறப்பட்டுச் சென்று விட்டனர். அந்த மலை சூழ்ந்த இடத்தில்தான் சாளுக்கிய இளவரசனது திட்டப்படி ஆயுதங்கள் சேமித்து வைக்கப் பட்டிருந்தன. பல்லவ நாட்டில் பரவியிருந்த ஒற்றர்கள் அவ்வப்போது கூடுமிடமாக அது இருந்து வந்தது. திடீரென சாளுக்கிய இளவரசன் விநயாதித்தனுக்குச் சந்தேகம் எழவே தங்கள் மறைவிடத்தை அங்கிருந்து மாற்றிவிட உடனே முடிவு செய்தான்.

ஃ ஃ ஃ

மல்லிநாதருக்கு உடல்நிலை சற்றுத் தேறியது. அவரைக் காஞ்சியில் கொண்டு சேர்ப்பதாகக் கூறித் தெற்கே சிங்கவரம் அருகேயுள்ள ஓரிடத்திற்கு அழைத்துச் செல்ல விநயாதித்தன் கட்டளையிட்டான். அவனது திட்டப்படி எல்லாம் நடப்பதானால் இன்னும் இரண்டு பௌர்ணமிக்குள் காஞ்சி படையெடுப்பை எளிதில் நடத்திவிடலாம். காஞ்சிக் கோட்டை இரகசிய வழிகள், மாளிகையின் முக்கிய இடங்கள் ஆகியவற்றை அறிதல், மற்றும் ஆயுதச்சாலை, பண்டகசாலை முதலியவற்றில் ஒற்றர்களை நடமாட விடுதல் போன்ற காரியங்கள் யாவும் அவன் திட்டப்படியே நடைபெற்று வந்தன. காஞ்சனாவின் புது தொடர்பு வேறு விநயாதித்தனுக்குக் கிடைக்கவே தன் திட்டத்தை வெகு எளிதில் நிறைவேற்றிவிடலாம் எனும் தெம்பு அவனுக்குப் பிறந்தது. இந்தச் சமயத்தில் மல்லிநாதரைக் காஞ்சிக்கு அருகே இருக்க விடாமல் அழைத்துச் சென்றுவிட வேண்டும் என்று முடிவு செய்தான். அவன் எண்ணப்படி எல்லாம் நடந்தது. அவனது சகோதரன் கீர்த்திவர்மனின் தீவிர நடவடிக்கைகள் விநயாதித்தன் எண்ணத்தை எளிதில் நிறைவேற்றின.

குட்டிச் சித்தன் மல்லிநாதரைத் தேடிச்சென்று அவர் அகப்படாததால் மன வேதனையுடன் திரும்பிக் கொண்டிருந்த போதுதான் இளவரசரைச் சந்தித்தான். அவன் கூறியவற்றை இராஜசிம்மன் கேட்டு மௌனமானான். குட்டிச் சித்தன் இளவரசர் முகத்தை மெல்ல நிமிர்ந்து நோக்கினான். இராஜசிம்மன் அதிக நேரம் அங்கே நிற்கவிரும்பால், ''குட்டிச் சித்தா, இப்போது எங்கே நீ போகப் போகிறாய்?'' என்று கேட்டார்.

''மல்லிநாதர் குடிலுக்குத்தான். அவர் வரும்வரையில் நான் அங்கிருந்து அகலமாட்டேன். மேலும் ஐயாவின் மகளையும்

காணவில்லை. அவர்களிருவரும் என்ன ஆனார்களோ?'' என்று வருத்தப்பட்டான் குட்டிச் சித்தன்.

''சிற்பியின் மகளா?'' என்று இராஜசிம்மன் ஆவலுடன் கேட்டான்.

''ஆமாம், இளவரசே! சிற்பி தன் சொந்த மகளை விட அந்தப் பெண்ணை மிகவும் அன்பாக வளர்த்து வருகிறார். அவரது சிற்பப் பணிக்கு அவளும் மிகவும் உதவியாக இருக்கிறாள். தங்களிடம் சிற்பத்தைக் கொண்டு சேர்ப்பதில் அவள் என்ன பரபரப்பு காட்டினாள் தெரியுங்களா? நான் வண்டியை ஓட்டி வந்தேன். தானே நேரிடையே மகாராஜாவைச் சந்தித்துச் சிற்பத்தைக் கொடுத்துவிட்டு வருவதாகக் கூறினாள். ஆனால் காஞ்சி நிலைமை வேறாகிவிட்டதுங்களே'' என்றான்.

அவன் துயரங்கண்ட இராஜசிம்மன், ''குட்டிச் சித்தா மல்லி நாதரின் சிற்பம் அரண்மனையை வந்தடைந்துவிட்டது. சிற்பியின் மகளே அதைக் கொண்டுவந்து சேர்த்தாள். இப்போது அவள் சௌக்யமாக சிற்பியின் குடிலில் இருக்கிறாள், கவலைப்படாதே'' என்று கூறினான்.

குட்டிச் சித்தன் உடனே மாமல்லபுரம் சென்று சுந்தரியைக் காணத் துடித்தான். ஆனால், இராஜசிம்மன் அவனைத் தடுத்து, ''குட்டிச் சித்தா, இப்போது நீ அங்கே செல்வதில் ஏதும் பயன் இல்லை. நீ செய்ய வேண்டிய முக்கிய காரியம் ஒன்றுள்ளது...'' என்றான்.

குட்டிச் சித்தன் திகைப்புடன், ''நானா... நா...ன்... செய்ய வேண்டியதா?'' என்று கேட்டான்.

''ஆமாம் குட்டிச் சித்தா. நீ மல்லிநாதரைக் கண்டுபிடித்தாக வேண்டும்'' என்றான்.

''சிற்பி ஐயாவைக் கண்டுபிடிப்பது தான் என் முதல் வேலை. அதனால் என் உயிரை இழக்கக் கூடச் சித்தமாக உள்ளேன்'' என்றான்.

''நீ இப்போதே காஞ்சிக்கு வா. அங்கே என்னை நாவுக்கரசர் மடத்தில் வந்து சந்திக்கலாம். நீ செய்ய வேண்டியவற்றைக் கூறுகிறேன்'' என்று கூறி இராஜசிம்மன் அங்கிருந்து விரைந்தான்.

⁂ ⁂ ⁂

குட்டிச் சித்தன் சிறிது நேரம் மரத்தடியில் உட்கார்ந்திருந்து விட்டு வந்த வழியே திரும்பக் காஞ்சியை நோக்கி நடக்கலானான்.

குட்டிச் சித்தன் அந்தச் சாலையில் ஒரு நாழிகை நேரம் நடந்திருப்பான். கதிர் ஒளி மேல்வாயில் சாய ஆரம்பித்தது. இருட்டுவதற்குள் அருகிலுள்ள கிராமத்தை அடைந்துவிட வேண்டும் என்று எண்ணிய குட்டிச் சித்தன் விரைவாக நடக்கலானான். அப்பொழுது அவன் எதிரே குதிரைகள் மீது இரு வீரர்கள் விரைந்து வந்தனர். குட்டிச் சித்தன் அருகே அவர்கள் வந்தவுடன் திடீரெனக் குதிரையை நிறுத்தினர். ஒருவன் குட்டிச் சித்தனைப் பார்த்து, ''நீ எங்கே ஓடினாலும் தப்பித்துவிட முடியாமல் உன் உருவமே காட்டிக் கொடுத்துவிடுமே! ஏனப்பா காஞ்சி விருந்தினர் விடுதியினின்று தப்பி வந்துவிட்டாய்?'' என்று கேட்டனர்.

மற்றொருவன், ''சரி சரி இவனுடன் என்ன பேச்சு. குதிரையின் மீது ஏற்றிப் பின்கையைக் கட்டிக்கொண்டு போவோம்... உம்...'' என்றான்.

குட்டிச் சித்தன் சிரித்தான். ''ஏன் சிரிக்கிறாய்?'' என்று சீறினான் ஒருவன்.

''நான் சிரிக்காமல் என்ன செய்ய முடியும். அழுதால் என்னை விட்டுவிட மாட்டீர்கள் இல்லையா? அதனால் சிரிக்கிறேன்...''

''சிரித்தால் மட்டும் விட்டுவிடுவோமா?''

''மாட்டீர்கள் என்று தெரியும். ஆனால் உங்கள் செய்கை என்னைச் சிரிக்க வைக்கிறது.''

''எங்கள் செய்கை இப்போது உன்னைப் பிடித்துப் போவதுதான். அதைக் குறித்து நாங்கள்தானப்பா சிரிக்க வேண்டும்'' என்றான்.

''இப்போது சிரிப்பீர்கள். பிறகு அழுவீர்கள்.''

''ஏன்...?''

''விருந்தினர் விடுதியில் தங்கியிருந்தவர் தப்பி ஓடினால் உங்களுக்கு என்ன?''

''அதுதான் குற்றம்.''

''எது?''

''விருந்தினர் விடுதியில் நீங்கள் குற்றவாளிகளாகத் தங்கினீர்கள்.''

''ஓகோ! காஞ்சியில் குற்றவாளிகள் விருந்தினர் விடுதியில் தான் தங்குவார்களோ?''

''ஏய் கூனா, குள்ளா, உன்னுடன் வாதாட நாங்கள் வரவில்லை...''

''வாதாட வராததால்தான் நான் சிரித்தேன். வாதாட முடியாதவர்கள் வாளோடு வந்தீர்களாக்கும்.''

''உம்... பேசாதே. ஏறு குதிரை மேலே...''

''ஐயா, வீரர்களே, பேசாமல் வந்த வழியே போய்விடுங்கள். வீணே வேதனைக்கு உள்ளாகாதீர்கள். என்னைச் சிறை பிடித்து வருமாறு யார் உங்களுக்குக் கட்டளையிட்டிருக்கிறது?''

''எங்கள் தலைவர்...''

''உங்கள் தலைவர் இளவரசரை விடப் பெரியவரா?''

''இளவரசரா?''

''ஆமாம்... ஏன் அப்படித் திகைக்கிறீர்கள்? இளவரசருக்குத் தெரிந்தால் உங்கள் தலையை வாங்கிவிடுவார். இப்போதுதான் என்னிடம் பேசிவிட்டுச் சென்றார். என்னைக் காஞ்சிக்கு உடனே வருமாறு கட்டளையிட்டு விட்டுப் போயிருக்கிறார்...''

''ஓ...கோ...'' என்று கூறிய இரு வீரர்களும் சற்று யோசித்தனர். பிறகு இருவரும் விழுந்து விழுந்து நகைத்து, ''இளவரசர் உன்னைப் பார்த்துப் பேசினாரா? கட்டளையிட்டாரா, காஞ்சிக்கு வருமாறு! நன்றாகக் கற்பனை செய்கிறாய்... அப்படிச் சொல்லி ஏமாற்றிவிடலாம் என்று எண்ணமா? எங்கள் கண்களில் மிளகு தூள் போட முடியாது. நியாயமாக உன்னை நடத்தி அழைத்து வர வேண்டும். போனால் போகிறதென்று உன்னைக் குதிரையில் ஏற்றி அழைத்துச் செல்கிறோம். உம்; ஏறு... ஏறு... காஞ்சிக்கு வந்து எங்கள் தலைவரிடம் பேசிக்கொள்...'' என்று வீரனொருவன் கர்ஜித்தான்.

குட்டிச் சித்தனால் ஏதும் பேசமுடியவில்ல. 'சற்று முன்பு இளவரசர் கூறிச் சென்றதென்ன, இவர்கள் செய்வதென்ன – தங்கள் தவறுக்கு மிகவும் வருந்தப்போகிறார்கள்' என்று முணுமுணுத்தவாறு குதிரையில் வீரனின் பின்புறம் ஏறி அமர்ந்து கொண்டான்.

குதிரைகள் பறந்தன.

•

## 22. தந்தையும் மகளும்

குமாரதேவனைச் சுமந்து கொண்டு சிற்பியின் குடிலுக்கு அருகே கிடத்திவிட்டுக் கிராம மக்கள் குடிலுக்குள் இருப்பவர்களை அழைத்தனர். விஜயனும், சுந்தரியும் உறக்கம் வராமல் படுத்திருந்தனர். திடீரென தீவர்த்தி வெளிச்சமும் யார் யாரோ நடமாடும் அரவமும் கேட்டவுடன் அவர்கள் திடுக்கிட்டு எழுந்தனர். சுந்தரி, விஜயன் அருகே நெருங்கி வந்தாள். அவள் உடல் பயத்தால் நடுங்கிக் கொண்டிருந்தது. பகல் பொழுதில் எழிலுடன் விளங்கும் அந்தக் குடில் பகுதி இரவு வேளையில் பயங்கரமாகக் காட்சியளித்தவாறிருந்தது. தீவர்த்தியின் ஒளியில் பெரும் மரங்களின் நிழல்கள் கொடும் அரக்கர்களைப் போல் காட்சியளித்தன. உறக்கம் கலைந்த பறவைகள் வேறு ஒலி எழுப்பின.

சுந்தரி விஜயனின் தோள்களைப் பற்றிக் கொண்டாள்.

''பயந்துவிட்டாயா சுந்தரி?'' என்று கேட்டு மெல்ல அவள் கரங்களைத் தோளிலிருந்து எடுத்தான்.

ஆகா; அந்தக் கரங்களுக்குத்தான் என்ன மென்மை. நூற்றுக்கணக்கான புதுமலர்கள் கூட அந்த மென்மைக்கு நிகராக முடியாதே! இதுவரையில் அவன் வரைந்துள்ள ஓவியங்களில் மெல்லியலாளைத் தீட்டியிருக்கிறான் – ஆனால், இவ்வளவு மென்மையாக அவர்கள் இருப்பர் என்று அவன் அறிய மாட்டானே. பிரம்மதேவன் அல்லித் தண்டுகளை எடுத்து மென்மையாக்கி அமைத்திருப்பானோ? அவன் உடல் சிலிர்த்தது - சுந்தரியின் முகத்தை ஒரு கணம் நோக்கினான். ஒரு பக்கம் நிழலும் ஒளியுமாகத் தீவர்த்தியின் ஒளியில் திகழ்ந்த அவள் முகத்தில் எங்கிருந்தோ நாணம் பரவி நின்றது. அது மலரும் தருவாயில் இருக்கும் தாமரை இதழைப் போன்றிருந்தது.

கிராமவாசிகள் குரல் கொடுத்தவாறு அருகே வந்துவிட்டனர். குமாரதேவனை அவர்கள் அங்கே கிடத்தினர். உடலில் இரத்தம் கசிந்து கொண்டிருந்தது. குமாரதேவன் முனகிக் கொண்டிருந்தான்.

''சிற்பி ஐயா இல்லையா...'' என்று ஒருவர் கேட்டார். விஜயன் பரபரப்புடன் குமாரதேவன் அருகே வந்து குனிந்து பார்த்து, ''சிற்பி ஐயா இல்லையே... என்ன செய்ய வேண்டும்? நான் செய்கிறேன். இவர் யார்? ஏன் உடலெல்லாம் இப்படி ரத்தம் வழிகிறது?'' என்று கேட்டான்.

அவர்கள் நடந்தவற்றைச் சொல்லி, ''இவர், இந்த இடத்திற்குக் கொண்டு விடுமாறு கூறினார். இதோ ஓடிப்போய் மருத்துவரை நாங்கள் அழைத்து வருகிறோம்'' என்றனர்.

குமாரதேவன் மனத்திற்குள் ஆயிரம் எண்ணங்கள் இருந்தன. அவற்றையெல்லாம் வெளியே தெரிவிக்க அவனுக்குச் சக்தி வர வேண்டுமே? போர்க்களத்தில் ஆயிரம் வேல்கள் பாய்ந்தால் கூட அப்படித் துடிக்க மாட்டானே – அவனால் உபாதை தாங்க முடியவில்லையே. ஓநாய்கள் ஏற்படுத்திய காயம் இருக்கட்டும், அவன் இதயத்துப் புண்ணின் வலி இப்போது அதிகமாகி விட்டதே – சுந்தரி எங்கே இருக்கிறாளோ? இருந்தால் அவளிடம் தன் மனத்திலுள்ளவற்றைச் சொல்லும் சக்தி வருமோ, வராமலே உயிரே போய்விடுமோ...?

சுந்தரியும் அங்கே மெல்ல வந்தாள். அவள் கால் தண்டை ஒலித்தது. வளையல் குலுங்கியது. இரவிலே அவள் மோகினி போல் காட்சியளித்தாள். அத்தகைய வனப்புடையவளைக் கிராம மக்கள் கண்டதில்லை. வனதேவதையோ என்று அவர்கள் வியந்தனர். அவளுக்கு வழிவிட்டனர். சிலர் காதோடு காதாகப் பேசிக் கொண்டனர்.

''இவளை நான் எங்கோ பார்த்த நினைவாக இருக்கிறது'' என்றான் ஒருவன்.

''ஆமாம்; ஆமாம். எனக்குக் கூட அப்படித்தான் தோன்றுகிறது'' – மற்றொருவன்.

''என்ன, நீங்கள் அதற்குள் மறந்துவிட்டீர்களே! ஒரு மாதத்திற்கு முன்பு கூத்து நடந்ததே...''

இப்போது எல்லோருக்கும் நினைவு வந்துவிட்டது. ''ஆமாம் ஆமாம்'' என்று எதையோ கண்டுபிடித்தவர் போல் தலையை அசைத்தனர்.

''நடிகை காஞ்சனா... அடாடா... இங்கேயா இருக்கிறாள்... தெரியாமல் போய்விட்டதே'' என்றான் ஏதோ பறிகொடுத்தவன் போலொருவன்.

''இப்போது புரிந்துவிட்டது. காஞ்சனாவைத் தேடி இந்தக் கிழவன் வந்திருக்கிறான்; வழி தெரியாமல் ஓநாயிடம் சிக்கிக்

கொண்டுவிட்டான்'' என்றான் மற்றொருவன். ஏதோ இரகசியத்தைக் கண்டுபிடித்துவிட்டதைப் போல!

சுந்தரியின் செவிகளில் இந்த வார்த்தைகள் வீழ்ந்தன. உருவ ஏமாற்றம் இங்குக்கூட வந்துவிட்டதே என்று எண்ணிய அவள் விஜயனை நோக்கி, ''இப்படி எல்லாம் வீண் பேச்சுப் பேசிக் கொண்டிருப்பதில் பயனில்லை. இவர் உயிர் பிழைக்க ஏதாவது செய்தாக வேண்டும். மருத்துவர் உடனே வருவதற்கு ஏற்பாடு செய்யுங்கள்'' என்று கூறி குமாரதேவன் அருகே அமர்ந்து காயங்களினின்று வடியும் குருதியைத் துடைக்கலானாள். விஜயனும் குடிலுக்குள் ஓடித் துணியை எடுத்துவந்து சுந்தரிக்கு உதவினான்.

குமாரதேவர் மெல்லக் கண் விழித்தார். 'அம்மா... அம்மா...' என்று மெல்லக் குரல் கொடுத்தார். மங்கிய அவரது பார்வையில் அவர் தேடி வந்த சுந்தரி எதிரே நிற்பது தெரிந்தது.

''சுந்தரி...'' என்று அவர் மெல்ல அழைத்தார். அவர் உடல் அசைவதைக் கண்டு அவர் என்ன சொல்கிறார் என்பதை உற்றுக் கேட்க சுந்தரி முயன்றாள். அவர் தன்னைத்தான் அழைக்கிறார். அவள் வியந்தாள். எதற்காக அவர் தன்னை அழைக்க வேண்டும்?

சுந்தரி துணிந்து, ''இதோ சுந்தரி தான் உங்கள் எதிரே இருக்கிறேன். என்ன வேண்டும் தங்களுக்கு?'' என்று கேட்டாள்.

இதற்குள் வைத்தியரை அழைத்து வந்துவிட்டனர். ரணங்களுக்கு அவர் மூலிகைகளை வைத்துக் கட்டி உள்ளுக்கும் மருந்து கொடுத்து, ஓய்வு அவருக்குத் தேவை என்றும் ஒரு நாள் கழித்துத்தான் அவர் உயிர் பிழைப்பதைப் பற்றிக் கூற முடியும் என்றும் சொல்லிவிட்டுப் போய்விட்டார்.

கிராம மக்கள் உதவியுடன் குமாரதேவரை மெல்லத் தூக்கிக் குடிலுக்குள் படுக்க வைத்தனர். கிராம மக்களின் சேவையை விஜயன் பாராட்டினான். அவர்கள் விடைபெற்றுச் சென்று விட்டனர்.

❖ ❖ ❖

இரவு கழிந்து காலை புலர்ந்தது. சுந்தரிக்கு உறக்கம் வரவில்லை. விஜயன் நன்றாக உறங்கிக் கொண்டிருந்தான். சுந்தரி, குமாரதேவர் அருகே அமர்ந்தவாறு பலபல எண்ணிக் கொண்டிருந்தாள். அவள் உள்ளம் மிகவும் குழம்பி இருந்தது. பல்லவ நாட்டிற்கு ஏன் வந்தோம் என்று கூட அவளுக்குத் தோன்றியது. தன் கரங்களை விஜயன் பற்றியதையும்,

தன்னையே கண் இமைக்காமல் அவன் பார்த்ததையும் அவள் நினைத்துக் கொண்டபோது அவள் உள்ளம் சிலிர்த்தது.

குமாரதேவர் கண் விழித்துவிட்டார். தாகமாயிருக்கிறதென்று சைகை காட்டினார். சுந்தரி விரைந்து சென்று தண்ணீர் எடுத்து வந்து கொடுத்தாள். அதைக் குடித்தவுடன் அவருக்குப் புதுத் தெம்பு வந்ததுபோல் தோன்றியது. என்றாலும் உடல் உபாதையின் தாக்குதல் குறையவில்லை. அவர் சுந்தரியையே சற்று நேரம் உற்று நோக்கினார். அவர் கண்களிலிருந்து நீர் பெருக்கெடுத்து ஓடியது.

''சுந்தரி...'' என்று அவர் அழைத்து அவளைத் தன் அருகே அமருமாறு சைகை செய்தார்.

சுந்தரி மெல்ல அவர் அருகே அமர்ந்து, ''நீங்கள் யார்... என் பெயர் உங்களுக்கு எப்படித் தெரிந்தது? எதற்காக என்னை அழைக்கிறீர்கள்?'' என்று கேட்டாள்.

''குழந்தாய், சுந்தரி! என்னைப் பற்றி நான் கூறுவதற்கு முன்பு உன்னைப் பற்றி நான் அறிந்து கொள்ளலாமா?'' என்று கேட்டார்.

சுந்தரி சரியென்பதற்கு அடையாளமாகத் தலையை அசைத்தாள்.

''கண்ணே சுந்தரி! நீ வாதாபியில் தானே பிறந்தாய்?'' என்று கேட்டார்.

சுந்தரி ஒரு கணம் துணுக்குற்று, 'ஆமாம்' என்பதற்கு அடையாளமாகத் தலையசைத்தாள். குமாரதேவருக்கு உடலில் ஒருவிதப் பரபரப்பு ஏற்பட்டிருக்க வேண்டும். உள்ளத்து உணர்ச்சி மோதி வந்துக் குதிக்க முயன்றிருக்க வேண்டும். தன் உடல் நிலை மோசமடைந்து வருகிறது என்பதை அவர் உணர்ந்திருக்க வேண்டும். அதனால் நெஞ்சு தழுதழுக்க வார்த்தைகள் தடுமாற, ''குழந்தாய் சுந்தரி... அதுபோதும் நீ உன்னைப் பற்றிக் கூறியது அதுபோதும். நான் சொல்ல வந்ததைக் கூறாமல் நேரத்தை வீணாகக் கழிக்க விரும்பவில்லை. உன் தாயார் சௌக்யமாக இருக்கிறார்களா சுந்தரி?'' என்று கேட்டார்.

தன் தாயைப் பற்றி இவர் ஏன் விசாரிக்கிறார் எனும் சந்தேகம் சுந்தரிக்கு எழுந்தது.

''ஆகா; சௌக்கியமாக இருக்கிறாள், மிகமிக சௌக்யமாக இருக்கிறாள்.''

''சுந்தரி... சுந்தரி... எங்கே இருக்கிறாள் வாதாபியிலா?''

''வாதாபியிலா... வானுலகத்தில். வஞ்சகமும் பொய்யும் ஏமாற்றும் தன்மையும் நிறைந்த இந்த உலகத்திலே சௌக்யமாக இருக்க முடியாது என்று மேலுலகம் சென்றுவிட்டாள். அது சரி, நீங்கள் ஏன் என் தாயைப் பற்றி வினவுகிறீர்கள்? என் தாயை உங்களுக்குத் தெரியுமா?''

குமாரதேவர் ஒரு கணம் கண்களை மூடித் திறந்தார். கொஞ்ச நஞ்சமிருந்த விழி நீரும் குபீரென வழிந்தது.

''உன் தாய் செத்தது நியாயம்தான். அவளுடைய நிலையில் அதைத் தவிர வேறு ஒன்றும் செய்திருக்க முடியாது. இந்த உலகம் முழுமையும் வஞ்சகம் நிறைந்ததில்லை சுந்தரி. அனைவரும் ஏமாற்றுபவர்கள் என்று கூறிவிட முடியாது. ஆனால் என்னைப் போன்ற பாபிகளால் உலகத்திற்கே கெட்ட பெயர் வந்துவிடுகிறது... நான் செய்த தீமைகளுக்குத் தண்டனை கிடைத்துவிட்டது. நான் செய்த பாபத்தையும் உணர்ந்து விட்டேன். அதற்கு பிராயச்சித்தம் செய்யவே இவ்வளவு காலம் முயன்று வந்தேன். அந்த வேளை இப்போது வந்துவிட்டது.''

''நீங்கள் என்ன சொல்லுகிறீர்கள்? மருத்துவர் அமைதியாக ஓய்வுடன் இருக்குமாறு கூறியிருக்கிறாரே...!''

''அமைதி - ஓய்வு - இனி அவை எனக்கெதற்கு? இதோ என் இதயத்தில் இதுவரை அடங்கியிருந்தவற்றைக் கூறப் போகிறேனே... அதைக் கூறிவிட்டால் நிரந்தர அமைதி ஏற்பட்டதுபோல் தான்...''

''நீங்கள் என்ன சொல்ல விரும்புகிறீர்களோ – யாரிடம் சொல்ல விரும்புகிறீர்களோ அவற்றை உடல்நிலை சரியான பிறகு கூறலாமே... எங்கள் குடிலில் இருக்கும் வரை வைத்தியர் கூறியபடி உங்களைப் பாதுகாப்பது என் பொறுப்பு. உடலுக்கு அதிர்ச்சி ஏற்பட்டு அதனால் தங்களுக்கு ஏதாவது நேர்ந்துவிட்டால் அந்தப் பாவம் என்னைச் சூழும்...''

''ஒரு நாளும் சூழாது. நான் யார் என்று சொன்ன பிறகு நீ கட்டாயம் என்னை வெறுக்கத்தான் போகிறாய். வெறுக்கத்தான் வேண்டும். மீண்டும் அந்த ஓநாய்களிடம் என்னை இழுத்துக் கொண்டு போட்டுவிடத்தான் வேண்டும்... சுந்தரி... என் கண்ணே...உன் தாய்க்குக் கொடுமை இழைத்த அந்தப் பொல்லாத பாபி நான்தான்...''

குமாரதேவர் இதைக் கூறும்போது சுந்தரியின் உடலில் ஆயிரம் கோடி மின்னல் தாக்கியது போன்ற அதிர்ச்சி ஏற்பட்டது. 'ஆ' என்று அவள் வாய்விட்டலறிவிட்டாள்.

குமாரதேவர் மேலே பேசிக் கொண்டே சென்றார்.

''நீ அதிர்ச்சி அடைவாய் என்று எனக்குத் தெரியும். உன் தாய் உன்னிடம் நானிழைத்த அநீதியைப் பற்றிக் கூறியிருப்பாள். உனக்கு வெஞ்சினம் ஏற்படுமாறு சொல்லியிருப்பாள். ஆடவரினத்தின் மீதே உனக்கு வெறுப்புக் கொள்ளச் செய்திருப்பாள். உன்னைப் பெற்றெடுத்து – அடாடா – உன்னை என்றா சொன்னேன் – உங்களை என்று தான் சொல்ல வேண்டும். யூகித்துணர்ந்து விட்டேன். காஞ்சி நகரத்துக் காஞ்சனாவும் நீயும் இரட்டைப் பிறவிகள் – உங்களைப் பெற்றெடுத்த போது நான் கண்டுகளிக்கக் கொடுத்துவைக்கவில்லை. ஆனால் சாவதற்குள் உங்களிருவரையும் பார்த்துவிட வேண்டும் என்று துடித்தேன். அது நிறைவேறிவிட்டது. சுந்தரி, காஞ்சியில் காஞ்சனா எனும் நாட்டியக் கணிகை இருக்கிறாள். அவள் உன் உடன் பிறந்தவள். நீங்கள் அனாதையாக எப்படி எப்படியோ முன்னேறி பல்லவ நாட்டிற்கு வந்துவிட்டீர்கள். இனி உங்களுக்குக் கவலை இல்லை. நான் அழைத்து வந்து ஆதரிக்க வேண்டிய காரியத்தை நீங்களே முயன்று செய்துவிட்டீர்கள். நீங்கள் நன்றாக வாழ வேண்டும். பல்லவ நாட்டுக் குதிரைப் படையின் தளபதியாக அதிகாரம் செலுத்திய மமதை எனக்கு நீங்கிவிட்டது. நான் கடைசியாக உன்னை வேண்டிக் கொள்வது ஒன்று உண்டு; அதை எனக்குச் செய்வாயா?''

குமாரதேவன் இவ்வாறு சொல்லி வரும்போதே சுந்தரியின் உடல் நடுங்கியது. உள்ளத்தில் ஒன்றுக்கு ஒன்று நேர்மாறான உணர்ச்சிகள் எழுந்தன. அவள் இதயத்தில் நொடியில் எங்கிருந்தோ பாச உணர்ச்சி சூழ்ந்து கொண்டது. அவர் தன் தந்தைதான். தாய் கூறிய அடையாளம் அவரிடம் இருக்கிறது. நெற்றியிலே வலது கண்ணுக்கு அருகே மச்சம் ஒன்று.

'நான் கடைசியாக உன்னை வேண்டிக் கொள்வது ஒன்று உண்டு... அதைச் செய்வாயா?' என்ற அவரது வேண்டுகோள் அவள் செவிகளில் ரீங்காரமிட்டு இதயத்துள் புகுந்து, ''அப்பா... என்ன செய்ய வேண்டும் சொல்லுங்கள், அப்பா....'' என்று ஒலிமிடச் செய்தது.

குமாரதேவர் வேண்ட இருந்தது அதுதானே! தன்னைத் தந்தையென்று அவள் அழைத்துவிட்டாளே அதுபோதுமே. அவர் இதயம் சாந்தியடைந்துவிடும். அவரது உயிர்ப் பறவை நிம்மதியாக இதயக் கூட்டினின்றுப் பறந்துச் சென்றுவிடுமே!

''அப்பா... அப்பா...'' என்று சுந்தரி குமாரதேவர் மார் மீது முகத்தைப் புதைத்து எழுப்பிய ஒலி வனவனாந்திரம் எங்கும் எதிரொலித்துத் திகைக்க வைத்தது.

**கா**ஞ்சனாவுக்கு இப்போது அமைதி என்பதே குறைந்து விட்டது. உடலில் சோர்வு மிக ஆனது. ஆடை அலங்காரங்களின் மேல் அவள் நாட்டம் செல்லவில்லை. எப்போதுமே பஞ்சணை மஞ்சத்தில் சாய்ந்து கொண்டு ஏதோ யோசனையில் ஆழ்ந்து விடுவாள். அவள் நினைத்தபடி ஏதுமே நடக்கவில்லை. பைரவன் அவளிடமிருந்து விரோதித்துக் கொண்டு சென்றுவிட்டான். தினமும் அவன் வருகையை அவள் எதிர்பார்த்தாள். ஆனால் அவன் வந்தாலோ தன் சீற்றம் முழுவதையும் கொட்டி அவன் மீது பாய்ந்துவிட எண்ணினாள். குதிரைப் படைத் தலைவர் குமாரதேவர் சுந்தரியை அழைத்து வருகிறேன் என்று கூறிச் சென்றவரைக் காணவில்லை.அவளுடன் இதுநாள் வரை கூடிக் குலாவிக் கொண்டிருந்த விஜயனையும் காணவில்லை.

நடு இரவிலே அவள் திடீரென விழித்துக் கொள்வாள். பிறகு உறக்கமே வராது. சாளரத்தின் வழியே வானத்து மதியைக் காண்பாள். அது கொஞ்சங் கொஞ்சமாக மேல் திசையில் இறங்கி மறைவதைப் பார்த்தவாறே இருப்பாள். உறக்கம் கலைந்த அன்பிற்பேடைகள் கூவும் கீதம் சோகமாக அவள் செவிகளில் விழும்.

அவளுக்குத் துணையாக அவள் மஞ்சத்தின் அருகே தரையில் தலையணையை அணைத்தவாறு கிடக்கும் பணிப்பெண்ணின் தோற்றத்தைக் காண்பாள். அவளைப் போன்று தானும் இருந்துவிடக் கூடாதா? கவலையின்றி உறங்கலாம் என்று எண்ணுவாள். எங்கோ சேமங்கலம் தட்டும் ஓசை கேட்கும். வைகறைப் புட்களின் மெல்லிய கீதம் கேட்கத் தொடங்கும். ஏகாம்பரர் ஆலயத்து உதய கால மணி ஓசை ஒலிப்பது கேட்கும். வைகறைக் காற்று மெல்லத் தவழ்ந்து வரும். அது இலேசான குளிரை ஊட்டும்.

சில நாட்கள் முன்பு இதே வேளையில் தன்னருகே இருந்த விஜயன் விழித்துக் கொண்டு தன் உறுதிவாய்ந்த கரங்களால் அவளை அணைத்துக் கொண்டு, குளிரின் வாடையே தெரியாமல் செய்த சம்பவம் நினைவுக்கு வந்தது. அவள் உடல் சிலிர்த்தது. போர்வையை எடுத்துப் போர்த்திக் கொண்டு எந்தவிதக் கவலையையும் மறப்பதற்காகக் கண்களை மூடிக் கொண்டாள். சில கணங்கள் அவள் மனக்கண் முன்பு ஏதேதோ தோன்றின. பிறகு அவள் அயர்ந்து உறங்கிவிட்டாள். விடிந்து வெகுநேரம் சென்று அவள் விழித்துக் கொண்டபோது அந்தக் கூடத்தின் வாயிலில் பணிப்பெண்கள் இருவர் பரபரப்புடன் பேசிக் கொண்டிருந்த செய்தி அவள் செவிகளில் வீழ்ந்தது.

குதிரைப் பண்டைத் தலைவர் குமாரதேவரின் சடலம் காஞ்சிக்கு எடுத்து வரப்படுவதைப் பற்றிக் கடைத்தெருவில் பேசிக் கொண்ட செய்தியை அவர்கள் விவாதித்துக் கொண்டு இருந்தனர்.

'என்ன குமாரதேவரின் சடலமா?' காஞ்சனா மஞ்சத்தினின்று துள்ளி எழுந்தாள். மேலாடை அணியவும் நினைவற்றவளாய் கலைந்திருந்த கேசத்தைச் சரி செய்ய முயலாதவளாய் வாயிற் கதவுக்கருகே விரைந்து, "என்னடி சொன்னீர்கள்? குமார தேவனின் சடலம் என்றா....? உளறுகிறீர்களா?" என்று கேட்டாள்.

பணிப்பெண்கள் திகைத்துப் பணிவுடன், "நிஜந்தானம்மா... குமாரதேவரைக் காட்டு மிருகங்கள் தாக்கிவிட்டனவாம். குற்றுயிரும் குலையுயிருமாய் இருந்தவரை ஒரு பெண் கண்டுபிடித்துக் காப்பாற்ற முயன்றாளாம்... முடியாமல் போய் விட்டதாம். இரதத்தில் உயிரற்ற சடலம் இங்கே கொண்டு வரப்படுகிறது. தக்க மரியாதைகளுடன் அது அடக்கம் செய்யப்படும்" என்றாள்.

காஞ்சனா ஏதும் பேச முடியாமல் திகைத்து நின்றாள். குமாரதேவர் இறந்துவிட்டார் என்று அவளால் நம்பவே முடியவில்லை. தனக்காக சுந்தரியைத்தேடிச் சென்றபோது உயிர் நீத்த அவரது தியாகம் அவள் நெஞ்சில் நிறைந்தது. கண்களில் துளிர்த்த நீரை மெல்ல துடைத்துக் கொண்டு, "நகரத்திற்குள் சடலம் எப்போது வருகிறது என்பதைப் பார்த்துக் கொண்டு உடனே வந்து சொல்லுங்கள்; நான் இறுதி மரியாதையைச் செலுத்த வேண்டும்" என்று காஞ்சனா கேட்டுக் கொண்டாள்.

தான் குமாரதேவரின் மகள் என்று அவளுக்குத் தெரியாது. ஆனாலும் ஏதோ ஒருவிதப் பாசம் அவள் உள்ளத்தில் புகுந்துச் செயல்படுத்தியது. மளமளவென்று வேறு உடைகளை மாற்றிக் கொண்டு கீழ்க் கூடத்திற்கு வந்து சேர்ந்தாள், பணிப்பெண்கள் செய்தி அறிந்து வரச் சென்றனர்.

காஞ்சனாவுக்கு மாளிகையில் இருப்புக் கொள்ளவில்லை. மெல்ல அவள் வெளியே வந்தாள். வெளி உலகத்தைக் கட்டுக் காவலின்றிக் காண வேண்டும் போல அவளுக்குத் தோன்றியது. திடீரென அவள் உள்ளத்திலிருந்து ஏதோ கழன்று நழுவிவிட்டது போன்ற உணர்வு. அதுதான் 'தான்' என்ற அகந்தை நிலை. காஞ்சனாவா – இப்படித் திடீரென்று வீதியில் வந்து நிற்கக் கூடியவள். பட்டுப்பாவாடை சிங்காரித்து வருவதற்கே பல நாழிகை நேரத்தை எடுத்துக் கொள்ளும் அவளா இப்படி எளிய

ஆடையுடன் செவ்வடி மண்ணில் பதிய நடந்து வருகிறாள்! பணிப்பெண்களும், வேலைக்காரர்களும் புடை சூழ எங்குமே சென்றறியாத காஞ்சனாவா தன்னந் தனியளாய் ஒருவருக்கும் கூறாமல் மாளிகையின் வெளி வாசலுக்கு வந்தாள். படிக்கட்டுகளில் இறங்கி, முன் தோட்டத்தைக் கடந்து வீதிக்கு வந்துவிட்டாள். அவள் மாளிகை இருக்குமிடம் குறுகிய சந்து. அந்தச் சந்து முனையில் அகன்ற ராஜவீதி. மாளிகையின் நிழல் படிந்து சந்து எப்போதும் இருண்ட தோற்றத்தையே தந்தவாறிருக்கும். அந்த நிழலோடு நிழலாகச் சென்று காஞ்சனா சந்து முனையில் நின்றாள்.

அப்போது யாரோ, ''அம்மா... அம்மா... சுந்தரியம்மா... வா...'' என்று கூவும் குரல் கேட்டது. காஞ்சனா திரும்பி நோக்கினாள். வீதியில் குதிரையின் மீது கூனனொருவன் அமர்ந்திருந்தான். அவன்தான் அவ்வாறு தன்னைப் பார்த்துக் கைகாட்டி அழைக்கிறான்.

''சுந்தரியாமே! சுந்தரி...' காஞ்சனா தனக்குள் சிரித்துக் கொண்டாள். ஆள் மாறாட்டம் எவ்வளவு தொலைவுக்குக் கொண்டு விடுமோ –

குதிரை வீரர்கள் நின்றனர். ''யாரையப்பா அவ்வாறு கூவி அழைக்கிறாய்?'' என்று வீரருள் ஒருவன் கேட்டான்.

குட்டிச் சித்தன் சுட்டிக்காட்டிய பக்கம் அவர்கள் நோக்கினர்.

''சிற்பியாரின் மகள்... அவர்களைத் தேடித்தான் நான் சென்று கொண்டிருந்தேன். நீங்கள் அதற்குள் என்னைப் பலவந்தமாகப் பிடித்து அழைத்து வந்துவிட்டீர்கள். அழைத்துப் போய் எங்கே வேண்டுமானாலும் அடையுங்களேன். எனக்கு என்ன ஆச்சு, நாளைக்கு இளவரசர் இடும் தண்டனையை ஏற்றுக் கொள்ளும் போது என்னைப் பரிதாபமாகப் பார்ப்பீர்கள்?'' என்றான் குட்டிச் சித்தன்.

வீரருள் ஒருவன் ஏளனமாகச் சிரித்து, ''அதைப்பற்றிப் பிறகு பார்த்துக் கொள்ளலாம்; அந்த மோகினி உனக்குத் தெரிந்தவளா?'' என்று கேட்டான்.

''ஆமாம்...''

''அன்று விருந்தினர் மண்டபத்தினின்று அவளையும் அழைத்துக் கொண்டுதானே தப்பி ஓடினாய்...''

''அவர்களை அழைத்துக் கொண்டு சென்றேன். ஆனால் தப்பி ஓடவில்லை.''

''ஓகோ... அப்படியா...சரி... மிகவும் நல்லதாகப் போய் விட்டது. நாம் தேடி வந்த அந்தப் பெண்ணும் கிடைத்துவிட்டாள். நீ அவளை அழைத்துக் கொண்டு வந்து சேரப்பா. நான் இந்தக் கூனனுடன் செல்கிறேன்'' என்று அந்த வீரன் மற்றவனிடம் கூறினான்.

குதிரையைக் காஞ்சனாவுக்கு அருகே கொண்டு நிறுத்தி, ''அம்மா! என்னுடன் சற்று நகரக் காவலர் விடுதி வரையில் வருகிறீர்களா?'' என்று கேட்டான்.

காஞ்சனாவிடம் அவ்வாறு துணிந்துப் பேச எவருக்கும் அதுவரையில் துணிவு வந்ததில்லை. காஞ்சனா அவனைச் சுட்டு எரித்து விடுவதுபோல் பார்த்தாள்.

வீரன் அவள் அழகில் சற்று நிலை குலைந்தாலும், தன் அதிகாரத்தை விட்டுக் கொடுக்காமல், 'உங்களைத்தானம்மா... சற்று என்னுடன் வருகிறீர்களா? நீங்கள் ஆண் பிள்ளையா யிருந்தால் குதிரை மீது ஏற்றிக் கொண்டு சென்றுவிடுவேன்... ஆனால்...'' என்று அவன் கூறிய மறுகணம் காஞ்சனாவின் கரம் நீண்டது 'பளீர்' என்று ஓர் அறை அவன் கன்னத்தில் வீழ்ந்தது.

வீரன் கன்னத்தை மெல்ல தடவிக் கொண்டான்.

''யாரைப் பார்த்துக் கேட்கிறாய்?'' என்று காஞ்சனா சீறினாள்.

வீரனுக்கு ஆக்ரோஷம் அதிகமாகியது. பெண்ணென்று பாராமல் அவன் தாவி காஞ்சனாவின் கரங்ளைப் பற்றி, ''பெண்ணென்று இதுவரை மரியாதைக் கொடுத்தேன். இப்போது அரசாங்க வீரனொருவனைத் தன் கடமையைச் செய்யாது தடுத்து அவமானப்படுத்திய மற்றொரு பெரும் குற்றத்தையும் செய்துவிட்டாய். மரியாதையாக வருகிறாயா அல்லது நடுவீதியில் பிறர் நகைக்க இழுத்துச் செல்லட்டுமா?'' என்று தாவி அவள் கரத்தை உறுதியாகப் பற்றினான்.

துணிவுள்ள துடுக்குக்காரிதான் காஞ்சனா. ஆனால், திடீரென ஏற்பட்ட இந்த நிலையினின்று அவளால் தப்ப இயலவில்லை. அவள் கூவினால் மாளிகையினின்று பலர் உதவிக்கு ஓடி வருவர். அந்த வீரனுக்குத் தன்னை அடையாளம் தெரியவில்லையா? அந்த நகரத்துப் பேரழகியான தன்னைக் கண்டு அவன் மயங்காது நிற்கிறானே, பெரும் வணிகர்களும் அரசாங்க அலுவலர்களும் தன் ஒரு சொல்லுக்கு ஏங்கி நிற்கும்போது இந்த வீரன் தன்னைக் குற்றவாளியாகக் கருதுகிறான். ஓ! நான் தக்க அலங்காரம் செய்யாது வந்துவிட்டேனோ? அழகு அணிகளையெல்லாம்

அணியவில்லையா? விழிகளுக்கு மயக்கும் மை தீட்ட வில்லையா? என் இதழ்களுக்குக் கொவ்வை நிறமளிக்க வில்லையா? – அதனால் தான் இந்தச் சிறு வீரன் அடையாளந் தெரியாது திகைக்கிறானோ? அவளுக்குப் பேச நா எழவில்லை. நெஞ்சு வறண்டது. ஏதோ ஆள் மாறாட்டம் என்று அவளுக்குத் தெரிந்துவிட்டது. ஆனால் அந்த வீரனின் பிடிவாதத்தினின்று தப்ப முடியாது என்று அவளுக்குத் தெரிந்துவிட்டது.

''என்னை யாரென்று எண்ணி நீ இப்படிப் பேசுகிறாய். அவமரியாதையாக நடந்து கொள்கிறாய்'' என்று துக்கம் நெஞ்சையடைக்கக் கேட்டாள்.

''எல்லாம் எனக்குத் தெரியும். நீ வந்து எங்கள் தலைவரிடம் பேசிக் கொள்.''

''வீணே பிறகு வருத்தப்படுவாய். தவறாக என்னை நீ எண்ணிவிட்டாய்...''

''நான் வருத்தப்படுவதும் நீ வருத்தப்படுவதும் பிறகு தெரிகிறது. என் குறி எப்போதும் தப்பாது; அந்தக் கூனனுக்கு வேண்டியவள் தானே நீ?''

''கூனனா? இந்தக் காஞ்சனா மன்மதன் போன்ற வடிவுடையவனைத் தவிர மற்றவரைத் திரும்பிப் பார்க்க மாட்டாளே... கூனனையும் முடவனையும் யார் கண்டது?''

காஞ்சனா என்று கூறியவுடன் வீரன் சற்றுத் திகைத்தான் என்றாலும் தன்னை ஒரு நிலைக்குக் கொண்டு வந்து, ''ஓகோ! பெயரைக் கூட மாற்றப் பார்க்கிறாயா? நொடியில் மயக்கப் பொடி போட்டு விடுவாய் போலிருக்கிறதே... நட தாயே... நட... தலைவரிடம் வந்து பேசிக் கொள்'' என்று கோபமும் கிண்டலும் ஒன்று சேரப் பேசினான்.

காஞ்சனாவால் அவன் கட்டளையை மீற முடியவில்லை. விதியை எண்ணி மனம் நொந்து காவல் வீரனைப் பின் தொடர்ந்தாள், முகத்தை மெல்ல மறைத்துக் கொண்டவளாய்.

●

# 23. வேடம் கலைந்தது

எழில் மாடத்துப் பஞ்சணையில் படுத்துப் புரளும் காஞ்சனாவை அந்த அரைகுறை ஒளி குறைந்த அறைக்குள் செல்லுமாறு காவலன் கட்டளையிட்டான். காஞ்சனாவுக்கு ஆத்திரமும், அழுகையும் சேர்ந்துப் பொங்கி வந்து நெஞ்சை அடைத்தன. எதிர்ப்பாராது நேர்ந்த இந்தச் சம்பவத்தால் அவள் மேனி கூனிக் குறுகிவிட்டது போன்ற பிரமை ஏற்பட்டது. காவலன் ஏதோ மகத்தான தவறு செய்கிறான் என்று அவள் தன்னைத்தானே சமாதானம் செய்து கொண்டாலும், அவன் நடத்தும் விதம் கொஞ்சங் கொஞ்சமாக மோசமடைந்து மரியாதைக் குறைவின் எல்லையையே அடைந்துவிட்டது.

"நீ இந்தச் செயலைத் தெரியாமலே செய்கிறாய் என்றுதான் தோன்றுகிறது. உனது பிழைக்காக நீ மிகவும் வருத்தப்படப் போகிறாய்'' என்று காஞ்சனா படபடப்புடன் கூறினாள்.

அவன் சிரித்தான். "நான் ஏன் வருத்தப்படப் போகிறேன்? என் கடமையைச் செய்து விட்டேன். கடமையைச் செய்பவர் என்றும் வருத்தப்பட்டதே கிடையாது.''

"கடமை என்று நீ ஆள் மாறாட்டத்துடன் பெரும் பிழை செய்கிறாய் தெரியுமா?'' - காஞ்சனாவின் குரலில் அழுகை கலந்து வந்தது. அவளுக்கு அழ வேண்டிய சந்தர்ப்பமே இப்போதுதான் ஏற்பட்டது. நேற்று முன்தினமெல்லாம் மகிழ்ச்சியின் உச்சத்திலிருந்தாள். இப்பொழுது துயரத்தின் அடித்தளத்துக்கே போகும்படியாகி விடுமோ?

"இதோ பார் பெண்ணே, என்னை மீண்டும் நீ ஏமாற்ற முடியாது. விருந்தினர் மண்டபத்தினின்று தப்பி இப்போது ஆள் மாறாட்டம் என்று கூறி மீண்டும் தப்பலாம் என எண்ணுகிறாயா?'' என்று வெந்தப் புண்ணில் வேல் கொண்டு குத்துவதுபோல் பேசினான் காவல் வீரன்.

"விருந்தினர் மண்டபமா? நான் தப்பி ஓடினேனா? ஏ அல்பமே! என் மாளிகையை நீ பார்த்திருக்கிறாயா? அந்த

மாளிகையின் குதிரை லாயத்துக்குக்கூட ஈடாகாது உங்கள் விருந்தினர் மண்டபம். அங்கு நான் ஏன் வருகிறேன்? எதற்கு நழுவி ஓடப்போகிறேன்!''

''உங்களுடன் பேசிக் கொண்டிருக்க எனக்குப் போதில்லையம்மா. என்மேல் ஏற்பட்ட பழியை நான் தீர்த்துக் கொண்டு விட்டேன். தப்பி ஓடிய உங்களையும் கூனனையும் மீண்டும் கொண்டு சேர்க்காவிட்டால் என் வேலை பறிபோயிருக்கும். குழந்தைக் குட்டிக்காரன்; வேலை இழந்து நான் என்ன செய்வேன்...? கூனனும் அகப்பட்டுவிட்டான். இனி தலைவர் பார்த்துக் கொள்வார்'' என்று கூறி அங்கிருந்துச் சென்றுவிட்டான், அக்காவலன். காஞ்சனா இருந்த கூடத்து வெளிக்கதவு சாத்தப்பட்டுத் தாளிடப்படும் ஓசை காஞ்சனாவின் இதயத்தைப் படீரென அடித்தது.

சிறிது நேரத்திற்கெல்லாம் அந்த வீரன் சொல்லிச் சென்ற கூனனும் அதே கூடத்திற்குக் கொண்டுவிடப்பட்டான். கதவு மீண்டும் சாத்தப்பட்டது. கதவு தாழ்ப்பாள் போடும் ஓசை கேட்டவுடன் கூனன் விரைந்து ஓடி கதவை மளமளவென்று தட்டி, ''கதவை ஏன் மூடுகிறீர்கள்? திறவுங்கள் திறவுங்கள்'' என்று கூவினான். கதவைப் பலங்கொண்ட மட்டும் தட்டினான்.

''கதவை யார் திறக்கப் போகிறார்கள்? உடைந்துதான் போகும்'' என்று காஞ்சனா மெல்லிய குரலில் கூறினாள்.

கூனன் குரல் வந்த திசை நோக்கித் திரும்பினான். மங்கிய வெளிச்சத்தில் குட்டிச் சித்தனுக்கு அந்தக் குரல் கொடுத்தவர்கள் யார் என்று தெளிவாகக் கேட்கவில்லை. கூர்ந்து நோக்கியவாறு குட்டிச் சித்தன் குரல் வந்த பக்கமாக வந்தான்.

காஞ்சனாவின் துயரம் இப்போது பொங்கிப் பீறிட்டது. விம்மல் ஒலியாக அது பொங்கிவந்தது. குட்டிச் சித்தன் காஞ்சனாவின் மிக அருகில் வந்துவிட்டான். யார் என அவனால் அடையாளங் கண்டுகொள்ள முடியவில்லை.

''யார் அது? ஏன் அழுகிறீர்கள்?'' என்று குட்டிச் சித்தன் கேட்டான். அவனுக்கு ஒன்றுமே புரியவில்லை. சுந்தரியாக இருக்குமோ - அவளைத்தானே நாம் ராஜ வீதியின் சந்துமுனையில் பார்த்தோம். வீரர்கள் அழைத்து வந்திருப்பார்கள்.

''சுந்தரியா, ஏனம்மா அழுகிறாய்? மீண்டும் புறப்பட்ட இடத்துக்கே வந்துவிட்டோம்'' என்று குட்டிச் சித்தன் சிரித்தவாறு கூறினான்.

காஞ்சனாவுக்கு இப்போது அழுகையுடன் ஆத்திரமே நேர்ந்தது. "நீதான் கூனன், குள்ளன் என்றால் உன் புத்தியுமா இப்படியிருக்க வேண்டும். நான் சுந்தரியுமில்லை மந்திரியுமில்லை. நீ என்னை அப்படி அழைத்ததால் தானே என்னைத் தவறாக இந்தக் காராக்கிருஹத்தில் அடைத்திருக்கிறார்கள்..." என்று சீறினாள்.

குட்டிச் சித்தன் ஒருகணம் யோசித்தான். சுந்தரியின் குரலில்லைதான்... ஆனால், நான் எப்படித் தவறாக நினைத்து விட்டேன். தனக்கேயுரிய இயற்கையான ஒரு ஹூங்காரமிட்டு, "நீங்கள் சுந்தரியோ இல்லையோ, இந்த இருட்டில் ஒன்றுமே தெரியவில்லை. ஒரு விளக்குக்கூட மண்டபத்திலில்லை. கதவை உடைத்துக் கொண்டு போய் நான் விளக்கைக் கொண்டு வருகிறேன்" என்றான் குட்டிச் சித்தன்.

காஞ்சனாவுக்குத் திடீரென்று சிரிப்பு வந்தது. விளக்குக் கொண்டுவரக் கதவை உடைத்துச் செல்பவன் தப்பி ஓடிவிடக் கூடாதா?

"ஏன் சிரிக்கிறீர்கள் – சற்றுமுன் அழுதீர்களே?"

"உன் செய்கை எனக்குச் சிரிப்பைத்தான் அளிக்கிறது. கதவை உடைத்துக் கொண்டுபோய் விளக்கைக் கொண்டு வரப்போகிறாயா அல்லது அப்படியே ஓடிப்போய் விடப் போகிறாயா? அதை நினைத்துத்தான் சிரித்தேன்."

"ஓடிப்போவதா? எதற்காக ஓட வேண்டும்? அன்று ஓடிப்போய்தான் தவறு செய்துவிட்டேன். இல்லாவிடின் இளவரசரைச் சந்தித்திருப்பேன். இளவரசர் நாளைக்கு இங்கு வருவார். என்னைக் காண்பதாகச் சொல்லியிருக்கிறார். அப்படியிருக்கும்போது நான் ஓடிப்போகலாமா?" என்றான் குட்டிச் சித்தன்.

காஞ்சனா திகைத்தாள். நவரச உணர்ச்சிகளும் நொடிப் பொழுதில் மாறி மாறித் தனக்குத் தோன்றுவது கண்டு அவளுக்கே வியப்பாயிருந்தது. இளவரசர் இந்தக் கூனனைக் காண வரப் போகிறாரா - இந்தக் காராக்கிருஹத்திற்கா -? அவள் வியக்காமல் என்ன செய்வாள்?

"இளவரசரா வருகிறார்? இந்தக் காராக்கிருஹத்திற்கா?" காஞ்சனா மீண்டும் கலகலவென நகைத்தாள்.

"காராக்கிருஹமா? இதுவா? இது நாவுக்கரசர் மடமல்லவா?"

காஞ்சனாவால் சிரிக்காமல் இருக்க முடியவில்லை. குட்டிச் சித்தனை அறியாதவன் என்றோ அறிந்தவன் என்றோ சொல்ல முடியவில்லை. இளவரசரைத் தெரியுமென்கிறான் - நாவுக்கரசர் மடம் என்கிறான்!

குட்டிச் சித்தனுக்கு அந்தச் சிரிப்பு துளிக் கூடப் பிடிக்க வில்லை. அவன் ஏதும் பேசாமல் கதவருகே சென்று தன் முதுகை அதன் குமிழில் கொடுத்து ஒரு தூக்குத் தூக்கினான். கதவு கழன்றுவிட்டது. அதை எடுத்துச் சந்தடியின்றி சுவரின் மீது சாத்திவிட்டு வேகமாக எங்கோ சென்றான். வரும்போது கையில் அகல் விளக்குடன் வந்தான். அது அந்த மண்டபத்து வெளிமாடப் பிறையில் இருந்ததுபோலும்.

விளக்கு வெளிச்சம் அந்த அறையில் பரவியதால் ஏற்பட்ட ஒளியில் குட்டிச் சித்தன் காஞ்சனாவை ஒரு முறை ஏற இறங்கப் பார்த்தான். சுந்தரியும் காஞ்சனாவும் ஒரே தோற்றமுடையவர் களாகத் தானிருக்கிறார்கள். ஆனால் விழிப்பார்வையில் அவன் வித்தியாசங் கண்டு விட்டான். சுந்தரியின் விழிகளில் கலைத் தாகம். காஞ்சனாவின் விழிகளில் காமத் தாகம்.

குட்டிச் சித்தன் ஏதும் பேசாமல் அறை வாயில் வரையில் சென்றான். திரும்பி வந்து, ''நீங்கள் இங்கேயே படுத்துக் கொள்ளுங்கள். நான் வெளித்தாழ்வாரத்தில் படுத்துக் கொள்கிறேன். இளவரசர் வந்தால் நான் தனியே பேச வேண்டியிருக்கிறது'' என்று கூறிவிட்டு மறுமொழிக்குக் கூடக் காத்திராமல் போய்விட்டான். சற்று நேரத்திற்கெல்லாம் அவன் குறட்டை விடும் ஒலி கேட்டது.

அகல் விளக்கு காற்றில் அலை பாய்ந்தது. காஞ்சனாவின் உள்ளமும் அப்படியே ஒன்றும் புரியாமல் வேதனையால் துடித்தது. தனக்கு நேர்ந்த இந்த விசித்திர நிகழ்ச்சியை நினைக்க நினைக்க அவளுக்கு ஆத்திரமும், வேதனையும்; அழுகையும் சிரிப்புமாக வந்தன. யாரோ மெல்ல நடந்து வரும் அரவமெழுந்தது. 'யார் வருகிறார்கள்?' என்று காஞ்சனா உற்றுக் கவனித்தாள். சட்டென சுடர் விளக்கு வீசிய காற்றில் அணைந்தது. குட்டிச் சித்தன் கூறியது போன்று இளவரசர் வருகிறாரோ? வரட்டும் வரட்டும் இளவரசர்! அவர் வந்தால் கேட்போம், அவருடைய நாட்டின் காவலர் நிலையை. ஆள் மாறாட்டத்தால் தொல்லைப்பட வைக்கும் அவர்கள் போக்குக் குறித்துக் குற்றம் சாட்டுவோம்...

மெல்ல நடந்து வந்த அந்த உருவம் காஞ்சனாவை நோக்கி அடி மேல் அடி வைத்து நெருங்கியது. காஞ்சனாவின் மிக

அருகே வந்தவுடன் காஞ்சனா துள்ளி எழுந்து 'யாரது?' எனக் கூவினாள். அவளிடமிருந்து அடுத்த வார்த்தை வெளிவரும் முன்பே அந்த முரட்டுக் கரம் அவள் வாயைப் பொத்தியது.

'உஸ்... என்னைத் தெரியவில்லையா?' என்ற குரல் அவ்வுருவத்திடமிருந்து வரும் முன்பே காஞ்சனா புரிந்து கொண்டாள் – அந்தக் கரத்தின் ஸ்பரிசத்தினின்று அவள் தெரிந்து கொண்டாள் – அவள் மனத்தைக் கவர்ந்திருந்தவன்தான்.

சாளுக்கிய இளவரசன் விநயாதித்தன் காஞ்சனாவின் கரத்தை மளமளவென்று பற்றி இழுத்துக் கொண்டு வெளியே சென்றான்.

''எங்கே என்னை அழைத்துச் செல்கிறீர்கள்?''

''உஸ்... மூச்சுவிடாதே, நாம் உடனே வெளியேறிவிட வேண்டும்...''

''எங்கே...''

''அதெல்லாம் பிறகு சொல்கிறேன். காஞ்சியில் நாமிருந்தால் ஆபத்து.''

''உங்களுக்கென்ன ஆபத்து?''

''பிறகு சொல்கிறேன். இந்த மாளிகைக்கு வெளியே பல்லக்கு ஆயத்தமாக இருக்கிறது. அதிலே ஏறிக்கொள். நான் பின் தொடர்ந்து வருகிறேன்.''

''என் மாளிகைக்குத்தானே...''

''இல்லை... இல்லை... பிறகு நான் சொல்கிறேன். சீக்கிரமாக வா. அமைதியாகப் பேசிக் கொள்வோம்.''

விநயாதித்தனின் கரங்கள் காஞ்சனாவை வலிய அணைத்து இழுத்துச் சென்றன. அவள் உடலில் இளஞ்சூடு பரவி நின்றது.

பல்லக்கில் அவள் ஏறி அமர்ந்தவுடன் அதைச் சுமப்பவர்கள் யாதொரு ஓசையும் எழுப்பாமல் சுமந்துச் சென்றனர். பல்லக்கு வடக்குக் கோட்டை வாயிலருகே சென்றது. காஞ்சனாவுக்கு எதுவுமே விளங்கவில்லை. தாம் எங்கே செல்கிறோம்; என்ன நேரப்போகிறது என்று புரியாது அவள் திகைத்தாள்.

அங்கே இருந்த பூந்தோட்டத்தருகே பல்லக்கு சொல்லி வைத்தாற்போல் நின்றது. விநயாதித்தனும் குதிரையை மரமொன்றின் மறைவில் கட்டிவிட்டுப் பல்லக்கருகே விரைந்து, காஞ்சனாவைக் கைலாகுக் கொடுத்து இறக்கினான். பிறகு அவள் கரத்தைப் பிடித்து மளமளவென அழைத்துக் கொண்டு

நந்தவனத்திற்குள் நுழைந்தான். காஞ்சனா திரும்பினாள். பல்லக்கும் திரும்பிச் செல்வது தெரிந்தது.

நந்தவனத்தின் நடுவே இருக்கும் காபாலிகனின் மடத்துக்கு விநயாதித்தன் காஞ்சனாவை அழைத்துச் சென்றான். கதவு திறந்திருந்தது. உள்ளே பெரும் காளிச்சிலை அருகே 'மினுக் மினுக்'கென்று விளக்கொன்று எரிந்து கொண்டிருந்தது. அங்கே யாரோ மல்லாந்து படுத்துக் குறட்டை விட்டு உறங்கிக் கொண்டிருந்தார்.

சந்தடியின்றி மெதுவாகக் காஞ்சனாவை அழைத்துக் கொண்டு அங்கிருந்த சுரங்கப்பாதை வழியே இறங்கினான் விநயாதித்தன். ஒருவர் பின் ஒருவராகச் செல்வதற்கு மட்டுமே இடைவெளி யிருந்த அந்தப் பாதை கோட்டை வாயிலுக்கருகே செல்வதை விநயாதித்தன் அறிந்து வைத்திருந்தான். கோட்டைக்கு வெளியே கும்மிருட்டு.

''நாம் இப்போது எங்கே வந்திருக்கிறோம். இனியாவது பேசலாமா? இந்தக் காட்டு வெளியில் நாம் பேசுவதை உற்றுக் கேட்பதற்கு வேறு யாராவது இருப்பார்களா?'' என்று காஞ்சனா கேட்டாள்.

''எங்கும் இருப்பார்கள். நான் செய்யும் ஒவ்வொரு நடவடிக்கையையும் கவனிக்க ஏராளமான ஒற்றர்கள் இருப்பார்கள்'' என்றான் விநயாதித்தன்.

''விஜயா! உங்கள் நடவடிக்கையை ஒற்றர் ஏன் கவனிக்க வேண்டும்?'' என்று கேட்டாள் காஞ்சனா. விநயாதித்தன் 'கடகட'வென்று சிரித்தான்.

''ஏன் என்றா கேட்கிறாய்?'' எந்தப் புத்திசாலித்தனமான அரசாங்கமும் விரோதியைக் கண்காணிக்காது இருக்குமா?''

''நீங்கள் விரோதியா – இளவரசர் உங்களுடைய நண்பரல்லவா?'' காஞ்சனா இவ்வாறு கேட்டதற்கு விநயாதித்தன் பெரிதாக மீண்டும் நகைத்து, ''காஞ்சனா இதுவரையில் உன்னிடம் சொல்லாமல் இருந்துவிட்டேன். என்னை நீ விஜயன் என்று தவறாக எண்ணிவிட்டாய். விஜயன் - இளவரசரின் நண்பன். நான் அவரது விரோதி. இந்த நாட்டுக்கே விரோதி. பழிவாங்கும் மனப்பான்மையுடையவன். அதனால் நீ என்னை உதறித்தள்ளி விட மாட்டாய் என்று எனக்குத் தெரியும். ஏனெனில் உனக்கும் அந்தவித எண்ணம்தானே உள்ளத்திலிருக்கிறது....''

காஞ்சனா சீறினாள். ''நிறுத்துங்கள். பழியோ... பாவமோ, என்னை ஏன் இங்கு அழைத்து வந்தீர்கள்? இந்தக் காட்டு வழியே எங்கே அழைத்துச் செல்லப் போகிறீர்கள்?''

''ஏன் பயமாயிருக்கிறதா?''

''எனக்கென்ன பயம்! இதுபோன்று ஆயிரம் காடுகளில் சுற்றி அலைவேன். ஆனால், காரண - காரியமின்றி இப்படி எதற்காக அலைய வேண்டும்?''


''உன்னைக் காப்பாற்றி அழைத்து வந்தேன்...''

''என்னைக் காப்பாற்றினீர்களா?''

''ஆமாம்; அந்த மண்டபத்தில் நீ இருந்திருந்தால் உனக்கு என்ன தண்டனை கிடைத்திருக்கும் தெரியுமா? மரண தண்டனை. விரோதிக்கு, அதிலும் சாளுக்கிய இளவரசனுக்குப் புகலிடம் அளித்து அவனுடன் தொடர்பு கொண்டிருந்ததற்காக அந்த தண்டனை – அதிலிருந்து உன்னைத் தப்பிக்க வைத்தேன். உன் மீது எனக்கு உண்மையிலேயே ஏற்பட்ட காதலால், காஞ்சியின் ராணியாக உன்னை அமர்த்த வேண்டும் எனும் தாபத்தால்...''

விநயாதித்தன் கூறிக் கொண்டே போகும்போது காஞ்சனாவின் எண்ணங்கள் எங்கெங்கோ சுழன்றன. பைரவன் எச்சரித்தது அவள் நினைவுக்கு வந்தது.

●



# 24. இரண்டு ஓலைகள்

குட்டிச் சித்தன் குறட்டை விட்டுக் கொண்டு தூங்கினான் குறட்டை இல்லாத சமயங்களில் அவன் வாய் ஏதோ முணுமுணுத்தது. உடல் தூக்கிப் போட்டது. அவன் ஏதோ கனவு கண்டு கொண்டிருக்கிறான் என்பதை அவன் உதட்டசைவு புலப்படுத்தியது. அவன் கனவிலே யார் யாரோ உருவம் புலனாகாதவர்கள் வந்தார்கள். அவனுடன் சண்டையிட்டார்கள். ஏவினார்கள். அவன் கரத்தைப் பிடித்து முறுக்கினார்கள். அவன் காலைப் பிடித்துத் தரதரவென்று இழுத்தார்கள். அவனால் அவற்றையெல்லாம் சகித்துக் கொள்ள முடியும். ஆனால், சுந்தரியை அவர்கள் நெருங்கித் துன்புறுத்த முற்பட்டபோது தான் அவனால் சும்மாயிருக்க முடியவில்லை.

''டேய், அவங்களைத் தொட்டால் கொன்றுவிடுவேன்'' என்று தன் தொண்டை கிழியக் கத்தினான். தன்னைப் பிடித்திருப்பவர்களிடமிருந்து விடுபடுவதற்காகத் தன் பலங் கொண்ட மட்டும் கையையும் காலையும் உதைத்துக் கொண்டான்.

அப்பா – என்ன பலமான தாக்குதல்! அவன் கையும் காலும் சுவரில் மோதின. வலி தாங்காமல் அலறிப் புடைத்துக் கொண்டு எழுந்தான் குட்டிச் சித்தன்.

⁂ ⁂ ⁂

பொழுது விடிந்திருந்தது. மெல்லிய ஒளி அவன் படுத்திருந்த இடத்து இருளை ஓட்டிவிட்டது. இலேசாகக் குளிர் நடுங்கியது. கீழ்த்திசையில் பளிச்செனு ஒரு நட்சத்திரமும் தெரிந்தது. குப்பென்று அருகேயிருந்த செடிகளில் பூத்த மலர்களினின்று வாசனை வீசியது.

குட்டிச் சித்தன் கண்களைக் கசக்கிக் கொண்டு ஒரு முறை சுற்றுமுற்றும் பார்த்தான். முதல் நாள் நடந்தவை மெல்ல அவன் நினைவுக்கு வந்தன. அப்படியானால் சற்று முன் கண்டது கனவுதானே; சுந்தரியை யாரும் பிடித்துக் கொண்டு போயிருக்க மாட்டார்கள். தன்னையும் யாரும் கட்டிப்போடவில்லையே.

''என்னப்பா ரொம்பவும் பயங்கரக் கனவோ?'' என்று கூறி இடிஇடியென்று சிரித்தவாறு அந்த மாளிகைக் காவல்காரன் அவன் எதிரே நின்று கொண்டிருந்தான்.

குட்டிச் சித்தன் அவனை விழுங்கி விடுபவன் போல் ஒரு முறை பார்த்தான். பிறகு அறைப் பக்கம் மெல்லத் திரும்பினான்.

''ஏனப்பா இப்படித் தாழ்வாரத்தில் குளிரில் படுத்து விட்டாய்...? அந்த அறையில் படுத்திருக்கலாமே... சின்னப் பொண்ணு பயத்தால் இரவெல்லாம் தூங்கியிருக்காது... ஹூம்...'' என்று மெல்லச் சிரித்தவாறு பேசினான் காவல்காரன்.

குட்டிச் சித்தன் அந்த அறையை எட்டிப் பார்த்து விட்டு, ''ஏனப்பா அந்த அம்மா எங்கே? அவர்களை வேறு எங்காவது அழைத்துப் போயிட்டிங்களா?'' என்று கேட்டான்.

குட்டிச் சித்தன் கேட்டவுடன் தான் காவலனுக்குத் தூக்கிப் போட்டது. அவன் பரபரப்புடன் அந்த அறைக்குள் நுழைந்துச் சுற்றுமுற்றும் தேடினான், திகைத்தான். அறையின் கதவு கழற்றிச் சுவரில் சாத்தி வைக்கப்பட்டிருந்தது.

காவல் வீரனுக்கு நடுக்கம் கண்டுவிட்டது. மீண்டும் அந்தப் பெண் தப்பி ஓடிவிட்டாளே என்று நினைக்கும்போது அவனுக்கு அவமானமாக இருந்தது.

அவனுடைய குழப்பத்தையும் நடுக்கத்தையும் கண்ட குட்டிச் சித்தன். ''நான் தப்பி ஓட வேண்டிய அவசியம் இல்லை... அந்தப் பெண்ணும் தப்பி ஓடியிருக்க மாட்டாள்'' என்றான்.

''தப்பி ஓடவில்லை யென்றால் அவளைக் காண வில்லையே... அவள் தப்புவதற்கு நீ உதவியிருப்பாய்...'' என்று அவன் கூறவும் குட்டிச் சித்தனுக்கு உண்மையில் கோபம் பிறந்தது. அவன் முஷ்டியை தூக்கிக்கொண்டு ''என்ன சொன்னாய்?'' என்று அவனருகே ஓடினான்.

அந்தச் சமயத்தில் மற்றும் சில காவல்காரர்கள் அங்கே வந்திராவிடில் குட்டிச் சித்தனுடைய தாக்குதலுக்குக் காவல் வீரன் ஆளாகியிருப்பான்.

''உன் பெயர்தானே குட்டிச் சித்தன்'' என்று வந்தவர்களில் ஒருவன் கேட்டான்.

ஆமாம் என்பதற்குத் தலையை அசைத்தான். இன்னும் என்ன ஆபத்து காத்திருக்கிறதோ என்று கவலையுடன் எதிர்பார்த்த குட்டிச்சித்தனை நோக்கி அவர்களுள் மற்றொருவன், ''உன்னை எங்கெல்லாம் தேடுவது? நாவுக்கரசர் மடத்தில் தங்கியிருப்பதாக இளவரசரிடம் சொல்லிவிட்டு வந்தாயாமே...'' என்றான்.

குட்டிச் சித்தன் அவர்களை அலட்சியமாகப் பார்த்து ''ஆமாம், சொல்லி விட்டு வந்தேன். என்னை அப்படிச் செய்யவிட் வில்லையே. நான் சொல்வதைக் கேட்டுக் கொள்ளாமலேயே

என்னை இங்கே அழைத்து வந்துவிட்டார்கள். நாவுக்கரசர் மடத்திலென்றால் இரவு எனக்கு உபசாரத்திற்குக் குறைவே இருந்திருக்காது. இங்கே பட்டினிப் பசியுடன் கிடந்தேன். தூக்கம் சரிவர வரவில்லை. பயங்கரக் கனவு. உங்களைப் போன்று சிலர் வருகிறார்கள். அவர்களை நான் எப்படித் தாக்கினேன் தெரியுமா'' என்று கைகளை ஆட்டிக் காட்டினான்.

காவல்காரன் குட்டிச் சித்தனைச் சமாதானம் செய்து, ''போனது போகட்டும்; எப்படியோ தவறு நேர்ந்துவிட்டது; இளவரசர் உனக்காகக் காத்திருக்கிறார். உடனே எங்களுடன் வா'' என்றழைத்தனர்.

ஃ ஃ ஃ

குட்டிச் சித்தன் இராஜசிம்மன் எதிரே பயபக்தியுடன் கைகளைக் கட்டிக் கொண்டு நின்றான். சிற்பியைக் கண்டுபிடிக்க வேண்டும் எனும் துடிப்பு அவனிடமிருந்தது. அதைத்தான் அவர் சொல்லப் போகிறார் என்று எண்ணினான். ஆனால் இளவரசர் கூறியவையோ அவனுக்கு ஆச்சரியத்தை அளித்தன.

இளவரசர் குட்டிச் சித்தனிடம் இரண்டு ஓலைகளைக் கொடுத்தார். ஒன்று விஜயனுக்கு, மற்றொன்று சுந்தரிக்கு.

விஜயனை உடனே புறப்பட்டு பனைமலைக்குச் செல்லுமாறு அதில் கட்டளையிட்டிருந்தார்.

சுந்தரியை உடனே காஞ்சிக்கு வருமாறு கேட்டுக் கொண்டிருந்தார். ஓலையிலிருப்பது குட்டிச் சித்தனுக்குத் தெரியாது. மாமல்லபுரத்திற்குச் செல்ல வேண்டும் என்று அவர் கூறியவுடனே குட்டிச் சித்தன் கேட்டான்: ''சிற்பி ஐயாவைத் தேடிச் செல்ல வேண்டுமா?'' என்று.

இளவரசர் மெல்ல நகைத்தார். ''ஆமாம், ஆமாம். அந்த வேலையையும் நீதான் செய்ய வேண்டும். விஜயனிடம் இந்த ஓலையைக் கொடுத்துவிட்டு நீ அவரைத் தேடிப் புறப்பட்டுவிடு'' என்றார்.

இளவரசரை எதிர்த்துப் பேசமுடியுமா? குட்டிச் சித்தன் இளவரசரின் ஓலையை எடுத்துக் கொண்டு மாமல்லபுரம் நோக்கிப் புறப்பட்டான். புறப்படும் போது அவனுக்கு விருந்தினர் மண்டபத்து நிகழ்ச்சியைத் தெரிவிக்க வேண்டும் என்பது நினைவுக்கு வந்தது. சுந்தரியைப் போன்ற தோற்றமுடைய பெண் ஒருத்தியைக் காவலர்கள் விருந்தினர் மண்டபத்திற்குள் அழைத்து வந்ததும், காலையில் கண் விழித்தவுடன் அவள் காணாமல் போய்விட்டதும் இளவரசருக்குத் தெரிவிக்க வேண்டும் என அவனுக்குத் தோன்றியது.

அதை அவரிடம் கூறி முடிப்பதற்குள் அவனுக்குப் பாதி உயிர் போய்விட்டதெனலாம். இளவரசர் புன்முறுவலுடன், "எனக்குத் தெரியும் குட்டிச் சித்தா! நான் அதைக் கவனித்துக் கொள்கிறேன். நீ வழியில் வேறு எங்கும் தடம் மாறாது சென்று விஜயனையும், சுந்தரியையும் இங்கே வருமாறு கூறிவிடு. நீ மாமல்லபுரத்துச் சிற்பியின் குடிலிலேயே தங்கிவிடு" என்றார்.

"சிற்பி ஐயாவைக் கண்டுபிடிக்க வேண்டாமா?' என்று குட்டிச் சித்தன் கேட்டான்.

"ஆமாம், ஆமாம். அவரைக் கண்டுபிடிப்பதற்கு நாலா திசையும் ஒற்றர்கள் சென்றிருக்கிறார்கள். நீ அவருடைய குடிலிலுள்ள சுவடிகளைச் சர்வ ஜாக்கிரதையாகப் பாதுகாத்து வரவேண்டும் தெரிந்ததா? யுத்தம் வந்தாலும் வரலாம்; அப்போது அவை எதிரியின் கரங்களில் சிக்காமல் நீ பார்த்துக் கொள்வது மிக அவசியம்" என்றார்.

குட்டிச் சித்தன் திகைத்தான். "யுத்தம்?" என்று அவன் மெல்லக் கூறிக் கொண்டான்.

"ஆமாம்... ஆமாம் பெரிய யுத்தமொன்று வரப்போகிறது" என்றார் இராஜசிம்மன்.

குட்டிச் சித்தனுக்கு ஒன்றும் விளங்கவில்லை. அதைக் கண்டு கொண்ட இளவரசர், "குட்டிச் சித்தா! நம் நாட்டில் ஏராளமான விரோதிகள் மாறுவேடத்தில் உலவி வருகிறார்கள். சிற்பி ஐயாவை அபகரித்துக் கொண்டு சென்றது யார் என்று நினைக்கிறாய்? இந்த நாட்டின் கலை வளர்ச்சி மீது பொறாமை கொண்ட சாளுக்கிய நாட்டு ஒற்றர்கள் செய்த வேலை அது. சிற்பியைக் கண்டு பிடிப்பதன் மூலம் எதிரிகளின் திட்டத்தையே நசுக்கி விட வேண்டும்" என்றார் இளவரசர்.

குட்டிச் சித்தன் கைவிரல்களை மடக்கி எதிரிகளை நசுக்கிவிடுவது போன்று பற்களைக் கடித்தான். 'இளவரசர் சிரித்துக் கொண்டே, "சுந்தரியையும், விஜயனையும் ஏன் உடனே காஞ்சிக்கு வரச் சொல்கிறேன் தெரியுமா? மாமல்ல புரத்தில் இருந்தால் அவர்களுக்கும் ஏதாவது ஆபத்து நேரிடும் என்பதற்காகத்தான். நீ உடனே விரைந்துச் செல்ல வேண்டும் தெரியுமா?" என்றார்.

குட்டிச் சித்தன் தலையைப் பலமாக ஆட்டினான். "அம்பைப் போல் நேரே அங்குதான் செல்வேன்" என்று கூறி அங்கிருந்து விரைந்தான்.

●

# 25. காட்டு வழியில் காஞ்சனா

விநயாதித்தன் காஞ்சனாவை அழைத்துக் கொண்டு காட்டுப் பாதைக்கு வந்துவிட்டான். மங்கிய நிலவொளியில் அவன் மிகவும் பழக்கப்பட்டவன் போல் நடந்துச் சென்றான். காஞ்சனாவுக்கு ஒவ்வொரு கணமும் பீதி அதிகரித்தது. எங்கே அழைத்துச் செல்கிறான் எனும் கவலை வேறு ஏற்பட்டது. தான் விஜயன் அல்லனென்றும் பல்லவ நாட்டு விரோதி என்றும் விநயாதித்தன் கூறியது அவளுக்குப் பெரும் ஏமாற்றத்தை அளிக்காவிடினும், பைரவன் கூறியவற்றின் உண்மை புலப் பட்டது; பைரவனை அலட்சியப்படுத்தியது நினைவிற்கு வந்தது.

''ஐயோ, விஜயன் என்று எண்ணித் தவறாக நம்பிக் கூடிக் குலாவினோமே... இன்பப் படகில் மிதந்தோமே... என்று எண்ணும்போது அவளுக்கு வெட்கமும் வேதனையும் சேர்ந்தன. எவரையும் மதிக்காது, எவருக்கும் வணங்காது வாழ்ந்த தன் நிலை ஒரு கணத்தில் இப்படியாகிவிட்டதே என்பதை நினைக்கும்போது அவள் குன்றிப்போனாள். யாரிடம் தன் வேதனையை இப்போது சொல்ல முடியும்? யாரிடம் தனக்கு நேர்ந்த கஷ்டங்களைக் கூறி அழ முடியும்? வேண்டிய ஒருவனை – பைரவன் அவனையும் அலட்சியப்படுத்தி விட்டோம்.

காஞ்சனாவின் காலில் முள் ஒன்று தைத்தது. அந்த வலியால் 'ஹா' என்று கூவிவிட்டாள். விநயாதித்தன் அவள் பாதங்களை மெல்லத் தாங்கி முள்ளை எடுத்து எறிந்தான்.

''வலிக்கிறதா காஞ்சனா?'' – விநயாதித்தன் மெல்ல அவளை அணைத்துக் கொண்டான்.

அவன் பிடியினின்று விலகி, தன் இமைக் கோடியில் துளிர்த்த கண்ணீரைத் துடைத்துக் கொண்டு, ''இதயத்தில் ஏற்பட்டிருக்கும் பெரும் வலியையே தாங்கும் சக்தி எனக்கிருக்கிறது; இந்த முள் எம்மாத்திரம்?'' என்றாள்.

''குதூகலமும், கும்மாளமுமாயிருக்கும் உன்னிடம் வேதனை பொங்குகிறதே ஏன் காஞ்சனா?'' என்று கூறி அவள் முகத்தை மெல்லத் தடவினான்.

அவன் கரத்தை ஒதுக்கித் தள்ளி, ''என்னைத் தொடாதீர்கள்; அப்படியே நில்லுங்கள். நான் கேட்பதற்கு மறுமொழி கூறுங்கள். நீங்கள் யார்? என்னை எங்கே அழைத்துச் செல்கிறீர்கள்?'' என்று சீறினாள்.

விநயாதித்தன் கபடமான சிரிப்புடன், ''உனது கோபம் கூட அழகாய்த்தானிருக்கிறது காஞ்சனா; வெறியை ஊட்டுகிறது

காஞ்சனா; மோகத்தை மேலும் வளர்க்கிறது காஞ்சனா; ஆசை ஊற்று மடை திறந்தாற்போல் பொங்கி வருகிறது காஞ்சனா. எனக்கொன்று தோன்றுகிறது காஞ்சனா; இப்படியே இந்தக் காட்டிலேயே உன்னுடன் உல்லாசமாக இருந்துவிடவும், எனது மகத்தான சாம்ராஜ்யத்தையும், நான் அடக்கி ஆள நினைக்கும் இந்தப் பல்லவ நாட்டையும் இழந்துவிடவும் சித்தமாயிருக் கிறேன்...'' என்று கூறவும் காஞ்சனா ஒரு கணத்தில் தன் கோபத்தைத் தணித்துக் கொண்டு, ''தாங்கள் எந்தச் சாம்ராஜ்யத்தை இழப்பதற்குச் சித்தமாக இருக்கிறீர்கள்?'' என்று கேட்டாள்.

''ஏன், இந்த உலகமே கேட்டால் நடு நடுங்கும் சாளுக்கிய நாட்டைத்தான். நான் பழி வாங்க நினைக்கும் இந்தப் பல்லவ நாட்டையுந்தான்.''

காஞ்சனா சற்று யோசித்தாள். ''சாளுக்கிய நாட்டையா? உங்களுக்கு யாராவது கொடுத்திருக்கிறார்களா, அதை நீங்கள் இழப்பதற்கு?'' காஞ்சனா இவ்வாறு கேட்டவுடன் விநயாதித்தன் 'ஹோ ஹோ' என்று சிரித்தான்.

''சாளுக்கிய நாட்டையா? எனக்கு யார் கொடுப்பார்கள்? என் தந்தைதான். புலிகேசி சக்கரவர்த்தி என்று கேள்விப் பட்டிருக்கிறாயா? காஞ்சியைக் கதிகலங்க அடித்த அந்த மாவீரனின் பேரன் நான். எனக்குச் சாளுக்கிய நாட்டை யார் கொடுப்பார்கள்? என் தந்தைதான்...'' என்று கூறி மீண்டும் நகைத்தான் விநயாதித்தன்.

காஞ்சனா திடுக்கிட்டாள். சாளுக்கிய இளவரசன் - ஆகா; என்ன தவறான செயலில் இறங்கினோம். காமம் ஒரு கணம் கண்ணை மறைத்துவிட்டதே. விரோதி நாட்டினருடன் அன்றோ சம்பந்தப்பட்டுவிட்டோம். அதற்குத்தான் இவர், ''சாளுக்கிய இளவரசனுக்குப் புகலிடம் அளித்ததற்காக மரண தண்டனை கொடுப்பார்கள்; அதிலிருந்துத் தப்பிக்க வைத்தேன்'' என்று கூறினாரோ. காஞ்சியில் நம் நடவடிக்கையைத் தெரிந்து கொண்டு விட்டார்களே – காஞ்சனாவுக்குக் குழப்பமாயிருந்தது.

''காஞ்சனா ஏன் நின்றுவிட்டாய்? இன்னும் சிறிது தொலைவுதான். நாம் அமைதியாக அமர்ந்துப் பேசலாம். சீக்கிரம் நட'' என்றான்.

''நடுக்காட்டில் அமைதியாகப் பேசக் கூட இடம் இருக்கிறதா?''

''அந்த இடத்தைப் பார்த்தால் நீ அசந்து விடுவாய் - அத்தகைய இடம். வா, வா...'' என்று அவள் கரத்தைப் பற்றிக் கொண்டு வேகமாக நடந்தான்.



சற்றுத் தொலைவில் அவன் கூறியது போன்று மரங்கள் மறைவில் ஒரு சிறு வீடு காணப்பட்டது. அது அங்கே இருப்பதாக அடையாளமே தெரியவில்லை.

குடிசையின் வெளியே இருந்த திண்ணையில் காஞ்சனா உட்கார்ந்தாள். கல்லிலும் முள்ளிலும் நடந்து வந்ததால் அவள் கால் கடுத்தது. வேதனையால் உள்ளம் வருந்தியது.

''சொல்லுங்கள், சீக்கிரம் சொல்லுங்கள்.என்னை ஏன் இங்கே அழைத்து வந்தீர்கள்?'' என்று காஞ்சனா வேதனையுடன் கேட்டாள்.

''எதற்கு என்று சொல்ல வேண்டுமா காஞ்சனா? நீ காஞ்சியில் இருந்தால் உன்னை நான் இழந்து விடுவேன். சுந்தர ரூபிணியான உன்னை இழந்து காஞ்சி சுந்தரியை நான் அடைந்து தான் என்ன பலன் காஞ்சனா? அதனால் தான் உன்னைக் கோட்டைக்கு வெளியே அழைத்து வந்துவிட்டேன்.''

காஞ்சனாவுக்குப் பசி அதிகமாகியது. களைப்பும் கவலையும் சேர்ந்தன. தவறானவருடன் தொடர்பு கொண்டோமே என்ற அதிர்ச்சி வேறு உடலை வருத்தியது. துவண்ட கொடி போல் அவள் அங்கிருந்த திண்ணையில் அமர்ந்தாள்.

''கண்ணே காஞ்சனா, களைப்பாக இருக்கிறதா? இன்னும் சிறிது நேரத்தில் என் ஆட்கள் வருவார்கள். உனக்கு வேண்டிய உணவு கிடைக்கும்; மிகப் பெரிய அதிர்ஷ்டம் உனக்குக் காத்திருக்கும்போது நீ ஏன் பசியைத் தாங்கக் கூடாது'' என்று கூறி அவள் பஞ்சுக் கன்னத்தை மெல்லத் தட்டினான்.

அவன் கரத்தை மீண்டும் தள்ளிய காஞ்சனா, ''எனக்கு என்ன அதிர்ஷ்டம் காத்திருக்கிறது இனிமேல்? நான் செல்வ சுகபோகத்தின் உச்சிக்கே சென்றிருக்கிறேன். இந்த உலகத்து சுகச் சௌக்கியங்கள் அனைத்தையும் நான் அனுபவித்து விட்டேன். கடைசியாக நான் மாபெரும் தவறு செய்தேன்; அதன் பலனைத் தான் இனி அனுபவிக்க வேண்டும்!'' என்று வெறுப்பு நிறைந்த குரலில் கூறினாள்.

''தவறு செய்தாயா? என்ன தவறு காஞ்சனா?''

''அதிருக்கட்டும் எனக்கு என்ன அதிர்ஷ்டம் காத்திருக்கிறது என்றீர்கள் அதைச் சொல்லுங்கள்?''

''அதிர்ஷ்டம் என்றால் சாதாரண அதிர்ஷ்டமன்று; மாபெரும் அதிர்ஷ்டம். வாதாபியின் பட்டத்து ராணி; காஞ்சி சக்கரவர்த்தியின் பட்ட மகிஷி...''

''என்ன சொல்கிறீர்கள்...?''

''காஞ்சி சுந்தரி உன் கட்டளைக்குக் காத்திருப்பாள்.. விந்தியம் முதல் குமரி வரை உன் காலடியில் கிடக்கும்...''

''போதும் போதும். கற்பனைக் கோட்டையைக் கட்டாதீர்கள்.''

''கற்பனையா? விநயாதித்தன் நெஞ்சில் ஈடேறாத கற்பனை உதயமானதே கிடையாது. அவன் திட்டமிட்டால் முடித்தே தீருவான். இந்த வேளையில் பளிங்கு மாளிகையில் பஞ்சணை மெத்தையில் துயிலுற, பணியாட்கள் மயில் தோகை விசிறியால் தென்றலைக் கட்டிப் பிடிக்க, சொப்பனபுரியில் மிதக்க வேண்டிய நான் ஏன் இந்தக் கானகத்தில் கஷ்டப்பட வேண்டும்? மாறுவேடத்தில் காஞ்சி நகரில் உலவ வேண்டும்?''

''உங்களுக்கு நாட்டாசை.''

''ஏன் உனக்கு மட்டுமில்லையா? காஞ்சி ராணியாக வேண்டும் என்று நீ எண்ணவில்லையா? இளவரசரை மயக்கி வலையில் சிக்க வைத்து அவரைத் தீர்த்துவிட எண்ண வில்லையா?''

''இருக்கலாம்... அதற்காக...?''

''எனக்கும் பழிவாங்கும் மனப்பான்மை. உனக்கும் அப்படியே. இருவரும் ஒன்று சேர்ந்தோம். என் திட்டத்தை எளிதில் நிறைவேற்ற நான் வழிவகைகளைக் கண்டிருக்கிறேன். காஞ்சியில் இரகசியப் பாதை எனக்குத் தெரியும். ஆயுதச் சாலையை அறிவேன். அரண்மனைக்குச் செல்லும் சுரங்க வழி எனக்குத் தெரியும். காஞ்சியைச் சுற்றிச் சாளுக்கிய ஒற்றர்கள் நிறைந்திருக்கிறார்கள். நாளை மறுநாள் வாதாபிக்குப் புறப் படுகிறேன். அங்கிருந்துப் படைகளுடன் வருவேன். நொடியில் காஞ்சியைக் கைப்பற்றுவேன். எருதுக் கொடி இறங்கி வராஹக் கொடி வானில் கம்பீரமாகப் பறக்கும். காஞ்சனா, உன்னையும் வாதாபிக்கு அழைத்துச் செல்வதற்காகத் தான் உன்னைக் கோட்டைக் குள்ளிருந்து வெளியே அழைத்து வந்துவிட்டேன். இப்போது புரிகிறதா என் திட்டம்; இப்போது தெரிகிறதா என் சுயவடிவம்!''

விநயாதித்தன் சொல்லச் சொல்ல காஞ்சனாவின் உடலை என்னவோ செய்தது. திடீரென்று ரோமாஞ்சலி ஏற்பட்டது. அங்கு அமர்ந்திருக்கும் ஒவ்வொரு கணமும் ஏதோ பயங்கரத்தை நாடிச் செல்லுவது போன்ற உணர்ச்சியை ஏற்படுத்தியது.

''காஞ்சனா ஏன் அப்படிச் சிலைபோல் அமர்ந்து விட்டாய்? ஏன் என்ன நேர்ந்துவிட்டது உனக்கு?'' என்று பதறினான் விநயாதித்தன்.

''தாகமாயிருக்கிறது; களைப்பாய் இருக்கிறது. என் உயிரே இப்போது ஒரு வாய் தண்ணீரில் தானிருக்கிறது... காஞ்சனா காஞ்சி ராணியாக வேண்டுமானால் அவள் உயிரைக் காப்பாற்ற வேண்டாமா?'' என்று காஞ்சனா ஈனஸ்வரத்தில் பேசினாள்.

''ஐயோ காஞ்சனா... இந்த இடத்திற்கு எனது ஆட்கள் இரவு மூன்றாம் ஜாமத்தில் தானே வருவார்கள். அப்போதுதான் உணவும் கொண்டு வருவார்கள்... என்ன செய்வது காஞ்சனா... கண்ணைச் சொருகுவது போலிருக்கிறதா?''

''த...ண்...ணீ...ர்...''

''இதோ... வருகிறேன். அருகே ஒரு சுனை இருக்கிறது. அங்கே சென்று தண்ணீர் கொண்டு வருகிறேன். அதுவரையில் இங்கே தைரியமாய் இரு காஞ்சனா...'' என்று கூறிய விநயாதித்தன் குடிலுக்குள்ளிருந்த மட்கலயம் ஒன்றை எடுத்துக் கொண்டு ஓடினான்.

அவன் சென்ற மறுகணமே காஞ்சனா எழுந்தாள். ஆடையை எடுத்து வரிந்து கட்டிக் கொண்டாள். வந்த வழியிலேயே கல்லும் முள்ளும் பாராமல் மேடும் செடியும் பாராமல் புதரும் பள்ளமும் பாராமல் ஓடினாள். ஓடிக்கொண்டே இருந்தாள். அவள் எவ்வளவு நேரம் ஓடினாளோ அவளுக்கே தெரியாது. எந்தத் திசையை நோக்கி ஓடினாளோ அவளுக்கே தெரியாது. அவள் கால் துவளும் வரை ஓடினாள். கண் பஞ்சடையும் வரை ஓடினாள். ஓடி ஓடி இறைக்க இறைக்க இதயம் தொண்டைக்குள் இனி ஏறிவிடுமோ எனும் நிலை ஏற்படும் வரை ஓடினாள்!

அங்கே ஒரு பாழடைந்த வீடு இருப்பது அவள் கண்களுக்குப் புலப்பட்டது. யாரையாவது எழுப்பி ஒரு வாய் தண்ணீர் குடித்துவிட்டு மீண்டும் காஞ்சிக் கோட்டை வாயிலை நோக்கி ஓடலாம் என்ற எண்ணத்தில் அந்த வீட்டை அணுகினாள். அவள் தலை சுழன்றது. அவளால் ஓர் அடி கூட எடுத்து வைக்க முடியவில்லை. அவள் கால்கள் பின்னலிட்டன. அவளைச் சுற்றியுள்ள பொருள்கள் சுழல்வது போல் தோன்றின. அவள் மயங்கி அங்கேயே தடாலென்று வீழ்ந்தாள்.

ஃ ஃ ஃ

**கா**லைக் கதிரவன் பளீரென்று வீசத்தொடங்கினான். பூமாலை கீழே வீழ்ந்து கிடப்பதுபோல் காஞ்சனா கிடந்தாள். அவளருகே ஒரு மாட்டுக் கொட்டில். மாடு 'அம்மா' என்று குரல் கொடுத்தது.

அந்தக் குடிலுக்குச் சொந்தக்காரர் வயது முதிர்ந்தவர். நிலங்களைச் சுற்றிப் பார்த்துவரச் சென்றிருந்தார். வயல்களுக்கு வான மழையில்லை. பொலிவிழந்திருந்த வயல்களைக் கண்டு வேதனையுடன் பெரு மூச்சுவிடச் சென்றிருந்தார் அந்தக்

பெரியவர். அந்தச் சிறு கிராமத்தில் ஏழெட்டுச் சிறு வீடுகள் சில காலத்திற்கு முன்பிருந்தன. சாளுக்கியப் படைகள் பெருவளநல்லூரில் பரமேச்வர வர்மரிடம் தோற்று ஓடியபோது பல கிராமங்களையும், நெற்களஞ்சியங்களையும் தீக்கு இரையாக்கின. அவற்றுள் இந்தக் கிராமமும் ஒன்று. அங்கிருந்த மக்கள் பீதியடைந்துத் தெற்கே எங்கோ ஓடிவிட்டனர். அந்தப் பெரியவர் மட்டும் சொந்தக் கிராமத்தையும், வீட்டையும் மாட்டையும் விட்டுப் போகாமல் அங்கேயே இருந்தார். ஏரிகளில் தண்ணீர் வற்ற ஆரம்பித்தது. பருவ மழை பெய்யவில்லை. உழுது பயிரிடும் காலம் தவறிவிட்டது. பெரியவர் மனம் வாடினார். அதிகாலையிலேயே எழுந்துவிடுவார். பயிர்த் தொழில் செய்யும்போது எவ்வாறு நிலங்களைச் சீராக்கச் செல்வாரோ அதுபோன்று அவர் வீட்டிலிருந்துச் சற்றுத் தொலைவிலுள்ள வயல் புறத்திற்குச் செல்வார்.

காஞ்சனா அவர் வீட்டருகே மயங்கி வீழ்ந்தபோது பெரியவர் இல்லை. தொழுவத்தில் படுத்திருந்த பசு அம்மா என்று குரல் கொடுத்தது. காஞ்சனாவைக் கண்டுவிட்டதனால் மட்டுமன்று. அங்கே வேறு யாரோ நடந்து வரும் காலடி ஓசை கேட்டது.

காஞ்சியிலுள்ள புத்த மடத்தைச் சேர்ந்த பிட்சுக்கள் சிலர் அந்தப் பக்கமாக வந்து கொண்டிருந்தனர். அவர்களுள் தலைமை பிட்சு காஞ்சனா மயங்கிக் கிடக்கும் இடத்தருகே வந்தார். பிட்சுவின் சிஷ்யர்களும் அவளைக் கண்டனர். உடனே அவர்களிடமிருந்த பாத்திரத்தில் கொண்டு வந்திருந்த தண்ணீரால் பிட்சு காஞ்சனாவின் முகத்தில் மெல்லத் தெளித்தார்.

காஞ்சனாவின் உடல் மெல்ல அசைந்தது. ஆனால் அவள் கண் திறக்கவில்லை. பிட்சு அவளுடைய நாடியைப் பிடித்துப் பார்த்தார். கடும் காய்ச்சல் அவளுக்குக் கண்டிருந்தது. பிட்சு பரபரப்படைந்தார். தன் சிஷ்யர்களுக்குச் சைகை காட்டினார். அவர்களுடன் வந்து கொண்டிருந்த கூண்டு வண்டியிலே அடைக்கப்பட்டிருந்த பண்டங்களை வெளியே எடுத்து வைத்துக் காஞ்சனாவைக் கிடத்துவதற்கு இடம் ஒதுக்கினார்கள். ஆபத்துக்குப் பாவம் இல்லை என்ற முறைப்படி அனைவரும் அவளை மெல்லச் சுமந்து கொண்டு வண்டிக்குக் கொண்டு சென்றார்கள். வண்டியினின்று இறக்கப்பட்ட பண்டங்களை மற்ற பிட்சுக்கள் தாங்களே சுமந்து கொண்டார்கள். வண்டி அசைந்தாடிக் கொண்டு புறப்பட்டது. பிட்சுக்கள் வண்டியின் முன்னும் பின்னும் நடந்து வந்து கொண்டிருந்தார்கள்.

●

# 26. சுந்தரியின் சபதம்

மாமல்லபுரத்துச் சிற்பியின் குடிலில் முன்பிருந்த மகிழ்ச்சி இல்லை. சுந்தரிக்கு எந்த வேலையிலும் நாட்டம் செல்லவில்லை. மௌனமாக அவள் குளக்கரையில் அமர்ந்திருந்தாள். விஜயன் அவளருகே வந்தமர்ந்து மெல்ல அவள் தலைக் கேசத்தைத் தடவி, ''சில நாட்களாக ஏன் கலகலப்புக் குறைந்துக் காணப் படுகிறாய் சுந்தரி?'' என்று வினவினான்.

சுந்தரி மெல்லச் சிரிக்க முயன்றாள்.

''சுந்தரி, இங்கே துள்ளித் திரியும் மான்கூட உன் சுறுசுறுப்பைக் கண்டு வெட்கிக் கொண்டிருந்தது... இப்போது'' என்று விஜயன் மேலும் தொடர்ந்து பேச முயன்றான்.

''இப்போது அது என்னைப் பார்த்துச் சிரிக்கிறது'' என்றாள் சுந்தரி.

''சுந்தரி உன்னிடம் ஏன் இப்படித் திடீரென்று மாற்றம்?'' என்று விஜயன் கேட்டான்.

சுந்தரி மீண்டும் சிரித்துக் கொண்டாள். அவள் என்னவென்று சொல்வாள். அவள் மனப்போராட்டத்தை வெளியே தெரிவிப்பாளா? தந்தையைத் திடீரெனக் கண்டும் அவர் அரவணைப்பில் வாழக் கொடுத்து வைக்காமல் அவரை இழந்த துக்கத்தைத் தெரிவிப்பாளா? இளவரசர் குடிலுக்கு வந்து சென்ற பிறகு உள்ளத்துச் சஞ்சலம் அதிகமானதைப் புலப்படுத்துவாளா? விஜயனிடம் நெருங்கிப் பழகும் சந்தர்ப்பங்கள் அதிகமாகியும் ஏதோ ஒரு மாயத்திரை ஒன்று அவள் கண்ணெதிரே தோன்றி வேதனை அளிப்பதைக் கூறுவாளா?

சுந்தரி மௌனமாயிருந்தாள். ''எனக்குத் தெரியும் சுந்தரி; மல்லிநாதரைப் பற்றித் தகவல் ஏதும் தெரியவில்லை என்பதுதான் உன் வேதனைக்குக் காரணம். உன் தந்தை இறந்ததுகூட உனக்கு அவ்வளவு சோகத்தை அளித்திருக்காது என்பது எனக்குத் தெரியும்'' என்று மீண்டும் கூறினான் விஜயன். உண்மையில் அவனுக்கும் எதிலும் நாட்டம் செல்லவில்லை. இளவரசர் மீண்டும்

வருவதாகக் கூறிச் சென்றவர் வரவில்லை. சுந்தரியும் கலகலப்புக் குறைந்தவளாகக் காணப்பட்ட பிறகு அவனைச் சோர்வுதான் சூழ்ந்து கொண்டது.

''என் தந்தை இறந்தது எனக்கு அதிக வருத்தத்தை அளிக்கவில்லை என்று எப்படி நீங்கள் கூறுகிறீர்கள்?''

''உன் தந்தையை இதுவரையில் நீ கண்டதில்லை. மேலும் உன் தந்தையைத் தேடிப் பழிக்குப் பழி வாங்க வந்தாய். பழிவாங்க வந்தவர் கண் எதிரே மாய்ந்துவிட்ட பிறகு அவர் மறைவு உனக்கு வேதனையை அளிக்குமா?''

''அப்படிச் சொல்லாதீர்கள். பழிவாங்கும் மனப்பான்மை எவ்வளவு தவறானது என்று எனக்கு இப்போதுதான் தோன்றுகிறது. அதற்காக வெட்கப்படுகிறேன்; வேதனை அடைகிறேன். பல்லவ குலத்தின் மீது கூட வெறுப்படைந்தேன். அது எவ்வளவு தவறு என்பது எனக்கு இப்போதுதான் தெரிகிறது. இளவரசரிடம் என் பிழையைக் கூறி மன்னிப்புக் கேட்கவும் நான் துடிக்கிறேன்...''

விஜயன் வியப்புடன் அவள் கூறுவதைக் கேட்டுக் கொண்டிருந்தான்.

''இளவரசரை மீண்டும் சந்திக்க வேண்டும் என்று எனக்குத் தோன்றுகிறது. அவர் இங்கே வருவாரா? வராவிடில் காஞ்சிக்குச் செல்ல வேண்டும். இங்கே பொழுதை வீணே கழித்துக் கொண்டிருப்பதால் என்ன பலன்?'' என்று சுந்தரி கூறினாள்.

''சுந்தரி, பொழுது வீணே கழிகிறது என்றா கூறுகிறாய்? பொழுது வீணே கழிய நானும் ஒரு காரணந்தான் என்று சொல்லாமல் சொல்கிறாய் அல்லவா?''

சுந்தரி ஏதும் பேசவில்லை. அவள் விஜயனையே கண் இமைக்காமல் பார்த்துக் கொண்டிருந்தாள். பிறகு, ''என் மனம் மாறிவிட்டது. உங்கள் மனம் மாறிவிட்டதோ?'' என்று கேட்டாள்.

''உன் மனம் மாறிவிட்டதா? உன் மனத்தில் நீ என்ன நினைத்துக் கொண்டிருந்தாய்? அது எப்படி மாறியது என்று சொல்லலாமா?'' என்று விஜயன் கேட்டான்.

சுந்தரி தன் விழிகளைச் சுழற்றி, ''பழிவாங்கும் பாதக எண்ணத்துடன் வந்தேன்; அது சிற்பியாரைக் கண்டவுடனே ஓரளவுக்கு மாறியது. தங்களைக் கண்டவுடன் முற்றிலும் மாறியது. என் இதயத்துக் கலை உணர்ச்சி தட்டி எழுப்பப்பட்டது. காஞ்சியை அடைந்து அங்கே பரத நாட்டியம் முழுவதையும்



கற்க வேண்டும் என்ற அவா எனக்கு உதயமாகிவிட்டது'' என்று கூறினாள்.

விஜயன் சற்று நேரம் மௌனமாயிருந்து பிறகு, ''சுந்தரி, நீ நாட்டிய கலை நுணுக்கங்களை விரைவில் அறிந்து கொண்டால் எனக்கும் நல்லதுதான். எனது ஓவியப் பணிக்கு அது மிகவும் உதவும். நானே இளவரசரிடம் அதைப்பற்றிக் கூறுகிறேன். காஞ்சியில் மற்றொரு அஜந்தாவைச் சிருஷ்டிக்க வேண்டும் எனும் இளவரசரின் எண்ணம் நிறைவேற உன் நாட்டியத் திறமை உதவும்'' என்றான்.

''மற்றொரு அஜந்தாவா?''

''ஆமாம்; அஜந்தாவிலிருக்கும் அழியாத வண்ணங்களால் தீட்டப்பட்ட அற்புதச் சித்திரங்களைப் போன்று இங்கும் அழியாத சித்திரங்களைத் தீட்ட வேண்டும் என்பது அவர் ஆவல். அழியாத இலட்சியம். என்னிடம் இளம் போதிலேயே என் இதயக்கனலைப் புலப்படுத்தியிருக்கிறார். அதற்கு உன் திறமை உதவும்...''

''என் திறமைக்கும் நீங்கள் ஓவியம் தீட்டுவதற்கும் என்ன சம்பந்தம்?''

''ஓவியத்திற்கு உயிர் அளிப்பதே அழகுதானே...''

''அதனால்...?''

''அழகின் வடிவம் பெண்கள்...''

''இருந்தால்...?''

''அழகுக்கு அழகு நாட்டியமன்றோ? உன் அங்க அசைவிலே கற்பனை பிறக்கும்; உணர்ச்சியின் வடிவத்திலே என் தூரிகை விரைந்து இயங்கும். உன் அழகிய கரங்களின் நெளிவும் வளைவும் வரிவடிவத்திற்குத் துணையாக இருக்கும். உனது சிற்றிடை அசைவிலே நான் சித்திரத்தின் முழு வெற்றியைக் காண்பேன்...''

விஜயன் சொன்னதைக் கேட்டுச் சுந்தரி மெல்லச் சிரித்தாள். நகைப்பிலே நாணம் பரவி நின்றது. சிரிப்பிலே பெண்மையின் பூரிப்புப் பொங்கி வழிந்தது.

''நீங்கள் சிறந்த கவிஞராகவும் ஆகலாம்... என் பாதாதி கேசம்வரை வர்ணித்துவிடுவீர்கள் போலிருக்கிறதே...'' என்று சுந்தரி கூறவும் விஜயன் ஆவல் ததும்பிய கண்களுடன் சுந்தரியை நெருங்கி, ''உன்னை அங்க அங்கமாக வர்ணிக்க எனக்கு ஆசைதான். ஆனால் எனக்கு வார்த்தைகள் வரவில்லையே.

நான் சொல்லோவியம் தீட்ட வல்லவனில்லையே. இருந்திருந்தால் அற்புதமாகக் கவிதை எழுதியிருப்பேன்.

'பொன்னழகு மயிலே நின்
மின்ன லிடை கண்டேன்
கன்னல் விழித் தேனைக்
கண்டு இன்பங் கொண்டேன்'

என்று பாடியிருப்பேன்.''

''ஆகா... இதைவிட அற்புதக் கவிதை வேறு வேண்டுமா? எங்கே மற்றொன்று பாடுங்கள்; கவிதை இதயத்தைத் தொடுகிறது. அதைப்போல் சித்திரத்தால் தொட முடியுமா?'' என்று கேட்ட சுந்தரி மெல்ல விஜயன் கரத்தைத் தன் கரத்துடன் பிணைத்தாள்.

விஜயன் உடலில் புத்துணர்ச்சி பரவாதிருக்குமா? அப்போது—

குட்டிச் சித்தன் இராஜசிம்மன் ஓலையுடன் அங்கு வந்து மரங்களின் மறைவில் நின்றான்.

கூண்டு வண்டிக்குள் மயங்கி வீழ்ந்திருந்த காஞ்சனா தன் நினைவு இன்றிக் கிடந்தாள். பிட்சுக்கள் வண்டியின் முன்னும் பின்னுமாக நடந்து வந்து கொண்டிருந்தனர். அவர்களிடையே மௌனம் நிலவியது. அவர்கள் பார்வை சாலையின் இருபுறமும் காய்ந்துக் கிடக்கும் வயல்களின் மீது சென்றது. தண்ணீரின்றிக் காணப்படும் நீர் நிலைகள் மீது சென்றது. மரங்களில் பச்சை இலையே மறைந்துப் பழுத்துக் காணப்பட்ட மரங்களைக் கண்டு அவர்கள் பெருமூச்சு விட்டனர். காஞ்சனா இவை எவற்றையும் காணாமல் வண்டிக்குள் கிடந்தாள். காஞ்சிமா நகரத்துப் பேரழகி; செல்வத்தில் சிறந்தவள்; சிறந்த நடனக்காரி – இப்படி ஏதோ ஒரு வண்டியில் தன் நினைவு இல்லாது கிடப்பது என்றால் காலத்தின் கோலத்தைத்தான் சொல்ல வேண்டும்.

திடீரென்று அவள் வாழ்வில் எதிர்பாராத மாறுதல்கள் நிகழ்ந்தன. சம்பவங்கள் ஏற்பட்டன. காஞ்சி நகரத்திற்குள் விஜயன் காலடி எடுத்துவைத்த வேளையைச் சொல்வதா? சாளுக்கிய இளவரசன் வந்த காலத்தைக் கூறுவதா? – எது எப்படியோ காஞ்சனாவின் அமைதியான வாழ்க்கைக் குளத்தில் சலனம் ஏற்பட்டது. அந்தச் சலனம் ஏதாவது ஒரு கரையின் மீது மோதித் தான் நிற்கும். காஞ்சி நகரத்து வாலிபர் முதல் வயோதிகர் வரைத் தங்கள் மதியை இழக்கும் மனமோகன வடிவழகுடைய காஞ்சனா ஒருவரையும் மதிக்காது தனிக்காட்டு ராணியாக விளங்கினாள். அவளை நெருங்கவே அஞ்சினர் பலர். அவள் முக தரிசனத்தை மட்டும் கண்டு விட்டுத்

திருப்தியடைந்தனர் பலர். அவளது இதழில் – பவழப் பேழையில் திகழும் முத்துப் பல் வரிசையின் முல்லை முறுவலுக்குக் காத்திருந்தனர் பலர். மத்தகஜத்தின் துதிக்கையின் அசைவை யொப்ப அழகுடன் திகழும் கரங்களின் ஒயிலான அமைப்பைக் காணத் துடித்தனர் சிலர். புகை போன்று மெல்லியதாய் அணிந்திருந்த ஆடை உடலை மறைப்பதற்குச் சக்தியற்று இருப்பதைக் கண்டு மகிழ்ந்து அதை வாழ்த்தியவாறு காஞ்சனாவை இமைக்காமலே பார்த்துக் கொண்டிருக்க முயல்பவர் பலர் – இப்படியாகப் பித்துப் பிடிக்கப் பலரை யடிக்கும் காஞ்சனா ஒருவரையும் நெருங்க விடாது நெருப்பாக இருந்தவள், அயல்நாட்டு வாலிபன் ஒருவன் காஞ்சிக்கு வந்திருப்பதையும், இளவரசரின் நண்பன் அவன் என்றும் கூற விஜயனைப் பற்றி பைரவன் வர்ணித்ததைக் கேட்டவுடனேயே மோகம் கொண்டுவிட்டாள். விஜயன் என்று சாளுக்கிய இளவரசன் மேல் மையல் கொண்டாள். மாமல்லபுரத்தில் ஓர் இரவை இன்பமாகக் கழித்தாள். அவள் செய்யும் தவறறிந்து பைரவன் எச்சரித்தான். அதனால், பல ஆண்டுகளாக அவளுக்கு உதவியாக நண்பனாக இருந்த அவன் மீது சீறி விழுந்தாள். அவனை வெறுத்து ஒதுக்கினாள்.

இதெல்லாம் என்ன மாறுதல்? எப்படி ஏற்பட்டது? அவளது மனத்தில் ஏற்பட்ட இந்த மாற்றத்திற்கு என்ன காரணம்? காரணம் காலந்தான். பழி காலத்தின் மேல் தான். மாளிகையில் பஞ்சணை மெத்தையிலே பாங்கிகள் கால் வருட மயில் பீலியால் விசிற, அந்த அறையிலே மெல்லிசை பரவ, இள மணங்கமழத் துயிலுறும் காஞ்சனா, கட்டை வண்டியிலே வைக்கோல் பரப்பப்பட்ட இடத்திலே இருளே துணையாய் இருக்க இரவுக் கோழிகள் சப்திக்க தன் நினைவு அற்றவளாய்ச் செல்கிறாள். இதற்கு யாரை நொந்து விட முடியும்? சுந்தரியும் – காஞ்சனாவும் உருவில் ஒற்றுமையாய் இருந்ததால் காவலர்கள் காஞ்சனாவை அழைத்துச் சென்றனர். அதற்காக உருவ ஒற்றுமை மீது பழி கூறலாமா? அப்படி யென்றால் வீதியின் முனைக்குக் காஞ்சனா திடீரென வந்து நின்றதால் அன்றோ குட்டிச்சித்தன் கண்களில் அவள் புலப்பட்டாள். குட்டிச் சித்தன் 'சுந்தரி' எனக் கூவினான். அதனால் அவள் நிலைக்கு அவளேதான் காரணம். சரி; சாளுக்கிய இளவரசன் விருந்தினர் மண்டபத்திற்கு ஏன் நடு இரவில் வந்தான். அவளை ரகசிய வழியாய் ஏன் அழைத்து வந்தான்? அவள் காஞ்சனா என்று அவனுக்குத் தெரியும். அவன் நோக்கமே வேறு. காஞ்சி மீது படையெடுக்கும் நாளை அவன் குறித்து விட்டான். அதற்காக ஆயத்தங்கள் செய்துவிட்டான். பல்லவ

நாட்டில் சாளுக்கிய ஒற்றர்கள் ஊடுருவிக் கிடந்தனர். முக்கியமான இடங்களின் அமைப்பையெல்லாம் அவர்கள் அறிந்திருந்தனர். வாதாபிப் படைகள் முற்றுகையிட வேண்டியதுதான் தாமதம்; காஞ்சிக் கோட்டைக்குள்ளேயே பெரும் குழப்பம் ஏற்படுத்த ஏற்பாடுகள் செய்திருந்தான் விநயாதித்தன். அவன் காஞ்சியை விட்டு அதற்காகவே புறப்பட்டுவிட்டான். செல்லும் போது காஞ்சனாவைக் காஞ்சியில் விட்டுவிட்டுச் செல்ல அவனுக்கு மனம் வரவில்லை. அவளையும் அழைத்துக் கொண்டு செல்வதால் பல கோணங்களில் பலன் உண்டு என்று அவன் திடமாக நம்பினான். காஞ்சனா சாளுக்கிய நாட்டிற்கு ஓடிவிட்டாள் என்று காஞ்சி மக்கள் நம்பியவுடனேயே அவர்கள் மனத்தில் பெரும் குழப்பம் ஏற்பட்டுவிடும். அது படையெடுப்புக்குச் சாதகமாக அமையும் எனத் திட்டமிட்டான் விநயாதித்தன். அத்துடன் காஞ்சிக் கோட்டை வீழ்ந்து வெற்றிக் கோலா கலத்துடன் நகரத்திற்குள் நுழையும்போது யானை மீது காஞ்சனாவை ஏற்றி அலங்காரமாக ஊர்வலம் நடத்தினால் நகர மக்களின் மனோ நிலை எப்படியிருக்கும்? ஆகா, சிறந்த யோசனை – என்று மனப்பால் குடித்தான் சாளுக்கிய இளவரசன். ஆனால், அவன் எண்ணம் காஞ்சனாவைப் பொறுத்தவரை நிறைவேறவில்லையே. காஞ்சனா அவனிடமிருந்துத் தப்பி இப்போது பிட்சுக்களின் பாதுகாப்பில் கூண்டு வண்டியிலன்றோ சென்று கொண்டிருக்கிறாள். இதற்கு யாரைக் குறை கூறுவது? காலத்தைத்தான் சொல்ல வேண்டும்.

காஞ்சியை வண்டி அடையும்போது பொழுது சாய்ந்து விட்டது. வழியிலே காஞ்சனா மூர்ச்சை தெளிந்துவிட்டாள். ஆனால் அவளால் உடலை அசைக்க முடியவில்லை. தலைமீது பெரும் பாறாங்கல்லைக் கட்டியிருப்பது போன்ற உணர்ச்சி. தாம் எங்கே போகிறோம் என்று அறிவதற்காகக் கண்களைத் திறக்க முயன்றாள். கண்கள் தீப்போல் எரிந்தன. கண்களிலிருந்த தீ உடலிலும் பரவுவதுபோல் அவளுக்குத் தெரிந்தது. அவள் ஏதோ கூற முயன்றாள். அச்சொற்கள் 'அம்மா அம்மா' என்றுதான் வெளியே கேட்டன.

⁂ ⁂ ⁂

**மீ**ண்டும் காஞ்சனா மெல்லக் கண் விழித்தபோது ஏதோ புது உலகத்தில் இருப்பதுபோல் அவளுக்குத் தோன்றியது. மங்கிய வெளிச்சத்துடன் கூடிய கூடம் ஒன்றில் அவள் படுத்துக் கொண்டிருந்தாள். அருகேயிருந்த சாளரம் வழியாகக் காற்று மெல்ல வீசிக் கொண்டிருந்தது. பலகணிக்கு வெளியே தோட்டம் இருக்க வேண்டும். பறவை இனங்க்ள் போடும் கூச்சல் அவள்

கவனத்தைக் கவர்ந்தது. எங்கிருந்தோ அகிலின் புகை மிதந்து வந்தது. இன்னும் சற்றுத் தொலைவிலிருந்து,

'புத்தம் சரணம் கச்சாமி'

என்ற பிரார்த்தனை ஒலி கம்பீரமாக எழுவது இலேசாகக் காற்றில் பரவி வந்தது. கருங்கற்களால் ஆன கூடம் அது. மிகத் தூய்மையாக அந்த இடம் காட்சியளித்தது. காஞ்சனாவுக்கு மெல்ல மெல்ல நடந்த சம்பவங்கள் நினைவுக்கு வந்தன. சாளுக்கிய இளவரசரிடமிருந்துத் தப்பி ஓடோடி வந்ததையும் மயக்கமடைந்து வீழ்ந்ததையும் அவள் மீண்டும் நினைத்துக் கொண்டபோது அவள் உடல் சிலிர்த்தது. பிறகு என்ன நேர்ந்தது. எப்படி இங்கே வந்தோம்?

யாரோ வரும் நிழல் தெரிந்தது. நெடிய கம்பீரமான உருவம். பாதக் குறடு ஓசை எழுப்ப பிட்சு வந்து கொண்டிருந்தார்.

பிட்சு காஞ்சனாவின் அருகில் வந்து மண்டியிட்டு அமர்ந்தார். அவர் கண்களில் தனிவித ஒளி இருந்தது. பற்கள் வெளேரென்றுத் தூய்மையைப் பறைசாற்றின. எலுமிச்சை நிற மேனி கடுந்தவம் புரிந்ததால் கடினமுற்று இருந்தது. அகன்ற காதுகள், ஊடுறுவும் விழிகள், கூரிய மூக்கு, அவர் முகத்தை நேருக்கு நேர் காண முடியாது காஞ்சனா தலையைக் கவிழ்த்துக் கொண்டாள்.

''குழந்தாய்...'' என்று அவர் அழைத்தபோது மீண்டும் காஞ்சனாவின் உடல் முழுவதும் சிலிர்த்தது. ஏதோ புரிய முடியாத பாச உணர்ச்சி அவளை வந்து ஆட்கொண்டுவிட்டதுபோல் தோன்றியது.

''குழந்தாய், உன் உடல் நிலை இப்போது எப்படி இருக்கிறது? காய்ச்சல் குறைந்திருக்கிறதா?'' என்று மீண்டும் பரிவான குரலில் கேட்டார் பிட்சு.

காஞ்சனாவின் நெற்றியில் முத்து முத்தாய் வியர்வை துளிர்த்தது.

''கொடிய காய்ச்சல் உன்னை விட்டகன்றுவிட்டது. மெல்ல எழுந்து இந்தத் தோட்டத்தில் சற்று உலவினால் சூரிய ஒளி புதுத்தெம்பை அளிக்கும் குழந்தாய்'' என்றார் பிட்சு.

காஞ்சனாவுக்கும் வெளி உலகைக் காண வேண்டும்போல் தோன்றியது. நன்றி ததும்பும் விழிகளுடன் பிட்சுவை நோக்கி, ''சுவாமி, என்னைக் காப்பாற்றியதற்கு நான் தங்களுக்கு எவ்வாறு நன்றி தெரிவிப்பது என்றே தெரியவில்லை. மேலும் தங்களுக்குத் தொல்லை கொடுக்க விரும்பவில்லை சுவாமி. நான் எங்கே

இருக்கிறேன் என்பதை மட்டும் சொல்லுங்கள்; இங்கிருந்து என் இல்லத்திற்குச் செல்ல வழி அறிந்து கொள்கிறேன்'' என்றாள்.

பிட்சு மெல்ல நகைத்தார். ''குழந்தாய்; இளம் வயதினள். அதிலும் நீ ஒரு பெண். இந்த உலக விவகாரமே உனக்கு இன்னும் புரியவில்லை. உன்னை நானா காப்பாற்றினேன்? போதிமரத்து புனிதன் அன்றோ காத்தருளினார். உனக்கு ஏற்பட்ட கடுங்காய்ச்சலையும் போதிசத்துவன் அன்றோ தீர்த்தார்...'' என்று கூறும்போது, ''சுவாமி, கடுங் குளிர்க் காய்ச்சல் ஏற்பட்டது இருக்கட்டும்; என்னைக் கொடியவரிடமிருந்தும் காப்பாற்றினீர்கள்...'' என்று காஞ்சனா கூறியவுடன் பிட்சு புருவத்தைச் சுளித்து எதையோ அறிய முயல்வது போல் முக பாவத்தை மாற்றிக் கொண்டார்.

''ஆமாம் சுவாமி; என்னைக் காப்பாற்றியவர் தங்கள் ரூபத்தில் வந்த புத்தபிரானாய்த்தான் இருக்க வேண்டும்...''

''குழந்தாய், நீ மயங்கி ஒரு மாட்டுத் தொழுவத்தில் வீழ்ந்து கிடந்தாய். நாங்கள் கோவூரிலிருந்து வந்து கொண்டிருந்தோம். தாகத்திற்காகத் தண்ணீர் தேடி அந்தக் குடிலருகில் வந்தபோது உன்னைக் கண்டோம். ஆமாம்... நீ ஏன் அங்கே மயங்கி வீழ்ந்திருந்தாய். குழந்தாய்... உன்னைப் பற்றி நீ சொல்லலாம் என்றால் என்னிடம் தெரிவிக்கலாம்... உன்னைப் பார்த்தால் உயர்ந்த குடும்பத்துப் பெண் போல் தோன்றுகிறது. அந்த வேளையில் மனித நடமாட்டமற்ற அந்த இடத்திற்கு நீ எவ்வாறு வந்தாய்?'' என்று பிட்சு கேட்டார்.

'உயர்ந்த குடும்பத்துப் பெண்...?' – காஞ்சனா ஒரு முறை தனக்குள் சொல்லிக் கொண்டு மெல்லச் சிரித்தாள். உயர்ந்தவள் – எதில்? செல்வத்தில்; செல்வாக்கில்; அழகில்; ஆணவத்தில்; காண்போரைப் பித்துப் பிடிக்கச் செய்வதில். ஆனால் அவள் கணிகை தானே. காஞ்சி நகரத்துக் கூலவாணிகர் குடும்பமோ, வேதபாடசாலை அதிபர் குடும்பமோ, கிராமத்து விவசாயிக் குடும்பமோ அவளை மனமொப்ப மதிப்பதில்லையே. அவள் குணத்தையும், நடவடிக்கையையும் குறித்துக் குறைவாகத் தானே பேசுவர். நாடகக்காரி, கூத்தாடி என்றுதானே பேசுவர் – எல்லாவற்றையும் விட் 'அழகைப் புலப்படுத்தி, உடலை விற்று உல்லாச வாழ்க்கை நடத்துபவள்' என்று தானே கூறுவர். அப்படி இருக்க உயர்ந்த குடும்பத்துப் பெண் என்று எப்படிக் கூறுகிறார் பிட்சு? என் தோற்றத்திலிருந்துக் கூறியிருக்கலாம். இல்லை; இல்லை; பிட்சுவின் எண்ணத்தில் எந்தவிதத் தவறுமில்லை. மற்றவர்கள் நினைப்பது போல் நான் ஒழுக்கம்

குறைந்தவளா? என் மனச்சாட்சி இல்லை என்றுதான் கூறுகிறது. நான் இவ்வளவு ஆண்டுகளாக நெறி தவறவில்லையே. என் தொழிலுக்காக ஆடை அலங்காரங்களை அதற்கேற்பச் செய்து கொள்வது உண்டு. மத்த விலாசமும், மற்றக் கூத்துக்களும் ஆடுவேன் என்பது உண்மை. தங்கள் பசிக்கு என்னை உணவாக்க நினைப்பவரிடமிருந்து எவ்வளவு லாவகமாகத் தப்பியிருக்கிறேன்! பாவம் – என் தோழிகள், சேடிகள், பணிப் பெண்கள் யாவரும் எனக்காகத் தங்களைத் தியாகம் செய்து கொண்டிருக்கிறார்கள். நான் கடைசியில் தான் மனம் பேதலித்து விசயன் என்று சாளுக்கிய இளவரசனிடம் என் பொக்கிஷத்தை இழந்தேன் – அதனால் நான் ஒழுக்கக் குறைவானவளாக ஆகிவிட முடியுமா? பிட்சு என்னை உயர்ந்தவள் என்று கூறியது உண்மையே! ஏன் – உயர்ந்தவளாகவே வாழ்வேன்' என்று பலவாறாக எண்ணிக் கொண்டவள், பிட்சுவை நோக்கித் தன் கதையை மெல்ல வெளியிட முயன்றாள். அவள் குரல் ஏனோ தழுதழுத்தது. தனது பூர்வீகச் சரித்திரம் ஏதும் கூறாமல் சமீபத்தில் நடந்தவற்றை மட்டும் கூறித் தன்னை விருந்தினர் மண்டபத் திலிருந்து விநயாதித்தன் அழைத்துச் சென்றதையும், அவன் நோக்கம் அறிந்து தான் தப்பி ஓடிவந்ததையும் விவரித்தாள்.

பிட்சுவின் முகத்தில் எந்தவிதச் சலனமும் இல்லை. பிட்சுவுக்கு எந்த நாடும் ஒன்றுதான்; எந்த மன்னரும் ஒருவர்தான். அவர் சாளுக்கிய மன்னரையும் இளவரசரையும் நன்கறிவார். பரமேச்வர வர்மனையும் இராஜசிம்மனையும் அவருக்கு நன்றாகத் தெரியும். இராஜிய விஷயங்களில் தலையிடுவதில்லை என்ற வைராக்கியத்துடன் தான் அவர் வட பெண்ணையைத் தாண்டிப் பல்லவ நாட்டிற்குள் பிரவேசித்தார். மேலும் பல்லவ நாட்டில் தற்போது பௌத்த மதத்தினருக்கு அதிக ஆதரவு இல்லாததும் அவருக்குத் தெரியும். அவர் அதற்கெல்லாம் கவலைப்பட வில்லை. போதிசத்வரின் அறநெறிகளை, அவர் தம் உபசேதங் களை மக்களிடையே அமைதியான முறையில் பரப்புவது ஒன்றுதான் அவரது இலட்சியமாக இருந்தது. அவரது சீடர்களும் குருவுக்கு ஏற்ற கொள்கையுடையவர். கோவூரில் சில ஆண்டுகள் வசித்து வந்தார். பெருவள நல்லூர் போர் நடந்த பிறகு சாளுக்கியப் படைகள் பின்னடைந்துச் சென்ற வழிகளில் உள்ள ஊர்களைத் தீக்கிரையாக்கியும், பயிர்களை அழித்தும், விளைநிலங்களைப் பாழ் செய்தும், நீர் நிலைகளில் பருவமழை காலத்தில் நீர் தேங்காவண்ணம் உடைத்து ஊறு செய்த பிறகு, குன்றத்தூர், கோவூர் பகுதியில் மக்கள் பீதியடைந்து காஞ்சியை நோக்கி ஓடிவிட்டனர். மக்களற்ற இடத்தில் பிட்சுக்கள் மட்டும் இருந்து

என்ன செய்வர்? மேலும் காஞ்சி நகரத்தில் வசித்து வந்த சீன நாட்டுப் பௌத்த சந்நியாசிகளைச் சந்தித்து அவர்களுடைய உதவி பெற்று சீனத்திற்குச் செல்ல வேண்டும் எனும் அந்தரங்க எண்ணம் பிட்சுவிடம் இருந்தது; காஞ்சிக்கே சென்றுவிடுவது என்ற முடிவுடன் புறப்பட்டார் தன் குழுவினருடன். அப்போதுதான் வழியில் காஞ்சனாவைக் கண்டு காப்பாற்றினார்.

ஃ ஃ ஃ

காஞ்சனா கூறியவற்றைக் கேட்டுக் கொண்டிருந்த பிட்சுவுக்கு முன் எப்போதும் இல்லாத மனக் கலக்கம் சூழ்ந்தது. அவர் மேலும் சிலவற்றைக் காஞ்சனாவிடமிருந்து அறிய முற்பட்டு, "குழந்தாய், உன் பெயர் என்ன வென்று கூறினாய்?" என்று மெல்லக் கேட்டார்.

"காஞ்சனா, சுவாமி...."

"காஞ்சனா, நடந்தது நடந்துவிட்டது. ஆனால் - ஒன்று மட்டும் நான் அறிய விரும்புகிறேன். உனக்குப் பல்லவ மன்னர்மீதும், இந்த நாட்டின் மீதும் வெறுப்பு உண்டா!"

பிட்சு இப்படிக் கேட்டவுடன் காஞ்சனா திகைத்து, சற்று மென்று விழுங்கி, "அப்படியெல்லாம் ஒன்றுமில்லை சுவாமி... ஒரு சமயத்தில் இருந்தது. பைரவன் எனும் காபாலிகன் எனக்கு அடிக்கடி அந்தத் துவேஷத்தை வளர்த்து வந்தான். அதற்காகவே இளவரசருக்கு நண்பரான விஜயன் எனும் இளைஞனை அறிமுகப்படுத்திக் கொண்டு அவனிடமிருந்த இளவரசரின் முத்திரை மோதிரத்தைக் கைக்கொண்டு அரண்மனையில் என் ஆதிக்கத்தை நிலைநாட்ட எண்ணினேன்..." என்று கூறிவரும் போது பிட்சு குறுக்கிட்டு, "முத்திரை மோதிரத்துடன் மாளிகைக்குள் நீ சென்றால் ஒரு நாள் மட்டும் நீ உன் விருப்பப்படி அங்கே செயலாற்றலாம். பிறகு உன் போலித்தனத்தைக் கண்டுபிடித்து விடுவார்களே... அதனால் உனக்குப் பேராபத்து அல்லவா வந்துவிடும்..." என்று கூறவும் காஞ்சனா, "அடையாள மோதிரத்துடன் நான் இளவரசரைச் சந்திக்க எண்ணியிருந்தேன். அவர் என் கலைத்திறமையை அறிய மாட்டார். அவரிடம் எனது புலமையைப் புலப்படுத்திக் கொண்டு ராஜநர்த்தகியாக அமரும் வாய்ப்பை ஏற்படுத்திக் கொள்ளத் திட்டமிட்டேன். இளவரசர் இராஜசிம்மன் கலையார்வம் மிக்கவர் என நான் அறிந்தேன். மேலும் அரண்மனையில் பரதநாட்டியத்தை வளர்ப்பதற்குத் தக்கவர் நெடு நாட்களாக இல்லை. ஏகாம்பரர் ஆலயத்தில் விழாக் காலங்களில் நடனமாடுவதற்கு ஏற்ற வரில்லாமல் காலம் ஓடிக்கொண்டே இருக்கிறது. ராஜ நர்த்தகி ஆன பிறகுதான் சில காலம் கழித்து என் சொரூபத்தைக் காட்ட

விரும்பினேன். பல்லவ குலத்தின் மீது என் இதயத்தில் வெகு காலமாக இருந்துவரும் பழிவாங்கும் எண்ணத்தை நிறைவேற்றிக் கொள்ளத் திட்டமிட்டேன்.''

''உன் எண்ணத்தை எளிதில் நிறைவேற்றிக் கொள்ள சரியான சந்தர்ப்பம் ஏற்பட்டதே காஞ்சனா! சாளுக்கிய இளவரசன் உன்மீது மையல் கொண்டான். திடீரெனக் காஞ்சியை முற்றுகையிட அவன் திட்டமிட்டிருந்தான் என்று கூறுகிறாய். அவனுடன் சேர்ந்து நீ எளிதில் உன் எண்ணத்தைச் சாதித்திருக்கலாமே... ஏன் அவனிடமிருந்து தப்பி ஓடிவந்தாய் காஞ்சனா? பல்லவ நாட்டிற்கும் விரோதியாகி, விநயாதித்தனுக்கும் வேண்டாதவளாகி நீ வாழ்வதுதான் எப்படிக் குழந்தாய்...?''

பிட்சு மிகச் சாதாரண முறையில்தான் கேட்டார்.

காஞ்சனாவின் உடல் நடுங்குவது பிட்சுவுக்குத் தெரிந்தது. உதடுகள் துடிப்பது அவருக்குத் தெரிந்தது. கண்களில் நீர் குளம் போல் ததும்புவதை அவர் கண்டார்.

மீண்டும் அவர் ஏதோ கேட்கத் தொடங்கியவுடன் காஞ்சனா விம்மும் குரலில், ''வேண்டாம் சுவாமி வேண்டாம். என்னை ஒன்றும் கேட்காதீர்கள். என் வாழ்வுக்கு நானே முடிவைத் தேடிக்கொண்டு விட்டேன். என் பயங்கர எண்ணங்கள் இறந்து பல நாட்களாகிவிட்டன. இதற்கு முன் நான் எதெதில் பற்றுக் கொண்டிருந்தேனோ அவையெல்லாம் மாய்ந்து போய்விட்டன. சுவாமி... இங்கிருந்து வெளியே செல்ல வழிகாட்டி விடுங்கள் சுவாமி. காலமெல்லாம் தங்களுடைய பேருதவியை மறக்காது நான் அமைதியாக வாழ்வேன்... என்னை இங்கே நிற்க வைத்துக் கேள்விகளைக் கேட்டு என் இதய வேதனையை வளர்க்காதீர்கள். சுவாமி... எனக்குப் போக விடை கொடுங்கள் சுவாமி...'' என்று கூறிய காஞ்சனா விழியிலிருந்து நீர் அருவிபோல் வழிந்தது.

பிட்சு தன் இரு செவிகளையும் பொத்திக் கொண்டார். பிறகு, ''குழந்தாய், என்ன வார்த்தை கூறிவிட்டாய்? புத்தபிரான் உனக்கு அருள்வாராக. குழந்தாய்... உன் துயர் தீர்ப்பதற்காகவே நான் சிலவற்றைக் கேட்டேன். உன்னை வேதனைப்படுத்த அன்று... இளம் வயதிலேயே நீ உயிருக்குயிரானவற்றை வெறுத்துவிடுவதாய்ப் பேசுகிறாய். பற்று நீக்குவதென்பது உறுதியின் அடித்தளத்திலிருந்து வர வேண்டும் காஞ்சனா... இப்போது சொல்லு. நீ எதெதில் பற்றுக் கொண்டிருந்தாயோ அவற்றையெல்லாம் மாய்த்து விட்டாயா? உன்னுடன் இணைந்துப் பிறந்த நாட்டியத்தையும் வெறுத்து ஒதுக்கி விட்டாயா...? சொல்லு காஞ்சனா சொல்லு. உன் உயிருக்குயிரான

நடனத்தை நீ ஒதுக்கித் தள்ளிவிடப் போகிறாயா? அந்த உறுதி உனக்கிருந்தால் சொல்லு காஞ்சனா. இந்தக் கணமே நீ முற்றும் துறந்த பிட்சுணி ஆகிவிடலாம். ஈழத்துக்கும், ஸ்ரீ விஜயத்துக்கும் சென்று போதி சத்துவரின் அறநெறிகளைப் பரப்பி மக்களை அவ்வழியிலே மாற்றும் பெரும் பணியிலே ஈடுபடலாம். சொல்லு காஞ்சனா; முத்து மாலைகளை எடுத்து எறி; பொன் ஆபரணங்களை வீசிவிடு. பட்டுத் துகிலை உதறி செம்மஞ்சள் துணியை உடுத்திக்கொள். உன் கரங்களிலுள்ள பொன் வளையலைக் கழற்றி வீசிவிடு; பாதத்திலுள்ள சிலம்பை நசுக்கி எறிந்துவிடு... இப்போது சொல் காஞ்சனா... நடனத்தையும், அபிநயத்தையும் நீ துறந்துவிட முடிவு செய்துவிட்டாயா?''

பிட்சுவின் இக்கேள்வி காஞ்சனாவைத் திகைக்க வைத்தது. காதலையும், காமத்தையும், சுகபோகங்களையும், பஞ்சணை மெத்தையையும், பட்டுப் பட்டாடைகளையும், மாளிகையையும், ஏவலாளர்களையும், சுகந்த பரிமளம் நிறைந்த சொகுசான வாழ்க்கையையும், ஆடை ஆபரணங்களையும் வெறுத்து ஒதுக்குவதாக முடிவு செய்திருந்தாளேயன்றி நடனக் கலையை அன்று. வெறும் திரவியம் சேர்ப்பதற்காக விதவிதமான உத்திகளுடன் ஆடும் ரசக் குறைவான நடனத்தைத்தான் அவள் வெறுத்தாள், தெய்விக அம்சம் நிறைந்த ஆண்டவன் பாதத் தாமரைகளில் சமர்ப்பிக்கும் நடனத்தை அன்று.

காஞ்சனா, பரபரப்புடன், ''சுவாமி, நான் எப்படி நடனக் கலையை வெறுக்க முடியும்? தவசிகளுக்குத் தவம் எப்படியோ அப்படித்தான் எனக்கு நாட்டியமும். அடிகளே, எனக்கு வழிகாட்டுங்கள்; நான் என் மாளிகைக்குச் செல்கிறேன். அங்கு சென்று பணிகளை முடித்துவிட்டு நான் எங்காவது சிறு குடிலுக்குச் சென்று...'' காஞ்சனா சொல்லிக்கொண்டு போகும் போது பிட்சு குறுக்கிட்டு, ''காஞ்சனா, ஒன்று சொல்லுகிறேன்... உன் திட்டங்களின் முடிவை இப்போதே இங்கிருந்தே மளமளவென்று கூறி முடித்துவிடாதே. உன் வாழ்க்கைப் பாதையில் நீ செல்ல வேண்டிய தொலைவு மிக இருக்கிறது. நாட்டியக் கலைக்கு இன்னும் நீ தொண்டு செய்ய எண்ணியிருப்பது எனக்கு மகிழ்ச்சியாய் இருக்கிறது. உன் திறமையை இளவரசர் மிகவும் போற்றுவார். இராஜநர்த்தகியாக வேண்டும் எனும் உனது இலட்சியம் எளிதில் நிறைவேறும். வழிகாட்டுமாறு என்னைக் கேட்டுக் கொண்டாய். உனக்குத் தக்க வழி காட்டுகிறேன் – உன் வீட்டிற்குச் செல்லும் வழியன்று. உன் வாழ்வின் ஒளி நிறைந்த பகுதிக்குச் செல்ல...'' என்று கூறினார்.

''அடிகளே! என்ன சொல்லுகிறீர்கள்...?''

''உன் கலைப்பசிக்கு ஏற்ற உணவு.''

''புரியவில்லை சுவாமி!''

''இளவரசர் எனக்கு மிக வேண்டியவர். அவரிடம் உன்னை அறிமுகப்படுத்துகிறேன். அவர் உன் நாட்டியத்தைக் கண்டால் பெரிதும் ரசிப்பார், மகிழ்வார். உன்னை ராஜநர்த்தகியாக்குவார். ஆனால் அரண்மனைக்குச் செல்லும்போது பழிவாங்கும் எண்ணத்தை மறந்துவிட வேண்டும்.''

பிட்சு இவ்வாறு கூறியதைக் கேட்டவுடன் காஞ்சனா திடுக்கிட்டாள். பரபரப்புடன், ''சுவாமி, சுவாமி என்ன கூறுகிறீர்கள்...?'' என்று கேட்டாள். பிறகு –

''புரிகிறது. ஆனால் என் செவிகள் கேட்பது உண்மைதானா எனத் துடிக்கிறேன். இந்தப் பேதைக்கு அவ்வளவு பெரிய பாக்கியம் கிடைக்குமா...?''

''காஞ்சனா, இன்று அமைதியாக இங்கே பொழுதைக் கழி. நந்தவனத்தில் உலவி வா. பட்சிகளின் மதுர கீதங்களைக் கேட்டு மகிழ்ந்திரு. மலர்ந்திருக்கும் மலர்களின் களங்கமற்ற அழகைப் பார்த்து ரசித்திரு. மரங்களிலிருந்து கனிகளைப் பறித்துப் புசி. கவலைகளை மறந்து சுதந்திரப் பறவையைப்போல் துள்ளித்திரி. நாளைப் பொழுது புலர்ந்ததும் நல்ல காலம் பிறக்கும். இங்கே உனக்கு எந்தவித அச்சமும் வேண்டாம். இங்கே ஆடவர் எவரும் வரமாட்டார்கள். நான் நாளை வந்து உன்னைக் காண்கிறேன்...'' என்று கூறிவிட்டு பிட்சு சென்றுவிட்டார். தான் காண்பது கனவா நனவா என்று திகைத்தாள் காஞ்சனா.

❖ ❖ ❖

**ம**றுநாள் பொழுது புலர்ந்தது. பறவைகளின் உதய கீதத்துடன் கீழ்வானம் வெளுத்தது. பிட்சுக்களின் பிரார்த்தனை ஒலியின் பின்னணியுடன் கதிரவன் தோன்றினான். பிட்சுவின் வரவைக் காஞ்சனா எதிர்பார்த்தாள். நேரம் ஆகிக்கொண்டே வந்தது. நிழல் சாயத் தொடங்கியது. நந்தனவத்தில் உலாவி அலுத்துவிட்டது காஞ்சனாவுக்கு. பார்த்த மலரையே பார்த்துச் சலித்துவிட்டது.

மாலை வந்தது. பிட்சுவும் வந்தார். காஞ்சனாவின் மகிழ்ச்சி எல்லையைக் கடந்தது. பிட்சுவின் முகத்தில் இளம் முறுவல்! அவர் என்ன பிறர் துயர் துடைக்கப் பிறந்தவரா? ஹூம்!

''குழந்தாய்'' என்று அழைத்தவாறு வந்தவர், ''என்னை எதிர்பார்த்து, எதிர்பார்த்து ஏமாந்து உன் மனம் வேதனை யுற்றதோ?'' என்று கேட்டுக்கொண்டே வந்தார். காஞ்சனாவுக்கு ஏதும் பேச்சு வரவில்லை. ஒரு நாளில் பலமுறை ஆடைகளை மாற்றிக்கொண்டு எப்போதும் புதுமையுடன் திகழும் காஞ்சனா கடந்த நாட்களாக ஒரே ஆடையை உடுத்திக் கொண்டிருந்ததால் அவளுக்கே வேதனையாக இருந்தது.

''காஞ்சனா உனக்காக இன்று நான் மாளிகைக்குச் செல்ல நேரிட்டது. பல்லவ அரண்மனை வாசலை இதுவரையில் மிதிக்காத நான் அங்கு சென்றேன்...''

''ஐயோ, எனக்காகத் தங்களுக்கு ஏன் இவ்வளவுத் தொல்லை...''

''எனக்கு ஏன் தொல்லை? நேற்றே இளவரசர் என்னைத் தேடி இந்த விஹாரைக்கு வந்தார். எதிர்பார்த்தது நடந்துவிட்டது. நான் காஞ்சிக்குத் திரும்பிவிட்டதறிந்த இளவரசர், உடனே என்னைக் காண வந்துவிட்டார். அரச பதவிக்கு அமையும் கர்வம், பிடிவாதம், அலட்சியம், அகம்பாவம் ஏதும் அவரிடலில்லை. காஞ்சனா! இளவரசர் இராஜசிம்மன் நாடாளும் தகுதியுயைவர் மட்டுமல்லர்; சிறந்த கலையுள்ளம் படைத்தவர். கலைஞர். அதனால் அவருக்கு மற்ற அறிஞரின் மதிப்புத் தெரிகிறது. நான் மீண்டும் காஞ்சிக்கு வந்ததறிந்து மிகவும் மகிழ்ந்தார். அவர் வந்திருந்தபோது நீ நந்தவனத்தில் உலவுவதையும் எதேச்சை யாகக் கண்டுவிட்டார். அவர் ஏன் அப்போது அவ்வாறு திகைத்தார் என்று எனக்குப் புரியவில்லை. ஏன் அப்படி இமை கொட்டாமல் நோக்கினார் என்று என்னால் உணா முடியவில்லை. இயற்கை தானே – உன் வனப்பும் வடிவழகும் கண்டு பிரமிக்காதவர் இருக்க முடியுமா? ஐம்புலன்களையும் வென்று முற்றும் துறந்த என் போன்ற உறுதியான கடின இதயமுடையவர்களன்றி மற்றவர் உன்னிடம் நிலை கலங்குவது இயற்கையே...''

பிட்சு இவ்வாறு பேசிக்கொண்டே செல்லும்போது காஞ்சனா நாணமுற்றுத் தலைகுனிந்தாள்.

''காஞ்சனா... பிறகு இளவரசர் சென்றுவிட்டார். மீண்டும் காஞ்சியில் வடமொழிக் கல்லூரியைப் புதுப்பிப்பது குறித்துப் பேச வருவதாக நான் கூறியிருந்தது போல் இன்று காலை மாளிகைக்குச் சென்றிருந்தேன். செல்ல வேண்டும் எனும் கட்டாயம் ஏதுமில்லை; ஆனால் உனக்காகச் சென்றேன். கடமையைப் பற்றி நானும் பேசவில்லை; அவரும் பேசவில்லை.

சோலையில் கண்ட உன்னைப் பற்றிக் கேட்டறிய இளவரசரது இதயம் துடித்தது என்பதைக் கண்டுகொண்டேன்...''

''இளவரசர் என்னைப் பற்றி விசாரித்தாரா?''

''ஆம்; காஞ்சனா. உன்னை இதற்குமுன் எங்கோ பார்த்திருப்பதாகக் கூறினார்...''

''என்னை நாடக மேடையில் பார்த்திருக்கலாம்...''

''உன் நாட்டியத்தையும் கண்டிருப்பதாகக் கூறினார்...''

''இருக்க முடியாது; நான் தூய நடனம் ஆடி வெகு காலமாகிறது. பாமரர்கள் ரசிக்கும் வகையில் ஏதோ குதித்திருக்கிறேன். அதை அவர் கண்டிருக்க முடியாது.''

''அவர் உன்னைப் பற்றிக் கேட்டறியத் துடித்தார்; ஆனால் வார்த்தை வரவில்லை.''

''நீங்கள் சொல்லவில்லையா?''

இப்படிக் கேட்டுவிட்ட காஞ்சனா, ஏன் கேட்டோம் என்று உதட்டை மெல்லக் கடித்துக் கொண்டாள்.

ஃ ஃ ஃ

**பி**ட்சு பொய் சொல்லவில்லை. அவர் கூறியபடியே செய்தார். காஞ்சனாவைக் குறித்து இளவரசரிடம் சிறந்த முறையில் சிபாரிசு செய்தார். இராஜசிம்மனுக்குக் காஞ்சனாவைக் காண வேண்டும் எனும் ஆவல் ஏற்பட்டது. நடனக் கலையில் திறமை மிக்கவள் எனும் செய்தி வேறு அவரைக் கவர்ந்தது. காஞ்சனாவை அழைத்து வருமாறு சொல்லி அனுப்பினார். மாமல்லபுரத்துச் சிற்பியின் குடிலில் கண்டவளும், இவளும் உருவ ஒற்றுமையாய் இருப்பது இராஜசிம்மன் மனத்தில் பெரும் கேள்விக் குறியை எழுப்பியிருந்தது.

மாலை மங்கி இரவு மெல்ல நுழைந்து கொண்டிருந்தது. பல்லவ அரண்மனை நந்தவனத்துச் செயற்கை வாவிக் கரையில் இராஜசிம்மன் தனியே அமர்ந்து பலவாறு சிந்தித்த வண்ண மிருந்தார். நீல வானத்தில் நட்சத்திரங்கள் கண் சிமிட்டிக் கொண்டிருந்தன. முற்றாத இளமதி வானத்தில் எங்கோ காய்ந்து கொண்டிருந்தது. வெண்முகில்கள் பஞ்சுக் கூட்டம் போல் நகர்வது சந்திரன் எங்கோ அவசரமாக ஓடுவது போல் தோன்றியது. இராஜசிம்மன் மனத்தில் ஆயிரமாயிரம் எண்ணங்கள். பலப்பல கவலைகள். சாளுக்கியர்கள் நகரில் பல இடங்களில் ஒற்று வேலைகள் புரிந்திருப்பதைக் குறித்து செய்தி வந்தவண்ணமாக இருந்தது. இரவு தங்கியிருந்த பெண் விருந்தினர் மண்டபத்

தினின்று காணாமல் போன செய்தியும், பிறகு அவளே புத்த விஹாரத்து நந்தவனத்தில் உலவிக் கொண்டிருந்ததும் அவருக்குத் தெரிந்தவுடன் பலபல சந்தேகங்கள் ஏற்பட்டன. அதே மங்கையைக் குறித்து முற்றும் துறந்த பிட்சு உயர்த்திப் பேசி அவள் திறமையைப் புகழ்ந்ததும் அவருக்கு வியப்பாகவும் இருந்தது. அதனால் காஞ்சனாவை வரவழைத்து அவள் நாட்டியத்தை ரசிப்பவர் போல் பல உண்மைகளை அறிய முனைந்தார்.

காஞ்சனா தன் இல்லத்திற்குச் சென்று நீராடி வேறு ஆடை அணிந்து, பிறகுதான் மன்னரின் மாளிகைக்குச் சென்றாள். காஞ்சனாவை மீண்டும் கண்டதில் பணிப் பெண்களுக்கு ஏற்பட்ட மகிழ்ச்சிக்கு எல்லையே இல்லை. சிலர் கண்ணீர் கூட உகுத்தனர்.

⁂ ⁂ ⁂

நந்தவனத்துப் புல்வெளியில் வானைப் பார்த்தவாறு இருந்த இராஜசிம்மன் எதிரே காஞ்சனா வந்து நின்றாள். சொப்பன லோகத்து மங்கை போல் நிலவொளியில், புல்வெளியில் நின்றாள். அழகுக் கோயிலின் உற்சவ விக்கிரகம் உலாப் புறப்பட்டது போல் ஒயிலாக நின்றாள். அவள் வணங்கி நின்ற நிலை மனத்தைக் கொள்ளை கொள்ளும் வகையில் இருந்தது.

இராஜசிம்மன் அவளைப் பாதாதிகேசம் வரை ஒருமுறை நோக்கினார். மாமல்லபுரத்தில் கண்ட மங்கை வேறு; இவள் வேறு.

''உன் பெயர்தான் காஞ்சனாவோ...?'' என்று இளவரசர் கேட்டார்.

''ஆம்'' என்று கூறுவதற்குள் அவள் பட்டபாடு!

''மத்தவிலாச நாடகத்தில் காபாலிகையாக வேடம் பூண்டு நடிப்பவள் நீதானே...?''

''ஆம்'' என்று கூறுவதற்குள் அவள் பட்டபாடு!

''இந்த நகரத்தில் பல காலமாக வாழ்ந்தும் இன்றுதான் நீ இந்த மாளிகைக்கு வருகிறாய் அல்லவா?''

''ஆம்'' என்று கூறுவதற்குள் அவள் பட்டபாடு.

''பிட்சு உன் நாட்டியத் திறமையைப் பற்றி வெகுவாகப் புகழ்ந்தார். நல்ல நடனங் காண எனக்கு மிகுந்த அவா காஞ்சனா...'' என்று கூறிய இளவரசர் முகத்தில் எந்தவித உணர்ச்சியையும் அவளால் அறிய முடியவில்லை. அவர் தன் நடனத்தைக் காண விரும்புகிறார் என்றறிந்தாள்.

பிட்சு கூறிய நற்பெயரைக் காப்பாற்றிக் கொள்ள முயன்றாள் காஞ்சனா.

அவள் அந்த நிலவொளியில் ஆடியது வெண்மதிக் கற்றைகளே அசைவதுபோல் ஒரு கணம் தோன்றியது. பவழமல்லிகை மலரெல்லாம் பொலபொலவென உதிர்வது போல் ஒரு கணம் தோன்றியது. யானையின் தந்தங்கள் அழகு வடிவெடுத்து அசைவது போல் ஒரு கணம் தோன்றியது. வெட்டிச் செல்லும் மின்னல் ஒரு வடிவெடுத்துத் துள்ளுவது போல் ஒரு கணம் தோன்றியது.

இராஜசிம்மன் அந்த அழகு நடனத்தில் தன்னை மறந்தார். அவரது கற்பனைகள் விரிந்தன. கடல் கடந்த சைலேந்திர நாட்டில் அவர் தங்கியிருந்தபோது அரண்மனைச் சபை மண்டபத்தில் ஒரு மங்கை ஆடிய ஆட்டம் அவர் நினைவுக்கு வந்தது. அதைப் பெரிதும் ரசித்து மகிழ்ந்த சைலேந்திர இராஜகுமாரியின் இனிய முகம் அவர் நினைவுக்கு வந்தது. அவளுடன் பழகிய இன்ப நாட்கள் நினைவுக்கு வந்தன. அந்த நினைவிலே எதிரே ஆடிக்கொண்டிருந்த காஞ்சனாவை மறந்தார்.

காஞ்சனா ஆடினாள், ஆடினாள், ஆடிக்கொண்டே இருந்தாள்.

சேவடி நோக ஆடினாள். வளைக்கரம் துள்ள ஆடினாள். மெல்லிடை வருந்த ஆடினாள். கருவிழி களைப்பால் மூட ஆடினாள். இடையும், துடையும், விழியும், இதழும், கரமும், பாதமும் துவண்டு களைத்துச் சாயும் வரை ஆடினாள். அவளை அறியாமல் நிலத்தாயின் நீள் மடியில் மூர்ச்சித்துச் சாயும் வரை ஆடினாள்.

●



# 27. இளவரசர் எதிரே!

சுந்தரியின் சொல் அமிழ்தமாக விஜயன் செவிகளில் விழ விழ அவன் புதுத் தெம்புடனே பேசலானான். கவிதை இதயத்தைத் தொடுவது போல் சித்திரத்தால் இயலுமா என்று அவள் கேட்டவுடனே விஜயன் விறுவிறுப்புடன் பேசினான்.

''இதயத்தில் அழியாது ஓவியத்தைத் தீட்டுபவன்தான் சிறந்த ஓவியன். வளைந்த புருவத்தை எல்லோரும் வரையலாம்; ஆனால் அதிலே ஆண் மகனை அடக்கும் வில்லின் வடிவு பொங்கியிருக்க வேண்டும். நீள் விழியை வண்ணச் சித்திரமாகத் தீட்டலாம். ஆனால் துள்ளித் தாவிய மீனைப் போன்று அது மயங்க வேண்டும். பெண்களின் அழகிய தோள்களைத் தீட்டலாம். அது மூங்கிலைப் போன்று வளைந்திருக்க வேண்டும்.''

''ஆகா...'' என்று ஒரு முறை தன்னையறியாமல் கூறிக் கொண்ட சுந்தரி, ''விஜயா... இப்படியே நீங்கள் வர்ணித்துக் கொண்டிருக்க, நான் மெய்மறந்து கேட்டுக் கொண்டே காலத்தைக் கழித்துவிடலாம் போல் தோன்றுகிறது'' என்றாள்.

இப்போது அவள் அவன் பரந்த புஜத்தின் மீது சாய்ந்து கொண்டிருந்தாள். விஜயனின் கரங்கள் மென்மையான சுந்தரியின் கரங்களில் தவழ்ந்து கொண்டிருந்தன.

''சுந்தரி...''

''ஹூம்...''

''என் ஆசை அதுவன்று சுந்தரி. நீ ஆடிக்கொண்டே இருக்க வேண்டும்; நான் அதைப் பார்த்து இரசித்துக் கொண்டே இருக்க வேண்டும். கூத்தில் பலவகை இருக்கின்றனவாம். ஒவ்வொரு நுணுக்கமான அம்சங்களையும் நீ அபிநயிக்க வேண்டும். என் தூரிகை அதை அழியாது இருக்கச் செய்துவிடும்...'' என்றான்.

''கலை நம்மை பிணைக்கிறது, அது வாழ்க!''

''ஆம்! அது வளர நாம் வாழ்வோம். நாம் வாழ அது வளரட்டும்.''

''விஜயா...! காஞ்சிக்கு நீங்கள் தனியே போய்விடுவீர்களா?''

''உன்னை விட்டா? அதெப்படி முடியும் சுந்தரி? இளவரசரிடம் கேட்டு நமக்கென்று தனியிடம் பெறுவோம். அதைச் சுவர்க்கபுரியாக்குவோம்...''

''விஜயா...''

''என்ன சுந்தரி...?''

''நமக்குள் எப்படி விஜயா இத்தகைய நெருங்கிய தொடர்பு திடீரென மலர்ந்தது...''

''அதுவா? முன் பிறவிப் பயனாக இருக்கலாம்...''

''முன் பிறவியிலே...''

''ஆம்! ஒரு சமயம் நாம் வில் விஜயனும் அல்லியுமாக இருந்திருப்போம். ஒரு சமயம் ரோகிணியும் சந்திரனாகவும் இருந்திருப்போம். இன்னும், ஒன்றுபட்ட அன்பு உள்ளம் கொண்டவர்களாக இருந்திருப்போம். விட்ட குறை நம்மைத் தொடர்ந்து தொட்டிருக்கலாம்...''

சுந்தரியின் உதடுகள் துடித்தன. அவள் இதயத்தில் ஆயிரமாயிரம் வடிவங்கள் மலர்ந்தன. சொல் மலர்களால் அவனுடைய காலடிகளை அர்ச்சிக்க எண்ணங்கள் நொடிக்கு நொடி வளர்ந்தன. ஆசைக் கொடியை அவன் மீது தவழ்ந்துப் படரவிட எண்ணினாள்.

''விஜயா!''

''நாம் காஞ்சிக்குச் சென்றுதானாக வேண்டுமா?''

''வேண்டாமே... எனக்கு நகரத்துச் சந்தடியே பிடிக்காது. ஒரே ஒரு காலைப் போதிலேயே அந்த நகரத்தின் தடபுடல்களும் ஆடம்பரங்களும் எனக்குப் புரிந்துவிட்டன. அமைதியான சூழ்நிலையில் கலைப் பணியாற்றுவது அங்கே எளிதன்று.''

''இந்தக் குடிலிலேயே இருப்போம். எப்படியும் மல்லி நாதரைத் தேடி அழைத்து வந்துவிடுவார்கள். அவரது உதவி நமக்குப் பரிபூரணமாக இருக்கும்...''

''அதோ... கீச்சுக் கீச்சென்று கூவிப் பறக்கும் பறவைகளைக் கண்டு மனத் தெம்புடன் காலங்கழிப்போம். மருண்டு பார்க்கும் மான் விழியின் எழிலில் தோய்ந்து வாழ்வோம். நடையழகில் மகிழ்வோம்...''

''விஜயா...''

''என்ன, சுந்தரி...?''

''நான் தாயற்றவள்; தந்தையையும் இழந்தேன். பிறந்த மண்ணிலேயே இருந்திருக்கலாம்; ஆனால் ஏதோ ஓர் அசட்டு

எண்ணத்துடன் இங்கு வந்தேன். தாங்கள்தான் இனி எனக்குத் துணை; என்னைப் பிரியாது இருப்பீர்களா?''

''சுந்தரி... இது என்ன கேள்வி? எனக்கு மட்டும் இந்தப் பூமியிலே யார் துணை இருக்கிறார்கள்? ஒரு சமயத்தில் இராஜசிம்மன் என் உயிர் நண்பன். இப்போது இளவரசர், நாளைக்குப் பேரரசர். சமமாக நான் பழக முடியுமா? ஆனால், சுந்தரி, ஒருவேளை உன் நாட்டியத் திறன் அறிந்து இளவரசர் உன்னை இராஜநர்த்தகியாக ஆக்கலாம். அப்போது இந்த விஜயனை நீ மறந்துவிடுவாய்-''

விஜயன் இப்படிக் கூறியவுடன் ஒரு கணம் சுந்தரியின் உடல் சிலிர்த்தது. ''என்ன சொல்கிறீர்கள் – நான் அரசவை நாட்டிய மகளா? நாட்டியக் கலை எனக்கு கைவரப் பெற்றது. எல்லோர் எதிரிலும் ஆடுவதற்காக இல்லை. அதைத் தெய்விகக் கலையாக எண்ணிப் பூசிப்பேன், அந்தக் கலையைக் கலைக்காகவே பயன்படுத்தும் என் பாதங்கள் பிறர் முன் ஆடவே ஆடாது.''

''நீ என்ன சொல்கிறாய் சுந்தரி...''

''நான் கற்ற கலையை இனி எக்காரணத்தைக் கொண்டும் மானிடருக்காக ஆடவே மாட்டேன்...''

''சுந்தரி, அவசரப்பட்டு விடாதே... ஏதோ விளையாட்டாகப் பேசிக்கொண்டிருப்பதை விபரீதமாக்கிவிடாதே...''

''விஜயா... எது விளையாட்டு? இப்போது நீங்களும் நானும் பேசிக்கொண்டிருப்பது விளையாட்டா? என் மீது உங்களுக்கு ஏற்பட்ட அன்பு விளையாட்டா? முன் பிறவியில் விட்ட குறை என்று கூறினீர்களே, அதுவும் விளையாட்டுதானா? சந்திரனும் ரோகிணியும், விஜயனும் அல்லியும் முன் பிறவியில் நாம் என்றீரே அதுவும் விளையாட்டுத்தானா? நான் ஆட, அதை நீங்கள் வண்ண ஓவியமாகத் தீட்டுவேன் என்றீர்களே, அதுவும் விளையாட்டுப் பேச்சுத்தானா? இந்த வனச் சூழ்நிலையிலேயே காலமெல்லாம் வாழ்வோம் என்றீர்களே, அதுவும் வெறும் பேச்சுத்தானா? சொல்லுங்கள். சொல்லிவிடுங்கள்'' – சுந்தரியின் குரலில் அழுத்தம் இருந்தாலும் கண்கள் கலங்கியிருந்தன.

விஜயன் தேங்கி நிற்கும் அவள் விழி நீரில் தன் முகத்தைக் கண்டான். விஜயன் பரபரப்புடன், அவள் கண்களை தன் மென் கரங்களால் துடைத்து, ''சுந்தரி... அதற்குள் என்னென்ன பேசிவிட்டாய். உன் நன்மைக்காகத்தான் நான் சொன்னேன். வேக உணர்ச்சியில் ஏதேதோ உறுதியெடுத்து முடிவு செய்து விடுகிறாயே என்றுதான் உன்னை எச்சரித்தேன். பல்லவ

மாளிகையின் ராஜ நர்த்தகியாவதென்றால் அது மகத்தான பாக்கியம். சுந்தரி, உன் திறமையை மன்னர் அறிவார்! நகர மக்கள் அறிவர், நாட்டு மக்கள் அறிவர்...''

''வேண்டாம், வேண்டவே வேண்டாம்! நானறிந்த கலையை நீங்கள் ஒருவர் அறிந்தாலே போதும். அதை ஆயிரமாயிரம் ஆண்டுகள் அழியாது விளங்குமாறு செய்யும் கை வண்ணம் தங்களிடமிருக்கிறது என்று எனக்குத் தெரியும். காஞ்சியிலோ, வேறு எங்கோ சுவரில் வண்ண ஓவியங்கள் காட்சியளிக்கும் அந்த ஓவியங்களிலே நான்தானே திகழ்வேன். விஜயா – அதனாலேதான் சொன்னேன், நான் கற்ற கலையை மானிடர்களுக்காகப் பயன்படுத்தவே மாட்டேன். அரச குடும்பத்தார் அழைத்தாலும் சம்மதிக்க மாட்டேன்.''

''மன்னரின் கோபத்திற்கு ஆளாவாய்.''

''கோபிக்கட்டுமே... எனக்கு மரண தண்டனை விதிக்கட்டுமே. நான் அஞ்சவில்லை.''

சுந்தரியின் கண்களில் ஒளி வீசியது. விஜயன் அவள் கரங்களைத் தன் கரத்துடன் சேர்த்துக் கொண்டான். இருவரும் அங்கிருந்து எழுந்து குடிலை நோக்கி நடக்கலாயினர்.

அப்போது குட்டிச் சித்தன் மறைவிடத்திலிருந்து வெளிப்பட்டு அங்கே வந்து கொண்டிருந்தான். இராஜசிம்மன் அனுப்பிய ஓலைகளுடன் வந்து கொண்டிருந்தான். அவர்கள் மனத்தைக் கலங்க வைக்கும் கட்டளைகளுடனும் கூடிய இளவரசர் அனுப்பிய ஓலைகளுடனும் வந்து கொண்டிருந்தான்.

⁂ ⁂ ⁂

**வி**ஜயனும் சுந்தரியும் இளவரசர் அனுப்பிய ஓலையை வைத்துக்கொண்டு நீண்ட நேரம் சிந்தித்தனர். பிறகு ஒரு முடிவுக்கு வந்தனர்.

''நம் இருவரையும் தனித்தனியே பிரிப்பதில் இளவரசருக்கு என்ன அவ்வளவு மகிழ்ச்சி?'' என்று சுந்தரி கவலையுடன் கேட்டாள்.

''இளவரசருடைய குணம் இப்போது எப்படி மாறியிருக்கிறதோ? அவரும் நானும் இளம் வயதில் பழகியபோது அவரது இலட்சியம் என்னை மிகவும் கவர்ந்தது. நாம் இருவருமே காஞ்சிக்குச் செல்வோம்; அவரிடம் நேரிடையே கேட்டு விடுவோமே'' என்று விஜயன் கூறினான்.

அவனுடைய யோசனை சுந்தரிக்குப் பிடித்திருந்தது. அவர்களிருவரும் காஞ்சிக்குப் புறப்பட்டனர். மாமல்லபுரத்துச் சிற்பியின் குடிலில் குட்டிச் சித்தன் தங்கிவிட்டான்.

சுந்தரியும் விஜயனும் காஞ்சிக் கோட்டைக்குள் நுழையும் போது பொழுது சாய்ந்துவிட்டது. கோட்டை மேலிருந்த முரசம் முழங்கியது. கோட்டைக் கதவுகள் சாத்தப்படும் என்பதைப் புலப்படுத்தும் அறிவிப்பு முரசு அது. சாலையில் சென்று கொண்டிருந்த வண்டிகள் விரைந்தன. விஜயன் காஞ்சிக்கு முதலில் வந்தபோது இப்படித்தான் நேர்ந்தது. அவன் சற்றுத் தாமதித்ததால் கோட்டைக்கு வெளியே தங்குமாறு ஆகிவிட்டது. பிறகு இரகசியப் பாதை வழியே சென்றதும், காபாலிகனைச் சந்தித்ததும், அவனிடமிருந்து மகாவிரதியொருவர் காப்பாற்றியதும் அவன் நினைவுக்கு வந்தன. காஞ்சி நகர வனப்பு முழுவதையும் அவன் அறிந்து கொள்ளவில்லை. அன்று நகரைச் சுற்றிப் பார்த்து விட்டுத்தான் மாளிகைக்குச் செல்ல வேண்டும் என்று முடிவு செய்து கொண்டான்.

அவர்கள் ஏறி வந்த வண்டி கோட்டைக் கதவைத் தாண்டுவதற்கும், கதவுகள் சாத்தப்படுவதற்கும் சரியாக இருந்தது.

''பிழைத்தோம்'' என்று கூறி மெல்லச் சிரித்தான். அவன் சிரித்ததற்கு ஏற்ற காரணத்தை வினவிய சுந்தரிக்கு தன் அனுபவத்தைக் கூறினான் விஜயன். சுந்தரி பெருமூச்சு விட்டு, ''காஞ்சி நகரத்தில் எந்தக் கணம் என்ன ஏற்படும் என்று சொல்ல முடியாது. திடீரென நம்மை அறிந்தவர்கள் போல் சிலர் பேச முன் வருவார்கள். திடீரென அரசாங்கக் காவலர்கள் நம்மைச் சிறைப்படுத்தி சிறைச்சாலைக்கு அழைத்துச் செல்லாமல் விருந்தினர் விடுதிக்கு அழைத்துச் செல்வார்கள்...'' என்றெல்லாம் அவள் தன் அனுபவத்தைக் கூறினாள்.

வண்டியை விட்டு இறங்கி விஜயனும், சுந்தரியும் நகரின் வனப்பை நடந்தவாறேக் கண்டு களித்துச் சென்றனர்.

''இங்கேதான் ஒரு மூதாட்டி வீட்டில் நான் தங்கினேன். அவர்கள் மிக நல்லவர்கள். அவர்களை மற்றொரு முறை சந்திக்க வேண்டும் போல் தோன்றுகிறது'' என்றாள் சுந்தரி.

''அவர்கள் வீடு எங்கே இருக்கிறது?''

''மஞ்சள் நீர் ஓடைத் தெருவாம்...''

''ஆகா, பெயரே அழகாகத்தானிருக்கிறது... அந்த வீதி எங்கே இருக்கிறது என்று கேட்டறிவோம்'' என்றான் விஜயன்.

காஞ்சி நகரத்து வீதிகளில் ஒவ்வொரு விளக்காக ஏற்றப் பட்டன. மங்கிய ஒளியில் ஜன சந்தடி மிகுந்த கடை வீதி களையும், அதில் நடமாடும் மக்களையும், இருபுறமும் கலகலப்பாக வாணிபம் நடைபெறும் அங்காடிகளையும் கண்டவாறு இருவரும் சென்றனர்.

வீதி முனையில் விஜயன் மஞ்சள் நீர் ஓடை வீதியைக் குறித்து விசாரித்தான். அப்பொழுது முக்காடிட்டுக் கொண்டிருந்த ஓர் உருவம் விஜயனை நெருங்கி வந்தது. கூர்ந்து அவனைக் கவனித்தது. பிறகு ஏதோ காணாததைக் கண்டு விட்ட வியப்பும், ஆவேசமும் நிறைந்த குரலில், ''ஆகா, விஜயன் விஜயன்...! இவ்வளவு நாள் நீ எங்கே இருந்தாய் விஜயா... நீ திடீரென்று மறைந்ததால் எவ்வளவு விபரீதங்கள் நேர்ந்து விட்டன... இப்பொழுது வந்துவிட்டாய். வா, விஜயா... வா. காஞ்சனாவின் மாளிகைக்குப் போவோம்...'' என்று கூறி அவன் கரங்களைப் பிடிக்கவும், விஜயன் அவன் கரத்தை உதறி, ''யாரப்பா நீ... ஆள் தெரியாமல் பேசுகிறாய்... காஞ்சனா என்கிறாய்... மாளிகை என்கிறாய்...'' என்று அதட்டி, அவன் கரத்தை உதறினான்.

''தம்பி அப்படியெல்லாம் சொல்லி நீ தப்பிவிட முடியாதப்பா, என்னை மறந்துவிட்டாயா? என் வீட்டில் நீ தங்க வரவில்லையா? பிறகு மாயமாய் மறைந்துவிட்டாயே?'' என்றான் பைரவன்.

''ஓகோ! உண்மைதான். நான் மாயமாய் மறைந்துவிட வில்லையே. காஞ்சி நகரத்து மாய மந்திரங்களில் சிக்க வேண்டாம் என்று நகரைவிட்டு வெளியேறினேன். அதற்கும் இதற்கும் என்ன சம்பந்தம்? காஞ்சனா என்று யார் யாரையோ கூறுகிறாய்'' என்று விஜயன் துயரத்துடன் கூறும்போது சுந்தரி அவர்கள் அருகே வந்துவிட்டாள். பைரவன் சுந்தரியைக் கண்டு ஒரு கணம் திகைத்து, ''காஞ்சனா! வந்துவிட்டாயா?'' என்று கேட்டான். பிறகு தன் தவறு உணர்ந்து, ''ஓகோ! நீ காஞ்சனா இல்லையா? அன்று மத்தவிலாசத்தில் நடித்தவள் இல்லையா? நாடகம் முடிந்தவுடன் அந்த மகாவிரதி வந்து காரியத்தைக் கெடுத்துவிட்டான். பெண்ணே காஞ்சனாவும், நீயும் உருவ ஒற்றுமையுடன் திகழ்கிறீர்கள். ஹூம்... எல்லாம் குழப்பம். இதனால் என் வாழ்வே பாதித்துவிட்டது. இப்போது மீண்டும் இங்கே எதற்கு வந்துத் தொல்லை கொடுக்கிறாய்?'' என்றான்.

''ஏ! காபாலிகா! பேச்சை ஏன் ஓட்டுகிறாய்? உனக்கும் எங்களுக்கும் என்ன தொடர்பு? உன் வேலையைப் பார்த்துக் கொண்டு போ! வார்த்தைகளை அளந்து பேசு'' என்று விஜயன் அதட்டினான்.

பைரவன் அதுகேட்டு கடகடவென்று சிரித்து, ''கோபப் படாதே விஜயா! இந்தப் பிறவியில் தொடர்பில்லையென்றால், முன் பிறவியில் தொடர்பிருந்திருக்கலாம். அல்லது அடுத்த பிறவியிலாவது தொடர்பு இருக்கும். உன்னை நான் எந்த வேளையில் சந்தித்தேனோ, அதிலிருந்து என்னைத் துரதிர்ஷ்டம் பிடித்துக் கொண்டது. காஞ்சனாவின் அபிமானத்தை இழந்தேன்.

காஞ்சனாவையே இழந்துவிட்டேன். உன்னை அழைத்து வருவதாகக் கூறி வந்த இடத்தில் உன் பெயரைக் கூறி மற்றொருவன் சேர்ந்து கொண்டான். கடைசியில் அவளை அபகரித்துக் கொண்டே போய்விட்டான். இந்த நகரத்து மாபெரும் நாட்டிய ராணி காணாமலே போய்விட்டாள்'' என்று பைரவன் கூறும்போது அவன் குரல் தழுதழுத்தது.

விஜயனும் தன் கோபத்தைத் தணித்துக்கொண்டு, ''ஐயா, காபாலிகரே! வருத்தப்படாதீர்கள். காணாமல் போன காஞ்சனாவைக் குறித்து இளவரசரிடம் புகார் செய்தீர்களா?'' என்று கேட்டான்.

''எப்படியும் நான் இளவரசரைச் சந்திப்பேன். இந்த நாட்டிற்கு பேராபத்து காத்திருக்கிறது. சாளுக்கிய நாட்டு இளவரசன் மாறு வேடத்தில் இந்த நகரத்தில் அலைந்திருக்கிறான். முக்கியமான இடங்களை அறிந்து கொண்டு இந்த நகரத்தை விட்டுச் சென்றிருக்கிறான். செல்லும்போது நாட்டிய ராணியையுமன்றோ அபகரித்துச் சென்றுவிட்டான். பேராபத்தைக் குறித்து இளவரசரை எச்சரிக்கை செய்ய வேண்டுவது என் கடமை'' என்று பைரவன் பரபரப்புடன் கூறினான்.

விஜயன் சிரித்து சிந்தித்து, ''ஐயா, காபாலிகரே! நான் இளவரசரை இன்று எப்படியும் சந்தித்து விடுவேன். அப்போது இதைப்பற்றிச் சொல்லி விடுகிறேன்'' என்றான்.

''இளவரசரைச் சந்திக்கப் போகிறீர்களா? நானும் வருகிறேன் தங்களுடன். மாளிகைக்குச் செல்ல எனக்கு குறுக்கு வழி தெரியும். அவர் இந்த நேரம் நந்தவனத்தில் ஏகாந்தமாக இருப்பார். இந்தச் சமயத்தில் அவரைச் சந்திப்பதுதான் நல்லது. பிறகு அவரைப் பார்க்க முடியாது. நாளைக்கு என்றால் – அவருடைய திட்டங்கள் எப்படியோ! வாருங்கள் உடனே போவோம்'' என்று துரிதப்படுத்தினான்.

விஜயனும், சுந்தரியும், பைரவனும் மாளிகை நந்தவனத்தை அடைந்தனர். விஜயன் காவலர்களிடம் முத்திரை மோதிரத்தையும், இளவரசர் ஓலையையும் காட்டியதால் அவர்கள் நந்தவனத்திற்குள் செல்ல அனுமதிக்கப்பட்டனர்.

ஆனால், அங்கே அவர்கள் கண்ட காட்சி மூவரையும் திகைக்க வைத்தது.

இராஜசிம்மன் எதிரே காஞ்சனா அப்போதுதான் நடனமாடத் தொடங்கியிருந்தாள்.

காஞ்சனா என்று கூவ வாயெடுத்த பைரவன் வாயை விஜயன் பலமாக மூடினான்.

●


# 28. அவசரச் செய்தி

**கா**ஞ்சனா தன் நினைவு இல்லாமல் கீழே புல்தரையில் வீழ்ந்து கிடந்தாள். ஒரு கணம் இளவரசர்கூட அந்தத் திடீர் சம்பவத்தை எதிர்பார்க்கவில்லை. அவர் எழுந்து காஞ்சனாவின் அருகே வருவதற்குள், 'ஆ' என்று பயத்துடன் கூவி அருகே ஓடி வந்தாள் சுந்தரி. தன்னைப் போன்ற பெண் மயங்கி வீழ்ந்துவிட்டவுடன் அவள் உடல் பதறியது. சுந்தரி எதிர்பாராத விதமாக அங்கே ஓடியவுடன் விஜயனும், பைரவனும் அவளைப் பின் தொடர்ந்தனர்.

சுந்தரி பரபரப்புடன் காஞ்சனாவின் தலையைத் தூக்கித் தன் மடியில் வைத்துக் கொண்டாள். விஜயனும் பைரவனும் பாதத்தருகே அமர்ந்து கொண்டு, செய்வதறியாது திகைத்தனர். இராஜசிம்மனுக்கு அவ்வமயம் ஏது செய்வதென்று புரியவில்லை. கைதட்டிப் பணியாட்களை அழைத்தார். விஜயனும் அவரும் ஒரு கணம் இமை கொட்டாது பார்த்துக் கொண்டனர். "நான் அனுப்பிய ஓலையைப் பார்த்ததும் நீ இங்கே வந்தது ஏன்?" என்று கேட்பது போல் அந்தப் பார்வை தோன்றியது. 'நீங்கள் அனுப்பிய ஓலையின் உட்பொருள் என்ன – என்னையும் சுந்தரியையும் ஏன் தனித்தனியாகப் பிரிக்கிறீர்கள்? என்று கேட்பது போல் அவன் பார்வை பளிச்சிட்டது.

பைரவனோ தன் மனத்திலுள்ள வேதனை தாங்காமல் புலம்பவே ஆரம்பித்துவிட்டான்.

"காஞ்சனா, ஆடலழகியே! ஒருவருக்கும் பணியாத பெட்டகமே! அஞ்சாத நெஞ்சுடையாளே – நாழிகைக் கணக்குப் பாராமல் சலிப்பு உடலில் கொள்ளாமல் நாடகங்களில் நடிப்பாயே – மத்தவிலாசத்திலும் சரி, பகவத் அஜ்ஜுகத்திலும் சரி, உன் நடிப்பைக் கண்டு வியக்காதவரில்லையே. உன் உடலில் சோர்வு உண்டாகாதே. இன்று உனக்கு என்ன வந்துவிட்டது? என் பேச்சைத் தட்டி இதுவரை நீ செய்து வந்த செயல்களின் விளைவு இதுதானா? சாளுக்கிய நாட்டுச் சதிகாரனின் வலையில் சிக்கினாய். அவன் உன்னைக் கவர்ந்து சென்றதைப் பார்த்தபோது என்



உடல் பதறியது காஞ்சனா... நல்ல வேளையாக நீ அவனிடமிருந்து மீண்டு வந்தாய்... மீண்டு வந்தாயோ அல்லது அந்தச் சதிகாரன் உன்னை மறுபடியும் தன் வஞ்சகத் திட்டத்தை நிறைவேற்றக் கருவியாகக் கொண்டு விட்டுவிட்டானோ, இளவரசர் எதிரே உன்னை அவன் ஆடி மயக்க அனுப்பினானோ? அல்லது நீயே வந்தாயா? உன் நெடுநாள் ஆசையைப் பூர்த்தி செய்து கொள்ள நீயே இளவரசர் எதிரே வந்துவிட்டாயா? – கண்ணே காஞ்சனா! என் யோசனைகளைக் கேட்டுக் கொண்டிருந்த வரையில் உனக்கு எந்தவிதத் தொல்லையும் வரவில்லை. என்னை அலட்சியப்படுத்தினாய் – முகத்தை முறித்து விரட்டினாய். உனக்கு ஆபத்து ஏற்பட்ட இச்சமயத்தே நான் ஓடோடி வந்துவிட்டேனே...'' என்று பலவாறாக பைரவன் பிலாக்கணம் வைத்தான். இளவரசருக்கு அந்த நேரத்தில் அங்கு நடைபெறும் சம்பவங்கள் உண்மையா அல்லது ஏதோ சொப்பனமா என்ற ஐயம் எழுந்தது.

அவர் சற்று முன்பு காஞ்சனாவின் நடனத்தைக் கண்டது உண்மைதான். அந்தக் காட்சி அவர் மனத்தில் எத்தனை எத்தனையோ கற்பனைகளைப் படரவிட்டதும் உண்மைதான். காஞ்சனாவின் தந்தம் போன்ற கரங்கள் வளைவதையும், காந்தள் விரல்கள் அபிநய பாவத்துக்கு ஏற்ப நெளிவதையும், இடை அசைவதையும், பாதங்கள் ஜதிக்கேற்பத் தாளமிடுவதையும், முக உணர்ச்சி விதவிதமாக மாறுவதையும், விழிகள் சுழல் வதையும், இமைகள் மூடுவதையும், செவ் விதழ் துடிப்பதையும், நாசி விரிந்துத் தணிவதை யும், மார்பகம் விம்மி அடங்குவதையும், அவர் கண் இமைக்காமல் காணு வார். பிறகு இமைகளை மூடிக்கொண்டு அவ் வுருவத்தை விதவிதமாகக் கற்பனை செய்துகொள்வார். அவர் எதிரே மாமல்லபுரத்துச் சுந்தரி ஒரு வினாடி தோன்றுவாள். இருவரையும் ஒப்பு நோக்கிப் புதுவிதக் கற்பனைச் சித்திரம் அமைப்பார். பிறகு மெல்ல இமை திறக்கும். காஞ்சனா இப்போது மான் போல் துள்ளுவாள். மின்னல் போல் சீறுவாள். மயில் போல் மெல்ல நடப்பாள். மலர்ந்த தாமரையாவாள். குவிந்த குமுதமாவாள். முல்லைச் சிரிப்பாவாள். மோகன செண்பகமாவாள்; நீலக் கடலாவாள்; அதில் தவழும் வெண்கர அலையாவாள். வானப் பொழிலாவாள். அதில் பூத்துக் குலுங்கும் விண்மீன்களாவாள்.

இவ்வாறெல்லாம் காஞ்சனாவின் நாட்டிய ரூபத்தை வேறுவிதக் கற்பனையில் மாற்றி இராஜசிம்மன் உள்ளத்திரையில் ஓவியம் தீட்டுவார். பச்சையும், மஞ்சளும், சிவப்பும் கறுப்பும், காவியும், கறும் பச்சையும், சந்தன மஞ்சளும் அரளிச் சிவப்பும்,

குவளை நீலமும், கொஞ்சுங்கிளிப் பச்சையும் அலை அலையாக அவர் கண்முன் வந்து சலனமிடும். அழியா அந்த வண்ணங்கள் வடிவங்களாக மாறிச் சதங்கை கட்டி வந்து நிற்கும். கற்பனைக் கதைகூற ஏடெடுத்துப் பாடி நிற்கும். அவை ஒவ்வொன்றும் ஓராயிரம் கதை கூறும். உள்ளத்துணர்ச்சியைத் தூண்டிவிடும் ஏதேதோ நினைவுகள்.

நெஞ்சிலே கூடுகட்டி நிற்கும் அந்த நினைவுகள் சாளுக்கிய நாட்டு அஜந்தாவாக மாறும். அஜந்தாக் காடுகளில் குகை மண்டபங்களாக உருப்பெறும். குகை மண்டபத்துப் பாறைச் சுவரில் தீட்டப்பட்ட ..ட்வராகவும், மகளிராகவும் வடிவெடுக்கும். அந்தக் கந்தாவ மாதும், ஆடவரும், பெண்டிரும், அரசனும் அரசியும், நாட்டியப் பெண்ணும் மற்றும் அழகு வடிவங்களும் பேச ஆரம்பிக்கும்.

இராஜசிம்மன் பெருமூச்சு விட்டார். ஆகா; நம் இலடசியம் எங்கே? இந்தப் பரந்த பல்லவ நாட்டு அரியணை ஏறி அமர்ந்துப் போரும் பூசலுமாகக் காலத்தை ஓட்டவா நான் கனவு கண்டேன். இளவரசுப் பட்டம் சூடிக்கொண்டது சாளுக்கிய மன்னனைப் பூண்டோடு அழிப்பதற்காக மட்டும்தானா? காஞ்சியில் நடமாடும் ஒற்றர்களைத் தேடிப் பிடித்து அவர்களுக்கு மரண தண்டனை விதிப்பதற்காக மட்டும்தானா இளவரசர் எனும் மாபெரும் பட்டம்? அதற்காகவா இளம் போதில் காடும் மலையும் சுற்றியலைந்தேன்? சிற்ப அதிசயங்கள் எங்கு இருந்தாலும் பேரய்ப் பார்த்தேன். இரகசிய இரகசியமாக அஜந்தா காடுகளுக்குச் சென்றேன்?

ஆகா; அந்த நினைவை எப்படி மறப்பது? என் ஆருயிர் நண்பன் விஜயனுடன் அங்கே கழித்த இன்பப் போதினை எப்படி மறப்பது? அங்கே திகழும் ஜீவ ஓவியத்தைக் கண்டுவிட்ட பெருமூச்சும், விஜயனுடன் பற்பல திட்டங்கள் தீட்டியதும், அங்குள்ள சித்திரங்களைப் பற்றி நேரம் போவது தெரியாதபடி பேசியதும் மறந்து போகவில்லையே. என் ஆவலைக் கண்டு விஜயன் கூறிய வாக்குறுதியும் மறந்துவிடவில்லை. எப்படி யாவது அஜந்தா ஓவியங்களின் அமைப்பு முறையையும், அவை அழியாது இன்றளவும் காட்சியளிப்பதற்கான இரகசியத் தையும் அறிந்து வருவதாகவும் உறுதி கூறிய பிறகுதானே எனக்கு நிம்மதி வந்தது. என்றாவது அவன் வந்து விடுவான் என்று எனக்குத் தெரியும். அவன் வரும்போது காஞ்சியில் தங்கு தடையின்றி அவன் என்னை அடைய எனது முத்திரை மோதிரத்தையும் அளித்து வந்தேன். அதைப்போல் அவன் வந்துவிட்டான். வந்தவன் என்னைச் சந்திக்காமல் மாமல்லபுரம்

சென்றான். அழகு மங்கையின் மையலில் சிக்கி, வந்த காரியம் மறந்து வாழ்கிறான். கலைஞரின் வளர்ச்சிக்குக் காதல் ஒரு பெருந்தடை, அதிலும் விஜயனைப் போன்றவர்கள் இந்த நாட்டிற்காகச் செய்ய வேண்டிய மகத்தான பணிகள் பல எதிர் கொண்டிருக்கையில், வெறும் மானுட அழகில் மயங்கிக் கடமையை மறந்துவிடலாமா? அவனையும் – அவளையும் பிரித்துவிட வேண்டும்.

இராஜசிம்மன் மனத்தில் இவ்வாறு பல பலத் தோன்றின. எதிரே காஞ்சனா ஆடிக் கொண்டிருந்தாள். சந்திரனின் ஒளியில் அவள் நர்த்தனமிடும்போது இராஜசிம்மனின் கற்பனை பெரும் வடிவெடுத்து அவர் இதயத்தில் ஆடியது.

அவள் ஆடி, ஆடி, அகங்குழைந்து ஆடிப் பம்பரம் போல் நின்றாடி, பெருவெள்ளத்து நதிச் சுழல்போல் சுழன்றாடிச் சாய்ந்தவுடன்தான் இராஜசிம்மனுக்குப் புற உலகச் சிந்தனையே ஏற்பட்டது.

காஞ்சனா கீழே மயங்கி வீழ்ந்துவிட்டது ஒன்று மட்டும் நேர்ந்திருந்தால் இராஜசிம்மன் திகைத்திருக்க மாட்டார். அவள் கீழே வீழ்ந்தவுடனேயே சுந்தரி வந்ததும், அவளைத் தொடர்ந்து விஜயனும் பைரவனும் வந்ததும் வியப்பை ஊட்டின. பைரவனின் பிலாக்கணம் செவிக்கு வேதனையாயிருந்தாலும், பலபல உண்மைகளை எடுத்துக் கூறுவதாக இருந்தது.

கலைப் போர்வையிலும், கலைஞர்ப் போர்வையிலும் ஒற்றர்கள் காஞ்சியில் பரவியிருப்பது இளவரசருக்குத் தெரியும்; எனினும் இங்குள்ளவர்களையே தன் கைப் பாவையாக சாளுக்கியர்கள் பயன்படுத்திக் கொள்வர் என்பது அவருக்கும் புதுச் செய்தியாகவே இருந்தது. மேலும் பைரவனிடமிருந்து உண்மை அறிவதற்காக அவனிடம் பேச்சுக் கொடுத்தார் இளவரசர்.

பணியாட்கள் கொண்டுவந்த பன்னீரைக் காஞ்சனாவின் முகத்தில் தெளித்து ஒருபுறம் உபசாரம் நடந்து கொண்டிருக்கும் போது இளவரசர் மெல்ல பைரவனை நோக்கி, ''காஞ்சனாவை நீ முன்னமே அறிவாயோ?'' என்று கேட்டார்.

கண்கள் கலங்க, ''காஞ்சனாவுடன் நான் பத்தாண்டுகளாகப் பழகுகிறேன் இளவரசரே!'' என்று கூறினான் பைரவன்.

''ஓகோ! பத்தாண்டுகளுக்கு முன்னர் காஞ்சனா பிறக்க வில்லையா?'' என்று இளவரசர் கேட்டவுடன், நகைச்சுவையுடன் பேசும் இளவரசர் இதயத்தில் இப்போது மகிழ்ச்சி நிறைந்திருக்கிறது

என்ற எண்ணத்துடன் பைரவன் சற்றுத் தைரியமாகவே பேசலானான்.

''காஞ்சனா காஞ்சிபுரத்திற்கு வரும்போது பன்னிரண்டு வயது இருக்கும். சித்திரசேனை எனும் நடனக்காரி காஞ்சனாவை அழைத்து வந்தாள். அப்போதிருந்தே எனக்குக் காஞ்சனாவைத் தெரியும். ஒரு சமயம் என் மடியிலேயே தூங்கியிருக்கிறாள். காபாலிகையாக அவள் வேடம் பூண்டு ஆடும்போது பார்ப்பவர் அயர்ந்து விடுவார்கள்...''

''ஓகோ... அவள் உன்னுடைய சமயத்தில் சேர வில்லையா...?''

''காஞ்சனாவுக்கு எதிலும் நம்பிக்கையில்லை. அவள் இலட்சியமெல்லாம் இராஜநர்த்தகியாக வேண்டும் என்பதுதான். தங்கள் சமூகத்தில் அவளை அழைத்து வந்து அறிமுகப்படுத்தும் பொறுப்பை ஏற்றிருந்தேன்...''

''காபாலிகர் செய்ய வேண்டிய பணியை ஒரு பிட்சு செய்துவிட்டார். உன் பொறுப்பு நீங்கியது... அது சரி... நீங்கள் எங்கே வந்தீர்கள்...?'' என்று இராஜசிம்மன் கேட்டவுடன், பைரவன்கூட சற்று நடுங்கினான்.

''இல்லை... இல்லை... தங்களிடம் முக்கியமான செய்தி யொன்றைத் தெரிவிக்க வந்தேன்.''

''என்ன செய்தி...?''

''காஞ்சிமா நகரத்திற்குள் சாளுக்கிய இளவரசர் இவ்வளவு நாட்கள் நடமாடி முக்கியமான இடங்கள் அனைத்தையும் தெரிந்து கொண்டிருக்கிறார்...''

''அதை நான் அறிவேன்; உமக்கு இவ்வளவு நாட்கள் தெரிந்திருந்தும் அதை ஏன் தெரிவிக்கவில்லை? அதற்காக ஏன் தண்டனை தரக்கூடாது?''

இளவரசர் இப்படிக் கூறவும் பைரவன் நடுநடுங்கி, ''இல்லை... இல்லை... இளவரசே... சாளுக்கிய இளவரசர் என்பது எனக்கு சில நாட்களுக்கு முன்னர்தான் தெரியும். தங்களுடைய உயிர் நண்பர் விஜயன் என்று, சாளுக்கிய இளவரசரைத் தவறாகக் காஞ்சனா எண்ணிக் கொண்டாள். நான் செய்த பெரும் தவறு விஜயன் காஞ்சி நகருக்குள் வந்திருக்கிறான் என்பதைக் காஞ்சனாவிடம் தெரிவித்தது.''

''ஏன் தெரிவித்தீர்கள்?''

''காஞ்சனாவுக்கு விஜயனை அறிமுகப்படுத்த விரும்பி.''

''ஏன் அறிமுகப்படுத்த விரும்பினீர்கள்?''

''விஜயன் அழகன்.''

''அதனால்...''

''காஞ்சனாவைப் போன்ற கட்டழகிக்கு ஏற்றவன் என்பதால்...''

''விஜயன் என் நண்பரென்று உமக்கு எப்படித் தெரியும்?''

''நகருக்குள் வந்த அன்று இரவே அறிந்தேன்.''

''இரவு நேரத்தில் உம்மைத் தேடி வந்தானா விஜயன்? உம்மை அவன் முன்பே அறிவானா?''

''என்னை அறியமாட்டான். ஆனால் அவன் என் குடிலில் படுத்துறங்கிவிட்டான்.''

''தங்கள் குடில் எங்கே இருக்கிறது?''

''வடக்குக் கோட்டை வாயில் அருகேயுள்ள நந்தவனத்தின் நடுவே...''

''ஓகோ! விஜயனுக்கு நந்தவனத்தின் நடுவில் உள்ள உமது குடில் முன்பே தெரியும் போலும்...''

''பொழுது சாய்ந்துவிட்டது. கோட்டைக் கதவு தாளிடப்பட்டு விட்டது. விஜயன் வெளியே தங்கிவிட்டான்.''

பைரவன் இப்படிக் கூறியவுடனேயே இராஜசிம்மன் குறுக்கிட்டு, ''வெளியே தங்கிய விஜயன் உங்கள் குடிலுக்குள் வந்ததெப்படி? உங்கள் குடிலுக்கும் வெளிப்புறத்திற்கும் ஏதாவது வழி இருக்கிறதா?'' எனக் கேட்கவும், பைரவன் ஒரு கணம் திகைத்துப் பிறகு நடுக்கத்துடன் பேச்சை வேறு வழியில் திருப்ப முயன்றான். ஆனால் இளவரசர் விட்டுவிட வில்லை. ''பைரவரே, சொல்லுங்கள்! காஞ்சனாவை இராஜநர்த்தகி ஆக்க வேண்டும் எனும் உயரிய எண்ணம் கொண்டவரே சொல்லுங்கள். விஜயன் எப்படி மாயமாய் உங்கள் இல்லத்திற்கு வந்தான்? நீங்கள் சொல்லாவிடில் விஜயனையே கேட்டுத் தெரிந்து கொள்கிறேன்'' என்று கூறவும், பைரவன் நடுங்கும் குரலில், ''என் குடிலுக்குள் இரகசிய வழி ஏதும் இல்லை. காளிதேவியின் கோயில் இருக்கிறதே, அங்குதான் சுரங்கப்பாதை ஒன்று வெளியே வழிகாட்டுகிறது. அந்த வழியாகத்தான் சாளுக்கிய இளவரசர் காஞ்சனாவை அழைத்துச் சென்றார்...'' என்றான்.

இளவரசர் மௌனமாக இருந்தார். இதழ்க்கடையில் முறுவல் பூத்தது. என்ன நேருமோ எனும் அச்சத்துடன் நடுங்கிக் கொண்டிருந்தான் பைரவன்.

காஞ்சனாவை விழித்தெழச் செய்ய முயன்று கொண்டிருந்தாள் சுந்தரி.

இளவரசரை ஏற இறங்கப் பார்ப்பதும், பிறகு சுந்தரியையும் காஞ்சனாவையும் மாறி மாறிப் பார்ப்பதுமாக இருந்தான் விஜயன்.

இராஜசிம்மன் மாளிகையிலிருந்து பணிப்பெண்களை வரவழைத்துக் காஞ்சனாவை அந்தப்புரத்திற்குச் தூக்கிச் செல்லுமாறும், உடனே மருத்துவரை அழைத்து வருமாறும் கட்டளையிட்டார். விஜயன் ஏதோ கூற வாயெடுத்தபோது மிகவும் வேகமாக அரண்மனை மெய்க்காவலர் இருவர் ஓடோடி வந்து வணங்கினர். அவர்கள் அவ்வாறு அவசரம் அவசரமாக வந்ததற்கு காரணம் இருந்தது.

பேரரசர் பரமேச்வர வர்மரின் உடல்நிலை திடீரென மோசமாகிவிட்டது. அவரைக் கவனித்த அரண்மனை வைத்தியர் உடனே இளவரசரை அழைத்து வருமாறு கூறினார்.

இந்தச் செய்தி இராஜசிம்மனைப் பெரிதும் வருத்தியது. உடனே தந்தையைக் காணச் செல்ல முற்பட்டார். அந்த நிலையிலும் அவர் சுந்தரியைக் குறிப்பாக நோக்கிக் காஞ்சனாவுடன் அந்தப்புரத்திற்குச் செல்லுமாறு கூறினார்.

பைரவனும், விஜயனும் ஒருவரையொருவர் நோக்கியவாறு தனித்து நின்றனர்.

●



# 29. ஒரு நாடகம்

தாகத்திற்குத் தண்ணீர் கேட்ட காஞ்சனாவின் வேண்டு கோளைத் தட்ட முடியாமல் நீர் நிலை தேடிச் சென்று தண்ணீர் கொண்டு வந்த விநயாதித்தன் காஞ்சனாவைக் காணாது திகைத்தான். இங்குமங்கும் தேடினான். 'காஞ்சனா, காஞ்சனா' என்று கூவினான். அமைதியான அந்தப் பின் இரவு வேளையில் அவனது பயங்கரக் கூக்குரல் கேட்டுப் பறவைகள் விழித்து எழுந்துச் 'சடபட'வென்றொலி எழுப்பிப் பறந்தன.

விநயாதித்தன் உள்ளத்தில் ஆத்திரம் மிகுந்தது. கவலையும் சேர்ந்தது. ஏமாற்றமும் கலந்தது. அவன் உடலில் ஏற்பட்ட படபடப்பு எளிதில் அடங்க முடியாததாயிருந்தது. அவன் விழிகள் கனல் வீசின. கைக்குக் கிடைத்த இரையைத் தவறவிட்ட வேங்கையின் மன நிலையை அடைந்தான். ஏமாற்றம் என்றால் சாதாரண ஏமாற்றமன்று. அவன் திட்டங்கள் அனைத்தும் சரிந்து விழக் கூடிய ஏமாற்றம். அந்த மன நிலையை வர்ணிக்கவே முடியாது. பூமியைக் காலால் உதைத்தான். கிளைகளை முறித்தான். திட்டமிட்டபடி மாறுவேடம் பூண்ட சாளுக்கிய வீரர்களும் ஒவ்வொருவராக நானா திக்குகளிலிருந்தும் வரத் தொடங்கினர். ஏமாற்றமும் கோபமும் அவர்கள்மேல் பாய்ந்தன.

"உடனே ஓடுங்கள்; தேடுங்கள்" எனக் கர்ஜித்தான். என்ன தேடுவது? யாரைத் தேடுவது? என்று புரியாமல் அவர்கள் திகைத்தனர். அவர்கள் அங்கிருந்து வடபெண்ணை ஆற்றங்கரைக்கு இரவு பகல் பாராமல் சென்று தண்டிறங்கியிருக்கும் படைகளுடன் காஞ்சி நோக்கி வருவதென்றும் விநயாதித்தன் இடைவழியில் அவர்களுடன் சேர்ந்துக் கொள்வதென்றும் திட்டம். கீர்த்திவர்மனும் சேகரிக்கக்கூடிய உணவுப் பொருள்களுடனும் ஆயுதங்களுடனும் படைகளுக்கு






உதவ தக்க தருணத்தில் வருமாறு ஏற்பாடுகள் செய்து வைக்கப்பட்டிருந்தன.

இவை எல்லாமே இப்போது பாழாய்ப் போய் விடும் போலிருக்கிறதே – விநயாதித்தன் அங்கே இருந்த பாறை ஒன்றின்மீது சோர்ந்து உட்கார்ந்து விட்டான். அவன் உடலில் ஏற்பட்ட படபடப்பு தீரவில்லை. காஞ்சனா ஏமாற்றிவிட்டு ஓடிவிட்டாளா. அல்லது பல்லவச் சதிகாரர்களின் வேலையாக இருக்குமா – என்று பலவாறாக எண்ணினான். இரவு விரைந்து மறைந்து கொண்டிருந்தது.

காஞ்சனாவைத் தேடிச் சென்றவர்கள் வெறுங்கையுடன் திரும்பி வந்தனர். விநயாதித்தனின் சீற்றத்தின் அளவை அவர்கள் அறிவர். கோபம் யாரும் தடுக்க முடியாத அழிவுப் பாதையில் கொண்டு சேர்த்துவிடும் என்பதை அவர்கள் தெரிந்து கொண்டிருந்தனர். காஞ்சியைத் தாக்குவதில் முன் எப்போதும் இல்லாத கடும் பலம் அவனுக்கு வந்துவிடும் என்பதும் அவர்களுக்குத் தெரியும்.

பெருவள நல்லூரில் தன் தந்தை தோற்று புறமுதுகிட்டோடி வந்ததும், வாதாபி தீக்கு இரையாக்கப்பட்ட கொடுமையும் அப்போது அவன் கண் எதிரே தோன்றி அவன் சபதத்தை நினைவுபடுத்தின. நோய்வாய்ப்பட்டிருக்கும் தன் தந்தை விக்கிரமாதித்தனிடம் அவன் கூறிவந்த சூளுரை என்ன? அவனைப் பாலகன் என்றும் இளைஞன் என்றும், பல்லவ நாட்டின் மீது படையெடுத்துச் செல்ல இயலுமா என்ற சந்தேகமுங்கொண்ட தன் தந்தைக்கு உறுதியளித்து வந்தது என்ன ஆவது? சோர்வுற்று, கோழைபோல் திரும்புவதா? காஞ்சியில் நீ போய்ச் சாதித்தது என்ன என்று கேட்கும் தன் தந்தைக்கு அவன் என்னவென்று மறுமொழி கூறுவான்? கட்டழகி ஒருத்தியின் மையலில் சிக்கிய தாகக் கூறுவானா? அவளிடம்





சல்லாபமாக இருந்ததாகக் கூறுவானா? அவளைக் கவர்ந்து வந்து நடுவழியில் நழுவவிட்டதாகக் கூறித் தலைகுனிந்து கொள்வானா?

'இல்லை, இல்லவே இல்லை - நான் ஒருபோதும் ஏமாறமாட்டேன். தோற்றுப் போக மாட்டேன்' என்று கூறி வேகத்துடன் எழுந்தான். ஆனால் அவன் இன்னும் யாருக்காகவோ எதிர்பார்த்துக் கொண்டிருப்பது தெரிந்தது. கீர்த்திவர்மனிடமிருந்து செய்தி வரவேண்டும்.

வடபெண்ணை ஆற்றங்கரையில் சாளுக்கியப் படைகள் எண்ணிக்கையில் அதிகமில்லாவிடினும் திறமையும், பலமும் மிகுந்தவர்கள் கூடியிருந்தனர். பழிக்குப் பழி வாங்கும் மனப்பான்மை அவர்களிடமிருந்தது. விநயாதித்தன் அங்கு வந்து சேர்ந்தவுடன் படைகள் புறப்படும் நாளைக் குறிப்பிட்டு விடுவான். அதற்காகக் காத்திருந்தனர்.

கீர்த்திவர்மனுக்காக அன்றைய உச்சிப் பொழுது வரையில் விநயாதித்தன் எதிர்பார்த்தான். காட்டுப்புறத்திலே அவனுக்கு இருப்புக் கொள்ளவில்லை. அவன் கவனமெல்லாம் காஞ்சியைத் தாக்குவதன் மீதே இருந்தது. சலிப்புற்று அங்கிருந்துப் புறப்பட எண்ணியபோது கீர்த்திவர்மனிடமிருந்து அவனுக்குச் செய்தி கொண்டு வந்தான் மிகவும் நம்பிக்கையான ஆள் ஒருவன்.

அந்த ஓலையிலுள்ளதைப் பார்த்தவுடன் விநயாதித்தன் முகத்தில் களிப்பும் கடுமையும் மாறி மாறிப் பிரகாசித்தன. இதுவரையில் தான் செய்தவற்றைச் சுருக்கமாகத் தெரிவித்திருந்தான் கீர்த்திவர்மன்.

ஓவியரை மலைச்சரிவின் ஓரத்தில் ஒரு குடிலில் வைத்து முறிந்த அவரது காலுக்கு மருந்திட்டுக் கட்டி, அவருக்கு வேண்டிய

பணிவிடைகளை அன்பு ததும்ப நடைபெற ஏற்பாடு செய்திருந்தான் கீர்த்திவர்மன். ஓவியருக்குத் தாம் எங்கிருக்கிறோம் என்ற விபரமே முதலில் பிடிபடவில்லை. உணவு கொண்டு வருபவரையோ அல்லது மருந்து கொண்டு வருபவரையோ விபரம் கேட்டும் மறுமொழி பெற முடியவில்லை.

மலைக்காற்றும், அமைதியும் பறவைகள் விழித்தெழும் போதும், கூடடையும்போதும், இடும் ஒலியும், இரவிலே நரியின் ஊளையும், வீர் வீர் என்று காற்றடிக்கும் போது எழும் ஓசையும் காட்டுப் பூக்களின் மணமும் தவிர அவரால் வேறொன்றையும் அறிய முடியவில்லை. எழுந்து நடமாட இன்னும் எலும்பும் கூடவில்லை. மரக்கட்டிலில் சாய்ந்து கொண்டே அவர் நடந்து போனவற்றை எண்ணிப் பெருமூச்சுவிடுவார். நடுச்சாலையிலே வண்டி விழுந்ததும் குட்டிச் சித்தன் உதவி தேடி குடிலுக்கு விரைந்து சென்றதும் அவர் நினைவில் அடிக்கடி எழுந்து வேதனைப்படுத்தின. அந்தச் சிலை என்ன ஆகியதோ எனும் கவலை அவரைச் சூழ்ந்தது.

ஒருநாள் கீர்த்திவர்மனே அவரைக் காண வந்தான். அன்று அவனிடம் எல்லா விபரத்தையும் கேட்டு விடுவது எனும் உறுதியோடு இருந்தார் சிற்பி.

''சிற்பியாரே! சௌக்யமாயிருக்கிறீர்களா? ஒன்றும் குறைவுபடாமல் நடக்கிறதா? அமைதியான உள்ளத்தோடு சிந்திக்க முடிகிறதா?'' என்று கீர்த்திவர்மன் கேட்டான்.

சிற்பி மெல்ல நகைத்து, ''என் உடல் நலத்திற்கு ஒரு குறைவுமில்லை. ஆனால் உள நலம்தான் சரிவர இல்லை...'' என்றார்.

கீர்த்திவர்மன் அவர் இதயத்தைப் பிளந்து அறிவது போல் நோக்கி, ''என்ன, தங்களுக்கு மனவேதனையா? என்னால் நம்ப முடியவில்லை. இந்த அமைதியான சூழ்நிலையில் நீங்கள் கவலையின்றி இருப்பீர்கள் என்றல்லவோ எண்ணினேன். அதனால்தானே எந்தவிதத் துயரச் செய்தியையும் நான் தங்களிடம் கூறத் துணியவில்லை'' என்று கூறி அவரை ஓரக்கண்ணால் நோக்கினான்.

''துயரச் செய்தியா?' சிற்பி திடுக்கிட்டார். ''எந்தவிதமான துயரச் செய்தியாக இருக்கும்? குடிலில் தனியே இருக்கச் சொல்லி வந்த இளம்பெண் சுந்தரிக்கு ஆபத்து ஏதாவது ஏற்பட்டு இருக்குமா? அல்லது குட்டிச் சித்தனுக்கு ஏதாவது ஏற்பட்டு இருக்குமா? அதனால்தானே அவன் என்னைத் தேடி வரவில்லை. இல்லை எனில் எங்காவது அலைந்துத் திரிந்து என் இருப்பிடம்

கண்டிருப்பானே – ஒருவேளை சிற்பத்துக்கு ஏதாவது ஊறு நேர்ந்துவிட்டதா? இவர் ஏன் நம்மிடம் நடந்த செய்தியை மறைத்து விட்டார்?' அவர் இதயம் படபடவெனத் துடித்தது.

''ஐயா, துயரச் செய்தி என்றீர்களே, அதைக் கூறாமல் மறைத்து வைப்பதால் உமக்கு என்ன ஐயா லாபம். எனக்கு உதவி செய்து காப்பாற்றினீர்கள். அதற்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். ஆனால், முக்கியமான செய்தியை என்னிடம் கூறாததால் எப்படிப்பட்ட மாறுதல்கள் – விளைவுகள் ஏற்பட்டுவிட்டனவோ? என் சிற்பக் குடில் பாழாகிவிட்டதா? நான் படைத்த சிலைக்குப் பழுது ஏற்பட்டுவிட்டதா? என்னை அண்டிய சுந்தரிக்கு ஏதாவது ஆபத்து ஏற்பட்டுவிட்டதா? சொல்லுங்கள் ஐயா, சொல்லுங்கள்'' என்று சிற்பி பரபரப்பும், பயமும், துயரமும் நிறைந்த குரலில் கேட்டார்.

கீர்த்திவர்மன் மெல்ல உதடுகளைக் கடித்துக் கொண்டு ''ஐயா, உங்களுடைய உடல் இருந்த நிலையில் எந்தச் செய்தியையும் கூறினால் இதயம் தாங்காது. கலை உள்ளம் கருகிவிடும். உங்களைக் கொண்டு பலபல காரியங்களை முடிக்க எண்ணியிருக்கும் என்னைப் போன்றவர்களுக்கு அது பெரிய இழப்பாகும். அதனால் நான் வேதனைத் தருவனவற்றைக் கூறவில்லை. அப்படிக் கூறாதது தவறு என்றால் பொறுத் தருளுங்கள்'' என்று கூறி மேலும் ஆவலும் வேதனையையும் வளர்த்தான் கீர்த்திவர்மன். கட்டிலிலிருந்து மெல்ல எழ முயன்று சிற்பியார் கூவினார். ''நீங்கள் சொல்ல மாட்டீர்கள்; சொல்லவே மாட்டீர்கள். என்னால் இனி ஒரு கணம் கூட அமைதியாக இருக்க முடியாது. உருண்டோ, தவழ்ந்தோ, நொண்டியபடியோ நான் செல்கிறேன். வெளி உலகில் என்ன நேர்ந்து விட்ட தென்பதை அறிகிறேன். நடக்கக் கூடாதது நடந்து விட்ட தென்றால் நான் இந்த உலகில் வாழ்ந்து என்ன பலன்? இதோ இப்பொழுதே செல்கிறேன்'' என்று கட்டிலை விட்டு இறங்க முற்பட்டார்.

கீர்த்திவர்மன் மிகவும் வருந்துபவன் போல் நடித்து, பரபரப்புடன் அவரருகே ஓடி அவரை அணைத்துப் படுக்கையில் சாயவைத்து, ''என்ன செய்யத் துணிந்தீர்கள் சிற்பியாரே! முறிந்த எலும்புகள் கூடும் இந்தச் சமயத்தே நீங்கள் இப்படி நடக்க முயன்றால் என்ன ஆகியிருக்கும். என்றென்றைக்குமே நீங்கள் முடமாக வேண்டியதாகி இருக்குமே சிற்பியாரே! அதற்காகவா தங்களை நடுச் சாலையில் இருந்து காப்பாற்றினோம். பெரும்பழி எனக்கு ஏற்படுமாறு செய்து விட்டீர்களே. தங்களைக் காப்பாற்றும் பெரும் பொறுப்பு ஏற்றுக் கொண்டிருக்கும் எனக்கு

என் தலைவரிடமிருந்துத் தண்டனையன்றோ வாங்கித் தர முடிவு செய்துவிட்டீர்கள்'' என்று மிகவும் வருந்துபவன்போல் கண்களில் நீரை வரவழைத்துக் கொண்டு, மிகவும் பதறுபவன் போல் நடித்தான்.

சிற்பி நம்பிவிட்டார். மெல்லிய குரலில் ''ஐயா, தாங்கள் யார்? எனக்காகக் கண்ணீர் விடுகிறீர்களே தாங்கள் யார்? இந்த உலகத்தில் என் நலனைக் காக்கக் கூடியவர் பரமேச்வர வர்மர் ஒருவர்தான் என எண்ணியிருந்தேன். தாங்களும் ஒருவர் இருக்கிறீரா? என்மேல் தங்களுக்கு என்ன இத்தகைய அன்பு – என்னை ஏனய்யா நடுச் சாலையினின்று காப்பாற்றினீர்கள்?'' என்று கேட்டார் சிற்பி சற்று அமைதியுடன்.

கீர்த்திவர்மன் கண்களைத் துடைத்துக் கொண்டு, ''ஐயா தங்கள் மேல் அனுதாபம் உடையவர் இப்போது நான் ஒருவன் மட்டுமே என்று வைத்துக் கொள்ளுங்கள். பரமேச்வர வர்மர் உடல் நலமில்லாமல் இருந்து நினைவு தவறி பல நாட்களாகின்றன...'' என்றான்.

சிற்பி 'ஆ!' எனக் கூவி, ''ஓகோ! இதுதான் நீங்கள் சொல்லாது இதுவரை மறைத்த துயரச் செய்தியா?'' என்றார்.

கீர்த்திவர்மன் அவர் தோள்களைப் பிடித்து அவர் பதட்டத்தை அடக்குவதுபோல் தட்டிக் கொடுத்து, ''தங்களை நடுச்சாலையில் நானும் என் தலைவரும் கண்டு காப்பாற்றி இங்கே கொண்டு சேர்த்தவுடன் வண்டியிலிருந்து கீழே வீழ்ந்து கிடந்த சிற்பத்தை எடுத்து மீண்டும் வண்டியில் வைத்தோம். அதற்குள் கூனன் ஒருவன் பெண் ஒருத்தியை அழைத்துக் கொண்டு ஓடோடி வந்தான்...''

''ஆகா! கூனன் சுந்தரியை அழைத்து வந்துவிட்டானா. நல்லவேலை செய்தான்...''

''அவர்களையும் ஏற்றிக்கொண்டு, அவர்கள் போக வேண்டிய இடத்தைக் குறித்து விசாரித்தோம். மறுநாளே மன்னரிடம் அந்தச் சிலையைச் சேர்க்க வேண்டும் என்பதை அறிந்தோம்.''

''நானும் சிலையுடன் மன்னரின் சமூகம் சென்றேன்; அப்போதே மன்னருக்கு உடல்நிலை சரியில்லை. அவரை யாரும் காண முடியாது எனக் கண்டிப்பான உத்தரவு...''

''அடடா... சிலை வந்திருக்கிறது என்றால் அவர் உடல் நோய் பறந்து போயிருக்குமே. பாவம்! கலையுள்ளம் கொண்ட பரமேச்வர மன்னரைப் போரும் பூசலும் மீளவிடவில்லை. அதனால் அவர் தக்க தருணம் காத்திருந்தார். போர் முடிந்தது.

நானும் வந்து சேர்ந்தேன். முதலில் சிற்பத்தைக் காணத் துடித்தார் அவர். ஆமாம்; மன்னர் அதைக்கண்டு மகிழ்ந்தாரா இல்லையா?''

''என்னைக் கோபிக்கக் கூடாது சிற்பியாரே! நான் சொல்லப் போவதெல்லாம் கசப்பானவைகளே. அவற்றைச் சொல்வதன் மூலம் தங்களுக்கு வேதனை அதிகமாகுமென்றால் நான் இத்துடன் நிறுத்திக்கொள்கிறேன்.''

''ஊஹூம்... சொல்லுங்கள், சொல்லுங்கள். கசப்போ இனிப்போ நடந்ததை நான் அறியாது இருப்பதே மனத்துக்குப் பெரும் வேதனையை அளிக்கும். சொல்லுங்கள் சீக்கிரம் சொல்லுங்கள். மன்னர் சிலையைக் கண்டாரா இல்லையா?''

''சிற்பியாரே! நான் என்ன சொல்ல இருக்கிறது. மன்னரைத் தொந்தரவு செய்யக் கூடாது என்று அதிகாரிகள் கண்டிப்பாகக் கூறிவிட்டார்கள். ஆனால் நான் சற்று முன்யோசனையுடன், 'மன்னருக்கு உடல் நிலை சரியில்லையென்றால் இளவரசரைச் சந்திக்கவாவது அனுமதியுங்கள்'' என்று கெஞ்சிக் கேட்டுக் கொண்டேன்...''

''நல்லவேலை செய்தீர்கள்... நல்ல யோசனை கூறினீர்கள். இளவரசர் ஊர் திரும்பிவிட்டாரே? அவரும் பெரும் கலை ரசிகர் என நான் அறிந்திருக்கிறேன்... ஹூம் அப்புறம் நடந்ததைச் சொல்லுங்கள்...''

''இளவரசரிடம் செய்தி தெரிவிக்கப்பட்டது. இளவரசர் மாளிகையினின்று வெளியே வந்தார்.''

''ஆகா!''

''வெளியே வந்தவர் நீங்கள் செதுக்கிய சிலையைப் பார்க்கவில்லை. பிரம்மதேவன் அமைத்த பொற்சிலையையே கண் கொட்டாமல் பார்த்தார். அழகின் மறுபதிப்பாக நிற்கும் சுந்தரியையே கண் கொட்டாது பார்த்தார்... அவர் அவளைப் பற்றி விசாரிக்க ஆரம்பித்து விட்டார். உங்கள் இளவரசர் பெண் பித்துப் பிடித்தவர் போலிருக்கிறது. நான் நடுவே தொண்டையைக் கனைத்துத் தங்களுக்கு நேர்ந்த விபத்தைப் பற்றியும் சிற்பத்தைப் பற்றியும் கூறினேன். ஆனால், அவர் சுந்தரியுடன் பேசுவதிலும்



அவளது கலைத் திறமையைப் பற்றி விசாரிப்பதிலும் கவனத்தைச் செலுத்தத் தொடங்கினார்... இளவரசராம், இளவரசர்! கலை ஞானமில்லாதவர். காமாந்தகர். தந்தைக்கு உடல்நிலை சரியாக இல்லாத நேரத்தில் எதிரே வந்து நிற்கும் முன் பின் தெரியாத பெண்ணிடம் பல்லை இளித்துப் பேசி அவளைத் தனியே பேசுவதற்கு அழைத்துப் போய்விட்டார். நான் சிறிது நேரம் அங்கே இருந்தேன். எனக்குத் தலைக்கு மேல் வேலை. காஞ்சிக் கடைவீதியில் என் தலைவர் முத்தும் பவழமும் விற்க வந்திருக்கிறார். எங்களுக்குச் சீனம், புட்பகம், சாவகம் முதலிய நாடுகளில் வாணிபத் தொடர்பு உண்டு. உங்கள் இளவரசர் முன்னால் கைகட்டி நிற்க விருப்பமில்லை, வந்துவிட்டேன்...''

கீர்த்திவர்மன் இவ்வாறு கூறி நிறுத்தியவுடன் சிற்பி சற்றுநேரம் மௌனமாயிருந்துவிட்டு, பிறகு, ''பரமேச்வர வர்மரின் உடல் நிலை சரியாக இருந்தால் இந்தவிதக் கஷ்டங்கள் வந்திருக்காது. ஹூம். சுந்தரி இளவரசரின் அன்புக்குப் பாத்திரமாகிவிட்டாளா? அவள் இலட்சியமே அதுதான். பல்லவ நாட்டு ராஜ நர்த்தகியாக வேண்டும் என்பது அவள் உயர் இலட்சியம். பாவம் அவள் அனாதை. அவள் பல்லவ நாட்டிற்கு வந்த நோக்கமே வேறு. என் குடிலுக்கு வந்தவுடன் அவள் மனம் மாறிவிட்டது. அவள் கலைக்கு உரிய இடம் கிடைத்துவிடும்; ஆனால் என் கலை?'' என்று சிற்பி கூறியவுடன் கீர்த்திவர்மன் சற்றுநேரம் மௌனமாயிருந்தான். வாதாபியினின்று சுந்தரி காஞ்சிக்கு வந்த நோக்கம் என்ன – அவள் மனம் மாறிவிட்டாளா...? நாம் அறிந்ததும், சிற்பி கூறுவதும் ஒன்றுதான். சுந்தரியிடமிருந்து சாளுக்கிய நாட்டிற்கு இனி உதவியை எதிர்பார்க்க முடியாது. மேலும் சிற்பிக்கு வேண்டிய உதவியைச் செய்யத்தான் அவள் முயல்வாள் என்று உறுதியுடன் எண்ணிய கீர்த்திவர்மன் கடைசி கடைசியாக ஒரு செய்தியைச் சொன்னான்: ''சிற்பியாரே! அவள் எண்ணம் எப்படி வேண்டுமானாலும் இருந்துவிட்டுப் போகட்டும். உங்களிடம் வந்த பிறகு அவள் மனம் மாறியது என்கிறீர்களே - அவள் மனம் அடிக்கடி மாறுமோ? தங்கள் சிலை அங்கே புல் தரையில் கிடந்தது. கூனன் ஒருபுறமாக நின்றான். சுந்தரி தன் விழியைச் சுழற்றி இளவரசரை மயக்குவதற்கு மோகனாஸ்திரம் போடுகிறாள் – நான் சிலை இருப்பதை ஞாபகப்படுத்துகிறேன். அவர் அதைக் காதில் போட்டுக் கொண்டதாகத் தெரியவில்லை. ஆனால், சிற்பியாரே, அந்தப் பொல்லாத இளவரசர் போகும்போது என்ன சொன்னார் தெரியுமா? தன் வேலைக்காரர்களிடம், ''அந்த மூளிச் சிற்பத்தைத் தோட்டத்து வேப்ப மரத்தடியில் கொண்டு கிடத்துங்கள்'' என்றார்... என்ன ஆணவம்?''

கீர்த்திவர்மன் இதைக் கூறியவுடன் சிற்பி திகைத்து "என்ன சொன்னார் இளவரசர் – மூளிச்சிற்பம் என்றா?" என்று கூவினார்.


"ஆமாம் சிற்பியாரே! வண்டி கவிழ்ந்தபோது சிற்பம் கீழே வீழ்ந்து ஒரு கையை இழந்துவிட்டது. அதனால்தான் அவர் அப்படிக் கூறினார்" என்று அமைதியாகக் கூறினான் கீர்த்திவர்மன்.

"சிற்பம் உடைந்து மூளியாகிவிட்டதா? என் முதல் சிற்பத்திற்கு இந்தக் கதியா என்று கூவிக் கொண்டே தன் கால் உபாதையையும் மறந்து துள்ளி எழுந்துக் கட்டிலினின்று கீழே விழுந்தார். மறுகணம் மூர்ச்சையானார்.

கீர்த்திவர்மன் எண்ணியதை நிறைவேற்றிக் கொண்டு விட்டான். உடனே அவர் நாசியருகே சில தழைகளைக் காட்டவே சிற்பி கடுமையான மயக்கத்திலாழ்ந்தார். முன் ஏற்பாட்டின்படி வெளியே ஆயத்தமாக நின்ற வண்டிக்குள் அவரைத் தூக்கிச் சென்று படுக்க வைத்தான். வண்டிக்குள் மற்றும் இருவர் ஏறிக்கொண்டனர். வண்டி புறப்பட்டது. அது தெற்கே எங்கோ காஞ்சியை விட்டுத் தொலை தூரத்திலுள்ள ஊருக்குச் செல்வதற்கான பயணத்தைத் தொடங்கியது.

இந்தச் செய்தியைத்தான் ஓலையில் கீர்த்திவர்மன் சுருக்கமாக எழுதி, "சிற்பியாரை இனி பல்லவர்களுக்குப் பயன்படாதவாறு செய்துவிட்டேன். சுந்தரியும் காஞ்சியில் இருக்கிறாளாம். அவளை அங்கே விட்டு வைப்பதில் பலனில்லை. அவளையும் காஞ்சி யினின்று அப்புறப்படுத்திவிடுவேன்" என்று தெரிவித்திருந்தான்.

விநயாதித்தன் உள்ளங்கையில் ஓலை சுருண்டது. சற்று நேர மௌனத்திற்குப் பிறகு ஏதோ ஓர் முடிவுக்கு வந்தவனாக தன்னைச் சுற்றியிருந்தவர்களை நோக்கி, "நீங்கள் எல்லோரும் உடனே புறப்பட்டு வடபெண்ணைக் கரைக்குச் சென்று, அங்கிருக்கும் படைகளுடன் புறப்பட்டு வாருங்கள். நான் உங்கள் அனைவரையும் வழியிலேயே சந்திக்கிறேன். ஹூம் சீக்கிரம். ஒரு கணம் கூடத் தாமதப்படுத்த வேண்டாம். யானைப் படைகளைப் பின்னே நடத்தி வாருங்கள். வரும் வழியிலுள்ள ஊர்களைத் துவம்சப்படுத்துங்கள்" என்று கூறிப் பயங்கரமாக நகைத்தான். அவன் இதயத்தில் உள்ள பயங்கரத்தின் அளவைச் சிரிப்பொலி புலப்படுத்தியது.



# 30. பரமேச்வர வர்மரின் நிம்மதி

பெருவள நல்லூரில் சாளுக்கியப் படைகளுக்கும், பல்லவப் படைகளுக்கும் பயங்கரப் போர் நடைபெற்று இறுதியில் பரமேச்வர வர்மன் தலைமை நடத்திச் சாளுக்கியர்களைச் செத்தோம் பிழைத்தோம் என ஓடுமாறு செய்தார். வெற்றி பல்லவர்கள் பக்கம் என்றாலும் வெற்றி விழாவைக் கோலாகலமாகக் கொண்டாடும் தெம்பு அவருக்கு இல்லாமல் போய்விட்டது. ஏராளமான உயிர்ப்பலி வாங்கியது போர். பல ஆண்டுகளுக்கு உதவக்கூடிய உணவுப் பொருள்கள் அழிந்தன. நீர்நிலைகள் பாழாகி விளை நிலங்களுக்குத் தண்ணீர் தர முடியாத நிலையில் பல தடாகங்கள் வறண்டு கிடந்தன. பல கிராமங்களில் எதிரிகளால் ஏற்பட்ட பீதி தணியவில்லை.

பரமேச்வர வர்மன் நாடு நகரங்களைச் சுற்றிப் பார்த்தார். பெருமூச்சு விடுவதைத் தவிர அவருக்கு அச்சமயம் ஏதும் தோன்றவில்லை. மந்திராலோசனை சபையில் மந்திரி மண்டலத்தார் கூட சரியான கருத்தினைத் தெரிவித்து நாட்டுப் புனர் அமைப்புக்கு வழி கூற இயலாத நிலையில் இருந்தனர். பரமேச்வரரின் உறுதி குலையவில்லை. போர்க்களத்தில் ஏற்பட்ட விழுப்புண்களின் ரணம் ஆறும் முன்பே அவர் மீண்டும் யுத்த முயற்சிக்கு ஆயத்தங்கள் செய்யத் தொடங்கிவிட்டார். அந்தச் சமயத்தே தான் அவரது ஒரே புதல்வர் நரசிம்ம வர்மரும் கடல் கடந்த நாடுகளில் சுற்றுப்பயணம் சென்றுவிட்டுத் திரும்பி வந்தார். வந்தவுடனேயே மகனுக்கு இளவரசுப் பட்டம் சூட்டி இராஜசிம்மன் எனும் அபிடேக நாமத்தைச் சூட்டி அடுத்து அரியணை ஏறும் வாரிசு உரிமையை நிலைநாட்டினார்.

இராஜசிம்மனோ அதிகமாக அரசாங்க விவகாரங்களில் ஈடுபாடு கொள்ளவில்லை. சாவகத்திலும், புட்பகத்திலும் அவர் கண்ட கலைக் கோயில்கள் அவர் கண்முன் வந்து நின்றன. இளம் பருவத்தில் சாளுக்கிய நாட்டில் கண்ட சிற்ப சித்திர அதிசயங்கள் கண்முன் வந்தன. தனது பாட்டனாரும், முப்பாட்டனாரும் கடல்மல்லையிலும் மற்றும் தொண்டை

நாட்டுச் சிற்றூர்கள் பலவற்றிலும் படைத்த சிற்பப் பணிகள் எதிர் நின்று அழைத்தன. கலைத் தாகம் கட்டு மீறியது.

பரமேச்வர வர்மருக்குத் தன் மகனுடைய உள்ளக் கிடக்கை நன்றாகப் புரியும். ஆனால், நாட்டின் மானத்தைக் காக்க வேண்டிய சமயத்தில் கலை உயர்வுக்கு இடமில்லை என்பது அவர் கருத்து. இளவரசர் எண்ணமோ நேர்மாறானது. இராஜசிம்மன் கலைத்தாகம் கொண்டவர் என்பதால் போரைக் கண்டால் அஞ்சுபவரல்லர். பாட்டனார் நரசிம்ம வர்மரைப் போல சிறந்த வீரர். மல்லர். நரசிம்ம வர்மரின் மறு அவதாரமோ என்று எண்ணுமளவுக்குப் புகழ் பெற்றவன். மகனது தோள் வலிமையையும், வாள் திறமையையும், புத்திக் கூர்மையையும் பயன்படுத்த விரும்பினார் பரமேச்வர வர்மர்.


அதற்கு வாய்ப்பே ஏற்படாமல் இராஜசிம்மன் நாட்டின் பல பாகங்களில் அலைந்து கொண்டிருந்தார். அந்தப்போதில் சாளுக்கிய ஒற்றர்களின் நடமாட்டம் காஞ்சியில் அதிகரித்துவிட்ட செய்தி பரமேச்வர வர்மரின் செவிகளுக்கு எட்டியது. அரண்மனையின் நிலவறையினின்றே 'பரிவாதினி'யைக் கவர்ந்து செல்லுமளவுக்குச் சதிகாரர்களின் நடமாட்டம் அதிகமானபோது தான் பரமேச்வர வர்மரால், இராஜசிம்மன் மனத்தை ஓரளவுக்கு மாற்ற முடிந்தது.

எனினும் இராஜசிம்மன் மனம் பரிவாதினியைக் கண்டு பிடிப்பதிலேயே லயித்தது. இதற்கிடையில் மாமல்லபுரத்தினின்று சிற்பி காணாமற் போய்விடவே அவர் கவலை அதிகமாகியது. வாதாபியிலும் படை திரட்டப்படும் செய்தி வேறு அவர் செவிகளில் வீழ்ந்தது. பிறகு தான் இராஜசிம்மன் கவனம் படைவீரர்கள் பக்கமும், பல்லவ நாட்டு ஒற்றர்களின் திறமையை அதிகரிப்பதிலும் சென்றது.

சம்பவங்கள் மிகத் துரிதமாக முன்னேறி, மாறி மாறி நிகழ்ந்தன. காஞ்சி நகரத்து ஆடலழகி தன் முன் ஆட வந்ததும், விஜயனும் சுந்தரியும் ஒரே சமயத்தில் தன்னைத் தேடி வந்ததும், பைரவன் அதிர்ச்சி தரும் செய்திகளைக் கூறியதும் இராஜசிம்மனைப் பெரிதும் சிந்திக்கச் செய்தன. அந்தப் போதில்தான் மாளிகையினின்று அவசரமாகப் பணியாட்கள் வந்து முக்கியச் செய்தியைத் தெரிவித்தனர்.

∴ ∴ ∴

மன்னர் பரமேச்வர வர்மர் படுத்த படுக்கையில் கிடந்தார். மார்பு வலி அவரைச் சித்திரவதை செய்தது. சிவநாமத்தை எப்போதும் உச்சரித்தவாறு அவர் இருந்தார். விழுப்புண்களின் வலியைத் தாங்கிய அவரால் இதய நோயைத் தாங்க இயலாத நிலை ஏற்பட்டது. அரண்மனை மருத்துவர் விரைந்து வந்தார்.



மருத்துவர் ஆலோசனையின் பேரில்தான் இளவரசர் உடனே அங்கு அழைக்கப்பட்டார்.

இராஜசிம்மன் கவலை நிறைந்த உள்ளத்தோடு தந்தை அருகே விரைந்தார். இராஜசிம்மன் வந்திருப்பதறிந்த பிறகு தான் மன்னர் கண் திறந்தார்.

''மகனே! வந்துவிட்டாயா?'' என்று மெல்லக் கேட்டார்.

''ஓடோடி வந்துவிட்டேன் தந்தையே! திடீரெனத் தங்களுக்கு இப்படி நேர்ந்துவிட்டதே'' என்று கூறிக் கலங்கினார் இளவரசர்.

''வருந்தாதே மகனே! இனி ஆக வேண்டியதைக் கவனி. என் முடிவை நான் என்றோ எதிர்பார்த்தேன். ஆனால் வாதாபிக்குச் சென்று சாளுக்கிய குலத்தைப் பூண்டோடு நசுக்குவதற்குத் தெம்பளித்து அதை நிறைவேற்ற ஆண்டவன் என்னை இதுவரை வாழவைத்தான். என் நாளிலேயே அந்தச் செயல் நிறைவேறும் என்று எண்ணினேன். நமது நாட்டைப் பாழ்படுத்திச் சென்ற பன்றிக் கொடியானைப் பழிக்குப் பழி வாங்குவது என் காலத்திலேயே நிறைவேறும் என்று எண்ணினேன். அது நிறைவேறாமல் நான் போகிறேன்...'' பரமேச்வர வர்மர் சற்றுப் பேச்சை நிறுத்தினார்.

அதிகமாகப் பேசக்கூடாது என்று வைத்தியர் மிகவும் வேண்டிக் கொண்டார். இராஜசிம்மன் கண்களில் நீர் தளும்ப, ''தந்தையே! தங்கள் விருப்பத்தை உடனே நிறைவேற்றுவதற்கு வேண்டியவற்றை யெல்லாம் செய்துவிட்டேன். நாள்தோறும்

எனக்குச் சாளுக்கியர்களின் நடவடிக்கைகளைக் குறித்துச் செய்தி வந்தவண்ணமிருக்கின்றன. ஆனால், இதற்கிடையிலே காணாமல் போன பரிவாதினியையும், சிற்பியாரையும் நான் கண்டுபிடித்தாக வேண்டும். அதற்குள் போர் மூண்டுவிட்டால் சிற்பியின் உயிருக்கே ஆபத்து ஏற்படலாம். பொறாமையால் பரிவாதினியையும் உடைத்தெறியத் தயங்க மாட்டார்கள் சாளுக்கியர்கள். ஒருவரும் அறியா வண்ணம் போதுமான படைகளைத் திரட்டி வருகிறேன். தென்பெண்ணைக் கரையில் அவர்கள் போர்முறை பழகிக் கொள்கிறார்கள். அடுத்த பௌர்ணமிக்குள் ரிஷபக் கொடி வாதாபியில் பறக்கும்...'' என்றார்.

பரமேச்வர வர்மர் கண்களை மூடியவாறு மகனின் சூளுரையைக் கேட்டுக் கொண்டிருந்தார். அவர் முகத்தில் தனி விதத் தெளிவு புலப்பட்டது. அவரது இதய நோய் கூட நீங்கி விட்டது. ஓய்வாக அவரை உறங்க விட்டுவிட்டு அனைவரும் அங்கிருந்தகன்றனர்.

இராஜசிம்மன் நேரே காஞ்சனாவின் உடல்நிலையை கேட்டறியக் கன்னிமாடம் சென்றார். வெளியே விஜயனும், பைரவனும் மரத்தடியில் அமர்ந்திருந்தனர். மாடத்துக் கூடத்தில் காஞ்சனா நன்றாக உறங்கிக் கொண்டிருந்தாள். கவலை ஏதுமில்லை என அங்கிருந்தோர் தெரிவித்தனர். இளவரசரைக் கண்டவுடன் சுந்தரி எழுந்து வணங்கி நின்றாள்.

''குட்டிச் சித்தனிடம் இரண்டு ஓலைகள் கொடுத்து அனுப்பினேன். உன்னிடம் மட்டும்தானா அவன் ஓலைக் கொடுத்தான்?'' என்று இளவரசர் கேட்டார். சுந்தரி ஒரு கணம் மௌனமாயிருந்துப் பிறகு கூறினாள்; ''இல்லை... இல்லை விஜயனிடமும் கொடுத்தான்.''

''ஓவியப் பணியை உடனே தொடங்க வேண்டும் என்று பனைமலைக்குச் செல்லுமாறு நான் விஜயனிடம் சொல்லியிருந்தேன்.''

''அதற்காகத்தான் விஜயனும் என்னுடன் இங்கு வந்தார்...''

''உன்னுடன் இங்கே வருவானேன்?''

''நானும் அவரும் சேர்ந்தே பனைமலைக்குச் செல்லப் போகிறோம்...''

சுந்தரி கூறிய இந்தத் திடமான வார்த்தையை இளவரசர் எதிர்பார்க்கவில்லை. அவர் மேலும் பேச விரும்பாமல் விஜயனிடம் சென்றார். தன் மனத்திலுள்ளவற்றை வெளியே புலப்படுத்த விரும்பாமல், ''விஜயா... இருட்டி விட்டதே...!

இங்கேயே ஏன் இருக்கிறாய்? வா, மாளிகைக்குப் போவோம். இவ்வளவு நாட்கள் பேச முடியாதவற்றை யெல்லாம் பேசிப் பொழுதை இனிய முறையில் கழிப்போம்'' என்றார்.


அவர்கள் இருவரும் செல்வதைப் பார்த்துக் கொண்டிருந்த பைரவன் தனக்குள் ஏதோ முடிவுக்கு வந்தவன் போல் தலையை ஆட்டிவிட்டு எங்கோ சென்றான்.

ஃ ஃ ஃ

கடவுளின் விதிப்படித்தான் எல்லாம் நடக்கின்றன. அரச குடும்பத்து நிகழ்ச்சிகள் அதற்கு விதிவிலக்கல்ல. இராஜசிம்மன் மாளிகைக்குச் சென்று விஜயனுடன் பேசிக் கொண்டிருந்த அடுத்த நாழிகைக்குள் மிகவும் துக்ககரமான செய்தி யொன்று இளவரசரை வந்தடைந்தது.

அது அவருக்கு மட்டும் துயரத்தைத் தரும் செய்தி அன்று; வடபெண்ணை ஆறு முதல் காவிரி வரை விரிந்து பரந்து கிடக்கும் பல்லவ நாட்டையே கலக்கும் துன்பகரமான பெரும் செய்தி. நாட்டு மக்களெல்லோரும் கண்ணீர் விடும் செய்தி.

சிவ பக்தனான பரமேச்வர வர்மர் இறைவன் திருவடியில் என்றும் நீங்காது இருக்கச் சென்றுவிட்ட அச்செய்தி கேட்டு எங்கும் சோக கீதம் பரவியது.



# 31. போர் முரசம்

**கா**ஞ்சி நகரமே பெருந் துயரில் ஆழ்ந்திருந்தது. எங்கும் சோக கீதம். மாமல்லன் எனும் சிறப்புப் பெயர் பூண்ட நரசிம்மவர்மரின் பெயரன் சிவபாத சேகரன் பரமேச்வர வர்மரின் மறைவை மக்கள் அண்மையில் எதிர்நோக்கவில்லை. பெருவள நல்லூர் போருக்குப் பிறகு அரசர் அவ்வளவாக மாளிகையை விட்டு வெளியே வராமலும், நாட்டில் சுற்றுப்பயணம் செய்யாமலும் உளச் சோர்வுற்றுக் கிடந்தது அறிந்து நாட்டு மக்கள் அஞ்சியவண்ணம்தான் இருந்தனர். உடலில் ஏற்பட்டிருந்த பல ரணங்கள் திறமை மிகுந்த மருத்துவரால் தீர்க்கப்பட்டாலும் கூட உள்ளத்துப் புண்ணை மாற்ற எந்த மருத்துவராலும் இயலவில்லை. சாளுக்கியர்கள் பல்லவ நாட்டில் நடத்திய கொடும் செயல்தான் அவர் உள்ளத்து வேதனையை வளர்த்தது. இரவெல்லாம் அவருக்கு உறக்கம் வருவதில்லை. பழைய சம்பவங்கள் அவர் மனக்கண் முன் வந்து பயங்கரமாக நின்று வேதனையை வளர்த்தன. தளரா உறுதி படைத்த, அயரா வலிமை படைத்த, பரமேச்வர வர்மனுக்கு அப்படி என்ன வேதனைத் தருபவை நடந்துவிட்டன?

∴ ∴ ∴

**கா**ஞ்சி மீது சாளுக்கியர்களுக்கு எப்போதுமே ஒரு கண். மகேந்திர வர்மனது கால இறுதியிலும், நரசிம்மவர்மன் ஆட்சிக் காலத் தொடக்கத்திலும் அவர்கள் காஞ்சி மீது மோதித் தோல்வி கண்டிருக்கின்றனர். சாளுக்கிய மன்னன் இரண்டாம் புலிகேசிக்கு ஏற்பட்ட தோல்வியை மாற்றி சாளுக்கிய நாட்டின் மானம் காக்க முயன்றான் அவன் மகன் விக்கிரமாதித்தன். நரசிம்மவர்மன் வாதாபியைக் கொளுத்தி அழித்த செயலுக்குப் பழிக்குப் பழி வாங்கத் தக்க பொழுதை எதிர்பார்த்துக் கொண்டிருந்தான். நரசிம்ம வர்மனுக்குப் பிறகு அவர் மகன் இரண்டாம் மகேந்திர வர்மன் சிறிது காலம் ஆட்சி புரிந்தான். தந்தையின் தீரத்தையும், பாட்டனாரின் திறமையையும் அவன் கொள்ளவில்லை. பின் பட்டமேறிய பரமேச்வர வர்மரோ பல்லவ குலப் பெயரை வாழ வைக்கத் திட்டமிட்டார். அப்போதுதான் விக்கிரமாதித்

தனுக்குத் தக்க சூழ்நிலை ஏற்பட்டது. பெரும் படையுடனும், பழி வாங்கும் மனப்பான்மையுடனும் காஞ்சி மீது படையெடுத்தான்.

பரமேச்வர வர்மர் பட்டமேறிய சில ஆண்டுகளுக்குள்ளாகவே இந்தத் தாக்குதல் ஏற்பட்டதால் பரமேச்வர வர்மரால் படையெடுப்பை எதிர்த்து நிற்க முடியவில்லை. கோட்டைக்குள் ஓடி ஒளிந்து கொள்ள வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. விக்கிரமாதித்தனால் காஞ்சிக் கோட்டையைக் கைப்பற்ற முடியவில்லை. அகழிகளைக் கடக்க இயலவில்லை. வெற்றி பெற்றும் பலன் கிடைக்காததால் விக்கிரமாதித்தன் காஞ்சியைக் கைவிட்டுப் பட்டி தொட்டிகளையெல்லாம் அழித்துக் கொண்டே தெற்கு நோக்கிச் சென்றான்.

பரமேச்வர வர்மன் இத்தருணத்தைத்தான் எதிர்நோக்கி யிருந்தார். போதிய படைகளைத் திரட்டினார். விக்கிரமாதித்தன் தெற்கே செல்லும் நோக்கம் அவரறிவார். காவிரியைக் கடந்து பாண்டிய நாட்டில் புகுந்து பாண்டியன் நெடுமாறனுடன் போர் புரிந்து பாண்டிய நாட்டை வெல்லும் நோக்கம் விக்கிர மாதித்தனுக்கு இருப்பதை அரசியல் அறிவில் சிறந்த பரமேச்வரன் அறிந்து கொண்டார். தக்க பலத்துடன் பரமேச்வரனும் தெற்கு நோக்கிச் சென்று பல்லவபுரத்தில் தங்கியிருந்தார்.

பரமேச்வர வர்மன் எதிர்நோக்கியது போல் ஆகிவிட்டது. விக்கிரமாதித்தனின் பெரும் படைப்பலம் பாண்டிய வீரர்களின் முன் எம்மாத்திரம். விக்கிரமாதித்தன் திட்டம் பலிக்கவில்லை. மீண்டும் காஞ்சியை நோக்கிச் செல்வோம் என்ற எண்ணத்துடன் விரைந்த சாளுக்கியரைப் பரமேச்வர வர்மன் பெருவளநல்லூர் அருகே தடுத்து நிறுத்தினார்.

கடல் போன்ற பெரும் வீரர்களும், பரிகளும், கரிகளும் நடந்து சென்றதால் ஏற்பட்ட தூசி கதிரவனை மறைப்பது போல் தோன்றியது. முரசு இடி முழக்கம் போல் அதிர்ந்தது. வாட்கள் மின்னின. கரிய யானைகள் கார் மேகங்களைப் போல் அசைந்தன. குதிரைகள் அணிவகுத்து நின்ற நிலை கடல் அலை போல் காட்சியளித்தன. யானைகளின் பிளிறலும், அவற்றின் குழப்பமும் கடல் சுழல் போல் தோன்றின. வீரிட்ட சங்கநாதம், பயங்கரத்தை ஊட்டியது. கத்திகளும், கேடயங்களும் ஒன்றோடு ஒன்று மோதி வானிலும் சுழன்றன. போரில் படுகாயமுற்று வீரர்கள் வீழ்ந்துக் கிடந்தனர். பெரும் யானைகளால் முறிக்கப்பட்டுக் கிடக்கும் மரஞ்செடிகளைப் போல் காட்சியளித்தனர். வீரர்கள் ஏந்திய வேலுடனும் வாளுடனும் காட்டில் வளர்ந்து நிற்கும் பெரும்

விருட்சங்கள் போல் நின்றனர். வீரர் வில்லை வளைத்து அம்பை விடுத்தபோது ஏற்பட்ட ஓசை மரங்கள் மீது மோதியதால் உண்டாகும் ஓசைபோல் காற்று பயங்கர ஒலியை எழுப்பியது. யானைகள் ஒன்றோடு ஒன்று மோதிக் கொண்டு தந்தங்கள் ஒன்றோடு ஒன்று குத்திச் சிக்குண்டு எடுக்க முடியாத நிலையில் நின்றன. வாளோடு வாள் மோதின. மல்லரும் மல்லரும் மோதினர். தண்டாயுதமும் தண்டாயுதமும் தாக்குண்டன. செந்நீரும், யானை மதநீரும் போர்ப் பூமியிலே பிரவாகம் போல் ஓடின. எங்கும் கை இழந்தவரும், காலிழந்தவருமாகக் கிடந்தனர். போர் பூமியிலே ஓடும் இரத்த ஆற்றின் பாலம் போல் நின்ற யானையின் மீது அமர்ந்திருந்த போர் வீரர்கள் ஒருவரோடொருவர் பொருத பொழுது வெற்றித் திரு யார் பக்கம் சாய்வது என்று சந்தேகம் எனும் ஊஞ்சலில் ஆடினாள். தலையணிகள் சரிந்தன. மாலைகள் அறுந்தன. கழல்கள் உடைந்தன. தோள் கவசங்கள் நசுங்கின. பேய்க்குலம், ரசிக்கும் பெருவிழா, தலையற்ற முண்டங்கள் முரசொலிக்கு ஏற்பத் தாளம் இடுவதுபோல் கூத்தாடின.

பெரும் புயல் அடித்து ஓய்ந்தது போன்ற நிலை. அமைதி; எங்கும் அமைதி. போர் முடிந்த இரவு போய் செங்கதிர் வானில் தோன்றியபோது சாளுக்கிய மன்னன் விக்கிரமாதித்தன் தன்னந்தனியனாய் உயிர் பிழைத்தால் போதும் என்று தப்பி ஓடினான். ஆயிரம் பதினாயிரம் வீரர்களுடனும் பல பரி கரிகளுடனும் கூர்மையான வேல், வாளுடனும், உள்ளத்தில் பழிவாங்கும் உறுதியுடனும், செக்கச் சிவந்த கண்ணுடனும், போர் வெறியுடனும் வந்த விக்கிரமாதித்தன் உடன் வந்தவர் அனைவரையும் இழந்து, ஆடை குலைந்து, கிழிந்து, அஞ்சி, மனம் வெதும்பி, சோர்வுற்று வாதாபியை நோக்கி விரைந்தான்.

தோல்விக்குப் பின் வெற்றி கண்ட பரமேச்வர வர்மன் அதிசயம் எனும் குதிரையில் ஏறி, எருதுக் கொடியை எக்காளத்துடன் பிடித்து அரிமா நடைபோட்டு பெருமிதம் முகத்தில் தவழ வெற்றித் திருவைப் பெற்ற களிப்புடன் காஞ்சி நோக்கி வந்தார். வெற்றி; மகத்தான வெற்றி. பரமேச்வரர் உடலில் நூற்றுக் கணக்கான விழுப்புண்கள். இருந்தாலும் ஜயபேரிகையின் ஒலி புத்துணர்ச்சியை ஊட்டியது.

காஞ்சி நகரை அடைந்ததும் கோலாகல விழா கொண்டாட்டத்தில் தலை சிறந்த நிகழ்ச்சியாய் பெருவளநல்லூரில் நடந்த வெற்றியைச் செப்புப் பட்டயத்தில் தீட்டச் சொல்லி மகிழ்ந்தார் பரமேச்வர வர்மன். வெற்றிமாலை சூடிய பரமேச்வர வர்மன் உள்ளத்தில் மட்டும் ஏனோ ஏக்கம். பளபளக்கும் செப்புத் தகட்டில் வெற்றிப்புகழ் வடமொழியிலும், தீந்தமிழிலும்

பாடப்பட்டும் அவர் உள்ளம் அமைதியடையவில்லை. அதுதான்; தோற்று ஓடிய விக்கிரமாதித்தனைத் தொடர்ந்து சென்று தன் பாட்டனார் மாமல்லர் செய்ததுபோல் நகரைத் தீக்கு இரையாக்கி, எப்போதும் தொல்லை கொடுத்துக் கொண்டிருக்கும் சாளுக்கியப் பரம்பரையைப் பூண்டோடு அழித்துவிட வேண்டும் என்ற வெஞ்சினத்தை நிறைவேற்ற உடல்நிலை இடம் கொடுக்கவில்லை. படை வீரர்களும் சித்தமாக இல்லை. அழிபட்ட கிராம மக்கள் போருக்கு ஆதரவு தரவில்லை. பொருளாதாரச் சீர்குலைவு ஏற்பட்டு விடுமோ எனும் பீதி வேறு இருந்தது.

இவை எல்லாம் பரமேச்வர வர்மரின் மன பலத்தைப் பாதித்தாலும் அவர் திருக்குமாரன் இராஜசிம்மன் வெளிநாடுகளைச் சுற்றிப் பார்த்துத் திரும்பிய பிறகு களிப்படைந்தவராய்ப் புது உற்சாகம் கொண்டார். சாளுக்கியர்களை நசுக்க வேண்டியதன் உள்ளக் கிடக்கையை எடுத்துக் கூறினார். இந்தச் சமயத்தே மீண்டும் பரமேச்வர வர்மனின் உடல் நிலை கவலைக்கிடமாகியது. ஆனால், திடீரென முடிவு இவ்வளவு சீக்கிரம் நேர்ந்துவிடும் என்று யாரும் எதிர்பார்க்கவில்லை. அவருடைய மன வேதனை அதிகமாகி அவரது உடலில் படபடப்பு ஏற்பட்டு உயிருக்கே உலை வைத்தது அந்தச் செப்புப் பட்டயம்தான்.

பல்லவ ஒற்றர்கள் வாதாபியினின்று ஓர் ஓலைச் சுருளைக் கொண்டு வந்தனர். அவற்றில் சாளுக்கிய நாட்டுச் செப்புப் பட்டயத்தில் எழுதப்பட்டவை. அப்படியே வரி விடாமல் குறிக்கப்பட்டிருந்தன. பரமேச்வர வர்மர் ஒற்றர்களை நோக்கிக் கேட்டார்: ‘‘செப்புப் பட்டயங்களில் சாளுக்கியர்களின் வெற்றியைப் புகழ்ந்து எழுதப்பட்டிருக்கின்றன என்பதைத் தாங்கள் எவ்வாறு அறிந்திருந்தீர்கள்’

‘‘அரசே! தென்னகத்தில் விக்கிரமாதித்தன் தங்களிடமும் பாண்டியனிடமும் தோற்று ஓடிவந்ததை மறைப்பதற்காக தன் நாட்டிலே வெற்றி விழா கொண்டாட ஏற்பாடு செய்தான். படை வீரர்கள் அழிந்து போனாலும் காஞ்சியையும், மதுரையையும் வென்றுவிட்டதாக மக்கள் நம்புமாறு செய்தான். அதை உறுதிப்படுத்த பல முறைகளைக் கையாண்டான். பெரும் கம்பங்களிலே தான் அடைந்த வெற்றியைச் செதுக்கி வைத்தான். போதாததற்குச் செப்புப் பட்டயங்களில் எழுதச் சொன்னான்.’’

பரமேச்வர வர்மர் ஓலைகளில் காணப்பட்ட குறிப்புகளைட் படித்தார். அவர் வாய் முணுமுணுத்தது: ‘‘விக்கிரமாதித்தன்

தன் தந்தையின் பட்டத்தை வலிமையால் அடைந்தான்; பகைவரைப் பல நாடுகளில் வென்று உரிமையை நிலை நாட்டினான். ஹூம்; என்ன மமதை விக்கிரமாதித்தனுக்கு! பகைவரை வென்றானாமே வென்று!'' என்று கூறிப் பெருமூச்சு விட்டார். பிறகு செப்புப் பட்டயக் குறிப்புகளைப் படிக்குமாறு ஒற்றர் தலைவனுக்குக் கட்டளையிட்டார்.

''ஸ்ரீ வல்லபனாகிய விக்கிரமாதித்தன் நரசிம்மவர்மனுடைய பெருமையை அழித்தான்... மகேந்திரன் செல்வாக்கை அழித்தான்; பரமேச்வர போத்தரசனை வென்றான். மகாமல்லன் மரபை இவன் அழித்தமையால் இராசமல்லன் எனும் விருதுப் பெயர் பூண்டான். தென்னாடெனும் மங்கையின் ஒட்டியாணமான காஞ்சியைப் பிடித்து அவளை வசப்படுத்தி மணம் புரிந்து ஸ்ரீ தேவியின் அன்பைப் பெற்றான். யாரும் ஏற முடியாததும் உடைக்க முடியாததுமான காஞ்சி மதிலை உடைத்து, ஆழமான அகழியைத் தாண்டி காஞ்சியைக் கைப்பற்றினான்...''

பரமேச்வர வர்மர் உடல் கொதித்தது. நரம்புகளில் ஓடும் இரத்தமெல்லம் ஒன்று சேர்ந்துத் தலைக்கு ஏறிவிட்ட உணர்ச்சி ஏற்பட்டது. அப்பொழுதே பாய்ந்து சென்று விக்கிரமாதித்தனைக் கொன்றுவிட வேண்டும் எனும் ஆவேசம் எழுந்தது. ''போதும் போதும் நிறுத்துங்கள். மாமல்லன் பெருமையை அழித்தானாம். அதனால் இராஜமல்லன் என்று பெயர் பூண்டானாம்! கற்பனைக்கும் பொய் கூறுவதற்கும் சாளுக்கியர்கள் சளைத்தவர் களல்லர் போலிருக்கிறது. பெருவள நல்லூரில் விக்கிரமாதித்தன் பெற்ற அடியை மறந்து விட்டான் போலிருக்கிறது. அதை மறைப்பதற்காக இப்படித் தன் நாட்டு மக்கள் நம்புவதற்குப் பொய்ச் சாசனம் செய்து விட்டானா?'' என்று கூவினார்.

மௌனமாக நின்று கொண்டிருந்த ஒற்றர் படைத் தலைவன். ''அரசே! சாளுக்கிய மன்னன் நாட்டு மக்களிடையே இப்போது ஏற்படுத்தி வரும் புது உற்சாகம் மற்றொரு பெரும் போருக்கு அடிகோல்வதாகிறது.விக்கிரமாதித்தன் முதுமைப் பருவத்தாலும், பலஹீனத்தாலும், படுத்த படுக்கையாயிருந்ததாலும் அவன் மகன் விநயாதித்தன் காஞ்சி மீது படையெடுப்பதற்கு வேண்டிய ஆயத்தங்களைச் செய்துவிட்டான். அச்செய்தி கிடைத்ததும்தான் நாங்கள் எச்சரிப்பதற்காக ஓடோடி வந்தோம்.''

ஒற்றர் தலைவன் இப்படிக் கூறுவதற்குள் பரமேச்வர வர்மர் படுக்கையினின்று எழுந்திருப்பவர் போல் துள்ளி, ''அந்தச் செய்தி எனக்கு முன்பே கிடைத்துவிட்டது. அவர்கள் திட்டங் களை முளையிலேயே கிள்ளி விட வேண்டும் என்பதுதான்


என் எண்ணம். உடனே இளவரசரை அழைத்து வாருங்கள்'' என்று கட்டளையிட்டார்.

இராஜசிம்மன் தந்தை அழைப்பதைக் கேட்டு விரைந்து வந்து, தந்தை கூறியற்றை அமைதியாகக் கேட்ட பிறகு படையெடுத்துச் செல்வதற்கான முயற்சிகளை உடனே செய்வதாகவும் அரசரை அமைதியாக உறங்குமாறும் கூறி விட்ட கன்ற சிறிது நேரத்தில் அந்தத் துயரச் செய்தி இராஜசிம்மனை வந்தடைந்துவிட்டது.

சிவ பாதங்களை என்றுமே சிந்தையில் கொண்டிருந்த பரமேச்வர வர்மர் என்றும் அரன் அடிகளைவிட்டு அகலாதிருக்கச் சென்றுவிட்டார்.

நகரம் அழுதது; நாடு அழுதது. எட்டுத் திக்குகளிலும் பரமேச்வர வர்மர் ஈசன் திருவடி எய்திய செய்தி பரவியது. சாளுக்கியர்களைத் தவிர மற்றவர்கள் வருந்தினர். பெண்ணை யாற்றங்கரையை அப்போதுதான் அடைந்திருந்த விநயாதித்தனும் இந்தச் செய்தியை எதிர்பார்க்கவில்லை என்றாலும் போர் முறையைச் சற்று மாற்றி மேலும் ஏராளமான படைகளுடன் காஞ்சி செல்வதற்குத் திட்டமிடலானான்.

●



## 32. காதலும் கடமையும்

**கா**ஞ்சி நகர மக்கள், தங்களுக்கு ஏற்பட்ட துயரத்தினின்று ஒருவாறு தெளிந்தனர். அவர்கள் துக்கநிலை மாற சாளுக்கியப் படையெடுப்பு எனும் வதந்தி உதவியது. போரிலே வாளெடுத்துச் சுழற்றி மாற்றானை நிலைகுலைய வைக்க அவர்கள் அஞ்சவில்லை; ஆனால் விரோதிப் படையினர் போருக்குப் பிறகு மறைந்திருந்து ஊர்களைக் கொளுத்தியும், நெற் களஞ்சியத்தைச் சூறையாடியும் ஏரிகளைப் பாழ் செய்தும் அட்டூழியங்கள் புரிவதைத்தான் அவர்களால் தாங்க முடியவில்லை. பத்தாண்டுகளுக்குப் பிறகும் பாழடைந்த ஊர்களை அவர்களால் செப்பனிட இயலவில்லை. குறைந்து போன நெற்களஞ்சியத்தை மீண்டும் நிரப்ப விளைச்சல் இல்லை. வெளிநாட்டு வணிகர்கள் விரும்பிக் கேட்கும் பொருள்களை விற்கும் திறமையும் குறைந்துவிட்டது. இந்த நிலையில் மீண்டும் போர் என்றால் அவர்கள் திடுக்கிடுவதில் வியப்பில்லை. நகரத்து வீதிச் சந்துகளில் அவர்கள் கூடிக் கூடி நின்று பேசத் தொடங்கினர்.

கன்னி மாடத்தில் தங்கியிருந்த காஞ்சனாவும், சுந்தரியும் இவையேதும் அறியாமல் தங்கள் வருங்காலச் சிந்தனைகளில் ஆழ்ந்திருந்தனர். கன்னிமாடத்துப் பணிப்பெண்கள் ஒரே சாயல் உடையவர்களாய் இருக்கும் இருவரையும் மாறி மாறிப் பார்ப்பதும், மறைவாகச் சென்று வியந்துப் பேசுவதும், புதிதாகத் தாங்களே கற்பனை செய்து கொண்டு பேசிச் சிரிப்பதுமாகக் காலம் கழித்தனர். ஒரு பணிப்பெண் காஞ்சனாவிடம் கேட்டேவிட்டாள். ''அம்மா, நீங்களும் சுந்தரி அம்மாவும் ஒரே முக ஜாடையுடன் இருக்கிறீர்களே அக்கா தங்கைகளா?'' என்று.

தன்னொத்த வடிவத்துடன் சுந்தரி விளங்குவது காஞ்சனா வுக்குத் தெரியும். அதன் காரணம் படைத்தலைவனைத்தான் கேட்க வேண்டும் எனும் முடிவுடன் அவளிருந்திருக்கிறாள். உருவ ஒற்றுமையால் எத்தனையோ தடுமாற்றங்கள் நேர்ந்து

விட்டதும் அவளறிவாள். தன் மாளிகையின் வாயிலில் வழக்கத்துக்கு விரோதமாக நின்று கொண்டிருந்த போது, தன்னைச் சுந்தரி என்று காவலாளர் அழைத்து வந்துவிட்டனர்; இல்லாவிடில் மாளிகையில் சுகபோகத்துடன் இருக்கலாமே என்று எண்ணும் போது அவளுக்குச் சுந்தரியின் மீது கோபங்கூட வந்தது. இப்போது மட்டுமென்ன – உருவ ஒற்றுமையுடன் தனக்குப் போட்டியாக வந்துவிட்டாள். விஜயனின் அன்புக்குப் பாத்திரமாகியிருக்கிறாள். நாம் அடையக் கனவு கண்ட விஜயன் சுந்தரிக்கு – இதை எண்ணும்போது அவளுக்குக் கோபம் பொங்கியது. அதற்கு ஏற்றாற்போல் அன்று விஜயன் சுந்தரியைத் தேடி வந்துவிட்டான். கன்னிமாட நந்தவனத்திலிருந்து கூப்பிட்டனுப்பினான். விஜயன் வந்த செய்தி அறிந்துத் துள்ளும் உள்ளத்துடன் சுந்தரி விரைந்தாள். அவள் குதூகலமாகக் குதித்தவாறு செல்வது கண்ட காஞ்சனாவின் உள்ளத்தில் பொறாமை கொழுந்துவிட்டது. அவள் செல்வதையும், மரங்களடர்ந்த இடத்திலுள்ள மேடைக்கருகே விஜயன் காத்திருக்கும் இடம் நோக்கி அவள் விரைவதையும் பல கணியின் வழியாக கண்ட காஞ்சனா சிறிது நேரத்திற்கெல்லாம் ஒருவரும் அறியாமல் அங்குச் சென்று மறைந்து நின்று விஜயனும், சுந்தரியும் பேசிக் கொள்வதைக் கேட்கலானாள்.

❖ ❖ ❖

**சு**ந்தரியைக் கண்ட விஜயன் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவே இல்லை. சுந்தரியை அள்ளித் தழுவத் துடித்தன கரங்கள். ஆனால் இளவரசரின் அன்புக் கட்டளை அவனைத் தடுத்தது. மிகக் கஷ்டத்துடன் உணர்ச்சியை அடக்கிக் கொண்டு, "சுந்தரி உனக்கு இங்கே ஒரு குறைவு மில்லையல்லவா?" என்று கேட்டான்.

சுந்தரி மெல்ல நகைத்து, "ஆயிரமாயிரம் சௌகரியங்கள் இருந்தும் என்ன பலன்? மாமல்லபுரத்துக் குடிலில் நாம் வாழ்ந்ததை விடவா இந்த மாளிகை உயர்ந்துவிடும்? வாவிக் கரையில் அமர்ந்து நேரம் போவது தெரியாமல் பேசுவோம். மானும், மயிலும் கிளியும் உடனிருந்து நம்மை உற்சாகப் படுத்தும். நீங்கள் விதவிதமான சித்திரங்களைத் தீட்டுவீர்கள்..." என்றாள்.

விஜயன் பெருமூச்சுவிட்டு, "இப்போது விதவிதமான சித்திரங்கள் வரைந்து கொண்டுதான் இருக்கிறேன். மானும் மயிலும் அருகிருக்கத்தான் செய்கின்றன. ஆனால் நீ இல்லையே என்ற குறைதான் சுந்தரி. உனது வளைந்த கரங்கள் நெகிழும்



இன்ப வடிவைக் காண முடியவில்லையே என்ற குறைதான் சுந்தரி...'' என்று கூறியபோது சுந்தரி பரபரப்புடன், ''நீங்கள் கவலையை மறந்து இளவரசருடன் அமர்ந்து ஓவியம் வரைகிறீர்கள். நானோ இங்கே சோர்ந்த உள்ளத்துடன் இருண்ட வருங்காலத்தை எண்ணி வேதனையுடன் இருக்கிறேன். விஜயா! இளவரசர் என்ன கூறினார்; பனைமலைக்கு உங்களைப் போகச் சொல்லிவிட்டாரா?'' என்று கேட்டாள்.

விஜயன் மெல்ல நகைத்து, ''சுந்தரி, நீ நினைப்பது போல் நான் இளவரசர் அருகில் அமர்ந்து வண்ண வடிவங்களைப் படைத்துவிடவில்லை. என் மனக் கண் முன் எழும் உன் திரு உருவங்களைத்தான் நான் ஓவிய வடிவில் கண்டேன். உன் வட்ட முகத்தையும், எள்ளுப்பூ நாசியையும், அல்லி விழியையும் கற்பனை செய்து கொண்டு அவற்றிற்கு உயிர் கொடுத்துக் கொண்டு இந்த நாட்களை ஓட்டினேன். நேற்றுவரையில் எனது நண்பர் இளவரசர்; இன்று சக்கரவர்த்தி. பெருமைமிகு பல்லவ நாட்டு மாமன்னர். அவருடன் நான் பழைய உரிமையுடன் பழக முடியுமா? அவரெதிரே ஏராளமான பிரச்னைகள். மந்திரி மண்டலத்தாரும், கோட்டத் தலைவர்களும் கூடிக்கூடிச் செய்யும் ஆலோசனைகளில் அவர் ஆழ்ந்திருக்கும்போது என் நினைவு ஏது அவருக்கு? என் நினைவும், நான் இளவயது நண்பன் என்ற எண்ணமும் – அவருக்கு வராத வரையில் எனக்கு நல்லது தான் என்று எண்ணிக் கொண்டிருந்தேன். ஆனால் கலையுள்ளம் மிக்க மாமன்னர் இராஜசிம்மன் என்னைப் பனைமலைக்குப் புறப்படுமாறு உத்தரவு பிறப்பித்துவிட்டார். அங்கே கோயில் ஒன்று கட்டி அதில் சித்திரங்களைத் தீட்டும் பணியை உடனே தொடங்குமாறு கூறிவிட்டார். எனக்குத் துணையாகப் பணியாட்களும், மற்ற உபகரணங்களும், குதிரையும், வண்டியொன்றும் புறப்படுவதற்கு ஆயத்தமாக இருக்கின்றன. உன்னிடம் விடைபெற வந்தேன் சுந்தரி'' என்றான்.

சுந்தரிக்குப் பேரதிர்ச்சி ஏற்பட்டது. விஜயன் காஞ்சியை விட்டுப் புறப்பட ஆயத்தமாகிவிட்டான். நம்மை விட்டுப் போகிறானா. விஜயனைப் பிரிந்து நாமிருந்து இங்கே என்ன செய்யப் போகிறோம் என்று கவலை கொண்டவளாய், ''விஜயா, உங்களுடன் நானும் வரவேண்டாமா? என்னை விட்டு விட்டு நீங்கள் மட்டும் சென்று என்ன செய்யப் போகிறீர்கள்? காஞ்சியிலே எனக்கு என்ன வேலை? தங்களை விட்டுப் பிரிந்து நான் என்ன செய்யப் போகிறேன்'' என்று குரல் தழுதழுக்கக் கூறினாள்.

விஜயனும் கவலை தோய்ந்த முகத்தினனாய், ''சுந்தரி அரசரின் கட்டளை அவ்வாறாக இருக்கிறது. எனக்கு வேண்டிய வசதிகளைச் செய்துத் தந்து என் கலைத் திறமையைப் புலப்படுத்துமாறு கூறுகிறார். சிற்பியை எப்படியும் தேடிக் கண்டுபிடித்து பனைமலைக்கு அனுப்புவதாக உறுதி கூறுகிறார். தன் தந்தையின் கட்டளைப்படி புதுமுறையில் பாறைகளை அடுக்கிக் கோயில் கட்டத் திட்டமிட்டிருக்கிறாராம். உன் நாட்டியத் திறமையை அவர் பெரிதும் பாராட்டுகிறார். உன்னைக் காஞ்சியிலேயே இருக்குமாறு செய்து ராஜநர்த்தகியாக்கப் போகிறாராம்'' – என்று கூறினான்.

''நான் முன்பு செய்த சபதம் தங்கள் நினைவிலில்லையா?'' சுந்தரி துக்கம் நெஞ்சையடைக்கக் கேட்டாள்.

''ஆம்; நினைவிலிருக்கிறது சுந்தரி. உன் பாதங்கள் மாற்றார் முன் ஆடா என்று கூறியிருக்கிறாய். இப்போது சற்றுச் சிந்தித்துப்பார் சுந்தரி. மாமன்னராகிவிட்டார் இராஜசிம்மன். அவர் இட்டது சட்டம் இனிமேல். அவர் மனம் வைத்தால் உன்னைப் பெரும் பீடத்திலேற்றி அமர்த்தி வைக்கலாம். ஏன் – தன் இதயத்தில்கூட இடம் கொடுக்கலாம்...''

''என்ன சொல்கிறீர்கள் விஜயன்? உங்கள் மனம் குழம்பியிருக்கிறதா?''

''தெளிவாகத்தான் சொல்கிறேன் சுந்தரி. எனது இளம் பிராய நண்பர் என்று நான் உரிமை கொண்டாடிய காலம் போய்விட்டது. மாபெரும் சக்கரவர்த்தியுடன் சரிசமானமாக நின்று பேசவும் கூச்சமாக இருக்கிறது. கலை உள்ளத்தில் நாங்கள் இருவரும் ஒன்றுபட்டவர்கள். என் கலையை மதிக்கிறார் அவர். அதற்காகக் கடமை ஒன்றையும் எனக்களித்திருக்கிறார். அந்தக் கடமைதான், அஜந்தாவில் நான் கண்ட ஓவியங்களைப் போல் தமிழகத்தில் தீட்ட வேண்டும் என்பது. அதற்காகத்தானே என்னை இப்போது தெற்கே ஓர் ஊருக்கு அனுப்புகிறார்...''

''இருக்கலாம் நட்பை மறந்து உங்களைக் கலைஞராக அரசர் மதிக்கலாம். கடமையை உங்கள் கரங்களில் அளிக்கலாம். அதற்காகக் காதலைத் தியாகம் செய்யச் சொல்கிறாரா... இளம் உள்ளங்களைப் பிரிப்பதுதான் உங்கள் மன்னரின் திட்டமா? என் நெஞ்சிலே மறைந்திருந்த வெஞ்சினத்தை மீண்டும் கிளர்ந்தெழச் செய்கிறாரே! பல்லவ நாட்டினரே நம்பிக்கைத் துரோகமிழைப்பவர்கள் என்ற திடமான முடிவுக்கு வரச்

செய்கிறாரே உங்கள் நண்பர் – மாமன்னர். அவர் சிறந்த கலா ரசிகராயிருக்கலாம். இளம் பருவத்தினின்று பிரியாத ஆருயிர் நண்பராயிருக்கலாம்; ஆனால் இதயமற்றவர் உங்கள் மன்னர். பாவம், இதே பல்லவ நாட்டினரின் ஏமாற்றுதலுக்குப் பலியாகி, நெஞ்சம் துடித்து இறந்தாள். எனக்கும் போதுமான எச்சரிக்கை செய்திருக்கிறாள். அவற்றை மறக்காமல் நெஞ்சுருதியோடு பழிவாங்கும் மனப்பான்மையோடு வந்த நான் மாமல்லபுரத்தில் மனம் மாறினேன். தங்களோடு நெருங்கிப் பழகிய பிறகு என் இதயத்தில் பழிவாங்கும் மனப்பான்மையையே அடியோடு நீக்கினேன். மேலும் என் தந்தை என் கண் எதிரே கொடிய விலங்குகளால் தாக்கப்பட்டு உயிருக்கு மன்றாடி, தன் பிழைக்குப் பரிகாரமாகக் கண்ணீர் விட்டபோது நான் புது மனுஷியாகவே மாறிவிட்டேன். ஆனால், இப்போது நம்மைப் பிரிக்கும் மன்னரின் மனப்பான்மை என்னைச் சீறி எழச் செய்கிறது. தங்களுக்கு உள்ளம் என்பது ஒன்றில்லையா? நம் காதல் மொட்டைக் கருகச் செய்யும் அவரை எதிர்த்து நிற்கத் தங்களால் முடியாதா? அல்லது ஒருதலைக் காதலாகப் பேதைப் பெண் நான் மட்டும் தங்களை என் இதயத்தில் அமர வைத்திருக்கிறேனா? என் மீது தங்களுக்கு அன்பில்லையா? ஒரு பகல் பழகினாலும் உயிரை ஈயும் தன்மை வருவது இருக்க, நாம் எவ்வளவு நாள் கூடி மனம் விட்டுப் பேசினோம். கற்பனைக் கோட்டைகள் கட்டினோம்! அவற்றை மறந்து விட்டீர்களா விஜயன்? என்னை விட்டுவிட்டு நீங்கள் மட்டும் பனைமலைக்குச் சென்று என்ன செய்யப்போகிறீர்கள் விஜயன்...? சொல்லுங்கள். விஜயன், கடைசியாகச் சொல்லுங்கள், விஜயன். என்னை விட்டுவிட்டுப் போகத்தான் போகிறீர்களா?'' சுந்தரி விம்மினாள்.

விஜயன் அவள் கண்ணீரைத் துடைத்து அவள் கேசத்தை வருடி, அவளது காந்தள் விரல்களைத் தன் விரல்களோடு பின்னிக்கொண்டு மற்றொரு கரத்தை அவளது தோள்களைச் சுற்றி வளைத்து அணைத்துக் கொண்டு தன் மூச்சு அவள் முகத்தில் வீசும்படி, தன் பேச்சு அவள் இதழ்களுக்கு மட்டும் புரியும்படி, தன் இதய ஒலி அவள் இதயத்துக்கு மட்டும் எட்டும்படி நெருங்கி நின்று, ''சுந்தரி, காதலா கடமையா என்ற கேள்வியை எழுப்பி விடாதே. காதலும் கடமையும் இரண்டுமே முக்கியம். ஓவியத்தின் மீது காதல்; உன் மீது அழியாக் காதல். இரண்டுமே நிறைவேறச் செய்வது என் கடமை. நீ காஞ்சியிலும், நான் பனைமலையிலும் இருப்பதால் காதல் வளராதா? அரசரின் மனத்தில் என்றாவது ஒரு நாள் நம் தூய காதலின் பெருமை

புலப்படத்தான் செய்யும். நம் இருவரையும் பிரிக்கும் தன் செயல் தவறு என்பது தெரியத்தான் செய்யும். என் இதயத்தினின்று உன்னைக் கீழே இறக்கி வைக்கச் செய்யும் எந்த முயற்சியும் நடவாது என்பதும் புரியத்தான் செய்யும். அப்போது அவரே உன்னை அழைத்துக் கொண்டு என்னிடம் வருவார். தன் பிழைக்குக் கண்ணீர் விடுவார். உன் கரத்தையும் சேர்த்து வைப்பார். அதுவரையில் பனை மலையில் நான் வெறிச்சோடிக் கிடக்கும் வானவெளியைப் பார்த்தவாறு இருப்பேன். புதரும், செடியும் மண்டிக்கிடக்கும் சுற்றுப்புறத்தை ஏக்கத்துடன் பார்த்துக் கொண்டிருப்பேன். என் எதிரே மலைபோன்ற துன்பத்தைத் தாங்கி நிற்பது போல் தோன்றும்... அதுவரையில் காத்திரு சுந்தரி. வட்டமதியை நகரும் மேகங்கள் மறைத்து விடுவதில்லை. உயர்ந்த மலைச்சிகரங்கள் உதய சூரியனைத் தடுத்துவிடுவதில்லை. சுந்தரி, இப்போது எனக்கு இன்முகத்துடன் விடைகொடு...''

சுந்தரியின் இதய தாபம் பெருமூச்சாக வெளிவரத் துடித்தது.

''நீங்கள் கூறியதைக் கேட்டால் அரசர் நம் காதலுக்குத் தடை ஏற்படுத்தவே விரும்புகிறார் என்று சொல்லுங்கள். தூய காதலைத் தடுக்கும் ஒருவரது சதியை உடனே முறியடிக்காமல் நீங்கள் இருக்கலாமா?''

''சுந்தரி; நம் காதலைத் தடுக்கும் எந்தச் செயலையும் தகர்த்துவிடும் தைரியம் எனக்குண்டு. ஆனால், அதையும் மீறிக் கடமை நிற்கிறது. நான் காதலிப்பதற்காகவா காஞ்சிக்கு வந்தேன்? நானும் இராஜசிம்மனும் அஜந்தாக் காடுகளில் சுற்றியலைந்தோம். குடைவரை மண்டபங்களில் அழியாது விளங்கிய சித்திர அற்புதத்தைக் கண்டு களித்தோம். அப்போது நாங்கள் இருவரும் ஓர் சபதம் செய்து கொண்டோம். நான் ஓவியத்தில் திறமை பெற்று, அழியா வர்ணச் சேர்க்கை முறை அறிந்து வரும்போது எவ்வித இடையூறு இருந்தாலும் மீறி எனக்கு ஆதரவளிக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டேன். அவ்வாறே செய்வதாக உறுதியளித்த அவர், தன் விரலில் அணிந்திருந்த முத்திரை மோதிரத்தை எனக்கு அடையாளமாகக் கொடுத்தார். அவர் என்னிடம் ஒரு வாக்குறுதி பெற்றார். சித்திரக் கலையில் தேர்ந்து, வர்ணச் சேர்க்கை இரகசியம் அறிந்து வரும் நான் எக்காரணம் கொண்டும் திறமையைப் பிற நாட்டவர்க்கு உபயோகப்படும்படி செய்வதில்லை என்ற உறுதியை அவர் பெற்றுக் கொண்டார். நான் முறையாகக் குருவிடம் சித்திரக் கலையைக் கற்றேன்.

கடுமையாக முயன்று அழியா வர்ணச் சேர்க்கை அறிந்தேன். காஞ்சிக்கு ஓடோடி வந்தேன். உடனே இளவரசரைக் காண வேண்டும் எனும் துடிதுடிப்புடன். இப்போது நீயே சொல் சுந்தரி, நான் வந்தது காதலுக்கா கடமைக்கா?''

''நானும்தான் வேறொரு கடமைக்காக இங்கு வந்தேன். நான் என் கருத்தை மாற்றிக் கொள்ளவில்லையா? என்னைக் காதலிப்பதால் உங்கள் கலைக்கு ஏதாவது இடையூறு ஏற்பட்டு விடுமா? அல்லது என்னருகேயே நீங்கள் இருந்துகொண்டு சித்திரத்தை மறந்துவிடுமாறு கட்டாயப் படுத்துகிறேனா? தங்கள் சித்திரத் திறமையைக் காஞ்சியிலேயே புலப்படுத்துமாறு அரசர் வாய்ப்பளிக்கக் கூடாதா? காஞ்சியினின்று பல காத தொலைவுக்குத் தங்களைப் பிரித்துக் காதல் பயிரை அழிக்கும் நோக்கம் மன்னரிடம் இருக்கிறது என்று ஏன் நான் எண்ணக் கூடாது?''

சுந்தரி ஆத்திரமும், அழுகையும் கலந்த குரலில் கேட்டவுடன் விஜயன் அவளைச் சமாதானப்படுத்தும் முறையில் கூறினான்.

''சுந்தரி, காஞ்சியை நோக்கி இப்போது பெரும் ஆபத்து நெருங்கிக் கொண்டிருக்கிறது. சாளுக்கியர்கள் வடபெண்ணை ஆற்றங் கரையில் ஏராளமாகப் படைகளைக் குவித்துக் கொண்டிருக்கிறார்கள். நகரில் ஒற்றர்கள் பலர் மறைந்திருக் கின்றனர். அரசர் இப்போது படையெடுத்துச் சென்று எதிர்த்து வரும் சாளுக்கியப் படைகளைப் பல்லவ நாட்டு மண்ணை மிதிக்கும் முன்பே அழித்துவிட எண்ணியிருக்கிறார். காஞ்சியிலோ அல்லது அருகே மற்றெங்கோ சிற்ப, சித்திரப் பணியைத் தொடங்குவதால் பல இடையூறுகள் ஏற்படும் எனும் எண்ணத்தில் அமைதியான இடத்தைத் தேர்ந்தெடுத்து அனுப்புகிறார். ஆனால்... ஆனால்... சுந்தரி ஒன்று சொல்வேன்; உன் மேல் இராஜசிம்ம சக்கரவர்த்தி பெரு மதிப்புக் கொண்டிருக்கிறார். உன் நடனத் திறமையைப் புகழ்கிறார். உன் வடிவழகைக் கண்டு மகிழ்கிறார். உன் வருங்காலம் ஒளி நிறைந்தது சுந்தரி, ஒளி நிறைந்தது. நீ இன்று இராஜநர்த்தகியாகலாம். நாளையே நீ மன்னரின் அன்புக்கு மிகவும் பாத்திரமாகி அவரது இதயத்திலேயே நடனமிடலாம். அந்த நல்ல வாய்ப்பை நீ ஏன் இழக்க வேண்டும்? அந்தச் சூழ்நிலையை ஏற்படுத்து வதற்கும் இராஜசிம்மன் உன்னை காஞ்சியிலேயே தங்க வைக்கத் திட்டமிட்டிருக்கலாம். சுந்தரி – நாளை நடப்பதை யார் அறிவார்கள் சுந்தரி? என்னை இன்முகத்துடன் வழியனுப்பு. உடல்தான்

பிரிந்திருக்கிறதேயொழிய உள்ளத்துக்குப் பிரிவு ஏது...?'' விஜயன் சுந்தரியின் முகத்தைத் திருப்பினான்.

எதிர்பாராது வானில் ஏற்படும் துள்ளும் மின்னல் போல் விஜயனின் கரத்தை சுந்தரி, உதறித் தள்ளினாள். தன்னை அணைத்திருந்த அவன் பிடியினின்று விடுபட்டுக்கொண்டு, ''ஐயா ஓவியரே! இந்தச் சுந்தரி காதலிலும் கடமையைக் காண்பவள். கடமையிலும் காதலைக் காண்பவள். உங்களுடைய உபதேசத்துக்கு நன்றி. உங்கள் உள்ளத்தை இப்போதுதான் புரிந்து கொண்டேன். காதலை நான் புனிதமாகக் கருதுகிறேன். மாளிகையின் கேளிக்கையோ, மன்னரின் இதயமோ, மாபெரும் நாட்டு அரண்மனையோ என்னை மயக்கிவிடாது. உங்களுக்கு நான் ஏன் விடைகொடுக்க வேண்டும்? இதோ நான் விடை பெறுகிறேன். தங்களை என்றுமே இதயத்தினின்று மறக்காத நினைவோடு விடைபெறுகிறேன். என்றுமே தங்கள் நினைவு என்னிடம் பசுமையாக இருக்கும். வருகிறேன்...'' என்று கூறி விஜயனின் மறுமொழிக்கு எதிர்பாராமலேயே துக்கம் நெஞ்சை அடைக்க ஏமாற்றம் உடலை வாட்ட அங்கிருந்து விரைந்து ஓடினாள்.

'சுந்தரி, சுந்தரி' என்று விஜயன் கூவியது அவள் செவியில் வீழ்ந்ததோ இல்லையோ யாரறிவார்?

●

# 33. பயணம்

கொடி வீட்டின் மறைவிலிருந்து அங்கு நடந்தவை அனைத்தையும் கேட்டுக் கொண்டிருந்த காஞ்சனாவின் உள்ளத்தில் பொறாமைத் தீ கொழுந்து விட்டெரிந்தது. விஜயனும், சுந்தரியும் பேசிக்கொண்டதிலிருந்து அரசருக்குச் சுந்தரியின் மீது உள்ளூரக் காதல் ஏற்பட்டிருப்பதையும், சுந்தரி விஜயனை நேசிப்பதையும் அறிந்து கொண்டாள்.

விஜயன் – உண்மையிலேயே அழகன்தான். பைரவன் வர்ணித்ததற்கு ஏற்ப இளமை ததும்பும் வடிவம்தான். கம்பீர அழகன். கலைஞன். சுந்தரிக்குக் கைவரப் பெற்றிருக்கும் நாட்டியத் திறமை என்னிடமில்லையா, விஜயனுக்கு நம்மால் உதவ முடியாதா? காஞ்சனா ஒரு கணத்திலேயே முடிவு செய்து கொண்டு விட்டாள். முன்பு ஏமாந்தது போலன்று; இம்முறை எப்படியும் விஜயனை அடைந்துவிடுவது என்ற திடமான எண்ணம் அவள் உள்ளத்தில் எழுந்தது.

கொடி வீடு இப்போது அமைதியாக இருந்தது. சுந்தரியைத் தொடர்ந்த விஜயனும் சென்று விட்டான். அவன் வெகு தொலைவு சென்றிருக்க முடியாது. அவனுக்காகக் காத்திருக்கும் பணியாட்களை நிற்க வைத்துவிட்டு சுந்தரியைத் தொடர்ந்து போய் என்ன பலன்? அவன் காஞ்சியில் தங்கப் போவதில்லை. சுந்தரியோ அவனுடன் வரமுடியாது.

காஞ்சனா இவ்வளவு தூரம் ஆராய்ச்சி செய்யாவிடினும் அவள் உறுதியாக ஒன்று முடிவு செய்துவிட்டாள். விஜயன் இருப்பிடம் சென்று அவனிடம் தன் காதலைத் தெரிவித்து ஏற்றுக் கொள்ளுமாறு மன்றாட வேண்டியது என்ற முடிவுக்கு வந்தாள். அதற்குள் ஒருமுறை தன் மாளிகைக்குச் சென்று அதைததான திரும்பி வரும் வரையில் பாதுகாக்க ஏற்பாடு செய்து காஞ்சியை விட்டுப் புறப்பட முடிவு செய்தாள். அவள் உள்ளத்தில் அப்போதிருந்த துணிவுக்கு எல்லை கிடையாது. ராஜநர்த்தகியாகவோ, அரசரின் அபிமானம் பெறவோ அவள்

விரும்பவில்லை. அவளுடைய எண்ணமெல்லாம் சுந்தரியின் இடத்தைத் தான் பிடித்து விஜயனின் அபிமானத்துக்குப் பாத்திரமாக வேண்டும் என்ற வேகம் அவள் உள்ளத்தில் இருந்தது.

காஞ்சனா தன் மாளிகைக்குச் சென்றபோது அங்கே பைரவன் அமர்ந்திருப்பதைக் கண்டு திகைத்தாள். 'இவன் எதற்காக இங்கு வந்திருக்கிறான்...' என்று சிந்தித்தாள்.

காஞ்சனாவைக் கண்டவுடன் பைரவன் எழுந்து, ''காஞ்சனா, நல்ல சமயத்தில் வந்தாய். உன் வரவிற்காகத்தான் நான் எதிர்பார்த்திருக்கிறேன்'' என்றான்.

''என் வரவிற்காக நீ காத்திருக்கிறாயா? நான் இங்கே வருவேன் என்று உனக்கு எப்படித் தெரியும்? என்னை ஏன் தொடர்ந்து வந்து உயிரை வாங்குகிறாய்?'' என்று சீறினாள் காஞ்சனா.

''உயிரை வாங்க வரவில்லை; உயிரைக் காப்பாற்ற வந்தேன் காஞ்சனா. என் மேல் உனக்கு இன்னும் கோபமா? உன்னைத் தேடி சாளுக்கிய ஒற்றர்கள் காஞ்சியில் அலைகிறார்கள். நீ கன்னி மாடத்தில் இருந்ததால் இதுவரைத் தப்பிப் பிழைத்தாய்'' என்றான்.

''ஆமாம்; இப்போது நான் இங்கே வருவேனென்று நீ எவ்வாறு அறிந்து கொண்டாய்?'' – காஞ்சனாவின் குரலில் கடுமை குறைந்திருந்தது.

பைரவன் நகைத்தவாறு, ''உன் மேல் எனக்குள்ள அன்பைக் கண்டாவது நீ என்னிடம் கோபிக்காமல் இருக்கிறாயா என்றால் அதுதான் நடப்பதில்லை. சுந்தரியை இராஜ நர்த்தகியாக்க அரசர் முடிவு செய்துவிட்ட செய்தியை நான் அறிந்து கொண்டேன். அச்செய்தி அறிந்தவுடன் கன்னிமாடத்தில் நீ ஏன் இருக்கப் போகிறாய்? உடனே வீட்டை நோக்கித்தானே வருவாய்...'' என்று கூறியவுடன், காஞ்சனா பைரவனை வியப்பு நிறைந்த விழிகளுடன் நோக்கி, ''பைரவா உன்னை என்னால் புரிந்து கொள்ளவே முடியவில்லை... என் வாழ்வில் குறுக்கிட எவ்வளவோ பேர் முனைந்து விட்டார்கள். நீ ஒருவனாவது உண்மையாக இருக்கிறாய். ஆனால், உன்னைத்தான் நான் அவ்வப்போது கண்டிக்கிறேன்; கடுமுகம் காட்டுகிறேன். கொடிய வார்த்தை பேசுகிறேன்... ஆனால், என் உள்ளத்தின் அடித்தளத்தில் உனக்கு உரிய அன்பும் மதிப்பும் இருக்கத்தான் செய்கின்றன பைரவா... என் உயிருக்கு ஆபத்து என்றாயே அதைச் சொல்லு...'' என்றாள்.

பைரவன் அவளருகே வந்து மெல்லிய குரலில், ''சாளுக்கிய ஒற்றர்கள் உன் வீட்டைச் சுற்றி சில நாட்களாக வட்ட மிடுகிறார்கள். அவர்களுள் ஒருவனை நானறிவேன். அவனிடமிருந்து அவர்கள் திட்டத்தை நானறிந்தேன்....'' என்று கிசுகிசுத்தான். பொதுவாக முன்பெல்லாம் அவன் நெருங்கிப் பேசும்போதே மதுநாற்றம் வீசும். அவன் கண்கள் சிவந்துக் காணப்படும். சிலவேளைகளில் நாக்கும் பேச முடியாமல் தடுமாறும். இன்று அவன் அவ்வாறு இல்லை. அவன் பேச்சில் கவலை இருந்தது. உண்மை புலப்பட்டது. தொல்லையைத் தடுக்கும் பரபரப்பு மிகுந்திருந்தது.

''பைரவா, என் உயிர் மீது சாளுக்கிய ஒற்றர்கள் ஏன் ஆசைப்படுகிறார்கள்?'' என்று காஞ்சனா கேட்டாள்.

''ஆமாம்; சாளுக்கிய இளவரசன் உன் உடல் மீது ஆசை வைத்திருந்தான். அவனை ஏமாற்றித் தப்பி ஓடி வந்துவிட்டாய். உன்னைக் கவர்ந்து வாதாபிக்குச் செல்ல முடியாவிட்டால் உன்னைக் கொன்றுவிடுவது என்பது அவர்கள் எண்ணம்.''

''நான் இப்போது இங்கே பகிரங்கமாகத்தானே வந்தேன். என்னைக் கவர்ந்துச் சென்றிருக்கலாமே.''

''நானும் ஆச்சர்யப்படுகிறேன். எப்படி அவர்கள் உன்னைக் கவனிக்கவில்லை...''

''என் உயிர் கெட்டியானது. நான் இந்த ஊரில் இன்னும் பல நாள்கள் வாழ வேண்டும். விஜயனுடன் சேர்ந்து வாழ வேண்டும். பைரவா நான் முடிவு செய்துவிட்டேன்... விஜயன் காஞ்சியை விட்டுச் செல்லப் போகிறாராம். நானும் அவருடன் சேர்ந்து விடப்போகிறேன். நான் அவரிடம் கெஞ்சிக் கேட்டுக் கொள்ளப் போகிறேன், என்னை ஏற்குமாறு. அவர் முகம் அறியா முன்பே அவர் மீது காதல் கொண்ட நான் அவரை நேரிடையே கண்ட பிறகு எப்படி என் உணர்ச்சியை அடக்க முடியும்? அவரைச் சந்தித்து என் தாபங்களைக் கூறுவேன். சுந்தரிக்கும் எனக்கும் என்ன வித்தியாசம்? அழகில் நான் குறைவானவளா? நடனக்கலை அறியாதவளா? என் மனத்தில் இருப்பதை எடுத்து ஒளிக்காமல் சொல்லிக் கெஞ்சுவேன்; குழைவேன்; திறமையை கூறிப் பேசுவேன். விஜயன் நிச்சயம் சம்மதித்து விடுவார். சுந்தரியின் மீது அவருக்கு உண்மைக் காதல் இல்லை. இராஜசிம்ம சக்கரவர்த்தியின் பார்வை சுந்தரி மீது வீழ்ந்திருக்கிறது என்பதறிந்து விஜயனே காதல் போட்டியினின்று விலகிக் கொள்கிறார் என்பது எனக்குத்

தெரிந்துவிட்டது. இந்த நிலையில் என் மனோரதம் நிறைவேறும் தருணம் வந்துவிட்டதென்றே சொல்ல வேண்டும். ஆதலால் நான் விஜயனைத் தொடர்ந்து இன்றே புறப்படுகிறேன். அதற்கு முன்பு இந்த மாளிகையையும், இதிலுள்ள பொருள்களையும் என் அபிமான தோழியிடம் ஒப்டைக்கலாம் என வந்துள்ளேன்.''

காஞ்சனா இவ்வாறு மனம் விட்டுப் பேசவும் பைரவன் கண்களில் நீர் தளும்பியது. ''காஞ்சனா உனது நல்வாழ்வுதான் எனது நல்வாழ்வு. உன்னைச் சித்திராங்கி வளர்ப்பதற்காகப் பெற்ற போதே நீ பிரபலமான வாழ்வை அடைவாய் என்பது எனக்குத் தெரியும். அதனால்தான் நான் உன்னை விட்டுப் பிரியாமல் நீ என்ன தான் கடுமுகம் காட்டினாலும் சுடு சொல் கூறினாலும் மனம் மாறாமல் இருக்கிறேன். உன்னை விஜயனிடம் சேர்த்துவிட வேண்டும் என்பதுதான் என் எண்ணம். அதற்காகவே நானும் வந்தேன்...'' என்றான்.

பைரவன் கூறிய வார்த்தைகளைக் கேட்டுத் திடுக்கிட்ட காஞ்சனா, ''சித்திராங்கி என்னை வேறு ஒருவரிடமிருந்து வாங்கி வளர்த்தார்களா? நான் உண்மையில் அவள் மகளல்லவா? இந்த மாளிகையும் பெருஞ் செல்வங்களும் எனக்கு எப்படிச் சொந்தமாகும்? நான் சந்தேகப்பட்டபடியே ஆகிவிட்டது. நான் கணிகைக் குலத்தில் பிறக்கவில்லையல்லவா? அம்மா – இப்போதுதான் நிம்மதியாயிற்று. விஜயன் ஒருவேளை அந்தக் காரணத்தால் என்னைப் புறக்கணித்துவிட்டால் என்ன செய்வது என்று பயந்தேன். சமயம் வரும் போது நீ உண்மையைக் கூறுவாய் அல்லவா?'' என்றாள்.

''கட்டாயம் சொல்வேன். நானும் உன்னுடன் தொடர்ந்து வரப்போகிறேன். எப்படியும் வளவனூரில் தங்கி விட்டுத்தான் விஜயன் பனமலை நோக்கிச் செல்வான். அதற்குள் அவனைச் சென்றடைந்துவிடலாம்.''

''நான் உனக்காக வாதாடுகிறேன். உன் கரத்தை அவன் கரத்துடன் சேர்த்துவிட்ட பிறகுதான் காஞ்சி திரும்புவேன். புறப்படு காஞ்சனா, உடனே புறப்படு'' என்றான் பைரவன்.


⁂ ⁂ ⁂

**கா**ஞ்சி நகரில் கோட்டை வாயிலைக் கடந்து குதிரை மீது விஜயன் சென்று கொண்டிருந்தான். அவனுக்குத் துணையாக வரும் பணியாட்களும் மற்றும் உபகரணங்களும் மற்றொரு வண்டியில் வந்து கொண்டிருந்தனர். காஞ்சி நகரை ஒருமுறைத் திரும்பிப் பார்த்த விஜயன் கண்களில் அவனையறியாமல் நீர்

ததும்பியது. இடையே நடைபெற்ற சம்பவங்கள் எதையும் அவன் மனத்திலே கொள்ளாமல் சித்திரக்கூடம் அமைப்பது ஒன்றையே இப்போது நெஞ்சில் கொண்டவனாக திடமான உள்ளத்துடனிருந்தான். காஞ்சி நகருக்கு வந்ததும், இராஜசிம்மனைச் சந்தித்ததும் ஏதோ கனவு போல் தோன்றின.

விஜயன் செல்வதற்குச் சில நாழிகைக்கு முன்பே காஞ்சனாவும், பைரவனும் அதே சாலை வழியே சென்று விட்டனர். பொழுது சாயும் நேரத்தில் எந்தக் கிராமம் வருகிறதோ அங்கே காத்திருப்பது என்பது அவர்கள் திட்டம். அங்கு விஜயனும் வந்து விடுவானல்லவா?

காஞ்சனாவின் உள்ளம் கவலையின்றி ஏதோ வரப்போகும் வசந்த வாழ்வை எண்ணிக் களிப்பெய்தியது.



# 34. காலமும் காலனும்

**கா**ஞ்சனாவுக்கு அந்தப் பயணம் பெரும் குதூகலத்தை அளித்தது. வண்டியோட்டிக்கு அருகே பைரவன் உட்கார்ந்து அவனிடம் ஏதோ பேசிக் கொண்டே வந்தான். காஞ்சனா சாலையின் இருபுறமும் திகழும் இயற்கைக் காட்சிகளில் மனத்தைப் பறி கொடுத்தவளாகத் தன் வாழ்வில் இதுவரையில் எந்தத் துன்பமும் ஏற்பட்டதென்ற நினைவே இல்லாமல் அமர்ந்திருந்தாள். வண்டி குலுங்கிச் செல்வது அவளுக்கு வேடிக்கையாக இருந்தது.

ஆனால், எவ்வளவு நேரம் அப்படியே மெதுவாகச் செல்லும் வண்டியில் அமர்ந்திருக்க முடியும் என்ற சந்தேகம் அவளைச் சூழ்ந்து கொண்டது.

''பைரவா'' என்று அவள் அழைத்தவுடன் பைரவன் ஒரு கணம் திடுக்கிட்டுத் திரும்பினான்.

''என்ன காஞ்சனா?''

''இதே வண்டியில் நாம் இப்படியே பயணம் சென்று கொண்டிருக்க வேண்டியதுதானா?''

''ஏன் இப்படிக் கேட்கிறாய் காஞ்சனா? களைப்பாக இருக்கிறதா? அதோ தெரிகிறதே அந்தத் தோப்பின் நடுவே கிராமம் இருக்கிறது, அங்கே நாம் இரவு தங்கிவிடுவோம்.''

''இரவில் தங்குவதா? நாம் தூங்கும் சமயம் விஜயன் போய்விட்டால்?''

''நீ தூங்கும்போது நானுமா தூங்குவேன்? விழித்துக் கொண்டே இருப்பேன். விஜயன் இந்தக் கிராமத்தில் தங்காமல் போய்விட முடியாது.''

பைரவன் பேச்சிலே ததும்பிய ஆர்வத்தையும், அவன் தனக்காக எடுத்துக் கொள்ளும் சிரத்தையையும் நினைத்த காஞ்சனாவுக்கு உடல் மகிழ்ச்சியால் பூரித்தது. கண்களிலே நன்றியும், இதயத்திலே வாஞ்சையும் ததும்ப அவள் பைரவன்

கரத்தைத் தன் கரங்களில் எடுத்து வைத்துக் கொண்டு, ''இந்தச் சமயத்தில் நீ எனக்குத் துணையாக வராமலிருந்தால் என் கதி என்ன ஆவது பைரவா?'' என்று கூறும்போது குரல் தழுதழுத்தது.

''உனக்கு உதவாமல் எனக்கு இந்த உலகத்தில் வேறு என்ன வேலை காஞ்சனா? நீ என்னை வெறுத்து ஒதுக்கினாலும் என்னால் அப்படிச் செய்ய முடியாதே. உன் தாய்க்கு நான் வாக்குக் கொடுத்திருக்கிறேன். என் உயிர் உள்ளவரை உன் நலனைக் காப்பதாக நான் உறுதி கொடுத்திருக்கிறேன்...'' என்று பைரவன் கூறுவது அவன் உதட்டிலிருந்து வந்ததா உள்ளத்திலிருந்து வந்ததா என்பதை யாராலும் புரிந்து கொள்ள முடியாது.

அவன் கூறியது முழுவதும் காஞ்சனாவின் காதில் விழவில்லை. அந்திச் சூரியனின் வனப்பு அவள் உள்ளத்தைக் கொள்ளை கொண்டது. மிகவும் வேகமாக வட்ட நெருப்புக் கோளம் மேற்குத் திசையில் திகிரிபோல் சுழன்று இறங்கிக் கொண்டிருந்த காட்சியில் அவள் சிந்தை கலந்தது.

''பைரவா, அதோ அந்தச் சூரியன் மேற்கே மறைகிறதே எங்கே போகும்?'' என்று குழந்தைபோல் அவள் கேட்டாள்.

பைரவன் கலகலவெனச் சிரித்து, ''நாளைக் காலையில் மீண்டும் உதயமாவதற்காக வேகமாகச் செல்கிறது....'' என்றான்.

காஞ்சனாவுக்கு அவன் மறுமொழியில் கவனம் செல்ல வில்லை. வரிசையாக வானத்தில் பறந்து செல்லும் பறவைக் கூட்டங்களில் அவள் கவனம் சென்றது.

''பைரவா, அதோ வரிசை வரிசையாக செல்லுகின்றனவே பறவைகள் அவை எங்கே செல்கின்றன?''

காஞ்சனாவுக்கு என்ன வந்துவிட்டது? ஏன் இப்படி யெல்லாம் கேட்கிறாள்?

''பறவைகள் எங்கே செல்லும்? கூட்டுக்குத்தான். அவை களுக்கும் ஓய்வு வேண்டுமல்லவா? காஞ்சனா நீயும் களைத்துவிட்டாய்... அதனால்தான் உன் மனம் ஓய்வை நாடுகிறது. அதோ அந்தக் குளக்கரையில் வண்டியை விட்டிறங்கிக் கை கால் கழுவிக் கொண்டு கிராமத்திற்குள் செல்வோம்'' என்றான்.

கிராமத்துக் குளக்கரை காஞ்சனாவின் மனத்தில் பழைய சம்பவங்களை நினைவுட்படுத்தியது. குளக்கரையில்தானே முதன் முதலில் அவள் விஜயன் என்று தவறாக எண்ணிச் சாளுக்கிய இளவரசனைச் சந்தித்தாள்....



சே! அந்த நினைவு இப்போது எதற்கு? உண்மை விஜயனை தான் சந்தித்து விட்டோமே – சந்திக்கத்தான் போகிறோமே என்று குதூகல எண்ணத்துடன் வண்டியினின்று இறங்கினாள்.

⁂ ⁂ ⁂

பொழுது சாய்ந்துவிட்டது. எங்கும் இருள் சூழ்ந்து கொண்டது. வண்டிக்காரன் விடைபெற்றுச் சென்றுவிட்டான். காஞ்சனா பைரவனைப் பின் தொடர்ந்து தோப்பின் நடுவே இருந்த வீடொன்றை நோக்கிச் சென்று கொண்டிருந்தாள். காய்ந்த சருகுகளில் பாதத்தைப் புதைத்து நடந்து செல்வது வேடிக்கையாக இருந்தது அவளுக்கு.

''ஆமாம்! நாம் ஏன் இந்தத் தனி வீட்டிற்கு வருகிறோம்? கிராமத்து வீதி நடுவிலே இருந்தால் மக்களோடு மக்களாகப் பேசிப் பொழுதைப் போக்கலாமே? எனக்கும் யாருடனாவது கலகலப்பாகப் பேச வேண்டும் போலிருக்கிறது'' என்றாள் காஞ்சனா.

பைரவன் சிரித்தான். ''காஞ்சனா! இன்னும் குழந்தை உள்ளத்துடன்தான் இருக்கிறாய். உன்னை அழைத்துக் கொண்டு கிராமத்திற்குள் சென்றால் என்ன ஆகும் தெரியுமா?'' என்று கேட்டான் பைரவன்.

''என்ன ஆகும்?''

''உன்னைக் காஞ்சனா என்று அடையாளம் கண்டு விடுவார்கள். உன்னைப் பாடச் சொல்வார்கள். ஆடச் சொல்வார்கள். உன்னைப் பற்றி வம்பு பேசுவார்கள்!''

''பாடச் சொல்லட்டுமே! ஆடச் சொல்லட்டுமே. நாடகமே ஒன்று நடத்திவிட்டால் போகிறது! என் உள்ளமும் ஏனோ குதூகலத்தால் பொங்குகிறது. உடலெங்கும் ஒரு பரபரப்பு துள்ளுகிறது. பைரவா, வா கிராமத்திற்குள் செல்வோம்'' என்று காஞ்சனா சொல்லிலே களி பொங்க, உடலெல்லாம் உவகையால் துள்ளக் கூறவும் பைரவன் மிகவும் அமைதியாக ஆனால், அழுத்தந்திருத்தமாக, ''காஞ்சனா உன் விருப்பம் அப்படி யென்றால் எனக்கு ஒருவிதத் தடையுமில்லை. ஆனால் உன் மனம் கணத்துக்குக் கணம் மாறுகிறதே என்று தான் எனக்குக் கவலை ஏற்படுகிறது காஞ்சனா. விஜயனிடம் சேர்ந்து விட வேண்டும் என்றுதானே நீ காஞ்சியைவிட்டுப் புறப்பட்டாய்? இலட்சிய யாத்திரையை மாற்றிக் கொண்டு கிராம மக்களிடம் பொழுதைக் கழிக்கலாமா? சொல். எனக்கும் பாட்டு – கூத்தென்றால் ஆசைதான். மேலும் மதுக்கடைக்குச் சென்று

ஒரு கலயம் மது குடித்தால் என் உடல் வலியும் நீங்கும்'' என்று கூறினான்.

காஞ்சனா மௌனமாயிருந்தாள். பிறகு, ''பைரவா, இரவுப் பொழுதை எப்படிக் கழிப்பது? தூக்கம் வரும் வரையில் என்னால் பேசாமடந்தையாக இருக்க முடியாது...'' என்று சிறு குழந்தை போல் குழையவும் பைரவன், ''எனக்குத் தெரியும் காஞ்சனா, இந்த நேரத்தில் காஞ்சியில் உன் இல்லத்தில் எப்படியெல்லாம் ஆர்ப்பாட்டமாக இருக்கும்! ஒரு புறம் வீணையின் நாதம். மற்றொரு புறம் மத்தள சப்தம். சதங்கை ஒலிக்க மங்கையர் ஆடும் காட்சி! அவர்கள் ஆடும்போது தங்கள் உள்ளமே, ஆடுவதாக எண்ணித் தலை சுற்ற, ஏக்கமுடன் அமர்ந்திருக்கும் ஆடவர்கள். உன்னைக் காண வேண்டும் எனும் ஆசையால் அவர்கள் துடிக்கும் காட்சி; ஆகா - நீயோ மேன் மாடத்தில் பஞ்சணையில் கிடப்பாய். இந்த உலகமோ - எந்த உலகமோ என்று உனக்குத் தெரியாது... அப்படிப்பட்ட நீ, இங்கே இந்தத் தோப்பில் இருளில் இருப்பதென்றால் சிரமம்தான்...'' என்று மெல்லக் கூறினான்.

அப்போது காஞ்சனா மரவேர் தடுக்கிக் கீழே விழப்போனாள். பைரவன் அவளைத் தாங்கிக் கொண்டான். காஞ்சனாவும் மெல்ல அவன் மேல் சாய்ந்து கொண்டு, ''பைரவா! நீ மிகப் பொல்லாதவன்'' என்று பேச்சைத் தொடங்கினாள்.

பைரவன் திடுக்கிட்டான். தன் கரத்தை மெல்ல விடுவித்துக் கொண்டு, என்ன சொல்கிறாய் காஞ்சனா? எப்போதுமே நீ என்னைக் கோபித்துக் கொள்வதில்தானே இன்பம் காண்கிறாய்?'' என்று கூறினான்.

''பைரவா! நீ ரொம்பப் பொல்லாதவன் தான். சந்தேகமேயில்லை. என்ன பேச்சுப் பேசி என் மனத்தை மாற்றிவிட்டாய். ஒரு கணத்தில் என் உள்ளத்தில் விதவித உணர்ச்சியை எழுமாறு செய்துவிட்டாய். என் போக்கை நீ மிகக் கவனமாகக் கண்காணித்து வருகிறாய் என்பதும் தெரியும். உன்னைத் தவிரத் துணிவுடன் வரக்கூடியவர்கள் வேறு யார் இருக்கிறார்கள்? அப்போதெல்லாம் நானுன்னை அலட்சியமே செய்தேன். நினைவிருக்கிறதா? பைரவா... ஒரு நாள் இரவு'' என்று சொல்ல வந்தவளைப் பைரவன் இடைமறித்து ''காஞ்சனா இப்படியே திரும்பிக் கிராமத்திற்குள் போவோமே. அங்கு அமர்ந்து பேசிக் கொள்வோம். கிராமத் தலைவர் வீட்டிற்குச் சென்று விட்டோமானால், பலத்த உபசாரம் நடக்கும்... என்ன...?'' என்று கேட்கவும், காஞ்சனா பரபரப்புடன், ''வேண்டாம்

பைரவா... வேண்டாம், நான் இங்கேயே தங்கியிருக்கிறேன். நீ சாலை வழிமேல் விழி வைத்து விஜயன் வருகிறானா என்று பார்த்துக் கொண்டிரு'' என்றாள்.

◦◦ ◦◦ ◦◦

தோப்பின் நடுவே ஒரு வீடிருந்தது. அந்த வீட்டில் யாரும் குடியில்லை. வீட்டிற்குக் கதவும் இல்லை. அந்த வீட்டைத் திறந்தவுடன் பைரவன் காஞ்சனாவைப் பார்த்து, நீ இங்கே திண்ணையிலேயே அமர்ந்திரு. நான் நொடியில் கிராமத்திற்குப் போய் உணவு ஏதாவது வாங்கி வருகிறேன். நொடியில் வந்துவிடுகிறேன். இங்கே எந்தவிதமான பயமும் இல்லை'' என்று கூறினான்.

'ஞொய்' என்று வண்டுகளின் ரீங்காரத்தைத் தவிர தென்னை ஓலைகள் காற்றில் அசையும் ஓசை எழுந்தது. பைரவன் விரைந்து ஓடினான். காஞ்சனா திண்ணையின் தூணில் சாய்ந்து கொண்டாள். பழைய சம்பவங்களும், புதிய எண்ணங்களுமாக மாறி மாறி வந்து அவள் உள்ளத்தில் மோதின. தன்னை நன்றாக உணர்ந்தவன் பைரவன். பாவம், என் மீது ஒரு காலத்தில் மோகங்கொண்டிருந்தான். வயது வித்தியாசம் தெரியாமல் எப்படி அந்த எண்ணம் அவனுக்கு உதித்தது? பாவம் – மோகம் கண்ணை மறைத்துவிடும் என்பது உண்மைதான். ஒரு நாள் அவன் அதீதமான செயலுக்கே இறங்கிவிட்டான் – நான் ஏதோ நினைவில் சுயநிலையினின்று மாறி மஞ்சத்தில் கிடக்கையில் என்ன துணிவுடன் அவன் என் அருகே வந்துவிட்டான்? என்னைத் தன் கரங்களுக்குள் சிக்கவைத்து – பாவம்! அப்போது முழுப் பலங்கொண்ட மட்டும் அவன் கன்னத்தில் அறைந்துத் தள்ளிவிட்டேன். ஹூம்; அது ஒரு வேளை! பைரவன் சொன்னது சரிதான். நம் மனம் ஒரு நிலையிலிருப்பதில்லை என்பது உண்மைதான். விஜயன் என்று தவறாக எண்ணிய சாளுக்கிய இளவரசனை நாம் தானே வலியச் சென்று அழைத்தோம். ஹூம்! நம் செய்கை தவறென்று பிறகு உணர்ந்தோம். நிஜ விஜயனையே கண்டோம். இப்படியே மனம் சலனமுற்று எல்லையில்லாமல் அலைபோல் விரிந்து கொண்டிருந்தால் நம் வாழ்க்கை என்ன தான் ஆகிறது...'' காஞ்சனா பெருமூச்சுவிட்டாள்.

''யார் அது – யாரோ நடமாடும் ஓசை கேட்கிறதே? வீட்டிற்குள்ளே யாராவது இருக்கிறார்களா?''

காஞ்சனா சிந்தனை மயக்கத்திலிருந்து விடுபட்டாள்.

மெல்ல அவள் எழுந்தாள். யாரோ நடமாடுகிறார்கள். காஞ்சனாவின் உடலில் ஏனோ லேசாக நடுக்கம் ஏற்பட்டது. தென்னை ஓலை அசைந்து மேலும் பயங்கரத்தை அளித்தது. அப்படியொன்றும் இரவு அதிக நாழிகையாகிவிடவில்லை. பைரவன் போய் ஏகப்பட்ட நேரம் ஆகிவிட்டது போல் அவளுக்குத் தோன்றியது. காற்று 'ஹாய்' என்று வீசியது. காஞ்சனாவின் உள்ளம் திடீரென நடுங்கியது.

அதோ! திடீரென்று விளக்கு வெளிச்சம் தெரிகிறதே! அது நகர்ந்து வருகிறதே; விளக்கின் நாக்குகள் அலைகின்றனவே. விளக்கை யாரோ எடுத்து வருகிறார் போலிருக்கிறது....

பைரவன் கையில் ஒரு தீவர்த்தியுடனும், மட்கலயத்துடனும் சிறு மூட்டையுடனும் வந்து கொண்டிருந்தான். அங்கே வரும்போதுதான் அவன் அடையாளத்தைத் தெரிந்தவுடன்தான் காஞ்சனாவுக்கு உயிரே வந்தது எனலாம். பைரவனுக்கு ஏன் இவ்வளவு நேரம்? ஒருவேளை விஜயனைச் சந்தித்துவிட்டானா? சந்தித்தால் அழைத்து வந்திருப்பானே! ஹூம்; ஒன்றும் புரியவில்லையே!

பைரவன் வரும்போது தன் காவிப் பற்கள் தெரியச் சிரித்துக் கொண்டு வந்தான். அவன் கண்களும் சிவந்துத் தானிருந்தன. கையில் கொண்டு வந்த சுளுந்தை அருகிருந்த மரத்தில் சொருகி வைத்துவிட்டு காஞ்சனா அருகே வந்தான். தீவர்த்தி ஒளியில் காஞ்சனாவின் அழகு மேலும் விகசிப்பது போல் அவனுக்குத் தோன்றியது.

'காஞ்சனா!' என்று பைரவன் கொஞ்சுங் குரலில் கூப்பிட்டான். காஞ்சனா ஒருமுறை அவனை ஏற இறங்கப் பார்த்தாள். தடுமாறும் சொற்களோடு மதுவின் மணமும் பொங்கி வந்து அவள் நாசியைத் துளைத்தது.

''மது கிடைத்த இடம் சுவர்க்கம் என்று போன இடத்தில் உட்கார்ந்து விட்டாயா பைரவா?'' என்று காஞ்சனா சற்றுக் கோபத்துடன் கேட்டாள்.

''அங்கேயே உட்காருவேனா? என் நினைவெல்லாம் இங்கேதானே. நீ என்ன செய்வாயோ எப்படித் தனியே இருப்பாயோ என்ற கவலை வேறு...''

''ஆமாம், பைரவா! சற்று நேரத்திற்கு முன் நான் பயந்தே விட்டேன். யாரோ நடமாடுவதுபோல் ஓசை கேட்டது.

''பயந்துவிட்டாயா?'' என்று கூறிய பைரவன் காஞ்சனாவைத் தாவி அணைத்து, ''கண்ணே காஞ்சனா

அச்சமென்பதே இன்னதென்றறியாதிருந்த நீ அஞ்சலாமா? இதோ பார் பழங்கள்; தினை மாவு. வேறு ஒன்றும் இந்த நேரத்தில் கிடைக்கவில்லை. பாவம்! கிராமத்திலுள்ளவர்களுக்கே அரிசி கிடைக்கவில்லையாம். களஞ்சியம் வற்றிப் போய்விட்டதாம்'' என்றான். அவன் கரங்கள் அவளை மெல்ல இறுக்க ஆரம்பித்தன. காஞ்சனா அதைத் தவறாக எண்ணவில்லை.

மெல்ல அவன் பிடியிலிருந்து விடுபட முயன்ற வண்ணம், ''கிடைத்த வரையில் சரிதான். கலயத்தில் என்ன பைரவா? பாலா?'' என்று கேட்டாள்.

பைரவன் 'ஹஹ்ஹா' என்று சிரித்தான். ''காஞ்சனா நீயெல்லாம் இந்தப் பாலைக் குடிப்பாயா? சொகுசான மது – சுவையான மது. ஆகா! நான் சுவைத்ததை உனக்குத் தர வேண்டும் என்று எடுத்து வந்தேன். என் மடியில் உன்னைப் படுக்கவைத்து உன் பவழ வாயில் கொஞ்சம் கொஞ்சமாக ஊற்ற வேண்டும் எனும் ஆசையுடன் ஓடிவந்தேன்'' என்று அவன் பேசிக் கொண்டே இருந்தான்.

''பைரவா என்ன சொல்கிறாய்?'' என்று காஞ்சனா திணறினாள்.

''காஞ்சனா நான் என்னவென்று சொல்ல. இன்றைய நல்ல நாளைப் புகழ்வதா? இந்தத் தோப்பின் நடுவே நமக்கென்றே கட்டப்பட்டிருக்கும் வீட்டைப் பற்றிச் சொல்வதா? நாமிருவரும் ஏகாந்தமாகச் சேர்ந்து விட்ட இந்தச் சந்தர்ப்பத்தைப் பற்றிச் சொல்வதா? காஞ்சனா – காலம் வரவேண்டும் வரவேண்டும் என்று நான் எதிர்ப்பார்த்துக் கொண்டே இருந்தேன். காலம் வந்துவிட்டது. காஞ்சனா! ஆகா; இன்று உனக்குத் தான் குதூகலம்; நான் கவனித்தே வந்தேன். என் மீது அலாதியான அன்பு ஏற்பட்டு விட்டதென்று நான் புரிந்து கொண்டுவிட்டேன். உனக்காக மது கொண்டு வந்தேன். மதுவைக் குடி...''

பைரவன் மூச்சுவிடாது பேசினான். அவன் காஞ்சனாவைத் தழுவத் துடித்தான். ஒருகணம் காஞ்சனா திகைத்துவிட்டாள். பைரவனுடைய நிலை அவளுக்குப் புரிந்துவிட்டது. இன்னுமவன் தன் மீது கொண்டுள்ள ஆசையை விடவில்லை என்பது அவளுக்குப் புரிந்துவிட்டது. இதற்காகவா நம்மிடம் இவ்வளவு ஆதரவாகப் பேசினான். யாருமற்ற தனி இடத்திற்கு அழைத்து வந்தான். நொடிக்கு நொடி மிருகமாக மாறுகிறானே – ஐயோ! இந்த இடத்தில் இவனிடமிருந்து நாம் தப்ப வழி கிடையாதா? கூச்சலிட்டால் காப்பாற்ற ஓடி வர மாட்டார்களா?'' காஞ்சனாவின் மனம் பலவாறாகப் புலம்பியது. ஆனால், அவளுக்குத் திடீரெனத்

தைரியம் எழுந்தது. பலங்கொண்ட மட்டும் அவன் கரங்களை விலக்கித் தள்ளிச் சீற்றத்துடன், ''பைரவா! என்ன காரியம் செய்யத் துணிந்தாய்? உன்னை நம்பி வந்த என்னை நாசமாக்க முயன்றாயே'' என்று பயத்தால் திணறிக் கொண்டே கூறவும் பைரவன் பயங்கரமாக நகைத்து அவளைத் தாவி மீண்டும் பிடித்தான். ''என்னை நம்பித்தானே வந்தாய் காஞ்சனா? நம்பு; நன்றாக நம்பு. உன் நல்வாழ்வுக்கு என்னைத் தவிர உறுதுணை வேறு யாருமே கிடையாது. என் பேச்சைக் கேட்டுத்தானே வந்தாய்? இப்போது நான் சொல்வதைக் கேள். என் நெடுங்கால இச்சையை இன்று பூர்த்தி செய்.''

''சீ... மிருகமே! சுடுகாட்டிலே திரிய வேண்டிய உன்னை அழைத்து வந்து சுகபோக வாழ்வளித்தேன் பார். அதற்கு நீ பேசும் பேச்சு ஒவ்வொன்றும் எனக்கு வேண்டியதுதான்....''

''சுக போக வாழ்வு நீ தந்ததா, காஞ்சனா? உன் வளர்ப்புத் தாயே என் திறமையை அறிந்து நாடகக் குழுவில் என்னைச் சேர்த்துக் கொண்டாள். அந்தக் காலத்திலிருந்து எனக்கு எந்தவிதக் குறையும் கிடையாது. ஆனால் நீ தான் என் சுகங்களுக்குக் குறுக்கே நின்றாய். உன் மனத்திலே பெரிய பெரிய கோட்டைகளைக் கட்டியதனால் என்னை வெறுத்தாய். அலட்சியப்படுத்தினாய். செய்த நன்றியை மறந்தாய். நீ திருந்திவிட்டாய் என்று எண்ணினேன். சென்றதை மறந்துவிட்டு மீண்டும் உதவி தேடி வந்தாய் என எண்ணினேன். இன்னும் உன் பழைய எண்ணம் மாறவில்லையா? காஞ்சனா, நன்றாகச் சிந்தித்துப் பார். என்னையன்றி உனக்கு உற்றதுணை வேறு யாருமில்லை. காலமெல்லாம் நான் உனக்கு உதவிக் கொண்டிருப்பேன். என் மனம் நோகச் செய்யாதே. விஜயன் மீது நீ வீணே ஆசைப்படாதே. அவன் உன்னை ஏற்றுக் கொள்ள மாட்டான். சற்று முன்புதான் நான் அவனைச் சந்தித்தேன். பரிவாரங்களுடன் பனைமலை நோக்கிச் செல்கிறான்.''

பைரவன் இப்படிக் கூறியவுடன் காஞ்சனா துக்கம் பொங்க, பயத்தால் உடல் நடுங்க, ஆபத்தை எதிர்பார்த்து உள்ளம் துடிதுடிக்க, ''பைரவா! விஜயன் போய்விட்டானா? நான் இங்கிருப்பதைச் சொல்லவில்லையா?'' என்று கேட்டாள்.

பைரவன் கோணல் சிரிப்புச் சிரித்து, ''நான் ஏன் சொல்லவேண்டும்?'' என்றான்.

''பாவி! பைரவா! என்னை நீ எதற்காக அழைத்து வந்தாய்? விஜயனிடம் சேர்க்கத்தானே? அவனைச் சந்திக்கத்தானே நாம் இங்கே காத்திருக்கிறோம். அவனைக் கண்டும் ஏன்

இங்கிருப்பதைக் குறித்து நீ ஏன் சொல்லவில்லை?'' ஆத்திரத்தில் வார்த்தைகள் தடுமாறின.

''ஆமாம் சொல்லவில்லை! விஜயனிடம் சேர்க்கவா உன்னை நான் இவ்வளவு சிரமப்பட்டு அழைத்து வந்தேன்! காஞ்சனா உன் குழந்தை உள்ளம் இன்னும் மாறவில்லை. உன் வயதிற்கு, பருவ அழகிற்கு, காண்போர் மனத்தில் காமத் தீயை ஊட்டும் உன் மோகன வடிவுக்கு உள்ளம் மட்டும் சற்று மாறவேண்டும்...'' பைரவன் காஞ்சனாவின் கரத்தை மீண்டும் தாவிப் பற்றினான்.

காஞ்சனா அவனிடமிருந்துத் தப்ப எண்ணித் தூண் மறைவுக்குப் போய், ''பைரவா, உன் குணத்தை மாற்றிக் கொள். உன் தீய எண்ணம் எனக்குப் புரிந்துவிட்டது. பைரவா! உன்னை வேண்டிக் கொள்கிறேன்; கருணை கூர்ந்து உன் தவறான எண்ணத்தை மாற்றிக் கொள்'' என்று கெஞ்சினாள்.

பைரவனுக்கு மேலும் களிபொங்கியது. அவன் காஞ்சனா அருகே துள்ளிச் சென்று, ''தவறான எண்ணமா? எது தவறு? உன் கட்டழகு மேனியில் மயங்கினேனே அது தவறா? உன் சந்தன உடலின் மீது சபலங் கொண்டேனே அது தவறா? மாதுளைக் கனி போன்ற உன் பருவ அழகில் என் உடல் பொருள் ஆவி அனைத்தையும் அர்ப்பணிக்க வந்தேனே அதுவா தவறு? தவறு உன்மேல் தான் காஞ்சனா. என் ஏக்கத்தைப் புரிந்து கொள்ளாதது உன் தவறு. உன்னையே எப்போதும் நினைந்து நினைந்து என் விரதத்தையும் பங்கமடையச் செய்து கொண்டேனே அது தவறு. இல்லாவிடில் நான் வேறு யாரையாவது காபாலிகையாகச் சேர்த்துக் கொண்டு சுடலையில் ஒரு மண்டலம் தவம் இருந்து இளம் வாலிபனின் மண்டை ஓட்டில் குருதியைக் குடித்து, முதிர்ந்த கால் எலும்பு மாலையை அணிந்து எம் பெருமான் சிவபிரானை நோக்கித் தவம் இருந்திருப்பேன். அதைக் கெடுத்தாய் நீ. என்னைப் பார்த்து மகாவிரதி கெக்கலிக் கொட்டிப் பரிகாசம் செய்கிறார். பிட்சுக்கள் இழிவாகப் பேசுகின்றனர். எனது கபால பாத்திரத்தை ஒளித்து விட்டான் ஒரு பிட்சு. இந்த இழி நிலை உன்னால்தானே! விரதத்துக்கு விரதம் கெட்டு, சுகத்துக்குச் சுகமும் கெடச் செய்வதில் என்ன பலன்? அதனால் நான் ஒரு முடிவுக்கு வந்துவிட்டேன். உன்னை அடையாமல் உறங்குவதில்லை. உண்பதில்லை என்று. வா, காஞ்சனா, இது ஏகாந்தமான இடம். இங்கே யாரும் வரமாட்டார்கள். இரவு முழுவதும் நமக்குத் துணை இருக்கும்...''

''நில் பைரவா!'' என்று கர்ஜித்தாள் காஞ்சனா. இது வரை நாம் அலட்சியப்படுத்தி வந்த சாதாரணப் பதர் பைரவன் நம்மைப்

பயமுறுத்தி இச்சைக்கு இணங்க வைக்கப் பார்ப்பதா? என்ற எண்ணம் அவள் உள்ளத்தில் பொங்கவே இன்னும் பயங்கரமான குரலில், ''பைரவா – ஓர் அடி எடுத்து வைத்தாலும் உன் உயிர் உன்னிடம் இராது. காஞ்சனாவைக் காஞ்சியிலே நெருங்கவே துணியமாட்டார்கள். பெரும் பெரும் செல்வந்தர்கள், செல்வாக்குள்ளவர்கள். நீ ஓர் அற்பப் பதர். அநாகரிகம் பிடித்தவன். குரூபி. கொலைக்கஞ்சாதவன். குணக்கேடன். நீ என்னிடம் சமமாகப் பேசுவதே தகாது. போ – போய்விடு. நெருங்கினால் நான் ஒரு ஜீவனைக் கொன்ற குற்றத்திற்கு ஆளாவேன். அந்தப் பழி வந்தால் கவலையில்லை. தீயவனை ஒழிப்பது தவறன்று – சொல்லச் சொல்ல அருகே வருகிறாய் பைரவா. காலம் வந்துவிட்டது என்று முன்பு சொன்னாயே – காலம் வரவில்லை. காலன் வந்து விட்டான்...'' என்று கூக்குரலிட்டாள் காஞ்சனா. அவள் கையில் சிறு கத்தி இருந்தது. பைரவனின் இடுப்பிலிருந்து அதைச் சாமர்த்தியமாகப் பறித்துக் கொண்டாள்.

மங்கிய ஒளியில் கத்தி பளபளத்தது. பைரவன் குரூரமாகச் சிரித்தான். ''கத்தியைக் காட்டுகிறாயா காஞ்சனா! கத்தியைவிடக் கூர்மையான வேல் விழியைச் சற்று அசைத்து அன்புச் சமிஞ்ஞை செய் காஞ்சனா'' என்று கூறி அவள் மேல் பாய்ந்தான் பைரவன்.

காஞ்சனா ஐயோ என்று ஓலமிட்டாள். வேடனால் தாக்குண்ட பெண் பறவையின் அபயக் குரல் போல் அந்தத் தோப்பில் எதிரொலித்தது.

ஃ ஃ ஃ

**கா**ஞ்சனா கூறியதுபோல் காலம் வரவில்லை. காலன் தான் வந்தான். அவன் அந்த இருளில் அடையாளந் தெரியாத உருவத்தில் வந்தான். ஓர் உருவம் அந்தப் பாழடைந்த வீட்டிற்குள்ளிருந்துத் துள்ளி ஓடி வந்துப் பைரவனின் கழுத்தில் தன் முரட்டுக் கரத்தைக் கொடுத்து வளைத்தது.

எதிர்பாராத இந்தத் தாக்குதலால் பைரவன் நெஞ்சு இறுகியது. விழிகள் பிதுங்கின. மூச்சுத் திணறியது. அப்படியும் அவன் தப்பி விடுவானோ என்று விலாப்புறத்தில் கூரிய கத்தியும் பாய்ந்தது. பைரவனிடமிருந்து குரலே இல்லை. கடைசி மூச்சும் எப்போதோ போய்விட்டது. பனை மரத்துக் குலை தொப்பென்று விழுவதுபோல் மண்ணில் அவன் வீழ்ந்தான்.

இருளில் வந்த உருவம் ஒரு கணம் காஞ்சனாவை நோக்கியது. அந்தப் போதில் வேறு சிலர் ஓடிவரும் ஓசை கேட்கவே அந்த உருவம் மறு கணத்தில் தான் தப்பித்துக் கொள்ள விரைந்தது.

தீவர்த்தி எண்ணெய் இல்லாமல் புகை கக்கிய அந்த மங்கிய ஒளியில் ஒருவரை ஒருவர் துரத்திக் கொண்டு மூன்று உருவங்கள் தோப்பின் வெளியே சாலையை நோக்கி ஓடுவது தெரிந்தது.

அந்த மூவரும் நமக்கு அறிமுகமானவர்கள்தாம். மகாவிரதி, குட்டிச் சித்தன், சாளுக்கிய நாட்டு கீர்த்திவர்மன். அவர்களுள் பைரவனைக் கொன்றவர் யாராயிருக்கும்!

ஃ ஃ ஃ

**கா**ஞ்சனாவுக்கு அந்த இடத்தைவிட்டு நகரக் கூடப் பயமாயிருந்தது. ஒரு கணத்தில் பைரவன் என்ன செய்யத் துணிந்துவிட்டான்! என்னை ஏமாற்றி இந்தப் பாழடைந்த வீட்டிற்கு அழைத்து வந்துத் தன் பசிக்கு என்னை ஆட்படுத்தப் பார்த்தானே – கடவுளாகப் பார்த்து அவனுக்குத் தண்டனை கொடுத்துவிட்டார், தண்டனை –

அந்தத் தண்டனை மிகப் பயங்கரமானது தான். காஞ்சனா ஒரே ஒருமுறை குப்புற விழுந்து கிடக்கும் பைரவனின் உயிரற்ற உடலைக் கண்டாள். மங்கிய ஒளியில் சரியாகத் தெரியவில்லை என்றாலும் பைரவன் முதுகில் குத்துப்பட்டு வீழ்ந்து விட்டான் என்பது அவளுக்குப் புரிந்துவிட்டது. அவனைக் குத்திக் கொன்றது யார்? மூன்று பேர் ஓடியது மட்டும் தான் அவளுக்குத் தெரியும்.

அவள் உடல் நடுங்கியது. எதிர்பாராது ஏற்படும் சம்பவங்கள் அவள் குலையை நடுங்க வைத்தன. மேலும் அங்கிருந்தால் பைரவனைத் தானே கொன்றதாக ஒரு வேளை பழி சுமத்தி விடுவார்களோ என்ற பயம் அவளைப் பிடித்துக் கொண்டது. மறுகணம் அங்கிருந்து துள்ளி எழுந்தாள். இங்குமிங்கும் பார்த்து விட்டு அந்த இருளில் ஓடினாள். தென்னந்தோப்பைக் கடந்து ஓடினாள். சாலையின் வழியே ஓடினாள். எந்தத் திசையில் செல்கிறோமென்று புரிந்து கொள்ள இயலாது ஓடினாள். எவ்வளவு தொலைவு சென்றாள் என்பது அவளுக்கே தெரியாது. திடீரென்று அவள் எதிரே வானுக்கும், பூமிக்குமாக நெடிய தோற்றத்துடன் யாரோ நடந்து வருவதுபோல் அவளுக்குத் தோன்றியது. காஞ்சனா ஒருகணம் நின்றாள். அவள் உடல் நடுங்கியது. கரங்கள் துவண்டன. பசியும் களைப்பும் ஒன்று சேர காஞ்சனா அங்கேயே மயங்கி வீழ்ந்தாள்.

இரவு கழிந்து பொழுது புலர்ந்தது. அவள் மெல்லக் கண் விழித்தபோது யாரோ தன்னைக் கரங்களில் சுமந்து எடுத்துச் செல்வது போன்ற உணர்ச்சி ஏற்பட்டது. மயங்கிய பார்வையில்

தன்னைத் தூக்கிக் கொண்டிருப்பவன் விஜயன் என்பதைத் தெரிந்து கொண்டுவிட்டாள். ஆகா! இதற்காகத்தானே காஞ்சி யினின்று பைரவனுடன் புறப்பட்டு வந்தோம். யாரை அடைய வேண்டும் என்று எண்ணினோமோ அவனே தன்னைக் கரங்களில் சுமந்து நிற்கிறான். தான் விழித்துக் கொண்டதாகவே காஞ்சனா புலப்படுத்தவில்லை.

விஜயன் குதிரை மீது வந்து கொண்டிருந்தான். அவனுக்கு உதவியாகக் கூண்டு வண்டிகளும் பணியாட்களும் வந்தனர். இரவு முழுவதும் அடுத்த கிராமம் ஒன்றில் தங்கிவிட்டுப் பொழுது புலராமுன்னம் புறப்பட்டிருந்தான் அவன். காஞ்சனா வழியில் மயங்கிக் கிடப்பதைக் கண்டவுடன் அவளை மெல்லக் கூண்டு வண்டியில் படுக்க வைத்து வண்டியைத் தொடர்ந்து நடந்து வந்தான் விஜயன். எவ்வளவு நேரம் காஞ்சனாவால் விஜயனைக் கண்ட பிறகும் வண்டியிலே படுத்திருக்க முடியும்?

காஞ்சனா விழித்துவிட்டதை கண்ட பிறகு விஜயன் வண்டியை நிறுத்துமாறு கூறினான். வண்டி நின்றது. விஜயன் கூண்டு வண்டிக்கருகில் வந்தான். காஞ்சனா மெல்ல எழுந்து உட்கார்ந்தாள்.

''யார், நான் காஞ்சனாவைத்தான் இங்கே இந்த இடத்தில் காண்கிறேனா?'' என்று விஜயன் கேட்டான்.

காஞ்சனாவினால் உடனே மறுமொழி கூற இயலவில்லை.

''காஞ்சி மாநகரத்து ஆடலழகியையா இப்படி நடு வழியில் அனாதை போன்று கிடக்கக் காண்கிறேன். என்ன நேர்ந்தது? எப்படி இங்கே வந்தீர்கள்'' என்று விஜயன் கேட்டான்.

காஞ்சனா மெல்லப் பேசத் தொடங்கினாள். குரல் கம்மி யிருந்தது. அவளால் பேச இயலவில்லை. விஜயன் தெரிந்து கொண்டான். அவள் களைப்பாயிருக்கிறாள் என்று.

சற்றுத் தொலைவில் குளக்கரை இருந்தது. குளக்கரையில் விரிந்து பரந்த ஆலமரம் இருந்தது. வண்டியை அங்கே கொண்டு செல்லுமாறு பணித்தான் விஜயன். வண்டியினின்று காஞ்சனா இறங்கி மர நிழலில் அமர்ந்து கொண்டாள். காலை இளங்காற்று வீசிக் கெண்டிருந்தது. வண்டியிலிருந்த ஆகாரத்தில் சிறிது கொடுத்து, இளநீரும் இரண்டு சீவிக் கொடுத்தான். காஞ்சனாவின் களைப்பு தீர்ந்தது. புதுத் தெம்பு பிறந்தது.

''களைப்பு நீங்கிவிட்டதல்லவா?'' என்று கேட்டான் விஜயன்.

''தங்களைப் பார்த்தவுடனேயே களைப்பு ஓடிவிட்டது'' என்று கூறி மெல்ல நகைத்தாள் காஞ்சனா. காஞ்சனா தரை மணலில் கோலம் போட்டுக் கொண்டிருந்தாள். விஜயன் அதை ஒருமுறை பார்த்தான். பிறகு ''தெற்கே செல்லும் சாலை வழியே வரக் காரணம் என்ன? களைத்துப் போய் சாலையிலே வீழ்ந்திருந்த காரணம் நான் அறியலாமா?'' என்று விஜயன் கேட்டான்.

காஞ்சனாவினால் மௌனமாயிருக்க முடியவில்லை. 'விஜயன் நேருக்கு நேர் பேசுகிறான். தன்னிடம் கருணை பிறந்திருக்கிறது அவனுக்கு. இந்தச் சந்தர்ப்பத்தில் நாம் அவன் மனம் மகிழச் செய்வோம்.''

காஞ்சியினின்று புறப்பட்டது முதல் பாழடைந்த வீட்டில் பைரவனின் தீய எண்ணத்தில் சிக்கியது வரையில் காஞ்சனா கூறினாள். விஜயன் கவனமாகக் கேட்டுக் கொண்டே வந்தான். காஞ்சனா சொல்லி முடித்துவிட்டுக் கடைசியாகக் கூறினாள்:

''நேற்று இரவு நடந்த நிகழ்ச்சிகளெல்லாம் என் உள்ளத்தை விட்டு மறைந்துவிட்டன விஜயா. நான் எப்போதுமே இப்படியே மயங்கி வீழ்ந்திருக்கக் கூடாதா என்று தோன்றுகிறது விஜயா...''

விஜயன் திடுக்கிட்டான். ''என்ன சொல்கிறாய் காஞ்சனா... எப்போதுமே மயங்கி வீழ்ந்திருப்பதா? காஞ்சி நகரத்து ஆடலழகி சாலையில் அனாதையைப் போல் கிடப்பதிலா ஆசைப் படுகிறாய்?''

''ஆமாம்... காஞ்சிமா நகரத்தில் மாட மாளிகையில் வாழ்ந்த போது நான் நினைத்தது நடக்கவில்லை. கொண்ட ஆசை நிறைவேறவில்லை. நடுச்சாலையில் அனாதையாயிருந்த போது நிறைவேறியதால் நான் மயங்கிக் கிடக்கவே விரும்புகிறேன்.''

''என்ன சொல்கிறாய் காஞ்சனா? நாம் இப்படியே மரத்தடியிலமர்ந்து புரியாத வகையில் பேசிக் கொண்டிருந்தால், நான் செல்ல வேண்டிய இடத்தை அடைய இன்னும் இரு தினங்களாகலாம். அதற்குள் மன்னர் சிற்பியைத் தேடி அழைத்து பனை மலைக்கே வந்துவிடுவதாகக் கூறியிருக்கிறார். அவரை அங்கே எனக்காகக் காக்க வைத்திருப்பது ஒழுங்காக இருக்காது...''

''என்னால் தாமதப்பட வேண்டாம் விஜயா. நாம் சென்று கொண்டே பேசுவோம்....''

''நாமா - நீ எங்கே வரப்போகிறாய் காஞ்சனா?''

‘‘உன்னுடன், உன் கரங்களில் தவழ வேண்டும் என்று கனவு கண்டேன். இன்று அது நடந்து விட்டது. அரை குறை மயக்கத்திலிருந்தாலும் உனது மிருதுவான கரத்து அரவணைப்பு என் உடலைச் சிலிர்க்கச் செய்தது. உன் கரத்துக்குத்தான் எத்தனை மென்மை...’’

‘‘காஞ்சனா... என்ன பேசுகிறாய்? நடுச்சாலையில் கேட்பாரற்றுக் கிடக்கிறாயே என்று உன்னைத் தூக்கி வண்டியிலே கிடத்தினேன். வேறுவிதமான எண்ணம் எனக்கு இல்லை. அந்த எண்ணத்துடன் நீ என்னுடன் இருப்பது பெரும் தவறு காஞ்சனா. உனக்கு முன்பே சொல்லிவிட்டேன். என்னுடன் வருவதால் உனக்கேதும் பயனில்லை. போய்விடு காஞ்சனா.’’

‘‘விஜயா! என்னைக் கண்டால் உனக்கு ஏன் வெறுப்பு ஏற்படுகிறது. நான் அழகாயில்லையா? என்னிடம் நாட்டியத் திறமையில்லையா? உன் ஓவியப் பணிக்கு நான் உதவ மாட்டேனா? உன்னைத் தேடி வந்த என்னை ஏன் போய்விடச் சொல்கிறாய்?’’

‘‘இல்லை, காஞ்சனா, நீ போய்த்தானாக வேண்டும். இல்லாவிடில் நான் பலவந்தமாக உன்னை இங்கேயே விட்டுவிட்டுக் குதிரையிலேறிச் சென்றுவிடுவேன். நீ இங்கே தனியே இருப்பதால் பல தீங்கு நேரலாம். போய்விடு, காஞ்சனா.’’

‘‘விஜயா! இந்த உலகில் உன்னைப் போன்ற திட வைராக்ய முள்ளவர்களைக் கண்டதேயில்லை. உன் பெயரைக் கேட்ட வுடனேயே உன் மீது மையல் கொண்டேன். ஏன் என்று எனக்கே தெரியவில்லை. உன்னை அடைவதற்காக சர்வபரித்தி தியாகம் செய்யச் சித்தமாயிருக்கிறேன். உன் வாழ்வில் வளப்பமான பகுதியாக நான் இருக்கக் கூடாதா?’’

‘‘காஞ்சனா... மிகவும் சாதுர்யமாகப் பேசுகிறாய். காதல் என்பது எல்லோர் உள்ளத்திலும் ஏற்படக்கூடியது. ஆனால் எப்போதும் ஏற்படக் கூடியதன்று. நானும் ஒரு பெண்ணைக் காதலித்தேன். ஆனால் கலைக்காகக் காதலைத் தியாகம் செய்தேன். மீண்டும் என்னால் என் முடிவை மாற்றிக் கொள்ள முடியாது.... நீ போய்விடு. இங்கிருந்து கொண்டு என் மனத்தைக் குழப்பிச் சலனமடையச் செய்யாதே. மகத்தான பணியைச் செய்ய நான் போகிறேன். தடுக்காதே...’’ என்று கூறி எழுந்து விட்ட விஜயன் எதிரே காஞ்சனா தாபத்தால் உந்தப்பட்டவளாய் விரைந்துச் சென்று வழிமறித்து, ‘‘விஜயா, என் சொல்லைத் தட்டாதே’’ என்னையும் அழைத்துச் செல். உன்னையே நம்பி வந்துவிட்ட என்னை உதறிச் செல்லாதே. உன் இருப்பிடத்திற்கு

என்னை அழைத்துச் செல். என்றாவது உன் மனம் மாறும். அதுவரையில் உன் அடிமையாகவே நான் அங்கே கிடக்கிறேன்'' என்று மன்றாடினாள்.

விஜயன் நிலை குலையவில்லை. மனம் மாறவில்லை. காஞ்சனாவின் காமக் கணையில் சிக்கவில்லை. வேலைக்காரர்கள் ஓரிருவரிடம் காஞ்சனாவை ஒப்படைத்து மீண்டும் காஞ்சிக்குக் கொண்டு சேர்க்கும் எண்ணத்துடன் கைதட்டி, ''யாரங்கே... இங்கே வாருங்கள்?'' என்று அழைத்தான்.

அந்தக் குரலுக்கு வேலைக்காரர்கள் வரவில்லை. அருகே இருந்த மரத்தின் மறைவிலிருந்து கீர்த்திவர்மன் துள்ளி ஓடி வந்து காஞ்சனாவின் எதிரே நின்று, ''அவளை என்னிடம் விட்டுவிடுங்கள்; காஞ்சிக்கு அழைத்துச் செல்லும் பொறுப்பை நான் ஏற்கிறேன். என்னிடம் தப்பி எங்கேயும் ஓடிவிட முடியாது. சாளுக்கிய நாட்டில் செய்த சபதத்தை மறந்துவிட்டு இங்கு நொடிக்கு ஒரு வேடம் பூண்டு நடித்துச் சாளுக்கியர்களையே ஏமாற்றி விடலாம் என்று நினைத்துவிட்ட இவளைக் காஞ்சிக்கு நான் அழைத்துச் செல்கிறேன். அங்கிருந்து வேறு எங்கோ அழைத்துச் செல்லும் பொறுப்பை நான் பார்த்துக் கொள்கிறேன்'' என்று கூறி காஞ்சனாவின் கரங்களைச் சட்டெனப் பற்றினான்.

விஜயனோ, காஞ்சனாவோ கீர்த்திவர்மனை அந்தச் சமயத்தில் எதிர்பார்க்கவில்லை. மேலும் மாறுவேடத்தில் கறுப்பு உடையும், எலும்பு மாலையும், அணிந்து குரூரமாகக் காட்சியளித்த அவன் தோற்றம் கண்டு காஞ்சனா 'கிரீச்' சென்று அலறிவிட்டாள்.

தூரிகை மட்டும் பிடிக்கத் தெரிந்தவனல்லன் விஜயன். எதிர்பாராதது ஒரு கணத்தில் நடந்துவிட்டதறிந்த விஜயன் மறுகணம் கீர்த்திவர்மன் மீது தாவி, ''யாரடா நீ? ஒரு பெண்ணின் கரத்தைப் பிடிக்க உனக்கு என்ன துணிவு?'' என்று கூவி அவன் முகத்தில் பலமான குத்தொன்று விட்டான்.

வஜ்ரதேகம் படைத்த கீர்த்திவர்மன் அதற்குக் கலங்கிவிட வில்லை. மிகவும் சுலபமாக விஜயனின் விலாவைச் சாடவே விஜயன் கீழே சுழன்று வீழ்ந்தான். காஞ்சனாவை ஒரு கரத்தில் பற்றிக் கொண்டு கீர்த்திவர்மன் அடர்ந்த மரங்களின் பக்கமாக ஓடலானான்.

●

# 35. சந்திப்பு

கீர்த்திவர்மன், காஞ்சனாவின் கரத்தைப் பிடித்துப் பரபர வென்று இழுத்து விரைய எத்தனித்த மறுகணம் திகைத்து நின்றுவிட்டான். மகாவிரதியும், கூனனும் அவன் எதிரே நின்று கொண்டிருந்தனர்.

''அவ்வளவு எளிதில் நீ தப்பிவிட முடியாது. இரவெல்லாம் எங்கோ ஒளிந்து கொண்டிருந்தாலும் பகலில் சிக்கித்தானே ஆக வேண்டும்'' என்று மகாவிரதி கூறினார்.

''நீங்கள் யார்? எதற்காக என்னை வழியில் வந்து மடக்குகிறீர்கள்'' என்று கீர்த்திவர்மன் அலட்சியமாகக் கேட்டு விட்டு அங்கிருந்துச் செல்ல எத்தனித்தான்.

குட்டிச் சித்தன் துள்ளி அவன் முன்பு போய் நின்று, ''பாதகா! அவ்வளவு எளிதில் நீ போய்விட முடியாது. கொலைக் குற்றம் செய்ததோடு ஒரு பெண்ணை அபகரித்துச் செல்லவும் பார்க்கிறாயா?'' என்று கூவினான்.

கீர்த்திவர்மன் அலட்சியமாகச் சிரித்து, ''நகருங்கள் இங்கிருந்து, என்னை யாரென்று எண்ணிப் பழியைச் சுமத்தப் பார்க்கிறீர்கள். ஆள் மாறாட்டம் இந்த நாட்டில் அதிகமாகி விட்டது போலிருக்கிறது'' என்று அவனும் சற்று உரத்த குரலில் பேசினான்.

''உன்னை யார் என்று அறிந்து கொண்டு தான் பேசுகிறோம். இனியும் நீ தப்பிப் போக முடியாது. மரியாதையாக எங்களைத் தொடர்ந்து வா. நீ செய்திருக்கும் குற்றத்திற்கு மரண தண்டனைதான் கிடைக்கும். ஆனால், நாங்கள் உனக்கு ஆயுள் தண்டனையாகக் குறைக்குமாறு அரசரிடம் சிபாரிசு செய்கிறோம்'' என்று மகாவிரதி கூறவும் கீர்த்திவர்மன் பயங்கரமாக நகைத்து, ''எனக்குத் தண்டனை கொடுக்கக்கூடியவர்களும் இந்த நாட்டில் இருக்கிறார்களா? நீங்கள் என்னைக் காஞ்சிக்கு அழைத்துச் செல்வதற்குள் காஞ்சியின் அதிபதியே மாறியிருப்பார். எனக்கு நீங்கள் தயை தாட்சண்யத்துடன் சிபாரிசு செய்வது போக உங்களைக் காப்பாற்ற வேண்டிய பொறுப்பு எனக்கு ஏற்படும்.



இங்கிருந்து மரியாதையாக ஓடிவிடுங்கள்'' என்று கூறி விட்டு காஞ்சனாவை வேக மாக இழுத்துக் கொண்டு ஓட ஆரம்பித்தவன் மேல் குட்டிச் சித்தன் பாய்ந்தான். குட்டிச் சித்தனுடைய தாக்குதலை கீர்த்திவர்மன் எதிர்பார்க்கவில்லை. காஞ்சனாவைப் பிடித்திருந்த பிடி நழுவியது. நிலை தடுமாறிக் கீழே விழ்ந்தான். ஆனால், அடுத்த கணம் இடையில் மறைத்து வைத்திருந்த வாளை உருவி எடுத்து ஓடிச் சென்று காஞ்சனாவை ஒரு கரத்தில் பற்றிக் கொண்டு, வாளைச் சுழற்றி ''யாராவது அருகே நெருங்கினால் இந்த வாளுக்கு இரையாவீர்கள். என்னைத் தொடரவோ, தடுக்கவோ முயன்றால் வாளுக்கு விருந்தாவது திண்ணம்'' என்று கர்ஜித்துவிட்டு ஓட ஆரம்பித்தான். காஞ்சனா தட்டுத் தடுமாறினாள். குழல் சரிந்து ஆடை அலங்கோலமாக, பயத்தால் அவளுக்குக் கூவக்கூட இயலவில்லை.

மகாவிரதியும் கூனனும் திகைத்து நின்றனர். கீழே வீழ்ந்து சிறிது நேரம் எழுந்திருக்க இயலாதிருந்த விஜயனும் மெல்ல எழுந்து ஓடிவந்து செய்வதறியாது திகைத்து நின்றான்.

ஆனால், ஓடிய கீர்த்திவர்மன் மீண்டும் பரபரப்புடன் திரும்பி காஞ்சனாவையும் இழுத்துக் கொண்டு ஓடி வருவது கண்ட அனைவரும் மேலும் திகைத்து அந்தத் திக்கை நோக்கினர். மாமல்லபுரத்து ஓவியரும், சுந்தரியும், இராஜசிம்மனும் வீரர்கள் சூழ வந்து கொண்டிருந்தனர். கீர்த்திவர்மன் எந்தப் பக்கமும் சென்று தப்பிஓட இயலாதவாறு நாலா பக்கமும் வாளேந்திய வீரர்கள்!

சிற்பியைக் கண்டுபிடித்து விட்டுத்தான் வேறு பணியை மேற்கொள்வது என்ற திடமுடன் அலைந்த இராஜசிம்மனுக்கு கீர்த்திவர்மனின் நடவடிக்கைகளைப் பற்றிய சில செய்திகள் ஒற்றர் மூலம் கிடைத்தன. சிற்பியை வண்டியிலேற்றி எங்கோ கண்காணாத இடத்துக்குக் கொண்டு போக கீர்த்திவர்மன் முயல்வதும் ஏராளமான ஆயுதங்கள் சேகரித்து வைத்திருப்பதும் அவருக்குத் தெரியவந்தன.

ஆனால், காஞ்சியில் தங்கியிருந்த சுந்தரியினால் அவருடைய திட்டங்கள் தடைப்பட்டன. விஜயனிடமிருந்து சுந்தரியைப்

பிரித்த இராஜசிம்மன் எண்ணம் வெற்றி பெறவில்லை. அரண்மனை வாழ்வும், ராஜ நர்த்தகி என்ற பெரும் பதவியும் தனக்குத் தேவையில்லை என்று உதறிவிட்டு விஜயன் இருக்குமிடம் செல்வதற்கு சுந்தரி, மன்னரைச் சந்தித்து பெரிதும் அனுமதி வேண்டினாள்.

இராஜசிம்மன் அதற்கு இசையவில்லை.

காட்டுப்பகுதியும் மனித சஞ்சாரமுமற்ற அந்த இடத்திற்குப் பெண்கள் செல்வது சரியன்று எனச் சமாதானம் கூறினார். விஜயனின் கலைப்பணி தடைப்பட்டு விடும் என்று காரணம் காட்டினார். சுந்தரி சமாதானமடையவில்லை.

''ஒரு பெண்ணின் இதயத்தைப் புரிந்து கொள்ளாமல் தடை விதிப்பது மன்னர்க்கு அழகன்று'' என்று கூறினாள். 'கலை யுள்ளத்திற்கு வேலி கட்டுகிறீர்கள்' என்று கூவி வெதும்பினாள்.

இராஜசிம்மன் புன்முறுவலுடன், ''சுந்தரி! கலைஞனுள்ளம் கலைஞனுக்குத்தான் தெரியும். விஜயனுக்கு உன்மேல் இப்போது அன்பில்லை. நீ அவனை மறந்துவிட வேண்டியதுதான்' என்றார். 'காதல் என்பது மறக்கக் கூடியதோ அழியக் கூடியதோ அன்று எனத் தங்களுக்குத் தெரியாதா? விஜயன் என்னை மறந்தாலும் என் இதயத்தினின்று அவரை மாற்ற நான் ஒருபோதும் உடன்படேன்' என்றாள் சுந்தரி.

'உங்கள் காதல் எத்தனைக் காலமாக வளர்கிறது?' என்று கேட்டார் மன்னர்.

''காதலுக்குக் காலமும் அளவும் கிடையாதே, மாமல்லபுரத்துக் குடிலில் ஒரே ஒரு கணம் அவரைச் சந்தித்தேன். தங்களைத் தேடிவந்தார். ஆனால், என்னைக் கண்டார். ஒருவரையொருவர் புரிந்து கொண்டோம் என்ற துணிவுடன் கூறினாள் சுந்தரி. அவள் இனி யாருக்கு அஞ்ச வேண்டும்?

''விஜயனுக்கு நெருங்கிய உறவினர் நான்தான். நான் இந்த நாட்டு மன்னன் என்பது ஒருபுறமிருக்க விஜயன் நல்வாழ்வை விரும்புபவன் நான் ஒருவனே. எனக்கு எது நல்லது என்று தெரியும்'' என்று இராஜசிம்மன் உதட்டில் விஷமச் சிரிப்பு நெளியக் கூறினார்.

''அதனால்தான் புனிதமான காதல் மலரைக் கருகச் செய்கிறீர்கள் போலிருக்கிறது. விஜயனிடம் தங்களுக்கு உரிமை இருக்கிறது என்ற எண்ணத்தில் அவரை என்னிடமிருந்துப் பிரித்தீர்கள்.''

''இல்லை... இல்லை விஜயன் காதல் புரியக் காஞ்சிக்கு வரவில்லை. அவன் கடமைக்குக் காதல் குறுக்கே நிற்கும்போது நான் சும்மாயிருக்க முடியுமா? கலைதான் எனக்கு முதன்மை.''

''ஓகோ, கலையை முதன்மையாகக் கருதும் தாங்களா ஒப்பற்ற கலைஞர் – சிற்பியைக் காணாமல் போன சிற்பியைக் கண்டுபிடிக்க முயலாது ஆட்சி நடத்துகிறீர்கள்?''

சுந்தரி இவ்வாறு கேட்பாள் என்று இராஜசிம்மன் எதிர்பார்க்க வில்லை. அவனுடைய மௌனம் சுந்தரியின் ஆவேசத்தை மேலும் அதிகமாக்கியது. கலைஞரை அங்கே கண்டுபிடிக்க முடியவில்லை. இங்கே கலையை வளர்க்கிறேன் என்று சொல்கிறீர்கள். என்னைக் கண்ணுக்குக் கண்ணாகக் காப்பாற்ற வாக்குக் கொடுத்த சிற்பியார் அறிந்தால் என் காதல் இப்படிக் கருக விடுவாரா?'' சுந்தரியின் கண்களில் நீர் தளும்பியது.

இராஜசிம்மன் மனமும் நெகிழ்ந்திருக்க வேண்டும். ''சுந்தரி, கலை ஆர்வத்துடன் ஓரளவுக்கு என் மனத்தில் பொறாமை சேர்ந்ததால் உங்களைப் பிரித்தேன் என்பதை நான் மறுக்க விரும்பவில்லை. நானும் சிற்பியைத் தேடி அலைந்தேன். இன்றுதான் சிற்பி இருக்குமிடம் எனக்குத் தெரிய வந்தது....'' எனறு அவர் கூறுவதற்குள் ''என்ன, என்ன சிற்பி அகப்பட்டு விட்டாரா? அவர் இருக்குமிடம் தெரிந்து விட்டதா? பிறகு ஏன் இவ்வாறு அமைதியாக உட்கார்ந்து என் வேதனையை வளர்த்துக் கொண்டிருக்கிறீர்கள்! உடனே சிற்பியை அழைத்து வாருங்கள்.

''பல்லவ நாட்டிற்கு அவரைப் போன்ற மாபெரும் கலைஞர் எந்தக் காலத்திலும் கிடைக்கமாட்டார்கள். அவர் மகத்தான திட்டங்களை வைத்திருக்கிறார். விஜயனைப் பனைமலைக்கு அனுப்பினீர்களே அவருடன் சிற்பியையும் அனுப்பினால் அற்புதமான சிற்பக் கோயிலும், ஓவியக்கூடமும் அமையும். காதலர்களைப் பிரிக்க அறிந்த தங்களுக்கு அந்த யோசனை தோன்றாதது மிக ஆச்சரியம்தான். நான் இவ்வாறு துணிவுடன் கூறுவதற்கு என்ன தண்டனை வேண்டுமானாலும் அளியுங்கள். மாபெரும் தண்டனையை ஏற்றுக் கொள்ளும் பெரும் குற்றம் ஒன்று செய்யப் போகிறேன். நீங்கள் என்னதான் தடுத்தாலும் நான் பனைமலைக்குச் சென்று விஜயனைக் காணத்தான் போகிறேன். அவர் என் காதலை மறுத்தாலும் நான் அங்கே பணிவிடைகள் செய்து கொண்டு வாழ்நாளைக் கழிக்கத்தான் போகிறேன். உங்கள் உத்தரவை மீறுவதற்காக நீங்கள் வெகுண்டு பெரும் தண்டனை அளிப்பீர்கள் என்று தெரியும்... மிக

மகிழ்ச்சியுடன் அதை ஏற்பேன்...'' என்று சுந்தரி கூறிக் கொண்டே போகும்போது, இராஜசிம்மன் பரபரப்புடன் எழுந்து, ''சுந்தரி, சுந்தரி, உன் மனம் எனக்குப் புரியாததல்ல. இப்போதே சிற்பி இருக்குமிடம் நான் புறப்படுகிறேன். நீயும் உடன் வா. சிற்பியையும், உன்னையும் பனைமலைக்கு அழைத்துச் செல்கிறேன். கலைக்குக் காதல் வளமும் வேண்டும் என்பதை அறிந்தும் ஏனோ என் கண்களைப் பொறாமை மறைத்துவிட்டது. வா, உடனே போவோம்'' என்று கூறி, சுந்தரியுடன், கீர்த்திவர்மன் சிற்பியை மறைத்து வைத்திருக்குமிடம் நோக்கிப் புறப்பட்டார். சுந்தரியும் அவரைப் பின் தொடர்ந்தாள். சொன்ன சொல்லை இராஜசிம்மன் தவறமாட்டார் என்ற உறுதி அவளுள்ளத்தில் இருந்தது. இராஜசிம்மனுடன் வீரர்கள் பலர் சென்றனர்.

⁂ ⁂ ⁂

**சி**ற்பி தங்கியிருந்த இடத்துக்கருகில்தான் கீர்த்திவர்மனுக்கும் மற்றவர்களுக்கும் துவந்த யுத்தம் நடைபெற்றது. எதிர்பாராத விதமாக மன்னரையும் போர் வீரர்களையும் கண்ட கீர்த்திவர்மன் திகைத்தான். சுந்தரியையும், காஞ்சனாவையும் மாறி மாறிப் பார்க்கும்போது அவன் திகைப்பு மேலும் அதிகமாகியது!

''சாளுக்கிய வீரரே! என்ன அப்படித் திகைக்கிறீர்கள்? எதிர்பாராதவிதமாக சிக்கிவிட்டோமே என்ற கவலையாலா?'' என்று இராஜசிம்மன் கேட்டான்.

வகையாகச் சிக்கிவிட்ட போதிலும் கீர்த்திவர்மன் அஞ்சிவிட வில்லை. சுந்தரியைக் காணக்காண அவனுக்கு ஆத்திரம் அதிகமாகியது.

''நான் எதைக்கண்டு அஞ்சவும் இல்லை, ஆச்சரியப் படவுமில்லை. இந்த இரு பெண்களும் ஒரே மாதிரி உருவத்துடன் இருக்கிறார்களே இதில் யார் சுந்தரி, யார் காஞ்சனா என அறியாது திகைக்கிறேன்'' என்று கம்பீரமாகப் பதிலுரைத்தான்.

''யார் என அடையாளம் தெரியாமலா நேற்று காஞ்சனாவைப் பின் தொடர்ந்து வந்து, அங்குப் பைரவனைக் கொன்றாய்?'' என்று மகாவிரதி கேட்டார்.

''காஞ்சனாவையும் கண்காணித்தேன். சுந்தரியையும் தேடி வந்தேன். இருவராலும் எனக்கு ஆக வேண்டியவை ஏராளம். காஞ்சனா என் சகோதரனை ஏமாற்றி விட்டாள். சுந்தரி என்னை ஏமாற்றிவிட்டாள்'' என்று கீர்த்திவர்மன் கூறியபோது ஆத்திரங் கொண்ட சுந்தரி, ''எந்த இடத்திலிருந்து பேசுகிறோம் என்பதை அறிந்து பேசு... ஏமாற்றியது யார்? துரோகி யார் என்பது மன்னருக்குத் தெரியும்'' என்று கூறினாள்.

சற்றுப் பயம் தெளிந்த காஞ்சனாவும், ''அரசே! இவனை நம்பாதீர்கள். காஞ்சியின் மீது படையெடுத்து வரும்போது சாளுக்கியர்களுக்கு உதவுவதற்காக இத்தகைய கபட வேடத்தில் உலவுகிறான்'' என்று கிரீச்சென்ற குரலில் கூவினாள்.

கீர்த்திவர்மனை வீரர்கள் சூழ்ந்து. கொண்டார்கள். அவனிடமிருந்த வாளைப் பறித்து நிராயுதபாணியாக்கினார்கள்.

''கீர்த்திவர்மனும் சாளுக்கிய நாட்டு அரச குடும்பத்தைச் சேர்ந்தவன். சிவனடியார் வேடத்தில் இருப்பதால் சங்கிலி கொண்டு பிணைக்காதீர்கள். அருகிலுள்ள கிராமப் பஞ்சாயத் தார்களிடம் அழைத்துச் செல்லுங்கள். நானும் இதோ விரைவாக வருகிறேன். அங்கேயே விசாரித்துத் தீர்ப்புக் கூறுவோம்'' என்று கூறினார்.

சுந்தரியும், காஞ்சனாவும் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டனர். இருவரும் விஜயனை நோக்கினர். விஜயன் நான்கு விழிகளின் தாக்குதல் தாளாமல் தலை குனிந்து கொண்டான். வேறு என்ன செய்ய முடியும்?

காஞ்சனா இங்கே எவ்விதம் வந்தாள் என்று சுந்தரி எண்ணினாள்.

மன்னருடன் சேர்ந்து சுந்தரி இங்கே எப்படி வந்தாள் என்று காஞ்சனா குழப்பமுற்றாள்.

''தக்க சமயத்தில் வந்தாய்'' என்று காஞ்சனா சுந்தரியை நோக்கிக் கூறி, எவ்வாறு, ஏன் அவள் வந்தாள் என்பதை அறிய முயன்றாள்.

சுந்தரியின் உள்ளம் அப்போது களிப்பில் ஆழ்ந்திருந்தது. விஜயனுடன் செல்லப் போகிறோமென்ற பெரு மகிழ்ச்சி அவள் உள்ளத்தில் கூத்தாடியது.

''பனைமலைக்குச் சிற்பியுடன் செல்கிறோம். விஜயனை அங்கே சென்று சந்திக்கலாம் என மன்னர் கூறினார். ஆனால் கும்பிடப்போன தெய்வம் இங்கேயே வந்துவிட்டது'' என்றாள்.

காஞ்சனாவின் உள்ளத்தில் பெரும் புயல் உருவாகியது. சோதனைக்கு மேல் தனக்குச் சோதனையா என்று அவள் உள்ளம் நொந்தாள். விஜயனை சுந்தரி அடைந்துவிடுவாள். இனி நமக்கென்ன இங்கு வேலை என்ற எண்ணம் இதயத்தில் உருவாகியது.

●

# 36. இனி யார் ஆதரவோ?

கீர்த்திவர்மனைச் சூழ்ந்துகொண்ட வீரர்கள் அவனை அருகிலிருந்த கிராமத்திற்கு அழைத்துச் சென்றனர். பஞ்சாயத்தார்கள் வரவிற்காகக் குளக்கரை அரச மரத்தடியில் ஊர் மக்கள் கூடியிருந்தனர். தங்கள் கிராமத்திற்கு மன்னர் இராஜசிம்மன் வரப்போகிறார் என்ற செய்தியும் அங்கே மெல்ல மெல்லப் பரவி விட்டது. தனது சதித்திட்டங்களுடன் விரோதி நாட்டில் சிக்கிக் கொண்டோமே என்ற அச்சம் கீர்த்திவர்மனுக்கு எள்ளளவும் இல்லை. அவனுள்ளம் மேலும் பயங்கரச் சதிகளை உருவாக்கிக் கொண்டிருந்தன. அவன் அவ்வளவு எளிதில் சிக்கியிருக்க மாட்டான். உருவ ஒற்றுமையுடன் கூடிய சுந்தரியும், காஞ்சனாவும் அவனுடைய திட்டங்களைக் குலைத்துவிட்டனர். யார் சுந்தரி, யார் காஞ்சனா என்று ஒரு கணம் அவனால் அடையாளம் கண்டு கொள்ள முடியாமல் போய்விட்டது. ஆனால் சுந்தரியை மட்டும் அடையாளம் கண்டுகொண்ட கீர்த்தி வர்மன் உள்ளத்தில் வெஞ்சினம் எழுந்தது. இனி அவனால் ஒருகணம் கூடத் தாமதிக்க முடியாது. 'பல்லவ அரச குடும்பத்தை ஒழித்துவிடுவதாக சபதம் பூண்டு வந்த சுந்தரி மனம் மாறி விட்டாள். அந்தக் காரியத்தை நாம் செய்வோம்' என்று திட்டமிட்டான். அவனது கரங்கள் கட்டப்பட்டு இருக்கவில்லை. ஒரு கணத்தில் அவன் என்ன வேண்டுமானாலும் செய்துவிடலாம். அதற்கு வழி வகுக்கத்தான் கீர்த்திவர்மன் முயன்று கொண்டிருந்தான். அவன் பார்வை இப்படியும் அப்படியுமாகச் சுழன்றது.

இராஜசிம்மன் எதிரே சிற்பி மல்லிநாதரும், விஜயனும், சுந்தரியும், காஞ்சனாவும், குட்டிச் சித்தனும், மகாவிரதியும் நின்று கொண்டிருந்தனர். மகாவிரதியை இராஜசிம்மன் பார்த்துப் புன்னகை புரிந்தார். அதில் நன்றி கலந்திருப்பது போல் தோன்றியது. மகாவிரதியை அவர் முன்பே அறிவார். பாரதக் கதை கூறும் முகுந்தநாதர்தான் அவர்.

''இந்த உருவத்தில் தங்களை எனக்கு அடையாளமே கண்டுகொள்ள முடியவில்லை'' என்றார் இராஜசிம்மன்.

“அடையாளம் கண்டு கொண்டால் அதற்குப் பெயா மாறுவேடமன்று!” என்றார் மகாவிரதியின் வடிவில் இருந்த முகுந்தநாதர்.

“நாட்டைக் காப்பதற்காக தங்களுடைய அழகான கூந்தலையும், தாடி மீசையையும் எடுத்துவிட்டீர்கள். பட்டாடை ஆபரணங்களைத் துறந்து விட்டீர்கள்” என்றார் இராஜசிம்மன், அவரைப் பாராட்டும் வகையில்.

“ஆமாம்! காஞ்சியில் பகை நாட்டினர் நடமாட்டம் ஏற்பட்டிருக்கிறது என்பதை அறிந்தவுடன் என்னால் சும்மாயிருக்க முடியவில்லை.”

“தங்களை நான் மாமல்லபுரத்தில் கடைசியாகச் சந்தித்தேன். திருவிடவெந்தை செல்வதாகக் கூறிச் சென்றீர்கள்.”

“ஆமாம்.”

“திருவிடவெந்தை செல்வதற்குள்ளேயே சாளுக்கிய இளவரசன் பல்லவ நாட்டிற்குள் வந்திருப்பதை அறிந்தேன்.”

“ஓகோ! அப்போதே அறிந்து கொண்டீர்களா?”

“ஆமாம்! கீர்த்திவர்மன் மாறுவேடம் பூண்டவுடன் நானும் அதைப் போன்று மாற வேண்டியதுதானே! காஞ்சிக்குள் சாளுக்கிய இளவரசர் மாற்றுருவில் நடமாடுகிறார் என்றால் ஆபத்து நெருங்கிவிட்டது என்றுதானே பொருள்? அதனால் நான் என் சொந்தக் காரியத்தையும் மறந்து மாவிரதி வேடம் பூண்டேன். அதனால்தான் உங்கள் இளம் பிராய நண்பரை ஆபத்திலிருந்துத் தப்ப வைக்க முடிந்தது.”

“முதிய பிராயத்திலே தங்களுக்கு மிகுந்த சிரமம்” என்றார் மன்னர்.

முகுந்தநாதர் மெல்ல நகைத்த வண்ணம், “காஞ்சியை அவ்வளவு எளிதிலும் மாற்றார்கள் கைப்பற்றிவிட நான் விட்டுவிடுவேனா? உன் தந்தையின் வீரமும், உன் முப்பாட்டனார் வீரமும் மறைந்து போவதா? உன் வீரத்தை புலப்படுத்தத் தக்க வாய்ப்பை ஏற்படுத்தித் தருவதும் என் கடமையல்லவா?” என்று கூறும்போது அவருடைய கூரிய விழிகள் இராஜசிம்மனை நோக்கின.

“ஐயா, தாங்கள் சொல்ல வந்தது எனக்குப் புரிகிறது. நான் அனைத்தையும் கேள்விப்பட்டேன். சாளுக்கிய இளவரசன் விநயாதித்தன் படையெடுத்து வரும்போது கீர்த்திவர்மன்,

மறைத்து வைத்திருந்த ஆயுதங்களுடன் அவனுக்கு உதவி செய்வது என்பது அவன் திட்டம். அதை முறியடித்துவிட்டேன். ஆனால், அவன் காஞ்சி நகரக் கணிகையைத் தொல்லை கொடுக்க முயன்றது ஏன் என்றுதான் எனக்குத் தெரியவில்லை'' என்று கூறிய இராஜசிம்மன் பார்வை குனிந்த தலையுடன் நின்று கொண்டிருந்த காஞ்சனாவின் பக்கம் சென்றது.

''எத்தகைய வீராதி வீரனும் பெண்கள் விஷயத்தில் மதிமயங்கி விடுவார்கள் என்பது கண்கூடான உண்மை. கீர்த்திவர்மன் சுந்தரியை முன்பே அறிவான். அவளைத் தேடி வந்த இடத்தில் உருவ மாறுபாடு தொல்லை கொடுத்துவிட்டது. நானும், குட்டிச் சித்தனும் கீர்த்திவர்மனை தொடர்ந்து காடும் மலையும் சுற்றினோம். அப்போதுதான் சிற்பியைக் கண்டுபிடிக்க வேண்டும் எனும் ஒரே தீவிரம் குட்டிச் சித்தனுக்கு. கீர்த்திவர்மனைத் தொடர்ந்து வந்தபோது சிற்பி இருக்குமிடமும் எங்களுக்குத் தெரிந்தது. தங்களுக்குச் செய்தியை அனுப்பிவிட்டு அங்கேயே மறைந்திருந்தோம். பொழுது சாய்ந்தபோது கீர்த்திவர்மன் எங்கோ புறப்பட்டான். அவனை நாங்கள் பின் தொடர்ந்தோம். தோப்பின் வழியாக காஞ்சனாவும், பைரவனும் செல்வது தெரிந்தது. கீர்த்திவர்மனும் அவர்களைப் பின் தொர்டர்ந்துச் சென்று பாழ் வீட்டருகே மறைந்திருந்தான். நாங்களும் மறைந்திருந்தோம். உணவுத் தேடிச் சென்று மீண்ட பைரவனுக்கும், காஞ்சனாவுக்கும் வாக்குவாதம் ஏற்பட்டது. திடீரெனக் காஞ்சனா அபயக்குரல் எழுப்பியது கேட்டது. முதலில் ஓடியது கீர்த்திவர்மன்தான். அவன் நொடியில் தன் கத்திக்குப் பைரவனை உணவாக்கி விட்டான். அத்துடன் வேலை முடிந்தது என்று அவன் எண்ணியபோது நாங்கள் மறைவிடத்தினின்று விரைந்து வந்தோம். நிலைமை வேறுவிதமாக மாறுவது கண்ட கீர்த்திவர்மன் ஓடத் தொடங்கினான். நாங்களும் மை இருளில் ஓடினோம். பொழுது விடிந்த பிறகுதான் அவனைப் பிடிக்க முடிந்தது. நீங்களும் வந்துவிட்டீர்கள்'' என்று முகுந்தநாதர் நடந்தவற்றைக் கூறி முடித்தார்.

''பெண்களால் கீர்த்திவர்மன் திட்டம் பாழாகியது என்று சொல்லுங்கள்'' என்று மெல்ல நகைத்துக் கொண்டே சுந்தரியைப் பார்த்தவாறு கூறிய இராஜசிம்மன், ''அதனால்தான் அற்புதக் கலைப்பணி செய்யச் செல்லும் விஜயனுக்கு ஒரு பெண்ணால் இடையூறு ஏற்படக்கூடாது என்று தடுத்தேன். ஆனால் என் பேச்சை யார் கேட்கிறார்கள்?'' என்று புன்னகை பூத்தவாறு கூறினார்.

''ஏன், நான் கேட்கவில்லையா? உண்மைக் காதலாக இருந்தால் சிறிது காலத்திற்குச் சுந்தரியைச் சந்திக்காமல் இருக்க வேண்டும். சந்திக்க எக்காரணங்கொண்டும் முயலக் கூடாது; காதலைவிடக் கலையைப் பெரிதாகக் கொள்ள வேண்டும்' என்று தாங்கள் கூறிய உடனேயே நான் பனைமலையை நோக்கிப் புறப்பட்டு விட்டேனே'' என்று விஜயன் படபட வென்று கூறினான்.

சிற்பி மல்லி நாதர் இப்போது மெல்லப் பேசினார். ''ஏதோ, எல்லாம் நல்லவிதமாக முடிவடைந்தது. இந்தப் பிள்ளைதானா நீங்கள் கூறியவன்?'' என்று கேட்டபோது விஜயன் முழங்கால் மண்டியிட்டு, ''ஐயா, தங்களைக் காண வேண்டும் என்றுதான் நான் மாமல்லபுரம் வந்தேன். நான் காஞ்சி நகரை மிதித்த வேளை சரியில்லை போலிருக்கிறது; அதனால் எல்லாமே விசித்திரமாக நடைபெற்று வருகிறது. தங்களோடு சேர்ந்து நான் பணியாற்றப் போகிறேன் என்று எண்ணும்போது என் உள்ளம் மகிழ்ச்சியால் துள்ளுகிறது. தங்களுக்கு எந்தவித ஆபத்துமில்லாமல் திரும்ப வேண்டும் என்று இடைவிடாமல் இறைவனைப் பிரார்த்தித்து வந்தேன்'' என்று விஜயன் கூறும்போது அவன் குரல் மிகவும் உணர்ச்சி வசப்பட்டது.

மல்லிநாதர் மெல்ல அவனைத் தூக்கி நிறுத்தி, மன்னரை நோக்கி, ''அரசே! அனாதையாகவே மாமல்லபுரத்துக் குடிலுக்கு வந்து சேர்ந்தாள். என்னிடம் வந்த பிறகு அவள் அனாதை அல்லள்; அவளை எனது வளர்ப்புப் புத்திரி என்று கூறிக் கொள்வதில் நான் பெருமை அடைகிறேன்; அவள் தேடிக் கொண்ட மணாளனும் மிகவும் புத்திசாலியாகத் திகழ்கிறான். காதலுக்கு ஒரு பெரும் சோதனையே செய்துவிட்டீர்கள். ஆனால் இனிதான் அவர்களுக்குக் கடுஞ் சோதனை. அரசே! ஒரு வேண்டுகோள். பனைமலைக்குச் சென்று சிற்பப் பணியைத் தொடங்க இது சரியான சமயமன்று. மாமல்லபுரத்திலேயே ஏராளமான வேலைகள் உள்ளன. நரசிம்மவர்மர் அமைத்த மண்டபங்களிலே வர்ண ஓவியங்கள் தீட்டலாம். அவர் பூர்த்தி செய்யாது விட்டுச் சென்றவைகளை நான் தொடர்ந்துச் செய்கிறேன். உங்கள் தந்தையின் எண்ணமும் அதுவே'' என்று கூறினார். பரமேச்வர வர்மர் சுவர்க்கஸ்தரான செய்தி அவருக்குத் தெரியாது.

விஜயன் குறுக்கிட்டு, ''ஐயா, பெரும் கலை உள்ளம் படைத்த மாமேதையைக் கூற்றுவன் கொண்டு சென்று விட்டானய்யா. தங்களிடம் அவர் மதிப்பு மரியாதை மிகவும் கொண்டிருந்தார்''

என்று கூறியபோது மல்லிநாதர் திடுக்கிட்டுக் கம்பம் போல் நின்றுவிட்டார். அவர் கண்களில் நீர் தளும்பியது. அவர் கோபமெல்லாம் சாளுக்கியர் மேல் திரும்பின.

''பொல்லாத சாளுக்கியச் சிறுவன் என்னைக் காணாத இடத்தில் மறைத்து வைத்துவிட்டான். அதனாலன்றோ நான் மன்னர் முகத்தைக் கடைசியாகக் காண முடியாது போய்விட்டது. இப்போதும் அவர்களது தொல்லை தீரவில்லை. அரசே! சாளுக்கியப் போர் வெறியை அடக்கினால்தான் எங்களைப் போன்ற கலைஞர்கள் அமைதியாகப் பணியாற்ற முடியும்'' என்றார்.

இராஜசிம்மன் சிறிது நேரம் ஏதும் பேசவில்லை. பிறகு மல்லிநாதரை நோக்கி, ''... அப்படியென்றால் தங்கள் கருத்து இப்போது பனைமலைப் பணி வேண்டாம் என்பதுதானே'' என்றார்.

''பல காரியங்களை மனத்தில் கொண்டு நான் சொல்கிறேன். இன்னும் சில ஆண்டுகளில் தொடங்கி விடுவோம்'' என்றார் மல்லிநாதர்.

இராஜசிம்மன் விஜயனை ஒருமுறை நோக்கினார். பிறகு, ''சரி; மாமல்லபுரத்தில் நம் பணியைத் தொடங்குவோம். ஆனால் நான் உங்களைப் பிரிக்க விரும்பவில்லை'' என்றார்.

சுந்தரி இப்போது குறுக்கிட்டு, ''அரசே! தாங்கள் முன்பு கூறிய கட்டளையை நான் இப்போது சிரமேற்கொள்ள விரும்புகிறேன். மாமல்லபுரத்தில் வண்ணப்பணி முடியும் வரை என் மனத்தை ஒரே நிலையில் வைத்துக் கொள்ளப் போகிறேன். மிக விரும்பும் பொருள் மிக அருகே இருக்கும்போது அதனிடம் மனத்தை இழக்காது இருப்பதில்தான் உள்ளத் திண்மை இருக்கிறது. தங்கள் கட்டளை என்றும் யாராலும் நிறைவேற்றப்படாமல் இருக்கக்கூடாது'' என்று கூறினாள்.

அரசர் கலகலவென நகைத்து, ''ஆமாம்; ஆமாம். ஒரு பொருள் உறுதியாகக் கிடைத்துவிடும் என்ற நம்பிக்கை ஏற்பட்டவுடன் எப்படி வேண்டுமானாலும் தைரியமாகப் பேசலாம். எல்லாம் மனச் சந்தோஷத்தின் விளைவு'' என்றார். உடனிருந்தவர்கள் அனைவரும் நகைத்தனர்.

ஆனால் ஒரே ஒரு ஜீவன் மட்டும் உள்ளுக்குள்ளேயே துடியாய்த் துடித்துக் கொண்டிருந்தது. அந்த ஜீவனின் இதயம் ஆயிரம் பல்லாயிரம் சுக்குகளாக வெடித்துச் சிதறிவிடும் நிலையை

அடைந்து கொண்டிருந்தது. எங்காவது கொழுந்து விட்டெரியும் ஜ்வாலை இருந்தால் அதற்குள் பாய்ந்துக் கருகிவிடும் ஆவேசத்தில் இருந்தது. மீண்டும் இந்த உலகத்திலுள்ள எந்த உயிரினங் களையும் காண முடியாத அதல பாதாளத்தில் குதித்துவிட அவளுடைய அங்கங்கள் துடித்துக் கொண்டிருந்தன. அந்த ஜீவன்தான் காஞ்சிமா நகரத்துக் கட்டழகி காஞ்சனா. அழகு என்பது இப்போது அவள் வரையில் அற்றுவிட்டது. புறத்தில் அழகு ததும்பி வழிந்து கொண்டிருக்கலாம். இளமை துடிப்புடன் நர்த்தனமாடிக் கொண்டிருக்கலாம். ஆனால் உள்ளத்திலே சீற்றம் பொங்கி தலைவிரித்துக் கொண்டிருந்தது. குரூரமான எண்ணங்கள் குளிர்விட்டு உடனேயே பூத்துக் காய்த்துப் பழுத்து வெம்பிக் கருகச் சித்தமாகிக் கொண்டிருந்தன.

ஒரு காலத்தில் காஞ்சனா என்றால் காஞ்சிமா நகரமே மயங்கித் துள்ளும். அவள் வருகிறாள் என்றால் ஆயிரமாயிரம் கண்கள் ஓடோடி வந்துப் பார்க்கும். புருஷ இனத்தின் விழிகள் தாபத்தால் தவிக்கும். நாடக அரங்கில் அவள் ஆட்டத்தையும், நடிப்பையும் கண்ட கண்கள் விழியைத் திருப்ப மனமின்றித் தவிக்கும். தங்கள் நாயகனை எங்கே காஞ்சனாவிடம் இழந்து விடுவோமோ என்று அஞ்சிய மாதர்கள் அவர்கள் கரங்களைப் பலவந்தமாகப் பற்றி இழுத்துச் செல்வர். தந்தத் திருமேனியாள் கொவ்வை இதழ் அழகியை ஒருமுறைக் காண அவள் மாளிகையின் வாசலில் காத்திருப்போர் எண்ணிக்கைக் கணக்கிலடங்கா... இன்று... அவள் இதயத்தை மற்றவர் கசக்கிப் பிழிய, தோல்வியின் நிழலிலே என்றென்றும் குடியிருக்கும் நிலையிலிருக்கிறாள். விசாலமான மாளிகையை விட்டு வந்தறியாத அவள் சிறிது காலத்திற்குள் இங்கும் அங்கும் அலைந்த நிலைதான் என்ன? அவளுக்கு ஏற்பட்ட விசித்திரமான அனுபவங்கள் தாம் என்ன?

எல்லாவற்றிற்கும் காரணம் – விஜயன்தான். விஜயன் என்ற சொல்லும், பெயரும், பைரவன் எந்த வேளையில் வந்து அந்த இளம் வாலிபனைப் பற்றி வர்ணித்தானோ, அன்றே காஞ்சனா தன் இயற்கை நிலையினின்று மாறுபட்டாள். அவனை அடைய வேண்டும் என்ற ஆசையால்தானே அவள் இவ்வளவு வேதனையும் அடைந்தாள்?

அதோ நிற்கிறாளே சுந்தரி – அவளை விட நான் எந்த விதத்தில் தாழ்ந்தேன்? அழகில்லையா? செல்வமில்லையா? மன்னர் கூட சுந்தரியைச் சார்ந்தே பேசுவதுபோல் தோன்றுகிறது. அவளுடைய காதல் விவகாரத்தில் அவருக்கு மிகுந்த பரிவு. சுந்தரியே வேண்டாம் என்றால்கூட விஜயனை அவளுடன்

சேர்த்து வைத்து விடுவார் போலிருக்கிறதே? அதற்குக் காரணம் என்னவாயிருக்க முடியும்? என்னை அவமானப்படுத்த வேண்டும் என்று எல்லோரும் கங்கணம் கட்டிக் கொண்டு விட்டனரா?

சுந்தரி – என்னுடைய சகோதரிதான் என்பதை நான் அறிந்துகொண்டு விட்டேன். அந்த உருவ ஒற்றுமைதானே என் வாழ்வின் சிறகை ஒடித்துவிட்டது? என் சகோதரி என்பதற்காக நான் என் இன்ப வாழ்வைப் பலிகொடுத்துவிட முடியுமா?

காஞ்சனாவின் மனம் எண்ணிக்கொண்டே சென்றது – எண்ணம் எரிமலையாகும்போது அங்கே எழுந்த சிரிப்பொலி அவள் உடலை பூகம்பம் போல் நடுங்க வைத்தது.

அவள் ஒரு முறை அங்கே கூடியிருந்தவர்களைத் திரும்பிப் பார்த்தாள்.

சே! என்னதான் இருந்தாலும் பெண் ஜன்மம்தானே இப்படி ஆடவர்கள் எதிரே கம்பீரமாக நிற்கலாமா? ஏன் சுந்தரிக்கு இப்படித் துணிவு வந்துவிட்டது – காஞ்சனாவின் விழிகள் அகன்றன.

அரசராம், அரசர்! இப்படி சாதாரண ஜனங்களோடு ஜனங்களாக நின்று கதை கதையாகப் பேசுகிறாரே! கலகலவென்று சிரிப்பதற்கு இதுவா சமயம்? வடபெண்ணை ஆற்றங்கரையில் இந்த நாட்டின் அழிவை நிர்ணயிப்பவர்கள் காத்திருக்கிறார்கள். இங்கே இவர்கள் ஏதோ சிற்பமாம் – சித்திரமாம், பே[illegible]றார்கள்.

விஜயன் – நாம் அவன் முகத்தையே பார்க்கக் கூடாது. கடைசி கடைசியாக கெஞ்சிக் கேட்டுக் கொண்டோம். நம் இதயக் கபாடம் திறந்து வெட்கம் விட்டு வேண்டிக் கொண்டோம்! விஜயனுக்கு இதயம் என்பது ஒன்றிருக்கிறதோ! வர்ண ஓவியம் தீட்டுவதில் வல்லுனராம்! ஒரு பெண்ணின் இதய ஓவியத்தைக் கண்டு ரசித்து ஏற்கத் தெரியாத இவனுக்கு ஓவியர் என்று பெயராம்–

ஹூம், சுந்தரி! என் இடத்தை நீ பெற்றுவிட்டாய். என்னால் உன்னை வாழ்த்தவே முடியாது. அதனால்தான் உன்னை ஏறிட்டுப் பார்த்துப் பேசவே பிடிக்கவில்லை.

காஞ்சனாவின் உள்ளக் குரல் இன்னும் பலமாக ஒலிக்கத் தொடங்கிய அந்தச் சமயத்தே –

வெண் புரவி மீதமர்ந்து இரு வீரர்கள் விரைந்து வந்து இறங்கி மன்னரை வணங்கி நின்றனர்.

வடக்கே பாடலிபுத்திரத்தின்று காஞ்சிக்குப் பிட்சுகள் பலர் வந்திருக்கிறார்கள் என்றும் மன்னரைக் காண ஆவலுள்ளவர்களாக இருக்கிறார்கள் என்றும் தெரிவித்தனர்.

இராஜசிம்மன் உடனே புறப்பட ஆயத்தமானார். கிராமப் பஞ்சாயத்தார்களுக்கு, அவர்கள் விருப்பப்படியே கீர்த்தி வர்மனுக்கு ஏற்ற தண்டனையை வழங்கக் கட்டளையிட்டு விட்டு, நாட்டில் ஒற்றர் வேலை புரிந்ததற்கான விசாரணையைக் காஞ்சியிலே நடத்த அவனை அனுப்பி வைக்குமாறும் கூறிவிட்டு அரசர் புறப்பட்டார். சிற்பியும், விஜயனும், குட்டிச் சித்தனும், முகுந்தநாதரும், சுந்தரியும் மாமல்லபுரம் நோக்கிப் புறப்பட்டனர்.

காஞ்சனாவை வாவென்று அழைப்பதற்கு ஒருவருமில்லை. உடன்பிறந்த சகோதரிக்குக் காஞ்சனாவை அன்புடன் அழைக்கத் தோன்றவில்லை என்றால் மற்ற எவருக்குத்தான் தோன்றப் போகிறது?

காஞ்சனா எவ்வளவு நேரம் அங்கேயே நின்று கொண்டிருந்தாளோ தெரியாது. பிறகு ஏதோ ஒரு முடிவுக்கு வந்தவளாய் அங்கிருந்து மெல்ல நடக்க ஆரம்பித்தாள்.



# 37. துறவும் உறவும்

**கா**ஞ்சி நகரத்துப் பேரழகி, சிறந்த நடன நாட்டிய நடிகை, செல்வ சிறப்பு மிக்கவள், நகரத்திலுள்ளவர்களுக்குப் பெரும் புதிராக விளங்கியவள், இலட்சியம் ஏதுமின்றி இதயத்திலும் எந்தவித சிந்தனையின்றி நடந்து கொண்டிருந்தாள். உலகமே மாயையாக அவளுக்கு இப்போதுதான் தோன்றியது. இதுவரையில் அவள் நினைத்துக் கொண்டிருந்தது போல் சகல சுகபோகங்கள் நிறைந்ததாக இந்த உலகம் காணப்படவில்லை. மாதுளைச் சாறும்; பாரசீகத்துத் திராட்சையும், சாறெடுத்து என்றுமே பருகிக் கொண்டிருக்கும் சுகநிலை அப்படியே நீடித்துக் கொண்டிருக்கும் என்று தான் அவள் நேற்று வரையில் எண்ணிக் கொண்டிருந்தாள். அன்னத்தின் தூவியால் ஆகிய அருமை மெத்தையில் என்றுமே படுத்திருக்கலாம் என்று அவள் நினைத்துக் கொண்டிருந்தாள். பிரமாண்டமான மாளிகையில் பணிவிடை செய்பவர்கள், கூப்பிட்டவுடன் ஓடி வருபவர்கள். கை கட்டிச் சேவகம் செய்பவர்கள் – இப்படியாக அடிமைப் பரிவாரங்கள் என்றுமே கூடியிருக்குமென்று நினைத்திருந்தாள். ஆண் வர்க்கமே அலட்சியப்படுத்துவதற்கு உரியது என்ற கர்வம் அழியாது என்றும் அவள் மனத்தில் எண்ணியதுண்டு.

ஆனால், அவை எல்லாம் கனவுபோல் ஆகிவிட்டனவே! அடுத்தடுத்து விசித்திரமான சம்பவங்கள் நிகழ்ந்ததும் அவள் சாலை வழியே மனம் தளர்ந்து வருவதும் ஒரு கனவு போல் போய்விடக் கூடாதா என்ற எண்ணம் ஒரு கணம் தோன்றியது. அவள் மெல்லச் சிரித்துக் கொண்டாள். கனவே அன்று. அன்று எல்லாம் நடந்த சம்பவங்கள் தாம். பைரவன் தன்னை ஏமாற்றி அழைத்து வந்ததும், கண்ணெதிரேயே அவன் கொலையுண்டதும் எப்படிக் கனவாகி விட முடியும்?

அப்பப்பா – என்ன பயங்கரம். பைரவனைக் கத்தியால் குத்தியவன் என்னைக் குத்தியிருந்தால்? அடடா – குத்தியிருக்கலாமே; இனி இந்த உலகத்தில் ஆக வேண்டியது என்ன இருக்கிறது – என்னை மதிப்பவர்கள் யார் இருக்கிறார்கள்? விஜயனிடம் ஏமாற்றம். மன்னர் என்னை மதித்ததாகக் கூடத்

தெரியவில்லை. உடன் பிறந்த சகோதரி என்று தெரிந்தும் சுந்தரி என்னை ஏறிட்டுக் கூடப் பார்க்கவில்லை. விஜயனை அடைந்து விட்டோம் என்ற பெருமை அவளுக்கு. இருக்கட்டும்; இருக்கட்டும். அவளே மகிழ்ச்சியுடனிருக்கட்டும். இனி நமக்கு விஜயனைப் பற்றியோ, மற்ற எவரைப் பற்றியோ என்ன கவலை – என்ற எண்ணத்துடன் அவள் நடந்து கொண்டே இருந்தாள். பட்டுப் பட்டாடையுடனும், பொன் ஆபரணங்களுடனும், கால் சலங்கை ஒலிக்க அவள் செல்வதைச் சாலையில் செல்லும் உழைப்பாளிகள் நின்று கவனித்தனர். பார வண்டியை ஓட்டி வரும் வண்டிக்காரர்கள் திரும்பிப் பார்த்துக் கொண்டே சென்றனர். நூல் புடைவையும், எளிய ஆபரணங்களும் அணிந்த பெண்கள் காஞ்சனா செல்வதை வியப்புடன் நோக்கினர்.

யார் தன்னைக் காண்கின்றனர், காணவில்லை எனும் கவனமின்றி காஞ்சனா சென்று கொண்டே இருந்தாள். முத்துப்போல் அரும்பிய வியர்வை அருவி போல் மாறியது. நடை தள்ளாடியது. பெருமூச்சு வாங்கியது. படபடப்பு மிகுந்தது. காற்று வீசியதால் ஏற்பட்ட புழுதி உடலெங்கும் படிந்தது. மேனி கொதித்தது. நாவறண்டது. காஞ்சனா சற்று நின்றாள்.

'எதற்காக நாம் இப்படி நடந்து கொண்டே இருக்கிறோம்' என்று அவள் தன்னைத்தானே கேட்டுக் கொண்டாள்.

'ஏன், நமக்கு இடமா இல்லை. காஞ்சியில் நம் இல்லத்தை அடைந்து அமைதியாயிருப்போம். மனித வாடையே இல்லாமல் காலா காலத்திற்கு மாளிகைக்குள் இருந்தால் கூட பசியின்றி வாழ வழி இருக்கிறது. அதனால் காஞ்சியை நோக்கிச் செல்வதில் என்ன தவறு?'

'ஆகா; காஞ்சிக்குச் சென்றால் அங்கே பழையபடி தான் வாழ வேண்டும். பழையபடி வாழ்ந்தால் இது போன்ற தொல்லைகளை அனுபவிக்கத்தான் நேரிடும்.'

'தொல்லை என்பது காஞ்சியில் மட்டுமில்லையே. எங்கும் உண்டு. பெண்ணாகப் பிறந்த பிறகு துன்பத்தையும், துயரத்தையும் எதிர்பார்க்காமலோ, வரவேற்காமலோ முடியுமா? காஞ்சியில் இல்லாமல் கடல்மல்லைக்குப் போனாலும் துன்பம் தொடரத்தான் செய்யும்.'

'துன்பத்தைத் தாங்குவதில்தான் திறமை இருக்கிறது.'

'இனி அது இயலாது. அச்சம் அறியாமல், இடர் என்பது தெரிந்து கொள்ளாமல் இருந்துவிட்ட நான் இனித் தொல்லையைத் தாங்கமாட்டேன்.'



'அப்படியென்றால் காஞ்சியோ, வேறு எந்த ஊரோ உதவி செய்யாது. மற்ற துயரமற்ற வேதனையற்ற ஓரிடத்திற்குச் சென்றால் தான் முடியும்.'

அந்த இடம் – இன்ப இடம் எங்கே இருக்கிறது? காஞ்சனா சற்று யோசித்தாள். அவள் இதயத்தைத் துக்கம் வந்து அழுத்தியது. எங்கேயாவது கண்காணாத இடத்திற்குச் சென்றுவிடலாம். அந்த இடத்தில் மட்டும் அமைதி கிட்டுமா? காஞ்சனா அந்த இடத்திலேயே நின்றாள். கண்ணுக்கு எட்டிய தொலைவு வயல்வெளி; ஆனால், வயலில் பசுமைப் பயிர்கள் இல்லை. தீய்ந்துப் போய்க் கிடந்தன. அழகற்ற அந்த வயல் அவளது சோக வாழ்க்கையை நினைவுப்படுத்தியது.

வயல் ஓரத்திலே பெரிய கிணறு. ஏற்றமும் இருந்தது. ஒருவாய்த் தண்ணீர் குடிக்க வேண்டும்போல் அவளுக்குத் தோன்றியது. சாலையினின்று இறங்கிக் கிணற்றை நோக்கிச் சென்றாள். சுற்றிலும் கைப்பிடிச் சுவரற்ற கிணறு அது. கிணற்றங் கரையை நெருங்கியவுடன் தாகம் தீர்க்கத் தண்ணீர் குடிக்க வேண்டும் எனும் எண்ணம் அவளுக்கு மாறியது. 'துயரமற்ற, வேதனையற்ற இடம் வேண்டுமென்று அலைந்தோமே அது இதோ இருக்கிறது. சற்று மனத்தைத் தேற்றிக் கொண்டு, தைரியப்படுத்திக் கொண்டு குதித்துவிட வேண்டியதுதான். ஒன்று, இரண்டு, மூன்று என்று மும்முறை கடவுள் நம்மைச் சோதனை செய்வார். ஆனால், மனத்தைத் திடப்படுத்திக் கொண்டு பரிபூரண விடுதலையை அடைய வேண்டும்.'

காஞ்சனா திடமான முடிவுக்கு வந்துவிட்டாள். தான் அணிந்திருந்த ஆபரணங்களை ஒவ்வொன்றாகக் கழற்றினாள். கைவளையல்களைக் கழற்றினாள். தாவணியில் ஒரு சிறு பகுதியைக் கிழித்தாள். ஆபரணங்களை அதில் போட்டு முடிந்தாள். கிணற்றங்கரையில் அதை வைத்துவிட்டால் எந்த ஏழையாவது அதைக் கண்டெடுத்துப் பிழைத்துப் போகட்டுமே! காஞ்சனாவின் மேனியைப் பல ஆண்டுகளாக அலங்கரித்த ஆபரணங்கள் அவளை விட்டுப் பிரிந்தன. அதனால் அவளழகு குறைந்துவிடவில்லை. அணிகலன்கள் தாம் அழகுக்குன்றி ஒளியிழந்து விளங்கின.

இந்த உலகத்தில் அவள் வேண்டியதெல்லாம் அனுபவித்தாகி விட்டது. காஞ்சி நகரத்துச் சுந்தரியாக அவள் விளங்கித் தலைநிமிர்ந்து நின்ற காலம் போய்விட்டது. இனி இந்த மண்ணில் அவளிருந்து யாருக்கும் பலனில்லை. அதனால் அவள் இப்போதே விடைபெற்றுக் கொள்கிறாள். அவளைக் காஞ்சி

நகரத்தில் அவளுடைய இல்லத்தில் பணியாட்கள் எதிர் பார்த்திருப்பர். அவர்களிடம் சொல்லவில்லை. 'என்றாவது அவர்களுக்குச் செய்தி தெரியும். என் முடிவைக் கண்டு கலங்குவர் சிலர்; மகிழ்வர் சிலர் – அவர்கள் அனைவருக்கும் இப்போதே நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.''

''என்னைப் பெற்றவள் யாரென்று எனக்குத் தெரியாது. வளர்த்த தாயைத்தான் எனக்குத் தெரியும். அவளைத் தேடி நான் செல்கிறேன். விஜயா, என்றாவது ஒரு நாள் நான் இந்த உலகை விட்டு நீங்கிய செய்தி உனக்குத் தெரியவரும். பிறகாவது நீ என்னுடைய தொல்லையின்றி நிம்மதியாக இருக்கலாம். சுந்தரியும் என்னுடைய அம்சம்தான். அவள் காதலையாவது ஏற்றுக் களிப்புடன் வாழுங்கள். பல்லவ குலத்துப் பேரரசரே! உங்களது ஆட்சியின் கீழ் இப்படியொரு பெண் அகால மரணமடைந்தாள் என்று அவதூறு கிளப்புவார்கள். நான் மேலும் இந்த நாட்டில் வாழ்ந்து உங்களுக்கு வேறுவிதத்தில் தொல்லை தருவதைவிட உலகை விட்டுச் செல்வதே மேல். அதற்கு ஒரே வழி இந்தக் கூபம்தான்.

'தெய்வங்களே! விவரம் தெரிந்து நான் தெய்வத்தை நினைக்கவே இல்லை. கடவுளடியார்களையும் கண்டு வணங்கியதில்லை. திருநாவுக்கரசரடிகள் தமது முதிய பருவத்தில் காஞ்சிக்கு எழுந்தருளினார். நகரமே திரண்டு சென்று வணங்கியது. மேன்மாடத்தில் சொகுசாக நான் வீற்றிருந்தேன். இப்போது எந்த முகத்துடன் அவர்களை அருளுமாறு அழைப்பேன். வேண்டாம்; வேண்டாம். வேண்டவே வேண்டாம். தெய்வம் என்னை மன்னிக்கவே கூடாது. தக்க தண்டனை அளித்துப் பொல்லா நரகத்தில் தள்ளட்டும். என் மனம் மாறும் முன்பே இதோ வந்துவிடுகிறேன்...'

என்று கூறிக்கொண்டே காஞ்சனா கிணற்றில் குதிக்கத் தாவினாள். ஆனால், அவளை விழாதவாறு பின்புறமிருந்து ஓர் இரும்புக் கரம் தடுத்தது.

காஞ்சனாவைச் சில நாட்களுக்கு முன்பு புத்த விஹாரையில் வைத்துக் காப்பாற்றிய அதே பிட்சு சாந்தம் தவழும் முகத்துடன் நின்று கொண்டிருந்தார்.

காஞ்சனா பிட்சுவின் அருள் வடியும் முகத்தை நோக்கித் திகைத்தாள். அவளுக்குப் பேச நா எழவில்லை. அவள் உடல் ஏனோ நடுங்கியது. இதுவரை இருந்த துணிவு இப்போது அவளிடம் இல்லை. கண்களில் நீர் தளும்பியது. துக்க மேகம் வேகமாக இதயத்தில் குவிந்தது.

''குழந்தாய்'' என்று பிட்சு அன்பு ததும்பிய குரலில் அழைத்தார். அதற்குள் அவர் மெல்ல அவளைக் கிணற்றங் கரையை விட்டு நகர்ந்து வருமாறு செய்தார்.

மீண்டும் அவர் காஞ்சனாவை நோக்கி, ''குழந்தாய்! என்னை நினைவிருக்கிறதா?'' எனக் கேட்டார்.

காஞ்சனா, தலையை மட்டும் 'ஆமாம்' என்பதற்கு அறிகுறியாக அசைத்தாள். பேச்சு வரவில்லை.

''காஞ்சனா – உன் பெயர் அதுதானே'' என்று கேட்டார் பிட்சு.

காஞ்சனா, 'ஆமாம்' என்பதற்கு அடையாளமாகத் தலையை அசைத்தாள்.

''காஞ்சனா, உன் மனத்தில் நிறைந்திருக்கும் வேதனையின் அளவை நான் அறிந்து கொண்டேன். அதற்கு நீ செய்யப் புகுந்த முறை சரியன்று காஞ்சனா'' என்று பிட்சு மெல்லப் பேசினார்.

காஞ்சனா விம்மினாள். தன் நோக்கத்தைப் பிட்சு புரிந்து கொண்டார். தான் மனம் விட்டுக் கூறியதைக் கேட்டுக் கொண்டிருந்தாரா? முன்பும் என்னை இவர் தான் காப்பாற்றினார். அப்போது காப்பாற்றாமல் இருந்திருக்கலாம்.

''சுவாமி, என்னை விட்டுவிடுங்கள். எனக்கு ஏற்ற தண்டனையை நான் பெற்றுத்தானே ஆகவேண்டும். என்னை ஏன் தடுக்கிறீர்கள்?'' என்று காஞ்சனா விம்மலுக்கும் துக்கத்துக்கும் இடையே கூறினாள்.

''தண்டனையை நமக்கு நாமே வழங்கிக்கொள்ள நாம் யார் காஞ்சனா? இந்தக் கிணற்றில் வீழ்ந்து விடுவதால் நீ செய்த பாவம் எல்லாம் மறைந்துவிடுமா?'' – பிட்சுவின் பார்வைக்கு அவளால் நேரிடையே மறுமொழி கூற முடியாமல் மௌனமாக இருந்தாள்.

''காஞ்சனா! உனக்கு நேர்ந்தது ஒன்றும் இந்த உலகத்தில் மற்றவருக்கு நேராத அதிசயமில்லை – அதற்காக வாழ்நாளை நீயாக ஏன் முடித்துக் கொள்ள முயலுகிறாய்?'' பிட்சு கேட்டார்.

கண்ணீர் தாரை தாரையாக வழிய, ''சுவாமி, உலகத்தில் என்னைப் போன்றவர்கள் யாரும் இருக்க மாட்டார்கள். காஞ்சிமா நகரத்தில் எனது பாபக் கொடி படபடவென்று அடித்துக் கொண்டு பறந்தது. அதனுடன் நின்றாலும் பொறுத்துக் கொள்ளலாம் நான் அதற்கு மேலும் அதிகமான செயல்கள் புரிந்தேன். இன்னு

நான் இந்த உலகத்தில் இருந்தால் மேலும் பாவச் செயல் புரியமாட்டேன் என்பது என்ன நிச்சயம். அதற்குத்தான் நான் உயிரை மாய்த்துக் கொள்ளத் துணிந்தேன். என்னைத் தடுக்காதீர்கள்'' என்று காஞ்சனா கூறினாள்.

பிட்சு அவள் சொல்வதையே கேட்டுக் கொள்ளாதவர் போல் மெல்லச் சிரித்து ''உயிரைப் போக்கிக் கொண்ட நீ மீண்டும் பிறந்து தொடர்ந்து இதே போல் தீய செயல்களில் ஈடுபடமாட்டாய் என்பது மட்டும் என்ன நிச்சயம்?'' என்று கேட்டார்.

காஞ்சனா திடுக்கிட்டுத் திகைத்தாள். ''சுவாமி என்ன சொல்கிறீர்கள்? அடுத்த பிறவியிலும் நான் பாவம் செய்வேனா?''

''நேரலாம்... ஆனால் இதே உலகத்தில் வாழ்ந்து, அறவழியில் நடந்து செய்த தீவினைகளைப் போக்கிக் கொள்ளலாம்.''

பிட்சு சொல்வதைக் கேட்டுச் சிறிது நேரம் காஞ்சனா மௌனமாயிருந்தாள். பிறகு ஆவல் ததும்ப, ''இதே உலகில் தீவினையில் ஈடுபடாமல் வாழ முடியுமா?'' என்று கேட்டாள்.

பிட்சு சற்று உற்சாகமான குரலில் கூறினார்: ''ஏன் முடியாது? அதை நடைமுறையில் சாத்யமாக்குவதற்காகத்தானே நான் உன்னைத் தொடர்ந்து வந்தேன்.''

காஞ்சனாவின் கண்ணீர் மெல்லக் குறைந்தது.

''என்ன, என்னைத் தொடர்ந்து வந்தீர்களா?''

''ஆமாம்; மன வேதனையுடன் நீ தன்னந்தனியளாய்ப் புறப்பட்ட இடத்திலிருந்து உன்னைத் தொடர்ந்து வருகிறேன்.''

''ஆ! சுவாமி, தாங்கள் என்னைக் காப்பாற்றுவதையே முதல் கடமையாகக் கொண்டிருக்கிறீர்களா?''

''என்னால் அதெப்படி முடியும்? எல்லாம் அந்தப் போதி மரத்துப் புனிதன் அருளால்தான். அவன் நம் எல்லார் நலன் களுக்காகவும் இடைவிடாது விழித்திருந்துக் காப்பாற்றுகிறான்.''

''யாரை சொல்கிறீர்கள் அடிகளே!''

''நீ அறிந்த புத்தபிரானைத்தான் கூறுகிறேன். புத்த விஹாரையின் நடு மண்டபத்தில் அருளும், அமைதியும் தவழும் முகத்துடன் புன்சிரிப்புடன் உலகத்தைக் காப்பாற்றும் தோற்றத்தில் கம்பீரமாக அமர்ந்திருக்கும் புத்தபிரானை நீ காணவில்லையா? அவர்தான் உன்னைத் தொடர்ந்து வந்து காப்பாற்றுமாறு அனுப்பினார். வெளிநாட்டினின்று வந்து இறங்கி

இருக்கும் மகா தபஸ்விகளான அடியார்களைச் சந்திக்கச் செல்லாமல் உன்னைக் காப்பாற்ற ஓடி வந்ததும் அவரது கட்டளையினால்தான் காஞ்சனா!''

''ஆகா, இந்தப் பாபி மீது கருணை கொண்டவர்கள்கூட இருக்கிறார்களா?''

''அவர் கருணாமூர்த்தி. சிறு ஆட்டுக்குட்டியின் மீதுகூட கருணை கொண்டு தோளின் மேல் சுமந்து செல்லக்கூடிய வள்ளல்! உன்னை மட்டும் காப்பாற்ற மாட்டாரா?''

''சுவாமி, சுவாமி! சொல்லுங்கள்; புத்தபிரானின் பெருமையை இன்னும் சொல்லுங்கள்...''

''சொல்கிறேன் காஞ்சனா சொல்கிறேன். நாளெல்லாம் அவர் பெருமையை நீ கேட்டுக் கொண்டுதான் இருக்கப் போகிறாய். அவரது உபதேச அருள் வாக்கைக் கேட்டுக் கொண்டேதான் இருக்கப் போகிறாய். இப்போது நீ இந்த இடத்தை விட்டுப் புறப்பட வேண்டும். இனி இத்தகைய செயல்களில் இறங்காதிருக்க உறுதி கூற வேண்டும்.''

''அடிகளாரே! மேலும் நான் தொடர்ந்து தீமை புரிய மாட்டேன் என்ற உறுதி எனக்கில்லை. உறுதியற்ற கோழையாக நான் இந்த உலகத்தில் ஏன் வாழ வேண்டும்?''

''நீ இனி ஒருநாளும் எந்தவிதப் பாபமும் செய்ய மாட்டாய் என்பதை நானறிவேன்.''

''அதெப்படி சுவாமி? நீங்கள் முக்காலும் உணர்ந்தவரா?''

''உன்னுடைய உறுதியின் பேரில்தான். இந்த உலகத்தின் மீது உனக்கு ஆசை இல்லையல்லவா?''

''ஆமாம், அதனால்தானே என் உயிரைப் போக்கிக் கொள்ளவும் துணிந்தேன்.''

''இந்த உலகத்தில் பாபத்துக்கு விதை விதைக்கும் மண், பொன் ஆசைகளை உன்னால் விட்டொழிக்க முடியுமல்லவா?''

''பொன்னாசையை மறந்து, இந்த மண்ணாசையையும் துறக்கச் சித்தமாகிவிட்டேன்.''

''உறுதிதானே?''

''ஆமாம், அடிகளே!''

''அப்படியென்றால் புத்தபிரான் உன்னைக் காப்பாற்றுவார். என்னுடன் காஞ்சிக்கு வா. நேரே உனது மாளிகைக்குப் போவோம்.''

''எனது மாளிகைக்கா? வேண்டாம். அந்தப் பாவ பூமிக்கு என்னை அழைக்காதீர்கள். பளிங்குக் கல் தரையும், பளபளக்கும் தூண்களும், இரத்தினக் கம்பளமும், பஞ்சணை மெத்தைகளும், நிலா முற்றமும், போதை தரும் பானங்களும், இட்டது செய்யும் பாங்கிகளும், பசி நிறைந்த ஆடவர் விழிகளும், அவர்களை வாழ்விக்க ஆட்டமும் பாட்டும் நிறைந்த அந்த இடம் என்னை மீண்டும் பாப வடிவுடையவளாக்கிவிடும். அங்கே அழைக் காதீர்கள் சுவாமி.''

''இல்லை, காஞ்சனா! உனது ஆஸ்திதானே அவை? அவைகளை நீ துறந்துவிட வேண்டாமா? அவற்றை உன் உடமையாக வைத்துக்கொண்டே நீ இந்த உலக பந்தங்களைத் துறக்க முடியுமா?''

''சுவாமி... அவற்றை நொடியில் உதறிவிடச் சித்தமாய் இருக்கிறேன். எல்லாவற்றையும் துறந்துவிட முடிவு செய்துவிட்டேன். அதனால் நான் துறவியாகிவிட முடியுமா?''

''முடியும் காஞ்சனா முடியும். பட்டாடை துறந்து, பொன்னும் மணியும் துறந்து காமக் குரோதங்களை வென்றுவிட்டால், நீ ஏன் துறவியாக முடியாது. உன்னைப் பிட்சுணியாக ஏற்கப் பெரிய பிட்சுக்களிடம் நான் வேண்டுகோள் விடுக்கிறேன்.''

பிட்சு இவ்வாறு சொன்னவுடன் காஞ்சனா பரபரப் படைந்தாள். அவள் உடல் சிலிர்த்தது. ஏதோ தன் திரேகத்தின் மீது போர்த்தப்பட்டிருந்த மாயச் சட்டை கழன்றுப் பறந்துவிட்டது போன்ற உணர்ச்சி ஏற்பட்டது. ''உண்மையாகவா சுவாமி, உண்மையாகவா? பட்டாடையும், பொன்னாபரணங்களையும், சொத்து சுதந்திரத்தையும் துறக்க நான் எப்போதோ முடிவு செய்துவிட்டேன். காமக் குரோதங்களிடமிருந்து நான் விடுபட்டு விட்டேன் என்பதை உறுதியுடன் என்னால் கூற முடியும்.''

''காஞ்சனா! அத்தகைய உணர்ந்த மனோ பக்குவம் அடைந்தவர்களால்தான் தொண்டாற்ற முடியும். பொது ஜன சேவையொன்றின் மூலமே உன் கடந்த காலப் பாவங்களைத் தீர்க்க முடியும்.''

''சித்தமாயிருக்கிறேன் சுவாமி.''

''அதற்காகத்தான் உன் மாளிகைக்கே உன்னை அழைக்கிறேன். அங்குள்ளவற்றையெல்லாம் நீ அள்ளி அள்ளி மற்றவர்களுக்குக் கொடுக்க வேண்டாமா?''

''ஆகா! ஆகா! அதைவிடப் பெரும் பேறு என்ன இருக்கிறது. என் மனப்பாரமும் இறங்கிவிடும்.''

**கா**ஞ்சிமா நகரமே பெரும் பரபரப்புக்குள்ளாகியது. ஆடலழகி காஞ்சனா, காஞ்சிக்கே சுந்தரியாக விளங்கிய காஞ்சனா தவக்கோலம் பூண்டு தன் செல்வங்களனைத்தையும் தானமாக அள்ளிக் கொடுக்கிறாள் என்ற செய்தி எங்கும் பரவியது.

அதே காஞ்சனா! தந்த உடல். செழிப்பான மேனி. ஆனால் அதில் போதையூட்டும் சக்தியில்லை. காண்பவர் இரக்கப்படும், வணங்கக் கைகூப்பும் தன்மை விரவியிருந்தது. கூந்தல் எண்ணெயிட்டுச் சீவி முடியப்படவில்லை. பட்டாடைக்குப் பதில் மஞ்சள் நிற ஆடை உடலை மறைத்திருந்தது. அபிநயங் களும், நடன முத்திரைகளும் பிடித்து வளைந்து நெளிந்த கரம் பொன்னையும், அணிகலன்களையும் மக்களுக்கு அள்ளி அள்ளிக் கொடுத்தது. காஞ்சனாவின் இந்தச் செய்கை எல்லோரையும் வியப்படையச் செய்யாமல் இல்லை. மாளிகையின் பணி ஆட்களுக்கு வேண்டியவற்றை அள்ளிக் கொடுத்தாள் காஞ்சனா. அதைப் பெற்றுக் கொள்ளும்போது குலுங்கிக் குலுங்கி அழுது அவர்கள் கண்ணீர் விட்டனர்.

∴ ∴ ∴

**"அ**டிகளாரே! தங்கள் விருப்பப்படி நான் சகலவற்றையும் தானம் செய்துவிட்டேன். இனி என்னுடையது என்று சிறு துரும்புகூட இல்லை. என்னைப் பெரிய பிட்சுவிடம் அழைத்துச் செல்வதாகக் கூறினீர்களே. உடனே அழைத்துச் செல்லுங்கள். ஒரு கணம்கூட இங்கே என்னைத் தாமதிக்க வைக்காதீர்கள்" என்று காஞ்சனா வேண்டினாள்.

"பொன்னும் பொருளும் துறந்துவிட்டாய். மனத்திலும் 'நான்—எனது' என்ற பேதத்தையும் ஒழித்துவிட்டாயா? அதுவரையில் கடினமான நோன்புக்கு ஆயத்தமாயிருக்க வேண்டும்" என்றார் பிட்சு.

"எவ்விதமான கடின நோன்புக்கும் நான் சித்த மாயிருக்கிறேன். என்னை உடனே அழைத்துச் செல்லுங்கள்" என்று காஞ்சனா பரபரப்புடன் வேண்டினாள்.

பிட்சு மெல்ல நகைத்து, "மகா போதி சங்கம் ஈழத்தில் கூடப் போகிறது. அதற்காக நாட்டின் பல பாகங்களினின்றும் பிட்சுக்கள் வந்துள்ளனர். அவர்கள் ஈழம் செல்லக் கடல் பயண வசதி கேட்கவே அரசரைப் பிட்சுக்கள் சந்தித்தனர். காஞ்சியை நோக்கிச் சாளுக்கியப் படைகள் வந்து கொண்டிருக்கும் அவசரச் செய்தி கேட்டும், இராஜசிம்ம சக்கரவர்த்தி வேண்டிய மரக்கலங்களை ஏற்படுத்திக் கொடுத்துவிட்டார். ஈழத்துக்கு நாங்கள் இன்றே பிரயாணமாகிறோம்" என்று கூறவும், காஞ்சனா

திகைத்து, ''அடிகளே! என்னைத் தலைமைப் பிட்சுவிடம் அழைத்துச் செல்வதாகக் கூறினீர்களே...'' என்று ஏமாற்றம் த்வனிக்கக் கேட்டாள்.

''ஈழத்துக்கு நீயும் வருவதென்றால் உன்னையும் அழைத்துச் செல்லச் சித்தமாயிருக்கிறோம். அங்கே பல நாட்டுப் பிட்சுக்கள் முன்னிலையில் உன்னையும் சங்கத்தில் சேர்த்துக் கொள்வார்கள். அதுவரையில் உன் மனோ நிலையை ஆராய வேண்டிப் பல சோதனைகள் நடக்கும். ஈழம் வருகிறாயா?'' என்று பிட்சு கேட்டார்.

''இதோ, இப்பொழுதே'' என்று காஞ்சனா மகிழ்ச்சி நிறைந்த குரலில் கூறினாள்.

பிட்சுவைத் தொடர்ந்து காஞ்சனா எளிய உடை உடுத்தி, அழகு அலங்காரமற்று துறவிக் கோலத்தில் நடந்து செல்வதை ஏராளமான நகர மக்கள் கூடி நின்று கண்டு கண்ணீர் விட்ட வாறிருந்தனர்.

∴ ∴ ∴

**மா**மல்லபுரத்துக் கடற்கரையில் இரு பெரும் மரக்கலங்கள் நின்று கொண்டிருந்தன. பிட்சுக்களை ஏற்றிக்கொண்டு ஈழம் செல்ல ஆயத்தமாய் அவை இருந்தன.

கடற்கரையில் வழியனுப்பக் கூடியிருந்தவர்களுள் விஜயனும், சுந்தரியும், மல்லிநாதரும், முகுந்தநாதரும், குட்டிச் சித்தனும் காணப்பட்டார்கள். காஞ்சனாவின் தியாகம் சுந்தரவல்லியின் உள்ளத்தையும் உருக வைத்துவிட்டது. ஒரு தலைப்பட்சமாகக் காஞ்சனா தன் மேல் கொண்ட காதலைக் குறித்து விஜயன் சுந்தரியிடம் கூறியிருந்தான். அதைத் தவிர ஏராளமான பொன்னும், மணியும், பட்டுப் பட்டாடைகளும் ஒரு பேழையில் வைத்துத் தன் வாழ்த்தைத் தெரிவிக்கும் ஓலையுடன் மாமல்ல புரத்தில் இருக்கும் சுந்தரிக்குக் காஞ்சனா அனுப்பியிருந்தாள். ஓலையைப் படிக்கும்போது சுந்தரியின் கண்களில் நீர் தளும்பியது.

''அருமைச் சகோதரியே! காஞ்சிமா நகரத்துச் சுந்தரியாக நீ ஓவியக் கலைஞர் விஜயனுடன் நல்வாழ்வுடன் நெடுங்காலம் வாழ பூர்வாச்ரம சகோதரி காஞ்சனா வாழ்த்துகிறேன்.''

ஓலையில் இருந்தவற்றுள் இந்த வரிகள்தாம் சுந்தரியின் இதயத்தை இளக வைத்துவிட்டன. கலம் புறப்படும் முன்பு ஒரு முறையாவது காஞ்சனாவைச் சந்தித்துப் பேச வேண்டும் என்று துடிதுடித்தாள்.

வரிசை வரிசையாகப் பிட்சுக்கள் மரக்கலம் நோக்கிச் சென்று கொண்டிருந்தனர். அதோ! காஞ்சனாவும் வருகிறாள். அவள் யாரையும் ஏறெடுத்துப் பார்க்கவில்லை. நிமிர்ந்த நோக்குடன் கலம் நோக்கிச் சென்று கொண்டிருந்த பிட்சுணியாகிய காஞ்சனாவை நோக்கி சுந்தரி, ''காஞ்சனா, காஞ்சனா'' என்று கூவினாள்.

பிட்சுக்கள் கலத்தின் மேல் தளத்தில் நின்று கொண்டிருந்தனர். காற்று சாதகமாக வீசத் தொடங்கியது அறிந்த தளபதி நங்கூரத்தைத் தூக்கினான். கலம் மெல்ல நகர்ந்தது.

இப்போது பிட்சுணி மெல்ல கையை அசைத்தாள்.

அவள் கண்களுக்குச் சுந்தரி மட்டுமேதான் தெரிந்தாள். கடற்கரையிலிருந்தோர் அனைவரும் கையசைத்து ஆரவாரம் செய்தனர்.

மெல்ல மெல்ல கலம் கீழ்த்திசை நோக்கிச் சென்றது. கலத்தின் உருவம் சிறு புள்ளி போல மாறியது. பிறகு மறைந்தது.

கலங்கள் மறைந்த சிறிது நேரத்திற்கெல்லாம் வட்ட முழுமதி மெல்ல எழுந்து கொண்டிருந்தது. சந்தன நிற வட்ட வடிவக் கதிர்கள் கடற்கரையெங்கும் பரவின.

சுந்தரவல்லியும், விஜயனும் வெகுநேரம் கலம் சென்ற திக்கை நோக்கியவாறு நின்று கொண்டிருந்தனர்.

''காஞ்சி நகரத்துச் சுந்தரியே! நேரமாகிறது, செல்லலாமா?'' என்று விஜயன் கேட்டான்.

தன் விழிகளில் துளிர்த்திருந்த நீரை மெல்லத் துடைத்தவாறு விஜயனை நோக்கிப் புன்னகை பூத்தாள் சுந்தரி.

(முற்றும்)

